

# மார்க்சியம் - பெண்ணியம்

## உறவும் முரணும்

# மார்க்சியம் பெண்ணியம்
# உறவும் - முரணும்

# மார்க்சியம் பெண்ணியம்
# உறவும் - முரணும்

ஆங்கிலத்திலிருந்து
தொகுப்பும் மொழியாக்கமும்
**வெ. கோவிந்தசாமி**
**நடராஜ்**

**விடியல் பதிப்பகம்,**
*கோவை - 641 015.*

நூலின் பெயர் : மார்க்சியம் பெண்ணியம்
உறவும் - முரணும்.

தொகுப்பும் மொழியாக்கமும் : வெ. கோவிந்தசாமி, நடராஜ்

தாள் : 21.3 மேப்லித்தோ

முதல் பதிப்பு : 1998 செப்டம்பர்.

விலை : ரூ.100.00

வெளியீடு : விடியல் பதிப்பகம்
3, மாரியம்மன் கோயில் வீதி
உப்பிலிபாளையம்,
கோவை - 641 015.
தொலைபேசி எண். : 570 778

அச்சு கோர்ப்பு : குளோபல் கிராபிக்ஸ்,
128, திருவள்ளுவர் சாலை,
புதுச்சேரி. தொ.பேசி.345683.

அச்சாக்கம் : **மணி ஆப்செட், சென்னை - 5.**

Title of the Book : **Marxiam Penniyam Uravum Muranum**
(A Tamil translation of selected articles from "The Unhappy Marriage between Marxism and Feminism" Edited by Lydia Seargent.)

Translated by : V. Govindasamy & Nataraj.

Edition : First (September 1998)

Size : Demy 1/8

Paper : 21.3 kg Maplitho

Number of Pages : 240

Publisher : Vidiyal Pathipakam
3, Mariamman Koil St.,
Uppilipalayam, Coimbatore-15.
Ph : 570778.

Price : Rs.100/-

Type Setting : Global Graphic
128, Thiruvalluvar Salai, Pondy-13.

Printed by : Mani Offset, Chennai - 5.

# பதிப்புரை

கெய்டி கார்ட்மன் அவர்கள் "மார்க்சியத்திற்கும் பெண்ணியத்திற்கும் இடையே ஒரு மகிழ்ச்சியற்ற திருமணம் மிக முற்போக்கான கூட்டிணைவை நோக்கி" என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வெளியிட்டிருந்தார். பல்வேறுபட்ட பெண்ணியர்கள் பல்வேறு கோணங்களில் இந்தக் கட்டுரைக்கு எதிர்வினை புரிந்தனர். கெய்டி கார்ட்மன் அவர்களின் விவாதக் கட்டுரையையும், அதற்கு எதிர்வினையாக வந்த 12 கட்டுரைகளையும் தொகுத்து, லிதியா சர்ஜ்செண்ட் அவர்கள் "மார்க்சியத்திற்கும் பெண்ணியத்திற்கும் இடையே மகிழ்ச்சியற்ற திருமணம்" என்ற தலைப்பில் (1981-இல்) ஒரு புத்தகமாக வெளியிட்டிருந்தார். அப்புத்தகத்திலிருந்த முதல் 6 கட்டுரைகளின் தொகுப்பே இந்தத்தமிழ்நூல்.

இப்புத்தகத்தில் இடம்பெற்றுள்ள கலைச்சொல் விளக்கப் பகுதிக்குக் குறிப்புகள் எழுத மிகப் பெருமளவிற்கு எமக்கு உதவியாய் இருந்தது அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம் வெளியிட்டிருந்த "பெண்ணியக் கலைச்சொல் விளக்கக்கையேடு" ஆகும். அன்னாருக்கு எமது நன்றி.

விடியல்.
கோவை.

# பொருளடக்கம்


1. *மார்க்சியத்திற்கும் பெண்ணியத்திற்கும் இடையிலான மகிழ்ச்சியற்ற திருமணம்*
   **– கெய்டி கார்ட்மன்** **9**

2. *முதலாளியம் என்பது ஆணாதிக்கத்தின் வளர்ந்த நிலை. ஆனால் மார்க்சியம் பெண்ணியமல்ல*
   **– அஸிஸா அல்–ஹிப்ரி** **59**

3. *மார்க்சியம், பெண்ணியம், இனவாதம், பொருந்தாத முக்கூட்டு*
   **–குளோரியா ஜோசப்** **99**

4. *சோசலிசம், பெண்ணியம், ஆண்/பெண் ஓரினப் புணர்ச்சியாளர் விடுதலை*
   **– கிரிஸ்டின் ரிடியாப்** **123**

5. *மார்க்சியத்திற்கும் பெண்ணியத்திற்கும் இடையிலான மகிழ்ச்சியற்ற திருமணம். இதைக் காப்பாற்ற இயலுமா?*
   **–கரோல் எர்லிச்** **151**

6. *ஆணாதிக்கமுறைமை, முதலாளியம் ஆகியவற்றின் உண்மையான பொருண்மை அடிப்படை என்ன?*
   **– சேந்திரா ஹார்டிங்** **187**

7. *தொகுப்பும் பதிலும்: தொடரும் விவாதம்*
   **– கெய்டி கார்ட்மன்** **227**

**கலைச்சொல் விளக்கம்.** **237**

# மார்க்சியத்திற்கும் பெண்ணியத்திற்கும் இடையே ஒரு மகிழ்ச்சியற்ற திருமணம்: மிக முற்போக்கான ஒரு கூட்டிணைவை நோக்கி....

கெய்டி கார்ட்மன்

*பொருளாதார வல்லுனரான கெய்டி கார்ட்மன், தேசிய ஆய்வுக்குழு நடத்தையல் மற்றும் சமூக அறிவியல்களுக்கான தேசிய அறிவியல் கழகத்தில் பணிபுரிகிறார். மார்க்சியப் பெண்ணியத்தின் கோட்பாட்டுப் பிரச்சனைகள் பற்றி தொடர்ந்து விவாதித்து வருகிறார்.*

மார்க்சியத்துக்கும் பெண்ணியத்துக்கும் இடையிலான "திருமணம்" என்பது ஆங்கிலப் பொதுச்சட்டத்தில் விளக்கப்பட்டிருக்கும் கணவன் மனைவி திருமணம் போன்றதாகும். அது என்னவென்றால், மார்க்சியமும் பெண்ணியமும் ஒன்றுதான். ஆனால் அந்த ஒன்று என்பது மார்க்சியமேயாகும். மார்க்சியத்தையும் பெண்ணியத்தையும் இணைக்க அண்மையில் எடுக்கப்பட்ட சில முயற்சிகள் பெண்ணியர்கள் என்ற முறையில் எமக்கு நிறைவளிப்பதாய் இல்லை. காரணம், முதலாளியத்துக்கு எதிரான "பெரும்" போராட்டத்துக்கு கீழ்ப்பட்டதாகவே அவை பெண்ணியப் போராட்டத்தை முன்வைக்கின்றன. முன்னர் சொன்ன உவமையிலேயே சொல்வதானால், எமக்கு தேவை ஒரு ஆரோக்கியமான திருமணமே. அவ்வாறு இல்லையெனில் மணவிலக்கே எமக்குத் தேவைப்படுகிறது.

பெரும்பாலான சமூக அம்சங்களில் காணப்படுவது போலவே இத் "திருமணத்திலும்" ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன. இந்த ஏற்றத் தாழ்வுகள் தற்செயலானவை அல்ல. பெண்ணியமானது வர்க்க முரண்பாட்டை விட முக்கியத்துவம் குறைந்ததே என்றும்; அதன் மோசமான நிலையில் தொழிலாளி வர்க்கத்தை அது பிளவுபடுத்துகிறது என்றும் பெரும்பான்மையான மார்க்சியர்கள் வாதிடுகிறார்கள். இம்மாதிரியான ஒரு அரசியல் நிலைபாடு, பெண்ணியத்தை வர்க்கப் போராட்டத்துக்குள் உட்படுத்தும் ஒரு ஆய்வுமுறைக்கு வழிவகுக்கிறது. மூலதனத்தை ஆற்றலோடு திறனாய்வு செய்யும் மார்க்சிய ஆய்வானது, பால்வாதம் குறித்த ஆய்வுகளில் தெளிவற்றதாகவே இருக்கிறது. வரலாற்று வளர்ச்சியின் விதிகள் குறித்தும் சிறப்பாக மூலதனம் குறித்தும் சில ஆழமான பார்வைகளை மார்க்சிய ஆய்வு முன்வைத்துள்ள போதிலும், அதனுடைய வகையினங்கள் (CATEGORIES) பால் - குருட்டுத்தனம் (SEX-BLIND) கொண்டவையாகவே இருக்கின்றன என நாம் இங்கு வாதிட வேண்டி இருக்கிறது. ஒரு குறிப்பானப் பெண்ணிய ஆய்வுமுறை மட்டுமே, ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே உறவுகள் முறைப்படி ஒழுங்குப்படுத்தப்பட்டத் தன்மைகளை வெளிப்படுத்தும். இருப்பினும், பெண்ணிய ஆய்வுமுறையேகூட அதனளவில் குறைபாடுடைய

தாகும். ஏனெனில் அது வரலாற்றுப் பார்வைஅற்றதாகவும், போதுமான அளவு பொருள்முதல்வாத அணுகுமுறை அற்றதாகவும் இருக்கிறது. மார்க்சிய ஆய்வையும் - குறிப்பாக அதன் வரலாற்றுப் பொருள்முதல்வாத அணுகுமுறையையும் - பெண்ணிய ஆய்வையும் குறிப்பாக ஆணாதிக்க முறைமையை ஒரு சமூக, வரலாற்று அமைப்பாக இனம்காணும் அதன் ஆய்வுமுறையையும் - இணைத்துப் பார்க்க வேண்டும். அப்போதுதான், மேற்கு முதலாளியச் சமூகங்களின் வளர்ச்சிபற்றியும், அச்சமூகங்களில் பெண்கள் எதிர்கொள்ளும் சிக்கலான நிலைமைபற்றியும் புரிந்துகொள்ள முடியும்.

இக்கட்டுரையின் முதல் பகுதி "பெண்கள் பிரச்சனை" குறித்த பல்வேறு மார்க்சிய அணுகுமுறைகளைப் பரிசீலிக்கிறது. இரண்டாம் பகுதியில் தீவிரப் பெண்ணியர்களின் (RADICAL FEMINISTS) கருத்துகள் பரிசீலிக்கப்படுகின்றன. அதன்பின் ஆணாதிக்க முறைமை குறித்த தீவிரப் பெண்ணியரின் விளக்கங்களில் காணப்படும் சில குறைபாடுகள் சுட்டிக் காட்டப்படுகின்றன. பின் நமது விளக்கத்தை முன்வைக்கிறோம். மூன்றாவது பகுதியில், மார்க்சியம், பெண்ணியம் ஆகிய இரண்டு கோட்பாடுகளிலுமுள்ள வலுவான அம்சங்களை பயன்படுத்தி, முதலாளியச் சமூகங்களின் வளர்ச்சி குறித்தும், பெண்களின் தற்போதைய நிலைமை குறித்தும் சில கருத்துக்களை முன்வைக்கிறோம். பெண்ணிய லட்சியங்களை ஆய்வுசெய்ய மார்க்சிய முறையியலைப் பயன்படுத்த நாம் முயற்சிக்கிறோம். அதன்மூலம் சமீபகால சோசலிசப்பெண்ணிய ஆய்வுகளில் காணப்படும் சமச்சீரற்ற அம்சங்களைத் திருத்தி, தற்போதைய சமூகப் பொருளியல் உருவாக்கம் குறித்து மிக முழுமையான ஒரு ஆய்வை முன்வைக்கிறோம். ஆணாதிக்க முறைமை என்பது வெறுமனே ஒரு உளவியல் அம்சம் மட்டுமல்ல; மாறாக, அது ஒரு சமூகப் பொருளாதார அமைப்பும் கூட என பொருள்முதல்வாத ஆய்வுமுறை நிருபித்துள்ளது என நாம் வாதிடுகிறோம். நமது சமூகமானது முதலாளிய அடிப்படையிலும், ஆணாதிக்க முறைமை அடிப்படையிலும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது என இனம்காணும் போதுதான் நமது சமூகத்தை நாம் நன்கு விளங்கிக்கொள்ள இயலும் என்ற கருத்தை முன்வைக்கிறோம். முதலாளிய நலன்களுக்கும், ஆணாதிக்க நலன்களுக்கும் இடையே ஒரு முறுகல்நிலை (TENSION) உள்ளது என்பதை நாம் சுட்டிக் காட்டும் அதே வேளையில், ஆணாதிக்க முறைமைக்கு ஏற்றவாறு மூலதனக் குவிதல் தன்னைத் தகவமைத்துக் கொள்வதோடு அது நீடித்து நிலைக்கவும் உதவி புரிகிறது என்று வாதிடுகிறோம். இந்தச் சூழலில் பால்வாதச் சித்தாந்தம் ஒரு

குறிப்பான முதலாளிய வடிவம் எடுக்கிறது என்றும், ஆணாதிக்க உறவுகள், முதலாளியத்துக்கு முட்டுக்கொடுப்பதையே இது எடுத்துக்காட்டுகிறது என்றும் நாம் கருதுகிறோம். சுருங்கச் சொல்வதானால், ஆணாதிக்க முறைமைக்கும் முதலாளியத்துக்கும் இடையே ஒரு கூட்டாளி உறவு உருப்பெற்றுள்ளது.

நான்காவதும் இறுதியுமான பகுதியில் பின்வருமாறு நாம் வாதிடுகிறோம். இடதுசாரிகள் பெண்ணியப் பிரச்சனைகளைப் புரிந்துகொள்வதில், பெண்ணியத்தைக் காட்டிலும் மார்க்சியத்துக்கே முதன்மை அளித்து வருகிறார்கள். மார்க்சியத்துக்கும் பெண்ணியத்துக்கும் இடையே உள்ள அரசியல் உறவுகளே இதற்குக் காரணமாகும். மார்க்சியத்துக்கும் பெண்ணியத்துக்கும் இடையே ஏற்படும் மிக முற்போக்கான ஒரு கூட்டிணைவானது, வர்க்கம், பால் ஆகியவற்றுக் கிடையிலான உறவுகள் குறித்த அறிவுபூர்வமான ஆய்வுகளை மேலும் வளப்படுத்துவதோடு இடதுசாரி அரசியலில் காணப்படும் ஆதிக்கக் குணத்தை மாற்றவும் வழி அமைத்துத் தருகிறது.

### *I. மார்க்சியமும் பெண்கள் பிரச்சனையும் :*

பெண்கள் பிரச்சனை என்பது என்றுமே "பெண்ணியப் பிரச்சனையாக" இருந்ததில்லை, ஆணிற்கும் பெண்ணிற்கும் இடையில் காணப்படும் பாலியல் ஏற்றத்தாழ்வுக்கான காரணங்களையும், பெண்கள்மீது ஆண்கள் கொண்டுள்ள ஆதிக்கத்துக்கான காரணங்களையுமே பெண்ணியப் பிரச்சனை நேரடியாக ஆய்வு செய்கிறது. பெரும்பாலான மார்க்சிய ஆய்வுகள், பெண்ணியப் பிரச்சனையை பெண்களுக்கும் ஆண்களுக்கும் இடையிலான உறவு பற்றிப் பிரச்சனையாகப் பார்ப்பதைக் காட்டிலும், பெண்களுக்கும் பொருளாதார அமைப்புக்கும் இடையிலான உறவாகவே பார்க்கின்றன. பொருளாதார அமைப்புக்கும் பெண்களுக்கும் இடையிலான உறவை விவாதிக்கும் போக்கில், பெண்களுக்கும் ஆண்களுக்கும் ஆன உறவுபற்றிப் பேசப்படுகிறது. பெண்ணியப் பிரச்சனைகளைக் குறித்த மார்க்சிய ஆய்வுகளை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். அனைத்து மார்க்சிய ஆய்வுகளுமே, பெண்கள் மீதான ஒடுக்குமுறையை, பெண்கள் உற்பத்தியோடு கொண்டுள்ள தொடர்பில் (அல்லது தொடர்பின்மையில்) தங்கியிருப்பதாகப் பார்க்கின்றன. தொழிலாளி வர்க்கத்தின் ஒரு பகுதியாக பெண்களை வரையறை செய்யும் இந்த அணுகு முறையானது, மூலதனத்துக்கும் தொழிலாளிகளுக்கும் இடையிலான உறவுக்குக் கீழானதாகவே பெண்ணுக்கும் ஆணுக்கும் இடையிலான உறவைப் பார்க்கின்றன.

மார்க்ஸ், எங்கல்ஸ், காவுட்ஸ்கி, லெனின் உள்ளிட்ட ஆரம்பகால மார்க்சியர்கள், முதலாளியமானது அனைத்துப் பெண்களையும் தொழிலாளி வர்க்கத்துக்குள் சேர்த்துவிடுகிறது எனவும், இந்தப் போக்கானது, பால் அடிப்படையிலான வேலைப் பிரிவினையை அழித்துவிடும் எனவும் கருதினர். இது முதல்வகை ஆகும். சமகால மார்க்சியர்கள், முதலாளியத்தில் இடம் பெற்றுவரும் அன்றாட வாழ்க்கைப்பற்றிய ஆய்வுக்குள் பெண்கள்குறித்த பிரச்சனையையும் அடக்கினர். இந்தப் பார்வை, நமது வாழ்வின் அனைத்து அம்சங்களும் முதலாளியத்தை மீள்உருவாக்கம் செய்வதாகவும், இந்த உற்பத்தி முறைக்குள் நாம் அனைவரும் தொழிலாளர்களாக இருப்பதாகவும் பார்த்தது. இது இரண்டாவது வகை ஆகும். மார்க்சியப் பெண்ணியர்கள் வீட்டுவேலைகள் குறித்தும், அதற்கும் முதலாளியத்துக்கும் இடையிலான உறவுகள் குறித்தும் கவனத்தைக் குவித்தனர். வீட்டுவேலைகள் உபரிமதிப்பை உற்பத்திச் செய்கின்றன என்றும், வீட்டுவேலையில் ஈடுபடுவோர் நேரடியாக முதலாளிகளுக்கு உழைப்பதாகவும் சிலர் வாதிட்டனர். இது மூன்றாவது வகை ஆகும். இந்த மூன்று வகைகளை இனி நாம் பரிசீலிப்போம்.

குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம் என்ற புத்தகத்தில் எங்கல்ஸ் பெண்களின் தாழ்த்தப்பட்ட நிலையை ஒத்துக்கொண்டதோடு, தனிச்சொத்து என்ற நிறுவனத்தின் விளைவே இது எனவும் சுட்டிக்காட்டினார். முதலாளியச் சமூகக் குடும்பங்களில் பெண்கள் தங்கள் எசமானர்களுக்கு ஊழியம்செய்து, ஒருதாரமண ஒழுக்கத்தைக் காத்து, குடும்பச் சொத்துகளுக்கு வாரிசுகளைப் பெற்றெடுக்கிறார்கள். தொழிலாளி வர்க்கக் குடும்பங்களில் தனிச் சொத்து இல்லாததால், அங்கு பெண்கள் ஒடுக்கப்படுவதில்லை. கூலி உழைப்பின் வளர்ச்சியானது, சிறுநில உழவர்களை அழித்து, பெண்களையும் சிறுவர்களையும் தொழிலாளர் படையில் ஆண்களோடு ஒன்றாக இணைத்துக் கொண்டது. இதனால் குடும்பத் தலைவனான ஆணின் அதிகாரம் பலவீனமடைந்து, ஆணாதிக்க உறவுகள் அழிந்துவிட்டது என எங்கல்ஸ் வாதிட்டார்.

எங்கல்ஸின் கருத்துப்படி, பெண்கள் தொழிலாளர்களாக மாற்றம்பெறுவது அவர்களது விடுதலைக்குத் திறவுகோலாகும். முதலாளியம் அனைத்துப் பால்வேறுபாடுகளையும் ஒழித்துவிட்டு அனைத்துத் தொழிலாளர்களையும் சமமாக நடத்தும் என்பதே இதன் பொருள். பெண்கள் பொருளாதார ரீதியில் ஆண்களைச் சாராமல் சுதந்திரமாக இருப்பர் என்றும், பாட்டாளி வர்க்கப் புரட்சியைக் கொணர்வதில்

ஆண்களுடன் சரிநிகராக பெண்களும் பங்கெடுப்பர் என்றும் கருதப்பட்டது. புரட்சிக்குப் பிறகு அனைத்து மக்களும் தொழிலாளர்களாக இருப்பர், தனிச்சொத்து ஒழிந்துவிடும், முதலாளியம், ஆண்கள் ஆகிய இரண்டிலிருந்தும் பெண்கள் விடுதலை பெற்றிடுவர் என்றும் நம்பப்பட்டது. தொழிலாளர்களின் அணியில் பெண்கள் சேர்ந்ததால், குடும்பத்துக்கும் பெண்களுக்கும் ஏற்பட்ட துயரங்கள்குறித்து மார்க்சியர்கள் உணர்ந்தே இருந்தனர். வீட்டுவேலை, கூலி உழைப்பு ஆகிய இரு வேலைகளையும் பெண்கள் ஒருசேர மேற்கொள்ள வேண்டியிருந்தது. இருப்பினும் வீட்டில் பெண்கள் தொடர்ந்து தாழ்ந்த நிலையிலேயே இருந்துவருவதுகுறித்து மார்க்சியர்கள் அக்கறைகாட்டவில்லை. மாறாக, ஆணாதிக்க முறைமை உறவுகளில் "உடைப்பு" ஏற்படுத்தும் முதலாளியத்தின் முற்போக்குக் குணாம்சத்துக்கே அதிக முக்கியத்துவம் அளித்தனர். சோசலிசத்தின்கீழ் வீட்டு வேலைகள் அனைத்தும் கூட்டுழைப்பாக மாறும் என்றும், அதனால் பெண்கள் தங்கள் இரட்டைச் சுமையில் இருந்து விடுதலை பெறுவர் என்றும் இவர்கள் நம்பினர்.

முதல்வகை மார்க்சிய அணுகுமுறையில் அரசியல் வெளிப்பாடு மிகத் தெளிவானது. இதன்படி, முதலாவதாக, ஆண்களைப் போலவே பெண்களும் தொழிலாளிகளாக மாற வேண்டும். இரண்டாவது, முதலாளியத்துக் கெதிரான புரட்சிகரப் போராட்டத்தில் ஆண்களோடு பெண்களும் பங்கெடுத்துக் கொள்ளவேண்டும். இதுவே பெண்கள் விடுதலைக்குத் தேவையாகும். தொழிலாளர்கள் மீதான சுரண்டலுக்குப் பொதுவாக முதலாளியம் காரணமாக இருப்பதைப் போலவே, மூலதனம், தனிச்சொத்து ஆகிய இரண்டுமே பெண்கள் மீதான குறிப்பான ஒடுக்குமுறைக்குக் காரணமாக இருக்கின்றன என தொடக்கக்கால மார்க்சியர்கள் வாதிட்டனர்.

தொடக்கக்கால மார்க்சியர்கள், தமது காலத்தியப் பெண்களின் அவலநிலையை உணர்ந்திருந்த போதிலும், முதலாளியத்தின்கீழ் ஆண் பெற்ற அனுபவத்துக்கும், பெண் பெற்ற அனுபவத்துக்குமான வேறுபாடுகள்மீது கவனம்செலுத்தத் தவறிவிட்டனர். பெண்கள் என்ற முறையில் ஏன், எவ்வாறு ஒடுக்கப்படுகிறார்கள் என்றப் பெண்ணியக் கேள்வியை அவர்கள் எழுப்பத் தவறிவிட்டனர். ஆகவே பெண்கள் தொடர்ந்து கீழான நிலையில் இருந்துவருவதில் ஆண்களுக்கு நிலையான நலன்கள் இருக்கின்றன என்பதை அவர்கள் உணரத் தவறிவிட்டனர். மூன்றாம் பகுதியில், நாம் சொல்லியிருப்பதுபோல, ஆண்கள் வீட்டுவேலைகளில் பங்குகொள்ளாமல் இருப்பது, ஆண்களுக்காக பெண்களும் குழந்தைகளும் ஊழியம்புரிவது,

உழைப்புச் சந்தையில் ஆண்கள் சிறப்பான இடங்களைப் பெற்றிருப்பது ஆகிய இந்த வசதிகளால் ஆண்கள் நன்மைகள் பெற்றுவருகிறார்கள். தொடக்கக்கால மார்க்சியர்கள் நம்பியதுபோல, ஆணாதிக்கமுறைமை உறவுகள் காலத்துக்குப் பொருத்தமற்றதாகப் போய்விடவில்லை. மாறாக, அவை முதலாளியத்தினால் மிக விரைவாக மறுவடிவம் கொடுக்கப்பட்டு அதனோடு தொடர்ந்து சகவாழ்வு நடத்திவந்தது. பெண்கள், பெண்கள் என்ற முறையில் ஒடுக்கப்படுவதற்கு மூலதனமும் தனிச்சொத்தும் மட்டுமே காரணமாக இல்லை. ஆகவே, இவற்றின் அழிவினால்மட்டுமே பெண்களுக்கு விடுதலை கிட்டிவிடாது.

சோசலிசப் புரட்சி என்ற பத்திரிகையில் எலிஷரட்ஸ்கி என்பவர் எழுதிய கட்டுரைத் தொடரில் காணப்படும் கருத்தோட்டமானது தற்போது செல்வாக்குடனுள்ள இரண்டாவதுவகை மார்க்சிய அணுகுமுறைக்கு எடுத்துக்காட்டாய்த் திகழ்கிறது. பெண்ணிய ஆய்வுகளுடன் இவர் ஒத்துப்போகும் அதேவேளையில், பால்வாதம் (SEXISM) என்பது முதலாளியத்தினால் உருவாக்கப்பட்ட ஒரு புதிய அம்சம் அல்ல என்று வாதிடுகிறார். தற்போது பால்வாதம் எடுத்துள்ளக் குறிப்பிட்ட வடிவமானது முதலாளியத்தால் வடிவமைக்கப்பட்டது என இவர் வலியுறுத்துகிறார். முதலாளியத்தின்கீழ், ஆண்களும் பெண்களும் பெற்றுவரும் வேறுபட்ட அனுபவங்கள்மீது இவர் தன் கவனத்தைக் குவிக்கிறார். எங்கல்ஸ் எழுதி ஒரு நூற்றாண்டுக்குப் பின்னர், முதலாளியம் முதிர்ச்சி அடைந்த ஒரு கட்டத்தில் எலிஷரட்ஸ்கி பின்வருமாறு சுட்டிக்காட்டுகிறார்; தொழிலாளர் படையில் ஆண்களுக்குச் சமமாக அனைத்துப் பெண்களையும் முதலாளியம் சேர்த்துக் கொள்ளவில்லை. இதற்குமாறாக, முதலாளியமானது, வீடு, குடும்பம், தனிப்பட்ட வாழ்க்கை ஆகியன ஒருபுறம்; தொழிலிடங்கள் (WORK-PLACE) மறுபுறமென இவற்றுக்கிடையே ஒரு பிரிவினையை உருவாக்கியுள்ளது.

வீட்டுவேலை, கூலிஉழைப்பு ஆகியவற்றுக்கிடையே ஏற்பட்ட பிரிவினையின் காரணமாக முதலாளியத்தின்கீழ் பால்வாதமானது மேலும் உக்கிரமானதாக மாறியுள்ளது என இவர் கருதுகிறார். கூலி உழைப்பில் இருந்து பெண்கள் விலக்கிவைக்கப்படுவது அவர்கள் மீதான ஒடுக்குமுறை அதிகரிப்பதற்குக்காரணமாய் அமைந்துவிடுகிறது. கூலி உழைப்பாளர்கள் என்ற முறையில் ஆண்கள் ஒடுக்கப்படுகிறார்கள். அதேவேளையில், கூலி உழைப்பிலிருந்து விலக்கி வைக்கப்படுவதால் பெண்கள் ஒடுக்கப் படுகிறார்கள் என இவர் வாதிடுகிறார். கூலி உழைப்பிலிருந்து பெண்கள் விலக்கிவைக்கப்படுவதற்கு முதலாளியமே முக்கியக் காரணியாய் இருக்கிறது.

காரணம் முதலாளியம் வீட்டுக்கு வெளியே கூலி உழைப்பை உண்டாக்குகிறது. முதலாளிய அமைப்பிற்குத் தேவைப்படும் கூலி உழைப்பாளர்களை மறுஉற்பத்திசெய்ய வீட்டில் பெண்கள் வேலைசெய்ய வேண்டியத்தேவை முதலாளியத்துக்கு அவசியமாய் இருக்கிறது. பெண்கள், கூலி உழைப்பாளிகளை மறுஉற்பத்தி செய்கின்றனர். அவர்களுக்கு உளவியல் கவனிப்பை அளித்துவருகின்றனர். அந்நியமான ஒரு சூழ்நிலையில் பெண்கள் ஒரு அணுக்கமான சூழலை - பெருங்கடலில் ஒரு தீவாக -உருவாக்கித் தருகின்றனர்.

ஷரட்ஸ்கியின் கருத்துப்படி, முதலாளியத்துக்காகத்தான் பெண்கள் உழைக்கிறார்கள்; ஆண்களுக்காக அல்ல. முதலாளியமானது வீடு, தொழிலிடம் என்ற பிரிவினையை ஏற்படுத்தி வீட்டுவேலையைத் தனிஒருவருக்கு உரித்தானதாக மாற்றியது. பெண்கள் வீட்டில் தனிப்பட்ட ஆண்களுக்காக வேலை செய்கின்றனர் என்ற தோற்றம் உருவாக மேற்சொன்ன அம்சங்களே காரணமாய் இருக்கின்றன. பெண்கள் ஆண்களுக்காக வேலைசெய்கின்றனர் என்ற தோற்றத்துக்கும், பெண்கள் முதலாளியத்துக்கு வேலைசெய்யும் எதார்த்தத்துக்குமுள்ள வேறுபாடே பெண்கள் இயக்கத்தின் சக்தியை பிழையான வழியில் செலுத்துகிறது. வீட்டில் வேலைசெய்துவந்தாலும், தாங்களும் தொழிலாளிவர்க்கத்தின் ஒரு பகுதியினரே என்பதைப் பெண்கள் உணரவேண்டும்.

ஷரட்ஸ்கியின் கருத்துப்படி, "வளர்ச்சியடைந்த முதலாளிய சமூகத்தில் தொழிலாளி, மனைவி என்ற இரு தனித்தன்மையான தொழிலாளிகள் தோற்றம்பெற்றனர். அவர்களது வாழ்க்கையின் கூறபட்ட நிலையினால், தொழிலாளியாக இருக்கும் கணவனும், வீட்டைப் பராமரிப்பவராக இருக்கும் மனைவியும் ஒருசேர ஒடுக்கப்படுகின்றனர்" சமூகரீதியில் அவசியமான ஏனைய அனைத்துச் செயல்பாடுகளோடு வீட்டுவேலையையும் உள்ளடக்கி பார்க்கும் வகையிலான உற்பத்திபற்றிய ஒரு மறுகருத்தாக்கம் தேவையாக உள்ளது. அத்தகைய மறுகருத்தாக்கமே மேற்சொன்ன அழிவுகரமான பிரிவினை இல்லாதிருக்கும் சமூகம் ஒன்றை நிறுவுவதற்கானப் போராட்டத்தை முன்னெடுக்கச் சோசலிசவாதிகளுக்கு உதவும். இவர் கருத்துப்படி, ஆண்களும் பெண்களும் ஒன்றாய் இணைந்து (அல்லது தனித்தனியாக) தமது வாழ்வின் பிரிக்கப்பட்ட பகுதிகளை மீண்டும் ஒன்றுசேர்க்கப் போராடவேண்டும். தனிப்பட்டதும் பொதுவானதுமான நமது அனைத்துத் தேவைகளையும் நிறைவு செய்யக்கூடிய விதத்தில் ஒரு மனிதாயச் சோசலிசத்தை உருவாக்க இது உதவும். தங்களது பிரச்சனைகளின் மூலவேர் முதலாளியமே என்பதை அவர்கள் உணரவேண்டும்.

அப்போதுதான் அவர்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக்கொள்ளாமல் முதலாளியத்துக்கு எதிராகப் போரிடுவர். தனிப்பட்ட வாழ்க்கைக்கும் பொதுவாழ்க்கைக்கும் இடையே பிரிவினை ஏற்பட முதலாளியமேக் காரணமாக இருந்ததால், அதன் அழிவோடு இப்பிரிவினையும் அழிந்துவிடும். இதனால் நமது வாழ்வில் மறுஐக்கியம் ஏற்படும். ஆண்களுக்கும் பெண்களுக்கும் எதிரான ஒடுக்குமுறை முடிவுக்கு வந்துவிடும்.

ஷரட்ஸ்கின் ஆய்வு, பெண்ணிய இயக்கத்துக்குப் பெருமளவு கடமைப்பட்டுள்ள போதிலும், இவர் வாதம் இறுதியில் இயக்கத்தைத் திசைமாற்றுவதாகவே அமைந்தது. பால்வாதம் முதலாளியத்துக்கு முற்பட்டது என்றப் பெண்ணியக் கருத்தை இவரும் ஏற்றுக்கொள்கிறார். மூலதனத்தின் மறுஉற்பத்திக்கு வீட்டுவேலையின் அவசியம்குறித்த கருத்து உள்ளிட்டு, பெரும்பாலான மார்க்சியப் பெண்ணியக் கருத்துகளை இவர் ஏற்றுக்கொண்டார். வீட்டுவேலை கடினமானது என்பதையும் இவர் ஒப்புக்கொண்டார். அவ்வேலையை இவர் சிறுமைப்படுத்த முனையவில்லை. ஆண்மேலாதிக்கம், பால்வாதம்போன்றக் கருத்தாக்கங்களை இவர் பயன்படுத்துகிறார். ஆனாலும், அவரது ஆய்வு முற்றிலும் பிரிவினை எனும் கருத்திலேயே தங்கியுள்ளது. இதுவே பிரச்சனையின் மையம் என அவர் கருதுகிறார். இப்பிரிவினைக்கு முதலாளியமே காரணம் என இட்டுக்கட்டப்பட்டது. இது இருபதாம் நூற்றாண்டின் துவக்கக்காலத்தில் காணப்பட்ட "ஒன்றுக்கொன்று உறுதுணைபுரியும் பகுதிகள்" என்ற கண்ணோட்டத்தை ஒத்திருந்தது. அதாவது ஆண்களின் உலகமும் பெண்களின் உலகமும் வெவ்வேறானவை; ஆனால் ஒன்றுக்கொன்று உறுதுணையானவை, சமமுக்கியமுடையவை என்பதே அந்தக் கருத்தாக்கமாகும்.

பெண்களுக்கும் ஆண்களுக்கும் இடையில் நிலவிவரும் ஏற்றத்தாழ்வையும் அதன் முக்கியத்துவத்தையும் இவர் நிராகரித்தார். பெண்கள், குடும்பம், அதன் தனிப்பட்ட உலகம் ஆகியவற்றுக்கும், முதலாளியத்துக்கும் இடையிலான உறவுகுறித்தே அவர் கவனம் செலுத்தினார். அவர் விவாதிப்பதுபோல, முதலாளியம் வீடுசார்ந்த வாழ்க்கையைத் தனிப்பட்ட விசயமாக உருவாக்கியுள்ளது என்பதாகவே வைத்துக்கொண்டாலும்கூட, பெண்கள்மட்டும் வீட்டு வேலையிலும், ஆண்கள் தொழிலிலும் ஈடுபட நேர்ந்தது ஏன்? பெண்களின் மீது ஒழுங்கு முறைப்படி அமைந்த ஆண்களின் மேலாதிக்கம் என்ற ஆணாதிக்க முறைமையுடன் தொடர்புபடுத்தாமல் நாம் இதனை விளக்க முடியாது. நமது

கருத்துப்படி, குடும்பம், உழைப்புச் சந்தை, பொருளாதாரம், சமூகம் ஆகியவற்றில் காணப்படும் பிரச்சனையானது, ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே ஏற்பட்டுள்ள வெறும் வேலைப்பிரிவினையால் மட்டும் ஏற்பட்டதல்ல. மாறாக, ஆண்களை உயர்வாகவும் பெண்களைத் தாழ்வாகவும் வைத்துள்ள ஒரு பிரிவினையால் ஏற்பட்டதாகும்.

எங்கல்ஸ், முதலாளியத்தின் பங்களிப்பானத் தனிச் சொத்துடைமையை பெண்களின்மீதான ஒடுக்குமுறைக்குக் காரணமாகக் காட்டினார். அதுபோலவே ஷரட்ஸ்கியும், பெண்கள் தனிமைப் படுத்தப்பட்டதே பெண்கள்மீதான ஒடுக்குமுறைக்குக் காரணம் எனக் காட்டுகிறார். பெண்கள் தனிமைப்பட்டு வீட்டுவேலைகளில் உழைப்பதே அவர்கள்மீதான ஒடுக்குமுறைக்குக் காரணமாக அமைந்துவிடுகிறது எனக்கூறுகிறார். தொழிற்புரட்சிக்கு முந்தையச் சமூகத்தில் ஆண்கள், பெண்கள், வயதுவந்தோர், குழந்தைகள் ஆகிய அனைவரும், குடும்பம் சார்ந்த பட்டறைத் தொழிலில் இணைந்து பணியாற்றியதோடு, சமூக வாழ்விலும் அனைவரும் கூட்டாகப் பங்கெடுத்து வந்தார்கள். இச்சமூகத்தின்மீதும் அதன் குடும்ப அமைப்பின்மீதும் எங்கல்சும், ஷரட்ஸ்கியும் உணர்ச்சிசார்ந்த நன்மதிப்பு வைத்திருந்தனர். ஷரட்ஸ்கியின் மனிதாய சோசலிசம் குடும்பத்தை மறுஐக்கியப்படுத்தி "மகிழ்ச்சியான வேலைப்பட்டறை" உருவாக்கும் நோக்கிலானதாகும்.

ஆண்கள், பெண்கள் ஆகிய இருதரப்பாரின் நலன்களும் சோசலிசத்தில் அடங்கி இருக்கிறது என நாம் வாதிடும்போது, நாம் அனைவரும் ஒருவித மனிதாய சோசலிசத்துக்காகப் போராடுகிறோமா? அல்லது அதனை அடைவதற்குத் தேவைப்படும் போராட்டம்குறித்து நம் அனைவருக்கும் ஒரேவிதமானக் கருத்தாக்கம் இருக்கிறதா? என்பதுபோன்ற அம்சங்கள் இங்கு தெளிவாக்கப்படவில்லை. பெண்களின் உழைப்பு ஆண்களுக்காகவே என்றத் தோற்றத்தைத் தந்தபோதிலும் உண்மையில் அது மூலதனத்துக்கே பயன்படுகிறது என ஷரட்ஸ்கி கருதுகிறார். ஆனால் பெண்களின் குடும்ப உழைப்பு முதலாளியத்தை மீள்உருவாக்கம் செய்துவருவது என்பது தெளிவான ஒன்று என்ற போதிலும், அவ்வுழைப்பு உண்மையில் ஆண்களுக்கே பயன்படுகிறது என நாம் கருதுகிறோம். உற்பத்திகுறித்த மீள்கருத்தாக்கம் நாம் உருவாக்க விரும்பும் சமூகம்பற்றிச் சிந்திக்க நமக்கு உதவியாய் இருக்கும். ஆனால் அப்படிப்பட்டதொரு கருத்தாக்கம் உருவாக்குவதற்குமுன்னர் இப்போதைக்கு முதலாளியத்துக்கு எதிரானப் போராட்டத்துக்கு இணையாகவே ஆண்களுக்கும் பெண்களுக்கும்

இடையிலான முரண்பாடுகளைத் தீர்க்கக்கூடியப் போராட்டங்களையும் தொடரவேண்டும்.

வீட்டுவேலைகுறித்து மார்க்சியப் பெண்ணியர்கள் ஆய்வு செய்தபோதிலும், அவர்களும்கூட பெண்ணியப் போராட்டத்தை முதலாளியத்துக்கு எதிரான போராட்டத்துக்கு கீழ்ப்படுத்தியே நோக்கினர். மரியாரோசா டாலாகொஸ்டாவினுடைய வீட்டுவேலைபற்றிய கோட்பாட்டு ஆய்வானது, வீட்டுவேலையில் ஆண்-பெண்ணுக்கு இடையில் வெளிப்படையாகத் தெரியவருகிற உறவுபற்றியதாக இல்லாமல், அடிப்படையில் வீட்டுவேலைக்கும் மூலதனத்துக்கும் இடையிலான உறவுபற்றிதாகவும் முதலாளியச் சமூகத்தில் வீட்டுவேலை பெற்றிருந்த இடம்பற்றியதாகவும் அமைந்திருந்தது. ஆயினும், வீட்டுவேலைக்கு ஊதியம் தரப்பட வேண்டும் என்ற அவரது அரசியல் நிலைபாடானது பெண்கள் இயக்கங்களிடையே வீட்டுவேலையின் முக்கியத்துவம்குறித்த விழிப்புணர்வை அதிகரித்துள்ளது. இக்கோரிக்கை இன்றும்கூட அமெரிக்கப் பெண்கள் குழுக்களிடையேப் பலத்த விவாதத்துக்கு இடமளிக்கிறது. பெண்கள் வீட்டிலிருந்துகொண்டு உழைப்பாளர் படையை மறுஉற்பத்தி செய்தவன்மூலம், மூலதனத்துக்கு அவசியமான சேவைகளில் ஈடுபடுவதோடு, வீட்டுவேலையின் மூலம் உபரிமதிப்பையும் உருவாக்குகின்றனர் என்ற டலாகொஸ்டாவின் வாதமானது வீட்டு வேலைபற்றிய இடதுசாரிகள் உணர்வை அதிகரித்தது. அத்தோடு, அதற்கும் மூலதனத்துக்கும் இடையிலான தொடர்புபற்றிய நீண்ட விவாதத்துக்கும் தூண்டுகோலாய் அமைந்தது.

வீட்டுவேலைபற்றிய பெண்ணிய விளக்கத்தைப் பயன்படுத்தி அது ஊதியம் வழங்கப்படவேண்டிய ஒரு உண்மையான வேலை என டலாகொஸ்டா வாதிட்டார். முதலாளியத்தின்கீழ் அதற்கொருச்சட்ட அங்கீகாரமும் கோரினார். தொழிலாளர் படையில் பெண்கள் சேருவதன்மூலம், கூலி உழைப்பாளியாகவும் அதேவேளையில் ஊதியம் வாங்காமல் வீட்டுவேலை செய்வதன்மூலம் முதலாளியத்துக்கு இலவசமாக ஊழியம்புரியும் பணியையும் ஒருசேர செய்யவேண்டியிருக்கிறது. இந்த "இரட்டை நாள்" பணியைச் செய்வதை விட்டுவிட்டு பெண்கள் வீட்டு வேலைக்கு ஊதியம் கோரவேண்டும் என இவர் கூறுகிறார். வீட்டுவேலைக்கு ஊதியம்பெறும் பெண்கள், உணவு தயாரிப்பு, குழந்தை பராமரிப்பு போன்ற வீட்டுவேலைகளைத் திறமையாகவும் கூட்டு அடிப்படையிலும் ஒழுங்கமைத்துக் கொள்வார்கள் என இவர் கருத்துரைக்கிறார்.

ஊதியத்துக்கான கோரிக்கையும், அதனைப்பெருவதும், அவர்கள் வேலையின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை அதிகரிக்கச் செய்யும், அதன் சமூக முக்கியத்துவத்தையும் அதே வேலையில் தனிப்பட்ட முக்கியத்துவத்தையும் அவர்கள் காண்பார்கள். ஒருங்கிணைந்த சமூக மாற்றத்துக்கான ஒரு அவசியமான முதல்படியாக இது அமையும்.

வீட்டுவேலை மூலதனத்துக்கு அவசியமானதாக இருக்கிறது. இதில்தான் அதன் முக்கியத்துவம் அடங்கியிருக்கிறது. பெண்களின் முக்கியத்துவமும் இதில் அடங்கியிருக்கிறது. வீட்டுவேலைக்கு ஊதியம் கோருவதன்மூலமும், உழைப்புச் சந்தையில் பங்கெடுக்க மறுப்பதன்மூலமும் பெண்கள் முதலாளியத்துக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுக்கலாம். பெண்களது அமைப்புகள் முதலாளியத்தைக் குப்புறக் கவிழ்ப்பதாக அமையமுடியும். முதலாளியத்தின் அத்துமீறல்களை எதிர்ப்பதற்கும், ஒரு புதிய சமூகத்தை அமைப்பதற்குமான ஒரு அடித்தளத்தை அவை இடமுடியும்.

பெண்கள் விடுதலையை ஆண்கள் எதிர்ப்பர் என்பதை டலாகொஸ்டா ஒத்துக்கொள்கிறார். (பெண்கள் தங்களுக்கான அமைப்புகளில் சேரும்போது இந்த எதிர்ப்பு வெளிப்படும்). இதனை பெண்கள் எதிர்கொண்டு போராட வேண்டும். ஆனால், இப்போராட்டம் இறுதிலட்சியமான சோசலிசத்துக்கு உட்பட்டதாக இருக்கவேண்டும். பெண்களது போராட்டம் அதன் பெண்ணிய நிலைபாட்டின் அடிப்படையில் புரட்சிகரமானது அல்ல; மாறாக அதன் முதலாளிய-எதிர்ப்பினால் அது புரட்சிகரமானதாகும் என்கிறார் இவர். பெண்கள் உபரிமதிப்பை உற்பத்திசெய்வது, அதன்விளைவாக அவர்கள் தொழிலாளிவர்க்கத்தின் ஒரு பகுதியானது ஆகிய காரணங்களுக்காக பெண்களுக்கு புரட்சியில் ஒரு இடம்அளிக்கிறார் இவர். பெண்களது அரசியல் செயல்பாட்டை இந்த அம்சங்களே நியாயப்படுத்துகின்றன.

பெண்கள் விடுதலையே பெண்ணியர்களின் குறிக்கோளாகும். இவ்விடுதலை பெண்களின் போராட்டங்கள்மூலமே சாத்தியப்படும். ஆகவே தங்கள் போராட்டத்தின் முக்கியத்துவம்குறித்து என்றுமே பெண்கள் அய்யப்பட்டதில்லை. வீட்டுவேலையின் சமூக இயல்பு குறித்த புரிதலில் டலாகொஸ்டாவின் பங்களிப்பு ஒரு மிகப்பெரிய முன்னேற்றம் ஆகும். ஆனாலும் இங்கு விமர்சிக்கப்பட்ட ஏனைய மார்க்சிய அணுகுமுறைகளைப் போல இதுவும் ஆண் பெண் உறவுகுறித்து கவனம்செலுத்தாமல் மூலதனம்குறித்துமட்டுமே கவனம் செலுத்துகிறது. ஆண்களும் பெண்களும் வேறுபட்ட நலன்களையும், குறிக்கோள்களையும், வழிமுறைகளையும்

கொண்டிருப்பது ஒரு யதார்த்தமாக இருக்கிறது. முதலாளிய அமைப்பு எவ்வாறு நம் அனைவரையும் அடிமைப்படுத்தி வைத்திருக்கிறது என்பதைப்பற்றிய டலாகொஸ்டாவின் ஆய்வானது மேற்சொன்ன யதார்த்தத்தைக் குழப்புவதாக உள்ளது. முதலாளிய அமைப்புமுறையில் பெண்கள் உழைப்பின் முக்கியத்துவத்தையும் அதன் திறன்மிக்கப் பாத்திரத்தையும் இவரது ஆய்வு தெளிவற்றதாகவும் ஆக்கிவிடுகிறது.

டலாகொஸ்டாவின் எழுத்துக்களில் பெண்ணியவாயாடலே (பெண்கள் ஒடுக்கப்படுகிறார்கள், ஆண்களுடன் போராடுகிறார்கள் இன்னபிற) காணப்படுகின்றன. பெண்ணிய ஆய்வுநோக்கு காணப் படவில்லை. அவ்வாறு இருந்திருப்பின், அவர் பின்வருமாறு வாதிட்டிருப்பார் : ஒரு சமூக உறவு என்ற முறையில் வீட்டுவேலையின் முக்கியத்துவம், ஆணாதிக்கத்தின் மேலாதிக்கத்தை நிலைநிறுத்துவதில்தான் அடங்கியிருக்கிறது. பெண்கள் வீட்டுவேலை செய்வது, ஆண்களுக்கு உழைப்பது ஆகியன ஆணாதிக்கமுறைமையை நிலை நிறுத்துவதில் முக்கியப் பங்காற்றுகின்றன என அவர் குறிப்பிட்டிருப்பார்.

எங்கல்ஸ், ஷரட்ஸ்கி, டலாகொஸ்டா ஆகியோர், குடும்பத்துள் நிகழும் உழைப்புச் செயல்முறைப்பற்றி போதியளவு ஆராயவில்லை. பெண்களது உழைப்பால் ஆதாயம் பெறுவது யார்? நிச்சயமாக முதலாளிகள்தான். அதைவிட நிச்சயமாக ஆண்கள்தான். கணவன், தந்தை என்ற முறையில் ஆண்கள் அந்த உழைப்பினால் தனிப்பட்ட ஆதாயம் பெற்றுவருகிறார்கள். வர்க்கம் அல்லது இனக்குழு ஆகியவற்றுக்கேற்ப பெண்களின் உழைப்பில் மாறுபாடுகள் இருக்கலாம். ஆனால் ஆதாயம்பெறுவது ஆண்களே என்பதில் எந்த மாற்றமும் இல்லை. ஆடம்பரப்பொருள் நுகர்வு, ஓய்வு நேரம், தாம் பெறும் தனிப்பட்ட ஊழியங்கள் ஆகிய விசயங்களில் பெண்களைக் காட்டிலும் ஆண்களே உயர்ந்த வாழ்க்கைத்தரம் உடையவராயுள்ளனர். பொருள்முதல்வாத அணுகுமுறை இந்த முக்கிய விசயத்தை அலட்சியப்படுத்தமுடியாது. இதன் பொருள், பெண்கள் தொடர்ந்து ஒடுக்கப்படுவதில் ஆண்களுக்கு பொருண்மை நலன்கள் (MATERIAL INTEREST) உள்ளன என்பதே. ஆணாதிக்க முறைமையினுள் அமைந்திருந்த அதிகாரப் படிநிலை ஒழிந்ததால், பெரும்பாலான ஆண்கள் நன்மை அடைந்தார்கள். ஆனால் குறுகியகால நோக்கில், இது மற்றவர்களின் உழைப்பைக் கட்டுப்படுத்துவதாக இருந்தது. இந்தக் கட்டுப்பாட்டைத் தாங்களாகவே கைவிட ஆண்கள் விரும்பமாட்டார்கள்.

தொடக்ககால மார்க்சியர்களின் அணுகுமுறைகள் வீட்டு உழைப்பை அலட்சியப்படுத்தி தொழிலாளர்படையில் பெண்கள் கட்டாயமாகப் பங்கு பெறுவதற்கு அதீத முக்கியத்துவம் அளித்தன. சமீபகால அணுகுமுறைகள் இரண்டும், வீட்டுவேலைக்கு அதீத முக்கியத்தவம் கொடுத்து, உழைப்புச் சந்தையில் பெண்கள் பங்களிப்பைப் புறக்கணித்தன. இருப்பினும் இந்த அணுகுமுறைகள் அனைத்தும், தொழிலாளிவர்க்கம் என்ற வகையினத்துள் பெண்களைச் சேர்த்துக்கொள்கின்றன. பெண்கள்மீதான ஒடுக்குமுறையை வர்க்க ஒடுக்குமுறையின் ஒரு அம்சமாக புரிந்துகொண்டுள்ளன. இதனால் இவ்வாய்வுமுறைகள் பெண்ணியக்குறிக்கோளுக்கு' ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான உறவுகள்குறித்து - குறைந்த முக்கியத்துவமே அளித்தன. நமது "பிரச்சினையானது" சுவைபட ஆய்வுசெய்யப்பட்டுள்ளது. ஆனால் அதே வேளையில் பிழைபட விளக்கிக்கொள்ளப்பட்டுள்ளது. மார்க்சிய ஆய்வின் குவிமையம் வர்க்க உறவுகள்பற்றியதாகும். அதன் குறிக்கோள் முதலாளியச் சமூகத்தின் இயக்க விதிகளை விளக்குவதாகும். பெண்ணியக் குறிக்கோளை அடைய மார்க்சிய முறையியலை பயன்படுத்த முடியும் என நாம் நம்பிக்கை கொள்வோமெனில், மேற்சொல்லியுள்ள மார்க்சியப்பெண்ணிய அணுகுமுறைகள் அச்செயலைச் செய்யவில்லை என்பது தெளிவு. மார்க்சியப்பெண்ணியர்களின் மார்க்சியம் அவர்களின் பெண்ணியத்தை ஆதிக்கம் செலுத்திவருகிறது.

நாம் ஏற்கனவே சொல்லியுள்ளபடி, மார்க்சியத்தின் ஆய்வுத் திறனும் இதற்கு ஒரு பகுதிக் காரணமாகும். வர்க்கச் சமூகத்தின் வளர்ச்சி, முதலாளியச் சமூகங்களில் இடம்பெறும் மூலதனக் குவிமானச் செயல்முறை, வர்க்க ஆதிக்கத்தின் மறுஉற்பத்தி, வர்க்க முரண்பாடுகளின் வளர்ச்சி, வர்க்கப் போராட்டம் ஆகியனகுறித்தக் கோட்பாடே மார்க்சியம் ஆகும். மூலதனக்குவிப்பு செயல்முறையின் தேவையே முதலாளியச் சமூகங்களை இயக்கி வருகின்றது. உற்பத்தியானது பரிவர்த்தனையை நோக்கி அமைகின்றதேதவிர, பயன்பாட்டுக்காக அல்ல. முதலாளிய அமைப்பில், உற்பத்தியின் முக்கியத்துவம் அது லாபத்தை ஈட்டித்தருவதில்தான் தங்கியிருக்கிறது. பொருட்களின் பயன்மதிப்பு மிகக்குறைந்த அளவுக்கே கணக்கில் கொள்ளப்படுகிறது. உழைப்புச் சக்தியைத் திறம்பட சுரண்டுவது, தொழிலாளிகள் உற்பத்திசெய்யும் பொருட்களின் மதிப்பைக் காட்டிலும் மிகக்குறைந்த அளவே அவர்களுக்கு ஊதியம்தருவது ஆகிய இவற்றில்தான் லாபம் தங்கியுள்ளது. லாபத்தின் குவியலானது உற்பத்தி உறவுகளை மாற்றுவதுபோலவே, சமூக அமைப்பையும் மாற்றுகிறது. வேலையற்றோர் பட்டாளம், மிகப் பெருமளவிலான மக்களை வறுமை வாட்டுவது.

வறுமையின் எல்லையில் ஒருபகுதிமக்கள் நிற்பதுபோன்ற மானுட இழிநிலைகள் மூலதனக்குவிப்புச் செயல்முறையின் பக்கவிளைவுகளாகும்.

முதலாளிகளின் கருத்துப்படி தொழிலாளர் வர்க்கத்தின் மறுஉற்பத்தியை "அதனிடமே விட்டுவிடுவது பாதுகாப்பானது". அதேவேளையில் முதலாளியமானது தன் வளர்ச்சிக்கு இணையாக ஒரு கருத்தாக்கத்தைத் தோற்றுவித்து வளர்த்துவருகிறது. தனிநபர்வாதம், போட்டி உணர்வு, ஆதிக்கம் போன்றவையே அக்கருத்தாக்கம் ஆகும். நமது காலத்தில் குறிப்பிட்ட வகையான நுகர்வுமனப்பான்மை என்ற அம்சமும் இதில் சேர்ந்து கொள்கிறது. கருத்துக்கள் எப்படித் தோன்றுகின்றன என்பதுகுறித்து ஒருவர் எந்தவிதமான கருத்துக்களைக் கொண்டிருந்த போதிலும், மேலே சொல்லியுள்ள கருத்தாக்கமானது முதலாளியச் சமூகங்களின் முக்கிய விழுமியங்கள் என்பதை அவர் ஒத்துக்கொண்டே ஆகவேண்டும்.

உற்பத்தியின் கட்டமைவு, ஒரு குறிப்பிட்ட தொழில்முறையின் பெருக்கம், ஆதிக்கச் சித்தாந்த இயல்பு போன்ற முதலாளியச் சமூகத்தின் பல அம்சங்களை விளக்குவதற்கு மார்க்சியம் நமக்கு உதவுகிறது. முதலாளியத்தின் வளர்ச்சிபற்றிய மார்க்சியக் கோட்பாடானது "வெற்றிடங்களின்" வளர்ச்சிபற்றிய கோட்பாடாகும். சான்றுக்குச் சொல்வதானால், மார்க்ஸ் தொழிலாளிவர்க்கத்தின் வளர்ச்சி, குட்டி முதலாளிகளின் மறைவுகுறித்து ஆருடம் கூறினார். முன்னேறிய முதலாளியச் சமூகங்களில் வெள்ளைச் சட்டைத் தொழிலாளிகள், சேவைத்துறை தொழிலாளிகள் ஆகியோருக்கான வேலை வாய்ப்புகள் உருவாக்க ப்படுவதுகுறித்து *பிரேவர்மன்* என்பவர் மிகத் தெளிவாக விளக்கியுள்ளார். இம்மாதிரியான வேலையிடங்களில் யார் அமரப்போகிறார்கள் எனபதுகுறித்து மூலதனம் அக்கறை காட்டாமல் அவ்வேலைவாய்ப்புகளை உருவாக்கிவருகிறது. அதுபோலவே, மார்க்சிய ஆய்வு வகையினங்களும் இக்குறிப்பிட்ட வேலைவாய்ப்புகளை ஏன் குறிப்பிட்ட நபர்கள்மட்டமே நிரப்பிவருகின்றனர் என்ற விசயத்தை விளக்குவதில் அக்கறைகொள்வதில்லை. குடும்பத்துக்கு உள்ளும் வெளியிலும் பெண்கள் ஏன் ஆண்களுக்குக் கீழ்ப்படிந்த நிலையிலேயே இருந்துவருகின்றனர்; இதற்கு எதிர்மாறாக, பெண்களுக்குக் கீழ்ப்படிந்த நிலையில் ஆண்கள் இருப்பதில்லையே அது ஏன்? என்பது குறித்து மார்க்சிய வகையினங்கள் எந்த ஒரு கருத்தும் சொல்லவில்லை. மூலதனம் போலவே மார்க்சிய வகையினங்களும் பால் - குருட்டுத்தனம் வாய்ந்தவையாக உள்ளன. இந்த வெற்றிடத்தை யார் நிரப்புவார்கள் என்பதுகுறித்து மார்க்சிய வகையினங்களால் சொல்லமுடியாது. பெண்கள்பிரச்சனைகுறித்த மார்க்சிய

ஆய்வுமுறை, இத்தகைய அடிப்படைப் பிரச்சனையால் குறைபாடு உடையதாய் இருக்கிறது.

*கூடியப்பயனுள்ள மார்க்சியப் பெண்ணியத்தை நோக்கி ....*

வரலாற்று இயங்கியல் பொருள்முதல்வாதம் என்பது சமூக ஆய்வுக்கான ஒரு மார்க்சிய வழிமுறையாகும். *ஜூலியட் மிட்சேல், ஸீலாமித் பயர்ஸ்ரோன்* போன்றோர் இந்த ஆய்வுமுறையை பெண்ணிய வினாக்களுக்கு விடைகாணப்பயன்படுத்தியுள்ளனர். அதன்மூலம் மார்க்சியப் பெண்ணியத்துக்கு புதிய திசைகளைக் காட்டியுள்ளனர். மிட்சேல் பின்வருமாறு கூறுகிறார்.

"எப்போதும் கேள்விக்குள்ளாக்கப்பட வேண்டியது சோசலிசத் துடனான நமது உறவல்ல" நம்மீதான ஒடுக்குமுறையின் குறிப்பான இயல்பு நமது புரட்சிகரப் பாத்திரம் ஆகியனகுறித்து ஆராயும் ஒரு ஆய்வுமுறையாக அறிவியல் சோசலிசத்தை (மார்க்சிய ஆய்வுமுறையை) பயன்படுத்துவதைக் குறித்தே நாம் எப்போதும் கேள்வி எழுப்பவேண்டும். முன்பு வளர்ச்சியடைந்த சோசலிசக் கோட்பாடுகளை விளங்கிக்கொண்டது போலவே, தீவிரப் பெண்ணியத்தையும் விளங்கிக்கொள்ள இத்தகைய ஆய்வுமுறை தேவை என்பதே என் நம்பிக்கையாகும்."

எங்கல்ஸ் பின்வருமாறு எழுதியுள்ளார்.

> "பொருள்முதல்வாதக் கருத்துப்படி, இறுதிஆய்வில், வரலாற்றைத் தீர்மானிக்கும் காரணியாக இருப்பது உடனடி வாழ்க்கையின் உற்பத்தியும், மறுஉற்பத்தியுமாகும். இது ஒருபுறம் வாழ்க்கைக்கு ஆதாரமான உணவு, உடை, இருப்பிடம், உற்பத்திக்குத் தேவையான கருவிகள் ஆகியவற்றையும், மறுபுறம் மனிதர்களையும் உற்பத்திசெய்தல் ஆகும். ஒரு குறிப்பிட்ட வரலாற்றுக் கட்டத்தைச் சேர்ந்த மக்களது சமூக அமைப்பு இவ்விரு உற்பத்திவகைகளாலும் தீர்மானிக்கப்படுகிறது."

இத்தகைய ஒரு ஆய்வுமுறையைக் கைக்கொள்ளவே மிட்சேல் முயன்றார். *"பெண்கள் - ஒரு நீண்ட புரட்சி"* என்ற அவரது முதலாவது கட்டுரையில், சந்தைவேலை, உயிரின மறுஉற்பத்தி, பாலியல், குழந்தை வளர்ப்பு ஆகிய விசயங்களை ஆய்வுசெய்துள்ளார்.

பெண்களது சகல வேலைகளையும் உற்பத்தியாகக் கருதாததால், மிட்சேல் தனது முயற்சியில் முழுவெற்றியைக் காண முடியவில்லை. சந்தை

வேலையைமட்டுமே அவர் உற்பத்தி எனக் கண்டார். பெண்கள் செய்துவந்த மற்ற வேலைகள் கருத்தியல் தொடர்புகொண்டனவாகக் கருதப்பட்டன. மறுஉற்பத்தி, பாலியல், குழந்தை வளர்ப்பு ஆகிய விசயங்களை பெருமளவுக்கு ஒழுங்குபடுத்தும் ஆணாதிக்கமுறைமைக்கு எந்தவொரு பொருண்மை அடிப்படையும் இல்லை என்றே மிட்சேல் கருதினார். *உமன்ஸ் எஸ்டேட்* என்ற தனது நூலில், பெண்களின் குடும்ப உழைப்பைக் காட்டிலும் அவர்களது சந்தை உழைப்புகுறித்த ஆய்வுக்கே அவர் அதிக முக்கியத்துவம் தந்துள்ளார். பெண்கள் ஆண்களோடு கொண்டுள்ள உறவு, பெண்கள் ஆண்களுக்காக உழைப்பது ஆகிய விசயங்களைக் காட்டிலும், பெண்களுக்கும் மூலதனத்துக்கும் இடையேயான உறவு, பெண்கள் மூலதனத்துக்காக உழைப்பது ஆகிய விசயங்கள்குறித்தே இந்நூல் அதிக அக்கறை செலுத்தியுள்ளது. தீவிரப் பெண்ணியத்தைக் காட்டிலும் மார்க்சியத்தின் பாதிப்பே இந்நூலில் அதிகம் காணப்படுகிறது.

*"உளவியல் ஆய்வும் - பெண்ணியமும்"* என்ற தனது பிற்கால நூல் ஒன்றில், ஆண்-பெண் உறவுநிலைபற்றிய ஆய்வில் ஒரு முக்கியப் பகுதியை இவர் வெளிச்சமிட்டுக் காட்டியுள்ளார். பாலின அடிப்படையில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் வேறுபட்டு அமைந்துள்ள ஆளுமை வேறுபாடுகளே அந்த முக்கிய பகுதியாகும். ஆணாதிக்கமுறைமையானது முக்கியமாக உளவியல் தளத்தில் செயல்படுவதாக மிட்சேல் கூற முயல்கிறார். இந்த உளவியல் தளத்தில் பெண் குழந்தைகள் பெண்ணாகவும், ஆண் குழந்தைகள் ஆணாகவும் இருக்கக் கற்றுக் கொள்கின்றனர். இங்குதான் மிட்சேல் தான் தொடக்கத்தில் புறக்கணித்த மறுஉற்பத்தி, பாலியல், குழந்தை வளர்ப்பு போன்ற தளங்களில் தன் கவனத்தைக் குவிக்கிறார். ஆனால் இவற்றை கருத்தியல் தளத்தில் வைத்து மட்டுமே காண்கிறார். இதனால் அவரது தொடக்கக்கால ஆய்வுகளில் காணப்பட்ட அடிப்படைப் பலவீனம் இங்கும் தொடர்கிறது. மூலதனம் எவ்வாறு அடிப்படையான பொருளாதாரக் கட்டமைப்பாக உள்ளதோ, அதைபோல, ஆணாதிக்க முறைமையை அடிப்படையான கருத்தியல் கட்டமைப்பாக இவர் தெளிவாக விளக்குகிறார்.

"இவ்விசயத்தை ஒரு திட்ட அமைப்பில் கூறுவதெனில், நாம் இரு சுயேச்சையான பரப்புகளைக் கையாள்கிறோம். ஒன்று, முதலாளியத்தின் பொருளாதார வடிவம். மற்றது ஆணாதிக்கமுறைமையின் கருத்தியல் வடிவம்"

இவையிரண்டும் ஒன்றையொன்று பாதிக்கக்கூடியவை என்ற அம்சத்தை மிட்சேல் விவாதித்துள்ள போதிலும், ஆணாதிக்கமுறைமைக்கு ஒரு பொருண்மை அடித்தளம் அளிக்கத் தவறியது, ஆளுமை

உருவாக்கத்திலும் பாலின உருவாக்கத்திலும் பங்குவகிக்கும் பொருண்மை அம்சங்களைக் காணத் த்வறியது போன்ற விசயங்கள், அவரது ஆய்வின் பயன்பாட்டைக் குறைத்துவிடுகின்றன.

ஆணாதிக்க முறைமைக்கு ஒரு பொருண்மை அடிப்படையைத் தருவதன் மூலம், பயர்ஸ்ரோன் மார்க்சியத்துக்கும் பெண்ணியத்துக்கும் இடையே ஒரு பாலம் அமைக்கிறார். மிட்சேல்லின் பொருள்முதல்வாத ஆய்வைப்போல், பயர்ஸ்ரோன் ஆய்வு இருமைக்குணம் கொண்டதாக இல்லை. பால்-இயங்கியலே, அடிப்படையான வரலாற்று இயங்கியல் ஆகும் என அவர் கூறுகிறார். கூலிஉழைப்புக்குச் செல்லும் பெண்கள் மனிதஇன மறுஉற்பத்தியில் ஈடுபடுவதுதான் ஆணாதிக்க முறைமைக்கு ஒரு பொருண்மை அடிப்படையைத்தருகிறது என்கிறார். பெண்களது நிலையை ஆராய மார்க்சியத்தைப் பயன்படுத்தியதிலும், ஆணாதிக்க முறைமைக்கு ஒரு பொருண்மை அடித்தளம் உண்டு என சுட்டிக்காட்டியதிலும் இவரின் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது. ஆனாலும், உயிரியல், மறுஉற்பத்தி ஆகிய அம்சங்களுக்கு அதீத அழுத்தம் கொடுத்த காரணத்தினால் இவர் ஆய்வு குறைபாடுடையதாயிற்று. ஒரு குறிப்பிட்ட பால் (உயிரியல் யதார்த்தம்) எவ்வாறு ஒரு பாலினமாக (ஒரு சமூக யதார்த்தமாக) உருப்பெறுகிறது என்பதுகுறித்து நாம் புரிந்துகொள்ள வேண்டியது அவசியம். மனிதகுல மறுஉற்பத்தியில் மாத்திரம் கவனம் செலுத்தாமல், பெண்களின் அனைத்து உழைப்பையும் அவை நிகழும் சமூக வரலாற்றுப் பின்னணியில் வைத்துப் பார்ப்பது அவசியமாகும். மார்க்சிய முறையியலை புதிய முறையிலும் பெண்ணிய நோக்கிலும் இவர் பயன்படுத்தியுள்ள போதிலும், பெண்ணின்மீது ஆண் செலுத்தும் ஒடுக்குமுறையே ஏனைய அனைத்து (வர்க்கம், வயது, இனம்) ஒடுக்குமுறைகளுக்கும் அடிப்படைக்காரணமாக இருக்கிறது என்ற அம்சத்துக்கு அவர் கொடுத்த அழுத்தம் அவரைத் தீவிரப்பெண்ணியர்கள் அணியில் சேர்த்துவிட்டது. அவரது நூல், தீவிரப்பெண்ணிய நிலைபாடு பற்றிய ஒரு முழுமையான அறிக்கைபோல உள்ளது.

மார்க்சியர்கள் மிகமகிழ்வோடு பயர்ஸ்ரோன் நூலை நிராகரித்துவிட்டனர். எடுத்துக்காட்டாக ஷரட்ஸ்கி இந்நூலை ஒரு "அகநிலைவாத முறையீடு" என அழைத்தார். பெண்ணின்மீது ஆண் செலுத்தும் அதிகாரம்குறித்த அவர் ஆய்வும், இந்நிலையின்மீது அவர் காட்டும் தார்மீகக் கோபமும், இந்நூலின்மீது பெண்கள் மிகுந்த உற்சாகம் கொள்ளக் காரணமாய் அமைந்துள்ளன. இந்நூலில் உள்ள காதல்குறித்த

அத்தியாயம் இதற்கு மையமாய் அமைந்துள்ளது. மார்க்சியர்கள் ஆய்வுசெய்துவருவது வெறுமனே "ஆண்மையின் கருத்தியல்" பற்றியதல்ல. (அதாவது வெறும் அணுகுமுறைகுறித்த விசயமல்ல). மாறாக, பெண்கள்மீதான ஆண்களின் அதிகாரத்திணிப்பின் அகநிலை விளைவுகள் பற்றிய விளக்கமாகவும், ஆணாதிக்கச் சமூகத்தில் வாழ்வதை பெண்கள் எவ்வாறு உணருகிறார்கள் என்பதுபற்றியுமாகும். "அந்தரங்கம் என்பது பகிரங்கமே" என்ற முழக்கமானது, ஷரட்ஸ்கி சொல்லியுள்ளதுபோல "வெறுமனே அகநிலைவாத முறையீடல்ல" மாறாக, ஆண்களின் அதிகாரத்தையும், பெண்களது தாழ்த்தப்பட்ட நிலையையும், ஒரு அரசியல், சமூக எதார்த்தமாக அங்கீகரிக்கக் கோரும் ஒரு முழக்கமாகும்.

### II. தீவிரப்பெண்ணியமும் ஆணாதிக்கமுறைமையும் :

தீவிரப் பெண்ணிய எழுத்துக்களின் தலையாய பணி, "அந்தரங்கம் என்பது பகிரங்கமே" என்ற முழக்கத்துக்கு அடிப்படை ஆவணங்களைச் சேர்ப்பதாக இருக்கிறது. பெண்களின் அதிருப்தியானது பாதிக்கப் பட்டோரின் ஒப்பாரி அல்ல; மாறாக பெண்கள் முறைப்படுத்தப்பட்ட வழியில் ஆதிக்கத்துக்கும், சுரண்டலுக்கும், ஒடுக்குதலுக்கும் உள்ளாகியுள்ள ஒரு சமூக அமைப்புக்கு எதிரான அவர்களின் எதிர்வினையாகும். உழைப்புச் சந்தையில் பெண்களின் தாழ்ந்த இடம், ஆணை மையமாகக்கொண்ட உணர்ச்சிகர நடுத்தவர்க்கத் திருமணமுறை, விளம்பரங்களுக்குப் பெண்களைப் பயன்படுத்துவது, பெண்களின் உளவியலை நரம்புத் தளர்ச்சி என புரிந்துகொள்ளப்பட்டிருப்பது (கல்வியாளர்களும் உளவியலாளர்களும் இதைப் பிரபலப்படுத்தியுள்ளனர்) என வளர்ச்சியடைந்த முதலாளிய நாடுகளில் வாழும் பெண்களின் வாழ்க்கைமுறை ஒவ்வொரு அம்சமாக ஆராயப்பட்டு அலசப்பட்டுள்ளது. தீவிரப்பெண்ணிய எழுத்துக்கள் எண்ணிக்கையில் அதிமானவை. மிக எளிதில் அவற்றைச் சுருக்கிவிட முடியாது. அதேசமயம், இவ்வெழுத்துக்கள் உளவியல்குறித்து ஒரேசீரான கவனத்தைச் செலுத்தியுள்ளன. நியூயார்க் நகரதீவிரப்பெண்ணிய அமைப்பின் பிரகடனம் "தன்முனைப்பின் அரசியல்" என்பதாகும். தீவிரப் பெண்ணியர்களைப்பொறுத்த அளவில், "அந்தரங்கம் என்பது பகிரங்கமே" என்பதன் பொருள், ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையிலான பிரிவினையே உண்மையான அடிப்படை வர்க்கப் பிரிவினையாகும்; அத்துடன், பெண்களின்மீது அதிகாரமும் ஆதிக்கமும் செலுத்த ஆண்கள் செய்யும் முயற்சிகளே வரலாற்றை இயக்கும் உந்துசக்தியாகும். அதாவது பாலின இயங்கியலே (DIALECTICS OF SEX) வரலாற்றை இயக்கும் உந்துசக்தியாகும்.

அதிகாரம் என்ற அம்சத்தைப் பொறுத்து எவ்வாறு சிறுவர்கள் ஆண்களாகவும், சிறுமிகள் பெண்களாகவும் வளர்ச்சி பெறுகிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ளும்விதத்தில் பிராய்டின் கருத்துக்களை பயர்ஸ்ரோன் மீள எழுதினார். ஆண்மை, பெண்மைகுறித்த இவரின் விளக்கங்கள் தீவிரப் பெண்ணிய எழுத்துக்களுக்கு ஒரு வகைமாதிரியாக உள்ளது. அதிகாரத்தையும் ஆதிக்கத்தையுமே ஆண் நாடுகிறான். தனிநபர்வாதம், தன்னகங்காரம், போட்டி மனப்பான்மை, காரியவாதம் ஆகிய பண்புகளைக் கொண்டவனாக அவன் இருக்கிறான். இவர் கருத்துப்படி, தொழில்நுட்ப வழிமுறை என்பதே அதனளவில் ஆண்தன்மை கொண்டதாக இருக்கிறது. பெண், பராமரிப்பவளாக, கலைஉணர்ச்சிக் கொண்டவளாக, கருத்தியல் அம்சம் கொண்டவளாக இருக்கிறாள். "அழகியல் வழிமுறை" பெண்ணுக்கானதாக இருக்கிறது.

அழகியல் வழிமுறை பெண்ணுக்கானது என்ற கருத்தானது பண்டைய கிரேக்கர்களுக்கு அதிர்ச்சிதரும் விசயமாக இருந்திருக்கும் என்பதில் அய்யமில்லை. தீவிரப்பெண்ணியரின் ஆய்வுக் குறைபாடு இதில் தான் தங்கியுள்ளது. நிகழ்காலத்தில் ஆண்மை, பெண்மைக் குணங்கள் அமைந்திருப்பது போலவே வரலாற்றின் எல்லாக் காலங்களிலும் அமைந்திருக்கும் எனக்கூறுவது தவறு. நிகழ்காலம்பற்றி தீவிரப் பெண்ணியர்கள் முன்வைத்துள்ள ஆழ்ந்த கருத்துக்கள் மிகவும் வலிமையானவை. ஆனால் வரலாறுபற்றி எந்தப் பார்வையும் இல்லாமல் உளவியல்மீதுமட்டுமே கவனம் செலுத்தியது அதன்பெரும் பலவீனமாகும்.

தீவிரப்பெண்ணியரின் ஆய்வுமுறைமட்டுமே இக்குறைப்பாட்டுக்குக் காரணமல்ல. ஆணாதிக்கமுறைமையின் இயல்பும் இதற்கு ஒரு காரணமாகும். ஏனெனில் ஆணாதிக்கமுறைமையானது நிலைமைக்கு ஏற்றபடி தன்னை மாற்றிக்கொண்டு, நிலைத்து நீடித்துவரும் ஒரு சமூக அமைப்பாக இருந்துவருகிறது. பெண்கள்மீது ஆண்கள் ஆதிக்கம் செலுத்திவரும் ஒரு சமூக அமைப்பைக்குறிக்கவே தீவிரப்பெண்ணியர் ஆணாதிக்க முறைமை என்ற கருத்தாக்கத்தைப் பயன்படுத்துகின்றனர். கேட் மில்லட்டின் கீழ்க்கண்ட விளக்கம் இதற்குச் சரியான எடுத்துக்காட்டாகும்.

"நமது சமூகம் ஆணாதிக்கமுறைமைச் சமூகமாகும், இராணுவம், கைத்தொழில், தொழில்நுட்பம், பல்கலைக்கழகங்கள், அறிவியல், அரசியல் விவகாரம், நீதி மற்றும் கொடூரமான காவற்படை உள்ளிட்டு அதிகாரத்தின் அனைத்து வழிகளும் ஆண்களின் கைகளிலேயே தங்கி உள்ளத்திலிருந்து இது புலப்படும்."

ஆணாதிக்கமுறைமைபற்றிய தீவிரப்பெண்ணியரின் விளக்கம் நாம் அறிந்துள்ள பெரும்பாலான சமூகங்களுக்குப் பொருந்துவதாகும். ஆனால், இந்தச் சமூகங்களுக்கு இடையிலான வேறுபாட்டை சுட்டிக்காட்ட இந்த விளக்கத்தால் முடியாது. எல்லாக் காலங்களிலும், எல்லா இடங்களிலும் ஆணாதிக்கம் இருந்தற்கான அடையாளங்களைச் சுட்டிக் காட்டுவதோடு வரலாறுகுறித்த பயன்பாட்டை தீவிரப்பெண்ணியர் நிறுத்திக் கொள்கின்றனர். பெண்கள் இயக்கம் தோன்றுவதற்கு முன்பு, மார்க்சியர்களும், சமூக விஞ்ஞானிகளும் ஆணாதிக்கமுறைமைக்கு பின்வரும் விளக்கத்தையே தந்துவந்தனர். நில உடைமையிலும் அதற்கு முந்தியச் சமூகங்களிலும், ஆண்களுக்கு இடையே நிலவிவந்த அரசியல் - பொருளாதார உறவுகளே ஆணாதிக்க முறைமையாகும். அத்தகையச் சமூகங்களில், அவற்றுக்குத் தகுந்த குணாம்சங்களைக்கொண்ட அதிகாரப்படிநிலை அமைப்பும் பின்பற்றப்பட்டன. முதலாளியச் சமூகமானது அதிகாரத்துவம், தனி அடையாளம் இல்லாதிருப்பது (IMPERSONAL), திறமைக்கு மதிப்பளித்தல் ஆகிய பண்புகளைக்கொண்ட ஒரு சமூகம் என முதலாளியச் சமூக விஞ்ஞானிகள் விளக்கம் அளித்தனர். மார்க்சியர்களோ முதலாளியச் சமூகத்தை ஒரு வர்க்க ஆதிக்கச் சமூகமாக அடையாளம் கண்டனர். இந்த இரு தரப்பினருமே ஆணாதிக்கமுறைமையை, பெண்களை ஆதிக்கம் செலுத்தும்வகையில் ஆண்கள் தங்களுக்குள் உறவுகொண்டுள்ள ஒரு சமூகஅமைப்பாகக் காணவில்லை.

### ஆணாதிக்கமுறைமைபற்றிய விளக்கத்தை நோக்கி :

ஆணாதிக்கமுறைமையைப் பின்வருமாறு பயனுள்ள முறையில் நாம் வரைவுசெய்யலாம். ஆணாதிக்கமுறைமை என்பது பெண்கள்மீது மேலாதிக்கம் செலுத்துவதற்கு வாய்ப்பான முறையில், ஆண்கள் தமக்கிடையே அதிகாரப் படிநிலைத் தன்மையுள்ளதும், ஒன்றையொன்று சார்ந்திருப்பதும், ஒருமைப்பாடு உள்ளதுமாக அமைத்துக்கொண்ட பொருண்மை அடித்தளம் கொண்ட சமூக உறவுகளின் தொகுப்பையே குறிக்கிறது. ஆணாதிக்க அமைப்பு என்பது ஓர் அதிகாரப் படிநிலை அமைப்பாக இருந்தபோதிலும், வெவ்வேறு வர்க்கம், இனம், இனக்குழுவைச் சேர்ந்த ஆண்களுக்கு இவ்வமைப்பில் வெவ்வேறுபட்ட இடங்களே கிடைத்தபோதிலும், பெண்கள்மீதான ஆதிக்கத்தின் பங்குதாரர் என்ற வகையில் ஆண்கள் தங்களுக்குள் ஐக்கியப்பட்டுள்ளனர். இந்த ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதற்கு அவர்கள் தங்களுக்குள் ஒருவரை ஒருவர் சார்ந்துள்ளனர். அதிகாரப்படிநிலை என்பது குறைந்தபட்சம்

பகுதியளவிலாவது "வேலை" செய்கிறது. ஏனெனில் தகுதிக்கேற்றாற்போல ஆதாயங்களை உருவாக்கிவைத்திருக்கிறார்கள். உயர்ந்த தகுதியில் இருப்பவர்கள் தங்களுக்குக் கீழே இருப்பவர்களை "விலைக்கு" வாங்கிக் கொள்கிறார்கள். எப்படியெனில், தங்களுக்குக் கீழே இருப்பவர்கள், அவர்களைக்காட்டிலும் கீழ்நிலையில் இருப்பவர்கள்மீது அதிகாரம் செலுத்த அனுமதிகொடுப்பதன்மூலம் அவர்களை விலைக்கு வாங்கிக் கொள்வது. ஆணாதிக்க முறைமையின் அதிகாரப்படிநிலை அமைப்பில், சகல ஆண்களும், அவர்கள் எந்தத் தகுதியில் இருந்தபோதிலும், சில பெண்களையாவது கட்டுப்படுத்தும் அதிகாரம் பெற்றவர்களாக உள்ளனர்.

அரச சமூகங்களில் ஆணாதிக்க முறைமை முதன்முதலில் நிறுவனமயப்படுத்தப்பட்டபோது, தமது குலக்குழுவின் மூலவளங்களைக் கையளித்தமைக்காகப் புதிதாக வந்த ஆட்சியாளர்கள் குலக்குழுவைச் சேர்ந்த ஆண்களுக்கு குடும்பத் தலைமைப் பதவியை (மனைவிகள் குழந்தைகள் மீது அதிகாரம் செலுத்த அனுமதிப்பது) அளித்தனர் என்பதற்குச் சான்றுகள் உள்ளன. பெண்களின் மீதான தமது ஆதிக்கத்தைப் பேணுவதற்காக ஆண்கள் (தங்களுக்கிடையே நிலவும் அதிகார ஏற்றத்தாழ்வுகளையும் தாண்டி) தங்களுக்குள் ஒருவரை ஒருவர் சார்ந்துள்ளனர்.

பெண்களது உழைப்புச் சக்தியை ஆண் கட்டுப்படுத்துவதே ஆணாதிக்கமுறைமையின் பொருண்மை அடிப்படையாக அமைந்துள்ளது. அவசியமான உற்பத்தி வளங்களிலிருந்து பெண்களை விலக்கி வைப்பதன்மூலமும் பெண்களின் பாலியலைக் கட்டுப்படுத்துவதன்மூலமும் அவர்கள்மீதான தமது கட்டுப்பாட்டை ஆண்கள் நிலைநாட்டி வருகிறார்கள். சமீபத்தில் தோன்றியதும் திறனான வடிவம்கொண்டதுமான ஒருதார மணமுறையானது இத்தகைய கட்டுப்பாட்டுக்கு வழியமைத்துத் தருகிறது. மூலவளங்களுக்கான பெண்களது வாய்ப்பையும், அவர்களது பாலியலையும் கட்டுப்படுத்துவதன்மூலம் பெண்களின் உழைப்புச்சக்தியைக் கட்டுப்படுத்தும் வாய்ப்பை ஆண்கள் பெற்றுக்கொள்கின்றார்கள். இதன் மூலம் தங்களது தனிப்பட்ட வழியில் பல ஊழியங்களைச் செய்வதற்கும், தங்களின் பாலியல் விருப்பங்களை நிறைவுசெய்வதற்கும், குழந்தை வளர்ப்புக்கும் பெண்களைப் பயன்படுத்த முடிகிறது. ஆண்களுக்கு பெண்கள் அளிக்கும் ஊழியமானது மகிழ்ச்சியற்ற பல வேலைகளை (கழிவறையைச் சுத்தம்செய்வது போன்ற வேலைகளை) ஆண்கள் செய்வதிலிருந்து விடுவிக்கிறது. இது குடும்பத்துக்கு உள்ளும் வெளியும் நடப்பதாகும். குடும்பத்துக்கு வெளியே நடக்கும் செயல்களுக்கு சில எடுத்துக்காட்டுகளை

கீழே பார்க்கலாம். பெண் தொழிலாளிகள் தங்கள் முதலாளிகளாலும், மாணவிகள் தங்கள் ஆசிரியர்களாலும் இன்னலுக்குள்ளாவது; ஆண் அதிகாரிகள் தங்களது தனிப்பட்ட வேலைகளைச் செய்யவும், தேநீர் தயாரிக்கவும் தங்களது பெண் செயலாளர்களைப் பயன்படுத்துவது; அதன் மூலம் ஒரு "பாலியல்" சூழலை உருவாக்குவது ஆகியன. குழந்தைகளின் உழைப்புச்சக்தி தந்தைமார்களுக்கு உடனடி நன்மை தந்தாலும், தராவிட்டாலும், குழந்தைவளர்ப்பு என்பது ஆணாதிக்கமுறைமையை ஒரு அமைப்பாக நிலைநிறுத்த உதவுகிறது. பள்ளி, தொழிலிடம், நுகர்வுமுறை போன்றவை வர்க்கச் சமூகத்தை மறுஉருவாக்கம் செய்வதுபோலவே, ஆணாதிக்கச் சமூக உறவுகளும் மறுஉருவாக்கம் செய்யப்படுகின்றன.

நமது சமூகத்தில் பொதுவாக குழந்தை வளர்ப்பு என்பது பெண்களால் வீட்டில் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. பெண்கள் சமூகரீதியாக ஆண்களுக்குக் கீழ்ப்பட்டவர்களாக வரையறுக்கப்பட்டும் அடையாளம் காணப்பட்டும் வருகின்றனர். ஆண்கள் மிக அரிதாகவே குடும்ப வேலைகளில் பங்குபெறுகின்றனர். இத்தகையச் சூழலில் வளரும் குழந்தைகள் பால் அதிகாரப்படிநிலை அமைப்பில் தங்களது இடம் எதுவென எளிதில் கற்றுக்கொள்கின்றனர். இந்த வளர்ச்சிப்போக்கின் மையமாக வீட்டுக்கு வெளியே, ஆலயங்கள், பள்ளிகள், விளையாட்டுகள், தொழிற்சங்கங்கள், ராணுவம், தொழிற்சாலைகள், அலுவலகங்கள், சுகாதார மையங்கள், தொடர்புசாதனங்கள் போன்றவை ஆணாதிக்க நடத்தைகளைக் கற்றுத் தருகின்றன. பெண்களது தாழ்த்தப்பட்ட நிலையை உறுதிசெய்து நிலைநிறுத்துகின்றன.

ஆகவே, ஆணாதிக்கமுறைமையின் பொருண்மை அடித்தளம் குழந்தைவளர்ப்பில் மாத்திரம் தங்கியிருக்கவில்லை. மாறாக, பெண்களது உழைப்புச்சக்தியை ஆண்கள் கட்டுப்படுத்துவதை சாத்தியமாக்கும் சகல கட்டுமானங்களிலும் அது தங்கியிருக்கிறது. ஆணாதிக்கமுறைமையை நிலைநிறுத்தும் சமூகக்கட்டுமானங்களின் அம்சங்கள் கோட்பாட்டுரீதியாக அடையாளம் காணக்கூடியதாகவும், அதனால் ஏனைய அம்சங்களிலிருந்து பிரித்தறியக்கூடியதாகவும் உள்ளன. *கெயில்ரூபின்* இத்தகைய சமூகக் கட்டுமானங்களின் கூறுகளை எளிதில் இனம்காணும் வண்ணம் பாலினம்/பால்முறைமை (SEX/GENDER) என்னும் ஒரு கருத்தாக்கத்தை உருவாக்கினார்.

"பாலினம்/பால்முறைமை என்பது ஒரு சமூகம் தனது உயிரியல் பாலியலை (BIOLOGICAL SEXUALITY) மனிதச் செயல்பாட்டின்

உற்பத்திகளாக உறுமாற்றும் ஒழுங்குமுறைத் தொகுதியைக் குறிக்கும். இந்த உருமாற்றத்தினால் பாலியல் தேவைகள் நிறைவுசெய்யப்படுகின்றன."

"நாம் ஆண் பெண் என்னும் இருவகைப் பாலினங்களாக (SEX) பிறந்துள்ளோம். ஆனால், சமூகரீதியாக ஏற்றுக்கொள்ளப்படும் ஆண்மை, பெண்மை என்ற பால்களாக (GENDER) நாம் உருவாக்கப்படுகிறோம். நாம் எவ்வாறு அப்படி ஆக்கப்படுகிறோம் என்பது, எங்கெல்ஸ் கூறிய உற்பத்திமுறையின் இரண்டாவது அம்சமாகும். "மனித இனம் தன்னை உற்பத்தி செய்துகொள்வது, அதாவது மனித உயிர்களை உற்பத்திசெய்வதாகும்."

எவ்வாறு மக்கள் தங்கள் இனத்தைப் பெருக்கிக்கொள்கிறார்கள் என்பது சமூகரீதியாக தீர்மானிக்கப்படுவதாகும். உயிரியல்ரீதியாக மக்கள் பலதரப்பட்ட பாலுறவுகளையும் அனுமதிக்கக்கூடியவர்களாக இருக்கும் நிலையில், சமூகமானது அனைத்துவகையான பாலியல் வெளிப் பாடுகளையும் சமமாக அனுமதிக்கும்விதத்தில் ஒழுங்கமைக்கப் பட்டிருக்குமானால், சில குறிப்பான பாலுறவுகளே, அதாவது ஆண் பெண் பாலுறவு மட்டுமே மறுஉற்பத்திக்கு வழிவகுக்கும். அனைத்துச் சமூகங்களுக்கும் பொதுவான சமூகக் கண்டுபிடிப்பான பால் அடிப்படையில் அமைந்த கறாரான உழைப்புப் பிரிவினையானது, ஆண்மை, பெண்மை என்ற இருவேறுபட்ட பிரிவுகளை உருவாக்கியதோடு, பொருளாதாரக் காரணங்களுக்காக ஆணும் பெண்ணும் ஒன்றுசேரவேண்டிய தேவையையும் உருவாக்கிவிட்டது. இது ஆண் பெண் உறவைநோக்கி தமது பாலியல் தேவைகளை வழிநடத்துவதோடு, மனிதஇன மறுஉற்பத்தியையும் நிச்சயிக்கின்றது.

நாம் கற்பனை செய்யும் சில சமூகங்களில் மனிதஇன மறுஉற்பத்தி தொழில்நுட்பத்தினால் சாத்தியப்படலாம். ஆனால், இன்றுவரை பால்ரீதியான வேலைப்பிரிவினை அனைவருக்கும் பொதுவானதாகவே இருக்கிறது. பால்ரீதியான வேலைப்பிரிவினையானது பால்களுக்கிடையில் ஏற்றத்தாழ்வை உருவாக்காமல் இருப்பதற்கான வாய்ப்பு கோட்பாட்டளவில் சாத்தியமானதாக இருக்கலாம். ஆனால் அனைத்துச் சமூகங்களிலும் சமூகரீதியில் ஒத்துக்கொள்ளப்பட்ட பால் அடிப்படையிலான வேலைப்பிரிவினையே பெண்களின் தாழ்த்தப்பட்ட நிலைக்குக் காரணமாக அமைந்துள்ளது. மேலும் இப்பிரிவினையே, ஆண்களுக்கும் பெண்களுக்கும் வெவ்வேறான வாழ்க்கை அனுபவங்களைத் தரத்தக்க பால்ரீதியான துணைக்கலாச்சாரங்களைத் தாங்கி நிற்கிறது. இதுவே ஆணின்

அதிகாரத்துக்கு ஒரு பொருண்மை அடித்தளம் தருகிறது. இதன்மூலம் ஆண் வீட்டுவேலைகளைச் செய்யாதிருப்பது, உயர்தகுதிகொண்ட வேலை வாய்ப்புகளைப் பெறுவதுபோன்ற சலுகைகளைப் பெற்றுக் கொள்கிறான். அத்தோடு உளவியல் ரீதியாகவும் ஆரோக்கியமாக இருக்கிறான்.

மனிதர்கள் தமது பாலியல் தேவைகளை எவ்வாறு நிறைவு செய்துகொள்கின்றனர்? தமது இனத்தை எவ்வாறு மறுஉற்பத்திசெய்து கொள்கின்றனர்? புதிய தலைமுறையினருக்கு எவ்வாறு சமூக விழுமியங்களைக் கற்றுத் தருகின்றனர்? தங்களின் பாலினம் எதுவென்று எவ்வாறு கற்றுக்கொள்கின்றனர்? தங்களை ஆணாகவும் பெண்ணாகவும் எவ்வாறு உணர்ந்துகொள்கின்றனர்? ஆகிய இவை யாவும் ரூபின் குறிப்பிடும் பாலினம்/பால்முறைமை என்பதில் அடங்கும். இரத்த உறவு முறைமைகளின் செல்வாக்கிற்கும் (யாருடன் பாலுறவு கொள்ளலாம் என்பதை இந்த இரத்தஉறவு நிர்ணயிக்கும்), குழந்தைவளர்ப்பு என்பதன்ஊடாக, குறிப்பான பால்வகை ஆளுமை வளர்ச்சி அடைவதற்கும், ஒடிபஸ் பொறிமுறைக்கும் (ODIPAL MACHINE) ரூபின் முக்கியத்துவம் அளிக்கிறார். இத்துடன் பால்களுக்கிடையே அதிகாரப் படிநிலை அமைப்புமுறையை வரைவுசெய்து பேணுவதில் ஏனைய சமூகநிறுவனங்கள் வகிக்கும் பாத்திரத்தை ஆய்வுசெய்ய பாலினம்/பால் என்ற கருத்தாக்கத்தைப் பயன்படுத்த முடியும். கோட்பாட்டு ரீதியாக இந்தப் பாலினம்/பால்முறையானது பெண்ணாதிக்கமாகவோ ஆணாதிக்கமாகவோ அல்லது சமத்துவமாகவோகூட இருக்கலாம் என ரூபின் குறிப்பிடுகிறார். ஆனால் பல்வேறு பாலினம்/பால்முறைமையை அடையாளப்படுத்துவதை அல்லது அதற்கேற்றாற்போல வரலாற்றைப் பாகுபடுத்துவதை அவர் ஏற்றுக்கொள்வதில்லை. நாம் நமது தற்போதைய பாலினம்/பால்முறைமையை ஆணாதிக்கமுறைமை என அடையாளப் படுத்துகிறோம். ஏனெனில், இக்கருத்தாக்கம், அதிகாரப் படிநிலை அமைப்புமுறை, ஆணாதிக்கம்போன்ற தற்போதைய சமூக அமைப்பின் மையத்தைக் குறிப்பதாக இருக்கிறது.

எங்கல்ஸ் கருத்துப்படி, பொருளாதார உற்பத்தியும் (மார்க்சியர்கள் இதனை 'உற்பத்திமுறை' எனக் குறிப்பிடுகின்றனர்) பாலினம்/பால்முறைமைத் தளத்தில் செய்யப்படும் மனித இனஉற்பத்தியும், "ஒரு குறிப்பிட்ட வரலாற்றுக் கட்டத்தில், ஒரு குறிப்பிட்ட நாட்டில், எத்தகைய சமூக ஒழுங்கமைப்பின்கீழ் மக்கள் வாழ்கின்றனர் என்பதைத் தீர்மானிக்கும்" உற்பத்திச் சக்திகளாக உள்ளன. பொருட்களின் உற்பத்தி, மறுஉற்பத்தி, மனித இனத்தின் உற்பத்தி, மறுஉற்பத்தி ஆகிய இரு உற்பத்தி வகைகளைப்

பார்ப்பதன்மூலமே முழுச் சமூகத்தையும் புரிந்து கொள்ளமுடியும். "தூய்மையான முதலாளியம்" என்பதோ "தூய்மையான ஆணாதிக்க முறைமை" என்பதோ இல்லை. அவை ஒன்றுடன் ஒன்று கலந்துதான் இருக்கமுடியும். ஆணாதிக்கமுறை நிலவுடைமை அல்லது ஆணாதிக்கமுறை முதலாளியம் அல்லது சமத்துவ வேட்டைச் சமூகம் அல்லது தாய்வழி விவசாயச் சமூகம் அல்லது தந்தைவழி விவசாயச் சமூகம் போன்றவைதான் இருந்திருக்கின்றன. உற்பத்தியில் ஒரு அம்சத்தில் ஏற்படும் மாற்றத்திற்கும் மற்றொரு அம்சத்தில் ஏற்படும் மாற்றத்திற்கும் இடையே அவசியமான தொடர்பு இருக்கவேண்டும் என்பதில்லை. எடுத்துக்காட்டாக, ஒரு சமூகம் முதலாளியத்தில் இருந்து சோசலிசத்துக்கு மாறலாம். ஆனால் அச்சமூகத்தில் ஆணாதிக்கமுறைமை தொடர்ந்திருக்கலாம். வரலாறு, நமது அனுபவம், பகுத்தறிவு ஆகியவற்றின்மூலம், மேற்கூறியுள்ள இரு உற்பத்திகளும் மிக நெருக்கமாக ஒன்றுடன் ஒன்று பிணைந்திருப்பதையும்; ஒன்றில் ஏற்படும் மாற்றம் மற்றதில் முறுகல்நிலையை அல்லது முரண்பாட்டை தோற்றுவிக்கும் என்பதையும் அறிந்துகொள்ளலாம்.

இனரீதியான அதிகாரப் படிநிலை, அமைப்புமுறைமையையும் இப்பின்னணியில் விளங்கிக்கொள்ளலாம். நிற/இன (COLOUR/RACE) அமைப்புகளை வரையறுப்பதன்மூலம் உயிரியல்பிறப்பினால் உண்டாகும் நிறம் சமூகவாழ்வின் எந்தக் தளத்தில் இனம் (RACE) என்ற சமூகவகைப்பட்ட கருத்தாக்கமாக மாறுகிறது என்பதை விரிவாக விளக்கலாம். பால்ரீதியான அதிகாரப் படிநிலை அமைப்பைப் போலவே, இனரீதியான அதிகாரப் படிநிலை அமைப்புமுறையும், நமது சமூக அமைப்பின் அம்சமாக இருக்கிறது. இவை அடிப்படையில் கருத்தியல் வகைப்பட்டதல்ல. மனித இனத்தின் உற்பத்தி - மறுஉற்பத்தி என்ற நமது உற்பத்திமுறையின் இரண்டாவது அம்சத்தை இது உள்ளடக்கியிருக்கிறது. நமது சமூகங்களை முதலாளியச் சமூகம் என மிகஎளிதாக சொல்லிவிடமுடியாது. மாறாக, ஆணாதிக்கமுறைமை - முதலாளிய - வெள்ளைமேலாதிக்க சமூகம் என்றே அழைக்கவேண்டும். முதலாளியம் எவ்வாறு தனக்கேற்ப இனரீதியான அம்சங்களைப் பயன்படுத்திக் கொள்கிறது. முதலாளியத்துக்கும் ஆணாதிக்க முறைமைக்கும் உள்ள பரஸ்பரத்தொடர்புகள் ஆகிய விசயங்கள் மூன்றாவது பகுதியில் விளக்கப்பட்டுள்ளது.

முதலாளிய வளர்ச்சியானது தொழிலாளர்களுக்கு இடையே ஒரு அதிகாரப் படிநிலை அமைப்புமுறையை உருவாக்குகிறது. ஆனால், மரபுவழிப்பட்ட மார்க்சிய ஆய்வு வகையினங்களால் இந்த அதிகாரப்

படிநிலையில் யார் எந்த இடத்தில் அமர்வார்கள் என்பதை சொல்லிவிட முடியாது. பால், இன அதிகாரப் படிநிலை அமைப்புகள்தான் யார் இத்தகைய வெற்றிடங்களை நிரப்புகிறார்கள் என்பதைத் தீர்மானிக்கின்றன. ஆணாதிக்க முறைமை என்பது வெறுமனே அதிகாரப் படிநிலை அமைப்பல்ல. மாறாக, குறிப்பிட்ட நபர்கள் குறிப்பிட்ட இடங்களை நிரப்பும் ஓர் அதிகாரப்படிநிலை அமைப்பாகும். ஆணாதிக்கமுறைமையை ஆய்வுசெய்வதன்மூலமே, பெண்கள் ஏன், எவ்வாறு ஆதிக்கப்படுத்தப் படுகிறார்கள் என்பதை அறிந்துகொள்கிறோம்.

பெரும்பான்மையான சமூகங்கள் ஆணாதிக்கமுறைமையிலானவை என்று நாம் நம்புகிறோம். ஆனால் அது மாறுதலற்ற, உலகு தழுவிய அம்சம் ஆகும் என நினைப்பதில்லை. பெண்கள்மீதான ஆதிக்கத்தைச் செயல்படுத்துவதற்கு காரணமாக இருக்கும் ஆண்களுக்கிடையிலான உறவுகள் காலப்போக்கில் வடிவத்திலும் வீரியத்திலும் மாற்றம் அடைந்தே வருகின்றன. ஆண்களுக்கு இடையே நிலவும் அதிகாரப் படிநிலை அமைப்பையும், ஆணாதிக்க முறைமையின் ஆதாயங்களைப் பெறுவதில் ஆண்களுக்கிடையே நிலவும் வேறுபாடுகளையும் முக்கியமாக ஆராய வேண்டும். வர்க்கம், இனம், தேசியஇனம், திருமணத் தகுதி, பாலுறவுத் தேர்வு, வயதுபோன்ற அம்சங்களும் நிச்சயமாக இங்கே தம் பங்குக்குச் செயலாற்றுகின்றன. பெண்களின் வர்க்கம், இனம், தேசிய இனம், திருமணத் தகுதி அல்லது பாலுறவுத் தேர்வு ஆகியவற்றைப் பொறுத்து அவர்கள்மீது செலுத்தப்படும் ஆணாதிக்க அதிகாரத்தின் அளவும் வேறுபடும். வர்க்கம், இனம், தேசிய இனம் அல்லது தன் குடும்பத்தின்மூலம் கிடைக்கும் ஆணாதிக்க அதிகாரம் ஆகியவற்றைப் பயன்படுத்தி பெண்களேகூட தமது ஆண்களைவிட குறைந்த தகுதியிலுள்ள ஆண்கள்மீது அதிகாரம் செலுத்தமுடியும்.

மீளவும் நினைவூட்டிக்கொள்ளலாம். ஆணாதிக்கமுறைமை என்பது பொருண்மை அடிப்படை கொண்டதும், ஆண்களுக்கிடையில் அதிகாரப் படிநிலை அமைப்பும், அவர்களுக்கிடையில் ஐக்கியமும், அதன்மூலம் பெண்கள்மீதும் ஆதிக்கம் செலுத்தலும் சாத்தியமாகும் ஒரு அமைப்புமுறை ஆகும். பெண்களின் உழைப்புச் சக்தியை ஆண்கள் கட்டுப்படுத்துவதே ஆணாதிக்க முறைமையின் பொருண்மை அடிப்படையாக உள்ளது. அவசியமான பொருளாதார வளங்களிலிருநது பெண்களை விலக்கி வைப்பது, பெண்களின் பாலியலைக் கட்டுப்படுத்துவது ஆகிய செயல்பாடுகள் மூலம் ஆண்கள் இந்தக் கட்டுப்பாட்டை

நிலைநிறுத்திவருகிறார்கள். பெண்களிடமிருந்து தமக்கு தனிப்பட்ட ஊழியங்களைப் பெற்றுக்கொள்வது, வீட்டுவேலை, குழந்தைவளர்ப்பு போன்றவற்றில் தாம் ஈடுபடாமல் இருப்பது, தமது பாலியல் தேவைகளுக்கு பெண்களின் உடலைப் பயன்படுத்திக் கொள்வது ஆகியவற்றின்மூலம் ஆண்கள் தங்கள் அதிகாரத்தைச் செலுத்திவருகின்றனர். இதன்மூலம் தாம் அதிகாரம் உள்ளவர்கள் என உணர்கின்றனர். அதிகாரமுள்ளவர்களாகவும் இருக்கின்றனர்.

தற்காலத்தில் நாம் அனுபவித்துவரும் ஆணாதிக்கமுறைமையின் அம்சங்கள் பின்வருமாறு : ஒருதார மணமுறை (இதன் விளைவாக ஏற்படும் ஓரினப் புணர்ச்சியின் மீதான வெறுப்பு), குழந்தை வளர்ப்பு, வீட்டு வேலைகளில் பெண்கள் ஈடுபட்டிருப்பது. பொருளாதாரரீதியில் ஆண்களைச் சார்ந்திருப்பது (இது உழைப்புச் சந்தையின் ஏற்பாட்டால் நம்மீது திணிக்கப்படுவதாகும்), அரசு, ஆண்களுக்கிடையிலான சமூக உறவுகளை அடிப்படையாகக்கொண்ட பல்வேறு நிறுவனங்கள் - கழகங்கள், விளையாட்டுகள், தொழிற்சங்கங்கள், தொழில்கள், பல்கலைக்கழங்கள், ஆலயங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், ராணுவம், அரசாங்கம் ஆகியனவாகும். ஆணாதிக்க முறைமையிலான முதலாளியத்தைப் புரிந்துகொள்ள வேண்டுமெனில், இவை யாவற்றையும் ஆய்வுசெய்ய வேண்டும்.

அதிகாரப் படிநிலை அமைப்பு, ஆண்கள் தங்களுக்குள் பரஸ்பரம் சார்ந்திருப்பது ஆகிய இரு அம்சங்களும், பெண்களின் தாழ்த்தப்பட்ட நிலையோடு ஒன்றிணைந்து நமது சமூகத்தின் செயல்பாடாக அமைந்துவிட்டது. அதாவது இந்த உறவுகள், முறையாக ஒழுங்கமைக்கப் பட்டுள்ளன. இந்த உறவுகள் எப்படி உருவானது என்ற கேள்வியை ஒருபுறம் ஒதுக்கிவைப்போம். முதலாளியச் சமூகங்களில் ஆணாதிக்கமுறைமை உறவுகளை அடையாளம்காண முடியுமா? என்ற கேள்வியை எழுப்புவோம். முதலாளியச் சமூகங்களிலும்கூட, ஆண்களுக்கிடையில் இம்மாதிரியான உறவுகள் நீடித்து வருவதை நாம் கண்டுபிடிக்கவேண்டும். முதலாளியச் சமூக அறிஞர்களும், மார்க்சியச் சமூக அறிஞர்களும், இம்மாதிரியான உறவுகள் இன்று நிலவவில்லை என்றோ அல்லது அவை முக்கியத்துவமற்ற எச்சமிச்சங்கள் என்றோ சொல்வார்கள். முதலாளியச் சமூகங்களிலும்கூட, ஆண்களுக்கிடையில் இம்மாதிரியான உறவுகள் நீடித்து நிலைத்துவருவதை நாம் புரிந்துகொள்ள வேண்டாமா? ஆணாதிக்கமுறைமையானது முதலாளிய வளர்ச்சிப்பாதையை எப்படி வடிவமைத்தது என்பதை நாம் அடையாளம் கண்டுகொள்ளவேண்டாமா?

*ஆணாதிக்க முறைமைக்கும் முதலாளியத்துக்கும் இடையிலான கூட்டு*

முதலாளியச் சமூகங்களில் எவ்வாறு ஆணாதிக்க உறவுகளை இனம்காண்பது? பெண்கள் தமது சொந்த ஆண்களால் ஒடுக்கப் படுகிறார்கள் என்பதுபோல ஒரு தோற்றம் உள்ளது. அவ்வொடுக்குமுறை தனிப்பட்ட விசயம் என்பது போலத் தோன்றும். அவர்களுக்கிடையிலும் குடும்பங்களுக்கிடையிலும் உறவுகள் சிதறுண்டிருப்பதாகத் தோன்றும். ஆண்களுக்கிடையிலான உறவையும், ஆண்கள் பெண்களுக்கிடையிலான உறவையும் ஒழுங்குபடுத்தப்பட்ட ஆணாதிக்கமுறைமையாக இனம்காண்பது கடினம்தான். எவ்வாறாயினும், ஆணாதிக்கமுறைமையானது ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான உறவுமுறையாக முதலாளியச் சமூகத்தில் அமைந்துள்ளது. அத்துடன், முதலாளியத்துக்கும் ஆணாதிக்க முறைமைக்கும் இடையே ஆரோக்கியமான வலுவான உறவு நிலவி வருகிறது.

ஆணாதிக்கமுறைமை பற்றிய கருத்தாக்கத்துடன் முதலாளிய உற்பத்திமுறைபற்றிய விளக்கத்துடன் தன் ஆய்வைத் தொடங்கும் ஒருவர், முதலாளியத்துக்கும் ஆணாதிக்க முறைமைக்கும் இடையிலான கூட்டு என்பது தவிர்க்க முடியாதது அல்ல என்பதை உணர்வார். அத்தோடு ஆண்களுக்கும் முதலாளிகளுக்கும் இடையே அடிக்கடி மோதல்கள் நடைபெறுவதை, குறிப்பாக பெண்களின் உழைப்புச் சக்தியைப் பயன்படுத்துவதுகுறித்து அவர்களுக்கிடையில் மோதல் இருப்பதை அவர் உணர்வார். இம்மோதல்கள் எப்படி வெளிப்படுகின்றன என்பதை இங்கே ஒரு சான்றுமூலம் பார்க்கலாம். பெண்கள் தமக்கு தனிப்பட்ட முறையில் வீட்டில் ஊழியம் புரிவதையே பெரும்பாலான ஆண்கள் விரும்புவர். சிறு எண்ணிகையிலான ஆண்கள் - அதாவது முதலாளிகள் - உழைப்புச் சந்தையில் பெண்கள் (தங்கள் சொந்தப் பெண்களைத் தவிர்த்து) வேலைசெய்ய வேண்டுமென விரும்புவர். பெண்களின் உழைப்புச் சக்திமீது நடந்துவந்த இம்மாதிரியான மோதல்கள்பற்றி ஒரு வரலாற்றுரீதியான ஆய்வு நடந்தால், முதலாளியச் சமூகங்களில் காணப்படும் ஆணாதிக்க முறைமைக்கான பொருண்மை அடித்தளத்தை அடையாளம்காண நமக்கு அது உதவியாய் இருக்கும். அத்தோடு முதலாளியத்துக்கும் ஆணாதிக்கமுறைமைக்கும் இடையிலான உறவையும் இனம்காண உதவும்.

*தொழில்மயமாதலும் குடும்ப ஊதியத்தின் வளர்ச்சியும் :*

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தாம் கண்ட சமூக அம்சங்கள் சிலவற்றைவைத்து மார்க்சியர்கள் தர்க்கரீதியான சில முடிவுகளுக்கு வந்தனர்.

ஆனால் ஏற்கனவே நிலவிவந்தஆணாதிக்கச் சமூகச் சக்திகளின் பலத்தையும் புதிதாகத் தோன்றிய இளம் மூலதனம் அச்சக்திகளோடு மோத வேண்டியிருந்ததையும், அச்சக்திகளுக்கேற்ப தன்னை தகவமைத்துக்கொள்ள வேண்டிய தேவை அம்மூலதனத்துக்கு இருந்ததையும் குறைத்து மதிப்பிட்டுவிட்டனர். தொழில்புரட்சியானது பெண்கள், சிறுவர்கள் உள்ளிட்டு எல்லாரையும் தொழிலாளர் படையில் சேர்த்துக் கொண்டது. உண்மையில், முதலில் நிறுவப்பட்ட தொழிற்சாலைகள் முழுக்க முழுக்க பெண்கள், சிறுவர்கள் உழைப்பையே பயன்படுத்திக்கொண்டது. பெண்களும், சிறுவர்களும், ஆண்களைச் சார்ந்திராமல் சுயேச்சையாக ஊதியம்பெற்று வந்தது, அதிகார உறவுகளைப் பலவீனப்படுத்தியதுடன், அனைவரது ஊதியத்தையும் குறைந்த அளவிலேயே வைத்திருக்க செய்தது. 1892இல் காவுட்ஸ்கி இதுகுறித்து பின்வருமாறு எழுதியுள்ளார்.

“ஆண் தொழிலாளியின் மனைவியும், அவன் வாரிசுகளும் தங்களைத் தாங்களே பாதுகாத்துக்கொள்ளுமளவுக்கான நிலையில் இருந்தனர். தொழிலாளர் படையில் புதியவர்களைச் சேர்ப்பதை நிறுத்தாமலேயே, ஆண் தொழிலாளியின் ஊதியம் அவன் சொந்தத் தேவைகளின் அளவுக்குக் குறைக்கப்படும் சாத்தியம் இருந்தது.”

“பெண்கள், சிறுவர்கள் உழைப்பில் கூடுதலாக ஒரு நன்மை இருந்தது. ஆண்களைக் காட்டிலும் இவர்கள் மிகக் குறைவாகவே எதிர்ப்பைக் காட்டுவர் என்பதே அது. தொழிலாளர் படையில் அவர்களைச் சேர்த்ததனால் உழைப்புச் சந்தையில் தங்களை விற்கும் தொழிலாளர்கள் எண்ணிக்கையும் பெருமளவுக்கு அதிகரித்தது.”

“பெண்கள், சிறுவர்கள் உழைப்புச் சந்தையில் குவிந்ததால் ஆண் தொழிலாளியின் போராடும் ஆற்றல் குறைந்தது. இவற்றின் விளைவாக ஆண் தொழிலாளர்களின் ஊதியம் குறைந்தது.”

குறைந்த ஊதியம், உழைப்புச் சந்தையில் குடும்ப உறுப்பினர் அனைவரும் பங்கேற்றது ஆகிய அம்சங்கள் தொழிலாளர் குடும்பத்தில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தியதை மார்க்சியர்கள் கண்டுகொண்டனர். காவுட்ஸ்கி பின்வருமாறு எழுதுகிறார்.

“முதலாளியின் உற்பத்திமுறை ஆண் தொழிலாளியின் குடும்ப அலகை அழிக்கவில்லை. மாறாக, குடும்பத்தின் வேதனைகளைத் தவிர மீதி அனைத்தையும் பறித்துக்கொண்டது. தொழிற்சாலைகளில் இன்று பெண்கள் உழைப்பதைப் பார்த்தால், அவர்கள்மீதான சுமை இப்புதிய

அம்சத்தால் அதிகரித்துவிட்டது. ஆனால் ஒருவர் இரு எசமானர்களுக்கு ஊழியம் செய்யமுடியாது. அன்றாட வயிற்றுப்பாட்டுக்குத் தொழில்செய்து சம்பாதிக்கும் ஒரு நிலை பெண்ணிற்கு ஏற்படும்போது அது குடும்பத்தையும் பாதிப்பதாய் இருக்கிறது."

பெண்களது கூலி உழைப்பினால் ஏற்படும் இடர்ப்பாடுகள் பற்றி காவுட்ஸ்கி போலவே ஆண்தொழிலாளர்களும் உணர்ந்திருந்தனர். உழைப்புச் சந்தையில் பெண்கள் "மலிவான போட்டியாளர்களாக" இருந்த அதே சமயத்தில் தொழிலாளிகளின் மனைவியாகவும் இருந்தனர். இப்பெண்கள் இரு எசமானர்களுக்கு சிறப்பாகச் சேவையாற்ற முடியாதவர்களாக இருந்தனர்.

பெண்களும் சிறுவர்களும் பெருமளவு உழைப்புப் படையில் சேருவதை ஆண் தொழிலாளர்கள் எதிர்த்தனர். தொழிற்சங்கத்தில் அவர்கள் உறுப்பினராய்ச் சேருவதையும் தடுத்தனர். 1846இல் "பத்துமணி நேர வேலைக்காக வாதிடுவோர்" பின்வருமாறு கூறினர்.

"பெண்களது வேலை நேரத்தைக் குறைத்தாலன்றி அவர்கள் உடல், உளவியல் நிலைகளை முன்னேற்றக்கூடிய முயற்சிகள் முழுப்பலனையும் தராது என்பதை நாம் சொல்லவேண்டிய அவசியமில்லை. இயந்திரத்தின் ஓய்வே இல்லாத ஓட்டத்தைத் தொடர்ந்து ஓடியோடி வேலைசெய்வதைக் காட்டிலும், குடும்பக் கடமைகளைச் செய்வதே திருமணமான பெண்களுக்குக் கூடிய நன்மைகளைத் தரும். பருத்தி ஆலையில் கடினவேலை செய்வதற்குப் பெண்களை அனுப்பாமல் குடும்பத்துக்குத் தேவையான அனைத்தையும் கணவனே வழங்கக்கூடிய நாள் வெகுதூரத்தில் இல்லை என நாம் நம்புகிறோம்."

1854 ஆம் ஆண்டில் அமெரிக்காவில் தேசிய அச்சகச் சங்கம் பெண் அச்சுக்கோப்பாளர்களை வேலைக்கு சேர்ப்பதை ஊக்கப்படுத்தக்கூடாது என முடிவுசெய்தது. பெண் தொழிலாளர்களுக்குச் சங்கம் பாதுகாப்புத் தருவதை ஆண்தொழிலாளிகள் விரும்பவில்லை. பெண்தொழிலாளிகளை சங்கத்திலிருந்து விலக்கிவைக்கவே அவர்கள் முயற்சித்தனர். 1879-ஆம் ஆண்டில் சுருட்டுத் தொழிலாளர்களின் சர்வதேசிய சங்கத் தலைவர் *அடால்ப் ஸ்ராசா* பின்வருமாறு கூறினார். "நம் பெண்களை தொழிலில் இருந்து நீக்க முடியாது. ஆனால் தொழிற்சாலைச் சட்டங்களைப் பயன்படுத்தி அவர்களின் எண்ணிக்கைக் கூடுவதைத் தடுக்கமுடியும்."

பெண் தொழிலாளர்களையும், சிறுவர் தொழிலாளர்களையும் அமைப்பாக்குவதன்மூலம் மலிவான போட்டியில் ஏற்பட்ட பிரச்சனைகளைத் தீர்த்திருக்க முடியும். ஆனால் குடும்ப வாழ்க்கையில் ஏற்பட்ட பிரச்சனைகளை தீர்த்திருக்கமுடியாது. ஆண்கள் தொழிற்சங்கப் பாதுகாப்பை தங்களுக்கு மட்டுமே வைத்துக்கொண்டனர். பெண்களுக்கும், சிறுவர்களுக்கும் பாதுகாப்பானத் தொழில்சட்டங்கள் தேவை என வாதிட்டனர். இந்தச் சட்டங்கள், பெண்கள், சிறுவர்கள் ஆகியோர் உழைப்புத் தொடர்பானச் சில தீமைகளைக் குறைத்தாலும், 'ஆண்களுக்குரிய' தொழில்கள் எனக் கருதப்பட்டவற்றில் பெண்கள் ஈடுபடுவதை மட்டுப்படுத்தின. உயர்ந்த ஊதியம் அளிக்கும் வேலைகளை ஆண்கள் தங்களுக்கு மட்டுமே உரியதாக்கிக்கொண்டனர். அத்தோடு தங்களின் ஊதியத்தைப் பொதுவாக உயர்த்திக்கொண்டனர். குடும்பத் தேவைகளை ஈடுசெய்யுமளவுக்கு தங்களுக்கு ஊதியம் தரப்பட வேண்டும் எனக் கோரினர்.

இந்த "குடும்ப ஊதியம்" என்ற முறையானது தொழிலாளி குடும்பத்தின் ஒரு நிலையான அளவுமுறையாக படிப்படியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆண்தொழிலாளியின் வாழ்க்கைத் தரத்தினுள் கூலிஉழைப்பில் ஈடுபடாத மனைவி என்பதும் உள்ளடக்கப்பட வேண்டும் எனப் பலரும் வாதிட்டனர். ஆணுக்கும் பெண்ணுக்கும் சம ஊதியம் வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைப்பதற்குப் பதிலாக ஆண்தொழிலாளர்கள் "குடும்ப ஊதியம்" என்ற கோரிக்கையை முன்வைத்து, தமது மனைவியர் வீட்டில் வேலைசெய்வதையே விரும்பினர். ஆணாதிக்கமுறைமை இல்லாதிருப்பின் ஐக்கியப்பட்ட தொழிலாளி வர்க்கமானது முதலாளி வர்க்கத்தை எதிர்த்துப் போராடியிருக்கும். ஆனால் ஆணாதிக்கச் சமூக உறவுகள் தொழிலாளி வர்க்கத்தைப் பிரித்ததன் காரணமாக அதன் ஒருபகுதியை (பெண்களை) விலையாகக் கொடுத்து, மற்ற பகுதி (ஆண்கள்) தன்னை விடுவித்துக்கொண்டது. ஆண்களுக்கிடையில் அதிகாரப் படிநிலை அமைப்பின் அடிப்படையில் அமைந்த உறவுகளும், அதேசமயம் அவர்களுக்கிடையில் காணப்பட்ட ஐக்கியமும் இத்தகைய தீர்வை ஏற்படுத்தும் செயல்முறையில் முக்கியமாகச் செயல்பட்டுள்ளன. பெண்களுடைய உழைப்புச் சக்தி குறித்து ஆணாதிக்க முறைமைக்கும் முதலாளியத்துக்கும் இடையே ஏற்பட்ட மோதலின் ஒரு தீர்வாகக் குடும்ப ஊதியம் புரிந்துகொள்ளப்படவேண்டும்.

ஆண்களுக்கு குடும்ப ஊதியம் அளிப்பதானது, ஏனையவர்களுக்கு குறிப்பாக பெண்கள், சிறுவர்கள், சமூகத்தில் குறைந்த தகுதி உடையவர்கள் எனக் கருதப்படுபவர்களுக்கு குறைந்த ஊதியம் அளிப்பதற்கு வழிவகுக்கிறது. (ஆணாதிக்க அதிகாரப் படிநிலை அமைப்பில் தாழ்ந்த தகுதியிலுள்ள அயர்லாந்தினர், கறுப்பர் போன்றவர்களுக்கு பெரும்பாலான ஆணாதிக்க ஆதாயங்கள் மறுக்கப்பட்டன. இந்த நிலையை ஆண்தொழிலாளர்கள் ஒத்துக்கொண்டதோடு அதற்கு ஒருவகையில் காரணமாகவும் இருக்கிறார்கள். பெண்கள், சிறுவர்கள், தாழ்ந்த தகுதியிலுள்ள ஆண்கள் ஆகியோருக்கு குறைந்த ஊதியம் வழங்கப்படுவதற்குக் காரணம், உழைப்புச் சந்தையில் காணப்படும் வேலைப்பிரிவினையாகும். இந்த வேலைப் பிரிவினையானது, தொழிற்சங்கம், நிர்வாகம் முதலியவற்றாலும், பள்ளிகள், பயிற்சிநெறிகள், குடும்பம் போன்ற துணைநிறுவனங்களாலும் மேலும் நிலைநிறுத்தப்படுகிறது. பால் அடிப்படையிலான வேலைப்பிரிவினையும், பெண்களுக்கு குறைந்த ஊதியம் பெறும் தொழில் வழங்கப்படுவதும், பொருளாதார ரீதியாக பெண்கள் ஆண்களைச் சார்ந்திருப்பதையும், ஆணுக்கும் பெண்ணுக்கும் வெவ்வேறான செயற்களங்கள் உள்ளன என்ற கருத்தையும் உறுதி செய்கின்றன.

பெரும்பாலான ஆண்களுக்கு குடும்ப ஊதியமானது இரு வழிகளில் ஆணாதிக்கத்துக்கான பொருண்மை அடிப்படையை அளிக்கிறது. முதலாவதாக, உழைப்புச் சந்தையில் ஆண்கள் நல்ல தொழில்களையும், பெண்களைக் காட்டிலும் உயர்ந்த ஊதியத்தையும் பெற்றுக்கொள்கின்றனர். பெண்கள் குறைந்த ஊதியம் பெறுவதால், ஆண்களின் பொருண்மை நலன்கள் நீடிப்பதோடு, மனைவி என்ற தொழிலையே பெண்கள் தேர்ந்தெடுக்கவும் வழிவகுக்கிறது. இரண்டாவதாக, வீட்டுவேலை, குழந்தை வளர்ப்பு இன்னபிற ஊழியங்களை பெண்கள் செய்வதால் ஆண்கள் நேரடியாக நன்மைகள் பெறுகிறார்கள். பெண்களது வீட்டுக் கடமைகள் உழைப்புச் சந்தையில் அவர்களது தாழ்த்தப்பட்ட நிலையை மேலும் உறுதிப்படுத்துகிறது.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், குடும்ப ஊதியம் தொடர்பாக ஏற்பட்ட இந்த வளர்ச்சி, முதலாளிய நலன்களுக்கும் ஆணாதிக்க முறைமை நலன்களுக்கும் ஒரேசமயத்தில் நன்மை தருவதாய் அமைந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தொழில் மயமாக்கலின் ஆரம்பகாலத்தில் நிலவிய கடுமையான நெருக்கடிகளால் தொழிலாளர் குடும்பங்கள் போதுமான அளவு தம்மை மறுஉற்பத்திசெய்து

பெருக்க முடியவில்லை என்பதை முதலாளிகள் கண்டுகொண்டனர். கூலி உழைப்பில் ஈடுபடும் மனைவியரைக் காட்டிலும், வீட்டுவேலைசெய்யும் மனைவியர் தங்கள் தொழிலாளிக் கணவன்மாரை ஆரோக்கியமாக வைத்திருக்கிறார்கள்என்பதை முதலாளிகள் புரிந்துகொண்டனர். கூலி உழைப்பில் ஈடுபடும் பெண்கள் வளர்க்கும் குழந்தைகளைக் காட்டிலும், வீட்டுவேலைசெய்யும் பெண்கள் வளர்க்கும் குழந்தைகள் படித்தவர்களாகவும், திறமையான தொழிலாளர்களாகவும் இருப்பதையும் முதலாளிகள் புரிந்துகொண்டனர்.

ஆண்களுக்கு குடும்ப ஊதியம், பெண்களை வீடுகளிலேயே வைத்திருத்தல் என்ற பேரமானது முதலாளிகளுக்கு நன்மை தந்த அளவுக்கு ஆண்தொழிலாளிகளுக்கும் நன்மையைத் தந்தது. காலப்போக்கில் இந்த பேரத்தின் விதிகளில் மாற்றம் ஏற்பட்ட போதிலும், குடும்பம் என்ற அமைப்பும், அதில் பெண்கள் ஊழியம் புரிந்துவருவது என்ற அம்சமும் இணைந்து மூலதனத்துக்கு தொழிலாளிகளை உற்பத்தி செய்து தரும் சேவையை இன்றளவும் தொடர்ந்து செய்துவருகிறது. அதேபோல் ஆண்கள் தங்கள் சிறப்புரிமைகளை நிறைவேற்றிக்கொள்ளும் ஒரு இடமாகவும் குடும்பம் விளங்குகிறது. ஆண்களுக்கும் குடும்பத்துக்கும் ஊழியம் புரிவதன்மூலம் பெண்கள் நுகர்வோர் என்ற முறையில் மூலதனத்துக்கும் சேவையாற்றுகின்றனர். பயர்ஸ்ரோன், பிராங்பட் சிந்தனைப்பள்ளி, இன்னும் பலர் சொல்லியுள்ளதுபோல், பணிவு, ஆதிக்கம் ஆகியவற்றின் பயிற்சிக்கூடமாக குடும்பம் விளங்குகிறது. பணிவான சிறுவர்கள், பணிவான தொழிலாளர்களாக உருவாகின்றனர். சிறுவர்களும், சிறுமிகளும் அவரவர் பங்காற்றவேண்டிய பாத்திரங்களைப் பழகிக்கொள்கின்றனர்.

குடும்ப ஊதியம் என்ற முறையானது, முதலாளியம் ஆணாதிக்க முறைமையுடன் இசைந்துசெல்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டாய் உள்ளது. அதுபோலவே குழந்தைகள் தங்கள் சமூகத்தகுதியை மாற்றிக் கொள்வது என்ற அம்சம், ஆணாதிக்க முறைமை முதலாளியத்துடன் இசைந்து செல்வதை எடுத்துக்காட்டுகிறது. பெண்களைப்போலவே சிறுவர்களும் கூலிஉழைப்பிலிருந்து விலக்கிவைக்கப்பட்டனர். உழைத்துப் பணம் சம்பாதிக்கும் சாத்தியப்பாடு வீழ்ச்சியுற்றதால், சிறுவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் இடையிலான சட்ட உறவும் மாறியது. அமெரிக்காவில், தொழில்சகாப்தத்தின் தொடக்கக் காலத்தில், சிறுவர்களின் தேவையை நிறைவுசெய்வது தந்தையரின் முக்கியமானதும், முதன்மையானதுமானப் பொறுப்பாகக் கருதப்பட்டது. சிறுவர்களின் மகிழ்ச்சியான வளர்ச்சிக்கு

இது அவசியமாக இருந்தது. சிறுவர் பாதுகாப்பு வழக்குகளில் தந்தையருக்குச் சட்ட முக்கியத்துவம் தரப்பட்டது. குடும்பத்தின் பொருளாதார நலனுக்கு சிறுவர்கள் செய்துவந்த பங்களிப்பு வீழ்ச்சியுற்றதால், அவர்களின் மகிழ்ச்சியான எதிர்காலத்துக்கான பொறுப்பு அன்னையர் வசம் ஒப்படைக்கப்பட்டது. இப்பொழுது சிறுவர் பாதுகாப்பு வழக்குகளில் அன்னையருக்கு சட்ட முக்கியத்துவம் தரப்பட்டது. குழந்தைகளின் மாறிவரும் பொருளாதார நிலைகளுக்கேற்ப ஆணாதிக்கமுறைமையும் தன்னை மாற்றிக்கொண்டது. குழந்தைகள் சம்பாதிக்கும் திறனுடையோராக இருந்த சமயத்தில் ஆண்கள் உரிமைகொண்டாடினார். அவர்கள் சம்பாதிக்கும் திறன் இழந்தவுடன் அப்பொறுப்பு பெண்களின் வசம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது.

### *இருபதாம் நூற்றாண்டில் முதலாளியமும், ஆணாதிக்கமுறைமையும் :*

அனைவரையும் தொழிலாளர்களாக மாற்றவேண்டிய தேவை முதலாளியத்துக்கு இருப்பதால் அதன் வருகை ஆணாதிக்கமுறைமையை அழித்துவிடும் என்ற பத்தொன்பதாம் நூற்றாண்டு மார்க்சியர்களின் ஆருடம் பொய்த்துப்போனது. ஆணாதிக்கமுறைமையின் வலுவையும் அதன் நெகிழ்ச்சியையும் இவர்கள் குறைத்து மதிப்பிட்டது மாத்திரமன்றி, முதலாளியத்தின் பலத்தையும் அளவுக்கு அதிகமாக மதிப்பிட்டனர். நில உடமையைத் தகர்த்தெறிந்த முதலாளியத்தின் புதிய சமூகச்சக்தியை மிகவும் ஆற்றல் வாய்ந்ததாகக் கருதினார்கள். "தூய" முதலாளியத்தின் போக்குகளுக்கும், அன்றாட நடைமுறையில் வரலாற்றுச் சக்திகளை எதிர்கொள்கின்ற 'எதார்த்தமான' முதலாளியத்தின் போக்குகளுக்கும் இடையிலான வேறுபாட்டைக் காணக்கூடிய ஒரு சாதகமான நிலையில் இன்றைய சமகால நோக்கர்கள் உள்ளனர். முதலாளியத்துக்கும், இன அமைப்புகள், உழைப்புச் சந்தையின் கூறுபாடுகள் ஆகியவற்றுக் கிடையிலான கூட்டணிபற்றிய விவாதங்கள், 'தூய' முதலாளியச் சக்திகள் வரலாற்று எதார்த்தத்தை எவ்வாறு எதிர்கொள்கின்றன என்பதற்கான சான்றுகளைத் தருகின்றன. இம்மாதிரியான ஒரு வளர்ச்சிப் போக்கில் முதலாளியம் பெருமளவுக்கு நெகிழ்வுடையதாய் தன்னை வெளிப்படுத்திக்கொள்கிறது.

அனைத்து மக்களும் சமமாகத் தொழிலாளர்மயமாவதை இன அமைப்புகள் (RACE ORDERS) அனுமதிப்பதில்லை என தென்ஆப்பிரிக்கா பற்றி ஆய்வுசெய்கிற மார்க்சியர்கள் சொல்லியுள்ளனர். இருப்பினும், இன வேறுபாடுகள் மூலதனக் குவிப்பைத் தடைசெய்யும் என இதற்குப் பொருள்

கொள்ள முடியாது என்றும் அவர்கள் வாதிட்டுள்ளனர். முதலாளிகள் அதிகளவு உபரிமதிப்பை உறிஞ்சியெடுக்க எம்மாதிரியான சமூகச்சூழல் உதவும் என்பது குறித்து வேண்டுமானால் ஆய்வாளர்கள் வாதிட முடியும். ஒரு குறிப்பிட்ட வரலாற்றுச் சூழலில், சமூகக் கட்டுப்பாடு, தொழிலாளர்களின் எதிர்ப்பு, அரசின் குறுக்கீடுபோன்ற அம்சங்கள்குறித்து முதலாளிகள் அக்கறைகொள்ள நேரிடும். சமூகத்தை முழுமையாக மறுவார்ப்பு செய்யவேண்டிய ஒருசூழலில் அரசு தலையிட வேண்டியிருக்கலாம். மூலதனத்தின் சில மோசமான விளைவுகளைத் தவிர்க்க சில முதலாளிகளைக் கண்காணிக்க வேண்டிய அவசியம் ஏற்படலாம். இத்தகைய அம்சங்களைக் கணக்கிலெடுத்துக்கொண்டு, முதலாளிகள் நடைமுறைச் சாத்தியமான அளவு லாபங்களைப் பெருமளவு அதிகரித்துக்கொள்வர். உழைப்பாளர் படையில் மேல்கீழ் மட்டங்களை யார் யார் நிரப்புவது என்பதை மூலதனம் தானாகவே முடிவுசெய்யாது. மாறாக, முதலாளிகள் சமூகக் கட்டுப்பாட்டைக் கருத்தில்கொண்டு அவ்வேலைகளைக் குறிப்பிட்ட வழிகளில் ஒழுங்கமைப்பர். ஆதிக்கச் சமூகக் குழுக்களை சேர்ந்தவர்கள் என்ற வகையில் முதலாளிகள் இனவாதிகளாக (பால் வாதிகளாகவும்) இருப்பதற்கு இது உதவுகிறது. ஆதிக்கக் குழுக்கள், அடிமைக்குழுக்கள் ஆகிய இருசாராரின் பண்புகளையும் முதலாளியம் தன் இயல்பிலேயே பெற்றிருக்கிறது.

உழைப்புச் சந்தையைக் கூறுபோடும் ஏகபோகமூலதனத்தின் போக்குகள்பற்றிய அண்மைக்கால விவாதங்கள் மேற்கூறியப் புரிதல்களுடன் ஒன்றிப் போகின்றன. தொழிலாளர்களின் இயற்கையான பண்புகளைப் பயன்படுத்தி உழைக்கும் வர்க்கத்தை வேண்டுமென்றே பிளவுபடுத்தும் முதலாளிகளின் முயற்சியானது குறுகிய பொருளில், மூலதனத்தின் திரட்சிக்கான தேவை என்பதைவிட சமூகக் கட்டுப்பாட்டைப் பெற்றுக்கொள்ளும் தேவையிலிருந்தே எழுகிறது. காலப்போக்கில், இவ்வாறான எல்லாப் பிளவு முயற்சிகளும் வெற்றியையோ அல்லது லாபத்தையோ தந்துவிடுவதில்லை. உழைப்புச் சக்தியை வடிவமைப்பதில் மூலதனத்துக்குள்ள திறமையானது, இரண்டு அம்சங்களில் தங்கியுள்ளது. ஒன்று, குறுகியபொருளில், வருமானத்தைத் திரட்டுவதற்கான அவசியத் தேவைகள். (சான்று பெருமளவு எண்ணிக்கையிலான தொழிலாளர்கள் தமக்கிடையில் தொடர்புகொள்வதை அவசியமாக்கும் விதத்தில் உற்பத்தியானது ஒழுங்கமைக்கப்பட்டிருக்க வேண்டுமா? அப்படியானால் அனைவரும் ஒரேமொழி பேசுபவர்களாக இருப்பது நல்லது). இரண்டு, அனுசரித்துச் செல்லுமாறு மூலதனத்தைக் கட்டாயப்படுத்தும்/தூண்டும்

சமூகச் சக்திகள் ஒரு சமூகத்தில் காணப்படுவது. (சான்று : தென்னாப்பிரிக்காவில் வெள்ளையர்களுக்கும் கறுப்பர்களுக்கும் தனித் தனியான குளியலறை வசதிகளை அமைப்பது முதலாளிகளுக்குப் பொருளாதாரச் செலவைக் கூட்டலாம். ஆனால் கறுப்பர்களுடன் ஒன்றாகக் குளியலறையைப் பயன்படுத்துமாறு வெள்ளையர்களைக் கட்டாயப் படுத்துவதால் ஏற்படும் சமூக இழப்புடன் ஒப்பிடுகையில் இப்பொருளாதார செலவு அற்பமானதே).

மேற்சொல்லியுள்ள வாதத்தின் முதலாவது அம்சம், முதலாளிய வளர்ச்சியில் மூலதனமானது முழுக்க முழுக்க வலுவானதல்ல என்பதை எடுத்துக்காட்டுகிறது. இரண்டாவது அம்சம், மூலதனத்தின் சிறப்பான நெகிழ்ச்சித் தன்மையை எடுத்துக்காட்டுகிறது. மூலதனக் குவிப்பானது, ஏற்கனவே நிலவும் சமூக வடிவங்களை எதிர்கொள்கையில் சிலவற்றை அழிக்கிறது. சிலவற்றுடன் ஒத்துப்போகிறது. புதிய சூழலுக்கேற்ப தன்னை விடாப்பிடியாகத் தக்கவைத்துக்கொள்ளும் பழைய சமூக வடிவங்களின் வலிமையையே மூலதனத்தின் இந்த ஒத்துப்போகும் இயல்பு எடுத்துக்காட்டுகிறது. இவ்வாறு பழைய சமூக வடிவங்கள் தம்மைத் தக்கவைத்துக் கொண்டாலும், அவையும் மாறுதலுக்குட்படுகின்றன. சான்றுக்கு, இனம்/பால் குறித்து இன்று நாம் புரிந்துகொண்டுள்ள கருத்தியலானது மூலதனக்குவிப்புச் செயல்முறையில், இன, பால் பிரிவுகள் மீள்உறுதிப்படுத்தப்படும் முறையால் வடிவமைக்கப்பட்டுள்ளது.

### *இன்று குடும்பமும் குடும்ப ஊதியமும் :*

முதலாளியமும் ஆணாதிக்கமுறைமையும் ஒன்றுடன் ஒன்று இணைந்து போதலின் விளைவாகவும், ஒன்றினுள் ஒன்று தங்கியிருப்பதன் விளைவாகவும், இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் குடும்ப ஊதியம் என்ற முறை உருவாகியது என மேலே வாதிட்டுள்ளோம். முதலாளியம், ஆணாதிக்க முறைமை ஆகிய இரண்டின் இணைப்பை குடும்ப ஊதியம் உறுதி செய்தது. உழைப்புச் சந்தையில் பெண்கள் அதிக அளவில் பங்கெடுத்துவந்த போதிலும், குறிப்பாக இரண்டாம் உலகப் போருக்குப் பின் இந்தப் பங்கு அதிகரித்து வந்த போதிலும், வீட்டுவேலைக்குப் பெண்கள், கூலி உழைப்புக்கு ஆண்கள் என்ற இன்றைய பால்ரீதியான வேலைப்பிரிவினைக்கு குடும்ப ஊதியமே இன்றும் அடித்தளமாக உள்ளது. உழைப்புச் சந்தையில் பெண்கள் பெற்றுவந்த குறைந்த ஊதியமும் அத்துடன் குழந்தை வளர்ப்பை வேறொருவரிடம் ஒப்படைக்கவேண்டிய தேவையும் சேர்ந்து குடும்பம் ஒரு வருமான அலகு (UNIT) என்ற நிலை தொடரவேண்டிய

அவசியத்தை உறுதிப்படுத்திவருகிறது குடும்பத்தை நடத்திச்செல்ல குடும்ப ஊதியம் பயன்படுவதால் வீட்டுக்கு உள்ளும், வெளியும் பெண்களது உழைப்புச் சக்தியைக் கட்டுப்படுத்த ஆண்களுக்கு அனுமதி கிடைக்கிறது.

பெண்களது கூலிஉழைப்பானது குடும்பத்தில் பல அழுத்தங்களை ஏற்படுத்தினாலும், இதன் விளைவாகக் குடும்பமும், பால் அடிப்படையில் அமைந்த வேலைப்பிரிவினையும் விரைவில் ஒழிந்துவிடும் என்று கருதுவது பிழையானதாகும். பால் அடிப்படையிலான வேலைப்பிரிவினை உழைப்புச் சந்தையில் மீண்டும் தலைதூக்கியுள்ளது. உணவு சமைத்தல், துப்புரவு, ஆட்களைப் பராமரித்தல் போன்ற தொழில்களில் பெண்கள் வேலை செய்து வருகிறார்கள். வீட்டில் செய்துவரும் வேலைகளைத்தான் வெளியிலும் தொழிலாகச் செய்துவருகிறார்கள். இந்த வேலைகள் குறைந்த தகுதி உடையனவாக, குறைந்த ஊதியம் தருவதாக இருக்கிறது. ஆணாதிக்க உறவுகளுக்கு எந்த ஊறும் நேராமல், அதன் பொருண்மை அடிப்படைமட்டும் குடும்பத் தளத்திலிருந்து உழைப்புச் சந்தைக்கு மாற்றம்பெற்றிருக்கிறது. குடும்பத்தை அடிப்படையாகக் கொண்ட ஆணாதிக்கமுறைமை, தொழில்துறையை அடிப்படை கொண்ட ஆணாதிக்க முறைமையாக மாற்றம்பெற்றுள்ளது.

தொழில்துறை அடிப்படையில் அமைந்த ஆணாதிக்க உறவுகள் பல்வேறு வழிகளில் உறுதிப்படுத்தப்படுகின்றன. குறைந்த ஊதியம், குறைவான நன்மைகள், குறைவான வசதிகள் போன்றவற்றை பெண்களுக்குத் தொழிற்சங்கங்கள் முன்வைப்பதானது, வெறுமனே பால்வாத மனப்போக்குகள் அல்லது ஆணாதிக்கக் கருத்தியல் ஆகியவற்றின் மீதமிச்சங்களைமட்டுமே காட்டவில்லை. மாறாக, அவை ஆணாதிக்க அமைப்பின் பொருண்மை அடிப்படையை உறுதிசெய்கின்றன. குடும்பத்திலிருந்து ஆணாதிக்கம் ஏற்கனவே மறைந்தொழிந்துவிட்டது என்று வாதிடுமளவுக்கு சிலர் சென்றுவிட்டனர். (எடுத்துக்காட்டாக *ஸ்டிவர்ட் ஈவன்* போன்றவர்கள்). நாம் அதனை மறுக்கின்றோம். குடும்பத்தில் இடம்பெற்றிருந்த கூடுதலான வேலைச்சுமைகள் மூலதனமயமாக்கப்பட்டன. பெண்களின் உழைப்புச் சக்திக்கான விரிவான எல்லைப் பரப்பும் மாற்றத்துக்குள்ளானது. ஆணாதிக்கமுறைமைக்கும், முதலாளியத்துக்கும் இடையில் ஏற்பட்ட இணக்கத்துக்கான நிபந்தனைகள் இதனால் மாறிச் சென்றன. இருப்பினும், உழைப்புச் சந்தையில் வேலைகளைத் தீவிரமாக பாகுபடுத்துவதால் ஏற்படும் ஊதிய மாற்றமானது குடும்ப அமைப்பை வலுப்படுத்துவதாகவே இருக்கிறது. அத்துடன்,

பெண்களைத் திருமணம்செய்ய ஊக்குவிப்பதன் மூலம் வீட்டு உழைப்புப் பிரிவினையும் வலுப்படுத்தப்படுகிறது என்பதும் உண்மையே.

ஒரு குடும்பத்தை நடத்திச் செல்லும் அளவுக்கு ஆண்கள் ஊதியம் பெறமுடியும் என்பதைக் குறிக்கும் குடும்ப ஊதியம் என்ற கருத்தாக்கமானது, ஆணும், பெண்ணும் சேர்ந்து உழைத்து ஒரு குடும்பத்தின் வருமானத்தை ஈட்டலாம் என்ற ஒரு புதிய கருத்தாக்கத்துக்கு வழிவிடலாம். ஊதியத்தில் காணப்படும் வேறுபாடானது, ஆணாதிக்கமுறைமையைத் தொடரவும் பெண்களின் உழைப்புச் சக்தியை ஆண்கள் கட்டுப்படுத்துவதற்கும் மிகவும் அவசியமானதாக இருக்கிறது. ஆண்களோடு ஒப்பிடும்போது பெண்களின் உழைப்பு இரண்டாம் தரமானது என விளக்கம் அளிப்பதற்கும், தொடர்ந்து பொருளாதார ரீதியாக பெண்கள் ஆண்களைச் சார்ந்திருப்பதை அவசியமாக்கவும் இந்த ஊதிய வேறுபாடு உதவிவருகிறது. உழைப்புச் சந்தையிலும் வேறு இடங்களிலும் காணப்படும் பால் அடிப்படையிலான வேலைப்பிரிவினையை ஆணாதிக்கமுறைமையின் வெளிப்பாடாகப் புரிந்துகொள்ளவேண்டும். அம்முறைமை நீடித்துவருவதற்கு இவ்வேலைப் பிரிவினை ஊழியம் செய்துவருகிறது எனப்புரிந்துகொள்ளவேண்டும்.

ஆணாதிக்கமுறைமையும் முதலாளியமும் ஒன்றுடன் ஒன்று இணங்கிப்போனாலும், காலப்போக்கில் முதலாளியம் அதனைச் சகித்துக் கொள்ளாது என்றும், இறுதியில் குடும்பத்தையும், ஆணாதிக்க முறைமையையும் மூலதனம் ஒழித்துவிடும் என்றும் பலர் வாதிட்டு வருகின்றனர். இந்த வாதத்தை தர்க்கரீதியாக நீட்டித்தால் அது பின்வருமாறு அமையும்:- முதலாளியச் சமூக உறவுகள் முழுச்சமூகத்தையும் தழுவும்போது, பெண்கள் அதிகரித்த அளவில் சுயமாகச் சம்பாதிப்பவர்களாக மாறியிருப்பர். அதனால் குடும்பத்தில் ஆண்களுக்கு அடங்கிப்போக மறுப்பர். குடும்பமானது குறிப்பாக பெண்களையும் குழந்தைகளையும் ஒடுக்கிவருவதால், குடும்பத்துக்குவெளியே சுதந்திரமாக வாழமுடியும் என்ற ஒரு சூழலில் குடும்பம் ஒழிந்துவிடும்.

குடும்பத்தில் இணைந்திருக்கும் ஆணாதிக்கமுறைமை உறவுகளை அவ்வளவு எளிதில் மூலதனம் ஒழித்துவிடும் என நாம் கருதவில்லை. குடும்பமுறை சிதறுண்டு வருவதற்கான எந்த ஆதாரமும் தற்போது நம் கண்ணில்படவில்லை. பெண்கள் தொழிலாளர் படையில் பங்குபெறும் போக்கு அதிகரித்துவருவது மணவிலக்கை (விவாகரத்து) சாத்தியப் படுத்தினாலும், அதற்கான உந்துதல் குறைவாகவே உள்ளது. மிகக் குறைந்த அளவு பெண்களே, தங்களது ஊதியத்தின்மூலம் தங்களையும்

குழந்தைகளையும் காப்பாற்றிக்கொள்ளமுடிகிறது. மரபுவழியான குடும்பங்கள் சிதைவதற்கான ஆதாரங்கள் மிகக்குறைவாகவே உள்ளன. மணவிலக்குகள் பெருமளவு அதிகரிக்கவில்லை. ஆனால் மறுமணம் பெருமளவு அதிகரித்துள்ளது. 1970ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பு வரையிலான காலத்தில் முதல் திருமணத்துக்கான வயது குறைந்தகொண்டே வந்திருக்கிறது. ஆனால் 1970களிலிருந்து, திருமணத்தையும் குழந்தைப்பேற்றையும் காலம் தாழ்த்தினாலும்கூட, சமீப காலத்தில் பிறப்புவிகிதம் அதிகரித்துள்ளது. மரபுரீதியான குடும்பங்களுக்கு வெளியே வாழ்வோரின் தொகை அதிகரித்து வருகிறது. குறிப்பாக இளைஞர்கள் தாம் திருமணம்செய்து மரபுரீதியான குடும்ப வாழ்க்கைத் தொடங்குமுன்பே, தமது பெற்றோர்களைவிட்டு வெளியேறி தனியாக வாழ்க்கை நடத்திவருகின்றனர். வயதானோர், குறிப்பாக பெண்கள், தமது குழந்தைகள் வளர்ந்தபின் கணவர் பிரிந்தபின் அல்லது அவர் இறந்தபின் தனியாக வாழ்ந்து வருகின்றனர். புதிய தலைமுறையினரான இளைஞர்கள் தமது இளம் வாழ்க்கையின் ஏதாவது ஒரு கட்டத்தில் கருக்குடும்பத்தை நிறுவுவார்கள் என்பதை சமீபத்திய போக்குகள் காட்டுகின்றன.

மூலதனம் குடும்பத்தை அழித்துவிடும் என்ற வாதமானது, குடும்ப வாழ்க்கையை ஈர்ப்புமிக்கதாக்கும் சமூகச் சக்திகளை அலட்சியப் படுத்துகிறது. கருக்குடும்பம் உளவியல்ரீதியாக அழிவுத் தன்மைவாய்ந்தது என்ற விமர்சகர்கள் சொல்லிவந்தபோதிலும், இந்த போட்டிச் சமூகத்தில் குடும்பமானது பெரும்பாலான மனிதர்களின் உண்மையான தேவைகளை நிறைவுசெய்வதாய் இருக்கிறது. இது நீண்டகால ஒருதார மணஉறவுக்கு மாத்திரம் அல்ல, குழந்தை வளர்ப்புக்கும் அவசியமானதாக இருக்கிறது. குழந்தை வளர்ப்பின் நிதிப் பொறுப்பினையும், உளவியல் அழுத்தங்களையும் தனிப் பெற்றோர் தாங்கவேண்டியுள்ளது. குறிப்பாக, தொழிலாளிவர்க்கப் பெண்களுக்கு இத்தகைய சுமைகள் அவர்கள் தொழிலாளியாய் இருப்பதன் "சுதந்திரத்தை" பொய்யாக்கி விடுகின்றன.

உழைப்புச் சந்தையில் பெண்கள் பங்கேற்பு அதிகரிப்பதால், குடும்பத்துக்குள் பால் அடிப்படையிலான வேலைப்பிரிவினையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று கூறினாலும் இதற்கான சான்றுகள் குறைவாகவே உள்ளன. பெண்தொழிலாளர்கள் தங்கள் குடும்பங்களில் இன்னும் வீட்டு வேலைகளை பெருமளவு தாங்களே செய்துவருகின்றனர் என்பதைச் சமீபகாலப் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. பெண்களைப் பொறுத்தவரை, "இரட்டை உழைப்பு" என்பதே இன்றைய எதார்த்தமாக உள்ளது.

உழைப்புச்சந்தையில் பால் அடிப்படையிலான வேலைப்பிரிவினை இருந்து வருவதால், பெண்கள் பொருளாதாரரீதியாக ஆண்களைச் சார்ந்திருப்பதும் தொடர்கிறது. ஆகவே இந்தச் சூழலில் இது (இரட்டை உழைப்பு) வியப்புக்குரிய ஒன்றல்ல. ஆணாதிக்கமுறைமையின் எதிர்காலம் குடும்ப உறவுகளின் எதிர்காலத்தில் மாத்திரம் தங்கியிருக்கவில்லை. ஏனெனில் மூலதனத்தைப் போலவே, ஆணாதிக்கமுறைமையும், நெகிழ்ச்சியும், இணக்கமும் கொண்டதாய் இருக்கிறது.

குடும்பத்துக்கு உள்ளேயும் வெளியேயும் காணப்படும் ஆணாதிக்க முறைமையிலான உழைப்புப்பிரிவினையை மூலதனம் சகித்துக் கொள்கிறதோ இல்லையோ, இப்பொழுது முதலாளியத்தை ஆணாதிக்க முறைமைதான் வடிவமைத்துக்கொண்டிருக்கிறது. நாம் இனி விளக்க விருப்பதுபோல, ஆணாதிக்கமுறைமையானது முதலாளியக் கட்டுப்பாட்டை நியாயப்படுத்துவதுடன் முதலாளியத்துக்கு எதிரான சில போராட்ட வடிவங்களையும் நியாயமற்றதாகக் காட்டுகிறது.

***இருபதாம் நூற்றாண்டில் கருத்தியல் :***

ஆணாதிக்கமுறைமையானது ஆண்களுக்கிடையிலான அதிகாரப்படி நிலை அமைப்பை நிலைநிறுத்தி நியாயப்படுத்துவதன்மூலம் (அனைத்துப் பிரிவையும்சேர்ந்த ஆண்கள் குறைந்தபட்சம் சில பெண்களையாவது கட்டுப்படுத்த அனுமதிப்பதன்மூலம்) முதலாளியக் கட்டுப்பாட்டை வலுப்படுத்துகிறது. முதலாளிய விழுமியங்கள் ஆணாதிக்கத்துக்குச் சாதகமான வரையறைகளை வடிவமைக்கிறது.

சார்ந்திருத்தல், ஆதிக்கம் ஆகியவற்றுக்கிடையிலான உறவுகளில் என்ன நிகழ்கிறது என்பதற்கு ஸீலாமித் பயர்ஸ்ரோன் கூறும் உளவியல் அம்சங்கள் சான்றாகும். ஆண்களது சமூக அதிகாரம் (இந்த அதிகாரம் பெண்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது) என்ற எதார்த்தத்திலிருந்து இவை பிறக்கின்றன. ஆனால் இவை முதலாளியச் சமூகச் சூழலில் நடைபெறுகின்றன என்ற உண்மையால் வடிவமைக்கப்படுகின்றன. ஆண்களை போட்டித்தன்மை வாய்ந்த, பகுத்தறிவுகொண்ட, ஆதிக்கக்குணம் கொண்டோர் என தீவிரப்பெண்ணியர் விவரிப்பதுபோலவே, நாம் முதலாளியச்சமூகத்தின் முக்கிய விழுமியங்களை விவரிக்கின்றோம்.

***இந்தத் தற்செயல் இணைவு இருவகையாக விளக்கப்படக்கூடும் :***

1. கூலி உழைப்பாளர்களான ஆண்கள் முதலாளியப் போட்டி

உறவுகளினுள் இழுக்கப்பட்டு இந்த விழுமியங்களை ஏற்றுக் கொள்கின்றனர். ஆண்கள் குறித்த தீவிரப்பெண்ணியரின் விவரிப்புகள் முதலாளியச் சமூகங்களில் இருந்து முற்றிலும் வேறுபட்டது அல்ல.

2. பால் விழுமியங்கள் கூறுகின்றபடி, எதார்த்தத்தில் ஆண்களும், பெண்களும் நடந்துகொள்ளாவிடினும்கூட, ஆதிக்கக் கருத்தியலால் மதிப்பீடு செய்யப்படுகின்ற அத்தகையப் பண்புகளுக்கு ஆண்கள் தாமே உரிமை கோருகின்றனர். சான்றுக்கு (CREST WOOD HEIGHTS) என்ற நூலில் அதன் ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளதுபோல், ஆண் அதிகாரிகள், தங்கள் உதவியாளர்களை தம் விருப்பப்படி கையாளப் பகுத்தறிவுக்குப் பொருந்தாத பல நுட்பமான வழிகளைக் கையாளுகின்றனர். இம்மாதியான ஆண்களைத்தான் பகுத்தறிவுவாதிகளாகவும் காரியார்த்தவாதிகளாகவும் சமூகம் சித்தரிக்கின்றது. அதேசமயத்தில், குழந்தைவளர்ப்பு தொடர்பாக அறிவியல் முறைகளைக் கற்கும் பெண்களை இச்சமூகமானது, பகுத்தறிவு அற்றவர்களாகவும், உணர்ச்சிமயமானவர்களாகவும் சித்தரிக்கின்றது.

முதலாளியச் சமூகங்களில் காணப்படும் ஆண்மை பெண்மைப் பண்புகளை இது விளக்குவதோடு, இச்சமூகங்களில் பால்வாதக் கருத்தியல் எத்தகைய வடிவம் எடுக்கிறது என்பதையும் விளக்குகிறது. ஆணாதிக்கம், முதலாளிய உற்பத்தி ஆகிய இரண்டையும் தொடர்ந்து காப்பாற்றும் இரட்டை நோக்கங்களுக்கு பெண்களது உழைப்புப் பயன்படுகிறது. அதுபோலவே, ஆண்மைப் பண்புகள்/முதலாளிய விழுமியங்கள் ஆகியவற்றைப் பாராட்டவும், பெண்மைப் பண்புகள்/அவர்களின் சமூகத் தேவைகள் ஆகிய இரண்டையும் இழிவுசெய்யவும் பால்வாதக் கருத்தியல் ஊழியம்புரிகின்றது.

வேறு சமூகங்களில் பெண்கள் அதிகாரமற்றவர்களாகவோ அல்லது இழிவுக்குள்ளானவர்களாகவோ இருந்திருப்பின், அதற்கு ஆண்கள் கூறும் காரணங்கள் வேறாக இருக்கும். முதலாளியச் சமூகத்தில்தான் பெண்கள் உணர்ச்சிபூர்வமானவர்கள் என்றும், பகுத்தறிவற்றவர்கள் என்றும் சொல்வது பொருளுள்ளதாக இருக்கும். மறுமலர்ச்சிக் காலத்தில் இம்மாதிரியான ஒரு சித்தரிப்புப் பொருளற்றதாக இருந்திருக்கும். சார்ந்திருப்பவர்களாக பெண்களைச் சித்திரிப்பது முதலாளியச் சமூகத்தில்மட்டுமே பொருளுள்ளதாகத் தோன்றும். இம்மாதிரியான பட்டப் பெயர்கள் நிலவுடைமைச் சமூகத்திலும் பொருளற்றதாக இருந்திருக்கும். மனைவியர், அன்னையர் என்ற முறையில் பெண்கள் குடும்பத்தில் பெருமளவு பயன்மதிப்புள்ள உற்பத்தியில் ஈடுபட்டுவருவதை வேலைப்பிரிவினை

உறுதிப்படுத்துகிறது. ஆனால் இச்செயல்பாடுகளை இழிவுபடுத்துவதன் மூலம் சமூகத் தேவைகளை நிறைவுசெய்யமுடியாத அதனுடைய இயலாமையை மறைத்துக்கொள்ள மூலதனத்தால் முடிகிறது. அதேசமயம், ஆண்களின் பார்வையில் பெண்கள் இழிவானவர்களாகத் தென்படவும் ஆண்களின் ஆதிக்கத்துக்கு ஒரு நியாயத்தையும் இது வழங்குகிறது. தொலைக்காட்சி வணிக விளம்பரங்களில் தென்படும் குறிப்பான இரட்டைத் தன்மைகள் இதற்குச் சான்றாக விளங்குகின்றன. ஒருபுறம், அவை (வணிக விளம்பரங்கள்) தங்களை உண்மையான தடைகளை நீக்குகின்ற, சமூகத்துக்கு அவசியமான பணிகளைச் செய்வதாகக் கூறிக்கொள்கின்றன. உடைகளை நாசம்செய்து தோலில் அரிப்பை ஏற்படுத்தும் சோப்புகள் குறித்தும், மோசமாகத் தயாரிக்கப்பட்ட அனைத்துப் பொருள்களைக் குறித்தும் அவை பேசுகின்றன. மறுபுறம், இதனோடு தொடர்புள்ள உண்மையான பிரச்சனைகளை ஒதுக்கிவிடுகின்றன. இவற்றைக் கையாளும் பெண்களை ஏளனம் செய்வதில் இவ்விளம்பரங்கள் முடிவடைகின்றன.

தொழிலாளர் படையில் காணப்படும் பால் அடிப்படையிலான வேலைப் பிரிவினையிலிருந்து, முதலாளியத்துக்கும் ஆணாதிக்க முறைமைக்கும் இடையிலான இணைப்பைப்பற்றி விளக்கும் இன்னொரு வாதத்தை உருவாக்கலாம். பால் அடிப்படையிலான வேலைப் பிரிவினையானது, பெண்களுக்கு குறைந்த ஊதியத்தையும் அவர்களுக்குப் பொருத்தமானது என்று கருதப்படும் வேலைகளையும் தந்துவருகிறது. ஆசிரியைகளாகவும், சமூகநலத்துறை பணியாளர்களாகவும், சுகாதாரத் துறையில் பெரும் எண்ணிக்கையிலும் பெண்கள் பணியாற்றிவருகிறார்கள். இப்பராமரிப்பு வேலைகள் குறைந்த சமூகத்தகுதி கொண்டவையாக இருக்கின்றன. தனிநபர் சுதந்திரத்தையும், சமூகத் தேவைகளை நிறைவுசெய்வதில் தனியார்துறையின் ஆற்றலையும் முதலாளியம் வலியுறுத்துவதே இதற்குக் காரணமாக இருக்கிறது.

இப்பராமரிப்பு வேலைகளைப் பெண்கள் செய்கிறார்கள் என்ற காரணத்துக்காகவே அவற்றின் சமூக முக்கியத்துவம் இழிவுபடுத்தப்படுவது நீடிக்கும்வரையிலும், "பயன்மதிப்புகளுக்கான" தேவைக்கும், மூலதனம் முதலிடம்தரும் "பரிவர்த்தனை மதிப்புக்கும்" இடையேயான முரண்பாடுகள் தவிர்க்கப்பட்டுவரும். இவ்வகையில் தொழிலாளிவர்க்கத்தை கூறுபடுத்தி திசைதிருப்புவது பால்வாதமே அன்றி பெண்ணியமல்ல.

***மிகவும் முற்போக்கான கூட்டிணைவை நோக்கி :***

பல சிக்கல்கள் இன்னும் ஆய்வுக்குட்படாமலேயே இருக்கின்றன.

இதுவரை நாம் பயன்படுத்திவந்த ஆணாதிக்கமுறைமை என்ற பதம் ஆய்வுத்தன்மை கொண்டதாக அல்லாமல் விவரணத்தன்மை கொண்டதாகவே இருக்கிறது. மார்க்சியம் குறைபாடுடையது என்றும் தீவிரப்பெண்ணியம் போதாது என்றும் நாம் நினைத்தால் புதிய ஆய்வு வகையினங்களை வளர்ந்தெடுக்கவேண்டிய தேவை நமக்கு இருக்கிறது. பால்ரீதியான வேலைப்பிரிவினையானது ஆணாதிக்கமுறைமை, முதலாளியம் ஆகிய இரண்டையும் வலுப்படுத்துவதாலும், முழுக்க முழுக்க ஆணாதிக்க முதலாளியச் சமூகத்திலிருந்து ஆணாதிக்கப் பொறிமுறைகளைத் தனியாகப் பிரித்தெடுப்பது கடினம் என்பதாலும் நமது பணி இடர்பாடுடையதாய் இருக்கிறது. இருப்பினும், பின்வரும் பணிகளை நாம்செய்தே ஆகவேண்டும். பெண்களின் உழைப்புச் சக்தியில் பயன்பெறுவோர் யார் என்பதையும், ஆணாதிக்கமுறைமையின் பொருண்மை அடிப்படைகள் என்ன என்பதையும் கண்டுபிடிக்கவேண்டும். அதிகாரப் படிநிலை அமைப்பின் செயல் முறையையும், ஆண்களுக்கிடையிலான ஒருமைப்பாட்டுக்கான காரணத்தையும் கண்டுபிடிக்கவேண்டும். நாம் எழுப்பவேண்டிய கேள்விகளுக்கு முடிவேயில்லை.

ஆணாதிக்கமுறைமையின் இயக்கவிதிகளைப்பற்றி பேசலாமா? பெண்ணியப் போராட்டத்தை ஆணாதிக்கமுறைமை எவ்வாறு தூண்டுகிறது? வளர்ச்சியடைந்த முதலாளியச் சமூகங்கள் தவிர்த்து ஏனைய சமூகங்களில் எம்மாதிரியான பால்-அரசியலையும், போராட்டத்தையும் காணலாம்? ஆணாதிக்கமுறைமையின் முரண்பாடுகள் என்ன? இவற்றுக்கும் முதலாளிய முரண்பாடுகளுக்கும் இடையே என்ன உறவு? ஆணாதிக்கமுறைமை பெண்ணிய இயக்கத்துக்கு வழிஅமைத்துத் தருகிறது, முதலாளியம் வர்க்கப் போராட்டத்தை தோற்றுவிக்கிறது என்பதை நாம் அறிவோம். ஆனால் வரலாற்றுச் சூழலில் பெண்ணியத்துக்கும், வர்க்கப் போராட்டத்துக்கும் இடையிலான உறவு எப்படிப்பட்டதாக அமையவேண்டும்? இனிவரும் பகுதியில் இறுதி கேள்விக்குப் பதில்தர முயற்சிப்போம்.

*பெண்ணியமும், வர்க்கப் போராட்டமும் :*

வரலாற்றுரீதியாகவும் சரி, தற்காலத்திலும் சரி, பெண்ணியமும் வர்க்கப் போராட்டமும் வெவ்வேறு வழிகளில்தான் பயணம் செய்துவருகின்றன. ("முதலாளியப்" பெண்ணியம் ஒருபுறம், வர்க்கப் போராட்டம் மறுபுறம்). அல்லது, மார்க்சியத்தின் ஆதிக்கத்தின்கீழ்

இடதுசாரி அரசியலுக்குள் பெண்ணியம் அடைபட்டுநிற்கிறது. பெண்ணியத்தின்மீது மார்க்சியம் ஆதிக்கம்செய்துவருவதற்கு, மார்க்சிய ஆய்வுத்திறனும், கட்சிக்குள் ஆண்களின் ஆதிக்கமும் காரணமாய் இருக்கின்றன. இதனால் இடதுசாரி அமைப்புகளில் வெளிப்படையான போராட்டங்கள் வெடிக்கின்றன. மார்க்சியப் பெண்ணியர்கள் முரண்பட்ட நிலைபாடுகள் எடுப்பதற்கும் இதுவே காரணமாய் அமைகின்றன.

தம்மைத் தீவிரவாதிகள் எனக்கருதும் பெரும்பான்மையான தீவிரப் பெண்ணியர்கள் (நிறுவன-எதிர்ப்பு, முதலாளிய-எதிர்ப்பு, ஏகாதிபத்திய-எதிர்ப்பு, சோசலிச, கம்யூனிச, மார்க்சிய இதர வகையினர்) பெண்ணிய இயக்கத்தின் தீவிரப்பிரிவின் உற்சாகம் நின்று போனதையும், மிதவாதிகள் பலவிசயங்களை தம்வசம் எடுத்துக்கொண்டு முன்னேறிவருகின்றனர் என்பதையும் ஏற்றுக்கொள்வர். இப்பொழுது நமது இயக்கம் உற்சாகமும் ஆற்றலும் இழந்துநிற்கிறது. இதற்குமுன்னர், நாம் என்ன செய்தாலும் அதற்கு பலன் கிடைத்தது. அக்காலத்தில் நமது செயல்பாடுகள், பெண்களின் உணர்வுமட்டத்தை உயர்த்தியது. அமைப்பினுள் உள்வாங்க இயலாத அளவுக்கு ஏராளமான பெண்களை இயக்கத்துக்குள் கொண்டுவந்தது; சமூகத்திலுள்ள பெண்களின் பிரச்சனைகளை வெளிப்படுத்த உதவியது. பல சமயங்களில் இது சமூகத்திலுள்ள முதலாளிய உறவுகளுக்கும் ஆணாதிக்கமுறைமை உறவுகளுக்கும் ஒருங்கே சவால்விடும் அளவுக்கு இருந்தது.

இப்போது நமது இயக்கத்தின் ஒருபகுதி, நிறுவனவிதிகளுக்கு உட்பட்டு இயங்கிவருவதை நாம் உணரமுடிகிறது. “பெண்ணியம்” என்பது பெண்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. சான்றாக, மணவிலக்கு வழக்குகளில் மனைவியரான பெண்களுக்கு நட்டஈடு தேவையில்லை; ஏனெனில், அவர்கள் விடுதலை அடைந்தவர்கள் என நீதிபதிகள் வாதிடுவதைக் காணலாம். இதுநாள்வரை அமெரிக்காவில், சமஉரிமைச் சட்டத்தை நம்மால் உறுதிசெய்ய முடியவில்லை. காரணம், பெண்ணியமானது பெண்களுக்கு எதிராக தொடர்ந்து பயன்படுத்தப்படும் என்ற நியாயமான அச்சம் பெரும்பாலான பெண்கள் மத்தியிலேயே காணப்படுகிறது. நமது இயக்கத்தை மறுமதிப்பீடுசெய்ய வேண்டியதன் அவசியத்தை இது சுட்டிக்காட்டுகிறது. சமூகமாற்றம்பற்றிய ஒரு முன்னேறியக் கோட்பாடாக மார்க்சியம் இருப்பதால், நாம் அதன் உதவியை நாடுவது தர்க்கபூர்வமானதுதான், பெண்ணியக் கோட்பாட்டோடு ஒப்பிடும்போது, மார்க்சியக் கோட்பாடு மிகவும் வளர்ச்சியடைந்த

கோட்பாடாகும். ஆகவே, அதனை நாம் பயன்படுத்தும்போது, சிலசமயம் பெண்ணியக் குறிக்கோளிலிருந்து வழிதவறியும்விடுகிறோம்.

பெண்ணிய இயக்கத்தைப் பொறுத்தவரை, இடதுசாரிகள் எப்பொழுதும் இரட்டை மனப்போக்கு கொண்டவர்களாகவே இருந்து வருகின்றனர். இது சோசலிசப் புரட்சிக்கு தீங்குவிளைவிக்கக்கூடியது என்றே பெரும்பாலும் கூறிவருகின்றார்கள். இடதுசாரிப் பெண்கள் பெண்ணியத்தை ஆதரிப்பது, இடதுசாரி ஆண்களுக்கு அச்சமூட்டுவதாய் இருக்கிறது. ஆகவேதான் பெரும்பாலான இடதுசாரி ஆய்வுகள் (முற்போக்கு, மரபுவழி ஆகிய இருதரப்பு ஆய்வுகளும்) கோட்பாட்டளவிலும் சரி, அரசியல்ரீதியிலும் சரி, சுயஊழியம்செய்து கொள்வதாகவே இருக்கிறது. பெண்கள் தங்களது நிலைகுறித்து ஒரு சுதந்திரமான விளக்கத்தை வளர்த்துவதைக் கைவிட்டுவிட்டு, இடதுசாரி விளக்கத்தை ஏற்றுக்கொள்ளும்படி பெண்களைத் தூண்டுகிறார்கள். இம்மாதிரியான அழுத்தங்களுக்கு நமது எதிர்வினையாகவும், நாமே முன்வந்து மார்க்சிய ஆய்வைக் கைக்கொண்டுள்ளதாலும், இயல்பாகவே நாம் இந்த (மார்க்சிய) சட்டகத்தைப் பயன்படுத்தி "சகோதரத்துவத்தில்" (ஆண் தோழர்களின் கருத்தாக்கத்தோடு - மொர்) இணையநேரிடலாம். அதன் விளைவு, பெண்களது நிலைமைகுறித்து ஆய்வுசெய்து, நமது அரசியல் செயல்பாடுகளை வளர்த்துவதற்குப் பதிலாக, சகோதரத்துவத்தின்பெயரால் நமது போராட்டத்தை நிறுத்திவிட்டதை நாமே நியாயப்படுத்தும் ஒருநிலை ஏற்படலாம். பெரும்பாலான மார்க்சியர்கள், பெண்கள் பிரச்சனை குறித்து மரபு மார்க்சிய ஆய்வோடு நிறைவடைந்து விடுகின்றனர். பெண்களது நிலையைப் புரிந்துகொள்ள வர்க்கம் என்ற ஆய்வுச் சட்டகமே போதுமானது என நினைக்கின்றனர். இச்சட்டகத்தின் படி, பெண்கள் தொழிலாளி வர்க்கத்தின் ஒருபகுதி, ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஆன எந்த ஒரு மோதலையும்விட, முதலாளியத்துக்கு எதிரான தொழிலாளிவர்க்கப் போராட்டமே முதன்மையானது. பால் முரண்பாடு, வர்க்க முரண்பாட்டை சிதைப்பதை அனுமதிக்கமுடியாது.

கடந்த சில ஆண்டுகளாக, அமெரிக்காவின் பொருளாதார நிலை மோசமடைந்து வருவதால், மரபுவழி மார்க்சிய ஆய்வு தன்னை மீண்டும் நிலைநிறுத்திக்கொண்டது. 1960களில் தோன்றிய குடியுரிமை இயக்கம், மாணவர் இயக்கம், போர்-எதிர்ப்பு இயக்கம், பெண்கள் இயக்கம், சூழல் இயக்கம், நடுத்தரவர்க்க தொழிலாளர்களின் அதிகரித்த போராட்ட உணர்வு போன்றவை மார்க்சியத்துக்கு எதிராக பல புதிய வினாக்களை

முன்னிறுத்தின. ஆனால் பணவீக்கம், வேலையின்மை போன்ற வெளிப் படையான பொருளாதாரச் சிக்கல்கள் மேற்சொன்ன முழக்கங்களின் முக்கியத்துவத்தைத் திரையிட்டு மறைந்துவிட்டன. மீண்டும் இடதுசாரிகள் தங்கள் அடிப்படைவாத அரசியலுக்கு - (குறுகிய பொருளில்) தொழிலாளிவர்க்க அரசியலுக்கு - திரும்பிவிட்டனர். வளர்ந்துவரும் மார்க்சிய - லெனினியக் கட்சிப்பிரிவுகள் கோட்பாட்டளவிலும், நடைமுறை அளவிலும், பெண்ணியத்துக்கு எதிரிகளாகவே இருக்கின்றனர். இடதுசாரிக் கல்வியாளர்களிடையே (ACADEMIC) பெண்ணியப் பிரச்சனையின் முக்கியத்துவம் குறையத் தொடங்கியுள்ளதன் அறிகுறிகள் தென்படுகின்றன. இடதுசாரிகளின் கருத்தரங்குகளில் குழந்தைப் பராமரிப்புக்கென வசதிகள் செய்துதருவது மறைந்து வருகின்றது. மார்க்சியம் அல்லது அரசியல் பொருளாதாரம் என்பது அறிவுத்துறையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு விசயமாகிவிட்டது. "பழம்சிறுவர்களான" மிதவாதக் கல்வியாளர்களின் அனைத்து செயல்பாடுகளும் "இளம்சிறுவர்களின்" செயல்பாடுகளோடு ஒன்றிணைந்து செல்வதாகவே இருக்கிறது. "இளம் சிறுவர்களான" மார்க்சியரும், தீவிரப் பிரிவினரும், இளமையும், தீவிரப் பண்பும் பெற்றவராக இருப்பினும், ஆண் என்ற முறையிலும், கண்ணோட்டத்திலும் "பழம்சிறுவர்களோடு" ஒத்துப்போகின்றனர்.

சிறுபிள்ளைத்தனமான கோரிக்கைகளைக் கைவிட்டு, காத்திரமான புரட்சியாளர்களாக மாறும்படி தீவிரப்பெண்ணியரை வற்புறுத்துவது அதிகரித்துள்ளது. பணவீக்கம், வேலையின்மை போன்ற பிரச்சனைகளோடு ஒப்பிடும்போது, பெண்கள் கோரிக்கைகள் காலவிரயத்தை ஏற்படுத்துபவை என கருதப்படுகிறது. 1930களில் ஏற்பட்ட பெரும் பொருளாதாரச் சிக்கலின்போது, பெரும்பாலான பெண்கள் தங்கள் வேலைகளை இழக்க வேண்டியதாயிற்று. வேலையில்லாத் திண்டாட்டம் ஒருதலைப்பட்சமாக பெண்களை மட்டுமே பாதித்தது. அப்பொழுது ஒரு குடும்பத்துக்கு ஒரு வேலை என்ற முறை நடைமுறைப்படுத்தப்பட்டது. அந்த ஒரு வேலையும் ஆணுக்கே தரப்பட்டது. இதன்மூலம் நெருக்கடியிலிருந்து முதலாளியமும் ஆணாதிக்கமுறைமையும் தம்மை விடுவித்துக்கொண்டதோடு தங்களை வலுப்படுத்திகொண்டன. பொருளாதார நெருக்கடிகள், ஏற்றத்தாழ்வுகளைச் சமன்செய்து முதலாளியத்தின் செயல்பாடுகளை மறுநிர்மாணம்செய்ய உதவுவதுபோல, ஆணாதிக்க முறைமைக்கும் அவை உதவுகின்றன. 1930களில் பெண்கள் மீண்டும் தங்கள் பழைய இடத்திலேயே வைக்கப்பட்டனர்.

பெண்ணியம்குறித்த ஆய்வையோ, அதன் பிரச்சனைகள் குறித்த நடைமுறைச் செயல்பாடுகளையோ கைகழுவிட்டால், பின் மூலதனத்துக்கும், ஆணாதிக்கமுறைமைக்கும் எதிரான போராட்டம் வெற்றிபெறமுடியாது. நம்மை ஒடுக்குகின்ற முதலாளிய உறவுகளை மட்டுமே குறிவைத்து நடத்தப்படும் போராட்டம் தோல்வியையே தழுவும். காரணம், இதற்கு ஆதரவாகவுள்ள ஆணாதிக்க ஒடுக்குமுறை உறவுகளை இப்போராட்டம் கணக்கில்கொள்வதில்லை. பெண்களுக்கான சோசலிசம்குறித்த விளக்கத்துக்கு ஆணாதிக்கமுறைமைகுறித்த ஆய்வு அவசியமாகும். முதலாளியத்தைத் தூக்கியெறியும் போராட்டத்தில் ஆண்களும் பெண்களும் ஒன்றிணையவேண்டிய அவசியமிருக்கும் அதேவேளையில், தத்தமது பால்நலன்களையும் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். நமது திட்டப்படி, வரலாற்றின்படி, அல்லது ஆண்சோசலிசத்தின்படி, நாம் போராடிக் கொண்டிருக்கும் சோசலிசம், ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஒன்றேயானதா என்பது தெளிவாக இல்லை. மனிதாயச் சோசலிசத்தில் புதிய சமூகம் எப்படி இருக்கவேண்டும், ஆரோக்கியமான மனிதன் எப்படி இருக்க வேண்டும் என்பது போன்ற விசயங்களில் கருத்தொற்றுமை தேவை. அதுமட்டுமல்ல, ஆண்கள் தங்கள் சிறப்புச் சலுகைகளையும் கைவிடவேண்டும். மனிதாய சோசலிசத்துக்கு இது அவசியம்.

நமது கடமைகளின் உடனடித் தேவையையும் முக்கியத்துவத்தையும் கடந்த காலங்களில் நாமே தள்ளிப்போட்டதுபோல, இனியும் தள்ளிப்போட பெண்கள் என்ற முறையில் நம்மைநாமே அனுமதிக்கக்கூடாது. நமது பெண்ணிய லட்சியங்களைக் கைவிட நுண்மையாகவும் பருண்மையாகவும் முயற்சிக்கப்படும் வற்புறுத்தல்களை எதிர்த்து நாம் போராடவேண்டும்.

இதற்கு இரு முக்கிய போராட்ட வழிகள் அவசியம். ஒன்று, சோசலிசத்துக்கான போராட்டம் என்பது பல்வேறுபட்ட நலன்களைக் கொண்ட குழுக்களின் கூட்டணியாக இருக்க வேண்டும். புரட்சிக்குப்பின் ஆண்கள் தங்களை விடுதலை செய்வார்கள் எனப்பெண்கள் நம்பிக்கை கொள்ள முடியாது. இதற்கு ஒரு காரணம், ஆண்களுக்கு இதுகுறித்த வழிமுறைகள் தெரியாது. மற்றொரு காரணம், அவ்வாறு செய்யவேண்டிய அவசியம் ஆண்களுக்கு இல்லை. உண்மையில் சொல்லப்போனால், பெண்கள்மீதான ஒடுக்குமுறை தொடர்வதில்தான் ஆண்களின் உடனடி நலன்கள் அடங்கியுள்ளன. இதற்குப்பதிலாக, நாம் நமக்கென சொந்தமான அமைப்பையும், அதிகாரத்தளத்தையும் வைத்திருக்கவேண்டும்.

முதலாளிய அமைப்பில் ஏற்பட்டுள்ள பால் அடிப்படையிலான வேலைப்பிரிவினையானது பெண்களிடம் குறிப்பிட்ட வேலைகளைக் கையளித்திருக்கிறது என நாம் கருதுகிறோம். மனிதர்களுக்கிடையிலான சார்புகளையும் மனிதத்தேவைகளையும் நாம் அந்த நடைமுறையிலிருந்து புரிந்துகொண்டுள்ளோம். மூலதனத்துக்கு எதிராக ஆண்கள் ஒரு நீண்ட போராட்டத்தை நடத்த வேண்டியுள்ளது. பெண்களோ, தாங்கள் எதற்காகப் போராடவேண்டும் என்பதை உணர்ந்தவர்களாக இருக்கவேண்டும். ஆணாதிக்கமுறைமையிலும், முதலாளியத்திலும் ஆண்கள் ஒரு வாய்ப்பான இடத்தில் இருந்துவருகிறார்கள். அதனால் பராமரிப்பு, குழந்தைவளர்ப்பு போன்ற விசயங்களில் தங்களின் பங்குகுறித்து உணர்வற்றவர்களாக ஆண்கள் இருக்கிறார்கள். அதுபோலவே, அதிகாரப் படிநிலை இல்லாத, ஆணாதிக்க அதிகாரம் இல்லாத ஒரு சமூகத்தில் மேற்சொல்லியுள்ள தேவைகளை எப்படி எதிர்கொள்ளவேண்டும் என்பதற்கான ஆற்றல்களும் இல்லாதவர்களாக இருக்கிறார்கள். ஒருவேளை நாம் ஆண்களிடம் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தினாலும்கூட, இதுவரை தங்களுக்குக் கிடைத்துவந்த ஆதாயத்தையும், அதைக்கைவிடுவதால் வரும் இழப்புகளையும் மதிப்பிட்டுப் பார்த்து, ஆண் என்ற முறையில் தங்களுக்கு கிடைத்துவரும் ஆதாயத்தின் பக்கமே நிற்பார்கள். ஏனெனில், இழப்பதற்கு ஆண்களுக்கு விலங்குகளைத் தவிர வேறு நிறைய ஆதாயங்களும் உள்ளன.

பெண்ணியர்கள் என்ற முறையில் நாம், ஆணாதிக்கமுறை, முதலாளியம் ஆகிய இரண்டுக்கும் எதிரான போராட்டத்தை ஒருசேர நடத்தும் ஒரு நடைமுறையைக் கட்டியமைக்கவேண்டும். நாம் உருவாக்க இருக்கும் சமூகத்தில், பரஸ்பரச் சார்பு என்பது ஒரு இழிவான வேலையாக இல்லாமல் சுதந்திரத்தைத் தருவதாகவே இருக்கும், பராமரிப்பு பொதுவான வேலையாக இருக்கும் என்பதை வலியுறுத்திக் காட்டவேண்டும். ஆண்களின் பொய்யான சுதந்திரத்தையும் குறிப்பான சுதந்திரத்தையும் தொடர்ந்து பெண்கள் ஆதரித்த ஒரு நடைமுறை, அப்புதிய சமூகத்தில் இருக்கவே இருக்காது.

# முதலாளியம் என்பது ஆணாதிக்கத்தின் வளர்ந்த நிலை. ஆனால் மார்க்சியம் பெண்ணியம் அல்ல.

---

அஸிஸாஅல்-ஹிப்ரி

*அஸிஸாஅல்-ஹிப்ரி லெபனானில் பிறந்தவர். பெய்ரூட் பல்கலைக்கழகத்திலும், பென்சில்வேனியா பல்கலைக் கழகத்திலும் பட்டங்கள் பெற்றவர். இசுலாம், பெண்ணியம் பற்றியும், நாகரிகம், தொழில் நுட்பம் ஆகியவற்றின் தோற்றம் பற்றியும் ஆய்வு செய்து வருகிறார். அறிவியல் தர்க்கம் (DEONTIC LOGIC) என்ற நூலின் ஆசிரியரும் தொழில்நுட்பமும் மானுடச் செயல்பாடுகளும் என்ற நூலின் இணையாசிரியரும் ஆவார்.*

*முன்னுரை :*

மார்க்சியத்திற்கும், பெண்ணியத்திற்கும் இடையிலான மகிழ்ச்சியற்ற திருமணம், ஆணாதிக்கமுறைமைக்கும், முதலாளியத்திற்கும் இடையிலான பரஸ்பரஉறவுகளை வெளிப்படுத்த முயன்றபோதிலும் ஒரு முக்கிய அம்சத்தில் அது தோல்வியடைந்துவிட்டது. ஆணாதிக்கமுறைமையும், முதலாளியமும் தங்களுக்குள் பரஸ்பர உறவுகளைக் கொண்டிருந்த போதிலும் கொள்கையளவில் (அல்லது கருத்தியல் ரீதியில்) அவையிரண்டும் சுயேச்சையானவை எனப்பரவலாகக் கொள்ளப்பட்ட நம்பிக்கையைத் தொடக்கத்திலிருந்தே விமர்சனமின்றி அது ஏற்றுக்கொள்கிறது.

இதன்விளைவாக, கார்ட்மன் ஆணாதிக்கமுறைமைக்கும் முதலாளியத்திற்கும் இடையிலான கூட்டணியைப் பற்றிப்பேசுவதையும் நாம் கண்டுகொள்ள முடிகிறது. மேலும் நமது சமூகத்திலும் இந்தக் கூட்டணி நீடித்து வருவதை வெளிப்படுத்துவதே அவரின் பணியாக இருக்கிறது. கெடுவாய்ப்பாக, ஆணாதிக்கமுறைமை, முதலாளியம் ஆகியன பற்றிய இத்தகையப்பார்வை விசயத்தின் மையத்தைச் சென்றடையாது. அத்துடன் இப்பார்வைத் தீவிரமான பின்விளைவுகளுக்கும் இட்டுச் செல்லும். உதாரணமாக, இதன் விளைவாகத்தான் பொருளுற்பத்தியின் ஒரு அம்சத்தில் ஏற்படும் மாறுதல் (பொருளாதாரத்தில் என்று வைத்துக் கொள்வோம்) இன்னொரு அம்சத்தில் ஏற்படும் மாறுதலோடு (ஆணாதிக்க முறைமையில் மக்கள் உற்பத்தி) நெருக்கமாக பின்னிப்பிணைந்திருந்த போதிலும் அவற்றுக்கிடையில் மிக அவசியமான தொடர்பு இருப்பதாக கார்ட்மனால் காணமுடிவதில்லை. இது பின்வரும் விவாதங்களுக்கு ஒரு விரிவான வாய்ப்பை விட்டுச் செல்கிறது. முதலாளியச்சமூகத்தில் தொழிலாளி என்ற அடிப்படையில் இல்லாவிட்டாலும் பெண்கள் என்ற அடிப்படையில் விடுதலை பெறுவது கடினமாக இருப்பினும் முற்றிலும் முடியாதது அல்ல. எல்லாவற்றுக்கும் மேலாக கார்ட்மனைப் பொறுத்த அளவில் முதலாளிய அதிகாரப்படிநிலை அமைப்பின் மீது ஆணாதிக்க முறைமையிலான

பாலினப் படிநிலைஅமைப்பு மேலடுக்காக உள்ளது. ஆகவே ஒரு முதலாளி தன் அதிகாரப் படிநிலைஅமைப்பில் உள்ள காலியிடங்களில் யாரை அமர்த்துவது என்பதை இந்த மேலடுக்கு வழி நடத்துகிறது. அவரது கட்டுரையின் படி "புதிய சூழல்களுக்கேற்ப பழைய வடிவங்கள் பாதுகாக்கப்படுவது" அதாவது ஆணாதிக்கமுறைமையை முதலாளியம் தனக்கேற்ப "தகவமைத்துக் கொள்வது" என்பதன் விளைவே இந்த மேலடுக்கு என்பதாகும். ஆகவே நீடித்துவரும் இந்த அடக்குமுறை வடிவத்தை (அதாவது ஆணாதிக்கம்) நம்மால் இறுதியாக ஒழிக்க முடிந்தால் நாம் பாலினச் சமத்துவ முதலாளியச்சமுகத்தை அடைந்துவிடலாம். ஏன் பெண் தலைமைச் சமூகத்தையே கூட அடைந்துவிட முடியும் என ஒருவர் வாதிடக்கூடும்.

ஆணாதிக்கமுறைமைக்கும் முதலாளியத்திற்கும் இடையிலான உறவின் வேரை கண்டுபிடிப்பதே எனது கட்டுரையின் இலக்காகும். ஆணாதிக்க முறைமையின் ஒரு வளர்ந்த கட்டமே முதலாளியம் என்பதை கருத்தளவில் என் கட்டுரையில் எடுத்துக்காட்டியுள்ளேன். இத்தகைய சட்டகத்தினுள் நின்று பார்த்தால் தான் மார்க்சியத்தின் மதிப்பீடும், பெண்ணியம், ஆணாதிக்கமுறைமை, முதலாளியம் ஆகியவற்றோடு மார்க்சியம் கொண்டுள்ள உறவும் வியக்கத்தக்க தெளிவுடன் வெளிப்படும். மேலதிகப் பயனுள்ள அரசியல் உத்திக்கும், அதே சமயம் மேலதிகமான எதிர்பார்ப்புகளுக்கும் இது அடிப்படையாக இருக்கும் என நான் நம்புகிறேன். இந்தக் கட்டுரையின் பின் பகுதியில் லெபனான்/பாலஸ்தீன மார்க்சிய அமைப்புகளின் நிகழ்வாய்வு (CASE STUDY)களின் எடுத்துக் காட்டுகளையும் தருகிறேன். அது மார்க்சியத்துக்கும் பெண்ணியத்திற்கும் இடையிலான உறவு பற்றிய என் வாதங்களுக்கு ஆதாரம் வழங்கும்.

***பூர்வாங்க அறிக்கைகள் :***

ஆணாதிக்கத்தின் ஒரு வளர்ந்த கட்டமே முதலாளியம் என்கிற வாதத்திற்கு ஆதரவான வகையில் மனதில் பதியத்தக்க பெருமளவிலான தடயங்கள் கிடைத்துள்ளன. அதன் ஒரு பகுதி மட்டுமே இந்தக் கட்டுரைக்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. தேர்ந்தெடுத்த இந்தப் புள்ளிவிவரங்கள் குணாம்சரீதியில் ஏட்டளவினதாக (ACADAMIC) இருக்கும். இங்கே நிறுவப்பட்டுள்ள முடிவுகள் பொது அறிவு மற்றும் கவனிப்பின் (OBSERVATION) அடிப்படையில் வந்தடைந்தவையாகும்.

மேற்கண்ட வாதங்களுக்கு ஆதரவாக விவாதத்தை விரிவுபடுத்தும் போது மூன்று வெவ்வேறான ஆய்வறிக்கைகள் அறிமுகப்படுத்தப்படவும், விவாதிக்கப்படவும், வாதத்தின் பல்வேறு நிலைகளில் பயன்படுத்தப்படவும் இருக்கின்றன. ஒவ்வொரு ஆய்வறிக்கையும் ஆணின் உண்மையை வலியுறுத்துவதால் அவை அதே சமயத்தில் பெண்ணின் உண்மையை மறுப்பதாகப் பொருள் கொள்ளக்கூடாது. இந்தப் பிரச்சனை இக்கட்டுரையில் வெளிப்படையாக எழுப்பப்படவில்லை. இருப்பினும் உலகில் தனது இருப்பு (BEING IN THE WORLD) பற்றிய ஆணின் அனுபவத்திற்கும், பெண்ணின் அனுபவத்திற்கும் இடையில் ஒரு முக்கிய வேறுபாடு உள்ளதாக வாதிடப்படுகிறது. உலகின் தனது இருப்பு குறித்த பெண்ணின் அனுபவத்திலுள்ள தனித்தன்மையின் காரணமாக இந்த ஆய்வுகள் அவர்களுக்கு இதே வழியில் அல்லது இதே பரிமாணத்தில் உண்மையானதாக இருக்காது என்பதை இக்கட்டுரையில் வளர்த்தெடுக்கப் பட்டுள்ள வாதம் சாரமாக நிறுவியிருக்கிறது.

இரண்டாவதாக, இந்த வாதம் மேற்கத்தியக் கலாச்சாரத்திலிருந்து பெறப்பட்ட புள்ளிவிவரங்களை அடிப்படையாகக்கொண்டது என்பதைக் குறிப்பிட வேண்டியிருக்கிறது. இத்தகையப் புள்ளிவிவரங்களுடன் மிக பரிச்சயம் கொண்டவர்களே இக்கட்டுரையின் வாசகர்களாக இருப்பார்கள் என்ற ஊகத்தின் விளைவாகவே இப்படிக் குறிப்பிடவேண்டியிருக்கிறது. ஆனால் இங்கே முன்வைக்கப்படுவது மேற்கத்திய பெண்-ஆண் உறவு நிலை பற்றியதோர் விசாரணை அல்ல. மாறாக பெண்-ஆண் எதிரிடைகளின் இயங்கியலைப்புரிந்து கொள்வதற்கான ஒரு அமைப்பியல் அல்லது குறியீட்டுச் சட்டகம் ஆகும். இச்சட்டகம் மேற்கத்திய அச்சில் வார்க்கப்பட்டதாகும்.

மூன்றாவதாக, இந்த இயங்கியலின் தற்போதையக் கட்டத்தை எவ்வாறு கடந்துசெல்வது என்ற கேள்வி வெளிப்படையாக விடப்பட்டுள்ளது. ஆனால் இந்தக் கட்டுரையில் முன்வைக்கப்படும் இந்தச் சட்டகம் அத்தகையதொரு வாய்ப்பை அடைத்துவிடுவதாக இருக்காது. அதற்கு மாறாக அத்தகைய கடந்து செல்லுதலுக்குத் தேவையான முக்கியக் கூறுகளைக் கொண்டுள்ளதாகவே இருக்கும்.

***ஆய்வறிக்கை-I:ஆண் இறப்பற்றவாழ்வையே (IMMORTALITY) விரும்புகிறான்:***

அரிஸ்டாடில் இதை இவ்வாறு சொல்கிறார். "ஆணாக

இருக்கவும், மானுடப்பொருட்களைச் சிந்திக்கவும், அழிந்துபோகக் கூடியதும், அழிந்து போவதுமான பொருட்களைப் பற்றிச் சிந்திக்கும்படி நமக்கு அறிவுரை கூறுபவர்களை நாம் பின்பற்ற வேண்டியதில்லை. நம்மால் முடிந்த அளவு நம்மை நாமே இறப்பற்றவர்களாக ஆக்கிக் கொள்ள வேண்டும்"

"எல்லாம் அழிவற்றதாக இருக்கும் பிரபஞ்சத்தில் தானும் ஒரு உறுப்பாக இருக்கும் சாவு மானுட இருப்பின் அதிகார முத்திரையாக உருவானது" என *ஹன்னா அரெண்ட்* வாதிடுகிறார். பின்பு அவர், "ஆண்கள் அவர்களுடைய இறப்பற்றவாழ்விற்கான செயல்பாட்டுத் திறத்தினால், அழிக்கமுடியாத தடயங்களை விட்டுச் செல்லக்கூடிய அவர்களுடைய ஆற்றலால், தங்களுக்கே உரித்தானதொரு இறப்பற்ற வாழ்வை முயன்று பெறுவதுடன், தங்களை தெய்வீக இயல்புள்ளவர்கள் என்பதையும் நிரூபித்துக் கொள்கிறார்கள்" என்கிற முடிவுக்கு வருகிறார்.

அரெண்ட் இறப்பற்ற வாழ்வை, "காலத்தினூடாக நீடித்து இருப்பது, பூமியில் இறப்பற்ற வாழ்வு..." என்பதாக விளக்குகிறார். இந்த நோக்கில் பார்த்தால் ஆண்கள் இறப்பற்றவாழ்க்கையையே விரும்புகிறார்கள் என்பது தெளிவு. உளவியல்ரீதியாக சிக்கலானப் பிரச்சனைகளாக இருக்கும் இறப்பு, இறப்பு குறித்த அச்சம் ஆகியவற்றைச் சிந்தனையாளர்கள் சமீபத்தில் தான் எதிர்கொள்ளத் துவங்கியுள்ளனர், இறப்பிற்கு பிந்தைய வாழ்க்கை குறித்த உறுதிமொழியின் நோக்கம் தங்கள் இறப்பு குறித்து மக்கள் கொண்டுள்ளக் கவலைகளை மட்டுப்படுத்துவதே என்று நாம் பார்க்கமுடியும். மக்கள் மரணத்தை நெருங்கும்போது அவர்களது மதநம்பிக்கை அதிகரிப்பதை இது ஒரு குறிப்பிட்ட அளவிற்கு விளக்குகிறது. ஆயுதக்குறைப்புப் பேச்சுவார்த்தைகளின்போது (SALT II) மிகவும் நோய்வாய்ப்பட்டிருந்த சோவியத் நாட்டின் தலைவர் *பிரெஷ்னெவ்*, "நாங்கள் தோற்றுப் போனால் கடவுள் எங்களை மன்னிக்கமாட்டார்." என்று சொன்னதை நாம் கேட்டோம்.

### *ஆய்வறிக்கை-II : மறுஉற்பத்தியை இறப்பற்ற வாழ்விற்கான வழியாக ஆண் கருதுகிறான் :*

"எவனொருவன் மறுஉற்பத்தியைச் செய்கிறானோ அவனுக்கு மரணமில்லை" என்றொரு அரபுச் சொல்வழக்கு உண்டு. குழந்தைகள் எவ்வளவு முக்கியமானவர்கள் என்பதை ஆண்கள் நன்கு உணர்ந்திருந்தார்கள். வாரிசு (குழந்தை)க்கான விருப்பம் என்பது இறப்பற்ற

வாழ்வின் மீதான விருப்பத்துடன் நேரடியாகத் தொடர்புடையது என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டியிருக்கிறது. தந்தையர் தங்களின் மகன்களின் வழியாக மீண்டும் முழுமையாக வாழமுயல்கிறார்கள். *சிம்போசியம்* (SYMPOSIUM) என்ற நூலில் *சாக்ரடிஸ்* மன்தினியா (MANTINEIA)வைச் சேர்ந்த ஞானமும் பக்தியும் மிக்க *தியோதிமா* (DIOTIMA) என்ற பெண்மணி ஒருவரை அறிமுகப்படுத்துகிறார். அந்தப்பெண்ணோடு அவர் இறப்பற்ற வாழ்வுபற்றியும், காதலைப்பற்றியும் மிகவும் சுவையானதொரு உரையாடலை மேற்கொள்கிறார். அந்த உரையாடலில் தியோதிமா, "இறந்து போகக்கூடிய உயிர்ப்பிராணிக்கு தலைமுறை என்பது ஒரு வகையான நித்தியத்துவமும், இறவாவாழ்க்கையும் ஆகும்" என்று வாதிடுகிறார். சாகக்கூடிய இயல்பு என்பது தன்னால் சாத்தியப்பட்ட அளவுக்கு நீடித்துநிலைக்கவும், இறவாமல் இருக்கவுமே நாட்டம் கொள்கிறது. இது தலைமுறை ஒன்றின் மூலமாக மட்டுமே அடையக்கூடியதாகும். ஏனென்றால் தலைமுறை என்பது எப்போதும் பழையதின் இடத்தில் புதியதொரு இருப்பை விட்டுச்செல்கிறது.

அந்தப்பெண்ணின் பேச்சைக்கேட்டு சாக்ரடிஸ் வியப்படைந்தார். "ஆண்கள் அனைவரும் தங்கள் வாரிசுகளின் மீது அன்பு வைத்திருப்பதில் வியப்படைய ஏதுமில்லை. உலகுதழுவிய அந்தஅன்பும், ஆர்வமும் இறப்பற்றவாழ்வின் பொருட்டேயாகும்." என அப்பெண் தன் வாதத்தை மேலும் விரிவாக்கினார். பின்னர் தியோதிமாவின் கண்ணோட்டங்களைப் பற்றிய தனது மதிப்பீடுகளாக சாக்ரடிஸ் பின் வரும் கருத்தை சொல்கிறார். தான் மேற்சொன்ன உண்மையை நம்பி ஏற்பதாகவும் "அந்த உண்மையை நான் நம்பி ஏற்றுக் கொள்வதால் மற்றவர்களையும் நம்பி ஏற்றுக் கொள்ளும்படி செய்வேன்", என்றும் சொன்னார்.

தனது குடும்பத்தின் பெயரை எடுத்துச்செல்ல ஒரு மகனை பெற்றெடுக்கவேண்டும் என ஒருவர் விரும்புவது தனது முன்னோர்களுக்கு அழியாப்புகழ் சேர்க்கும் ஆணாதிக்க வழிமுறையாகும். தனது ஆண் வாரிசுகளின் மூலமாக தலைமுறை தலைமுறையாக தாத்தாவின் பெயர் அழியாமல் நிலவும். நமது ஆணாதிக்கசமூகத்தில் ஒரு பெண் தன் சொந்த ஆண் (அல்லது பெண்ணாகவே இருந்தாலுங்கூட) மூதாதையருக்கு இறப்பற்றவாழ்வு தருவதற்கு வாய்ப்பில்லை. பெரும்பாலும் பெண் தன் கணவனின் மூதாதையருக்கு இறப்பற்றவாழ்வைத் தரும் பணியில் தானும் பங்கெடுத்துக் கொள்ளும் வாய்ப்பை மட்டுமே பெறுகிறார். உதாரணமாக எனது குடும்பம் தன் வேர்களைத்தேடி பல நூற்றாண்டுக்கு முன்புவரை பயணம் செய்ய முடியும். ஆனால் வேர்களில் காணும் எல்லாப் பெயர்களும்

ஆண்களுடையதாகவே இருக்கும். நான் எனது தாய்வழிமரபை இரண்டு தலைமுறைகளுக்கு மேல் தேடிச்செல்ல முடியவில்லை என்பதை அறிந்தபோது அது எனக்கு அதிர்ச்சி தரும் அனுபவமாகவே இருந்தது. அழியாப்புகழ் என்ற ஆசைவெறிக்கு (OBSESSED) ஆண்களைவிட பெண்கள் குறைவாகவே ஆட்பட்டிருக்கிறார்கள்.

### *ஆய்வறிக்கை III : இறப்பற்றவாழ்வை அடைய உற்பத்தியை ஒரு வழியாக ஆண் கருதுகிறார் :*

உற்பத்தி என்பது கவிதையில் இருப்பது போன்ற வார்த்தைகளாகக் கூட இருக்கமுடியும். அல்லது சமூகத்தில் இருப்பது போன்ற செயல்பாடுகளாக இருக்கலாம் அல்லது தொழில் நுட்பத்தில் இருப்பது போன்ற கருவிகளாகக்கூட இருக்கலாம். ஒருவரின் தனிப்பட்டத் திறமையை (அல்லது சாரத்தை) வெளிப்படுத்தக்கூடியதாகவும், அத்திறமையை வெளிஉலகில் புறவயப்படுத்தக் கூடியதாகவும் அதன்வழி உற்பத்தியாளனுக்கு நிரந்தரத்தன்மையைத் தருவதாகவும் இருப்பதே உற்பத்திக்கு வேண்டிய முக்கியத்தேவையாகும். இந்த வகையான இறப்பற்ற வாழ்வு மறுஉற்பத்தியின் மூலம் பெறப்படும் இறப்பற்றவாழ்வை விட உயர்வானதாகக் கருதப்படுகிறது. (ஏனென்றால் இம்மாதிரியான உற்பத்தி அவரது வாரிசுகளைக் காட்டிலும் நீடித்து இருக்கக் கூடியது. உற்பத்தியானது அதனுடன் பங்குபெறும் பிறரது விருப்பத்தை அல்லது திறத்தைச் சார்ந்து இருப்பதில்லை. வாரிசுகளை உருவாக்க வேண்டும் என்ற விருப்பத்தையும் அல்லது திறத்தையும் அது சார்ந்து இருப்பதில்லை. அதனால் அதற்கு தான் என்ற ஒருவர் தேவைப்படுவதில்லை). இதை தியோதிமாவும் கூட ஒப்புக் கொள்கிறார். சாக்ரடிஸ் கூறுவதன்படி தியோதிமா, ஹோமரையும், ஹிசியோடையும் இன்னும் பிற மாபெரும் கவிஞர்களையும் எண்ணிப் பார்க்கும் ஒருவர் அந்த மாமனிதர்களை விட தமதுகுழந்தைகள் சாதாரணமனிதர்கள்தான் என்று நினைத்துக் கொள்வதில்லையா? என்று வியப்படைகிறார்.

'மரணமடைபவர்களின் கடமையும், உள்ஆற்றலும் பொருட்களை- பணிகள், செயல்பாடுகள், வார்த்தைகள் - உற்பத்தி செய்யும் அவர்களின் திறமையில் அடங்கி இருக்கிறது. குறைந்த பட்சம் வீட்டிலாவது அப்பொருட்கள் அழியாத நிலையில் இருந்து வரும். தங்களைத்தவிர ஏனைய அனைத்தும் அழியாமல் இருந்து வரும் இந்தப்பிரபஞ்சத்தில் இதன்மூலம் ஒரு இடத்தைப் பெற்றுக் கொள்ளமுடிகிறது.' என்று அரெண்ட் கூறுகிறார்.

இங்கே நாம் ஆணாதிக்கமுறைமைக்கும், முதலாளியத்திற்கும் உள்ள உறவுபற்றி அக்கறைக் கொண்டுள்ளதால் இந்தக்கட்டத்தில் பொருளாதார உற்பத்தியில் கவனம் கொள்வோம். உழைப்பு பற்றி ஆய்வு செய்வதில் *மார்க்ஸ்* கீழ்கண்ட விவரணையை முன் வைக்கிறார்.

என்னுடைய உற்பத்தியில் என்னுடையத் தனித்தன்மையை, அதன் சிறப்புக்குணத்தை நான் புறவயப்படுத்துகிறேன். அதனால் அந்தச் செயல்பாட்டின் போது எனது வாழ்வின் தனிப்பட்டதொரு வெளிப்பாட்டை அனுபவிக்கிறேன். அத்துடன் அந்தப் பொருளைப் பார்க்கும் போது அதில் எனது ஆளுமை புலன்களுக்குத் தெரியும்படி புறவயமாக்கப்பட்டிருப்பதை அறிவதில் தனிப்பட்டதொரு மகிழ்ச்சியையும், அதனால் அனைத்து அய்யங்களுக்கும் அப்பாற்பட்டதொரு சக்தியையும் பெறுகிறேன்".

'பொருளாதார, தத்துவார்த்தக் குறிப்புகள்' என்ற நூலில் மார்க்ஸ் கீழ்கண்டவாறு கூறுகிறார்:

ஆகவே உழைப்பின் நோக்கம் மனிதனின் உயிரினவாழ்வின், புறப்பொருளாக்கம் ஆகும்: அவன் உணர்வுநிலையில் இருப்பதை அறிவார்ந்த விதத்திலும், அத்துடன் செயல்ரீதியாக எதார்த்தத்திலும் தன்னைத்தானே போலி செய்துகொள்கிறான். அதனால் அவனால் படைக்கப்பட்ட உலகில் அவனை அவனே பார்த்துக் கொள்கிறான்.

இந்தக்காரணங்களால் அந்நியப்படுத்தப்பட்ட உழைப்பை *மார்க்ஸ்* மிகவும் காத்திரமானதாகப் பார்க்கிறார். அது, "செயல்பாடு என்பதே துயரமாக, வலிமை என்பதே பலவீனமாக, பெற்றுக் கொள்ளுதல் என்பதே ஆண்மை நீக்கும் செயல்" என்பதாக இருக்கிறது.

இந்த மேற்கோளில் திரும்பத்திரும்ப வரும் சொல்லாட்சியானது உற்பத்தியைக் காட்டிலும் மறுஉற்பத்திக்கு மிகப்பொருத்தமான விவரணையாக இருப்பது நம்மை வியப்பில் ஆழ்த்தும் ஒரு விசயமாக இருக்கிறது. உற்பத்திப்பொருள் உணர்வுநிலையில் மட்டுமல்ல எதார்த்த உலகிலும் புறவயமாகப் பார்க்கப்படுகிறது. தனிநபரின் சிறப்புப் பண்பாக (SPECEFIC) பார்க்கப்படுகிறது. அது மறுபதிப்பாகவும், படைப்பாகவும், அதன் அந்நியமாதல் ஆண்மைநீக்கம் செய்யக்கூடியதாகவும் இருக்கிறது. தியோதிமா இவ்விசயத்தில் ஒளிவுமறைவின்றி இருக்கிறார். அவரைப் பொறுத்தஅளவில் உற்பத்திப்பொருள் என்பது ஒரு குழந்தைதான். அது ஒன்றும் அழியாத ஒன்று அல்ல.

*ஆணாதிக்கமுறைமை, (ஆண்) தொழில்நுட்பம் ஆகியவற்றின் தோற்றம், வளர்ச்சி குறித்த பெண்ணியக் கோட்பாடு :*

தொடக்ககால மனிதனைக் கொஞ்சம் பார்ப்போம். அம்மனிதன் பல விசயங்களோடு போராட வேண்டியிருந்தது என்று வெளிப் படையாகவே தெரிகிறது. ஆனால் அவனுக்கு பெண் என்பவள் மிகவும் ஆர்வம் தரும் அனுபவமாக இருந்திருக்கவேண்டும். ஏனெனில் பெண் என்பவள் அவனைப் பெரும்பாலும் ஒத்திருந்த உயிரியாக இருந்தாள். ஆனால் வேறுபட்டும் இருந்தாள். இந்த உண்மையானது ஒற்றுமை வேறுபாடு என்ற இரண்டு கூறுகளை அவர்களது உறவு முறையில் ஒரேசமயத்தில் ஏற்படுத்தியது. ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையிலான ஒற்றுமை என்னும் கூறு மானுடவாழ்வில் இந்த உறவு நிலைக்கு ஒரு மையத்தை வழங்குகிறது. வேறுபாடு அந்த மைய உறவு நிலையைச் சிக்கலாக்குகிறது.

*பெண் மற்றவரெனக் (other) கருதப்படுவதற்கான அடித்தளங்கள் :*

ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையிலான வெளிப்படையான வித்தியாசம் பாலுறுப்புகளும் அது தொடர்பான குறிப்பிட்ட வித்தியாசங்களும் ஆகும். பெண் திடீரென அதிக அளவில் இரத்தம் சிந்துவதும் ஆனால் சாகாமல் இருப்பதும் ஒரு குறிப்பிட்ட வித்தியாசமாகும். அதிக அளவில் ரத்தம் சிந்திய ஆண்களில் ஒரு சிலரே பிழைத்திருக்கிறார்கள். ஆனால் பெண்களுக்கு அவ்வாறு நேரவில்லை. (இது பெண்களை மந்திரத்தோடு தொடர்புபடுத்தக் காரணமாயிருக்கலாம்) பெண்களின் இரத்தப் பெருக்கானது அது தோன்றியது போலவே திடீரென நின்று விடுகிறது. இது மற்றுமொரு வித்தியாசமாகும். பெண்ணின் உடல்வடிவம் மாறும் போதெல்லாம் அது ஒரு சிறிய மனிதஉயிரியை உற்பத்திசெய்கிறது. அடுத்து அந்த மனித உயிரி பெண்ணுடலிலிருந்தே ஊட்டம் பெற்று வளர்ந்து மற்றுமொரு முழுவாழ்க்கையை ஆரம்பிக்கிறது. அதேசமயம் ஆண் உடலில் இம்மாதிரியான மாற்றங்கள் எதுவும் ஏற்படுவதில்லை. அது மாறுவதில்லை. அது மறுஉற்பத்தி செய்வதில்லை. பெண்கள் குழந்தையைப் பெற்றெடுத்து உலகிற்குத் தந்த பின்னரும் கூட அக்குழந்தைக்கு ஊட்டம் தர ஆணுடலில் ஏதுமில்லை. வாழ்க்கை மாறுதல்களின் போக்கில் ஆணுடல் மலடாகவும், சலிப்பூட்டுவதாகவும் இருந்திருக்கக்கூடும். ஆணுடலோடு ஒப்பிடும் போது பெண்ணுடல் உட்செறிவும், வளமும் கொண்டிருப்பது பற்றி ஒரு *அபிசீனியப்* பெண்ணின் கருத்தை மானுடவியல் அறிஞர் *லியோபுரோபினியஸ்* அவர்கள் மேற்கோள் காட்டுகிறார். "அவனுடைய

உடல் எப்போதும் மாறாதது. அவன் எதையும் அறியமாட்டான்."

ஆணிற்கும், பெண்ணிற்கும் இடையிலான இத்தகைய வித்தியாசங்கள் தான் பெண் என்ற மற்றவர் (OTHER) என்ற கருத்து ஆணிடம் வளர்வதற்கான அடிப்படை ஆதாரங்களை வழங்குகிறது. இருப்பினும் இந்த பெண்பால்மற்றவர் என்பது செறிவுதளர்ந்த மற்றவர் அல்ல. அதாவது தான் என்பதிலிருந்து வித்தியாசமான ஏதோ ஒன்று அல்ல. மாறாக, இது (மற்றவர்) மிகமையப்படுத்தப்பட்ட, சிறப்புத் தன்மை கொண்ட தனிமற்றவர் ஆகும். அடிப்படையில் ஒத்த தன்மைகொண்ட மற்றுமொரு உணர்வு நிலை என்ற உண்மைப் பண்பு கொண்டதாகும். இவ்வாறாக, அது இட்டு நிரப்பும் மற்றவராக இருக்கிறது. இதன் காரணமாக மற்றவர் என்ற ஆணின் அக்கறையில் மையமான இடத்தைப் பிடித்துக் கொள்கிறது.

தொடக்க காலங்களில் உயிரியல் இயக்கங்கள் பற்றிய மானுட அறிவு முதிர்ச்சியற்றதாக இருந்தது. அது மறுஉருவாக்கத்தில் ஆணின் பங்கு பற்றி அறிந்திருக்கவில்லை. புணர்ச்சியும், குழந்தைப் பேறும் (அல்லது கருவுறும் போது உடலில் ஏற்படும் மாற்றங்கள்) குறிப்பிட்ட கால எல்லையால் பிரிக்கப்பட்டிருப்பதால் அந்த பாதிப்பைப் பற்றிய கருத்து வளர்ச்சி உடனடியானதாகவோ எளிதானதாகவோ இருந்திருக்க முடியாது. *புரோனிஸ்லா மாலினாவஸ்கி* (BRONISLAW MALINOVSKY) '*காட்டுமிராண்டிகளின் பாலியல் வாழ்க்கை*' என்ற தனது நூலில் மேற்சொன்ன கருத்தை ஆதரித்துள்ளார். கருவுறுதல் குறித்த *துரோபிரியாண்டர்களின்* (TROBRIANDERS) நம்பிக்கைகள் பற்றிக் கருத்துரைக்கும்போது அவர் பின்வருமாறு கூறுகிறார்.

"பண்டைக்காலத்தியப் பெண் கணவன் அல்லது ஆண் துணையின்றி குழந்தை பெற்றுக்கொண்டதாகக் கற்பனை செய்து கொண்டாள். ஏதேனும் சில வழிகளில் யோனி திறக்கப்பட்டதால் தான் குழந்தை பிறந்ததென கற்பனைச் செய்திருந்தாள். சில பழையமரபுகளில் இது வெளிப்படையாகவேக் குறிப்பிடப்படுகிறது. *வகுதா* (VAKUTA) தீவில் பின்வரும் புராண நம்பிக்கைஇருந்து வந்தது. தன்குலத்தைச் சேர்ந்த முன்னோர்களில் ஒரு பெண் மழைபெய்யும் போது தன் உடலைத் திறந்து காட்டியதால் தனது கன்னித்தன்மையை இழந்தாள்."

துரோபிரியாண்டர் தீவைச் சேர்ந்த ஆதிவாசி ஆண் ஒருவருடனான உரையாடல் மாலினாவ்ஸ்கியால் நினைவு கூரப்படுகிறது.

"கருவுறுதலுக்கான காரணம் என்ன?" அவன் பதிலளித்தான். "தலையில்

இருக்கும் இரத்தம், குழந்தையை உண்டாக்குகிறது. விந்து நீர்மம் குழந்தையை உண்டாக்குவதில்லை. ஆவிகள் இரவு நேரத்தில் குழந்தையைக் கொண்டு வந்து பெண்களின் தலையினுள் வைக்கிறது. அது இரத்தப் பெருக்கை உண்டாக்குகிறது. அதன்பின் இரண்டு மூன்று மாதங்களில் இரத்தப்பெருக்கு (அதாவது மாதவிடாய் இரத்தம்) நின்றவுடன் அவர்கள் தெரிந்து கொள்கிறார்கள் "ஓ, நான் கருவுற்றிருக்கிறேன்."

இவ்வாறாக வரலாற்றின் தொடக்கக்கட்டத்தில் பெண் என்ற மற்றவரை தன்னகங்காரத்தின் (EGO) அச்சுறுத்தலாக ஆண் உணர்ந்ததற்கு வெளிப்படையான காரணம் இருக்கிறது. ஆணுடன் வித்தியாசமாக முரண்படும் வகையில் பெண் மாபெரும் நிரந்தரத்தன்மையை வெளிக்காட்டினார்.பெண் இரத்தம் சிந்தும் நடைமுறையிலிருந்து விடுபட்டது மட்டுமல்ல. மிகமுக்கியமாக மறுஉற்பத்தியும் செய்து வந்தார். இவ்வாறாக இறப்பற்றவாழ்விற்கான திறவுகோல் பெண்ணிடம் இருந்தது. ஆனால் ஆணிடம் அது இல்லை. அதனால் தன்னை விரைவில் அழியக் கூடியவனாக உணரக் காரணமிருந்தது. உயிரோட்டமான வாழ்க்கைச் சுழற்சியிலிருந்து தான் வெளித்தள்ளப்பட்டதாகவும், துண்டிக்கப் பட்டதாகவும் அவனுக்குத் தோன்றியது. குழந்தைப்பருவத்தின் தொடக்கத்தில் ஆண் எப்போதும் பெண்ணைச்சார்ந்தே இருக்கவேண்டிய ஓர் எதார்த்தம் உலகில் தன்இருப்பு குறித்த ஆணின் எதிர்மறை அனுபவத்தை மேலும் உறுதிப்படுத்துவதாக இருந்தது.

இம்மாதிரியான சூழலில் ஆணிடம் பெருமளவுக்கு அந்நியமாதலும் விரக்தியும் உருவானதை புரிந்து கொள்ளமுடிகிறது. பெண் மீதான குறைபாடு, பொறாமை, பகைமை ஆகிய உணர்வுகளை இவை உச்சநிலைக்குக் கொண்டு சென்றன. இந்தச்சூழலில் தான் *பிளேட்டோ, அரிஸ்டாடில்* போன்றவர்களால் எழுதப்பட்ட இந்தவகையான தத்துவார்த்தக் கேள்விகளின் ஆரம்ப வேர்களை நன்குகண்டுகொள்ள முடிகிறது. உலகில் தனது இருப்பின் மீது அதிருப்தி கொண்ட ஆண் எதிர்கொள்ளும் கேள்விகள் கீழ்வரும் விதத்தில் இருக்கும்: எனது முக்கியத்துவம் என்ன? என்னால் என்னபயன்? வாழ்வில் எனதுபங்கு என்ன? எனது தலை விதிதான் என்ன? நான் எந்தவிதமான உயிர்வகையைச் சேர்ந்தவன். இதே கேள்விகள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப்பின் பெண்களால் மீண்டும் எழுப்பபட்டது. ஆணின் ஒடுக்குமுறைக் கலாச்சாரத்தின் கீழ்பெண்கள் வந்த பிறகும், இவ்வொடுக்குமுறை தீவிரமான பின்பும் இக்கேள்விகள் எழுப்பபட்டன.

***ஆணின் மானுட நிலைமைக்கு அவனுடைய பதில்: ஆணாதிக்கம் மற்றும் (ஆண்) தொழில்நுட்பத்தின் தோற்றம் :***

விருப்பமான தேர்வுகள் மூலம் தன் சாரத்தை வரையறுத்துக் கொள்ளும் ஒரு சுதந்திரமான மனித உயிர் என்றமுறையில் ஆண் தொடக்க காலத்திலிருந்தே இந்தச்சவாலை எதிர்கொள்ள விருப்பப்பட்டான். குறைந்த பட்சம் இரண்டு வழிமுறைகளே அவனுக்கு இருந்தன. முதலாவது அவளது பரிசுப்பொருளையும், வாரிசையும் தனதாக்கிக் கொள்வது. இந்தச் செயல் அவனை வாழ்க்கைவட்டத்திற்குள் ஒன்றிணைக்கிறது. ஆனால் மறைமுகமான வழியில் இதைச்செய்கிறது. கருத்தரித்தலில் ஆணின் பங்குகுறித்த பிற்காலத்தியகண்டுபிடிப்புகள் இத்தகைய இறப்பற்ற வாழ்விற்கான வழிமுறைகளை மேலும் உறுதிப்படுத்தி இருக்கலாம். பெண்ணின் மீது அவளது சகோதரனும், தந்தையும் கொண்டிருந்த ஆதிக்கம் அவளது கணவன் கைகளுக்கு மாற்றப்பட்டிருக்கலாம். வாரிசு உருவாவது குறித்து முதன்முறையாக உயிரியல் அல்லது புறவய நியாயம் வழங்கப்பட்டிருக்க வேண்டும். இதன்பின்னரே ஆண் முதன்முறையாக தனக்குச் சொந்தமானதைத்தான் தான் உரிமையாக்கிக் கொண்டிருப்பதாகக் கருதியிருக்க முடியும். தனது இறப்பற்றவாழ்வு முன்னொப்போதைவிடவும் இப்போது நேரடியானதானத் தெரிந்திருக்கலாம். மேலும் மறுஉற்பத்தியில் பெண்ணின் வெளிப்படையான, கணிசமானப் பங்களிப்பைக் குறைப்பதில் ஆண் அடைந்துள்ள வெகுவான முன்னேற்றத்திற்கான காரணங்களை இது ஓரளவு விளக்குகிறது. பெரும்பாலும் பெண்ணை அவன் ஒரு கொள்கலம், அடைகாக்கும் கருவி என்றே விவரித்து வருகிறான். அதே சமயம் அவனது விந்து வாழ்க்கைக்கான உயிரை வழங்குவதாகக் கூறிவந்தான். இந்த ஆய்வு சரியாக இருக்குமெனில் பெண்ணிடமிருந்த மறுஉற்பத்தியை ஆண் தனதாக்கிக்கொண்டதற்குத் தனிச்சொத்தோ அல்லது இயற்கை விதியோ காரணமாக இல்லை. மாறாக இவ்வுலகில் தனக்கு மறுக்கப்பட்ட இறப்பற்ற வாழ்வை அடைவதற்கான வெட்கமற்ற ஆசையும், போராட்டமுமே இதற்குக் காரணமாகும்.

ஆணுக்குக் கிடைத்த இரண்டாவது வழிமுறை தன்னை பயனுள்ளவனாக ஆக்கிக்கொள்வது. (பின்னர் தன்னை இன்றியமையாதவனாக ஆக்கிக் கொள்வது.) இந்த அணுகுமுறை முதலாவதைப் போலில்லாமல் ஆதிக்கத்தை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லாமல் இருந்தது. ஆனால் அத்துடன் எளிதாக ஒன்றிணையக் கூடியதாகவும் இருக்கமுடிந்தது. வரலாற்றுரீதியாக இந்த அணுகுமுறையை

ஆண் மிகமுனைப்பாக நடைமுறைப்படுத்தியதைத் தொழில் நுட்பத் தளத்தின் (AREA) மூலம் கண்டுகொள்ளலாம். இந்தக் களம் ஆணின் கற்பனை ஆற்றலைக் குறிப்பாக கைப்பற்றிக் கொண்டது. ஆண் உருவாக்கிய கருவிகள் வாழ்க்கையில் குறிப்பிட்ட வளர்ச்சிப்போக்குகளை எளிமைப் படுத்தவும், பாதுகாக்கவும், பயனுள்ளவையாய் இருந்தன. இவ்வகையில் அவை அதிருப்தியை ஈடு செய்யும் இலட்சியங்களாக இருந்தன. அத்தோடு முதன் முறையாக ஆணுக்கு அது ஓர் அதிகாரஉணர்வைக் கொடுத்தது. ஃபிராய்டும் ஏனையோரும் விரைவில் கண்டறிய இருந்தது போல், "ஒவ்வொரு கருவியின் மூலமும் மனிதன் தன் சொந்த உடலுறுப்புகளை நிறைவுடையதாக்கிக் கொண்டான்." இது முதற்கொண்டு ஆண் ஆதரவற்றவனாக இல்லை. அவன் தன்னுடைய மானுடச்சூழ்நிலையோடு கட்டுண்டவனாகவும் இல்லை. தொழில்நுட்பத்தின் மூலமாக, தான் சொந்தமாக உருவாக்கியச் செயற்கையான வழிமுறைகளைப் பயன்படுத்தி தன்நிலைமையை முன்னேற்றிக் கொள்ளமுடியும் என்பதைக் கண்டு கொண்டான். இந்த தொழில்நுட்ப பெருமுயற்சி ஆணிடம் இருந்த அதிருப்தி அல்லது பகைமை உணர்ச்சிகளுக்குக் குறிப்பிடத்தக்கஅளவுப் பொருத்த மானதாக இருந்தது. பெண்ணிடம் அவன் உணர்ந்த தாழ்வுணர்ச்சியிலிருந்து விடுதலை பெறுவதற்கானச் சாத்தியத்தை இது வழங்கியது. அதுபோல (முதல் அணுகு முறையில் கண்டது போன்ற) பெண்ணின் மீதான ஆதிக்கத்திற்குச் செயல்திறன்மிக்க அடித்தளத்தையும் இது வழங்கியது. வாரிசுவேண்டும் என்கிற அதாவது இறப்பற்றவாழ்வு வேண்டும் என்கிற தன் உந்துதலை இறுதியாக தூலமான வடிவத்தில் உற்பத்தியில் அவன் வெளிப்படுத்தினான். இது முக்கியமானது. தியோதிமாவும், மார்க்சும், ஏனையோரும் சொல்லியதைப் போல் உற்பத்திப்பொருள் குழந்தையாக மாறிவிட்டது. உற்பத்தி என்பது மறுஉற்பத்தியின் போலிச்செயல்பாடு ஆனது. உற்பத்திக்காக மறுஉற்பத்தியின் முக்கியத்துவத்தைக் குறைத்த இந்தச் செயலானது தன் சொந்த முக்கியத்துவத்தை வலியுறுத்திய ஆணின் வழிமுறையாகவும் வாழ்க்கை வட்டத்திற்குள் தன்னைத்தானே ஆழமாக ஈடுபடுத்திக் கொண்டதாகவும் விளக்கப்பட்டது.

இவ்வாறாக ஆண்தொழில்நுட்பமும், ஆணாதிக்கமுறைமையும் பெண்ணிற்கு எதிராக ஆண்கொண்டிருந்த அதிருப்தி உணர்வையும், அழிந்து போவோம் என்ற உணர்வையும் அடிப்படையாகக் கொண்டது என ஒருவர் முடிவுக்கு வரலாம் தன் சொந்தத்தவறுக்காக அல்லாமல் வேறு காரணங்களுக்காக தான் வாழ்க்கை வட்டத்திலிருந்து துண்டிக்கப்பட்டதாக அவன் உணர்ந்ததால் அந்த மானுடச்சூழலைக் கடந்து செல்லவிரும்பிய

ஆர்வத்தால் தன்னைத் தானே வாழ்க்கை வட்டத்திற்குள் ஈடுபத்திக் கொண்டதும் இதற்கு அடிப்படை என ஒருவர் முடிவுக்கு வரலாம்.

***இயற்கையை மற்றவர் என்று கருதுவதற்கான அடிப்படைகள் :***

வாழ்க்கை வட்டத்திலிருந்து துண்டிக்கப்பட்டவராக தன்னை ஆண் கருதிக்கொண்டதற்கு இன்னொரு பரிமாணம் உண்டு. பெண் ஏதேனுமொரு விதத்தில் இயற்கையுடனும், பிரபஞ்சத்தின் லயங்களுடனும் (Rhythms) ஒன்றென இணைந்திருப்பதை ஆண் அடிக்கடி பார்த்தறிந்தான். பெண்ணுடலின் லயம் அதற்கு ஒத்திசைந்து இருந்தது. மேலும் இயற்கை பெண்ணைப்போலவே மறுஉற்பத்தி செய்து அதன் 'குழந்தைகளை' ஊட்டி வளர்க்கிறது. இவ்வாறாக இயற்கை 'இயற்கைத்தாயாக' மாறியது. பெண்ணுக்கும், இயற்கைக்கும் இடையிலான உறவு மிகைப்படுத்தப் பட்டதாக, மாயமந்திரமாக மனிதக்கண்ணுக்குத் தெரிந்தது. இயற்கையோடு பெண் கொண்டிருந்த அடிப்படை ஒருமைப்பாடு பற்றிய நம்பிக்கையை ஆண்கள் பெண்கள் ஆகிய இரு தரப்பாரும் பெற்றுக் கொண்டனர். (வித்தியாசமான பரிமாணங்களிலும், வித்தியாசமான விதிமுறைகளிலும் இதை ஏற்றுக்கொண்டனர்.) தொழில்நுட்பத்தின் தொடக்கக்கட்டத்தின் போது, 'மாயமந்திர உலகப்பார்வையோடு மக்கள் வாழ்ந்திருந்தபோது அந்த மாயமந்திர உலகப் பார்வையின் பலனாக விவசாயம் கண்டுபிடிக்கப்பட்டது. பெரும்பாலும் அது பெண்களின் கண்டுபிடிப்பாகும். மண், விதை ஆகியவற்றின் இனப்பெருக்க வளத்தில் பெண்கள் தங்கள் சொந்தப் பாலியல்படிமத்தை உணர்ந்தார்கள். இந்தத் தொடக்ககால கவித்துவக் கண்ணோட்டத்திலிருந்து பயிரிடுதலின் நுட்பங்கள் வகைவகையான பாலியல், ஆன்மவியல் குறியீடுகளாக அரும்பின. புதிய விவசாயப் பண்பாடுகள் நிலத்தைத் தாயின் கருப்பையாகவும், விதையையும் மழையையும் விந்தாகவும், விளைச்சலை வாரிசாகவும் பார்த்தன"

ஒருவேளை இயற்கையைப் பெண்ணாகப் பார்த்த இந்தப் பார்வைதான் இறுதியாக ஆண் தன்ஆதிக்கத்தை இயற்கையின் மீதும் நீட்டிக்கிற முயற்சிக்கு இட்டுச் சென்றிருக்கலாம். பெண்ணை மற்றவராகக் கருதிய அதே வகைப்பாடு விரிவாகி இயற்கையையும் சுற்றி வளைத்திருக்கலாம். இறப்பற்றவாழ்வு, மறுஉற்பத்தி, தாய்மை ஆகிய வளமானப் பண்புகளை இயற்கை பெற்றிருப்பதும் இதற்குக் காரணமாக இருக்கலாம். ஆண் இயற்கையையும் சார்ந்து இருந்தான். இயற்கையோடு ஒப்பிடும்போது அவனிடம் இருந்த அதிருப்தி உணர்வு மேலும் இறுக்கமானது. இவ்வாறாக தொடக்கத்தில் பெண்ணைப்போலவே இயற்கையும் அச்சந்தருவதாக,

மதிப்பிற்குரிய ஒன்றாகக் கருதப்பட்டு வந்தது. பின்னர் பெண்ணைப் போலவே இயற்கையும் ஆண்தொழில்நுட்பத்தின் மூலமாக அவனின் ஆதிக்கத்திற்கும், பகைமைக்கும் இலக்கானது. தொடக்கத்தில் ஆக்கபூர்வமான நன்மைக்காக உருவாக்கப்பட்ட கருவிகள் பின்னர் பெண்ணின் மீதும், இயற்கையின் மீதும் ஆதிக்கம் செலுத்துவதற்கும், அதனை அழிப்பதற்குமான முகவர்களாக மாற்றப் பெற்றன. ஆதிக்கத்தின் மூலமும், உற்பத்தியின்மூலமும் ஆண் அதிகாரத்தையும், இறப்பற்ற வாழ்வையும் ருசிகண்டுகொண்டான். அவன் பெண்ணையும், இயற்கையையும் வழிபாட்டிற்குரியதாக மாற்றிக் கொண்டான். உற்பத்தியின் வழியாக ஆதிக்கத்தைச் செலுத்தியதன் மூலம் (பெண்ணின் மீது) தான் கொண்டிருந்த பழியைத் தீர்த்துக் கொண்டதாகத் தெரிகிறது.

### பெண்ணின் எதிர்வினையும் அதிகாரத்திலிருந்து அவர் படிப்படியாக விலக்கப்படுதலும் :

நிகழ்ச்சிகளில் ஏற்பட்ட தொழில்நுட்பத்திருப்பங்களுக்கு (TECNOLOGICAL TWIST) பெண் ஈடு தர முடியாமைக்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன என்று அறிவு பூர்வமாக நம்பப்பட்டது. முதலாவதாக உலகம் பற்றிய பெண்ணின் அனுபவம் ஆணின் அனுபவத்திலிருந்து முக்கிய அம்சங்களில் வேறுபட்டிருந்தது. அவள் வாழ்க்கைவட்டத்திலும், இயற்கையின் கருப்பையிலும் ஆழமாக வேரூன்றியிருந்தாள். இதனால் அவள் விரக்தியடையவோ வாழ்க்கைவட்டத்திலிருந்து துண்டிக்கப் பட்டதாகவோ உணர்வதற்குக் காரணம் ஏதுமில்லை. இறப்பற்றவாழ்வின் மீதான அவளது ஏக்கம்-அப்படியொன்று இருக்குமானால்-இத்தகைய உணர்வுகளால் பெரிதுபடுத்தப்படவில்லை. ஆகவே அவள் உலகத்தோடு மிக இயல்பான பாணியில் உறவு கொண்டிருந்ததற்கு நல்லகாரணம் இருந்தது. அவள் உற்பத்தியில் ஈடுப்பட்டிருந்தபோதிலும் அதில் கட்டாயத்திற்கான எந்தக் காரணமுமில்லை. (பின்னர் அவள் ஆணாதிக்க முறைமையினால் தன் சமூகநிலையைத் தக்கவைத்துக் கொள்வதற்காக மறு உற்பத்தியில் ஈடுபடும்படி கட்டாயப்படுத்தப்பட்டாள். 'தாய்மை உணர்வின்' வெளிப்பாடு என அதற்கு விளக்கம் தரப்பட்டது. இதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்) அவள் உற்பத்திச் செயலின்மீது பகைமை, விரக்தி போன்ற கறைகள் படிந்திருக்க வேண்டிய அவசியமில்லாமல் இருந்தது. மாறாக, அது முதன்மையாக வாழ்க்கைத் தரத்தை (உதாரணம்: விவசாயம்) முன்னேற்றும் திசைவழியை நோக்கியதாக இருந்தது. அவளது ஆதிக்கச்சக்தியை மேம்படுத்தும் நோக்கம் அதிலில்லை. பின்னர் ஆணின் கவனம் ஆதிக்கத்தை

நோக்கி மையப்பட்ட போது ஆணதிகார-அடித்தளம் ஒன்று படிப்படியாக வடிவம்பெற்றது. இதற்கு இணையான பெண்ணின் செயலூக்கமான எதிர்ப்பு ஏதும் இடம் பெறவில்லை. இரண்டாவதாக தொழில்நுட்பத்தின் மூலம் தான்பெற்ற அதிகாரத்தின் நீட்சியைப் புரிந்துகொண்ட ஆண் திட்டமிட்ட காரணத்தோடு தன் தொழில்நுட்பத்தில் பெண்ணிற்கான வாய்ப்பை மறுத்தான். இவ்வாறு தொழில்நுட்பத்தில் பெண் பங்கு பெறும் வாய்ப்பை ஆணாதிக்கமுறைமை மறுத்ததன் மூலம் ஆணின் முயற்சிகளுக்கு ஊழியம் புரிந்தது. அதே சமயத்தில் ஆணாதிக்க முறைமையை உறுதிப்படுத்த அந்தத் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டது. மேலும் தொழில்நுட்பம் ஆணின் மெய்யான தத்துவக் கேள்விகளுக்கு ஒரு பதிலை வழங்கியது என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். வாழ்க்கையில் தன்பங்கை (அல்லது செயல்பாட்டை) முன்னிலைப்படுத்திய ஒரு செயலை அவன் கண்டுபிடித்துவிட்டான். பெண்கள் மறுஉற்பத்தியில் ஈடுபட்டிருக்க ஆண்கள் உற்பத்தியில் ஈடுபட்டிருந்தார்கள். (உற்பத்திதான் முக்கியமென ஆண் சொல்லிக்கொண்டான்.) இந்தச் சமநிலையான வேலைப் பிரிவினையின் கீழ் ஆண் வாழ முடிந்தது. ஆண்கள் உற்பத்தியில் மட்டுமே ஈடுபட்டிருக்கும்போது பெண்கள் உற்பத்தி, மறுஉற்பத்தி ஆகிய இரண்டிலும் ஈடுபடுவது என்பது அவனால் ஒத்துக்கொள்ள முடியாத ஒன்று. அதனால் ஆணின் பலவீனமான தன்னகங்காரத்தைப் (EGO) பாதுகாக்கப் பெண்களை உற்பத்தியிலிருந்து விலக்கி வைப்பது விரும்பத்தக்கதாக இருந்தது. (வீட்டு வேலைக்கு விதிவிலக்குத் தரப்பட்டது.)

*மதத்தின் பங்கு :*

உற்பத்தியின் மூலம் இறப்பற்றவாழ்வை அடைய ஆண் செய்த முயற்சிகளை எதிர்த்து வரலாற்றுப்போக்கில் அவ்வப்போது கேள்விகள் எழுப்பப்பட்டன என்பதை கவனத்தில் கொள்ள வேண்டியது முக்கியம். அரெண்ட் குறிப்பிட்டுக்காட்டுவது போல்,

"நிரந்தரமற்றவர்களின் கைகளால் செய்யப்பட்ட எந்த வேலையும் நிரந்தரமாக நீடிக்காது என்பதற்கு வெளிப்படையான, சாட்சியமாக ரோமப் பேரரசின் வீழ்ச்சி இருந்தது. அதனிடத்தில் அழிவற்ற தனிநபர் வாழ்க்கையை போதித்த கிறித்துவம் எழுச்சிபெற்றது. மேற்குலக மனித குலத்தின் தனிப்பெரும் மதமாக அது மாறியது."

உற்பத்தியின் மூலம் இறப்பற்றவாழ்வை அடைய ஆண் செய்த முயற்சிகளின் இயலாமையை வெளிப்படுத்த பல்வேறு வரலாற்று நிகழ்வுகள்

உதவியுள்ளன. அவற்றை ஒன்றிணைத்துப் பார்த்தால் அவை இரண்டு உண்மைகளைத் தெளிவாக வெளிக்காட்டுக்கின்றன. 1. அரெண்ட் கண்டறிந்தது போல ஆண் உருவாக்கிய உற்பத்திப் பொருட்கள் காலத்தால் தாமாகவே சிதைந்து போகக்கூடியவை. 2. இந்த உற்பத்திப்பொருட்கள் காலத்தின் கடுமையானத் தாக்குதலுக்கு தற்காலிகமாகத் தப்பியபோதிலும் அவை தமக்குத்தாமே அல்லது உற்பத்தி செய்தவரைத் தவிர்த்து வேறொருவருக்கு இறப்பற்றவாழ்வைத் தந்துவிடுகிறது. முற்றாக இல்லையென்றாலும் அடிக்கடி உற்பத்திசெய்தவர்களின் தனிநபரின் அடையாளமும், அவரின் வாழ்க்கைக்கதையும் அழிந்து போயின.

இந்த நெருக்கடிக்கு மதம் காலப்பொருத்தமான ஒரு தீர்வை வழங்கியது. மனிதன் குறிப்பிட்ட சில சட்டதிட்டங்களுக்குட்பட்டு, குறிப்பிட்ட சில மதிப்பீடுகளை தூக்கிப்பிடிப்பானேயானால் அவனால் இறப்பற்ற வாழ்வை அடைய முடியாவிட்டாலும் சொர்க்கத்தில் நித்தியமான வாழ்வைப் பெறமுடியும். ஆனால் பெண்களுக்கும் இதில் சமமான வாய்ப்பிருக்கும் ஒருநிலையில் அத்தீர்வு சரியானதாகப் படவில்லை. அது மட்டுமல்ல. பெண்களுக்கு இறப்பற்ற வாழ்வு, நித்தியவாழ்வு ஆகிய இரண்டிற்குமான வாய்ப்புகள் கிடைத்தன. ஆனால் ஆண்களுக்கு நித்தியவாழ்வுக்கான வாய்ப்பு மட்டுமே கிடைத்தது. உற்பத்தியில் பயன்படுத்தப்பட்ட அதே வழிமுறைகள் இப்பிரச்சனையைத் தீர்க்கவும் பயன்படுத்தப்பட்டன. கடவுள் ஆணைப் படைத்தான். ஆண் தன்னைப்போன்ற உயிரினங்களைப் படைத்தான். *ஏவாள்* கவர்ச்சியின் குறியீடாக, பாவத்தின் குறியீடாக மாற்றப்பட்டாள். இதனால் சொர்க்கத்திற்கும், நித்தியவாழ்விற்குமான தகுதி ஆணைக் காட்டிலும் பெண்ணிற்கு குறைவாக இருப்பதாக நியாயம் வழங்கப்பட்டது இவை தொடர்பான வளர்ச்சிகள் குறித்து *மேரிதலி* (MARYDALY) கீழ்கண்டவாறு கூறுகிறார்.

“பழையஏற்பாட்டின் வெறுக்கத்தக்கப் பகுதிகள் நன்றாக அறியப்பட்டவை தான். திருச்சபைத்தந்தையரின் பெண்ணின வெறுப்பை நான் மறைமுகமாகச் சுட்டிக்காட்ட வேண்டியதில்லை. உதாரணமாக *டெர்டுலியன்* (TERTULIAN) பொதுவாக பெண்களை, “நீங்கள் சாத்தானின் வாயிற்கதவுகள்” என அழைக்கிறார். கடவுளின் படிமத்திலிருந்து பெண்கள் படைக்கப்படவில்லை என்ற கருத்தை *அகஸ்டின்* கொண்டிருந்தார். *தாமஸ்அக்வினாசும்* அவரது எண்ணற்ற பிரச்சாரகர்களும், சீடர்களும் பெண்களை முறை தவறிப்பிறந்த ஆண்கள் எனக் கேவலப்படுத்தியதை நான் புறக்கணிக்கமுடியும். கடவுள் *ஆதாமை* எல்லா உயிரினங்களுக்கும்

மேலான பிரபுவாக வைத்தார். ஆனால் ஏவாள் அதைக் கெடுத்தாள் என்று கூறும் *மார்ட்டின்லூதரை* என்னால் புறக்கணிக்கமுடியும். பெண்களின் "மிகக் கொடிய படையணிக்கு எதிராக முதல் எக்காளமுழக்கம்" எழுப்பிய *ஜான்நாக்* (JOHN KNOX) கின் உண்மையை நான் தாண்டிச் செல்லமுடியும். இவையனைத்தும் வெறும் கடந்தகால வரலாறுதான்."

இறப்பற்றவாழ்வு என்ற இடத்தில் வைக்கப்பட்ட நித்தியவாழ்வு என்ற லட்சியத்திற்கு பதிலியாக தொழில்நுட்பச் செயல்பாடுகள் இருந்தன. இக்காலக் கட்டத்தில் அச்செயல்பாடுகள் தளர்வுற்று இரண்டாம் இடத்துக்குப் போய்ச் சேர்ந்தன. வாழ்க்கைச்செயல்பாடுகளின் லட்சியநிலை ஆழ்ந்த அறிவின் வளர்ச்சியில் (நித்திய விசயங்கள் மீது) கவனங்கொள்வதும், அதே சமயம் "புறப்பொருட்களின்றி வாழ்வு நடைபெறாது" என்பதால் அவற்றை நன்றாகப் பயன்படுத்திக் கொள்ள பகுத்தறிவை வழிப்படுத்திக் கொள்வதுமாகும் என *புனிதர் அகஸ்டின்* வாதிடுகிறார். புனிதர் அகஸ்டின் காலத்தில் சமூகம் போதுமான அளவு தொழில்நுட்பத்தையும், கலை நுட்பக் கருவிகளையும் சார்ந்திருந்தது. இவற்றை அழித்துவிட்டால் அது கணிசமான அளவிற்கு வாழ்க்கைத் தரத்திற்கு அச்சுறுத்தலாக இருக்கும் என்பதால் அவற்றை கைவிட இயலாத நிலையில் இருந்தது. ஆனால் இனிமேலும் சமூகத்தின் மைய இடத்தில் அதற்கு (தொழில் நுட்பம்) இடமில்லை.

நித்தியவாழ்வு குறித்த மதத்தின் வாக்குறுதியில் ஒரு பிரச்சனை, அதற்கு ஆதாரமில்லாதது. மதத்தின் வாக்குறுதியை நம்பிக்கையின் அடிப்படையில் ஏற்றுக் கொள்ள வேண்டியதுதான். அறியப்படாத விசயத்தின் மீது இவ்வாறு பெரும் அக்கறை கொண்டிருந்த மனிதன் மெல்ல மெல்ல தன் மனஉளைச்சலை வெளிப்படுத்த ஆரம்பித்தான். இதே காலத்தில் தான் மேற்குலகில் தோன்றிய அறிவியல் கோட்பாடுகள் அனைத்தும் படைப்பு, மனிதன் குறித்த பைபிளின் கருத்துகளின் மீது அய்யம் கொள்வதற்கான வலுவான காரணங்களைத் தந்தன. *கோப்பர் நிக்கஸ் புரட்சி, நியூட்டன் புரட்சி, டார்வின் புரட்சி,* பின்னர் உருவான உளவியல் ஆய்வுகள் ஆகிய அனைத்தும் ஆணின் தன்னகங்காரத்தில் (EGO) ஆழமான காயங்களை ஏற்படுத்தின. மதத்தின் மீது வைத்திருந்த நம்பிக்கையை இவை ஆட்டம் காணச் செய்தன.

### *அதிகாரத்துக்கான மனத்திட்பம் :*

மதநீக்க நடவடிக்கையொன்று துவங்கியது. தொழில்நுட்ப முன்னேற்றத்தின் மீதும், மனித நடத்தையின்மீது மதம் கொண்டிருந்த அடக்கு

முறைகள் சீராகத் தளர்ந்தன. இறுதியாக, "கடவுள் இறந்து போனார்" என *நீட்சே* அறிவித்தார். இந்த அறிவிப்பைத் தொடர்ந்து நெருக்கடி ஆழமானது. இப்போது மனிதன் உலகில் தன்னை அநாதையாகக்கண்டான். இந்தப் புதிய சூழ்நிலைக்கு நீட்சே காட்டிய எதிர்வினையை *வால்டர் காப்மன்* (WALTER KAUFMANN) கீழ்க் கண்டவாறு தொகுத்துத் தருகிறார்.

"நாம் இயற்கையதீத மதங்களைவிட்டு அறிவியல் ரீதியான அணுகுமுறையை கைக் கொண்டோமெனில் மனிதனுக்கு தனித்தன்மை வாய்ந்த அதிஇயற்கைத் தகுதியைக் கற்பித்துக் கூறும் உரிமையை இழந்து விடுவோம். அத்தகைய தகுதி இல்லை என்பது உண்மைதான். அதனால் ஒரு சிலர் மட்டுமே அணுகும் லட்சியமாக அது இருக்கிறது. மனிதன் தன் வாழ்விற்குத் தரக்கூடிய அர்த்தத்தைத் தவிர வாழ்க்கைக்கு வேறு அர்த்தம் ஏதுமில்லை. மேலும் பெரும்பாலான மனிதர்களின் நோக்கம் தலைசிறந்த தகைமை கொண்டதாக இல்லை. அர்த்தமற்ற கழிவுகளுக்கு மேலாக நம்மைநாமே உயர்த்திக் கொள்ள வேண்டுமானால் நாம் வெறும் மானுடர் என்ற நிலையை இழக்க வேண்டிவரும். நமக்கு நாமே கடுமையானவர்களாக இருப்பதுடன் நம்மை நாமே வென்று தீர வேண்டும். நாம் அற்பஜீவிகளாக இல்லாமல் படைப்பாளிகளாக மாற வேண்டும்." தனக்குத் தானே கடுமையாக இருப்பவனே, தன் உணர்ச்சிகளையும், எல்லைகளையும் கடந்தவனே *உன்னத மனிதனை* (UBERMENCH) உருவாக்க முடியும் என நீட்சே சொல்கிறார். பணிவு, கருணை, கற்பு போன்ற கிறித்துவமத அடிமை ஒழுக்கங்களை மறுப்பவனும் தன்னிடமுள்ள சில குறிப்பிட்ட விசயங்களை கடந்தவனுமே உன்னதமனிதன் ஆவான். ஆனால் எதை வெல்லவேண்டும் என்று நீட்சே எடுத்துரைக்கவில்லை. இதன் விளைவாக '*உன்னத மனிதன்*' என்ற கருத்து காலத்தின் தேவைகளுக்கேற்ப விளக்கமளிக்கத் தக்கதாக வெளிப்படையாக விட்டு வைக்கப்பட்டுள்ளது. *உன்னதமனிதன்* பற்றிய *இட்லர்* கருத்தும் *நீட்சே* தன் மனதில் கொண்டிருந்த கருத்தும் ஒன்றே என் நீட்சேயின் சகோதரி உறுதி கூறினார், நீட்சேயின் கருத்தாக்கமான *அதிகாரத்திற்கானமனத்திட்பம்* (WILL TO POWER) என்பதற்கு ஆதிக்கத்திற்காக முயற்சி செய்யும் உன்னதமனிதனின் பண்புநலன் என வியாக்கியானம் தரப்பட்டது. இவை அக்காலங்களில் மதிப்பீடுகள் மாறிக் கொண்டிருந்ததையே எடுத்துக் காட்டுகின்றன. அக்காலத்தில் ஒரு சிலரின் ஆதிக்கஆசையைக் கிறித்துவ ஒழுக்க நெறிகள் உள்ளிட்டு எந்தவொரு ஒழுக்கநெறிகளாலும் கட்டுப்படுத்த முடியவில்லை. அந்நபர்கள் *உன்னதமனிதனை* முன்னுதாரணமாகக் கொண்டனர். *தாஸ்தாவ்ஸ்கி*

சொன்னது போல் கடவுளின் மரணத்துடன் எல்லாவிசயங்களும் அனுமதிக்கதக்கவையாக ஆகிவிட்டன.

நீட்சேவின் தத்துவம் பற்றிய இந்த விளக்கம் புதிய சூழ்நிலைக்கு மனிதன் தந்த எதிர்வினையாகும். கடவுளின் இந்த அறிவிக்கப்பட்ட மரணத்தினால் மேற்கத்தியச் சமூகத்தைச் சார்ந்த மனிதன் தனக்கு விருப்பமில்லாத ஒரு உலகத்தில் தான் வீசப்பட்டுள்ளதாக உணர்ந்தான். பைபிளின் முதல் பகுதியில் இயற்கை மீது மனிதன் ஆதிக்கம் கொண்டது அவனது உரிமை என சொல்லப்பட்டுள்ளது. அதன்படி தன் உரிமை என அவன் நினைத்து வந்த அந்த உரிமை இப்பொழுது பறிக்கப்பட்டதாக அவன் உணர்ந்தான். இறப்பற்றவாழ்வு அல்லது நித்தியவாழ்விற்கான அவனது நம்பிக்கைகளும் திரட்டப்பட்ட வரலாற்றுச்சான்றுகளின் மீதான அவனது மதிப்பீடும் ஒன்றுக்கொன்று மோதிக் கொண்டன. ஆகவே தன் வாழ்க்கையைத்தானே தீர்மானித்துக் கொள்வது என்றும், தன் துயரங்களையும், தனிமையையும் எதிர்த்து சமாளிப்பது என்றும் அவன் முடிவு செய்து கொண்டான். உன்னத மனிதன் என்ற தொன்மத்தின் (MYTH) ஒரு முக்கியமான அம்சம் இது. மற்றொரு முக்கிய அம்சம் கடவுள் மறைந்து போனதால் ஒருவரது அதிகாரத்தின் மீதிருந்த அனைத்துக் கட்டுப் பாடுகளும் அகற்றப்பட்டன. அதனால் மேற்குச்சமுகத்தைச் சார்ந்த நவீன மனிதன் பூமியில் தனது அதிகாரத்தை ஒரு புதிய அடித்தளத்தில் மறு நிர்மாணம் செய்துகொள்வது என முடிவு செய்து விட்டான். இந்தச் சூழ்நிலையில் தனக்குக் கீழ்நிலையில் இருக்கும் எதிரி என தான் கருதி வந்த மற்றமனிதர்கள் மீது வெளிப்படையாகச் செலுத்தியவந்த அதிகாரத்தை அவன் குறைத்துக் கொள்ளவில்லை.

### ***ஒடுக்குமுறைக் கருத்தியல்கள் சாரத்தில் ஆணாதிக்கங்களாகவே இருக்கின்றன :***

நான் முன்னர் பார்த்தது போல *பெண் என்ற மற்றவர்* என்கிற கருத்து விரிவாகி இயற்கையையும் தன்னுள் சேர்த்துக் கொண்டது. வரலாறு நெடுகிலும் ஆண்கருத்தியல்களில் ஏற்பட்ட பல்வேறு வளர்ச்சிகள் மேற்சொன்னக் கருத்தை விரிவாக்கும் விதத்தில் தொடர்ந்தன. உதாரணமாக மதக்கருத்தியலின் எழுச்சியினால் இந்தக் கொள்கை விரிவாகி மீண்டும் பிறமதத்தினரையும் பாவிகளையும் தன் எல்லைக்குள் இழுத்துக் கொண்டது. கட்டுப்பாடுகளற்ற அதிகாரம் என்னும் நவீனக் கருத்தியலின் தோற்றத்தினால் மற்றவர் என்ற ஆய்வு வகையினம் திடீரென மிகப்பெரிதாக விரிவாக்கப்பட்டு முக்கியமான வரலாற்று வளர்ச்சிக்கான மேடை அமைக்கப்பட்டது புதிதாக

அமைக்கப்பட்ட மற்றவர் என்ற வகையினத்திற்குள் இப்போது பெண், இயற்கை, கறுப்பர், சிவப்பர், யூதர்... அரேபியர், சுதேசியர் ஆகிய அனைத்த வகை "மற்றவர்களும்" உள்ளடக்கப்பட்டனர். மெய்யான ஆணாதிக்க முறையின் கொள்கையான ஆதிக்கம் என்பது நீட்டிக்கப்பட்டு நடைமுறையில் அனைத்து ஆண்களையும் உள்ளடக்கிக் கொண்டது. இந்த நீட்சிகள் மக்கள் குழுக்களிடையே புதிய வடிவங்களிலான உறவுகளைச் சாத்தியப்படுத்தின. உதாரணமாக நிலப்பிரபுத்துவம், காலனியம், முதலாளியம் ஆகிய கருத்தியல்கள் அனைத்தும் ஆணாதிக்கமேலாட்சிக் கருத்தின் விரிவாக்கப்பட்ட விளக்கத்தில் அடித்தளம் கொண்டுள்ளன. இந்தக் கருத்தாக்கங்கள் ஒவ்வொன்றும் (அருவமான கருவிகள் (ABSTRACT TOOLS) என நாம் இவற்றைக் கருதுவது பொருத்தமானது) ஒருவனின் ஆதிக்கத்தை மற்றமனிதர்கள் மீது நீட்டிருப்பதை தன் அம்சமாகக் கொண்டிருக்கின்றன. நிலப்பிரபுத்துவத்தில் நிலப்பிரபு விவசாயின் மீது ஆதிக்கம் செலுத்தி வந்தான். காலனியத்தில் ஆக்கிரமிப்பாளன் சுதேசி மீது ஆதிக்கம் செலுத்தி வந்தான். முதலாளியத்தில் முதலாளி தொழிலாளி மீது ஆதிக்கம் செலுத்தி வருகிறான். இறுதியாக ஏகாதிபத்தியத்தில் (முதலாளியத்தின் உச்ச கட்டமென லெனினால் விளக்கப்பட்டது) முதலாளி சுதேசிகள் மீது ஆதிக்கம் செலுத்துகிறான்.

இதுவரையிலான மனித குல வளர்ச்சி என்பது அவனது சுதந்திரத்தையே (ஆதிக்கத்தை அல்ல) வளர்த்திருக்கிறது என்ற நமது வாதத்திற்கு முரணானதாக இந்தக் கருத்தாக்கங்கள் இருப்பது தெரியவருகிறது. இந்தக் கட்டத்தில் ஹெகலின் புகழ்பெற்ற ஆண்டான்-அடிமை இயங்கியலை நினைவு கூர்வது உதவிகரமாக இருக்கும்.

PHENOMENOLOGY-என்ற நூலில் ஹெகல் சொல்வதன்படி இரண்டு தனிநபர் உணர்வு நிலைகள் சந்திக்கும்போது ஒவ்வொன்றும் அதுவாக இருப்பதே உண்மையான உயிர்ப்பு (TRUE BEING) என்னும் நிச்சயத்தை மறு உறுதி செய்து கொள்ள முயன்று ஒன்றையொன்று எதிர்கொள்கின்றன. அதைப் பின்தொடர்ந்து வரும் செயல்கள் மற்றவரிடமிருந்து தனக்கொரு அங்கீகாரத்தைப் பெறுவதாகவே இருக்கும். இந்த லட்சியத்திற்குட்பட்டு ஒரு போராட்டம் தொடர்கிறது. அப்போராட்டத்தில் ஒவ்வொருவரும் மற்றவரை நிராகரிக்கும் முயற்சிகளிலேயே ஈடுபட்டுவருவார்கள். இவ்வாறாக இம்மனிதர்கள் சாகும் வரையிலான ஒரு போராட்டத்தில் ஈடுபட்டிருப்பார்கள். மற்றவரின் அங்கீகாரத்தைப் பெறுவது என்ற இந்த அணுகுமுறை தோல்வியுற்றது. ஏனெனில் இறந்து போன ஒரு மனிதன்

(அடுத்தவனுக்கு) அங்கீகாரம் தரமுடியாது. ஆகவே, இதற்கு பதிலியாக ஒரு புதிய வகைப் போராட்டம் முன் வைக்கப்பட்டது. இது மிக நிறைவானது என நம்பப்பட்டது. மற்றவரை அடிமையாக்குவது என்பதே இந்தப் போராட்டம் ஆகும். அதாவது, "இயங்கியல் ரீதியில் நிராகரிப்பது" என்பதாகும். ஒரு உணர்வுநிலை தன் சுதந்திரத்தைதானே மறுத்து, தன்விருப்பங்களை மற்றவருக்குக் கீழ்ப்படுத்தினால் அவ்வுணர்வு நிலை இயங்கியல் ரீதியில் நிராகரிக்கப்பட்டதாகும். இந்த இடத்தில் அங்கீகாரத்துக்குள்ளான நபர் எசமானாக ஆவார். மற்றவர் அடிமையாக ஆவார். ஆனால் மீண்டும் இந்த முறையும் நடைமுறைக்கு ஒத்து வரவில்லை. காரணம் எசமான் ஒரு அடிமையிடமிருந்ததுதான் அங்கீகாரத்தைப் பெற முடிந்தது. சுதந்திரமான மற்றவர் அவரை அங்கீகரிக்கவில்லை. ஆகவே இது நல்லமுறையல்ல.

அங்கீகாரத்துக்கான இந்தப்போராட்டத்தில் மூன்றவதாகவும், முன்னேற்றமானதுமான ஒரு கட்டம் *சார்த்தரால்* (SARTRE) மரபான காதல் பற்றிய கலந்துரையாடலில் விவரிக்கப்பட்டுள்ளது. காதலிக்கப்படும் ஒருவர் தன் சொந்தவிருப்பப்படி தன் சுதந்திரத்தைக் காதலிக்கும் நபரின் சுதந்திரத்திற்கு கீழாக வைப்பதையே காதலிக்கும் நபர் விரும்புவார் என அக்கலந்துரையாடலில் கருத்துக்கூறுகிறார். காதலர் ஒரு தானியங்கி எந்திரத்தை தன்னுடையதாக ஆக்க விரும்பவில்லை. அவர் ஒரு சுதந்திரத்தை சுதந்திரம் என்கிற நிலையிலேயே தன்னுடையதாக ஆக்க விரும்புகிறார் என்று குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறார்.

தான் சிறைப்பட்ட நிலையை தானே விரும்புகிற ஒரு சுதந்திரம் தன்னைக் காதலிக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார். இதை எவ்வாறு சாதிப்பது? சார்த்தர் பதிலளிக்கிறார்;

"கட்டுப்பாடுகளே இல்லாது பல்வேறுபட்ட முன்னுதாரணச் செயல் பாடுகள் மூலம் உலகத்தின் மீதான என்னுடைய அதிகாரத்தை (பணம், பதவி, தொடர்புகள் இன்னபிற...) நான் வெளிப்படுத்துகிறேன். என்னுடைய வளம் கொழிக்கும் முழுமையின் (PLENTITUDE OF ABSOLUTE) முன்னிலையில் அது (மற்றவர் சுதந்திரம்) அதுவே தன்னைப் பயனற்றது என்பதை ஏற்றுக் கொள்ள (NOTHINGNESS) செய்வதன் மூலம் நான் அதை (மற்றவர் சுதந்திரத்தை) கைப்பற்றிக் கொள்ளவேண்டும்"

இந்தநிலை முந்தியதைவிட அதிகச் சமத்துவமுடைய நிலையாகக் காணப்பட்டபோதிலும் ஆதிக்கத்திற்கான கொள்கையே இன்னமும் இதற்கு

அடித்தளமாக இருக்கிறது. இந்த முறையிலும் மற்றவரை அடிமைப் படுத்துவதே விருப்பமாக இருந்து வருகிறது. " உலகின் மீதான என்னுடைய அதிகாரம் (பணம், பதவி, தொடர்புகள் இன்ன பிற)" என மேலே தரப்பட்டுள்ள உதாரணங்களை நாம் காத்திரமானதாக எடுத்துக் கொண்டால்-வெளிப்படையாகவே இம்முறையில் சமநிலை இருந்த போதிலும்-இது பெண்ணின் தாழ்மைக்கே ஆதரவளிக்கிறது என்கிற முடிவுக்கே நாம் வரக்கூடும். நமது சமூகத்தில் ஒடுக்கப்பட்டநிலையிலுள்ள பெண் ஆணின் சாதனைகளுக்கு ஈடு கொடுக்க முடியாதவராக இருக்கிறார். கவர்ச்சியைக்காட்டி ஆணைத் தனக்கு உரிமையாக்கிக் கொள்ளும் வேலைதான் அவருக்குத் தரப்பட்டுள்ளது. பின்விளைவுகளைப் பற்றி வருத்தப்படாமல் அதிகாரம் கொண்டிருக்கும் ஆணை தன் விருப்பத்தின் பேரில் மறுக்கக்கூடிய ஒரு நிலையில் பெண் இல்லை. நிச்சயமாக மரபு வழி ஆயுதங்கள் பெண்ணிடம் உள்ளன. ஆனால் பல்வேறு பெண்ணியர்களும் சுட்டிக்காட்டியுள்ளது போல, இந்த ஆயுதங்கள் பெண் மீதான ஒடுக்குமுறையைத் தொடரவே ஊழியம் செய்யும் "காதலின் வழிமுறையில் தவறேதும் இல்லை. அதன் அரசியலில் அதாவது சமமற்ற அதிகாரச் சூழலில்தான் தவறு இருக்கிறது. யார்? ஏன்? எப்போது? எங்கே? என்பவைகளே இத்தகைய பேரழிவை உருவாக்குகின்றன." என்று *சுலாமித் பயர்ஸ்டோன்* முடிவுக்கு வருகிறார். காதலல்லாத உறவுகளை உதாரணமாக ஆண்களுக்கிடையே நிலவும் மேலதிகாரி-வேலையாள் போன்ற உறவுகளைப் பொதுமைப்படுத்தவதற்கு ஒருவேளை இம்மாதிரி உறவுமுறைகள் பயன்படக்கூடும்.

மேலே சொல்லப்பட்டுள்ள மூன்று கட்டங்கள் மானுட வரலாற்றின் வெவ்வேறு சகாப்தங்களை உள்ளடக்கியதாகப் பார்க்கமுடியும். முதல்கட்டம் பண்டைக்கால உறவுமுறைகளை விவரிக்கிறது. இரண்டாவது கட்டம் நிலப்பிரபுத்துவத்தையும், காலனியத்தையும் விவரிக்கிறது. கடைசிக்கட்டம் முதலாளியத்தையும் ஏகாதிபத்தியத்தையும் விவரிக்கிறது.

இதன்பொருள் என்னவென்றால் நிலப்பிரபுத்துவத்திலிருந்தும், காலனியத்திலிருந்தும் முதலாளியத்திற்கும் ஏகாதிபத்தியத்திற்குமான மாறுதல்-ஆதிச்சமுகங்களைக் கைவிட்டது போல-மற்றவரது சுதந்திரத்தை மதிப்பதில் ஏற்பட்ட வளர்ச்சியினால் உருவானதல்ல. அதற்கு மாறாக ஆதிக்கத்தின் வழிமுறைகளில் (பெண், இயற்கை, மற்ற ஆண்கள் (MALE OTHER) என இவ்வாதிக்கம் விரிவாக்கம் பெற்றது.) ஆண் அடைந்த அதிருப்திகளே இம்மாற்றங்களை வழி நடத்தின. இது ஒரு

பகுதிக்காரணமாகும். ஒவ்வொரு கட்டத்திலும் மனிதஉறவுகளின் அடுத்த கட்ட வடிவத்தைத் தீர்மானிப்பதில் தொழில்நுட்பம் முக்கியப் பங்காற்றியிருக்கிறது. நிலப்பிரவுத்துவம், முதலாளியத்திற்குள் கலந்து மறைவதை முதல் தொழில்புரட்சிச்சாத்தியமாக்கியது. தொழில்நுட்பம் ஆணாதிக்கத்திற்கும், ஆணாதிக்கம் தொழில் நுட்பத்திற்கும் மாறி மாறி ஊழியம் செய்து கொள்வதை எடுத்துக் காட்ட மேலும் ஒரு உதாரணமாக இது இருக்கிறது. ஆணின் கடுமையான அதிருப்தி மனநிலையே இந்த மாற்றங்களுக்கு அடிநாதமாக இருந்திருக்கிறது. தன்னை அங்கீகரிக்க வேண்டும், தன் சொந்தத்தகுதியை (SELF WORTH) உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும் என்ற தேவை அவனுக்கு இருந்திருக்கிறது. இம்மாதிரி அதிருப்தி மனஉணர்வுகளுக்குத் தீர்வு நிச்சயமாக வெளியிலிருந்து கிடைக்காது. ஆகவே இந்தச் சிக்கலுக்கான வேர்களை இறுதியாக இனங்கண்டு அவற்றை எதிர்கொள்ளும் வரையில் ஆதிக்கத்திற்கான வெவ்வேறு வழிமுறைகளை தொடர்ந்து சோதித்துப் பார்க்கும்படி ஆணுக்கு விதிக்கப்பட்டிருக்கிறது. (இறுதியாக) ஆண் தன் சொந்தஇருப்புடன் இணங்கிப் போனான்.

இந்த அங்கீகாரத்தை வெற்றி கொள்வதில் மார்க்சியம் மூன்றாவது கட்டத்தைக் காட்டிலும் ஒருஅடி முன்னேற்றம் என்பதே இதன் பொருள். பொருளியல், அரசியல் தளங்களிலிருந்து விலக்கி வைக்கப்பட்ட பெண் ஒரு ஆணைத் தேர்ந்தெடுக்கையில் சுதந்திரமாகச் செயல்படவில்லை. இதை ஆண் உணர்ந்த கொண்டதுதான் மூன்றாவது கட்டத்தின் தோல்விக்குக் காரணமாகும். அதைப்போலவே இப்புதியகட்டமும் ஒரு சாதாரணக் காரணத்துக்காகத் தோல்வியுறும். உண்மையான சுதந்திரத்தோடு இருக்கும் ஒருவர் தன் சுதந்திரத்தை மற்றவருக்கு ஏன் அடிமைப்படுத்த வேண்டும்? ஒருவர் இன்னொருவரை பாராட்டலாம். ஆதரிக்கலாம். உடன் ஒத்துழைக்க விருப்பப்படலாம். ஆனால் ஆணிடமுள்ள அதிருப்தி மனநிலையான அச்சத்தைத் தணிக்க இவை உதவாது. இவை அதிலிருந்து வேறுபட்டவை.

ஆனால் வரலாற்றை இயக்கும் இன்னொரு நபரும் இருக்கிறார். அவரது அதிகாரம் குறிப்பிட்ட சமயங்களில் எல்லைக்குட்பட்டதாகவும், மற்ற சமயங்களில் ஆற்றல் வாய்ந்ததாகவும் இருக்கிறது. அடக்கி வைக்கப்பட்ட அடிமை, தொழிலாளி, பெண் ஆகிய மற்றவர்களே அந்த நபர் ஆவர். மத்தியக் காலங்களில் எகிப்தில் அடிமைகள் எழுச்சி கொண்டு மாம்லக் அரசு (MAMLUK KINGDOM) என்ற தங்களது சொந்த அரசாட்சியை நிறுவினர், (MAMLUK என்பது இலக்கிய வழக்கில்" பிறரால் உரிமை கொள்ளப்பட்டது"

அதாவது அரபு மொழியில் அடிமை என பொருள்தருவது). சமீபகாலத்தில் தொழிலாளிகள் பெரும் அரசியல் சக்தியாக வரலாற்றில் உருவாகிவிட்டனர். பெண்கள் அத்தகையதொரு சக்தியாக வளர்ச்சிபெற்று வருகின்றனர். இதன் பொருள் ஒடுக்குமுறையாளன் எவ்வளவுக்கெவ்வளவு வெறுக்கப்படுகிறானோ அல்லது ஆட்சிக் கட்டுப்பாட்டை இழந்து விடும் ஆபத்து இருக்கிறதோ அதற்குத் தக்கவாறு ஒடுக்கப்படும் மக்களின் ஆசைகளுக்கும், விருப்பங்களுக்கும் அவன் செவிமடுக்க வேண்டியிருக்கிறது. (ஈரான் மன்னர் ஷா இந்த விதியைப் புறக்கணித்ததால் அதற்கான விலையைத் தரவேண்டியதாயிற்று). இவ்வாறு ஒடுக்கப்பட்டமக்கள் வன்முறையைச் செயல்படுத்தியதன் விளைவாக வரலாற்றில் சில மாற்றங்கள் தோன்றியிருக்கின்றன. (ஒடுக்கப்பட்டோர் கலகம் செய்ய அவர்களுக்கேயான சொந்தக்காரணங்கள் இருந்தன. தங்கள் சொந்த அதிகாரத்துக்கான அவர்களின் விருப்பமும் காரணமாக இருக்கலாம்). ஒடுக்குமுறையாளன் தன் ஆதிக்கத்தின் தரம் (QUALITY) அல்லது நீட்சியின்மீது கொண்ட அதிருப்தியின் பிரதிபலிப்புகளே இவை (வரலாற்று மாற்றங்கள்) எனச் சொல்லிவிட முடியாது.

### *வரலாற்று இயங்கியல் இயக்கத்தில் மார்க்சியத்திற்கு பொருத்தமான இடம் :*

முதலாளியத்திலிருந்து மார்க்சியத்திற்கான வரலாற்று மாற்றத்தின் சாதகமான அம்சத்தை ஒருவர் புறக்கணித்து விடக்கூடாது என்பதே இதன் பொருளாகும். தொழிலாளர்கள் தங்கள் மீதான ஒடுக்குமுறையை நிராகரித்ததே மாபெரும் சக்தியாக இந்த மாற்றத்திற்குப்பின் இருந்திருக்கிறது. இந்த நிராகரிப்பு ஒடுக்குமுறையாளனையும் ஒருசேர நிராகரித்து விடும். (ஒடுக்கு முறையாளனை படுகொலை செய்யும், பதவியிறக்கும், அல்லது நாடு கடத்தும்). முதலாளியச்சுரண்டலுக்கு கிடைத்தச் சாதகமான எதிர்வினையின் ஒரு பகுதியே மார்க்சியம் எனப்பார்க்கமுடியும். காரணம் ஒடுக்கு முறையாளனான ஆண் முதலாளியத்தின் கீழ் பெண்ணின் மீது பழைய ஒடுக்குமுறை வடிவங்களை திரும்பவும் ஏவினான். ஆனால் இந்தப்புதிய ஒடுக்குமுறையின் இலக்கு தொழிலாளர்களும் கூடத்தான் (மரபுப் பொருளின்படி இது ஆண்களையே - அதாவது வீட்டிற்கு வெளியே பணியாற்றும் தொழிலாளர்களையே - குறிக்கும்) முதலாளி (வேறு வழியில் நிலப்பிரபும் கூடவே) தொழிலாளியின் உழைப்பையும் அவன் உற்பத்தி செய்த பொருளையும் தனக்கு உரிமையாக்கிக் கொள்கிறான். இதையே வேறுவழியில் சொல்வதானால் இதற்கு முன்னர்

அவன் (முதலாளி) பெண்ணின் குழந்தையை தனதாக்கிக்கொண்டதுபோல, இப்போது ஆணின் குழந்தையை (ஆண் உற்பத்தி செய்தபொருளை மொர்)தனதாக்கிக் கொண்டான். தன் திருப்தி உணர்வை அதிகரித்துக் கொள்ளவும், தான் விரும்பிய இறப்பற்றவாழ்விற்கான பங்களிப்பிற்குமே அவன் இவ்வாறு செய்து வந்தான். (ஜான்சன் நூலகம், ராக்பெல்லர் பவுண்டேசன், I.B.M. இன்ன பிற, இவற்றிற்கு சாட்சியங்கள் ஆகும்.)

மார்க்சியம் என்ற முறையின் மூலமாக தொழிலாளி தனது உழைப்பையும், உற்பத்திப் பொருளையும் மீண்டும் தனதாக்கிக் கொண்டான். இவ்வாறாக முதலாளியின் கட்டுப்பாட்டிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டான். இந்தச்சாதகமான அம்சத்தில்தான் மார்க்சியம் ஆணின் முதலாளியச்சுரண்டலிலிருந்து ஆணை விடுவிக்கும் போராட்டமாக மாறியது. அதாவது கொள்கையளவில் மற்ற ஆண்களின் மீது சுமத்தப்பட்ட முதலாளியச்சுரண்டலை குறைப்பது அல்லது அகற்றுவதற்கான முயற்சியே மார்க்சியம். இது தொடர்ந்து விரிந்துசெல்லும் மற்றவர் என்ற வகையினத்தைச் சுருக்குவதற்கான ஒரு முயற்சியாகும். (வரலாற்றில் முதன்முதலாக பெண் என்ற மற்றவர் மீது ஆண் ஆதிக்கம் செலுத்தத் துவங்கினான். பின் வரலாற்று வளர்ச்சிக்கேற்ப இது விரிவடைந்து இயற்கை, அடிமை, விவசாயி, காலனி மக்கள், தொழிலாளி என்ற மற்றவர்கள் மீதும் இந்த ஆதிக்கம் பரவியது). மார்க்சியத்தின் வருகையோடு இந்த ஆதிக்க விரிவாக்கம் ஓரளவிற்குக் கட்டுப்படுத்தப் பட்டது என்பதையே கட்டுரையாசிரியர் கூறுகிறார் மொர்). ஆணாதிக்கச் சமூகத்தில் தொடர்ந்து பரவிவந்த ஆதிக்கம் குறித்த கொள்கைகள் வரலாற்றில் முதல்முறையாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளதை நாம் பார்க்கிறோம் என்பதே இதன் பொருள். இவ்வகையில் இது ஆணாதிக்க முறைமைக்கெதிரான போராட்டத்தில் ஒரு அடி முன்னேற்றமே என்பது தெளிவு. இந்த அளவில் இது ஒருசில ஆண்களை வேண்டுமானால் விடுவிக்கலாம். ஆனால் முழு விடுதலைக்கு இது உதவாது.

தங்களது போராட்டத்திற்கும் பெண்கள் மற்றும் சிறுபான்மையினரின் போராட்டத்திற்குமான கருத்தியல் உறவு குறித்து மார்க்சியர்கள் விழிப்புணர்வுடன் இருக்கின்றனர். தங்களது ஆய்வில் இம்மாதிரியான போராட்டங்களுக்கு இவர்கள் சற்று கவனம் தருகிறார்கள். ஆணின் உலகத்தில் காலூன்றிக் கொள்ளவும், அடுத்தக்கட்டப் போராட்டத்தைத் தொடுக்கவும் பெண்ணிற்கு இது உதவக்கூடும். ஆனால் இது இந்த அளவோடு முடிந்துவிடும். மார்க்சியம் பெண்களை எளிதாக விடுதலை

செய்யாது. ஏனெனில் மார்க்சியர்கள் (பொதுவாக) பெண்ணியர்களாக இருப்பதில்லை. அவர்கள் ஆணாதிக்கமேலாட்சிக் கருத்தை கேள்விக்குட் படுத்துவதில்லை. அவற்றின் ஒருசில அம்சங்களை மட்டுமே கேள்விக்குட் படுத்துகிறார்கள். மார்க்சியஅமைப்பின் குறிப்பிட்ட சில நடைமுறைகள் பெண்களுக்கு எதிராக இருப்பதை நாம் பார்த்தால் மார்க்சியத்தின் இந்தப் பண்பு தெளிவாகத் தெரியவரும்.

### ஒரு வரலாற்று வரைபடம், இசுலாமிற்கு முன்னும் பின்னும் அராபியப் பெண்களின் சமூகத் தகுதி :

இறைத்தூதர் *முகம்மது* (கி.பி.570)வின் பிறப்புக்கு முன்னும், அதன் பின்னர் இசுலாம் பரவிய போதும் அராபியர்கள் *ஜகிலியா* (JAHALIA)யுகம் என்று பிற்காலத்தில் அறியப்பட்ட யுகத்தில் வாழ்ந்து வந்தார்கள். ஜகிலியா என்பதன் பொருள் அறியாமை என்பதாகும். அந்த நாட்களில் அரபுப் பெண்கள் இன்று இருப்பதைக் காட்டிலும் அதிகஅளவு சுயஉரிமை கொண்டவர்களாக இருந்திருக்கிறார்கள். பாலியல் குறித்த பிரச்சனைகளிலும் கூட அவர்கள் சுயஉரிமையோடு இருந்திருக்கிறார்கள். ஜகிலியாயுகத்தில் பெண்களுக்கு அல்லது அவர்களில் சிலருக்கு தங்கள் கணவன்மார்களை விலக்கி வைக்கும் உரிமை இருந்தது. இந்த விலக்கிவைத்தலின் வடிவம் இவ்வாறு இருந்தது. "அவர்கள் ஒரே கூடாரத்தில் தங்கியிருந்தால் கிழக்கு நோக்கியிருந்த கதவை மேற்கு நோக்கி மாற்றி வைத்துவிடுவார்கள். இதைப்பார்த்த ஆண் தான் விலக்கி வைக்கப்பட்டதாக அறிந்துகொள்வான். அக்கூடாரத்திற்குள் நுழைய மாட்டான்." அத்துடன் பெண்கள் ஆண்களுடன் பாலியல் உறவுகளைத் தொடங்குவது, முறித்துக் கொள்வது அல்லது பல ஆண்களை ஒரே சமயத்தில் திரும ணம் செய்து கொள்வது, அல்லது ஒருவர் பின் ஒருவராக திருமணம் செய்து கொள்வது ஆகியவை வழக்கத்தில் இருந்து வந்தன.

பௌதீகத் தந்தைமை (PHYSICAL PATERNITY) என்பது முக்கியமற்றதாக இருந்தது. சமூகம் தாய்வழிச் சமூகமாகவும், அதே சமயத்தில் தாயின் உள்வட்டம் சார்ந்ததுமான கணிசமானப் போக்குகளை வெளிக்காட்டி வந்தது. இருவகைத் திருமணங்கள் வழக்கத்தில் இருந்தன. *1. சதிகா* (SADIKA) திருமணம், *2. பாஅல்* (BA'AL) திருமணம் அல்லது ஆட்சியுரிமைத் திருமணம். முதலாவது தாய் வழியிலானப் போக்கையும் இரண்டாவது தந்தை வழியிலானப் போக்கையும் வெளிக்காட்டின. இசுலாத்தின் தோற்றம்வரை இவ்விரு வகைத்திருமணங்களும் அருகருகே இருந்து வந்தன. *பாத்திமாமெரின்னிசா* (FATIMA MERINISSA)

*முகத்திரைக்கு அப்பால்* (BEYOND THE VEIL) என்ற தனது நூலில் இந்த இரண்டு வடிவங்கள் பற்றி பின்வருமாறு கருத்துரைக்கிறார்.

"சதிகா திருமணம் (SADIC-என்பது நண்பர் SADICA என்பது பெண் நண்பர்) என்பது இணைப்பு ஒன்றியம் (UNION) ஆகும். இதில் வாரிசுகள் பெண்குலத்திற்குச் சொந்தமானவையாகும். பெண்ணுக்கும், ஆணுக்கும் இடையிலான பரஸ்பர ஒப்புதலால் முன்னெடுக்கப்பட்டு பெண்ணின் வீட்டில் இந்த இணைப்பு நடைபெறும். கணவனை விலக்கி வைக்கும் உரிமை பெண்ணிடமே இருந்தது. பாஅல் திருமணத்தில் வாரிசுகள் கணவனுக்குச் சொந்தமானவையாக இருந்தன. அவன் தந்தை என்றொரு சமூகத்தகுதியுடன் இருக்கும் அதே வேளையில் தனது மனைவிக்கு பாஅல் (BA'AL அதாவது பிரபு) ஆகவும் இருக்கிறான்."

சதிகா திருமணங்கள் கள்ள உறவிற்கு (ADULTRY) வழி வகுத்தன என இசுலாம் அவற்றைச் சட்ட விரோதமாக்கியது. பாஅல் திருமணத்தின் குறிப்பிட்ட வடிவங்கள் கட்டாயமாக்கப்பட்டன. பௌதிகத் தந்தைமை முக்கியமானதாக மாறியது. தாய் வழியிலானது தந்தை வழியில் இடமாற்றம் செய்யப்பட்டது. பரம்பரைச்சட்டங்கள் இயற்றப்பட்டன. அவை மகள்களைவிட மகன்களுக்கு அதிக ஆதரவு காட்டின. சுருக்கமாகச் சொன்னால் இசுலாம் உறுதியான மத அடிப்படையின் கீழ் ஆணாதிக்கத்தை நிறுவியது.

### *பெண்கள் குறித்து இசுலாமின் பார்வை :*

ஆரம்ப நாட்களில் இசுலாமைப் பற்றிய பெண்களின் மனப்போக்கு பல்வேறுபட்டதாக இருந்தது. சில பெண்கள் புதிய மதத்தின் மீது மிகுந்த ஆர்வங்கொண்டு அதில் சுறுசுறுப்பாகப் பங்கெடுத்துக் கொண்டனர். சிலர் இறைத்தூதர் தங்களைத் திருமணம் செய்து கொள்ள வேண்டுமெனக் கேட்டனர். (அவர்களில் *லைலா பின்கதிம்* என்ற ஒரே ஒருவர் மட்டும் பலதாரமணம் செய்திருக்கும் வீட்டில் தானும் ஒரு மனைவி என்கிற பாத்திரத்தை தன்னால் சகித்துக் கொள்ள முடியாது என்று தெளிவாக தெரிந்து கொண்டார். அப்போது மனதை மாற்றிக் கொண்டார்). அதற்கு மாறாக சில பெண்கள் இறைத்தூதருக்கு மிகவும் எதிராக இருந்தனர். தங்கள் கைகளில் மருதாணி இட்டும், தம்புராவை இசைத்தும் அவரது சாவைக் கொண்டாடினர்.

இசுலாம் குறித்து பெண்கள் கொண்டிருந்த அணுகு முறைகளில் காணப்பட்ட முரண்பாடுகளுக்கு ஒரு வேளை பின்வரும் உண்மை

காரணமாக இருக்கலாம். அரபுச்சமுகத்தில் ஆணாதிக்கமுறைமைக்கு இசுலாம் ஒரு உறுதியான அடித்தளத்தை வழங்கிய அதே வேளையில் ஆணாதிக்கத்தின் மிகக்கொடிய வடிவங்களைச் சட்ட விரோதமாக்கியது; பெண்கள் குறித்த சிலசாதகமானப் பார்வைகளையும் தக்கவைத்துக் கொண்டது. உதாரணமாக, குறிப்பிட்ட சில பழங்குடிச்சமுகங்களில் செயல்பட்டு வந்த பெண்சிசுக்கொலை இசுலாமுக்குப் பின்னால் தடுத்து நிறுத்தப்பட்டது. அத்தகையதொரு செயல்பாடும் சதிகா திருமணமும் அது போலவே தன்னாட்சித் திருமணங்களும் ஒரே சமயத்தில் நடைமுறையில் இருந்து வந்தன. கருத்துக்களும், சமூக இறுக்கங்களும் (TENSIONS) மாறி வரும் சூழலில் சமூகம் இருந்ததையே இது எடுத்துக் காட்டுகிறது. இந்த இறுக்கத்தைத் தீர்க்க இசுலாம் ஒரு ஆணாதிக்கச் சமரசத்தை செயல்படுத்தியது. இந்தச்சமரசத்தின்படி பெண்கள் தங்களின் முந்தைய சமுகத்தகுதிகள் சிலவற்றை தக்கவைத்துக் கொண்டனர். அதே வேளையில் ஆணின் அதிகாரஉரிமை சட்டபூர்வமாகியது. இவ்வாறு இசுலாம் தன்னால் இயன்ற அளவுக்குச் சமரசமாக இருந்தது. கிறித்துவம் பெண்களின் இயல்பான தாழ்வுநிலையை உறுதிப்படுத்தியது போல இசுலாம் உறுதிப்படுத்தவில்லை. அத்துடன் பெண்களைப் பணிவானவர்களாக (PASSIVE) இசுலாம் சித்தரிக்கவில்லை. மாறாக செயலூக்கம் மிக்கவர்களாக, ஆற்றல்மிக்கவர்களாக சித்தரித்தது. ஆனால் இசுலாம் ஆணாதிக்க சமரசம் கொண்டிருந்ததால் பெண்களை ஆபத்தானவர்களாகக் கருதியது. அதற்கு முக்கியக் காரணம் அவர்களிடம் செயலூக்கமும், ஆற்றலும் காணப்படுவது தான். (இசுலாமியப் பெண்கள் ஆணின் மீது வலுவான பாலியல் ஆற்றலை காட்டுவதால் அச்சத்தோடு பார்க்கப்பட்டனர்). இதை *மெரின்னிசா* பின்வருமாறு வைக்கிறார்.

மேற்கத்தியக் கலாச்சாரத்தில் நிலவும் பால் ஏற்றத்தாழ்வுகள் பெண்களின் உயிரியல் தாழ்வுநிலையை (BIOLOGICAL INFERIORITY) அடிப்படையாகக் கொண்டவை. ஆனால் இசுலாத்தில் பெண்களின் தாழ்வு நிலை மீது அவ்வாறான நம்பிக்கை இல்லை. அதற்குமாறாக பெண் ஆற்றல்வாய்ந்த ஆபத்தான ஒரு உயிரி என்ற ஊகத்தின் அடிப்படையின் மீதுதான் மொத்த அமைப்புமே இருக்கிறது. எல்லாப் பாலியல் நிறுவனங்களும் (பலதாரமணம், மனைவியை தள்ளி வைத்தல், பாலியல் பிரிவினைஇன்னபிற) அவளது ஆற்றலை கட்டுப்படுத்தும் உத்திக்கானவை எனப் புரிந்து கொள்ளப் பட்டிருக்கிறது.

இது மேற்கத்திய மற்றும் அரபுப்பெண்களின் விடுதலைக்கான

போராட்டத்தின் அடிப்படை வேறுபாட்டை காட்டுகிறது. பெரும்பாலும் இசுலாமியராகவுள்ள அரபுப்பெண்கள் பொதுவாக ஆண்களுக்கு நிகரான ஆற்றல் தங்களிடம் மிகுந்துள்ளது பற்றி விழிப்புணர்வுடன் இருக்கிறார்கள். அவர்கள் மீதான ஒடுக்குமுறை உயிரியல் ரீதியானதாக இல்லை. மாறாக, வெளிப்படையாக அரசியல், சமூகம் மற்றும் மதரீதியானதாக இருக்கிறது.

உதாரணமாக, நான் குழந்தையாக இருந்தபோது புத்தகங்கள் படிப்பதிலும், கேள்விகள் கேட்பதிலும் அதிகநேரம் செலவிட்டேன். எனது குடும்பத்தின் குலமுதல்வரான எனது தாத்தா அவர் காலமாகிறவரை (ஒரு வேளை அதன்பின்னும் கூட) என்னைக் கூர்ந்து கவனித்து வந்தார். இசுலாத்தின் கொள்கைகளை அணுக்கமாகக் கடைப்பிடித்து வந்த அவர் பெயர்பெற்ற மதத்தலைவராக இருந்தார். ஒருநாள் என்னை முக்கிய விருந்தாளிகளைப்போல் முன்னறையில் அமரச்செய்து எனது ஆர்வங்களை கவனித்து வருவதாகவும் எனது அறிவாற்றலின் திறமை வளம்மிக்கதாக இருப்பதாக தான் நம்புவதாகவும் அவர் கூறினார். தான் வயதானவர் என்றும் நான் மிகவும் இளமையாக இருப்பதாகவும் குறிப்பிட்டார். இருந்தபோதிலும் இரண்டு விசயங்களை எனக்குச் சொல்வதாகவும், அதை நான் வயதானவளாக ஆகும்வரை மனதில் வைத்திருக்கவேண்டும் என்றும் சொன்னார். அவர் சொன்னார், "நீ மிகவும் இளமையானவளாக இருப்பதால் இப்போது இதைப் புரிந்து கொள்ள முடியாது. ஆனால் இவற்றை நினைவில் வைத்துக் கொள். நீ வளர்ந்த பின் இவற்றைப் புரிந்து கொள்வாய்," பின்னர் அவர் மதம் பற்றிய மறைபொருளான (MYSTICAL) விளக்கம் ஒன்றும், அரபு உலகில் காலனித்துவம் மற்றும் ஏகாதிபத்திய பிரச்சனை குறித்த ஒன்றுமான இரண்டு சுருக்கமான போதனைகளை எனக்கு வழங்கினார். நானும், எனது தந்தையும் அவரது வார்த்தைகளில் மனம் மகிழ்ந்தோம். நாங்கள் இருவருமே எனது தாத்தா அத்தகைய உரையாடலை தனது பேரனோடு அல்லாமல் பேத்தியோடு நிகழ்த்தியதை வழக்கத்திற்கு மாறானதாகக் காணவில்லை. காரணம் இசுலாமைப் பொறுத்தவரை அது பெண்களை இயல்பிலேயே தாழ்ந்தவர்களாகவும், திறமைக்குறைவானவர்களாகவும் கருதியதில்லை. அதற்கு மாறாக பெண்கள் ஆண்களைப் போலவே திறமை உடையவர்களாக இருக்க முடியும் என்றும் அதனால் தான் இசுலாமிய ஆணாதிக்கத்தில் குறிப்பிட்ட சில கட்டுப்பாடுகள் அவசியப்படுகிறது என்றும் இசுலாம் கருதியது. அதே தாத்தா சில ஆண்டுகளுக்குப் பின்னால் எல்லாப்பேத்திகளும் நான் உள்ளிட்டு தங்களது முடியையும், உடலையும் வெளியில் தெரியாமல் மறைத்துக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தினார்.

பெய்ரூட்டில் இருக்கும் அமெரிக்கப் பல்கலைக் கழகத்தில் நான் படித்த கல்லூரி நாட்களிலும், பின்னர் அமெரிக்காவிலும் ஒரு பெண் என்ற காரணத்தால் எனது திறமைகள் கேள்விக்குள்ளாக்கப்பட்டதை நான் காண நேர்ந்தது. நான் வளர்ந்த பின்னணியிலிருந்து பார்க்கும்போது அத்தகைய கேள்விக்குள்ளாக்கல் என்பது புதிராக இருந்ததோடு குழப்பமளிப்பதாகவும் இருந்ததை நான் கண்டேன். இதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. மேலும், எனது மேற்கத்தியக் கல்விப் பின்னணியில் வைத்துப் பார்க்கும்போது பெண்களைக் கட்டுப்படுத்தி வைக்கும் மரபுவழியான இசுலாமிய வழிமுறைகளை, என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. இவ்வகையில் (பெண் விடுதலை) இயக்கம் பற்றிக் கேள்விப்படுவதற்கு முன்பே ஒரு பெண்ணிய விழிப்புணர்வு நிலையை வளர்த்துக் கொண்டேன். எனது சொந்தவரலாறு அந்தத் தேவையை ஏற்படுத்தி இருந்தது.

***மேற்கத்தியமயமாதலின் எதிர்மறைத்தாக்கம் :***

மறுபுறம் பெண்ணின் அனுபவத்திலிருந்து முற்றிலும் மாறுபட்ட விதத்தில் அரபு ஆண் மேற்குக் கலாச்சாரத்தின் தாக்கத்தை உணர்ந்திருந்தான். மரபான கட்டுப்பாடுகளற்ற வாழ்க்கை எப்படி இருக்கக்கூடும் என்பது குறித்த சில மங்கலானகூறுகள் மேற்குக்கலாச்சாரத்தில் தென்படுவதாக பெண்கள் கண்டனர். ஆனால் ஆணோ சமூகத்தில் ஆணின் ஆதிக்கம் மறுஉறுதி செய்யப்படுவதாகக் கண்டான். இதனால் மேற்கத்திய அதிகாரத்தால், தான் ஆதிக்கம் செய்யப்படுவதை அரபுஆண் மறுத்த போதிலும் அவனுடைய மரபான நம்பிக்கைகளின் தொகுப்பினுள் மேற்குலக ஆணாதிக்கத்தை ஐக்கியப்படுத்திக் கொள்ள முற்றிலும் தயாராக இருந்தான். இதன் விளைவாக, பெண்கள் இயல்பிலேயே தாழ்ந்தவர்கள் என்ற மேற்கத்தியப் பார்வையின் பாதிப்பிற்கு நவீனஅரபியன் உள்ளான அதே வேளையில் அவன் அவளது சக்தியின் மேல் பெரும்பாலான மரபான கட்டுப்பாடுகளைத் தொடர்ந்து கைக் கொண்டும் வருகிறான். அரபுஆண் வெளியே (PUBLICLY) தன்னைப்பற்றி ஒரு நவீனப்படிமத்தை முன்னிறுத்த வேண்டியத் தேவையினால் பெரும்பாலும் இந்த உண்மையை மறைத்துக் கொள்கிறான். ஆனால் உண்மையான நடைமுறையில் குறிப்பாக அவனது தனிப்பட்ட வாழ்க்கையில் அரபுஆண் இந்த புதியகலவைப் பெண் ஒடுக்குமுறையை தொடர்ந்து சுதந்திரமாக வெளிப்படுத்தி வருகிறான். இவ்வாறாக நவீனமயமாதல் அரபு பெண்ணுக்கு அவள் இழந்திருந்த சில உரிமைகளை மீட்டுத்தந்தது என்றபோதிலும் அதற்கு உயர்ந்தவிலை தரவேண்டியிருந்தது. பெண் இயல்பாகவே தாழ்ந்தவள் என்று அறிவித்ததன் மூலம் இது

(நவீனமயமாதல்) சமூகத்தில் அவளது தகுதியைப் படிப்படியாக அழித்துவிட்டது. அதே வேளையில் பெரும்பாலான மரபான ஒடுக்குமுறை வழிமுறைகளைக் கடைப்பிடித்தும் வந்தது. நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக தன்னுரிமை (SELF-DETERMINATION) இல்லாமல் இருந்த ஒரு நிலையில் நவீனமயமாதலும் சேர்ந்து பிரச்சனையை மேலும் சிக்கலானதாக ஆக்கி இசுலாமியப் பெண்களுக்கு சுயமரியாதைக்கான எந்தவொரு வாய்ப்பையும் மறுத்தது. நவீனமயமாதல் குறித்து சில பெண்கள் அமைதிஇழந்து இருப்பதற்கும், மதச்சட்டத்தைப் பின்பற்ற அவர்கள் அழைப்பு விடுத்தற்குமான காரணங்களை இது ஓரளவு விளக்கும் (அரபு அல்லாத இசுலாமிய நாடான ஈரானின் நிகழ்ச்சிகளைக் கவனியுங்கள்).

*மார்க்சிய அமைப்புகள் :*

இந்த வரலாற்றுப் பின்னணியிலிருந்து லெபனானில் செயல்பட்டு வந்த லெபனான், பாலஸ்தீன மார்க்சிய அமைப்புகளின் செயல்பாடுகளை நன்றாகப் புரிந்துகொள்ளவும், மதிப்பிடவும் முடியும். இந்த அமைப்புகள் பெண்களுக்கு எதிராக ஒரு நவீன அடக்குமுறைப்போக்கை தொடர்ந்து வெளிக்காட்டி வந்தன. நிகழ்ச்சிநிரலில் பெண்ணின் விடுதலை இடம் பெற்றிருப்பது உறுதிதான். ஆனால் எந்த விதமான விடுதலை? சீற்றமிக்க பால்ஸ்தீனப் பெண்கவிஞர் *மே சயிக்* (MAY SAEGH) கருத்துரைக்கிறார்:

பாலஸ்தீன விடுதலை இயக்க (PLO) சாசனம் ஆண் பெண் சமத்துவத்தைப் பற்றியும், புரட்சியில் பெண்கள் பங்களிப்பை உயர்த்துவது (TARQIA) பற்றியும் பேசுகிறது. "ஆகா, உயர்த்துவது! அந்த வார்த்தை தவறானது. அவர்கள் பியானோ வாசிக்க அல்லது நீர்வண்ணங்களைத் தீட்ட அல்லது வேறுசிலவற்றை கற்றுக் கொடுப்பது போல பெண்களை உயர்த்துவது என்ற விசயமும் கற்றுத்தரும் ஒன்று எனக் கூறுகிறார்கள். உண்மையில் இதனால் சமத்துவமும் கிடைக்காது. உயர்வும் கிடைக்காது. மேலும் அதைச்செயல்படுத்த எந்த ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட திட்டமும் கிடையாது" முதன்மை முரண்பாடு, இரண்டாம் நிலை முரண்பாடு குறித்த மார்க்சியக்கருத்துக்கள் தங்கள் அமைப்பிற்குள் எழும் (பெண் விடுதலை தொடர்பான) குற்றச்சாட்டுக்களை அமைதிப்படுத்தவே பெரும்பாலும் பயன்பட்டு வருகிறது. லெபனான், பாலஸ்தீன மக்கள் ஒருபுறமும், ஏகாதிபத்திய சக்திகளும், அதன் உள்ளூர் முகவர்கள் மறு புறமும் நிற்கின்றனர். இதுவே முதன்மைமுரண்பாடு என வாதிடப்படுகிறது.

குறிப்பாக அமைப்பிற்குள்ளும், பொதுவாக சமூகம் முழுக்கவுமுள்ள

ஆண் x பெண் முரண்பாடுகள் இரண்டாம் நிலையிலானவை, முதன்மை முரண்பாடு தீர்க்கப்படும் வரை இந்த இரண்டாம்நிலை முரண்பாடு முற்றிவிடாமல் பார்த்து வரவேண்டும் என வாதிடப்படுகிறது. இவ்வாறாக பெண்ணிய விமர்சனங்களையும், கோரிக்கைகளையும் அமைப்புக்களுக்குள் எழுப்புவது பிரிவினைவாதமாகவும், முதலாளியவாதமாகவும், பொறுப் பற்றதாகவும் அடிக்கடி பார்க்கப்பட்டது. இதனிடையே பெண்கள் சகிப்புத்தன்மையோடு தொடர்ந்து உழைக்கவும், உயிர்த்தியாகம் செய்யவும் வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. அல்ஜீரிய விடுதலைப் போரின் போது இதுபோன்ற சூழ்நிலை உருவானது. அல்ஜீரியப்போர் முடிந்ததும் பெண்கள் மீண்டும் வீட்டுக்கு திருப்பி அனுப்பப்பட்டார்கள் என்பதை பாலஸ்தீனியப் பெண்கள் நன்றாக அறிந்து வைத்திருந்தார்கள். இதனால்தான் பாலஸ்தீனப் பெண்கள் தங்கள் பிரச்சனைகளை ஆண்கள் புறக்கணித்தபோதிலும் தொடர்ந்து பெண்விடுதலைப் பிரச்சனையை எழுப்பிக் கொண்டிருந்தார்கள்.

அமைப்புக்களுக்குள் மாற்றத்தைக் கோரும் பெண்களின் குரலை நசுக்க அடிக்கடி பயன்பட்ட இன்னொருவாதம் அமைப்புகள் செயல்படும் சமூகச்சூழல் பெரிதும் இசுலாமியச் சூழல், பழமைச் சூழல் என்பது ஆகும். ஆகவே, சமூகவிழுமியங்களை எதிர்ப்பது என்பது அமைப்பிற்கு இருந்துவரும் மக்கள் ஆதரவைக் குறைத்து விடும். உதாரணமாக, பாலஸ்தீனமக்கள் விடுதலைக்கான மார்க்சிய சனநாயக முன்னணி (DPFLP) ஜோர்டானில் பல ஆண்டுகளுக்கு முன்பே இந்த சமூகச்சூழலை புறக்கணித்து விட்டு ஆண்களும் பெண்களும் ஒரு சேரத்தங்கும் பயிற்சிக் கூடங்களை அமைத்தது. அந்தப் பகுதியில் வாழ்ந்த ஜோர்டானியர்கள் இதனைப் பார்த்து அச்சங் கொண்டனர். அத்துடன் அந்த அமைப்பு கணிசமான அளவு மக்கள் ஆதரவை இழந்தது.

உண்மையிலேயே இந்த அமைப்புகள் பழைமைப்பற்று கொண்ட சமூகச்சூழலில் செயல்பட வேண்டியிருந்ததால் ஒரே பயிற்சிக் கூடத்தில் ஆண்களும் பெண்களும் சேர்ந்து தங்குவது என்ற விசயம் மட்டுமல்ல. பெண்கள் பயிற்சியில் ஈடுபடுவதே கூட எதிர்ப்பிற்குள்ளானது. அம்சமீர் (UM SAMIR) என்ற பாலஸ்தீனியப் பெண் தன் சொந்த அனுபவத்தை விவரிக்கிறார்.

"1968-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் *காராமெக்* (KARAMEH) போருக்குப் பின் நான் *பதெக்* (FATEH) விடுதலை அமைப்பில் இணைந்து ராணுவப்பயிற்சி பெற்றேன். 1970-ஆம் ஆண்டு போர்க்காலத்தில் நான்

ராணுவதளத்தில் காலங்கழித்த போது அந்த நிலையில் அங்கேயே தூங்குவதை குடும்பங்கள் கண்டனம் செய்யவில்லை. ஆனால் இதற்கு முன்பு நிலைமை வேறாக இருந்தது. நான் தளத்தில் பத்து நாட்கள் தங்கியிருந்து விட்டு உடல் நாறிப்போய் அழுக்கடைந்து, குளியலுக்காகவும், மாற்றுடைகளுக்காகவும் ஏங்கிப்போய் திரும்பி வந்தது நினைவுக்கு வருகிறது. எனது தந்தை மிகவும் மோசமாக என்னைத் திட்டினார். நீ எங்கே இருந்து கொண்டிருக்கிறாய்? அமெரிக்காவிலா என்ன? நீ உன்னை யாரென்று நினைத்துக் கொண்டிருக்கிறாய்? நாம் யாரென்று நீ நினைத்துக் கொண்டிருக்கிறாய்?" இவ்வாறாக தொடர்ந்து திட்டினார். அவர் வழக்கமாக என்னை திட்ட மட்டுமே செய்வார். ஆனால் மற்ற தந்தையர்களோ மகள்களை அடித்து அவர்களைப் பூட்டி வைத்து கொன்றுவிடுவதாகக்கூட மிரட்டுவார்கள். அதனால் இவ்விசயத்தில் நான் அதிர்ஷ்டசாலி. ஆனால் செப்டம்பரில் சண்டை தொடங்கியதும் எல்லா இளம்பெண்களும் வீட்டை விட்டு வெளியில் தூங்குவது வழக்கமான செயலாகிவிட்டது. ஏனென்றால் ஒவ்வொரு இரவும் வீட்டுக்கு வருவது என்பது ஆபத்தானதாக இருந்தது. அதனால் அவர்களது குடும்பங்கள் அதை ஏற்றுக் கொள்ள வேண்டியிருந்தது." சமூகச்சூழல் சார்ந்த விழுமியங்களின் கடுமையைத் தணிக்கவும் மாற்றவும் முடியும் என்பது தெளிவு. எனினும் சமூகச் சூழலின் விழுமியங்களுக்கு காட்டப்படும் எதிர்ப்பை ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் தவிர்க்க வேண்டியிருப்பதன் அவசியத்தை ஒத்துக் கொண்டபோதிலும், மார்க்சியஅமைப்புகளுக்குள் இடம் பெற்றிருக்கும் பால்வாத விழுமியங்களை நாம் ஒப்புக் கொள்ளக் காரணமேதும் இல்லை. அமைப்பு உறுப்பினர்களின் பொது நடத்தை குறித்தும், அவர்களுக்கிடையே நிலவும் உறவுகள் குறித்தும் முன் வைக்கப்பட்டுள்ள சில பெண்ணியக் கோரிக்கைகளை உறுதிப்படுத்த மேற்சொன்னவாதம் பெரிதும் பயன்பட முடியும். அமைப்புசார்ந்த உள்ளுறவுகளை நுண்மையாக ஆய்வு செய்வதை தவிர்ப்பதற்கு இதைப் பயன்படுத்த முடியாது. இந்த அம்சத்தைத் தெளிவாக விளக்க இந்த அமைப்புகளுக்குள் இருந்த சில உறவுகளை நாம் ஆய்வு செய்யலாம்.

பாலஸ்தீனப்பெண்கள் பொதுச் சங்கம் வெளியிட்ட நூலொன்றில் பின்வரும் விசயம் இடம் பெற்றுள்ளது. *கதிஜா அபு அலி* (KHADIJA ABU ALI) என்ற பாலஸ்தீனப் பெண் மார்க்சியம், மார்க்சியமல்லாத வேறு அமைப்புகள் உள்ளிட்டு பல்வேறு பாலஸ்தீன அமைப்புகளைச் சார்ந்த பெண்களிடம் அவர்களுடைய அமைப்புகளில் இடம் பெற்றிருந்த ஆண் பெண் உறவு நிலைகள் குறித்து கேள்விகள் கேட்டார். இந்த எல்லா அமைப்

புகளிலும் மரபுவழிப்படிதான் ஆண் பெண்ணோடு உறவு வைத்திருந்தான். இந்த அமைப்புகளிலிருந்த பெண்கள் தங்களது அந்தரங்கவாழ்வு பற்றி ஆண் தோழர்கள் அடிக்கடி பரப்பும் வதந்திகளால் பாதிக்கப்பட்டிருந்தார்கள். இந்தக் காரணத்தால் பல போராளிகள் தங்களது மனைவிகளையும், சகோதரிகளையும் தங்களது அமைப்புகளில் சேருவதை தடுத்துவந்தார்கள்.

எனக்குத் தெரிந்த ஒரு சம்பவம் பின்வருமாறு: பாலஸ்தீன மார்க்சிய அமைப்பொன்றின் தலைமை உறுப்பினர்களில் ஒருவர் தனது அமைப்பில் பயிற்சி பெற்றுவந்த ஒரு பெண்ணைக் காதலித்தார். பின் அவர் அந்தப் பெண்ணை திருமணம் செய்து கொண்டவுடன் அமைப்பிலிருந்து அப்பெண்ணை வெளியேறச் செய்துவிட்டார். ஒரு நாள் மாலை வேளையில் அவர்களிருவரையும் நான் சந்தித்தேன். அந்தப் பெண் வெளியேறியது குறித்து அவர்களைக் கேட்டேன். நான் எழுப்பிய ஒவ்வொரு கேள்விக்கும் அவர்தான் பதிலளித்தார். ஆனால் அந்தப் பெண் ஒரு வார்த்தை கூடப் பேச அவர் வாய்ப்பளிக்கவில்லை.

லெபனான் மார்க்சிய அமைப்புகளிலும் இந்தப் பிரச்சனை உள்ளது. கட்சியின் வாராந்திர வெளியீட்டில் பெண்களின் உரிமைகுறித்த கட்டுரை ஒன்றை பிரசுரிக்க பெண் உறுப்பினர்கள் அவர்களது சக ஆண்போராளிகளைச் சம்மதிக்க வைக்க ஓராண்டுகாலம் பிடித்தது. மார்க்சியரான கணவன் கட்சியினுள் இருக்கும் பதவிகளில் தொடர்ந்து முன்னேறிச் செல்ல அவரது மனைவியோ வீட்டு வேலையிலேயே சிக்கிக் கொண்டிருந்தார்.

அபிர் (ABIR) என்ற பாலஸ்தீனப் பெண் இவ்வாறு தொகுத்தளிக்கிறார்: “ஆண்கள் எனது தோழர்கள். ஆனால் உண்மையில் நான் அவர்களுக்குச் சமமானவர் என்பதில் அவர்களுக்கு ஆழமான நம்பிக்கை இல்லை. எங்கள் அரசியல் வளர்ச்சி முன்னேற்றமான திசையில் இருக்கிறது. ஆனால் சமூக வளர்ச்சியோ அதற்குச் சமமாக இல்லை. எங்கள் அரசியல் கால்கள் முன்னேறிச் செல்கின்றன. ஆனால் எங்கள் சமூகக் கால்களோ பின்னோக்கி இழுக்கிறது. நொண்டியடிக்கிறது. எனக்கு 36 வயது. இது வரை நான் பெண்கள் குறித்த மரபான பார்வைகளை உதறித்தள்ளிய ஒரு ஆணைக்கூட சந்தித்ததில்லை. இந்தச் சமுகத்தில் ஒரு அரபுப் பெண் வாழவிரும்பினால் அவள் திருமணம் செய்து கொண்டுதான் ஆக வேண்டும் என்று நான் உணர்கிறேன். நாம் தனியாக சுதந்திரத்தோடு வாழ முடியாது. புரட்சிகாரனான என் சகோதரன் கூட நான் ஒரு ஆணோடு இணைந்து இருப்பதை சம்மதிக்கமாட்டான். சம்மதிக்க முடியாது. அதனால் இந்தச்

சமூகச்சூழலில் ஒய்வாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்க விரும்பினால் நீங்கள் திருமணம் செய்துகொள்ள கட்டாயப்படுத்தப் படுகிறீர்கள். ஒருவர் யாரேனும் ஒருவருடன் ரகசியமாக வாழ இயலாது. அதை வெளிப்படையாகச் செய்தால் எல்லோரும் உங்களோடு கொண்டுள்ள உறவை மாற்றிக் கொள்கிறார்கள். இந்த விசயங்களில் தலைவர்கள் போலித்தனமாகவே இருக்கிறார்கள். பொதுக் கூட்டங்களில் பெண்களை விடுதலை செய்வதைப் பற்றிப் பேசுகிறார்கள். ஆனால் ஒருபெண் அவளது கணவனின் உடைகளை தேய்ப்பது, அவனுக்கு உணவு சமைப்பது, போராடுபவனுக்கு இன்பமும் அமைதியும் மிக்க துணையை நல்குவது ஆகியனவே அவளது புரட்சிகரக்கடமையாகும் என்றே அவர்கள் நம்புகிறார்கள். இதை சிலர் வெளிப்படையாகவே சொல்கிறார்கள்".

லெபனான், பாலஸ்தீனப் பெண்களின்விடுதலைக்கு இன்றைய போர்க்காலச் சூழ்நிலையும் இன்னொரு த்டைக்கல்லாகவே சேர்ந்து கொண்டது. பெண்கள் தங்கள் போராட்டத்தை கைவிட்டு விட்டு போரில் பங்கெடுக்க வேண்டியிருப்பது ஒரு தடையாக இல்லை. மாறாக அதைவிட அடிப்படையானதொரு காரணம் இருக்கிறது. தினந்தோறும் ஆண் மரணத்தை எதிர்கொள்வதால் இறப்பற்ற வாழ்விற்கான அவனது விருப்பம் மிகவும் பெரிதுபடுத்தப்படுகிறது. இதன் விளைவாக ஆண் தன் பேச்சாலும், செயல்களாலும் மாத்திரமின்றி இனப்பெருக்கத்தின் மூலமாகவும் தன்னை அழிவற்றவனாக ஆக்கமுயல்கிறான். இந்தப் பொதுவான எதார்த்தம் லெபனான், பாலஸ்தீனக்களத்தில் உண்மையாக உள்ளது. உதாரணமாக, பாலஸ்தீனக்களத்தில் காணும் பிறப்பு விகிதத்தின் அதிகரிப்பை கவனியுங்கள். மேசயிக் சொல்லியுள்ளது போல, "பாசறைகளில் குழந்தைக் கட்டுப்பாட்டுத்திட்டம் எதுவுமில்லை. ஏனென்றால் போரில் ஏற்படும் பாலஸ்தீனப் பேரிழப்புகளை பெண்கள் ஈடுசெய்யவேண்டும் என ஆண்கள் விரும்பினார்கள். வேறுவார்த்தைகளில் சொன்னால் மறுஉற்பத்தி என்பது பெண்களின் தேசியக்கடமை என்னும் தகுதிக்கு உயர்த்தப்பட்டது. மேசயிக்கின் கூற்றுக்கு மாறாக பெண்களின் விருப்பத்தின் பேரில்தான் அனைத்துக் குழந்தைகளும் பிறந்திருக்கின்றனவா என்பதில் ஒரு தெளிவில்லை. *பாகிமா* (FAHIMEH) என்ற இன்னொரு பாலஸ்தீனப் பெண் சொல்கிறார்.

"ஒரு சமயம் நாங்கள் குழந்தைகள் கட்டுப்பாடு சம்பந்தமாக சில காரியங்கள் செய்தோம், ஐ.நா.வின் குடும்பநலத்திட்ட அலுவலகத்திலிருந்து திரைப்படங்களையும், அதுபற்றிய விவரங்களை எடுத்துக் கூற ஒரு பெண்

மருத்துவரையும் வரவழைத்தோம். பெண்களில் சிலர் கடவுளே இந்தக் குழந்தைகள் எல்லாம் நாசமாய்ப் போக என்று சலித்துப் போனதாக ஒப்புக் கொண்டார்கள். ஆனால் பெரும்பாலான பெண்கள் கருத்தடை மாத்திரைகள் அவர்களுக்கு கேடுவிளைவிக்கும் என்றோ அல்லது அவர்களது கணவன்மார்கள் அவர்களிடம் மாறுபட்ட அணுகுமுறையை மேற்கொள்வார்கள் என்றோ அச்சப்பட்டார்கள்".

லெபனான், மார்க்சிய அமைப்புகள் பெண்ணியக் குறிக்கோள்களுக்கு உதட்டளவில் மட்டுமே சேவை செய்து வருகின்றன என்பதே இங்கு நமக்குக் கிடைக்கும் முடிவாகும். வீட்டில் பெரும்பாலான பெண்களின் மீது செலுத்தப்பட்டு வந்த பழைய வழிமுறைகளிலான ஒடுக்குமுறையை உடைப்பதற்கு இந்த அமைப்புகள் பங்களிப்பு செய்துள்ளன என்றபோதிலும் அதைக்கூட அமைப்புகளின் தேவைகளை ஒட்டியே அவ்வாறு செய்திருக்கின்றன. மற்ற இடங்களில் வழக்கமாகச் சொல்லப்படுகின்ற முதன்மை முரண்பாடு அல்லது கணவன் (இடங்களைப் பொறுத்து ஏதேனும் ஒன்று) முன்னிலை எடுத்துக் கொண்டது.

லெபனான், பாலஸ்தீன மார்க்சிய அமைப்புகள் பெண்ணியப் புரட்சியின் இலக்குகளை ஏற்றுக் கொள்வதில் தோல்வியுற்றது ஒரு விபத்தல்ல. பெண்ணியக் கோட்பாடுகளை ஏற்று கொள்வதற்கான போதிய அடிப்படை ஏதும் இந்த அமைப்புகளில் இதுவரை இடம் பெறவில்லை. அப்படியொரு அடிப்படை ஏற்பட்டிருந்தால், அது பெண்ணியக் கோட்பாடுகளை ஏற்றுக் கொள்வதையும், அது குறித்து தன் தொண்டர்களுக்குக் கல்வி அளிப்பதையும் அவசியமாக்கியிருக்கும். மேலும் இந்த அமைப்புகளின் தலைமையிலும் உறுப்பினர் எண்ணிக்கையிலும் ஆண்களின் எண்ணிக்கையே மிகுதியாக இருக்கிறது. (இந்த அமைப்புகளின் செயல்முறைகளால் பெண்கள் திரும்ப திரும்ப ஊக்கமிழந்து வருகிறார்கள். இருப்பினும்கூட சிலர் மட்டும் தொடர்ந்து முயன்று வருகிறார்கள்) அவர்கள் ஆண்களாக இருப்பதால் ஆணாதிக்கத்தை ஏதாவதொரு வடிவத்தில் தொடர்ந்து தக்க வைத்துக் கொள்வதில் சுயநலமும் பழம்ஆர்வமும் அவர்களிடம் அடங்கி இருக்கிறது.

ஒரு பெண்ணியப் புரட்சி இந்த அமைப்புகளை சமீபகாலத்தில் துடைத்தெறியும் என்ற நம்பிக்கை எனக்கில்லை. தங்கள் சொந்த இருப்பே ஆபத்தில் இருப்பதாக ஆண்கள் உணர்வதற்குக் காரணமாக இருக்கும் சூழ்நிலைகள் ஆணாதிக்கமுறைமைக்கு ஆதரவாக ஆண்களின் அணுகுமுறைகளைக் கடுமையாக்குகின்றன. இதற்கு மாற்றாக அமைதியும்,

பாதுகாப்பான சூழ்நிலைகளுமே பெண்ணியம் மலர்வதற்கு ஏதுவான சூழலாகும். பெண்கள் போரை வெறுப்பதற்கு ஒரு வேளை இதுதான் அடிப்படைக் காரணமாக இருக்கும்.

*முடிவுரை :*

முதலாளியம், இனவாதம் ஏகாதிபத்தியம், ஆகியவற்றை எதிர்த்த போராட்டமானாலும் சரி, மற்றவர் மீது ஆதிக்கம் செலுத்த மனிதன் எடுக்கும் எந்தவொரு முயற்சிக்கும் எதிரான போராட்டமானாலும் சரி, செயல்தந்திர ரீதியில் அவற்றின் ஆணாதிக்கஇயல்பு பற்றிய புரிதலை அடித்தளமாக கொண்டதாகவே அப்போராட்டங்கள் இருக்கவேண்டும். ஆகவே, அதை பெண்ணியப் போராட்டத்தின் பகுதியாகவும், இன்றியமையாக் கூறாகவும் கருத வேண்டும். உலகெங்கிலுமுள்ள சோசலிச, தேசிய, பிற விடுதலை இயக்கங்களை - அவற்றில் பெண்ணியத்திற்கு எதிரான செயல்முறைகள் இடம் பெற்றிருந்த போதிலும்-ஆதரிக்க இப்பார்வையே உறுதியும், தெளிவும் கொண்ட அடித்தளத்தை வழங்குகிறது. சரியான பெண்ணியப் போராட்ட உத்திகள் இடம் பெற்றிருந்தால் இந்த அமைப்புகள் ஆணின் மேலாட்சிக்கருத்தின் படிப்படியான தோல்வியை முன்னறிவிக்கும்.

மேலும் இந்தப்புரிதல் மேற்கத்திய பெண்கள் இயக்கங்களுக்கும், மூன்றாம் உலகம் என்று அழைக்கப்படுகின்ற பெண்கள் இயக்கங்களுக்கும் இடையில் அடிக்கடி தோன்றும் பிளவை அகற்றுவதற்கு ஒரு அடிப்படையை வழங்குகிறது. 1980-ல் *கோபன்கேகனில் அரசல்லாத அமைப்புகள் கூட்டமைப்பு* (NON GOVERNMENTAL ORGANISATIONAL FORUM) ஐ.நா.வுடன் இணைந்து நடத்திய பெண்களுக்கானப் பத்தாண்டு மாநாட்டில் மேற்குநாடுகளைச் சேர்ந்த பெண்கள் மூன்றாம் உலகப் பெண்கள் மீது பின்வரும் விமர்சனத்தை முன் வைத்தனர். மூன்றாம் உலகை இன்று தாக்கி வரும் அரசியல் பிரச்சனைகளை உதாரணமாக ஆக்ரமிப்பு, போர், சித்ரவதை, பன்னாட்டுநிறுவனங்களின் பாத்திரம் ஆகியவற்றை முன்னணிக்கு கொண்டு வருவதன் மூலம் உண்மையான பெண்ணியர்களாக இருப்பதிலிருந்து மூன்றாம் உலகப் பெண்கள் தடம் புரண்டுவிடுகின்றனர் என விமர்சித்தனர். இது "*மூன்றாம் உலகின் அரசல்லாத அமைப்புகளின் உட்குழு 1980*" (THE WORLD CAUCUS OF THE 1980 NGO FORM) என்ற அமைப்பை உருவாக்குவதற்கு இட்டுச் சென்றது. போராட்டங்கள், நம்பிக்கைகள், பிரச்சனைகள், ஆகிய அம்சங்களில் மேற்கத்திய நாடுகளிலிருந்து வேறுபட்டு நிற்கும் மூன்றாம் உலகநாடுகளின் பெண்கள் மட்டுமே கலந்து கொள்ளும் மாநாடு ஒன்றுக்கு அழைப்புவிடுத்தது. இந்த விசயத்தில் உண்மை

என்னவென்றால், உலகெங்கும் நடைபெற்றுவரும் பெண்ணியப் போராட்டங்களில் ஏற்றத்தாழ்வுகள் காணப்பட்ட போதிலும் மூன்றாம்உலகின் அரசியல் பிரச்சனைகள் சாராம்சத்தில் ஆணாதிக்கமாகவே இருக்கின்றன. அதனால் அவற்றை சர்வதேச பெண்ணியப் போராட்டத்தின் ஒரு பகுதியாக செயலூக்கத்துடன் விரும்பி ஏற்க வேண்டியதாக இருக்கிறது. பெண்ணிய இயக்கம் என்பது சலித்துப் போன வெள்ளை இனப்பெண்களின் பொழுதுபோக்கு அல்லது மூன்றாம் உலகைச் சேர்ந்த ஒடுக்கப்பட்ட மக்களைப் பிரிக்கச் செய்யும் ஏகாதிபத்திய முயற்சி என்கிற மோசமான ஐயப்பாடுகளை போக்கவும் இத்தகைய நிலைபாடு உதவும். பெண்ணியக் குறிக்கோளை மேம்படுத்தவும், சர்தேச பெண்ணிய ஒற்றுமையை வலுப்படுத்தவும் இது உதவும்.

இறுதியாக இந்தக் கட்டுரையில் வரையறுத்துக் காட்டப்பட்டுள்ள கோட்பாடு ஆணின்ஆதிக்கத்தை அழிக்கக்கூடிய போர்த்தந்திரமும் செயல் தந்திரமும் ஒருங்கே கொண்ட பெண்ணியக் கொள்கைகளை முறைப்படுத்து வதற்கான வலுவான அடித்தளத்தை வழங்கும். பெண்விடுதலை படிப்படியாகவே நிகழப்போகிறது. அது ஆணின் அடக்குமுறைக் கருவிகளின் நடுநிலையைக் கட்டுப்படுத்தும். பெண்கள் மீது ஆண்கள் கொண்டுள்ள ஆழமான பகைமையையும் கட்டுப்படுத்திவிடும். சிக்கலானதாகவும், ஆபத்தானதுமான செயல்முறையாக மாறப் போகிற இதில் நமக்கு வரும் பேரிடர் என்பது அதிகாரப் போராட்டத்திற்கான ஆணின் தர்க்கத்துக்கு நாம் பணிந்து விடுவதாகத்தான் இருக்கும். எப்படியிருந்தபோதிலும், அதிகாரச் செயல்தந்திரங்களை முழுமையாக கைவிடுவது என்பதுகூட எதார்த்தமானதாக இருக்காது. இது பெண் விடுதலையை மிகவும் சிக்கலான, மிகவும் நுணுக்கமான பணியாகவும் ஆக்குகிறது.

# மார்க்சியம், பெண்ணியம், இனவாதம் பொருந்தாத முக்கூட்டு

குளோரியா ஜோசப்

இவர் சுறுசுறுப்பான கறுப்பினப் புரட்சிகரப் பெண்ணியர் ஆவார். இவரது பெற்றோர்கள் மேற்கிந்தியத் தீவை சேர்ந்தவர்கள். இவர் சோசலிச அடிப்படையில் கறுப்பினப் பார்வையில் உலகைப் பார்ப்பவர். மாஸாசூசெட்ஸ் நகரில் ஆம்கெர்ஸ்ட் என்னுமிடத்திலுள்ள கேம்சிர் கல்லூரியில் தற்போது சமூகவிஞ்ஞானத் துறையில் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். சீனா, கியூபா, இந்தியா, ஆப்பிரிக்கா போன்ற நாடுகளுக்கு பயணம் செய்துள்ளார். "பெண்ணியப் பார்வைகளில் கறுப்பு வெள்ளை மோதல்கள்" என்பது இவரது மிகச் சமீபத்திய வெளியீடாகும்.

கார்ட்மன்னின் கட்டுரை "மார்க்சியத்திற்கும், பெண்ணியத்திற்கும் இடையே காணப்படும் மகிழ்ச்சியற்ற திருமணம்" பற்றிப் பேசுகிறது. ஆனால் ஆணாதிக்கமுறைமைக்கும் முதலாளியத்திற்கும் பிறந்த கள்ளக் குழந்தையைப் பற்றி அவர் தன் கட்டுரைத்தலைப்பில் குறிப்பிடவுமில்லை, அவ்விசயம் பற்றி கட்டுரைக்குள் ஏதும் பேசவுமில்லை. இப்பொழுது அந்தக் குழந்தை முழுவளர்ச்சி பெற்ற இளைஞனாகிவிட்டான். அவன் பெயர்தான் இனவாதம் (RACISM) ஆகும். ஆக, மார்க்சியத்தையும், பெண்ணியத்தையும் கடந்து ஒரு கொள்கையை உருவாக்கும் முயற்சியாய் எழுந்த கட்டுரைக்கு மிகப்பொருத்தமான தலைப்பு "மார்க்சியம், பெண்ணியம், இனவாதம் பொருந்தாத முக்கூட்டு'' என்பதாகவே இருக்க வேண்டும். கார்ட்மன் குறிப்பிடும் பெண்கள் எந்த அடையாளமும் இல்லாத வெளிப்படையான ஒரு தனிவகையான நடுத்தரவர்க்கப் பெண்ணியர்கள் ஆவார். ஒரு முற்போக்கான ஐக்கியத்திற்கான பாதையில் நடைபோட இவர்கள் அணியமாக இருப்பார்கள் என நம்ப முடியுமா? இதை நம்ப வேண்டுமெனில் அதற்குத் தரும் விலை அமெரிக்காவில் கறுப்பர்கள் என்ற ஒரு இனம் இருந்து வரும் எதார்த்தத்தை மறுக்க வேண்டியதாகத்தான் இருக்கும். கறுப்பின மக்கள் வாழ்வைப் பொறுத்த வரையில் இனவாதத்தின் பரிமாணம் மிக முக்கியமானது. பல்வேறுபட்ட சமூகக் குழுக்களுக்கிடையில் நிலவிவரும் உறவிற்கான அடிப்படையை அல்லது உறவின் பயன்களை ஒதுக்கி வைத்துவிட்டு இது (இனவாதம்) பற்றி குறிப்பாகப் பேசவேண்டும். வாய்ப்புக்கேடாக, நமது சமூகம் இனவாதத்தை நிறுவனமயமாக்கி ஒரு சிறப்பானப் பணியைச் செய்திருக்கிறது. இதன் நாசகரமானவிளைவு, வெள்ளையர்கள், கறுப்பர்கள் என்ற இரு தனித்தனியான சமூகங்கள் உருவாகியிருக்கின்றன. இதன் பின்விளைவு ஐக்கியம், ஒற்றுமை அல்லது கூட்டணிக்கான சூழல்கள் எழும்போதெல்லாம் இரு குழுக்களின் இணைப்பை தடுக்கும் சக்தியாக இனவாதம் விளங்குகிறது. பொது

லட்சியத்தை அடையத் தேவையான அமைப்பு ரீதியான, நீண்டகால ஒத்துழைப்பை இது தடுக்கிறது. ஆகவே கார்ட்மன் கட்டுரை, மார்க்சிய ஆய்விலும், பெண்ணிய ஆய்விலும் காணப்படும் குறைகளையும் வரையறைகளையும் கடக்க எடுக்கப்பட்ட ஒரு முயற்சியை வெளிப்படுத்திய அதே வேளையில், அதில் கறுப்பினப்பெண்ணைப் பற்றிய ஆய்வு காணப்படாததற்கும், ஒரு மணப்பெண் என்ற முறையில் அப்பெண்ணின் பங்கு பற்றி காணப்படாததற்கும் நான் புலம்பி அழவேண்டியிருக்கிறது.

மார்க்சியத்திற்கும், பெண்ணியத்திற்கும் இடையே ஒரு 'மகிழ்ச்சியான திருமணம்'' குறித்த ஒரு கொள்கையை உருவாக்குவதற்கு முன்பாக, ஒரு பரிமாணம் என்ற வகையில் இனவாதத்தின் மீது என் கவனத்தைக் குவிக்கிறேன். இதை நேரடியாக எதிர்கொள்ள வேண்டும். முற்போக்கு எண்ணம் கொண்ட எழுத்தாளர்கள், கறுப்பர்களுக்கு போதுமான, பொறுத்தமான அங்கீகாரத்தையும், மதிப்பையும் தரவேண்டும் என்ற என் எதிர்ப்பார்ப்புதான் என் புலம்பலுக்கான உண்மைக் காரணமாகும். ஒருவேளை எழுத்தாளர்கள், கறுப்பினப்பெண்களை மறுக்கும் அல்லது ஒதுக்கித்தள்ளும் செயலைச் செய்வார்களானால், கறுப்பர்களுக்கு நியாயமான உரிமைகள் தரப்பட வேண்டும் என்பதை உலகிற்கு தெரிவிக்க நான் மீண்டுமொருமுறை உறுதி எடுப்பேன். இனமோதல்களும், இனப் பிரச்சனைகளும் நீடிப்பதற்கான பின்னணியில் பாலியல், இன, ஏற்றத்தாழ்வுகள் காரணமாக இருக்கின்றன. இந்தக்காரணங்களைப் பொதுமக்கள் மத்தியில் தெரிவிப்பதையும் அதை அம்பலப்படுத்துவதையும் தடுப்பது இனப்பிரச்சினையை ஒதுக்கித்தள்ளும் செயல்பாடுகளே ஆகும். என்னதான் காரணம் கூறினாலும் இந்த உண்மை தொடர்ந்து நீடிக்கவே செய்கிறது.

இதை மனதில் கொண்டே, மார்க்சியம், பெண்ணியம் ஆகியன குறித்த எந்தவொரு கொள்கையின் இணைந்தவொரு பகுதி என்ற முறையில் இனவாதத்தை குறிப்பாகவும், விடாப்பிடியாகவும் ஏன் முன்னிலைப்படுத்த வேண்டும் என்பதில்தான் என் விமர்சனம் மையம் கொண்டிருக்கும். மார்க்சிய ஆய்வை பால்-குருட்டுத்தனம் கொண்டதாகவும் பெண்ணிய ஆய்வை வரலாற்று - குருட்டுத்தனம் கொண்டதாகவும், போதுமான அளவு பொருள்முதல்வாத அணுகுமுறை அற்றதாகவும் கார்ட்மன் நன்றாகவே நியாயமாக சொல்லியிருக்கிறார். நான் இந்த விமர்சனத்தை பின்வருமாறு வளர்த்திச் செல்கிறேன்.

மார்க்சிய வகையினங்கள் பால்-குருட்டுத் தன்மையும், இனவாத-குருட்டுத் தன்மையும் கொண்டவை. பெண்ணிய ஆய்வுகள் வரலாற்று குருட்டுத்தனம் கொண்டதாகவும், போதுமான அளவு பொருள்முதல்வாத அணுகுமுறை அற்றதாகவும் உள்ளது. கறுப்பினப்பெண்களைப் பொறுத்த வரையில், மார்க்சிய ஆய்வும்சரி, பெண்ணிய ஆய்வும்சரி ஒட்டுமொத்தமாக அநீதியே இழைத்திருக்கின்றன. அடிமைத்தனத்தின் வரலாற்று அனுபவங்கள் இந்தக் கறுப்பினப்பெண்கள் மீது குறிப்பான வடுக்களை மரபுச் சொத்தாக விட்டுச்சென்றிருக்கின்றன. கறுப்பினப் பெண்களின் பொருளாதாரச் சூழ்நிலைகள், அப்பெண்கள் பெண்ணியம் குறித்து ஒரு நிலை எடுப்பதில் முக்கியமான செல்வாக்கான பாத்திரம் வகிக்கின்றன. கறுப்பினப் பெண்களின் இந்த அணுகுமுறைகள் நிச்சயமாக (பெண்ணியத்திற்கு) சாதகமற்றவையாகவும், பரிவற்றவைகளாகவும் இருக்கும். "குறிப்பான பெண்ணிய ஆய்வு தான் ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையிலான உறவுகள் முறைப்படி ஒழுங்குப்படுத்தப்பட்டுள்ள தன்மைகளை வெளிப்படுத்தும்" என கார்ட்மன் சொல்கிறார். இவர் வெள்ளையின ஆண்களையும் பெண்களையும் பற்றித்தான் பேசுகிறார் என நான் நினைக்கிறேன். "ஒரு குறிப்பான கறுப்பினப் பெண்ணிய ஆய்வுதான் கறுப்பின ஆண்களுக்கும் கறுப்பினப்பெண்களுக்கும் இடையிலான உறவின் தன்மையை வெளிப்படுத்தும்" என்ற அம்சத்தை நான் சேர்த்துவதன் மூலம் அவர் முடிவை இன்னும் அதிகப் பொருளுள்ளதாக்குகிறேன். ஒரு குறிப்பான கறுப்பினப்பெண்ணிய அணுகுமுறை தேவைப்படுகிறது. ஏனெனில், தற்போதைய பொருளாதாரச்சூழலின் பின்னணியில் கறுப்பின ஆண்கள், பெண்கள் இடையே நிலவிவரும் உளவியல் செயல்பாடுகள் வெள்ளையர்களிடையே நிலவிவரும் உளவியல் செயல்பாடுகளோடு ஒப்பிடும்போது தன்மையிலும், பண்பாட்டிலும் வேறுபட்டதாகும்.

பெண்கள் சிக்கல் குறித்த முக்கூட்டு மார்க்சிய ஆய்வானது (வரலாறு, பொருள் முதல்வாதம், வர்க்கம்) கறுப்பினப் பெண்களின் பங்கைக் கருத்தில் கொள்வதைக் குறிப்பாக விலக்கிவிடுகிறது. பெண்கள் பிரச்சனையானது பெண்ணியப் பிரச்சனையாக என்றும் இருந்ததில்லை என கார்ட்மன் உறுதியாக அறிவிக்கிறார். அதைப்போலவே பெண்ணியச் சிக்கலானது என்றுமே உண்மையில் கறுப்பினப் பெண்களை உள்ளடக்கியதாக இருந்ததில்லை என்பதும் மேற்சொன்னதற்குச் சமமான உண்மையாகும்.

ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையே நிலவிவரும் பாலியல் ஏற்றத்தாழ்வுகளுக்கும், ஆணாதிக்கத்திற்குமான காரணங்களை நோக்கியது

தான் பெண்ணியச் சிக்கல் என்றே வைத்துக் கொள்வோம். அப்படியானால் வெள்ளையின ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையே நிலவிவரும் பாலியல் ஏற்றத்தாழ்வுகளைக் காட்டிலும், கறுப்பின ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே நிலவிவரும் ஏற்றத்தாழ்வுகளுக்கு மிக வித்தியாசமான, வரலாற்றுப் பண்பாட்டுத் தொடக்கங்கள் உண்டு என்பதை கணக்கிலெடுத்துக் கொள்வது முக்கியமாகும். இதன் தொடர் விளைவாக தற்போதைய ஏற்றத்தாழ்வுகளும் வித்தியாசமான தன்மை கொண்டதாகும். ஆகவே இதை மாற்றுவதற்கானப் போராட்டஉத்திகளும் (STRATEGIES) வித்தியாசமானவைகளாக இருக்க வேண்டும். வெள்ளையினப்பெண்கள் கூலி உழைப்பாளர் படையில் (LABOUR FORCE) சேர்ந்த வரலாற்றைக் காட்டிலும் கறுப்பினப்பெண்கள் கூலி உழைப்பாளர் படையில் சேர்ந்த வரலாறு மிக வித்தியாசமானதாகும்.

அமெரிக்காவில் கறுப்பர்கள் பெற்றுள்ள அடிமைத்தன அனுபவங்கள் ஆண்-பெண் சமத்துவத்திற்கு ஒரு முரணான பங்களிப்பைச் செய்திருக்கின்றன. வயல்வெளிகளிலும் சரி, வீடுகளிலும் சரி, கறுப்பின ஆண்களும், பெண்களும் சமமாகவே இழிவுபடுத்தப்பட்டனர். கொடுமைப்படுத்தப்பட்டனர். வெய்யிலிலும், மழையிலும், ஒவ்வொரு நாளும், கறுப்பின ஆண்களும், பெண்களும் இன்னலுக்கு உள்ளாயினர். அதிகாலையிலிருந்து அந்தி இருட்டுவரை சமமாகவே சோதனைகளையும், பெருந்துன்பங்களையும், சித்ரவதைகளையும் பங்கிட்டுக் கொண்டனர். முன்னாள் அடிமையான மோசஸ் கிரேன்பை அடிமை அனுபவத்தை மிகத்தெளிவாக எழுதியுள்ளார். கறுப்பின ஆண்கள் மீது கொடூரமாயும், அடுத்தடுத்தும் கொடூரங்கள் நிகழ்த்தப்பட்டதற்குச் சமமாக, அவ்வினப் பெண்கள் மீதும் கொடுமைகள் நிகழ்த்தப்பட்டன என்ற உண்மைக்கு அவரது அனுபவங்கள் சான்றாய் நிற்கின்றன. மாதிரிக்கு தாய்மார்கள் தங்கள் குழந்தைகளை கையாண்டவிதம் பற்றி கிரேன்பை பின்வருமாறு சொல்கிறார்.

“கைக் குழந்தைகளை வீட்டில் விட்டுவிட்டு வந்துவிட்டதால் இங்கு (பணியிடத்தில்) பெண்கள் மார்புகளில் பால் சுரந்து ததும்பி நின்றது. அதனால் அவர்களால் மற்றவர்களுக்குச் சமமாக வேலை செய்ய முடியவில்லை. கங்காணிகள் அவர்களை அடிக்கும் போது இரத்தமும், பாலும் ஒன்று கலந்து அவர்கள் மார்பில் ஓடியதை நான் கண்டேன்”. கர்ப்பிணியான கறுப்பின அடிமைப்பெண்கள் நடத்தப்பட்ட விதம் குறித்து அவர் பின்வருமாறு கூறுகிறார். “சாட்டையால் அல்லது துடுப்புக் கட்டையால் அடிக்கப்பட்டனர். ஒவ்வொரு அடிக்கும் ஒரு கொப்புளம்

வெடித்தது". இங்கு நாம் சொல்ல வருவது கறுப்பினஅடிமைகள் மேல் ஆண்/பெண் இருவர் மீதும் சுமத்தப்பட்ட மனித இழிவுச்செயல்கள் கொடூரத்தில் சமமாக இருந்தன என்பதே. உயிரியல் அடிப்படையில் (ஆணிற்கும்/பெண்ணிற்கும்) வித்தியாசம் இருந்ததால் உடல்மீது செலுத்தப்பட்ட கொடூரங்களிலும் வித்தியாசம் காணப்பட்டது. ஆண்கள் காயடிக்கப்பட்டார்கள். பெண்கள் அடிவயிற்றில் அடிக்கப்பட்டு அவர்கள் கருகலைக்கப்பட்டது. ஆனால் கொடூரத்தில் இரண்டுமே சமம்தான்.

கறுப்பினப் பெண்கள் வன்புணர்ச்சிக்குள்ளானதும் (கற்பழிப்பு) கறுப்பின ஆண்கள் காயடிக்கப்பட்டதும், அடித்துக்கொல்லப்பட்டதும், இயல்பில் சமக்கொடூரம் வாய்ந்தவையே. கறுப்பினப்பெண்களைப் போலவே கறுப்பின ஆண்களும் பெருமளவிற்கு அடிமைத்தன அனுபவத்தை வடுக்களாகப் பெற்றிருக்கிறார்கள். கறுப்பர்கள் அனுபவித்த ஒடுக்குமுறைக்கு எந்த அளவுகோலையும் நாம் பயன்படுத்தமுடியாது.

கறுப்பர்களின் வரலாற்று ஆவணம் ஒன்றை வெளிப்படுத்துகிறது. அடிமைமுறை என்ற தனித்துவமான ஒரு நிறுவன வடிவமானது கறுப்பின ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே சமத்துவத்தை கொண்டு வந்ததில் முக்கியப் பங்காற்றி இருக்கிறது. வெள்ளையின ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையே நிலவும் அசமத்துவத்திற்கு எதிரான போக்கு இது. ஏஞ்சிலா டேவிஸ் பின்வருமாறு தொகுக்கிறார்.

"அடிமைத்தொழிலாளிகளிடமிருந்து மிகப் பெருமளவுக்கு உபரியை சுரண்டுவதற்காகப் பெண்மை என்னும் மாயவிலங்குகளிலிருந்து கறுப்பினப் பெண்களை விடுவிக்க வேண்டியிருந்தது. டபிள்யு. இ.பி. டுபாய்ஸ் வார்த்தைகளில் சொல்வதானால், "அவமரியாதை தரும் விதத்தில் நம் கறுப்பினப்பெண்கள் மீது திணிக்கப்பட்ட விசயத்திலிருந்து அவர்கள் விடுதலை பெற்றுவிட்டனர்". ஒரு அடிமையாக உழைப்பதற்காக கறுப்பினப்பெண்கள், பெண்கள் என்ற அம்சத்திலிருந்து வெளித்தள்ளப் பட்டனர். அதாவது பெண் என்ற முறையில் மொத்த ஆண் அதிகாரப் படிநிலையின் பாதுகாப்பின் கீழிருந்தவர் அதிலிருந்து விடுவிக்கப்பட்டார். இந்நிகழ்ச்சி தான் (அடிமைமுறை) அப்பெண்ணை ஆணுக்கு நிகராக நிற்கவைத்தது".

ஆயினும், கறுப்பினஆண்கள் அல்லது வெள்ளையினப் பெண்களைக் காட்டிலும் கறுப்பினப்பெண்கள் ஓரிடத்தில் சொற்ப அளவு சுயஅதிகாரம் பெற்றவர்களாக இருக்கிறார்கள். அடிமைகள் குடியிருப்பிலுள்ள வீடுகளே

அந்த இடமாகும். இன்றையக் கறுப்பினப் பெண் நவீனத்தொழிலில் பணியாற்றுவது போல அடிமைக் குடியிருப்பில் இருந்த கறுப்பினப்பெண் வெளித் தொழிலிலும் பணியாற்றியதோடு "குடும்பப் பொறுப்புகளையும்" கவனித்து வந்தார். அடிமைமுறையின்போது வெள்ளையின ஆணாதிக்க முறைமையினால் இப்போக்கு பெருமளவுக்கு ஊக்கப்படுத்தப்பட்டது. அதன் தாக்கத்திற்குட்பட்டிருந்தது. மத்திய ஆப்பிரிக்க மரபுகளும் இதற்கு ஓரளவு காரணமாயிருந்தன.

மார்க்சியம், பெண்கள் பிரச்சனை பற்றிய விவாதத்தில் பெண்கள் எனப் பொதுவாகப் பேசுவது வெள்ளைமேலாதிக்கத்தை அதாவது வெள்ளையினப் பெண்கள் மேலாதிக்கத்தை பின்னொட்டிச் செல்வதாகவே இருக்கும். காரணம், வெள்ளையினப்பெண்களைப் பற்றித்தான் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. அவர்களுக்குத்தான் இந்தக் கருத்துக்கள் மிகப் பொருத்தமுடையதாகவும் இருக்கின்றன. நாம் ஏற்கனவே பார்த்தது போல மார்க்சிய ஆய்வானது வர்க்கப்பிரச்சனையின் மீது மட்டுமே கவனம் செலுத்துகிறது. பெண்கள்பிரச்சனையின் மீது போதிய கவனம் செலுத்தவில்லை. பெண்கள் எனப்பொதுவாக விவாதிப்பதும், இதே மாதிரியான இதற்கு இணையான தவறாகவே இருக்கும். காரணம், பெண்கள்பிரச்சனையில் உள்ளார்ந்து செயல்பட்டுவரும் இனஉறவுகள் என்ற எதார்த்தத்தை மறுப்பதாகவே இது அமையும். கறுப்பினப் பெண்களும், வெள்ளையினப் பெண்களும், பால் ஏற்றத்தாழ்வுகளால் எப்படி, ஏன் பாதிக்கப்பட்டுவருகிறார்கள் என்பதை வரலாறு தெளிவாகக் காட்டுகிறது. இருப்பினும், அமெரிக்கச்சமூகத்தில் கறுப்பினப் பெண்களுக்கும் வெள்ளையினப் பெண்களுக்கும் இடையே நிலவிவரும் பொது அம்சம்தான் கறுப்பினப் பெண்களுக்கும் கறுப்பின ஆண்களுக்கும் இடையே நிலவிவருகிறது என்பதை எழுத்தாளர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். கறுப்பர்கள் மீது (ஆண்/பெண் இருவர் மீதும்) ஏவப்பட்ட ஒடுக்குமுறை அவர்களுக்கிடையில் சமத்துவத்தைக் கொண்டு வந்துவிட்டது. "நான் ஒரு பெரும் சமத்துவத்தைக் கொணர்ந்தவன்" என்ற வரிகள் இன ஒடுக்குமுறை என்ற மகுடத்தில் ஒளிவீசுகிறது.

தீவிரப்பெண்ணியக் கருத்துக்கள் மீதும் ஆணாதிக்க முறைமை குறித்த தீவிரப்பெண்ணிய மதிப்பீடுகள் மீதும் கார்ட்மன் ஆய்வுகள் கொண்டுள்ள விமர்சனம் வெளிப்படையான பல குறைகளைச் சுத்தமாக மூடிமறைத்துவிடுகின்றன. எண்ணற்ற குறுகிய பார்வைகளை அடையாளம் காட்டுகின்றன. இவரின் மீதி எழுத்துக்கள், கருத்துரைகளும்,

ஆலோசனைகளும் அடங்கியவை. ஆணாதிக்க முறைமை பற்றிய விளக்கத்தில் ஒரு வளர்ச்சி என்ற அளவில் இவற்றை நாம் கண்டிப்பாக எடுத்துக் கொள்ளவேண்டும். தீவிரப்பெண்ணியர்களின் குறைகள் என கார்ட்மன் ஒத்துக் கொண்ட விசயங்களைப் பார்க்கலாம். உள்ளார்ந்த பலவீனங்களைக் கொண்ட ஒரு நிலைபாட்டிலிருந்து ஒருவரையறையை வளர்த்தெடுக்க முயல்வதைக் காட்டிலும், தீவிரப்பெண்ணிய நிலைபாட்டினை ஒரு ஆதாரமாகக் கொண்டு ஆணாதிக்க முறைமை பற்றி ஒரு முழுமையான அணுகுமுறையைக் கொள்வது புத்திசாலித்தனமாக இருக்கும் என நான் நினைக்கிறேன்.

ஆணாதிக்கமுறைமை மீது தீவிரப்பெண்ணியர்கள் வைத்த வரையறைகளும், கருத்துக்களும், பின்வரும் காரணங்களுக்காகப் பாராட்டப்படுகின்றன. அரசியல் கருத்தாக்கங்கள், இசங்கள் ஆகியவற்றின் உண்மை உருவத்தை வெளிப்படுத்தி அதைச் சமூகம் ஒத்துக் கொள்ளும்படி செய்தது. உளவியலிலும், தனி நபர் அனுபவத்தின் சமூகப்பரிமாணத்திலும் உணரப்பெறும் தூலமான விளைவுகளை வெளிச்சமிட்டுக் காட்டியது. மேலும் தனிநபர் வாழ்க்கையின் பொருளாதாரச் சூழ்நிலைகளை வடிவமைப்பதில் ஆணாதிக்கமுறைமை ஏற்படுத்தியுள்ள தளர்வூட்டும் விளைவுகளையும் எடுத்துக்காட்டியது.

அந்தரங்கம் என்பது பகிரங்கமே (PERSONAL IS POLITICAL) என்ற அம்சத்திற்குத் தீவிரப் பெண்ணியர்கள் கொடுக்கும் அழுத்தம் ஆணாதிக்க முறைமை பற்றிய அவர்களது விளக்கம் ஆகியவற்றிற்கு இன்னும் ஆதாரங்கள் தேவைப்படுகின்றன. கார்ட்மன் இதில் சிலவற்றைச் செய்துள்ளார். ஆணாதிக்கமுறைமை என்பது பெண்கள் மீது ஆண்கள் மேலாதிக்கம் செலுத்தும் ஒரு சமூக அமைப்பு எனத் தீவிரப் பெண்ணியர்களைப்போல விளக்கம் தருவது மேலோட்டமானது, எளிமையான ஒன்று. இவ்விளக்கம் மிகக்குறுகிய அறிவுரையை அல்லது மிகச்சிறிய ஒரு புதிய தகவலைத்தான் தருகிறது. உண்மையான அடிப்படையான வர்க்கப் பிரிவினை என்பது ஆணிற்கும் பெண்ணிற்கும் இடையிலான பால்வேறுபாடே. அதிகாரத்திற்கும், பெண்கள் மீதான ஆதிக்கத்திற்குமான ஆண்களின் முயற்சியே வரலாற்றின் உந்துசக்தியாகும் எனத் தீவிரப் பெண்ணியர்கள் நம்புகிறார்கள். இந்த நம்பிக்கைக்கு மத்தியில் தான் அந்தரங்கம் என்பது பகிரங்கமே என்ற கருத்தாக்கத்தை வைக்கிறார்கள். இது இக்கருத்தாக்கத்திற்கு மிகப் பெரும் அநியாயம் இழைத்து விடுகிறது. இது மாணிக்கக்கல்லை புதை மணலில் வைப்பது போல இருக்கிறது. அதாவது

அந்தரங்கம் என்பது பகிரங்கமே என்ற கருத்தாக்கத்தின் மதிப்பு செயலிழந்து போகிறது. இக்கருத்தாக்கத்தைச் சுற்றி எழுப்பப்படும் அடிப்படைகள் அரைகுறையாகவும், போதிய ஆதாரமின்றியும், அடிப்படையில்லாமலும் இருந்தால் இக்கருத்தாக்கமே அர்த்தமற்றுப் போய்விடும்.

கார்ட்மன் தீவிரப்பெண்ணிய நிலைப்பாட்டின் மீது விமர்சனங்களையும் கேள்விகளையும் எழுப்ப முயற்சித்துள்ளார். ஆனால் தான் விமர்சிக்கும் ஒரு தவறுக்கு இணையாக ஒரு தவற்றை அவரும் செய்துள்ளார். "ஆணாதிக்கமுறைமை என்பது பெண்கள் மீது மேலாதிக்கம் செலுத்துவதற்கு வாய்ப்பான முறையில், ஆண்கள் தங்களுக்கிடையே அதிகாரப்படிநிலை தன்மையுள்ளதும், பரஸ்பரம் சார்ந்திருப்பதும், ஒருமைப்பாடு உள்ளதுமாக அமைத்துக்கொண்ட பொருண்மை அடித்தளம் கொண்ட சமூக உறவுகளின் தொகுப்பாகும்". கார்ட்மன்னின் இந்த விளக்கமும் கூட மிகவும் மேலோட்டமானது. எளிமைப் படுத்தப்பட்டது. சான்றாக சொத்துரிமை அல்லது வருமானம், பால் ஆகிய வேறுபாடுகளை ஒதுக்கித் தள்ளிவிட்டு, நிற அடிப்படையில் மனிதர்களை கீழ்நிலைப்படுத்தும் விசயத்திற்கு கார்ட்மன் சிறிதளவே கவனம் செலுத்தியுள்ளார்.

வரலாற்றுக் குருடாக இருப்பதால் ஏற்படும் முட்டாள்தனமான விளைவுகளையும், கேடான பின்விளைவுகளையும் பற்றி விழிப்புணர்ச்சி கொண்ட கார்ட்மன் அவர்கள், அமெரிக்காவில் கறுப்பினர்கள் பெற்றுள்ள அனுபவத்தின் வரலாற்றுப் பங்கையும், இவ்வனுபவம், வெள்ளையர்/கறுப்பர் ஆகிய இருவர் அணுகுமுறைகளிலும் கொண்டுள்ள மனப்போக்குகளையும் பற்றி அறியாத குருடராகவே இருக்கிறார்.

எனது விமர்சனத்தில், ஆணாதிக்கமுறைமைபற்றிய வரையறைக்கு அவசியமான காரணிகளுக்கு அழுத்தம் தருகிறேன். இன்றைய சமூகத்திற்குப் பொறுத்தமானதாக இது இருக்க வேண்டுமானால் அதிலும் குறிப்பாகக் கறுப்பர்கள் ஆன்மாவிற்கும், வாழ்க்கைக்கும் பொருத்தமானதாக இருக்க வேண்டுமானால் இது அவசியம் தேவை.

### *அடிமட்டக்கோடு கறுப்பியமே :*

அந்தரங்கம் என்பது பகிரங்கமே என்ற முழக்கத்தை ஆவணப் படுத்தியதற்கான புகழ் தீவிரப்பெண்ணியர்களுக்கே உரித்தாகும். கூர்மதியான, நியாயமான அவர்கள் வாதத்திற்கு எனது எதிர்வினை மீண்டும் ஒரு புலம்பலே. பல பத்தாண்டுகளாக கறுப்பர்கள் இதையே தான் (அதாவது அந்தரங்கம் என்பது பகிரங்கமே என்பதை -மொர்) சொல்லி வருகிறார்கள்.

கறுப்புஆங்கிலத்தில், ஆய்வுத்தரமான ஆவணங்களில், கலகவழிகளில், வெகுமக்கள் பாடல்களில், தொலைக்காட்சிக் குறும்படங்களில், ஆர்ப்பாட்டங்களில், உள்ளிருப்பு வேலைநிறுத்தங்களில் இதைத்தான் உரத்தக்குரலெழுப்பி வருகின்றனர். கறுப்பர்கள் அதிருப்தியானது, "ஒரு மனநோயாளியின் புலம்பல் அல்ல. மாறாக தங்கள் மீது திட்டமிட்ட முனைப்போடு ஆதிக்கமும், அடக்குமுறையும் செலுத்துகின்ற, தங்களைச் சுரண்டுகின்ற ஒரு சமூகஅமைப்பிற்கு அவர்கள் காட்டும் ஒரு எதிர்வினையாகும்". "அந்தரங்கம் என்பது பகிரங்கமானது என்ற முழக்கமானது, அகநிலைவாதத்தின் வெற்றுமுறையீடு அல்ல. அது ஆண்களது அதிகாரத்தையும் பெண்களது தாழ்த்தப்பட்ட நிலையையும் அரசியல், சமூக யதார்த்தமாக அங்கீகரிக்குமாறு கேட்கும் கோரிக்கையாகும்" (கார்ட்மன்)

பல்லாண்டு காலமாக கறுப்பர்கள் இந்தப் புலம்பலை வெளிப்படுத்தி வருகிறார்கள். இதற்குச் சிறிதளவே பயன் கிடைத்துள்ளது. அல்லது கிடைக்கவேயில்லை என்று சொல்லலாம். இப்புலம்பலுக்குச் சிறிதளவே அங்கீகாரம் அல்லது சட்ட மதிப்புக் கிடைத்துள்ளது. "தனக்குத்தானே உதவி செய்து கொள்வது" என்ற கொள்கை அடிப்படையில் கறுப்பர்களுக்கு அறிவுரையும், அதற்கான திட்டங்களும் முன்வைக்கப்படுகின்றன. எனினும், பெண்ணியர்கள் அந்தரங்கம் என்பது பகிரங்கமானது என்ற உரிமை கோரும் போதும், சமூக ஒழுங்கில் தங்களின் அடிமை நிலையை விளக்கும் போதும், அது பெண்கள் இயக்கத்தின் முக்கியப் பகுதியாக மாறிவிடுகிறது. அதிகாரஅமைப்பில் மாற்றங்களைக் கொணரும் முக்கிய போராட்ட உத்திக்கான மையப்புள்ளியாக இது அமைந்துவிடுகிறது. பெண்ணியர்கள் அந்தரங்கம் என்பது பகிரங்கமானது என்ற நிலைப்பாட்டைப் பெண்களுக்கு மட்டுமே ஏற்றுக் கொண்டு, அதே நியாயத்தை கறுப்பர்களுக்கு மறுக்கும்போது அது சுயநலம் சார்ந்ததாக மாறிவிடுகிறது. இதைக் காட்டிலும், முக்கியமானது அந்தரங்கம் என்பது பகிரங்கமானது என்பதை கறுப்பர்களுக்குப் பயன்படுத்தும்போது அது கறுப்பின ஆண்/பெண் ஆகிய இருபாலரையும் உள்ளடக்குகிறது. இது தீவிரப் பெண்ணியர்களுக்கு முக்கியப் பிரச்சனையாய் மாறிவிடுகிறது. இருப்பினும் கறுப்பினப்பெண்கள், பெண்கள் இயக்கத்தில் பங்கெடுக்க வேண்டுமானால் இந்த உண்மையைக் கணக்கிலெடுத்தே ஆகவேண்டும். இதனுடன் கீழ்க்கண்ட விசயத்தையும் சேர்த்துக் கொள்ளவேண்டும். ஆணாதிக்க முறைமைப் பற்றிய விவாதம் முழுக்கவும், "ஆண்கள்" என்ற சொல்லிற்கு முன்னால் "வெள்ளையின" என்ற சொல்லைச் சேர்த்துக் கொள்ளவேண்டும். அப்பொழுதுதான் பெரும்பான்மையான கறுப்பர்களின் சம்மதிப்பைப் பெறமுடியும்.

ஆணாதிக்கமுறைமை என்பது பெண்கள் மீது ஆண்கள் ஆதிக்கம் செலுத்தும், ஒரு சமூகஅமைப்பு என்றே தீவிரப் பெண்ணியர்கள் விளக்கம் அளித்துவருகிறார்கள். "மேற்கத்தியச் சமூகம் அப்படித்தான் இருக்கிறது என்பதில் யாருக்கும் கருத்துவேறுபாடு இல்லை. ஆனால் மூன்றாம் உலக மக்கள் இதற்கு நேர்மாறான வரலாற்றைக் கொண்டிருக்கிறார்கள்".

"ஆண்மேலாதிக்க மனிதகுலத் தொடக்கத்திலிருந்து" என்ற வரலாறே அவர்கள் வரலாறாக இருக்கிறது. *எலினார் லெக்காக்* இதையே பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"காலனியத்திற்கு முந்தைய உலகில், பெண்கள் தங்கள் சமூகப் பொருளாதாரக் கடமைகளைச் செய்துவந்தபோக்கில் பொது இடங்களில் ஆண்களோடும், ஏனையரோடும், சுயாட்சியான உறவு கொண்டிருந்தனர். இந்த உண்மை மறைக்கப்படுகிறது. குடும்பங்களில் ஆணாதிக்கக் கொள்கைகளை அன்னிய மிசினரிகள் கற்றுத்தருவதற்கு முன்னர், அதற்குச் சட்ட அந்தஸ்து வரையறுக்கப்படுவதற்கு முன்னர், காலனியப்பொருளாதார உறவுகளைக் கொண்டு அதனை நிறுவனப்படுத்துவதற்கு முன்னர், எண்ணற்ற மூன்றாம் உலக நாடுகளில் பல்வேறு வகையான பெண்கள் தோழமை கூட்டுறவு அமைப்புகள் இருந்திருக்கின்றன.

பெண்கள்அமைப்புகள் பொது வேலைகளைச் செய்து வந்ததையும், ஆப்பிரிக்காவில் அவ்வமைப்புகளின் மரபுவழிப்பங்கையும் இனத்துவ வரலாறும், இனத்துவப்புவியியல் கொள்கையும் ஆவணமாகத் தொகுத்திருக்கின்றன. ஒரு ஆணின் "பொது" வேலைக்கும், ஒரு பெண்ணின் "குடும்ப" வேலைக்கும் இடையே பொதுவாக ஏற்படுத்தப்பட்ட வேறுபாடானது, "தொழிற்துறைக்கு முந்திய, "முதலாளியத்திற்கு முந்திய" "காலனியத்திற்கு முந்திய உலகின்" சாதாரண இயல்பைக் கூட உருக்குலைத்துவிட்டது. (ஏனெனில்) அங்கு (காலனியத்திற்கு முந்திய உலகம்) "குடும்ப வேலை" களில் இடம்பெற்றிருந்த அதிகாரம், சட்ட ஆட்சி, செல்வாக்கு ஆகியன மெய்யான அதிகாரங்களாக இருந்தன. "பொது வேலைகளில்" சட்ட ஆட்சியும், செல்வாக்கும் ஒரு குறிப்பிட்ட அளவில் இருந்து வந்தன. மேற்குஆப்பிரிக்கச்சமூகங்கள் "பொது வேலை" ஆண்களுக்கேயானது என்ற கருத்தாக்கத்திற்கு உட்பட்டிருக்கவில்லை. அரை நூற்றாண்டிற்கு முந்திய இபாகின பெண்களின் அழுத்தமான அரசியல் பங்கெடுப்புக்கள் பற்றிய ஆவணங்கள் நன்கு தொகுக்கப்பட்டிருக்கின்றன.

மூன்றாம் உலகநாடுகளில் பெண்கள் தங்கள் மீதான அடக்கு முறைக்கு எதிராக போராடும் அதேவேளையில், பொதுவான அடக்கு முறைக்கு எதிராகவும் போராடி வருகின்றனர். ஆதிக்கத்திற்கும், அடிமை நிலைக்குமான அடிப்படைகளைச் சுட்டிக்காட்டும் கோட்பாடுகளில் அக்கறை செலுத்துவதைக்காட்டிலும் மாற்றத்திற்கான போராட்ட உத்திகளை வகுப்பதிலேயே இப்பெண்கள் அதிக அக்கறை செலுத்தி வருகின்றனர். கடந்த காலங்கள் குறித்து அவர்கள் அக்கறைக்கொள்ளவில்லை அல்லது அதுகுறித்து போதுமான புரிதல் இல்லை என்பதல்ல இதற்கு பொருள். தற்காலப் பொருளாதாரச் சூழ்நிலைகளும், இப்பெண்களின் அதிகரித்த அரசியல் விழிப்புணர்ச்சியும் இணைந்து, மாற்றத்திற்குத் தேவையான தொடர்ச்சியான செயல்சக்தியை தந்து வருகின்றன. ஆண்-பெண் உறவுகளுக்கான அடிப்படையை அவர்கள் ஊக்கம் தளராமல் பின்பற்றி வந்திருந்தால், பெண்கள் ஆண்களைச் சார்ந்திருப்பது உலகநியதி என்ற ஒற்றைக்கருத்தாக்கம் தீவிரமான எதிர்ப்புக்குள்ளாக நேரிடும் தருணங்கள் வாய்த்திருக்கும். இவ்வாறாக "உலகம் முழுவதும், பெண்கள் பற்றிய தகவல்களைச் சேகரித்தால் மனித இன வரலாற்றுப் பக்கங்களில், அடிக்கடி தென்படுகின்ற, பெண்கள் அடிமைப்பட்ட மனைவிகளாகவும், அன்னையர்களாகவும் உள்ளனர் என்ற நன்கு ஆராயாத மானுடவியல் ஆய்வு முடிவுகள் மாற்றத்திற்குள்ளாகும். பல்வேறு சமூகங்களில் முடிவுகள் எடுக்கும் நிலையிலிருந்த அவர்களது பங்கு தெளிவுபடுத்தப்படும்". ஆணாதிக்க முறைமைப் பற்றிய கார்ட்மன்னின் வரையறை அமெரிக்கச் சமூகத்திலுள்ள அனைத்து ஆண்களையும்,-கறுப்பர், வெள்ளையர், சிகேனோ, அமெரிக்க பூர்வ குடிகள், பூர்டோ ரிகன் - வேறுபாடின்றி ஒன்றாகச் சேர்த்துப் பார்ப்பதையும், உயிரியல் வேறுபாட்டை மட்டுமே வலியுறுத்துவதையும் நான் வன்மையாக மறுக்கிறேன். ஆணாதிக்க முறைமையிலான அதிகாரப்படி நிலையானது பல்வேறுபட்ட வர்க்க ஆண்களை, பல்வேறு அதிகாரப் படிநிலைகளில் வைத்திருக்கிறது என்று அவர் சொல்லியிருக்க வேண்டும். ஆனால் கார்ட்மன் இவ்விசயத்தைக் கைகழுவி விட்டார். பெண்கள் மீதான கூட்டு ஆதிக்கத்தில் ஆண்கள் (வர்க்க வேறுபாடின்றி -மொர்) ஒன்றாக இணைந்துள்ளனர். இவ்வாதிக்கத்தை நிலைநிறுத்த ஆண்கள் தங்களுக்குள் ஒருவரையொருவர் சார்ந்திருக்கின்றனர். ஒவ்வொரு ஆணுக்கும் குறைந்த பட்சம் சிலபெண்கள் மீதாவது கட்டுப்பாடு செலுத்த வாய்ப்பிருக்கின்றது. இச்சலுகைக்கு அனைத்து ஆண்களுமே விலை போய்விட்டார்கள். பெண்கள் மீதான தங்களது கட்டுப்பாட்டை நிலை நிறுத்திக் கொள்ள ஆண்கள் ஒருவரையொருவர் சார்ந்திருக்கின்றனர். இவ்வாறாக, இவர்

சொல்லிக்கொண்டே போகிறார். வரலாற்றுரீதியாக கறுப்பினஆண்கள் தங்கள் பெண்கள் மீது நிச்சயமாக மேலாதிக்கம் செலுத்தவில்லை. கறுப்பினப்பெண் பற்றி ஏஞ்சிலா டேவிஸ் அவர்கள் கட்டுரையிலிருந்து ஒரு மேற்கோளைப் பார்க்கலாம். அடிமை முறையின் உள் செயல்பாடுகளில் ஆண்ாதிக்க அமைப்புமுறைகள் ஆழமான பாதிப்பைச் செலுத்தியிருக்க வில்லை. குடும்பப்பொறுப்பில் பெண்ணின் பங்கு ஒன்றுதான் விதிவிலக்காயிருந்தது. ஆளும்வர்க்கம் ஆண்களாக இருந்தபோதிலும், முரட்டுத்தனமான தேசிய வெறியர்களாக இருந்த போதிலும் கறுப்பு ஆண்களுக்கு அவர்கள் இனப்பெண்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் சலுகையைத் தந்துவிடவில்லை. குடும்பத்திலோ அல்லது சமூகத்திலோ கேள்விக்கிடமில்லாத எசமானனாக ஆண் அடிமை இருக்க முடிந்திருக்காது. காரணம், அடிமைகளிடம் நிலவிய குடும்பமுறையில் அதற்கான வாய்ப்புகள் இல்லை. ஒரு அடிமை செய்துமுடிக்க வேண்டிய பணிகளை ஒவ்வொரு ஆண், பெண் குழந்தை அடிமையும் தங்களின் முழு உற்பத்தி ஆற்றலையும் செலவழித்து செய்து முடிக்க வேண்டியதாயிருந்தது. இவர்கள் அனைவரின் உழைப்பும் "எசமானனுக்கே" உரித்தானதாய் இருந்தது. கறுப்புப்பெண் முழுக்கவே உற்பத்திச் சக்தியோடு இணைக்கப்பட்டிருந்தார்.

அடிமைமுறையில் கறுப்பினஆண், கறுப்பினப்பெண் மீது ஆதிக்கம் செலுத்துவதற்கு எந்த அனுமதியுமில்லை. கறுப்பின ஆண்கள், வெள்ளையினப்பெண்கள் மீது ஆதிக்கம் செலுத்துவது என்ற கேள்விக்கே இடமில்லை. அடிமைக்காலத்தில் அமெரிக்க மண்ணில் ஒருபுறம் கறுப்பினப் பெண்கள் மிகக் கடுமையான, கொடூரமான, இழிவான கொடுமைகளுக்கும், விலங்குத்தனமான வன்புணர்ச்சி (கற்பழிப்பு) நடவடிக்கைகளுக்கும் பலியானார்கள். மறுபுறம் (வெள்ளையர்கள்) கறுப்பினஆண்களைக் காமுகர்களாக முன்னிறுத்தினார்கள். கறுப்பினஆண்கள் மீது ஏவப்பட்ட சட்டவிரோதச் செயல்களை நியாயப்படுத்த இனவெறிகொண்ட வெள்ளை மனநிலைக்கு இது தேவைப்பட்டது. *இதா.பி.வெல்ஸ்* அவர்கள் கறுப்பர்கள் மீது நடத்தப்பட்டக் கொடூரங்களை ஆவணமாகத் திரட்டியிருக்கிறார். *"சட்ட விரோத கொலைகளும், வன்புணர்ச்சியும்: கருத்து பரிமாற்றங்கள்"* என்ற கட்டுரையில் சட்டவிரோதக் கொலை போன்ற காட்டுமிராண்டித் தனமான செயல்களில் ஈடுபட்டோரில் மிகக் குறைவானவர்களே தண்டனைக் குள்ளாகி யிருக்கின்றனர், என்ற அதிர்ச்சியூட்டும் விசயத்தை மிகத்துல்லியமாகக் காட்டியிருக்கிறார்.

அமெரிக்க வரலாற்றில் கறுப்பினப்பெண்ணை வன்புணர்ச்சி செய்ததற்காக ஒரு வெள்ளையனும் கூட தண்டிக்கப்பட்டதில்லை. தற்போது ஆண்கள் பெண்களுக்கிடையில் இனக்கலப்பு அதிகார உறவுகள் அடிப்படையில் சிறிதளவே மாறியுள்ளன. சமூகம், பொருளாதாரம், பாலியல், அரசியல் ஆகிய அனைத்துத்தளங்களிலும் வெள்ளையினஆண்கள் அனைத்துப்பெண்கள் மீதும் ஆதிக்கமும், ஒடுக்குமுறையும் செலுத்தி வருகின்றனர். கறுப்பினஆண்கள், கறுப்பினப்பெண்கள் மீது ஆதிக்கமும் ஒடுக்கு முறையும் செலுத்த செயற்கையான முறையில் "கற்றுக்" கொண்டனர். ஆனால் இது எந்தவகையிலும் கறுப்பினப்பெண்ணை உண்மையில் ஒடுக்குவதாகவோ அவமதிப்பதாகவோ இல்லை.

வெள்ளையினஆண்கள், அனைத்துப்பெண்கள் மீதும் ஆதிக்கம் செலுத்துகிறார்கள். அதைக்கண்டு கறுப்பினஆண்கள், கறுப்பினப் பெண்கள் மீது ஆதிக்கம் செலுத்தக்கற்றுக் கொண்டார்கள் என்றவிதமான ஆய்வறிக்கைகள் பொத்தாம் பொதுவானதாக மட்டுமே இருக்கும். சமூக அமைப்புகள் இந்த ஆதிக்கத்தைப் பெருமளவுக்கு வழி நடத்துகின்றன. எப்படியிருப்பினும், எதார்த்தத்தில் கறுப்பினஆண்கள் வெள்ளையினப் பெண்கள் மீது எந்த அதிகாரத்தையும் கொண்டிருக்கவில்லை. இப்பொழுதும் கூட எந்த அதிகாரமும் கறுப்பின ஆண்களுக்கு கிடையாது. இன்னும் மிகத்துல்லியமாகச் சொல்ல வேண்டுமானால், வெள்ளையினப் பெண்கள் அனைவருமே கறுப்பின ஆண்கள் மீது-ஆண்குறி அதிகாரம் உள்ளிட்டு-இறுதியான அதிகாரத்தைக் கொண்டிருக்கிறார்கள். இந்த உண்மையை சற்று விரிவாகப் பார்ப்போம். நான் பின்வரும் கேள்விகளை எழுப்புகிறேன். எந்தத் தளத்தில் (AREA) கறுப்பினஆண்கள் வெள்ளையினப் பெண்கள் மீது அதிகாரம் செலுத்தி வருகிறார்கள். கறுப்பினஆண்களிடம் உண்மையான பொருளாதார அதிகாரம் இல்லை. அமெரிக்க வணிகத்தில் கறுப்பர்கள் 1.2 விழுக்காடும், பண்ணைகளில் 1.2 விழுக்காடும், பங்குச் சந்தையில் 0.2 விழுக்காடுமே பெற்றுள்ளார்கள். 1977-ல் அமெரிக்க வணிகத்தின் அளவு 2 டிரில்லியன் டாலர்களாகும். இதில் சிறுபான்மையினர் பங்கு 1.5 விழுக்காடு மட்டுமே. அரசியல்அதிகாரம், பொருளாதார அதிகாரத்தோடுப் பின்னிப்பிணைந்துள்ளது. கறுப்பர்களின் பொருளாதார அதிகாரத்திற்கு ஏற்பட்ட அதே கதிதான் கறுப்பினஆண்களின் அரசியல் லட்சியத்திற்கும் ஏற்பட்டது. தனிநபர் சார்பு என்ற அளவில் பார்த்தால், ஒரு கறுப்பர் மிக மோசமான வன்புணர்ச்சி அல்லது தாக்குதலுக்கு உள்ளாகி, தாக்கியவர் வெள்ளையினப்பெண்ணாக, அதுவும் ஒரு திருடியாக இருந்தால் கூட, அப்பெண் வழக்கில் தண்டனை இல்லாமல் தப்பிவிடுவார். ஒருவேளை

கறுப்பினஆண்கள் வெள்ளையினப்பெண்களுடன் அந்தரங்கமான உறவு வைத்திருந்தால் அந்த ஆண்கள் அப்பெண்களின் மீது ஆதிக்கம் செலுத்துவதோடு அவர்கள் பணத்தையும் உடலையும் பயன்படுத்திக் கொள்வர். எப்படிஇருப்பினும் இறுதி ஆய்வில் வெள்ளையினப்பெண்ணே இறுதிஅதிகாரம் பெற்றவராக இருக்கிறார். ஏனெனில் நீதித்துறை இனவெறி கொண்டதாக இருக்கிறது. நிர்வாகத்துறை இனவெறி கொண்டதாக இருக்கிறது. சட்டத்துறை இனவெறி கொண்டதாக இருக்கிறது. வெள்ளையினப்பெண் விரும்பினால் வெற்றி அவருக்கே. காரணம், இந்த அமைப்பு அவருக்கு ஆதரவாகவே இருக்கிறது. இதைத்தான் நான் இறுதி அதிகாரம் என அர்த்தப்படுத்துகிறேன். வெள்ளையினப் பெண்களை வைத்து தொழில் நடத்தும் கறுப்பின விபச்சாரத்தரகன் கூட இறுதியில் அமைப்பாக்கப்பட்டுள்ள வெள்ளையினக் குற்ற அதிகாரக்குழுவின் கட்டுப்பாட்டுக்கு உள்ளானவன்தான். வெள்ளையினப் பெண்கள் மீது கறுப்பினஆண்கள் தங்கள் ஆண்குறி அதிகாரத்தைச் செலுத்தலாம் என்று வாதிடப்படலாம். கறுப்பினஆண் வெள்ளையினப் பெண்ணை ஆதிக்கம் செலுத்தலாம் துன்புறுத்தலாம், அடக்குமுறை, செலுத்தலாம். ஆனால் அவர்களுக்கிடையே உறவு முறிந்தால், வெற்றியடைவது வெள்ளையினப் பெண்ணே. இம்மாதிரியான பெரும்பான்மை உறவுகள் தற்காலிகமானவை. இதில் கறுப்பின ஆண்களுக்கு மிஞ்சியது எல்லாம் வெறும் தன்னகங்காரத் (EGO) திருப்தியைத் தவிர வேறொன்றுமில்லை.

முதலாளியமும், ஆணாதிக்கமுறைமையும் தங்களது அதிகார எல்லைக்குள் கறுப்பினஆண்களுக்கு எந்தவொரு அதிகாரப் பதவியிலும் பங்கு தந்துவிடாது.

கார்ட்மன் அவர்கள் ஆணாதிக்கமுறைமை குறித்த அத்தியாயத்தின் முடிவில் பின்வருமாறு சொல்லியுள்ளார். மாதிரிக்கு, நமது சமூகத்தை "முதலாளியச்சமூகம்" என எளிமைப்படுத்துவதைவிட, "ஆணாதிக்க, முதலாளிய வெள்ளை, மேலாதிக்கச்சமூகம்" எனச் சொல்வது மிகத் துல்லியமாக இருக்கும். ஆனால், தமது விவாதத்திற்கு இதை முக்கிய ஆதாரமாகக் கொள்வதற்குப் பதிலாக, இனப்பரிமாணத்தை மறைக்கவே அவர் முயல்கிறார். வர்க்கம், தேசிய இனம், திருமணத் தகுதி, வயது, பாலியல் நோக்கு ஆகிய இவற்றிற்குள் மட்டுமே தன் விவாதத்தைத் திணிக்கிறார்.

ஆணாதிக்கமுறைமை பற்றிய கார்ட்மன் விளக்கத்தின் இறுதியில் ஆண்களுக்கு இடையிலான ஒருமைப்பாடு அவர்கள் பெண்கள் மீது மேலாதிக்கம் செலுத்த வாய்ப்பளிக்கிறது எனக்குறிப்பிட்டுள்ளார்.

வெள்ளை/கறுப்பினஆண்களுக்கு இடையில் உள்ள ஒற்றுமையைக் காட்டிலும், வெள்ளையின ஆண்/பெண்களுக்கிடையில் உள்ள ஒற்றுமை மிக அதிகம் என நான் துணிந்து சொல்வேன்.

சமீபகாலங்களில் இனக்கலப்பு திருமணங்கள் சற்றே அதிகரித்துள்ளன என்றபோதிலும், வெள்ளையர்கள் உயிரியல் அடிப்படையில் அல்லாமல் (அதாவது ஆண்/பெண் என்ற அடிப்படையில் அல்லாமல்) நிற அடிப்படையிலேயே தங்களுக்குள் உறவை வலுப்படுத்திக் கொள்கிறார்கள் என்ற எதார்த்தமே இன்னும் நீடித்து வருகிறது.

பாஸ்டன் நகரில் சமீபத்தில் பேருந்தில் நடந்த நிகழ்ச்சி பின்வரும் விசயத்தை வெளிக்காட்டுகிறது. வெள்ளையினஇளைஞர்கள் கறுப்பினச் சிறுவர்களுடன் கைகலப்பில் ஈடுபட்டார்கள். வெள்ளையினஆண்கள் கறுப்பினச் சிறுவர்களுடனோ அல்லது வெள்ளையினஆண்கள் அனைத்து பெண்களுக்கு எதிராகவோ சண்டையிடவில்லை. மாறாக, கறுப்பர் வெள்ளையர் மோதலே நடந்துவருகிறது. நெருக்கடியான தருணங்களில் குறிப்பாக, பொது இடங்களில் கறுப்பினப்பெண்களுக்கு ஆதரவாகவும், உதவி செய்யவும் முன்வருவது வெள்ளையினப்பெண்கள் அல்ல; மாறாக, கறுப்பினஆண்களே. ஒருசில ஓரினப்புணர்ச்சிப் பெண்ணியர்கள் கறுப்பினப்பெண்களுக்கு உதவ முன்வருகிறார்கள். இது ஒரு விதிவிலக்கே. இப்பெண்ணியர்கள் மட்டுமே பெண்கள் என்ற முறையில், கறுப்பினப்பெண்களுக்கு ஆதரவாக அல்லது அவர்களுக்கு உதவ எப்பொழுதும் அணியமாக இருப்பார்கள். இது தவிர, கறுப்பினப் பெண்கள், தங்களுக்கு ஒரு நெருக்கடி ஏற்பட்டால் அல்லது அன்றாட இன்னல்களின்போது தங்களுக்கு உதவவும், ஆதரவாகவும் கறுப்பின ஆண்களையே சார்ந்திருக்க வேண்டியிருக்கிறது.

கறுப்பினஆண்கள் இன அடிப்படையில் தங்கள் பெண்களுடன் கொண்டிருக்கும் ஐக்கியத்தைக் காட்டிலும் ஆண்கள் என்ற அடிப்படையில் தங்களுக்குள் கொண்டிருக்கும் ஐக்கியம் மிக வலுவானது. ஆணாதிக்க முறைமைபற்றி விளக்கும் போது வெள்ளையின ஆண்களிடமிருந்து கறுப்பின ஆண்களை பிரிக்க வேண்டியிருக்கிறது. அனைத்து இனஆண்களுக்கும் இடையிலான ஐக்கியத்தைப் பற்றிப் பேச வேண்டுமானால் இனவேற்றுமை குறித்த பிரச்சனைகள் தெளிவாக்கப்பட்டு அதைத் தீர்ப்பதற்குரிய அணுகுமுறைகளும், போராட்டஉத்திகளும் வகுக்கப்பட வேண்டும்.

கார்ட்மன் பின்வருமாறு வாதிடுகிறார். "ஆணாதிக்கமுறைமை ஆண்களுக்கும், பெண்களுக்குமிடையிலான உறவு முறையாக, முதலாளியச் சமூகத்தில் அமைந்துள்ளது. அத்துடன் முதலாளியத்திற்கும், ஆணாதிக்க முறைமைக்கும் இடையே ஆரோக்கியமானதும், பலமானதுமான கூட்டணி நிலவுகின்றது" நமது சமூகத்தில் இருந்துவரும், ஏற்றத்தாழ்வுகளையும், சுரண்டலையும், தொடர்வதிலும், அதை வலுப்படுத்துவதிலும், வெற்றியடைந்துள்ளது என்ற அளவில் இந்தக் கூட்டணி ஆரோக்கியமாயிருக்கிறது என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். இனவாதம், பால்வாதம், வர்க்கவாதம் ஆகியவற்றை நிலைநிறுத்துவதில் இந்தக் கூட்டணி ஆரோக்கியமாகவும், வலுவானதாகவும் இருக்கிறது. முதலாளிய உற்பத்திமுறைக்கும், பெண்களின் உழைப்பு மோசடி செய்யப்படுவதற்கும் இடையிலான ஐக்கியத்தை விளக்குமுகமாக கார்ட்மன் தன் வாதத்தைத் தொடர்கிறார். இந்தக் கூட்டணி (முதலாளியம் + ஆணாதிக்கமுறைமை) எல்லைக்குள் வெள்ளையினப்பெண்களோடு கறுப்பின ஆண்/பெண் ஆகிய இருபாலருமே மொத்தமாக சுரண்டப் படுகிறார்கள். ஆனால், கறுப்பினப்பெண்கள் மட்டுமே வேலைவாய்ப்பு ஏணியில் கடைசிப்படியில் நின்று கொண்டிருக்கிறார்கள். ஆனால் கார்ட்மன்னும், ஏனைய வெள்ளையினப் பெண்ணியர்களும் பின்வரும் விசயத்தை கணக்கில் கொள்ளத்தவறிவிட்டனர். பெண்களும், கறுப்பர்களும் சுரண்டப்படும் ஒரு சூழலை வெள்ளையின ஆண்கள் உருவாக்கியிருக்கிறார்கள்.

ஆனால் ஒரு சில அற்ப வேலைகளுக்காவும், சலுகைகளுக்காகவும் இவர்களுக்கிடையில் நடக்கும் போட்டியில், வெள்ளையினப்பெண்கள் மட்டுமே உண்மையில் "பிரித்தாண்டு வெற்றி கொள்வது" என்ற உத்தியை முன்னெடுக்கிறார்கள். அமெரிக்காவில் வெள்ளையினப்பெண்கள் பெரும்பங்கு அதிகாரம் பெற்றிருக்கிறார்களா அல்லது இல்லையா என்பது ஒருபுறமிருக்கட்டும். நிறஅடிப்படையில் மக்களைக் கீழ்மைப்படுத்தும் ஒரு சமூகஅமைப்பில் தங்கள் இனஆண்களோடு சேர்ந்து இப்பெண்களும் அதில் பங்கெடுத்தும், அதனால் நன்மை பெற்றும் வருகிறார்கள் என்ற 'யதார்த்தம்' இன்னமும் நீடித்தே வருகிறது.

அமெரிக்காவில் வெள்ளையினப்பெண்கள், இனவாதத்தால் நன்மையே அடைந்துள்ளார்கள். இந்த நன்மைகள் அவர்களது நிற உணர்வை மறக்கச் செய்துவிடுகிறது. இனவாதத்திற்கு இலக்கானவர்கள் என்ற முறையில், கறுப்பினப்பெண்கள் அமெரிக்கச் சமூகத்தில் பெற்றுள்ள இடமானது, அவர்கள் தங்கள் பெண்மையை ஒரே அடையாளமாக முன்னுயர்த்த

வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியுள்ளது. வெள்ளையின ஆண்களைப் போலல்லாமல், வெள்ளையினப்பெண்களின் நிறஉணர்வு, அப்பெண்களின் பெண்மை அம்சத்திற்குள் கட்டுப்பட்டு இருக்கிறது. அதுபோலவே, அப்பெண்களின் பெண்மைஅம்சத்தை, அவர்களின் நிறஉணர்வு கட்டுப்படுத்தி வருகிறது. இதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும், தங்கள் வெள்ளைநிறத்தின் இந்தக் கட்டுப்படுத்தும் இயல்பை வெள்ளைப்பெண்ணியர்கள் ஒப்புக்கொள்ள வேண்டும்.

ஆணாதிக்கமுறைமையும், முதலாளியமும் ஏற்படுத்தியுள்ள கூட்டணியில் ஆண்கள் பெற்றிருக்கும் பங்கை பின்வரும் வழியில் விவாதிக்க வேண்டும். ஆணாதிக்கமுறைமையினாலும், முதலாளியத் தாலும், சுரண்டப்படும் தொழிலாளர்கள், நுகர்வோர் ஆகியோரோடு இந்த வெள்ளையினஆண்கள் கொண்டுள்ள உறவின் அடிப்படையில் அவர்கள் பங்கை விவாதிக்க வேண்டும். சுரண்டப்படும் இந்த மக்களின் முக்கியப்பகுதியினர் வெள்ளையின/கறுப்பினப்பெண்கள், கறுப்பின ஆண்கள் ஆகியோர் ஆவர். பின்வரும் கடமைகள் வெள்ளைப் பெண்ணியர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளன. (1) நிறவெறியை நடைமுறைப் படுத்துவதில் கருவிகளாக செயல்படுவது, நிறவெறியினால் வரும் ஆதாயங்களை பெற்றுக் கொள்வது ஆகியவற்றில் தங்கள் கூட்டையும் ஒத்துக் கொள்ளவேண்டும். (2) உழைப்பாளர் படையிலுள்ள கறுப்பினப் பெண்களின் தனித்துவமான சிக்கல்களைக் கண்டுணர வேண்டும். (3) ஆணாதிக்க முறைமையோடும், முதலாளியத்தோடும் வைத்துள்ள கூட்டில் வெள்ளையினஆண்களும் கறுப்பினஆண்களும் கொண்டுள்ள பங்கை வேறுபடுத்திப் பார்க்க வேண்டும். இந்தச் சூழலில் கறுப்பர்கள் எந்தவொரு அதிகாரமும் அற்றவர்களாக, மிகவும் பலவீனமான நிலையில் இருந்து வருகிறார்கள். வெள்ளையின ஆண்களின் ஆதிக்கத்தால் எளிதில் பாதிக்கப்படுபவர்களாக இருக்கிறார்கள்.

## கறுப்பர்கள் என்ற வேறுபாட்டிலுள்ள நுட்பம் :

மார்க்சியத்திற்கும் பெண்ணியத்திற்கும் இடையில் ஒரு முற்போக்கான ஐக்கியத்திற்கான செயல்போக்கில் கார்ட்மன் எண்ணற்ற உத்திசார்ந்த கேள்விகளை எழுப்புகிறார். இந்த விவாதத்தில் இனச்சிக்கலை ஒதுக்கியது ஒரு தீவிரமான விடுபடல் ஆகும். அதைச் சேர்த்ததால் ஏற்கனவே சிக்கலாயிருந்த ஒரு பிரச்சனை மேலும் சிக்கலாகிவிட்டது. ஆனால், தீவிர்மான, சிக்கலான, கோட்பாட்டு பிரச்சனைகளை இம்மாதிரியான இயல்போடுதான் அணுகவேண்டும். இனப்பிரச்சனை குறித்து நான்

பின்வரும் விசயங்களை எழுப்புகிறேன். பெண்ணியத்தை கணக்கிலெடுக்காமல் மார்க்சியம் முழுமை பெறாது என்பது உண்மையானால் இன உறவுகளைக் கணக்கிலெடுக்காமல், இந்த இரண்டுமே (மார்க்சியம், பெண்ணியம்) முழுமைபெறாது என்பது ஒரு நிச்சயமான உண்மையாகும்.

ஒருவேளை ஒருவர் பின்வருமாறு வாதிடமுடியும். ஒவ்வொரு உறவுமே தனித்துவமானது (UNIQUE) தான். ஆகவே இனஉறவுகள் மட்டுமே தனித்துவமானவை என பட்டயம் ஏதும் இல்லை. பொதுவான கோட்பாடுகள் இனஉறவுகளை அணுகப்போதுமானதாக இராது. இந்தப் பார்வையில் அணுகினால் பொதுவான கோட்பாடுகள் மிகவும் பொதுவானவையாக இருக்கின்றன என்று நான் சொல்லமுடியும்.

ஆயினும் இனங்களுக்கிடையிலான உறவுகள் ஒரு நீண்ட முக்கியமான வரலாற்றைக் கொண்டுள்ளன. இவ்வின உறவுகளை பால் அல்லது வர்க்கங்களுக்கிடையிலான உறவுகளுக்குச் சமமாகக் குறுக்கிட முடியாது. மார்க்சியத்திற்கும், பெண்ணியத்திற்கும் இடையிலான உறவு குறித்த விவாதத்திற்கு முன்போ அல்லது குறைந்தபட்சம் விவாதித்தின் போதோ இனவாதம் குறித்த ஆய்வை எடுத்துக் கொள்ளவேண்டும். அதன் மூலம்தான் மார்க்சியப்பெண்ணியக் கொள்கையில் இனப்பிரச்சனையை இணைப்பதற்கான நல்லபுரிதலை எட்டமுடியும்.

பால்வாதமும், இனவாதமும் நிலைநிறுத்தப்பட்ட வர்க்கத் தொகுதிகள் என்ற முறையில் பாட்டாளிவர்க்கத்தோடு சேர்ந்து இவையும் ஆதிக்க வர்க்கங்களுக்கான உபரி மூலதனத்தை உற்பத்தி செய்து வருகின்றன என மார்க்சியவாதி வாதிடலாம். பெண்கள் மீது ஆண்கள் செலுத்தும் விரிவான கொடூரங்களைப் பொருளாதாரக் காரணங்கள் அளவிற்குச் சுருக்கிவிட முடியாது என்பது போலவே, ஒரு இனத்தின் மீது மற்றொரு இனம் செலுத்தும் நச்சுத்தனமான அடக்குமுறைகளுக்கானக் காரணங்களையும் சுத்தமான பொருளாதார நோக்கில் சுருக்கிவிட முடியாது. இந்தப் பார்வை சரியானதாகத் தோன்றலாம். ஆனால் இன்னும் இதை ஆழமாகப் பார்ப்பது அவசியமாகும். நடைமுறை ஆதாரம், ஆழமான கோட்பாட்டு ஆய்வுகள் ஆகிய இரண்டுமே தேவைப்படுகின்றன. பால்வேறுபாடுகள் மிக அடிப்படையானவை என கார்ட்மன் சொல்கிறார். நான் அவருடன் ஒத்துப்போகிறேன். ஆனால் இனத்துவ வேறுபாடுகளுக்கும் இனங்களுக்கிடையிலான பகைமைக்கும் பொருளாதாரச் சுரண்டலே அடிப்படைக் காரணமாக இருக்கிறது என இன்று நாம் சொல்லிவிட முடியாது.

முன்னேற்றமடைந்த தொழில்நுட்பத்தின் பங்கு, உற்பத்திமுறைகளில் அது ஏற்படுத்திய பாதிப்புகள் சமூக உறவுகளில் அது உருவாக்கிய புதிய சமூகவர்க்கங்கள் (புதிய பணக்காரர்கள், சூப்பர் ஸ்டார் நடிகர்கள், மபியாக்கள், போதைக் கடத்தல் புள்ளிகள்) ஆகியன குறித்து மார்க்சியக் கொள்கை எதுவும் பேசவில்லை, பேச முடியாது. 1800-களின் நடுப்பகுதியில் மார்க்சிய உலகப்பார்வைக்கு பயன்படுத்தப்பட்ட மார்க்சிய கொள்கையின் சில பரிமாணங்கள், 1970-க்கு இனிமேலும் ஒத்துவராது. இதற்கு இணையான விதத்தில் இனவேற்றுமைகளுக்கும், சுரண்டலுக்கும், அடிப்படையாகப் பொருளாதாரக் காரணிகளை இனிமேலும் பார்க்க முடியாது. அமெரிக்க வெள்ளைச்சமூகத்தில் இனவெறுப்பு ஆழமாக இழையோடியிருக்கிறது. ஒரு வகைமாதிரியான கறுப்பர்-எதிர்ப்பு, இனவெறுப்பு உளவியல் வளர்ந்துள்ளது. உணர்ச்சியும், புறக்கணிப்புமே அறிவுத்திறத்தை ஆட்படுத்தி வருகிறது. கல்வி, வேலைவாய்ப்பு, குடியிருப்பு வசதிகள் ஆகிய மூன்று தளங்களில் கிடைக்கும் அனுபவ ஆதாரங்கள், கறுப்பர்கள் ஒதுக்கப் படுவதற்கும், சுரண்டப்படுவதற்கும் பொருளாதாரம் முக்கியக் காரணியாக இல்லை என்பதை நிரூபிக்கிறது. கல்வித்துறையில் நாம் (கறுப்பர்களுக்கு) இட ஒதுக்கீடு கோர வேண்டும் என்ற உண்மையே இனப்பாகுபாட்டின் ஆழத்தை வெளிப்படுத்துகிறது. இன ஒதுக்கலுக்கு எதிரான சட்டங்களுடன் ஒத்துப்போவதைக் காட்டிலும் அரசு தரும் உதவித் தொகையை இழக்கப் பள்ளி நிர்வாகங்கள் “தயாராய்” இருக்கின்றன.

பள்ளிகளில் ஆட்குறைப்பு செய்யவேண்டியது வந்தால் முதலில் பணி நீக்கம் செய்யப்படுவது, கறுப்பின ஆசிரியர்களும், அலுவலர்களுமே ஆவர். முக்கியமாக (அமெரிக்காவின்) தென்பகுதியில்தான் இச்சம்பவங்கள் நடக்கின்றன. காரணம், அப்பகுதிகளில் கறுப்பினப் பள்ளிகள் அதிகம் உள்ளன. பெரும்பாலான சமயங்களில், பணி நீக்கம் செய்யப்பட்டவர்களைக் காட்டிலும் வெள்ளையினஆசிரியர்களும், அலுவலர்களும் அதிகச் சம்பளம் பெற்று தொடர்ந்து பணியில் இருப்பார்கள். வெள்ளையர்கள் அதிகமாக வாழ்ந்துவரும் பகுதிகளுக்குப் பக்கத்தில் கறுப்பர்கள் குடியேறினால் அப்பகுதியின் சொத்து மதிப்பு கீழிறங்கிவிடுகிறது என மனை விற்பனையாளர்கள் பொய் சொல்லி வருகிறார்கள். கறுப்பர்கள் குடும்பங்களின் வருமானம் அதிகம் இருந்தபோதிலும், சிலபகுதிகளில் கறுப்பர்கள் குடியேறுவதை மனை விற்பனையாளர்கள் திட்டமிட்டே தடுத்து வருகிறார்கள்.

உதாரணமாக வங்கிகளிலும், அலுவலகங்களிலும், பின்வரும் விசயம் எழுப்பப்படுகிறது. இவ்விடங்களில் அதிகளவு கறுப்பர்களை பணிக்கு அமர்த்தினால் வெள்ளையின வாடிக்கையாளர்கள் வரவு நின்றுவிடும். ஆகவே, பொருளாதாரக் காரணங்களுக்காக அதிக அளவில் கறுப்பர்களை பணிக்கு அமர்த்த முடியாது. இம்மாதிரியான நிகழ்வுகளை (அதிக அளவு கறுப்பர்கள் இருக்கும் இடங்களை வெள்ளையர்கள் தவிர்ப்பது) வெள்ளைக் குடிமக்கள் கவனமான திட்டமிட்டு பின்பற்றிவருகிறார்கள்.

கார்ட்மன் பின்வரும் விசயத்தை சொல்வதோடு தன் கட்டுரையை முடிக்கிறார். சோசலிசத்தை நிர்மாணிப்பதற்கான போராட்டத்தில் வேறுபட்ட நலன்களைக் கொண்ட குழுக்கள் தங்களுக்குள் ஒரு கூட்டணியை உருவாக்கிக் கொள்ள வேண்டும். புரட்சிக்குப் பிறகு தங்களை "விடுதலை" செய்வார்கள் என ஆண்கள் மீது பெண்கள் நம்பிக்கை வைக்கக்கூடாது. அதற்கு இரண்டு காரணங்கள். ஒன்று ஆண்களுக்கு அதற்கான நுண்ணறிவு இருக்கிறது என நம்புவதற்கு எந்தக் காரணமுமில்லை. மற்றொன்று அவ்வாறு செய்யவேண்டிய தேவை ஆண்களுக்கு இல்லை. உண்மையில் பெண்களின் மீது ஒடுக்குமுறையைத் தொடர்வதில்தான் ஆண்களின் உடனடியான சுயநலம் அடங்கியுள்ளது. சிறப்பான கவனத்திற்குட்பட வேண்டிய குழுக்களில் கறுப்பினப் பெண்களும் ஒருகுழு ஆகும். பெண்கள் தங்கள் "விடுதலைக்கு" ஆண்களை நம்ப முடியாது என்பது போலவே கறுப்பினப்பெண்களும். புரட்சியின்போதோ அல்லது "புரட்சிக்குப் பின்போ" தங்கள் "விடுதலைக்கு" வெள்ளையினப் பெண்களை நம்பமுடியாது. அதற்கு இரண்டு காரணங்கள் ஒன்று வெள்ளையினப் பெண்களிடம் அதற்கான நுண்ணறிவு இல்லை. மற்றொன்று இன ஒடுக்குமுறை தொடர்வதில்தான் வெள்ளையினப்பெண்களின் உடனடி சுயநலம் அடங்கியிருக்கிறது. பால்வாதத்திற்கு சமமாக இனவாதத்தை எதிர்த்து போராடுவதற்கான உள் ஆற்றலை அல்லது செயல் திறனை பெண்ணியர்கள் இதுநாள்வரை குறிப்பாக வெளிப்படுத்தவில்லை. பெண்ணியம், இனவாதம் குறித்து *அட்ரினி ரிச்சின்* சமீபத்திய கட்டுரை இதில் ஒரு விதிவிலக்காகும். கறுப்புப் பெண்ணிய ஆசிரியர்கள் எழுப்பிய விசயத்தைத்தான் இவரும் அதிகமாக வலியுறுத்துகிறார். கறுப்பினத்திற்கு மரியாதை தருவது கூட வெள்ளைத்துவம் தான் என்பதை எடுத்துக் காட்டவே இவர் கட்டுரை சிறப்பித்துக் காட்டப்படுகிறது.

வெள்ளையர் என்ற முறையில் தாங்களும் ஒரு ஒடுக்கு முறையாளர் என்பதையும், அதேசமயத்தில் (பெண்கள் என்ற முறையில்) தாங்களும்

ஒடுக்கப்படுகிறோம் என்ற உண்மையையும் வெள்ளையினப் பெண்ணியர்கள் போதிய அளவு கற்றுக் கொள்ள வேண்டும்.

"அனைத்து மனிதக்குழுக்களுக்குமே பெண்தான் ஆதாரமானவர். அவர்தான் மிகவும் இயற்கையானவர். ஆகவே அவர் நமது சமூகத்தின் இனவேறுபாடுகளைக் கடந்தவர்" என்று பெண்மை குறித்து ஒரு பொய்யான நம்பிக்கை முன்வைக்கப்படுகிறது. மார்க்சியத்தத்துவம் பால்வாதத்தை கடந்தது என்று நம்புவதைப் போலத்தான் இந்த நம்பிக்கையும்.

ஒரு உறுதியான, சாத்தியமான பெண்ணிய இயக்கமானது வெள்ளை/ கறுப்பினப்பெண்கள் ஆகிய இருதரப்பினரையுமே முழுக்கவனிப்பிற்கு உட்படுத்த வேண்டும். அந்தவகையில், கறுப்பினப் பெண்ணியக் கொள்கை மற்றும் ஆய்வுகளில் கவனம் செலுத்தவேண்டிய வெளிப்படையான உண்மையான தேவை இருக்கிறது. ஒருசில கறுப்புப் பெண்ணியர்கள் இம்மாதிரியான பணிகளில் சுறுசுறுப்பாக' ஈடுபட்டுள்ளமைக்கு நன்றி தெரிவிக்க வேண்டும். இவர்களில் சிலரைக் குறிப்பிடலாம். *பார்பரா, பிவர்லி ஸ்மித்* ஆகியோர் கறுப்புப் பெண்ணிய இலக்கியத்திற்கு மதிப்பு வாய்ந்த பங்களிப்பை செய்திருக்கின்றனர். *ஆர்டிலர்டி*, அவர்களின் கவிதைகள் கறுப்புப் பெண்ணிய ஆய்வுகளில் நன்கு நிலை கொண்டவையாகும். புரட்சிகர கறுப்புப் பெண்ணிய கொள்கையை வளர்த்தெடுப்பதில் *கர்ரோல் ஆலிவரின்* முன்னோடியான பணிகள் பாராட்டுக்குரியவையாகும்.

கறுப்புப்பெண்ணியர்கள் இன்றைய பெண்ணியஇயக்கப் போக்கில் முக்கியமான பணி ஆற்றவேண்டியுள்ளது. இவர்கள் தங்களுக்கென சொந்த நிறுவனஅடித்தளத்தை வைத்துக் கொண்டு, அதிலிருந்து மற்ற பெண்இயக்கங்களில் பங்கெடுக்கவேண்டும். கறுப்பினப் பெண்கள் பெண்ணியஇயக்கத்தை அலட்சியப்படுத்தி வருகிறார்கள் அல்லது அதற்கு பகையாக இருக்கிறார்கள் என்ற ஒரு சித்திரத்தைத் தருவதன் மூலம் பெண்கள் இயக்கம் குறித்த வரலாற்றியல் உருச்சிதைக்கப் படுகிறது. வெள்ளையினப் பெண்கள் எதிர்த்துப் போராடுகின்ற அடிமை முறை, குடிப்பழக்கம், பால் வேறுபாடு ஆகிய பிரச்சனைகளின் மீது கறுப்பினப்பெண்களும் அக்கறை கொண்டுள்ளனர். ஆனால் பெரும்பாலும் வெள்ளையினப் பெண்கள் மனங்குன்றச் செய்ததினால்தான் கறுப்பினப் பெண்கள் அந்தப் பெண்கள் இயக்கத்தில் முழுதாகப் பங்கெடுக்கவில்லை என்பதை *ரோய்லைன் டெர்பார்க் பென்* அழுத்தமாகக் குறிப்பிடுகிறார். வெறுப்பும்,

ஓரவஞ்சனையும் பத்தொன்பதாம், இருபதாம் நூற்றாண்டு கறுப்பர்களின் அன்றாட வாழ்க்கையைப் பாதித்த அடிப்படைகளாய் இருந்தன.

கடந்த காலத்தவறுகளை தற்போதைய இயக்கப்போக்கு தவிர்த்துவிட வேண்டுமானால் வெள்ளை இன மேலாதிக்கத்தையும், ஆண் மேலாதிக்கத்தையும் தன்னுள் கொண்டுள்ள அமெரிக்க முதலாளியத்தின், ஏகாதிபத்தியத்தின் பலவீனமான பகுதிகளைக் கண்டுணர வேண்டிய பொறுப்பு கறுப்பு/வெள்ளைப் பெண்ணியர்களைச் சார்ந்துள்ளது. பொதுவான போராட்ட உத்திகளைத் தீர்மானம் செய்து தெளிவுபடுத்திக் கொண்டு, அதன் பின்பு, இரு குழுக்களுமே பொதுலட்சியத்தை நோக்கி தங்களின் பல்வேறு செயல்தந்திரங்களைப் பயன்படுத்த வேண்டும். வெள்ளை மேலாதிக்கத் திற்கும், பெண்கள் மீதான ஆண்கள் மேலாதிக்கத்திற்கும் எதிரான போராட்டம், உலக அளவிலான தேசிய விடுதலைப் போராட்டங்களோடு நேரடியாக தொடர்பு கொண்டுள்ளது. சர்வதேச அளவில் நீண்டகாலப் போராட்டங்கள் முன்னெடுக்கப் படவேண்டும். ஆண் மேலாதிக்கத்திற்கும், வெள்ளை மேலாதிக்கத்திற்கும், எதிரான போராட்டத்தில் கறுப்பு/வெள்ளை பெண்ணியர்கள் ஒன்றாக இணைந்துள்ளதால் அவர்கள் பின்வரும் வழியை, விருப்பத்தோடு பின்பற்ற வேண்டும். கலந்துரையாடல் (பரஸ்பரம் கற்றுக் கொள்வதற்காக) நடைமுறை, அதிகக் கலந்துரையாடல், அதிக நடைமுறை என்ற பாதையில் மெதுவாக ஆனால் உறுதியாக தங்களுக்குள் புரிதலை முன்னெடுத்தும், தங்களுக்குள் இருக்கும் வேறுபாடுகளை மதித்தும் செல்ல வேண்டும். பெண்களுக்கிடையில் காணப்படும் ஒற்றுமைகளைச் சுலபமாகத் தெரிந்து கொள்ளலாம். இதை ஆதாரமாகக் கொண்டு இன/வர்க்க வேறுபாடுகளைப் புரிந்து கொண்டும், மதித்தும், முன்செல்ல வேண்டும். கறுப்பர்களின் ஒடுக்குமுறைச் சூழலுக்குள் வைத்து தங்கள் ஒடுக்குமுறையின் இயல்பை வெள்ளையினப்பெண்கள் புரிந்து கொண்டால்தான், கறுப்பு/வெள்ளையினப் பெண்களின் ஐக்கியம் சாத்தியப்படும். இந்த இடத்தில்தான் நாம் "ஆணாதிக்கமுறைமை, முதலாளியம், இனவாதம் இவற்றிற்கிடையே யான மகிழ்ச்சியான மணவிலக்கு" குறித்து பேச சாத்தியப்படும். கறுப்புப் புரட்சிகர சோசலிசத்திற்கும், சோசலிசப் பெண்ணியத்திற்கும் இடையிலே நின்று போன திருமணத்தைப் பற்றிப் பேச முடியும்.

*ஆசிரியர் குறிப்பு :* எனது எதிர்வினை முழுக்கவும், நான் மூன்றாம் உலகப் பெண்கள் அல்லது ஏனைய சிறுபான்மையினரைக் காட்டிலும் கறுப்பினப்பெண்களையே குறிப்பிட்டுள்ளேன். கறுப்பினப்பெண்கள்

கொண்டுள்ள வித்தியாசமான வரலாற்றுப் பண்பாட்டுப் பின்புலமே இதற்குக் காரணமாகும். பெரும்பாலான சமயங்களில் கறுப்பினப் பெண்களுக்கு பொருந்திவரும் அனைத்தும் அமெரிக்காவிலுள்ள ஏனைய சிறுபான்மைப் பெண்களுக்கும் பொருந்துகிறது என்ற உண்மையை நான் முழுக்கவே உணர்ந்துள்ளேன். இருப்பினும், எல்லாச் சிறுபான்மையினப் பெண்களை பற்றியும் பேசமுடியும் என என்னால் நினைக்க முடியவில்லை, காரணம் சிறுபான்மையினப் பெண்களுக்கு இடையில் முக்கியமான வேறுபாடுகள் காணப்படுன்றன.

# சோசலிசம் பெண்ணியம் ஆண்/பெண் ஓரினப் புணர்ச்சியாளர் விடுதலை

**கிறிஸ்டின் ரிடியாப்**

*கிறிஸ்டின் ரிடியாப் அவர்கள் புதிய அமெரிக்க இயக்கத்தின் சோசலிசப் பெண்ணிய ஆய்வுக்குழுவின் உதவித் தலைவராக இருக்கிறார். சிகாக்கோ நகரிலிருந்து வெளிவந்து கொண்டிருக்கும் பெண் ஓரினப்புணர்ச்சியாளர்களின் (LESBIAN) பத்திரிகையான "பிளேசிங் ஸ்டார்"க்கு ஆசிரியராகவும் இருக்கிறார். பத்து ஆண்டு காலமாக ஆண்/பெண் ஓரினப்புணர்ச்சியாளர்கள் இயக்கங்களில் முனைப்போடு பங்கெடுத்து வருகிறார். இலினாஸ் பல்கலைக் கழகத்தில் சுற்றுச்சூழல் சுகாதாரம் குறித்த ஆய்வுப் பணியில் ஈடுபட்டுவருகிறார்.*

கடந்த பத்து ஆண்டுகளில் மக்களைப் பெருமளவுக்குச் செயலுக்கு இட்டுச் சென்ற விசயமாக பெண்ணியம், பெண்கள் உரிமைகள், பெண் விடுதலை போன்ற கருத்துக்கள் இருந்து வருகின்றன. குடும்ப வேலைகளில் கணவனைப் பங்கெடுக்கச் செய்வதாயினும் சரி, அல்லது சமமான சம்பளம் கோரி எடுக்கப்படும் சட்ட நடவடிக்கையாயினும் சரி, அல்லது சிறிய/பெரிய அளவில் எடுக்கப்படும் எண்ணற்ற செயல்பாடுகள் வாயிலாக பெண்களும், ஒருசில ஆண்களும், வெகு மக்கள் சார்ந்த ஒரு அரசியல் இயக்கத்தை வளர்த்தியுள்ளார்கள். இயக்கத்தின் வளர்ச்சிக்கேற்ப அதன் கருத்துக்களும், லட்சியங்களும் போராட்ட உத்திகளும் வளர்ந்துள்ளன. பெண் இயக்கங்களில் செயல்படுபவர்களிடம் பெண்ணியம் என்றால் என்ன? என நீங்கள் ஒரு கேள்வி கேட்டால் அதற்குவரும் பதில்கள் பல்வேறு பட்டவையாக இருக்கும். (பெண்கள் இயக்கங்களில்) பல்வேறுபட்ட போக்குகள் இருப்பதே இதற்குக் காரணமாகும். இருப்பினும், இந்தப் பல்வேறுபட்ட கருத்துக்களுக்கும் அடியில் ஒரு இணைப்பு இருந்துவருகிறது. சமீபகாலமாக, பெண்ணியச் சிந்தனையில் ஒரு முக்கியப் போக்காக சோசலிசப் பெண்ணியம் இருந்து வருகிறது. இந்தப் போக்கில் மார்க்சியக் கருத்துக்களையும், பெண்ணியக் கருத்துக்களையும் இணைத்து அதன் மூலம், சமூகம் பற்றிய ஒரு ஒருங்கிணைந்த பார்வையைத் தருவதற்கு ஏராளமான சக்தி செலவிடப்பட்டு வருகிறது.

கெய்டி கார்ட்மன் அவர்களின் கட்டுரை இம்மாதிரியான ஒரு இணைப்பை ஏற்படுத்தும் ஒரு முயற்சியே. சோசலிசப் பெண்ணியத்திலுள்ள பெண்ணிய அம்சங்களுக்கு மிகுந்த அழுத்தம் தரவேண்டியத் தேவை குறித்து இவர் விவாதிக்கிறார். தன் வாதத்தின் ஒரு அடிப்படை அங்கமாக பெண்ணியம் குறித்து ஒரு விளக்கத்தைத் தருகிறார். அவ்விளக்கத்தை பெரும்பாலரும் ஏற்றுக் கொள்ளவே செய்வர். அது பின்வருமாறு :

“பெண்களுக்கும் ஆண்களுக்கும் இடையே நிலவும் பாலியல் ஏற்றத்தாழ்வு, பெண்கள் மீதான ஆண்களின் ஆதிக்கம் ஆகியவற்றிற்கான காரணங்களை ஆய்வதுதான் பெண்ணியச் சிக்கல் என்பது....

பெண்கள் விடுதலையே பெண்ணியர் இலட்சியமாகும். ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான உறவே பெண்ணிய ஆய்வின் மையப் பொருளாகும்''.

மகிழ்ச்சியற்ற திருமணம் என்ற இக்கட்டுரையில் மேலே குறிக்கப் பட்டுள்ள விளக்கத்தின் தாக்கமும், பெண்ணியம் குறித்த மற்ற போக்குகளின் மீதான விமர்சனமும், ஆணாதிக்கமுறைமை குறித்த ஆய்வும் இடம் பெற்றுள்ளன. இவற்றின் மூலமாக பெண்ணியத்தின் சாரம் குறித்தும், மார்க்சியத்துடன் பெண்ணியம் கொண்டுள்ள உறவு குறித்தும் மதிப்பு வாய்ந்த ஆழமான சில பார்வைகள் வைக்கப் பட்டிருக்கின்றன. இருப்பினும் இக்கட்டுரையில் சில பலவீனங்கள் காணப்படுகின்றன. அவற்றை நாம் கவனிக்க வேண்டிய தேவை இருக்கிறது.

***மிகமுற்போக்கான ஐக்கியமா? அல்லது மணவிலக்கா? கார்ட்மன்னின் பெண்ணியம் என்றால் என்ன? என்பது பற்றி ஒரு விமர்சனம்:***

எழுபதுகளின் தொடக்கத்தில் *டைம்* பத்திரிகை பெண்கள் இயக்கம் குறித்து ஒரு கட்டுரையைப் பிரசுரித்திருந்தது. பெண்ணிய ஓரினப்புணர்ச்சி பற்றி மில்லட் தெரிவித்த கருத்துக்கள் பெண்ணிய இயக்கத்தின் ஆதரவாளர் என்ற அவர் நிலையைக் களங்கப்படுத்திவிட்டது என்றும், முழு இயக்கத்தின் மதிப்பையும் அய்யத்திற்கு இடமாக்கிவிட்டது என்றும், அக்கட்டுரையில் “டைம்” கருத்து தெரிவித்திருந்தது.

பெண்ணிய இயக்கத்தின் தொடக்ககாலத்திலும் சமீபகாலங்களிலும் ஏற்பட்டுள்ள ஒரு முக்கியமான முறுகல் நிலையை (TENSION) இந்நிகழ்ச்சி பிரதிபலிக்கிறது. பெண்ணியத்தையும், ஓரினப்புணர்ச்சியையும் இணைத்து விடுவது, இயக்கங்களில் செயல்படும் அனைத்துப் பெண்களும் ஓரினப்புணர்ச்சியாளர்கள் என்று களங்கம் கற்பிப்பது ஆகிய இவ்வழி முறைகள் பெண்ணியச் செயல்பாடுகளில் ஈடுபட்டுள்ள பெண்களின் மன உறுதியைக் குன்றச் செய்வதற்கானத் திறம் வாய்ந்த வழிமுறைகளாக இருக்கின்றன.

இப்பிரச்சனை எண்ணற்றக் குற்றச்சாட்டுகளையும் எதிர்க் குற்றச் சாட்டுகளையும் கிளப்பிவிட்டது. உண்மையில் பெண்கள் இயக்கத்தில்

பங்கெடுத்துள்ள பெண்களில் பலர் பெண் ஓரினப்புணர்ச்சியாளர்கள்தான். ஆனால், அவர்கள் ஓரினப்புணர்ச்சி குறித்த பிரச்சனைகளில் மட்டுமே ஈடுபடுவதில்லை. அனைத்துத் தளங்களிலும் பணியாற்றுகிறார்கள். ஓரினப் புணர்ச்சியாளர்களுக்குச் சற்றும் தொடர்பற்ற பிரச்சனைகளிலும் ஈடுபாடு காட்டிவருகிறார்கள்.

பெண்ணியம் குறித்த நமது விளக்கத்திற்கும் இதற்கும் என்ன உறவு? முதலாவதாக (பெண்கள் இயக்கங்களில்) ஓரினப்புணர்ச்சியாளர்கள் பங்கெடுத்திருப்பது பற்றி மிக வெளிப்படையாகவே தெரிய வந்தாயிற்று. இனி நமது பணி, பெண்ணியம் பற்றிய நம்புரிதலில் பெண் ஓரினப்புணர்ச்சி யாளர்கள் விடுதலை குறித்த அம்சத்தையும் இணைத்துக் கொள்வதுதான். (பெண்கள் இயக்கத்தின்) உடன்நிகழ்வாக, ஆண் ஓரினப்புணர்ச்சியாளர்கள் விடுதலை இயக்கம் தோன்றியதானது ஆண் ஓரினப்புணர்ச்சியாளர்கள் உரிமைகளுக்கும் (விரிந்த பொருளில்) பெண்ணியத்திற்குமுள்ள உறவை வெளிப்படுத்துகிறது. பெண்கள் இயக்கத்தின் நடைமுறைகளும், பெண் ஓரினப்புணர்ச்சியாளர்கள் அதில் பங்கெடுத்திருப்பதும், பெண்ணியம் குறித்த நம் அறிவை வடிவமைக்கின்றன.

இரண்டாவதாக, ஆண் ஓரினப்புணர்ச்சியாளர்களின் பிரச்சனைகளை ஆய்வு செய்து அதன்மீது ஒருநிலை எடுக்க வேண்டிய கட்டாயம் பெண்ணியர்களுக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் பெண்ணியத்தில் பெண் ஓரினப்புணர்ச்சியாளர்களின் பங்கு குறித்த எண்ணற்றக் கோட்பாட்டு வளர்ச்சிகள் ஏற்பட்டுள்ளன. இக்கோட்பாட்டு வளர்ச்சிகள் ஆண் ஓரினப் புணர்ச்சியாளர்களின் உரிமைகளுக்குத் தாராளமாக ஆதரவளிப்பது என்பதிலிருந்து பெண் ஓரினப்புணர்ச்சியாளர்களுக்குத் தனி நாடு என்பது வரை பலதரப்பட்டவையாக உள்ளன.

கெடுவாய்ப்பாக பெண்ணியச் சிந்தனைப் பள்ளிகளிலேயே சோசலிசப் பெண்ணியம் தான் குறைந்தபட்சம் கோட்பாட்டளவிலாவது ஓரினப்புணர்ச்சி பற்றிய பிரச்சனைகளில் போதுமான அளவு ஈடுபாடு செலுத்தாமல் இருக்கிறது. கார்ட்மன் அவர்கள் மட்டுமல்ல எலிஷரட்ஸ்கி, மரியா டலா கோஸ்டா, ஜுலியட் மிட்சேல், ஜீலா ஐசென்ஸ்டின் போன்ற சோசலிச பெண்ணியர்கள் விசயத்திலும் இதுதான் உண்மை. சோசலிசப் பெண்ணியத்தையும் பெண் ஓரினப்புணர்ச்சிக் கொள்கைகளையும் இணைக்க ஒருசில முயற்சிகள் நடந்துள்ள போதிலும் (எடுத்துக்காட்டுக்கு "ஓரினப் புணர்ச்சிக் கொள்கைகளும், சோசலிசப்பெண்ணியமும்" என்ற தலைப்பில் சிகாக்கோ பெண்கள் விடுதலை அமைப்பு வெளியிட்டுள்ள கட்டுரை) மிகப்

பெரும்பாலான பொது விவாதங்களில் இப்பிரச்சனை புறக்கணிப்பட்டே வந்திருக்கிறது. ஒரு வேளை, பொருளாதாரப் பிரச்சனைகளுக்கு மட்டுமே சோசலிசம் அழுத்தம் தந்ததும், பாலியலும் அதுகுறித்த பிரச்சனைகளும் அதனால் விவாதிக்கப்படாமல் இருந்ததும் இதற்குக் காரணமாக இருக்கலாம். சோசலிசப்பெண்ணியமும் இம்மரபை தொடர்ந்து முன்னெடுத்து வந்திருக்கலாம். சோசலிசப்பெண்ணியத்தின் மையப் புள்ளியாக ஓரினப்புணர்ச்சி இல்லாமல் இருக்கலாம். அதற்காக அதைப் புறக்கணிப்பதால் சோசலிசப்பெண்ணியத்தின் சில முக்கிய அம்சங்களை கணக்கிலெடுக்கத் தவறிவிடுவோம். பெண்ணியம் பற்றிய நமது விளக்க எல்லைக்குள், பாலியல், ஓரினப்புணர்ச்சி பற்றியப் பிரச்சனைகளை நாம் கவனிப்போம்.

கார்ட்மன்னின் கட்டுரையின் சாரம் இதுதான்: பெண்ணிய ஆய்வின் மையப்பொருள் மனிதர்களுக்கு இடையிலான உறவு, ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான உறவு, பெண்களுக்கு இடையிலான உறவு, ஆண்களுக்கு இடையிலான உறவு ஆகியவையே. பெண்ணியத்தின் லட்சியம் பெண்கள் விடுதலையே, இதற்குள் அனைத்து மக்களின் பாலியல் தன்னுரிமையும் ஓரினப்புணர்ச்சியாளர்களின் விடுதலையும் அடங்கியுள்ளது. பெண்ணியம் குறித்த ஏனைய விளக்கங்களில் இந்த அம்சங்கள் புறக்கணிக்கப்பட்டே வந்திருக்கிறது.

இவ்வாறாக பெண்ணியத்தோடு தொடர்புள்ள இப்பிரச்சனைகள் வெளிப்படையாகப் பேசப்படாததுதான் கார்ட்மன்னின் கட்டுரையில் காணப்படும் ஒரு முக்கியத்தவறாகும். இருப்பினும், இக்கட்டுரை பெண்ணியம் குறித்த கடந்த கால சோசலிச அணுகுமுறைகளையும், பெண்ணியச்சிக்கல் குறித்தும் சில பயனுள்ள ஆழ்ந்த பார்வைகளை முன்வைத்துள்ளது. கார்ட்மன் அவர்கள் குறிப்பிட்டுள்ளது போல, மார்க்சியர்கள் (எங்கெல்ஸ் ஷரட்ஸ்கி, டலாகோஸ்டா போன்றோர்) பெண்கள் மீதான அடக்குமுறையை (ஓரினப்புணர்ச்சியாளர்கள் மீதான அடக்கு முறையையும்) கணக்கிலெடுக்கத் தவறிவிட்டனர். இதற்கு மாறாக, அவர்கள் முதலாளியத்திற்கும் குடும்பஅமைப்பிற்கும் உள்ள உறவில் தங்கள் கவனத்தைக் குவித்துக் கொண்டனர். இது முக்கியம் என்ற போதிலும், பெண்கள் மட்டுமே குறிப்பான முறையில் ஒடுக்கப்படுவதையும், இதனையும் இவர்கள் இணைத்துப் பார்க்கவில்லை. குடும்பம், முதலாளியம் குறித்த நம்புரிதலுக்கு இந்த மார்க்சியர்களும் பங்களித்திருக்கிறார்கள் என்ற போதிலும் ‘இனி நாம் எங்கு செல்வது” என்ற கேள்வி நீடிக்கவே செய்கிறது.

### ஆணாதிக்கமுறைமையும், பெண்கள் மீதான ஒடுக்கு முறைக்கான வேர்களும் :

கார்ட்மன் வாதத்தின் மையமே ஆணாதிக்கமுறைமை பற்றிய அவரின் விவாதத்தில்தான் தங்கியுள்ளது. இதிலிருந்துதான் அவர் பெண்ணியம் பற்றிய தன் ஆய்வுரையை வளர்த்தெடுக்கிறார். ஆணாதிக்க முறைமை என்பது "பெண்கள் மீது மேலாதிக்கம் செலுத்துவதற்கு வாய்ப்பான முறையில் ஆண்கள் தமக்கிடையே அதிகாரப்படிநிலை தன்மையுள்ளதும், பரஸ்பரம் சார்ந்திருப்பதும், ஒருமைப்பாடு உள்ளதுமாக, அமைத்துக் கொண்ட பொருண்மை அடித்தளம் உள்ள சமூக உறவுகளின் தொகுப்பாகும்." மேலும் அவர் சொல்வதாவது, "தற்காலத்தில் நாம் அனுபவிக்கும் ஆணாதிக்கமுறைமையின் அம்சங்கள் பின்வருமாறு: எதிர்ப்பால் திருமணம் (இதன் விளைவாக ஏற்படும் ஓரினப்புணர்ச்சியின் மீதான வெறுப்பு) குழந்தை வளர்ப்பு, வீட்டு வேலைகள் பெண்களுக்கென ஒதுக்கப்படுதல், பெண்கள் ஆண்களில் பொருளாதார ரீதியாக தங்கியிருத்தல், (இது தொழிலாளர் சந்தையில் செய்யப்படும் ஏற்பாடுகள் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.) அரசு ஆண்களுக் கிடையிலான சமூக உறவுகளை அடிப்படையாகக் கொண்ட பல்வேறு நிறுவனங்கள், கழகங்கள் (CLUBS), விளையாட்டுகள், தொழிற்சங்கங்கள், தொழில்கள், பல்கலைக் கழகங்கள் தேவாலயங்கள் கூட்டுறவு சங்கங்கள், இராணுவம் ஆகியன"

ஆணாதிக்கமுதலாளியத்தைப் பற்றிய ஒரு புரிதலுக்காக மேற்சொல்லியுள்ள அனைத்து நிறுவனங்களைப் பற்றி ஆய்வு செய்ய வேண்டிய தேவை இருக்கிறது என கார்ட்மன் சொல்கிறார்.

ஆயினும், கார்ட்மன் வாதம் இருவிசயங்களில் தோல்வியடைந்து விட்டது. மார்க்சியத்திற்கும் பெண்ணியத்திற்கும் இடையில் ஒரு இணைப்பு என்ற அவரின் இலட்சியத்திற்கு இந்த இரு விசயங்கள் முக்கியமானவை ஆகும். மார்க்சியம் பால்குருட்டுத் தன்மை கொண்டது. பெண்கள் ஏன் ஒடுக்கப்படுகிறார்கள்? ஆண்களுக்கு கீழாக ஏன் வைக்கப்பட்டு இருக்கிறார்கள்? என்பதை கவனிக்க மார்க்சியம் தவறிவிட்டது. இது கார்ட்மன்னின் கருத்து. இருப்பினும் ஆணாதிக்கமுறைமை பற்றிய கார்ட்மன்னின் விளக்கம் அதே தவறைத்தான் செய்துள்ளது. ஆணாதிக்க முறைமை என்பது ஆண்களுக்கு இடையிலான உறவு முறைகளைக் கொண்ட ஒரு அமைப்பு, இது பெண்கள் மீதான ஆணாதிக்கத்திற்கு வழிவகுக்கிறது என ஆணாதிக்கமுறைமை பற்றி அவர் விளக்கம் தருகிறார். ஆனால்

ஆண்கள் மட்டுமே ஏன் இதில் ஆதிக்க நிலையில் இருக்கின்றனர் என்பதை இந்த வரையறை விளக்கவில்லை.

கார்ட்மன் பின்வருமாறு சொல்கிறார். "உற்பத்தியின் ஒரு அம்சத்தில் ஏற்படும் மாற்றத்திற்கும் இன்னொரு அம்சத்தில் ஏற்படும் மாற்றத்திற்கும் இடையே ஒரு அவசியமான தொடர்பு இருக்க வேண்டும் என்பதில்லை." இனவாத மேலாதிக்கம் என்கிற விசயத்திலும் இதுவே உண்மை எனக்கூறும் இவர், நமது சமூகத்தை "ஆணாதிக்க, முதலாளிய, வெள்ளை, மேலாதிக்கச் சமூகம்" என்று வரையறுக்கலாம் எனவும் சொல்கிறார். இந்த விளக்கம் நம்மை தொடங்கிய இடத்திற்கே மீண்டும் திருப்பி கொண்டு வந்துவிட்டது. இந்தத் திட்டத்தின் மூலம் நம் சமூகம் பற்றிய ஒரு முழுப்பார்வை நமக்குக் கிட்டுவதில்லை.

இக்கட்டுரை மார்க்சியத்திற்கும் பெண்ணியத்திற்கும் இடையே ஐக்கியத்தை ஏற்படுத்தத்தவறிவிட்டது. ஒரு முற்போக்கான ஐக்கியத்திற்கான கார்ட்மன்னின் முயற்சிகள் இறுதியில் பிரிவினையில் முடிவடைந்துவிட்டது.

மார்க்சிய ஆய்வின் வரலாற்றுப் பண்பை (HISTORICAL NATURE) மதிப்பிடுவதில் ஏற்பட்ட குறைபாடே இந்தத் தோல்விக்கான ஒரு பகுதிக்காரணம் ஆகும். இதனால்தான் வரலாற்று எல்லைக்கு வெளியே ஒருவகையான சுத்தமூலதனம் இருக்கிறது என கார்ட்மன் கருத்துரைக்கிறார். சமூக வடிவங்களும், மதிப்பீடுகளும், தற்செயலாக மூலதனத்தின் ஆதிக்க மதிப்பீடுகளோடு ஒத்திருப்பதாக அவர் பார்க்கிறார். கார்ட்மன் பின்வருமாறு கூறுகிறார்.

"தீவிரப் பெண்ணியர்கள் ஆண்களை, போட்டித்தன்மை கொண்ட, பகுத்தறிவு வாய்ந்த, ஆதிக்க மனோபாவம் கொண்டோர் என விவரிப்பது போலவே நாம் முதலாளியச் சமூகத்தின் முக்கிய விழுமியங்களையும் விவரிக்கின்றோம்".

கார்ட்மன்னின் ஆய்வில் மூன்று முக்கியத் தவறுகளை நாம் காணலாம்.

1. பெண்ணியம் பற்றிய அவரின் மிகக்குறுகலான பார்வை.
2. ஆண்களுக்கு அடிமைகளாகவே பெண்கள் இருப்பதற்கான காரணங்களை அவர் விளக்கத் தவறுவது.
3. சமூகம் பற்றிய ஒரு மொத்த ஆய்விற்காக மார்க்சியத்திற்கும் பெண்ணியத்திற்கும் இடையே ஒரு ஐக்கியத்தை ஏற்படுத்த அவரால் இயலாதது ஆகியவையே அம்மூன்றும் ஆகும்.

இந்த முயற்சிகளில் மேலும் ஒரு முன்னேற்றத்தை நம்மால் ஏற்படுத்த முடியுமா? பின்வரும் பக்கங்களில் சில கருத்துக்களை நாம் விவாதிக்கிறோம். அவை நம் முயற்சிகளுக்கு உதவலாம்.

***சில அடிப்படைக் கருதுகோள்கள் - பெண்ணியமும், பெண்கள் மீதான ஒடுக்குமுறையின் தோற்றமும் :***

பெண்ணியம் பற்றிய ஒரு விரிவாக்கப்பட்ட விளக்கம் என்பது. பெண்களுக்கும், ஒரினப்புணர்ச்சியார்களுக்கும் விடுதலை தருவதையும், அனைத்து மக்களுக்கும், பாலியல் தன்னுரிமை தருவதையும் லட்சியமாகக் கொண்டிருக்க வேண்டும். இதன் பொருள், நாம் மனித இனத்தின், பால் தன்மைகளையும் (SEXUALITY) மனித உறவுகளையும் மறு மதிப்பீடு செய்ய வேண்டும் என்பதே. நம்முடைய சில மிக அடிப்படையான பொதுப்புத்தி சார்ந்த புரிதல்களை (COMMONSENSE) தூக்கியெறிந்துவிடவேண்டும். இதை நாம் செய்ய வேண்டுமெனில் இந்தப் பொதுப்புத்தி சார்ந்த புரிதல்கள் எங்கிருந்து வருகின்றன. நமது உறவுகளும், நாம் எதிர்பார்க்கும் உறவுகளும் எப்படி சமூகத்தாலும் அதன் வரலாற்றாலும் வடிவமைக்கப்படுகின்றன என்பது குறித்து நாம் ஒரு புரிதலுக்கு வரவேண்டும்.

பெண்கள் மீதான ஒடுக்குமுறைக்கான தோற்றுவாய் மீது மீண்டும் நாம் பார்வையைத் திருப்ப வேண்டியது அவசியமாயிருக்கிறது. இரண்டு வழிகளிலிருந்து இந்த ஒடுக்குமுறை தோன்றுகிறது. 1. பெண்களின் வெளிப்படையான பலவீனம், 2. பெண்களின் மறுஉற்பத்தி பங்கு. இதில் முன்னது உண்மையில் சமூக ரீதியாக நிர்ணயிக்கப்பட்டது. பின்னது அதாவது பெண்களின் மறுஉற்பத்திப் பங்கு, ஆண்களின் மறுஉற்பத்திப் பங்கிலிருந்து வேறுபட்டது.*

இந்த வேறுபாட்டினால்தான் பெண்களின் சமூகப்பாத்திரமும் ஆண்களின் சமூகப்பாத்திரமும் வேறுபட்டவையாக வளர்ச்சி பெற்று, பின் அது ஆண்கள் பெண்களை ஒடுக்குவதில் முடிவடைகிறது. தொடக்ககால மனிதசமூகங்கள் பற்றி ஒரு குறிப்பான வரையறையை நம்மால் முன்வைக்க முடியாது என்ற போதிலும், தொடக்ககால சமூகங்கள் வேட்டைச்

* மனிதகுலம் தொடர்ந்து வாழ பொருட்களின் உற்பத்தியும், மறுஉற்பத்தியும் அவசியம் தேவை. அதேபோல் மனிதகுலமும் தொடர்ந்து மறுஉற்பத்தியாக வேண்டும். இதில் ஆண்கள் பொருட்களின் மறுஉற்பத்தியில் ஈடுபட்டு வருகிறார்கள். பெண்கள் தங்கள் தாய்மைப்பேறினால் மனிதகுலத்தை மறுஉற்பத்தி செய்து வருகிறார்கள். இதைத்தான் மறுஉற்பத்தியில் ஆண்களுக்கும், பெண்களுக்குமான வேறுபாடு எனக் குறிப்பிடுகின்றனர். (மொர்).

சமூகங்கள் என்பதே அடிக்கடி நம்முன் வைக்கப்படும் காட்சியாகும். பெண்கள் கர்ப்பம் தரிப்பதன் காரணமாக வேட்டைச் செயல்பாடுகளில் குறைவாகவே பங்பெடுத்திருப்பர். ஆகவே, ஆண்கள் வேட்டைக் காரர்களாகவும், பெண்கள் விவசாயத்தை கவனிப்பவர்களாகவும் இருந்திருக்கின்றனர். மனிதஇனத்தின் முன்னேற்றத்திற்கு விவசாய வளர்ச்சி முக்கியமானதாக இருந்ததைப் போலவே, மறுஉற்பத்தியில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே இருந்த வேறுபாடுகள் சமூகவேறுபாடுகளுக்கும், உடல்ரீதியான வேறுபாடுகளுக்கும் முக்கியமானவையாக இருந்தன. ஆண்கள் பழங்கால வேட்டைப் பண்பாட்டைப் பெற்றிருந்ததால் ஆதிக்கம் பெற்றவர்களாக மாறினர். இம்முறையில்தான் நாம் ஆண்கள் ஆதிக்கத்தையும், பெண்கள் மீதான ஒடுக்குமுறையையும், அதே வேளையில் மக்களுக்கிடையே வேலைப் பிரிவினை தோன்றியதையும் புரிந்துகொள்ள முயலவேண்டும்.

மறுஉற்பத்தியின் மற்றொரு அம்சம், ஒருதாரமணமுறையும் ஆண்வழிச் சொத்துரிமையும் வளர்ச்சி பெற்றது ஆகும். குழந்தையின் தாய் யார் என்பது தெளிவாக தெரிந்தபோதிலும். தகப்பன் யார் என்பது அவ்வளவு தெளிவாகத் தெரியவில்லை. ஒருதார மணமுறையின் மூலமும், (பெண்கள் மீதான) மறைமுகமான பால் கட்டுப்பாடுகள் மூலமும், தந்தையை அடையாளம் காண்பது சாத்தியமானது. பெண்கள் மீதான ஒடுக்குமுறையின் வரலாற்று வளர்ச்சி பற்றி ஒரு திட்டமான பார்வையை இது தந்துள்ளது. அதே வேளையில் இப்பார்வை பால்சார் வாழ்க்கைப் பண்புகளையும் பாலியல் ஒடுக்கு முறைக்குமான தோற்றத்தையும் மிகத் தெளிவாக கருத்துரைக்கிறது. இதுபற்றிய எங்கல்சின் ஆய்வு பின்வருமாறு :

"மார்க்சினுடையதும், என்னுடையதுமான பதிப்பிக்கப்படாத கையெழுத்துப் படிகளில் நான் பின்வரும் விசயத்தைக் கண்டேன். குழந்தை வளர்ப்பே ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே ஏற்பட்ட முதல் வேலைப் பிரிவினை ஆகும். இப்பொழுது நான் இதனுடன் பின்வரும் விசயத்தைச் சேர்ப்பேன். ஒரு தாரமண முறையால் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே ஏற்பட்ட பகைமையிலிருந்துதான் வரலாற்றில் முதன்முறையாக வர்க்கப் பகைமை உருவானது. ஆண், பெண்ணை ஒடுக்குவதிலிருந்து தான் முதல் வர்க்க ஒடுக்குமுறை தோன்றியது"

ஆண்களுக்கு கீழ்படிந்து இருப்பதே பெண்களின் விதி என்பதுதான் இதன் பொருளா?, இல்லை என்பதே தெளிவான பதிலாகும். வரலாற்று வளர்ச்சியில் சமூகங்கள் மறுஉற்பத்தி வேறுபாட்டின் அடிப்படையில்

(இவ்வேறுபாடுகள் பல வழியிலானவை) ஒரு அமைப்பை உருவாக்கின. அவ்வமைப்பு குடும்பத்திலும், உற்பத்தித்துறையிலும், பெண்களை ஒடுக்குவதில் முடிவடைந்தது. மேலும் இது ஓரினப் புணர்ச்சியர், இளைஞர்கள், முதியவர்கள் இன்னும் ஏனையோரையும் ஒடுக்கிவருகிறது. (பெண்களுக்கும், ஆண்களுக்கும் இடையே) மறு உற்பத்தியில் வேறுபாடுகள் இருக்கிறது என்பதற்காக இன்றும் இந்த ஒடுக்குமுறை அமைப்பு நீடிப்பதற்கு அவசியமில்லை. இதற்கும் மேலாக, தொழில் நுட்ப ரீதியிலும், சமூக ரீதியிலும், மறுஉற்பத்தியை கட்டுப்படுத்தும் சாத்தியம் கொண்ட ஒரு சமூகத்தில் நாம் இப்பொழுது வாழ்கிறோம். இது ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையிலான (ஏற்கனவே சொல்லப்பட்டுள்ள) வேறுபாடுகளைக் களைந்தெறிய நமக்கு வாய்ப்புகளைத் தந்துள்ளது.

***உற்பத்தி, அரசு, சிவில்சமூகம் :***

மா ர்க்சியர்கள் பல்வேறு கோணங்களிலிருந்து பொதுவாக சமூகத்தை ஆய்ந்துள்ளனர். ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே ஏற்பட்ட பிரிவினையை, உண்மையான வேலைப் பிரிவினையாக எங்கெல்ஸ் கண்ட போதிலும், அவரும் ஏனைய மார்க்சியர்களும் உழைப்பு, பொருளாதாரம், உற்பத்தி, வர்க்கம் ஆகியன குறித்து ஆய்வு செய்வதற்கான அடிப்படையாகவே இந்தப் புரிதலை பயன்படுத்திக் கொண்டனர். அத்தோடு இவற்றின் அமைப்பையே சமூகஉருவாக்கத்தின் இயக்கு சக்தியாகவும் கண்டனர். (பெண்கள் மீதான ஒடுக்கு முறைக்கான துவக்கப்புள்ளியாகவும் இது இருந்தது. ஆனால் மார்க்சியர்கள் இதை இந்தப்புரிதலில் அணுகவில்லை) ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான பிரிவினை பற்றிய மார்க்ஸ் எங்கெல்ஸ் கருத்துக்களிலிருந்து ஒருவர், ஒன்று பொருளாதாரம் பற்றிய ஆய்விற்கோ அல்லது பால்உறவுகள் பற்றிய ஆய்விற்கோ செல்லமுடியும். மார்க்சியர்களைப் பொறுத்தவரையில் உற்பத்திமுறை என்ற அடித்தளத்தில்தான் சமூகம் அமைந்திருக்கிறது. நமது சமூகம் ஒரு முதலாளியச் சமூகம். இச்சமூகத்தின் சிறு எண்ணிக்கையிலான ஒரு கூட்டம் அதாவது ஆளும் வர்க்கம், சமூகத்தின் அனைத்து வளங்களுக்கும் உரிமை கொண்டிருப்பதோடு, உழைப்பையும் கட்டுப்படுத்தி வருகிறது. பெரும்பான்மை மக்கள் அதாவது தொழிலாளி வர்க்கம், தன் உழைப்புச் சக்தியை ஆளும் வர்க்கத்திற்கு விற்று வருகிறது.

ஆளும்வர்க்கம் அதிகாரத்தில் தொடர்ந்து நீடிப்பதற்கு தன் அதிகாரங்களைப் பாதுகாக்க கைவசம் சில வழிமுறைகளை வைத்திருக்க வேண்டும். அரசு இந்த வழிமுறைகளை காலங்காலமாக தொடர்ந்து

செய்துவருகிறது. அரசாங்கத்தின் மூலமாகவும் காவல்துறை, இராணுவம் போன்ற அதன் கருவிகள் மூலமாகவும் ஆளும் வர்க்கமானது தொழிலாளி வர்க்கத்தின் மீது தன் ஆதிக்கத்தைத் தொடர்ந்து செலுத்திவருகிறது. தன் ஆதிக்கத்தைத் தொடருவதற்கு ஆளும் வர்க்கம் இந்த வழிமுறை ஒன்றை மட்டுமே நம்பியிருக்கவில்லை. அந்தோணியோகிராம்சி அவர்கள் "சிறைக் குறிப்புகள்" என்ற தன் புத்தகத்தில் வளர்த்தெடுத்துள்ள சிவில்சமூகம் என்ற கருத்தாக்கம் (ஆய்வுத் தளத்தில்) மிகக் குறைவாகவே பயன்படுத்தப் பட்டிருக்கிறது. இங்கு நம் ஆய்விற்கு இது பயனுள்ளதாக இருக்கும். அரசாங்கம் மற்றும் ஒத்திசைவு (அல்லது மேலாதிக்கம்) ஆகியவை இணைந்த வன்முறையின் மூலம் ஆளும்வர்க்கங்கள் சிவில்சமூகத்தை ஆட்சி செய்கிறது. அமெரிக்கா போன்ற மிக முன்னேறிய முதலாளியச்சமூகத்தில் சிவில்சமூகம் என்பது மிகமுக்கியப் பங்காற்றுகிறது.

ஆளும் வர்க்கத்தின் இந்த மேலாதிக்கம் தேவாலயங்கள், பள்ளிகள் போன்ற சிவில் சமூகநிறுவனங்கள் மூலம் வளர்த்தெடுக்கப்படுகிறது.' "*கிராம்சியின் மார்க்சியம்*" என்ற தன்புத்தகத்தில் *பாக்ஸ்* அவர்கள் மேலாதிக்கத்தைப் பின்வருமாறு வரையறுக்கிறார்.

"சிவில்சமூகம் முழுவதும் ஊடுருவியுள்ள தொழிற்சங்கங்கள், பள்ளிகள், தேவாலயங்கள், குடும்பம் போன்றவற்றின் முழு அமைப்புகளிலும், அவற்றின் செயல்பாடுகளிலும் ஊடுருவியுள்ள மொத்தஅமைப்பின் விழுமியங்கள், அணுகுமுறைகள், ஒழுக்கங்கள் இன்னபிறவும், ஏதேனும் ஒரு வழியில், நிலை நிற்கும் அமைப்பை ஆதரிப்பதாகவும், அவ்வமைப்பை ஆதிக்கம் செலுத்தும் வர்க்கநலன்களையும் ஆதரிப்பவையாகவும் உள்ளவையே, மேலாதிக்கம் என கிராம்சி பொருள் தருகிறார்.

ஆளும்வர்க்கமானது கருத்தியல் மேலாதிக்கத்தின் மூலம் முழுச் சமூகத்தின் சம்மதிப்பைப் பெற்றுக் கொள்கிறது. ஆளும்வர்க்கங்களின் கருத்துக்களும், மதிப்பீடுகளும், மக்களை ஆட்சி செய்யும் கருத்துக்களாகவும் மதிப்பீடுகளாகவும் மாறுகின்றன. இக்கருத்துக்களும் மதிப்பீடுகளும் பொதுப்புத்தி சார்ந்த புரிதலாகவே (COMMON SENSE) கருதப்படுகின்றன. வக்கரித்துப் போன இந்தப் பொதுபுத்தியால்தான் அடிக்கடி உழைக்கும் மக்கள் சோசலிசத்தை எதிராகப் பார்க்கின்றனர். பொருளாதார நிலைமைகள் முதிர்ச்சி அடைந்து ஒரு மாற்றத்திற்கான தேவையில் இருந்தபோதிலும், புரட்ச்சிக்கான போராட்டம் தோல்வி அடையும் விதத்தில், ஆளும் வர்க்கம் தொழிலாளிகளின் உணர்வுகளை நன்கு

வடிவமைத்து விடுகின்றது. *பாக்ஸ்* சொல்லியுள்ளது போல "ஒடுக்கப்பட்ட மக்கள் தங்களின் மீதான அரண்களையும், தங்கள் அன்றாட இன்னல்களையும் ஏற்றுக் கொள்ளும்படி அல்லது அதற்கு சம்மதம் தெரிவிக்கும்படி மேலாதிக்கமானது பல்வேறு வழிகளில் ஒடுக்கப்பட்ட மக்களைத் தூண்டிவிடுகிறது"

கிராம்சி அவர்கள் பார்வையில் உற்பத்திமுறை, அரசு, சிவில் சமூகம் ஆகியவற்றிற்கிடையிலான உறவுகள் சிக்கலானவை, மாற்றத்திற் குட்பட்டவை. ஒன்றையொன்று பாதிக்கக் கூடியவை. கலாச்சார அரசியல் கருத்துலகச்சக்திகள் முக்கியமாக ஆளும்வர்க்கத்தின் மேலாதிக்கத்திற்குள் தலையீடு செய்தால் மட்டுமே அரசியல் போராட்டத்தின் இயல்பையும், அதன் பலன்களையும் வடிவமைக்க முடியும் என கிராம்சி கருதினார்.

சிவில்சமூகம் என்ற இக்கருத்தாக்கத்திற்குள் *மினாடேவிஸ் கால்பீல்டு* என்பவர் "*எதிர்ப்புக் கலாச்சாரம்*" (CULTURES OF RESISTANCE) என்ற ஒன்றையும் சேர்க்கிறார். அந்தக் கலாச்சாரத்தின் பங்கு என்னவெனில், அன்னியக் கலாச்சாரம் திணிக்கப்படுவதை எதிர்ப்பது, காலனிய மக்களின் நியாயங்களை நிலைநிறுத்துவது, அம்மக்களின் ஆதிக்கஎதிர்ப்பை நிலைப்படுத்துவது ஆகியவையே. எதிர்ப்புக்கலாச்சாரம் என்பது உண்மையில், ஆளும் வர்க்கத்தின் கருத்தியல் மேலாதிக்கத்தை எதிர்க்கும் ஒரு முயற்சியே ஆகும். கால்பீல்டு பின்வருமாறு சொல்கிறார்.

"ஏகாதிபத்தியம் (காலனி நாடுகளின்) முழுப்பண்பாட்டையும் ஒரு சேரத் தாக்குகிறது. சமூக அமைப்புகள், பொருளாதார உறவுகள், பண்பாட்டு மரபுகள் ஆகியவற்றை ஏகாதிபத்திய அரசியல் ஆக்கிரமிப்பு ஆழமாக பாதிக்கிறது. இதற்கு பதிலுரையாக பெரும்பாலான காலனி நாட்டு மக்கள், நேரடியாக புதிய வடிவிலான பண்பாட்டு நிலை நிறுத்தல்களை (AFFIRMATION)* மையப்படுத்திய அல்லது மேற்கத்திய ஐரோப்பிய கலாச்சார மேலாதிக்கத்தின் ஏகாதிபத்தியத் திணிப்புகளை நுணுக்கமாக எதிர்க்கின்ற போராட்ட வழிமுறைகளை மையப்படுத்திய எதிர்ப்புப் போராட்டங்களை வளர்த்தெடுக்கிறார்கள். ஏகாதிபத்தியத்திற்கு முந்திய பண்பாட்டிலிருந்து ஒரு பகுதியையும் நவீன விசயங்களிலிருந்து ஒரு பகுதியையும் இணைத்து புதிய பண்பாட்டையும் நிறுவன வடிவங்களையும் வடிவமைக்கிறார்கள். இவை ஏகாதிபத்திய திணிப்பிற்கு எதிரானவையாகும். சக்திவாய்ந்த, அன்னிய ஆதிக்கத்தின் காரணமாக ஏற்படும் முழுச் சீரழிவை

* *தங்களது பண்பாடுகளை புதுப்பித்தல், உயர்த்திபிடித்தல் ஆகிய அம்சங்கள்தான் இங்கு குறிப்பிடப்படுகிறது (மொர்.)*

எதிர்க்கும் முகமாக தோற்றம் பெறும் இந்த உணர்வு பூர்வமான, வேறுபாடான கலாச்சார நிலை நிறுத்தல்கள் தேசிய, சோசலிச விடுதலை இயக்கங்களின் உருவாக்கத்தில் முக்கியமாகப் பெருமளவிற்கு ஆய்வுக் குட்படாத பங்கை வகிக்கின்றன. ஆப்பிரிக்கா, ஆசியா, தென்அமெரிக்கா மற்றும் அமெரிக்காவிற்குள்ளே நடைபெற்ற கலாச்சார எதிர்ப்புகளை மார்க்சிய அரசியல் ஆய்வுகள் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்''

பால்கரன் எழுதிய "ப்ளூஸ் இசையும் கவித்துவ உணர்வும்" என்ற புத்தகத்தை கார்ல்போக்ஸ் மதிப்புரை செய்யும்போது கவிழ்ப்புக் கலாச்சாரம் (SUBVERSIVE CULTURE) பற்றி பேசுகிறார். இக் கவிழ்ப்புக் கலாச்சாரத்தை எதிர்ப்புக் கலாச்சாரத்தோடு ஒப்பு நோக்க முடியாது என்ற போதிலும் அதை ஒத்ததாக இருக்கிறது. கரன் ப்ளூஸ் இசையை முதலாளிகளைத் தொல்லைப்படுத்தும் 'சாத்தானின் இசையாக"ப் பார்க்கிறார். காரணம், இது நிலை நிறுத்தப்பட்டுள்ள பண்பாடுகளின் அடிப்படை மதிப்பீடுகளுக்கு சவால்விடுகிறது" என போக்ஸ் சொல்கிறார்.

"நகர்ப்புறக் கறுப்பு துணை கலாச்சாரத்தின் தோற்றத்தில் முதலாளிய மேலாதிக்கத்தின் கவிழ்ப்பு கலாச்சார சக்தி தோன்றியது. ஆப்பிரிக்க, அமெரிக்க கலாச்சாரத்தின் கலப்பாக இது இருக்கிறது. முதலாளிய ஒழுக்கத்தால் கண்டிக்கப்பட்ட, அடக்கப்பட்ட அனைத்து விசயங்களையும் இது கொண்டாடியது. ஆசை, கற்பனை, காம உந்துதல்கள், சமூகம் சமத்துவம் ஆகிய அனைத்தையும் இது கொண்டாடியது".

### சிவில்சமூகமும் பெண்ணியமும் :

அரசாங்கம், பொருளாதார அமைப்பு ஆகியவற்றிற்கு வெளியில் உள்ள நிறுவனங்களான தேவாலயங்கள், பள்ளிகள், குடும்பங்கள் ஆகிய நிறுவனங்களை உள்ளடக்கியதுதான் சிவில் சமூகமாகும். இந்த நிறுவனங்கள் சிலவற்றில் இவை இரண்டும் ஒன்றோடொன்று கலந்திருக்கும். மாதிரிக்கு சிவில்சமூகம், அரசாங்கம் ஆகிய இரண்டையும் உள்ளடக்கியதாக தொழிற் சங்கங்கள் உள்ளன. இந்நிறுவனங்கள் மூலமாகத்தான் ஆளும் வர்க்கம் மேலாதிக்கத்தை அதாவது மதிப்பீடுகளையும், நம்பிக்கைகளையும் கொண்ட ஒரு உலகப் பார்வையை, சமூகம் முழுவதும் உள்ள மக்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒரு பார்வையை பெற்றுக் கொள்கிறது. பெண்ணியத்திற்கு (ஓரினப் புணர்ச்சியாளர்கள் விடுதலையையும் உள்ளடக்கி) இதனை எப்படிப் பொருத்திப் பார்ப்பது? பாக்ஸ் "கிராம்சியன் மார்க்சியம்" என்ற புத்தகத்தில் குடும்பத்தையும், பாலிமீலையும் சிவில்சமூகத்தோடு தொடர்புபடுத்தி

விவாதிக்கிறார். கிராம்சி தன் ஆய்வில் எவ்விடத்திலும் குடும்பத்தையும், பாலியலையும் முன்வைத்து ஒரு கொள்கையை உருவாக்கவில்லை என்ற போதிலும் மதச் சீர்திருத்தவாதம், (PURITANISM) முதலாளியம், குடும்பம் ஆகியவற்றிகிடையிலான கூட்டைப் பற்றிச் சில ஆழ்ந்த கருத்துக்களை உருவாக்கியுள்ளார். மார்க்சியத்தில் வில்கெம் ரீச் முன்வைத்த கருத்துகளுக்கு இணையானது இது. மதக்கருத்துக்களின் முழு ஆதரவுப் பின்புலத்தோடு, ஒருதார மணமுறைக்குடும்பத்தில் நிலை நிறுத்தப்பட்ட பாலியல் உறவுகளானது திறமையும், பணிவும் கொண்ட ஒரு தொழிலாளர் அணி (WORK FORCE) உருவாவதற்கு மையமாக இருக்கிறது. இந்தப் பொருளில், குடும்பமானது சிவில்சமூகத்தின் அடிப்படைச் சமூக அலகாக இருக்கிறது. மதச் சீர்திருத்த வாதம் இதனை நியாயப்படுத்தும் கருத்தியலாக விளங்குகிறது. முதலாளியம் விரிவாக விரிவாக தொழில் நுட்பம், அதிகார வர்க்க அமைப்பின் மீதான அதன் சார்பும் அதிகரிக்கிறது. "இப்புதிய வழிமுறைகள், பாலியல்உணர்வுகள் மீது கடுமையான கட்டுப்பாடுகளைக் கோருகின்றன. குடும்பம் வலுப்படுத்தப்படுவதை விரிந்த பொருளில் இதனோடு சேர்த்துப்பார்க்க வேண்டும். பாலியல்உறவுகள் மீது கட்டுப்பாடுகளையும், பாலியல்உறவுகளை நிலைநிறுத்துவதையும் இதனோடு சேர்த்துப் பார்க்க வேண்டும்." இவ்வாறாக கருக்குடும்பத்தின் விளைவாய் உருவான ஒடுக்கப்பட்டப் பாலியலானது தொழிலாளியை தொழில் இடத்திலும் சரி, அதற்கு வெளியிலும் சரி, உளவியல் ரீதியாக ஒடுக்குகிறது. புதிய தொழில் மயமாக்கம் ஒருதாரமணத்தை விரும்பியதை தெளிவாகப் பார்க்கமுடிகிறது. மனிதன் ஒரு தொழிலாளி என்ற முறையில் அவ்வப்போது ஏற்படும் பாலியல் திருப்தியில் தன் சக்தியைச் செலவழிப்பதைப் புதிய தொழில்மயமாக்கம் விரும்பவில்லை. இரவில் பாலியல் உறவிற்குப் பின் பணிக்குச் செல்லும் தொழிலாளி தொழிலுக்கு ஏற்றவரல்ல. உற்பத்திப் போக்கிலிருந்து வெகுதூரம் விலகி நின்ற குழுக்கள்தான் பாலியல்ஒழுக்கம் போன்ற விசயங்களில் மிக முற்போக்கான அணுகுமுறையைக் கொண்டிருந்தன என்பதைக் கண்டுகொள்ளலாம். இதில் வியப்படைய ஏதுமில்லை. கிராம்சி கருத்துப்படி ஆணாதிக்கஒடுக்கு முறைக்கு எதிரான பெண்களின் போராட்டமானது, தவிர்க்கஇயலாமல் புதிய வகையிலான சிந்தனைகளையும், செயல்பாடுகளையும் கொண்டதாக இருக்க வேண்டும். அவை தொழிற்சாலைக்குள்ளிருந்து முதலாளிய மேலாதிக்கத்தை வேரறுப்பதாக இருக்கவேண்டும்.

ஆகவே, சிவில்சமூகத்தின் அடிப்படை அலகு குடும்பம் ஆகும். இதன் அடியோட்டமான கருத்தியல் மதச்சீர்திருத்தமாகும். குடும்பத்தின் பங்கு,

முதலாளியத்தோடு அதற்குள்ள உறவு, பெண்கள், ஓரினப் புணர்ச்சியாளர்கள் மீதான ஒடுக்குமுறை ஆகியவற்றை ஆய்வு செய்வதன் மூலம் பெண்ணியத்தையும், சோசலிசத்தையும் இணைக்க நாம் கிராம்சியின் சிவில்சமூகம் என்ற கருத்தாக்கத்தைப் பயன்படுத்த முடியும்.

சமூகத்தைப் போலவே, குடும்பமும் முரண்பாடுகளைக் கொண்டது தான். முந்தைய சமூகஅமைப்புகளில் குடும்பம் உற்பத்திப் போக்கில் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது. ஆனால் முதலாளியத்தின் எழுச்சியால் கவனம் தனித்தொழிலாளி மீது திரும்பியது. இந்தச் சூழலுக்கேற்ப குடும்பஅலகு தன்னை மாற்றிக்கொண்டது. முதலாளியப் பொருளாதாரத்தில் அது (குடும்பம்) ஆளும்வர்க்கங்களுக்கு ஏனைய வழிகளில் ஊழியம் செய்கிறது. குடும்பம் என்ற அலகு உற்பத்திப் போக்கின் ஒரு பகுதியாக இருப்பதற்குப் பதிலாக சிவில்சமூகத்தின் ஒரு பகுதியாகச் செயல்படுகிறது. குழந்தையைப் பெற்றெடுத்து வளர்க்கும் இடமாக குடும்பம் இருக்கிறது. சமூகத்தின் முக்கிய நுகர்வு அலகாகவும் குடும்பம் திகழ்கிறது. இம்மாதிரியான பணிகளின் மூலம் குடும்பம் தொழிலாளிகளை மறுஉற்பத்தி செய்கிறது. (குடும்பம், தனிச்சொத்து, அரசு என்ற புத்தகத்தில் எங்கெல்ஸ் சொல்லியுள்ளது போல) முக்கியமாக, கருத்தியலையும் அது மறு உற்பத்தி செய்கிறது. குடும்பம்தான் நமக்கு ஆளும் வர்க்கக் கருத்தியலின் முதல் பாடத்தை கற்றுத்தருகிறது. சிவில் சமூகத்தின் ஏனைய நிறுவனங்களுக்கு ஒரு சட்ட அங்கீகாரத்தையும், இந்தக் குடும்பம்தான் தருகிறது. குடும்பங்கள் மூலமாகத்தான் நாம் முதல்முதலாக மதத்தைக் கற்றுக்கொள்கிறோம். நல்ல குடிமகனாக இருப்பதற்கான பாடத்தையும் இங்குதான் கற்றுக் கொள்கிறோம். இங்கிருந்துதான் நாம் பள்ளிக்கு அனுப்பப்படுகிறோம்.

இம்மாதிரியானப் பாடங்களை கற்றுத்தருவதோடு குடும்ப அமைப்பு நின்று விடுவதில்லை. அது ஆளும்வர்க்கக் கருத்தியலை மறுஉற்பத்தியும் செய்கிறது. குடும்பம் என்ற அமைப்பே தன்னளவில் அதிகாரக் குணம் கொண்டதாகவும், படிநிலைஅதிகாரத்தைக் கொண்டதாகவும் இருக்கிறது. குடும்பஅமைப்பில் பொதிந்துள்ள இந்த ஆளும்வர்க்க மேலாதிக்கம்தான், குடும்பம் ஒரு இயற்கையான விசயம் என்று நமக்குக் கற்றுத்தருகிறது. ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையிலான உறவின் அடிப்படையில் தான் முக்கியமாக குடும்பம் அமைந்துள்ளது. இந்த உறவு பாலியல் உணர்வுகளை முக்கியமாக பெண்களின் பாலியல் உணர்வுகளை ஒடுக்குகிறது. பாலியலுக்கும், மறுஉற்பத்திக்கும் இடையில் இயற்கையான உறவு நிலவுகிறது, என நமக்கு கற்பிக்கப்பட்டுள்ளது. இதனுடன் குழந்தை

வளர்ப்பும், பால்சார் வாழ்க்கைப்பங்கும், அலுப்பூட்டும் ஒரே மாதிரியான பாலியல் உறவுகளும், (SEX STEREOTYPES) இணைக்கப்படுகின்றன. தொழிலிடங்கள் போன்ற வாழ்க்கையின் மற்ற தளங்களுக்கும் இது நீட்டிக்கப்படுகிறது. பாலியல்உணர்வுகள், பால்சார் வாழ்க்கைப்பங்கு குறித்த இந்த கருத்தாக்கங்களுக்கு முரணான எந்த ஒன்றும் மாறான இயல்பு கொண்டதாக, பொதுப்புத்திக்கு எதிரான ஒன்றாகக் கருதப்படுகிறது என்பதோடு இயற்கைக்கு விரோதமானதாகவும் கருதப்படுகிறது.

தொழிலாளிவர்க்கத்தின் வாழ்க்கையில் இந்தக் குடும்பஅமைப்பு ஒரு முக்கியமான பாத்திரத்தையும் வளர்த்துள்ளது. இதை *ஷரட்ஸ்கி, பெர்ன்பாக்* ஆகிய இருவருமே சுட்டிக்காட்டியுள்ளார்கள். குடும்பம் என்ற அமைப்பிற்குள்தான் ஒரு மனிதன் உணர்ச்சிகளை வெளிக்காட்ட முடியும், அதிலிருந்துதான் சமூக ஆதரவையும் பெறமுடியும். வாழ்க்கையில் மற்ற தளங்களிலிருந்தோ அல்லது தொழில்செய்யும் இடத்திலிருந்தோ இந்த ஆதரவு ஒருவனுக்குக் கிடைக்காது. குடும்பம் என்ற அமைப்பிலிருந்துதான் ஒரு தொழிலாளி மனிதன் என்ற தன் அடையாளத்தை வளர்த்துக் கொள்கிறான். மனிதன் என்ற முறையில் தனக்கான மரியாதையைப் பெற்றுக் கொள்வதும் இங்கிருந்துதான். ஆகவேதான் தொழிலாளி வர்க்கமும் சரி ஆளும்வர்க்கமும் சரி குடும்பம் என்ற அமைப்பை ஆதரிக்கின்றன. இந்த அமைப்பு இந்த இரண்டு வர்க்கங்களின் தேவையையும் பூர்த்தி செய்கிறது. இந்த அம்சம்தான் இதனை (குடும்பம்) நிலையான நிறுவனமாக உருவாக்கி வைத்திருக்கிறது.

எங்கல்ஸ் சொல்லியுள்ளதுபோல, மறுஉற்பத்தியில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையே நிலவும் வேறுபாடுதான் பெண்கள் மீதான ஒடுக்கு முறைக்கு ஆதாரம் ஆகும். இதனால் குடும்பத்திற்கு வெளியே ஆண்கள் தொழில் செய்வதும், பெண்கள் குடும்ப வேலைகளைக் கவனிப்பதும் என்ற முதல் வேலைப்பிரிவினை உண்டாயிற்று, சமூகத்தில் குடும்பத்தின் பங்கு மாற்றம் பெறுவதற்கு ஏற்ப பெண்கள்மீதான ஒடுக்குமுறையின் தன்மையிலும் மாற்றம் ஏற்படலாயிற்று.

சிவில்சமூகத்தின் அடிப்படை அலகு குடும்பம் ஆகும். சிவில்சமூகத்தின் ஒரு அலகு மட்டுமல்ல, அதன் ஒரு பகுதி என்ற முறையில் குடும்பம் உற்பத்திப் போக்கோடு உறவும் கொண்டிருக்கிறது. இவ்வாறாக, பெண்கள் மீதான ஒடுக்குமுறை குடும்பம் என்ற எல்லைக்குள் மட்டுமே நின்றுவிடுவதில்லை. மாறாக தொழிலிடம், அரசியல்தளம், இன்னபிற என சமூகம் முழுக்க பெண்கள் மீதான ஒடுக்குமுறை விரவி நிற்கிறது. மேலும், குடும்பத்தின் ஒரு

உறுப்பு என்ற முறையில் பெண்கள் ஒடுக்கப்படுகிறார்கள். மற்ற ஒருபகுதி மக்களோ, குடும்பத்தை விட்டு வெளியே நிற்பதால் ஒடுக்கப்படுகிறார்கள். அவ்வாறு ஒடுக்கப்படுவதில் ஆண் ஓரினப் புணர்ச்சியாளர்கள் ஒரு பிரிவினர் ஆவர். ஆண்/பெண் ஓரினப்புணர்ச்சியர் மீதான ஒடுக்குமுறை மூன்று முக்கிய வழிகளில் நடைபெறுகிறது. முதல்வகை ஒருவர் ஓரினப்புணர்ச்சியாளர் என தன்னை அடையாளம் கண்டு கொள்வது. இவ்வாறு அடையாளம் கண்டவுடன் நாம்* தனிமையில் விடப்படுகிறோம். நண்பர்கள் யாரும் நமக்கு ஆதரவளிப்பதில்லை. சமூகத்திலிருந்து மட்டுமல்ல குடும்ப அமைப்பி லிருந்தும், அவர்கள் உயிரென போற்றிவரும் மதிப்பீடுகளிலிருந்தும் நாம் விலகி நிற்கிறோம் என்பதைக் கண்டு கொள்கிறோம்.

இவ்வாறு வெளியே வந்த ஆண்/பெண் ஓரினப்புணர்ச்சியாளர்கள் மற்றவர்களுக்கும் தங்கள் அடையாளத்தைக் காட்டுவதா, வேண்டாமா என்ற இரு வழிகளை எதிர்கொள்ள நேரிடுகிறது. இரண்டு வகையான ஒடுக்குமுறைக்கிடையில் ஏதேனும் ஒன்றை விரும்பித்தேர்ந்தெடுப்பதே இங்கு முன்நிற்கிறது. மொத்தத்தில் இதை விருப்பத்தேர்வு (CHOICE) என்றே சொல்ல முடியாது.

கட்டுப்பாடான குடும்பம், சமூகம் ஆகியவற்றில் வளர்ந்து வந்த நாம் ஓரினப்புணர்ச்சியர் மீது சுமத்தப்பட்ட களங்கம் பற்றி நன்கு அறிந்துள்ளோம். நாம் வெளிப்படையாக (குடும்பம் என்ற அமைப்பை விட்டு) வெளியே வந்ததால் நேரடியான பகை, ஓரவஞ்சனை, சில சமயங்களில் வன்முறையைக்கூட எதிர்கொள்ள நேரிடுகிறது. ஆகவேதான் பெரும்பாலான நபர்கள் ரகசியமாகத் தங்குகிறார்கள். ஒருசிலரைமட்டுமே நண்பர்களாகப் பாவிக்கிறார்கள். வெளிப்படையான ஓரவஞ்சனை, அவதூறு ஆகியவை ஓரினப்புணர்ச்சியாளர்கள் எதிர்கொள்ளும் இரண்டாவது வகை ஒடுக்கு முறையாகும். மறைவான வசிப்பிடங்களில் தங்குவது மூன்றாவது வகை ஒடுக்குமுறையாகும். வாழ்க்கையில் மறைவிடத்தில் வசிப்பது என்பது பெரும்பாலான ஓரினப் புணர்ச்சியாளர்களின் ஒரு அடிப்படையான யதார்த்தமாக இருக்கிறது. நம்மை நாமே பாதுகாத்துக் கொள்ள இதுவே வழியாக இருக்கிறது. நமக்கு நெருக்கமான நண்பர்களிடத்தே கூட நம் வாழ்க்கையின் முக்கிய அம்சங்களை மறைக்கவும் இதுவே காரணமாக இருக்கிறது.

---

* இக்கட்டுரை ஆசிரியர் இவ்விடத்தில் ஓரினப்புணர்ச்சியாளர்களோடு தன்னையும் ஒருவராக இணைத்துக் கொண்டு நாம் என்றே குறிப்பிடுகிறார். (மொ.ர்)

ஆண்/பெண் ஓரினப்புணர்ச்சியாளர்கள் மீதான இந்த ஒடுக்குமுறை வடிவங்கள், இவர்களின் தன்மைக்கேற்ப மாறுபாடான குறிப்பான வடிவங்களாக மாறும். ஆண் ஓரினப்புணர்ச்சியாளர்கள் பெரும்பாலும் தொல்லைகளுக்கும் அவதூறுகளுக்கும் உள்ளாவார்கள். ஆனால் பெண் ஓரினப்புணர்ச்சியர்களோ பெரும்பாலும் புறக்கணிக்கப்படுவார்கள்.

குடும்பத்தின் வாயிலாக, மற்ற விசயங்களோடு நமக்கு பாலியல் பற்றிய கருத்துக்களும், பாலியலில் நமது பங்கு பற்றியும் கற்றுத்தரப்படுகிறது. கிராம்சி சொல்லியுள்ளது போல, முதலாளியத்தின் நன்மைக்காக குடும்பத்திற்குள் "பாலியல் உந்துதல்கள் மீது மிகக்கடுமையான ஒழுக்க விதிகள்" கடைபிடிக்கப்பட்டுவருகிறது. ஆனால் மேலாதிக்கக் கருத்தியலின் அடிப்படையிலான பாலியல்கருத்துக்களுக்குச் சவாலாக ஓரினப் புணர்ச்சியாளர்கள் இருந்து வருகிறார்கள். ஆண்/பெண் ஓரினப் புணர்ச்சியாளர்கள் மறைவாக வைக்கப்படுவதற்கு இதுவே முக்கிய காரணமாகும். இவர்கள் இருப்பே பாலியல், பால்சார் வாழ்க்கைப்பங்கு ஆகியன குறித்த பெரும்பாலான "பொதுக்கருத்துகளுக்குச்" சவாலாக அமைந்து விடுகிறது. முக்கியமாக இது பெண் ஓரினப்புணர்ச்சியாளர்களைப் பொருத்தவரை உண்மையாகும். பெண்கள் அடிப்படையிலேயே பால் உணர்வு அற்றவர்கள், பால்உணர்வற்ற உயிரிகள் என்று ஆளும்வர்க்கக் கருத்தியல் சொல்கிறது. ஆனால் பெண் ஓரினப்புணர்ச்சியாளர்களின் இருப்பு முழுக்கவே இக்கருத்திற்கு முரணாக இருக்கிறது. ஆண் ஓரினப்புணர்ச்சியாளர்களையும், பெண் ஓரினப்புணர்ச்சியாளர்களையும் சமூகம் அணுகுவதில் வேறுபாடான வழிகளைக் கடைப்பிடிப்பதற்கு இதுவே காரணமாகும். மாதிரிக்கு ஆண் ஓரினப்புணர்ச்சியாளர்கள் வரைமுறையற்ற கட்டுப்பாடற்ற, புணர்ச்சிவிருப்பம் கொண்டவர்கள் என்றே பொதுவாக (வெறுப்பாக) பார்க்கப்படுகிறார்கள். ஆனால் பெண் ஓரினப் புணர்ச்சியாளர்களைப் பற்றி நினைக்கத் தொடங்கியஉடனே "இரண்டு பெண்கள் ஒன்றாய் இணைந்து என்ன செய்துவிட முடியும்" என்றே கருதுகிறார்கள்.

இவ்வாறாக, ஆண் ஓரினப்புணர்ச்சியாளர்களை மறைவிடத்தில் வசிக்க வைத்தும், முக்கியமாக பெண் ஓரினப்புணர்ச்சியாளர்களை மறைத்தும் ஆளும் வர்க்கமானது குடும்பம், (குடும்பத்தின் மூலமாக) பாலியல், பெண்கள் குறித்த தன் கருத்தியலை நிலைநிறுத்தி வருகிறது. ஆண் ஓரினப் புணர்ச்சியாளர்களுக்கு பாடம் புகட்ட வெளிப்படையான ஓரவஞ்சனையும், தொல்லைகளும் பயன்படுத்தப்படுகின்றன. இன்னும் அடிப்படையாகச்

சொல்வதானால் குடும்ப உறுப்பினர்கள் ஹோமோ போபியாவை (HOMO PHOBIA)* வற்புறுத்துவதிலிருந்தே இந்த ஹோமோபோபியா ஆளும்வர்க்கக் கருத்தியலின் பகுதி என்பது உறுதிப்படுகிறது. ஆண் ஓரினப் புணர்ச்சியார்களுக்கும் கூட இதுவே பொருந்தும். குடும்ப அமைப்பைவிட்டு வெளியேறுதல் என்பதே ஒருவர் தன்னளவில் ஆளும்வர்க்கக் கருத்தியலுக்குச் சவால் விடுவதாகும். ஆண் ஓரினப்புணர்ச்சியாளர்கள் குடும்பத்தைவிட்டு வெளியேறிய பின்னரும் ஒரு குறிப்பிட்ட எல்லைவரை இந்த ஹோமோ போபியாவிற்கு ஆட்பட்டே இருக்கின்றனர். இது நமது (ஓரினப் புணர்ச்சியாளர்) ஐக்கியத்திற்குத் தடையாக இருக்கிறது. ஆண் ஓரினப்புணர்ச்சியாளர்களின் இம்மாதிரியான உளவியல் தனிமையானது பால்வாதம், அதிகாரவாதம் போன்ற முதலாளிய மேலாதிக்கத்தின் ஏனைய அம்சங்களும் அவர்களுக்குள் நிலைநிறுத்தப்பட வழி அமைத்துத் தருகிறது.

இறுதியாக, பெண்கள் மீதான ஒடுக்குமுறையில் காணப்படும் சில வேறுபாடுகளைப்புரிந்து கொள்ள, சிவில்சமூகம் பற்றிய நம் ஆய்வு உதவி புரிந்துள்ளது. *கோலி கிராப்* சுட்டிக்காட்டியுள்ளது போல, முதலாளியத்தின் கீழ் சிவில்சமூகம், உற்பத்தித் துறை (PRODUCTION) ஆகிய இரண்டின் மூலமாகவும் பெண்கள் ஒடுக்கப்படுகிறார்கள். ஆனால் மற்ற காரணிகளைப் பொறுத்து முக்கியமாக இனம், வர்க்கம் ஆகிய காரணிகளைப் பொறுத்து இந்த ஒடுக்குமுறையின் வடிவங்கள் மாற்றம் பெறும். காரணம், சிவில் சமூகத்தின் மூலமாக நிலைநிறுத்தப்படும் கருத்தியலானது பெண்கள் மீதான ஆணாதிக்கக் கருத்தியல் என்று மிக எளிமைப்படுத்திவிட முடியாது. முக்கியமாக, இந்தக் கருத்தியல் வெள்ளை ஆளும்வர்க்க ஆண் கருத்தியலாகும். இந்த ஆளும்வர்க்கத்தோடு பெண்கள் கொண்டுள்ள உறவு முறைகளைச் சார்ந்தே ஒடுக்குமுறையின் தன்மையும் மாறுபடும்.

பெண்களின் முக்கியச் சமூகப் பாத்திரம் குடும்ப அமைப்பிற்குள் என வரையறுக்கப்பட்டிருக்கிறது. அதனால் வீட்டிற்கு வெளியே தொழில் செய்யும் பெண் தொழிலாளி அவமதிக்கப்படுவதோடு, ஆண் தொழிலாளிக்குச் சமமாக மதிக்கப்படுவதில்லை. அதனால் அடிக்கடி பெண்கள் கூலி வாங்காத தொழிலாளிகளாக (VOLUNTEER WORKERS) அல்லது குறைந்த கூலிதரப்படும் தொழிலாளிகளாக நடத்தப்படுகிறார்கள். பெண்களின் உழைப்பு இரண்டாம் தரமாக மதிக்கப்படுவதற்குக் கலாச்சார

* *HOMO PHOBIA* : இதனை தன்னின விருப்பாளரது அச்சம் என்பர். தன்னையொத்தப் பாலினத்தவர் மீது பாலின விருப்பமுடையவர் தமது பாலுணர்வு வெளிப்பாடு பற்றிப் பிறரிடம் கூறுவதற்கு அஞ்சுகின்ற அச்சத்தைக் குறிக்கிறது.

அம்சம்தான் காரணம் என்றே நடுத்தர வர்க்கப்பெண்கள் கருதுகிறார்கள். ஆனால் இதனால் பொருளாதார பாதிப்பும் ஏற்படுகிறது. (பதவி உயர்வு பெண்களுக்குத் தரப்படுவதில்லை.) ஆனால் இந்தப் பொருளாதார இழப்பிற்குச் சமமாக சமூக மதிப்புக் குறைவும் இருக்கிறது. மறுபுறம், பெண் தொழிலாளர்கள், குறைந்த கூலி பெறும் ஏனைய பிரிவினரை வெகுவாக ஆதரிக்கிறார்கள். ஆனால் இவர்கள் முன்னேறுவதற்கு (பெண் தொழிலாளர்கள்) எந்த வாய்ப்பும் தரப்படுவதில்லை. இந்த அவமரியாதையை அவர்கள் பொருளாதார கணக்கீட்டில் (குறைந்த கூலி பெறுவதன் மூலம்) தெளிவாக உணர்ந்து கொள்கிறார்கள். இதனை நாம் அழுத்தமாகச் சொல்ல வேண்டியிருக்கிறது. காரணம், பொதுவாகவே தொழிலாளி வர்க்கத்தின் தொழில், மரியாதைக்குறைவாகப் பார்க்கப் படுகிறது. ஆகவே, பெண் தொழிலாளிகளின் தொழிலை ஒப்பீட்டு ரீதியாக ஆண்தொழிலாளிகளின் தொழிலோடு மிகச் சமமாகப் பார்க்க வேண்டும்.

அதைப்போலவே, ஆளும்வர்க்கம் முன்வைத்துள்ள அழகியல் தரத்தை எட்டவில்லை என்பதற்காகப் பெரும்பாலான வெள்ளையினப் பெண்கள் ஒடுக்கப்படுகிறார்கள். மறுபுறம், இந்த அழகியல்தரத்திற்கு வெளியே நிற்பதால் கறுப்பினப்பெண்கள் ஒடுக்கப்படுகிறார்கள்.

சிவில்சமூகம், கருத்தியல் மேலாதிக்கம் போன்ற கிராம்சியின் கருத்துக்களைப் பயன்படுத்தியதன் மூலமும், பெண்கள் மீதான ஒடுக்கு முறையின் ஆதாரம் பற்றிய நமது புரிதலை இதனோடு இணைத்ததன் மூலமும் சோசலிசத்தையும், பெண்ணியத்தையும் எப்படி இணைக்க முடியும் என்பதை நாம் காணத்துவங்கலாம். யதார்த்தத்தில், சிவில்சமூகம் என்ற கருத்தாக்கத்தையும் கார்ட்மன்னின் ஆணாதிக்கமுறைமை குறித்த கருத்துக்களையும் ஆய்வு செய்தால், இந்த இரண்டு கருத்துக்களுமே ஒன்றுதான் என்பதைக் காணலாம். ஆணாதிக்கமுறைமை என்ற சொல்லாட்சியானது பாலியம், குடும்பம், பெண்கள் மீதான ஒடுக்குமுறை ஆகியவற்றின் முக்கியத்துவத்தைக் காட்டும் சாதகத்தைக் கொண்டுள்ளது. கார்ட்மன் சுட்டிக்காட்டியுள்ளதைப் போல இந்த அம்சம் மார்க்சிய ஆய்வில் காணப்படுவதில்லை.

இருப்பினும், குடும்பம், பெண்கள், ஓரினப்புணர்ச்சியாளர்கள் மீதான ஒடுக்குமுறைக்கும், முதலாளியத்திற்கும் இடையேயுள்ள தொடர்பை கிராம்சியின் சிவில்சமூகம் என்ற கருத்தாக்கம் மிகத்தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. முதலாளியம், ஆணாதிக்கமுறைமை பற்றி "மகிழ்ச்சியற்ற திருமணம்" என்ற கட்டுரையில் காணப்படும் ஆய்வுகள், சோசலிசத்திற்கும்

பெண்ணியத்திற்கும் இடையே ஒரு உண்மையான ஐக்கியத்திற்கு இட்டுச் செல்லவில்லை. சிவில்சமூகம், குடும்பம் குறித்த நம் ஆய்வுகள் அதைச் செய்துள்ளன. இன்னும் இதில் நாம் நிறைய செய்ய முடியும், செய்ய வேண்டும். முக்கியமாக, இந்த வரையறைக்குள் ஏகாதிபத்தியம், இனவெறி ஆகியவற்றை முதலாளியத்தோடு இணைப்பதன் மூலம் செய்ய வேண்டும். இருப்பினும், இந்தப் பின்னணியிலிருந்து சோசலிசப்பெண்ணியத்தின் நடைமுறைப் போராட்ட உத்திகள் குறித்து சில கேள்விகளை எழுப்பலாம்.

***தற்போதையச் சூழலைக்கவனிப்பதிலுள்ள போராட்ட உத்தி நடைமுறை ஆகியவற்றின் முக்கியத்துவம்:***

பத்தொன்பதாம்நூற்றாண்டிலும், இருபதாம்நூற்றாண்டின் துவக்கத்திலும் சில போராட்ட அலைகள் எழும்பியுள்ளன என்ற போதிலும் கடந்த பத்து, பதினைந்து ஆண்டுகளாக எழுந்து வந்துள்ள பெண்கள், ஓரினப் புணர்ச்சியாளர்கள் இயக்கங்களால் சமஉரிமை, சீர்திருத்தம் என்ற தளங்களில் சில உண்மையான நன்மைகள் கிட்டியுள்ளன. 1973ல் கருக்கலைப்பு குறித்த உச்சநீதிமன்ற முடிவு, பெரும்பாலான நகரங்களில் ஓரினப்புணர்ச்சியாளர்கள் உரிமை குறித்து சட்டம் இயற்றப்பட்டது, பெண்களுக்கு இடஒதுக்கீடு ஆகியன குறிப்பான மாறுதல்கள் ஆகும்.

ஆனால் கடந்த சில ஆண்டுகளாக இந்த நன்மைகள் மீது வலது சாரிகள் தாக்குதல் தொடுத்து வருவது மிகத்தெளிவாகத் தெரிகிறது. இதனால் உச்சநீதிமன்றத் தீர்ப்பில் பின்னடைவு, பெண்கள் சம உரிமைக்கு எதிரான முயற்சிகள், ஓரினப்புணர்ச்சியாளர்கள் உரிமை குறித்து பொதுக்கருத்துக் கணிப்பு, பெண்கள் இடஒதுக்கீட்டிற்கு எதிரான நீதிமன்ற வழக்குகள் ஆகிய விளைவுகள் ஏற்பட்டுள்ளன. பொருளாதாரப் பிரச்சனைகளில் மட்டுமே தாக்குதல் தொடுப்பது என்ற வலதுசாரிகளின் முந்தையப் போராட்ட உத்திகள் இப்பொழுது மாற்றம் பெற்றிருக்கின்றன. பொருளாதார விசயங்களில் வலதுசாரிகளின் நடைமுறை அப்படியே நீடித்துவருகிறது என்றபோதிலும், அதற்கான முக்கியத்துவம் முன்னைப்போல இப்பொழுது இல்லை.

இம்மாதிரியான நிகழ்வுகளை நாம் எவ்வாறு புரிந்து கொள்வது? இக்கட்டுரையில் பல இடங்களில் மிகத் தெளிவாக நாம் விவாதித்துள்ளது போல பொருளாதார மலர்ச்சி, சிவில் உரிமைகள், போர்-எதிர்ப்பு இயக்கங்கள் "பால் விடுதலை" போன்ற இயக்கங்கள் தோன்றிய 1950-60 களில் தான் பெண்கள் இயக்கமும் தோன்றியது. "நடுத்தரவகுப்பைச் சேர்ந்த

குறிப்பாக கல்லூரி மாணவிகள் அல்லது கல்லூரிக்கல்வி பயின்ற வெள்ளையினப் பெண்கள் மட்டுமே பெண்கள் இயக்கத்தில் முக்கியமாகப் பங்கெடுத்திருந்தனர். அதனால்தான் பெரும்பாலான பெண்கள் இயக்கங்களின் உண்மையான கோரிக்கைகள் இந்த அனுபவத்தில் வேர் கொண்டிருந்தன. அவை மூன்றாம் உலகப்பெண்களின் அல்லது உழைக்கும் பெண்களின் தேவைகளோடு சம்பந்தம் கொண்டிருக்கவில்லை. பெண்கள் இயக்கம் வளர, வளர அதன் கோரிக்கைகளுக்கு விரிவான ஆதரவு கிடைத்தது. இந்த ஆதரவு தன் பங்கிற்கு அதன் கோரிக்கைகள் விரிவடைய உதவியது.

இதே சமயத்தில் ஆண் ஓரினப்புணர்ச்சியாளர் இயக்கமும் இதே பாதையைப் பின்பற்றியது. தொடக்கக் காலத்தில் ஓரளவு தயக்கங்கள் காட்டிய போதிலும், பெண்கள் இயக்கம், ஆண்/பெண் ஓரினப் புணர்ச்சியாளர்கள் பிரச்சனைகளுக்கு நியாயமான ஆதரவு வழங்கியது. அதேசமயத்தில், ஆண் ஓரினப்புணர்ச்சியாளர்கள் பெண்கள் பிரச்சனைகளுக்கு மிக அதிக அளவில் ஆதரவு காட்டி வந்தனர். தங்கள் அமைப்புகளில் இருபாலினத்தவருக்கும் சம உரிமை தருவதன் மூலம் இந்த ஆதரவு வெளிப்படுகிறது.

*கனா பிச்* சுட்டியுள்ளது போல ஆண் ஓரினப்புணர்ச்சி இயக்கமும், பெண்கள் இயக்கமும் மிக நெருக்கமாகப் பிணைந்துள்ளன. ஆண் ஓரினப்புணர்ச்சியாளர்கள் விடுதலை என்பது "விரிவான பெண்ணிய இயக்கத்தின் ஒரு பகுதியாகும். ஆண் ஓரினப்புணர்ச்சியர் இயக்கங்களில் பங்கெடுத்துள்ள ஆண்கள் அனைவருமே தங்களைப் பெண்ணியர்களாகக் கருதிக் கொள்வதில்லை என்றபோதிலும், சில சமயங்களில் இவர்கள் பெண் ஓரினப்புணர்ச்சியாளர்களை பாலியல் நோக்கில் கையாண்ட போதிலும், இதுதான் உண்மை. பால்வாதத்தை எதிர்த்துப் போராடாமல் ஓரினப் புணர்ச்சியாளர்கள் என்ற முறையில் எந்தவொரு ஆண் அல்லது பெண் ஓரினப்புணர்ச்சியரும் தங்கள் மீதான ஒடுக்குமுறையை எதிர்த்துப் போரிட முடியாது".

பெண்கள் இயக்கம் வளர வளர, ஓரினப்புணர்ச்சியாளர்கள் இயக்கம் மிகத் தெளிவாக வெளிப்படத்துவங்க இந்த இரண்டும் சேர்த்து நிலை நிறுத்தப்பட்டுள்ள ஆளும்வர்க்க மேலாதிக்கத்தை ஆதரிக்க உதவும் கருத்துக்களுக்கு, அதாவது குடும்பஅமைப்பு, வீடு, பாலியல், பெண்கள் பங்கு போன்றகருத்துக்களுக்குச் சவால் விடுகின்றன. இந்தச் சவால்களை நொறுக்குவதும், மரபான கருத்துக்ளை நிலைநிறுத்துவதும் வலதுசாரிகள்

வேலையாக இருக்கிறது. தொழிலாளிவர்க்கத்தின் சில தேவைகளை குடும்ப அமைப்பு நிறைவு செய்வதாலும், ஆளும் வர்க்கக்கருத்துக்கள் நம் கலாச்சாரத்தில் மிகஆழமாகப் பதிந்துள்ளதாலும், வலதுசாரிகள் செயல்பாடுகளுக்குப் பரவலான ஆதரவு கிட்டுகிறது. முக்கியமாக, ஓரினப்புணர்ச்சியாளர்கள் உரிமைகளுக்கு எதிரான செயல்பாடுகளுக்கு நல்ல ஆதரவு கிட்டுகிறது.

## அமெரிக்காவில் சோசலிசப் பெண்ணியர் செயல்படுவது பற்றி :

மேலேகண்டுள்ள ஆய்வுகள் மூலம் சில கருத்துக்கள் இங்கு முன்வைக்கப்படுகின்றன. நான் கடந்த பல ஆண்டுகளாக பணியாற்றி வந்த, ஆண்/பெண் ஓரினப்புணர்ச்சியாளர்கள் குழுக்களுக்கு முக்கியமாக இந்த ஆய்வுகளை பயன்படுத்தியதால் உருவானவையே இந்தக் கருத்துக்கள். இருப்பினும், வேறுசில துறைகள் குறித்தும் சில முடிவுகளை முன்வைத்துள்ளேன். இவ்வாறு செய்வதன் மூலம் நாம் பலமுக்கிய கருத்துக்களால் வழிநடத்தப்பட வேண்டும். முதலாவதாக, அமெரிக்காவில் ஆளும்வர்க்க மேலாதிக்கம் மிகவலுவான நிலையில் இருக்கிறது. ஆகவே இதனை எதிர்கொள்ள இதற்கு இணையான வலுக்கொண்ட அரசியல் போராட்டவடிவங்கள் தேவை. உற்பத்தித்துறையில் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்ற மார்க்சியக் கணிப்போ அல்லது பெண் ஓரினப்புணர்ச்சியாளர்களுக்கு தனி நாடு அமைப்பது அல்லது பெண்கள் கம்யூன் அமைப்பது போன்ற தீவிரப்பெண்ணியத் திட்டங்களோ இதற்கு உதவாது. இதன் பொருள் இம்மாதிரியான முயற்சிகளை மறுப்பது என்பதல்ல. ஆனால் இவை மட்டுமே ஒரு புரட்சியை கொண்டுவந்து விடாது.

ஆயினும், மேலாதிக்க-எதிர்ப்புப் போராட்டங்களின் முக்கியத் துவத்தை வலியுறுத்தும் அதே வேளையில், சிவில்சமூகம் என்ற வரையறைக்குள் மாத்திரமே கட்டுண்டுவிடாமல் இருப்பதில் நாம் கறாராக கவனம் காட்ட வேண்டும். இம்மாதிரியான போராட்டங்கள் அரசியல், உற்பத்தி ஆகிய தளங்களிலும் முன்னெடுக்க வேண்டும். அடிக்கடி வேறுபட்ட போராட்ட வடிவங்களை முன்னெடுக்க வேண்டும்.

மேலும், நாம் பெண்ணியப் பணிகள் என்று பேசும்போது அதைப் பரந்த தளத்தில் வைத்துப் பேச வேண்டும். அடிக்கடி பெண்கள் இயக்கமானது "பெண்கள் பிரச்சனைகளோடு" மட்டுமே முடிந்துவிடுகிறது. சிவில் சமூகத்திற்கும், பெண்கள் மீதான ஒடுக்குமுறைக்கும் இடையே தொடர்பு இருப்பதால் பெண்ணியத்தை மிகப்பரந்த தளத்தில் வைத்து

வரையறுக்க வேண்டும் என்பது தெளிவாகத் தெரிகிறது. பெண்ணியமானது, ஓரினப் புணர்ச்சியாளர்கள் விடுதலை, இளைஞர்கள், முதியவர்கள் அந்தஸ்து ஆகியவற்றையும் உள்ளடக்கியுள்ளது. சமூகப் பிரச்சனைகளோடும் இது தொடர்பு கொண்டுள்ளது.

மாதிரிக்கு, ஆண்/பெண் ஓரினப்புணர்ச்சியாளர்கள் விடுதலைக்காக செயல்படும்போது எண்ணற்ற போராட்ட உத்திகள் தாமாகவே முன்வருகின்றன. ஏற்கனவே சுட்டிக்காட்டியது போல இதில் முதலாவது மறைவிடத்தில் வசிப்பது ஓரினப்புணர்ச்சியாளர்கள் மீதான ஒடுக்கு முறையின் அடிப்படையாக இருக்கிறது. ஓரினப்புணர்ச்சியாளர்களை மறைவாக வைத்திருப்பது ஆளும்வர்க்கத்தின் தேவையாக இருக்கிறது. மறைவாக வசிக்காத ஓரினப்புணர்ச்சியாளர்கள் மீது கொடூரமான தண்டம் விதிக்கப்படுகிறது. ஆகவே ஓரினப்புணர்ச்சியர் இயக்கத்தின் அடிப்படையான முதல் பணி குடும்பத்தைவிட்டு வெளியேறிவரும் அல்லது குறிப்பிட்ட சூழலினால் வெளியேற்றப்படும் ஓரினப்புணர்ச்சியாளர்கள் உரிமைகளுக்கு பாதுகாப்புத் தேடவேண்டும். சட்ட நீதிமன்ற நடவடிக்கை களுக்கு, ஓரினப்புணர்ச்சியாளர்கள் தரும் முக்கியத்துவம் இவ்வாறாக பொருத்தமான செயல்பாடுகளாக உள்ளன.

இருப்பினும், இம்மாதிரியான செயல்பாடுகள் வேறு தாக்கங்களையும் கொண்டிருக்கின்றன. ஓரினப்புணர்ச்சியாளர்கள் உரிமைக்காக உழைப்பதால், விரிவான அடித்தள அரசியல்பணிகளில் பெரும்பாலான ஓரினப் புணர்ச்சியாளர்களை ஈடுபடுத்த வாய்ப்பு ஏற்படுகிறது. இன்னொரு சாதகமான அம்சம் ஓரினப்புணர்ச்சியர் பிரச்சனைகளை மற்றவர்களும் தெரிந்து கொள்ள, அதில் ஈடுபட வாய்ப்புத்தருகின்றன. இந்தத் திசைநோக்கி ஓரினப்புணர்ச்சியாளர்கள் இயக்கத்தை முன்னேற்றுவது சோசலிசவாதிகள் லட்சியமாக இருக்க வேண்டும்.

ஓரினப்புணர்ச்சியாளர்கள் உரிமைகள் என்பதற்கும் அப்பால் ஆண்/பெண் ஓரினப்புணர்ச்சியர் விடுதலை, சோசலிச புரட்சியின் ஒருபகுதி என்ற முறையில் அவ்வியக்கங்களை சோசலிஸ்டுகள் அணுகவேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம், ஆண்/பெண் ஓரினப்புணர்ச்சியாளர்களின் கலாச்சாரம் குறித்து சில ஆழ்ந்த பார்வைகளைப்பெறமுடியும். மரபுரீதியான குடும்ப அமைப்பு (வாழ்க்கையில்) பெற்றிருக்கும் இடமும், பால்சார் வாழ்க்கைப் பங்குகளும் உடைபடுவதற்கான காரணங்களையும் நாம் ஆழமாகக் கண்டு கொள்ளலாம். இதன் மூலம் சில சாதகமான செயல்பாடுகள் நமக்கு கிடைக்கும்.

ஓரினப்புணர்ச்சியர் விடுதலைக்கும், பெண்கள் விடுதலைக்கும் இடையே உள்ள உறவு, கூட்டணி ஆகியவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதன் மூலம், தங்கள் பிரச்சனைகளில் மட்டுமே மையம் கொண்டிருக்கும் ஓரினப்புணர்ச்சியர் முயற்சிகளை நாம் மாற்றியமைக்க முடியும்.

ஆண்/பெண் ஓரினப்புணர்ச்சியாளர்கள் கலாச்சாரத்தை நாம் எதிர்ப்புக்கலாச்சாரமாகவும் பார்க்க முடியும். பார்கள் (BARS), பெண்கள் இசைச் சங்கங்கள் போன்ற ஓரினப்புணர்ச்சியாளர்களின் பெரும்பாலான கலாச்சார அம்சங்கள் எதிர்ப்புக்கலாச்சாரத்தின் பகுதிகளாகும். ஓரினப் புணர்ச்சியாளர்கள் இருப்பிற்கும், ஆளும்வர்க்க மேலாதிக்கம் கற்பித்துத் தந்துள்ள அலுப்பூட்டும் ஒரே மாதிரியான (STEREO TYPE) வழக்கங்களை எதிர்த்துப் பின்னடையச் செய்யவும் இவை உதவுகின்றன. இந்த அம்சங்களைக் கொண்டு நாம் அவர்களைக் கலாச்சாரஎதிர்ப்பிலிருந்து அரசியல் செயல்பாடுகளுக்கு மாற்ற முடியும். ஆண் ஓரினப்புணர்ச்சியாளர்களிடம் நீடித்துவரும் ஆளும்வர்க்க மேலாதிக்கத்தை எதிர்கொள்ளவும் இந்தக் கலாச்சாரத்தை நாம் பயன்படுத்திக் கொள்ளலாம்.

ஆண்/பெண் ஓரினப்புணர்ச்சியாளர்கள் கலாச்சாரத்தை அமைப்பு என்ற கருத்தாக்கத்தின் மேலாதிக்க இயல்பிற்குச் சவால்விடும் ஒரு கவிழ்ப்புக் கலாச்சாரமாகப் பார்க்க வேண்டும். இருப்பினும், இக்கலாச்சாரம் தன்னளவில் குடும்பஅமைப்பிற்கு எதிரானதல்ல என்று மக்கள் உணரும் வகையில் நாம் செய்ய வேண்டும். குடும்பஅமைப்பை தூக்கியெறியுங்கள் என்ற முழக்கம் ஆளும் வர்க்கத்தைக் காட்டிலும் தொழிலாளி வர்க்கத்தைச் சேர்ந்த மக்களுக்கே அச்சத்தைத் தருகிறது. காரணம், பாதுகாப்பு, நிலையான வாழ்க்கை ஆகியவற்றை நிலைநிறுத்த இம்மக்கள் பெரிதும் குடும்ப அமைப்பைச் சார்ந்தே இருக்கிறார்கள். மனித உறவுகள் குறித்து நாம் மாற்றுப் பார்வைகளைத் திறம்பட முன்வைப்பதன் மூலம், ஆண் ஓரினப் புணர்ச்சியாளர்களின் கவிழ்ப்புக் கலாச்சாரத்தை திறம்பட பயன்படுத்த முடியும்.

முழு விடுதலைப் பார்வையை நோக்கி பயணம் செய்வதற்கு ஏற்கனவே செல்லியுள்ளதுபோல, ஓரினப்புணர்ச்சியரின் பிரச்சனைகளை மற்ற பிரச்சனைகளோடு இணைத்து வைக்க வேண்டிய தேவை இருக்கிறது. குறுகலான பார்வையின் விளைவு குறுகிய கோரிக்கைகளில் முடிய அதனால் மற்றவர்கள் அன்னியப்படுவதும் அடிக்கடி நடைபெறுகிறது. மாதிரிக்கு கருக்கலைப்பு உரிமைக்காக மக்களை திரட்டுவது பெண்கள் இயக்கத்தின் முக்கியக் கோரிக்கையாக இருக்கிறது. ஆனால் பல்வேறு பட்ட குழுக்கள் இதற்கு ஆதரவளிப்பதில்லை. காரணம், பெரும்பாலான பெண்கள்

கருக்கலைப்பை மறுஉற்பத்தி உரிமைகளின்* முக்கிய அம்சமாகக் கருதுவதில்லை.

பெரும்பாலான மூன்றாம் உலக நாடுகளில் கருத்தடையும், "மக்கள் தொகை" கட்டுப்பாடும் பெண்களின் முக்கியப்பிரச்சனைகளாக இருக்கிறது. பெண் ஓரினப்புணர்ச்சியாளர்களுக்கு பாலியல்சுதந்திரமும், பெற்றோர் ஆவதற்கான உரிமையும் மிக முக்கியமானவை. ஆனால் உழைக்கும் பெண்களுக்கோ (முக்கியமாக தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்களுக்கு) பாதுகாப்பானப் பணியிடத்திற்கான உரிமை மிக முக்கியமான பிரச்சனையாகும். ஆகவே, கருக்கலைப்பு பிரச்சனையில் மட்டும் கவனம் செலுத்தினால், சில சமயங்களில் அது பெரும்பாலான பெண்களை அப்போராட்டத்திலிருந்து விலக்கி வைத்துவிடும் அல்லது அன்னியமாக்கி விடும். அதேசமயத்தில் பெண்கள் மீதான ஒடுக்குமுறையின் ஆதாரம் பற்றிய நம்புரிதலோ மறுஉற்பத்தியில் பெண்களுக்குள்ள உரிமைதான் பெண்கள் விடுதலைக்கு முக்கியமானது என கருத்துரைக்கிறது. இம்மாதிரியான பணிகள் அனைத்து மக்களையும் ஐக்கியப்படுத்தும் விதத்தில் செய்யப்படவேண்டும். இவ்வாறு செய்கையில், பெண்கள் விடுதலையோடு, மறுஉற்பத்தி உரிமைகளை மிக இயந்திரத்தனமாக இணைத்துப் பார்க்காமல் இருக்க கவனம் செலுத்தவேண்டும். பெண்கள் மீதான ஒடுக்குமுறைக்கு காரணமாகவிருக்கும் குறிப்பான பொருளியல் அடிப்படை மீது மட்டும் கவனம் செலுத்துவதோடு நாம் நின்றுவிட முடியாது. மாறாக, "பெண்களுக்கான இடம் குடும்ப அமைப்பே", "பெண்கள் வெறும் கால்களோடும், கருத்தரித்தும் இருக்க வேண்டும்" என்பது போன்ற இந்தப்பொருளியல் அடிப்படைக்கு ஆதாரமாக கட்டமைக்கப்பட்டுள்ள கருத்தாக்கங்களின் மீதும் கவனம் செலுத்தவேண்டும்.

நாம் குறிப்பான உரிமைகளைப் பாதுகாப்பதற்கு மட்டுமே போராடவில்லை. அத்தோடு பெண்கள் குறித்து (ஆதிக்க கருத்தியலுக்கு) மாறுபாடான விழிப்புணர்ச்சியை நாம் முன்வைக்கவேண்டும். புதிய அமெரிக்க இயக்கத்தின் மறுஉற்பத்தி உரிமைக்கான மசோதா, மறுஉற்பத்தி உரிமைக்காக ஒரு திட்டத்தை முன்வைத்தது. அதில் கருக்கலைப்பு, குடும்பக் கட்டுப்பாடு, பெற்றோர் ஆவதற்கான உரிமை (குறிப்பாக பெண் ஓரினப்புணர்ச்சியாளர்களை ஆதரித்து) பாதுகாப்பான பணியிடம், இன்னும்

---

* குழந்தை பெற்றுக்கொள்வதா, வேண்டாமா? எத்தனை குழந்தைகள் பெற்றுக் கொள்வது? கருக்கலைப்பு உள்ளிட்ட விசயங்களில் பெண்களுக்கு உரிமை வேண்டும் என்பதே இதன் பொருள். (மொர்).

ஏனைய கோரிக்கைகளும் உள்ளடங்கியிருந்தன. மறுஉற்பத்தி உரிமைகள் குறித்த அனைத்துப் பிரச்சனைகளையும் இணைத்ததாக இது இருந்தது. இவ்வாறு செய்ததன் மூலம் பல்வேறு பெண்கள் இயக்கத்தையும் இணைப்பதற்கான ஒரு அடிப்படை கிடைத்தது.

சோசலிசப்பெண்ணியம் பற்றிய நம் கருத்துக்களை குறிப்பான வேலைமுறைகளோடு இணைப்பதற்கு இந்த முன்மாதிரிகள் சில வழிமுறைகளை வழங்கியுள்ளன. குறிப்பான சீர்திருத்தங்கள் மீது மேலும் பல வேலைமுறைகளை நாம் கட்டியமைப்பது, ஆளும்வர்க்க மேலாதிக்க கருத்தியலை எதிர்கொள்வது, குறிப்பான திட்டங்கள் மூலம் மக்களை ஐக்கியப்படுத்துவது போன்ற பலதரப்பட்ட லட்சியங்களை கொண்டதாக இந்த வேலைமுறைகள் இருக்க வேண்டும்.

இறுதியாக நாம் எதிர்நோக்கியுள்ள லட்சிய சமூகம் குறித்த ஒரு பார்வையை நம்பணிகள் முன்வைக்க வேண்டும். தொழிலாளிவர்க்க மேலாதிக்கத்திற்கு எதிரானதாக இதைப்பார்க்கக் கூடாது. (கிராம்சியின் மார்க்சியத்தில்) போகஸ் சொல்லியுள்ளது போல "மேலாதிக்கக் கருத்தியலை வேரறுப்பதால் சோசலிசத்தை நோக்கிய முன்னேற்றத்திற்கான சாத்தியங்கள் மட்டுமே உருவாக்கின்றன. பழம் உணர்வு நிலைகளின் மாயையைக் கிழித்தெறிவது மட்டுமே தவிர்க்க இயலாமல் புதிய வடிவிலான புரட்சிகர உணர்வு நிலைகளைக் கொண்டு வந்துவிடாது."

சோசலிசப் பெண்ணியர்களின் ஒரு பகுதிக்கடமை - இதில் சோசலிச ஆண்/பெண் ஒரினப்புணர்ச்சியாளர்களும் அடங்குவர்-புரட்சிகர உணர்வுகளை வளர்த்தெடுப்பதுதான். இந்தப் புரட்சிகர உணர்வுகள், இந்தச் சோசலிசப்பார்வை துண்டு துக்காணிப் பாணியில் மாற்றுகளை உருவாக்கிவிடாது. மாறாக, ஒரு முழுமையான மாற்றைக் கட்டியமைக்க வேண்டும். மக்களை ஒன்று திரட்டக்கூடிய ஒரு சமூகப் பார்வையை உருவாக்க சோசலிசப்பெண்ணியர்கள் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும். இந்த வளர்ச்சிப்போக்கில் ஒரு மாற்றப்பட்ட சமூகத்தை நிர்மாணிக்கத் தொடங்கலாம்.

# மார்க்சியத்திற்கும் பெண்ணியத்திற்கும் இடையிலான மகிழ்ச்சியற்ற திருமணம் - இதைக்காப்பாற்ற இயலுமா?

**கரோல் எர்லிச்**

*இவர் சமகால அராஜகவாத எழுத்துக்களின் தொகுப்பான "அராஜகவாதம் மறு கண்டுபிடிப்பு- அராஜகவாத சிந்தனைகள் என்றால் என்ன?" என்ற புத்தகத்தின் துணை ஆசிரியர். "சோசலிசம், அராஜகவாதம், பெண்ணியம்" என்ற புத்தகத்தின் ஆசிரியரும் ஆவார்.*

மார்க்சிய எல்லைக்குள்ளாகவே ஒரு பெண்ணிய ஆய்வு முறையை வளர்த்தெடுக்கவேண்டியிருப்பது, மார்க்சியப்பெண்ணியர்களுக்கு மிகுந்த விரக்திதரும் ஒரு பிரச்சனையாக இருந்து வருகிறது. ஏனெனில், அவ்வாறு செய்வது ஒரு சிக்கலான பணியாகும். பெண்கள் மீது ஆண்கள் கொண்டுள்ள நிறுவனமயமான ஆதிக்கமான ஆணாதிக்க முறைமையானது, வரலாற்று ரீதியாகவே மரபு மார்க்சியர்களின் கண்களுக்கு புலப்படாமலே இருந்துவருகிறது. அனைத்திற்கும் மேலாக ஆணாதிக்க முறைமையானது முதலாளியத் (சமூகத்தின்) தோலின் மீது காணப்படும் ஒரு அருவெறுப்பான புண்போலவும், அரசுசோசலிசம் என்ற உறுதியான மருந்தினால், அதைக் குணப்படுத்திவிடலாம் என்றும் மார்க்சியர்கள் கருதிவருகின்றனர்.

எப்படியிருப்பினும், எண்ணற்ற மார்க்சியப்பெண்ணியர்கள், ஆணாதிக்கமுறைமையின் செயற்பரப்பு, அதன் நீட்சி, ஆகியன குறித்த ஒரு தெளிவானப் புரிதலுக்கான முயற்சிகளைத் தொடர்ந்தவண்ணம் இருக்கின்றனர். முதலாளியக் காலகட்டத்திலும், அதுபோலவே, வேட்டை மற்றும் சேகரிப்பு காலம், தோட்ட வேளாண்மை, வேளாண்மை ஆகிய அனைத்துச் சமூகக் காலகட்டங்களிலும் இது (ஆணாதிக்க முறைமை) இருந்து வருகிறது. சமத்துவச் சமூகங்கள் (EGALITARIAN SOCIETIES) என்று அழைக்கப்படும் நாடுகளிலும், அதே சமயத்தில், கூர்மையான வர்க்க வேறுபாடுகள் உள்ள நாடுகளிலும் இது காணப்படுகிறது. முதலாளிய நாடுகளில் இது அனைத்து வர்க்கங்கள் மத்தியிலும், வர்க்க எல்லைகளைத் தாண்டியும் காணப்படுகிறது. இனம், வயது. பால்முன்னுரிமை (SEX PREFERENCE) முதலியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஏற்றத்தாழ்வான வடிவங்களோடு இது மிகச்சிக்கலான வழிகளில் எதிர்வினை புரிந்து வருகிறது. மார்க்சியர்களுக்கு நடுக்கம் தரும்வகையில் இது சோசலிசநாடுகளிலும் இன்னமும் நீடித்துவருகிறது.

ஆணாதிக்கமுறைமையானது வடிவத்திலும் பரிமாணத்திலும் சமூகத்திற்குச் சமூகம் விரிவான அளவில் மாறுபட்டிருந்தபோதிலும், அனைத்துச் சமூகங்களிலும் இது நீடித்து வருகிறது. ஆகவே, தனிச் சொத்து போன்ற ஒரு நிறுவனம் என்ற அளவிற்கு இதை மிக எளிமையாகச் சுருக்கிவிட முடியாது, (சோசலிச நாடுகளிலும் இது தொடர்ந்து வருவதைக் கணக்கில் கொண்டால்) எதிர்காலக் கம்யூனிசத்தில் இது தன்னியல்பாகவே மறைந்துவிடும் என்றும் கணக்கிட முடியாது. சோசலிசநாட்டுப் பெண்களின் சூழ்நிலைகளை ஆய்வு செய்த பெண்ணியர்களும் சரி, பொருள்ாதாரச் சமூகச்சமத்துவத்தை அடைந்ததினால் கிடைத்த உண்மையான நன்மைகள் குறித்த சரியான விழிப்புணர்ச்சியைப் பெற்றவர்களும் சரி, தொடர்ந்து பின்வரும் கேள்விகளையே கேட்டு வருகிறார்கள். இக்கேள்விகளுக்கு நிறைவான மார்க்சியப் பதில்கள் இருப்பதாகத் தெரியவில்லை. சான்றாக அக்கேள்விகளில் சில: சோசலிச நாடுகளில் முடிவு எடுக்கும் நிலைகளில் ஏன் ஒருசில பெண்களே இருந்து வருகின்றனர்? இந்நாடுகளில் வீட்டு வேலைகளை செய்து வருவது யார்? பெண் ஓரினப்புணர்ச்சியும், தன்புணர்ச்சியும் (ஹோமோ செக்சுவல்) ஏன் ஒடுக்கப்படுகிறது? சோசலிச நாடுகளில் உள்ள குழந்தைகள் பால்சார்வாழ்க்கைப்பங்குகளுக்கு (SEX ROLE) ஏற்ப சமூகமயமாக்கப்படுகிறார்களா? அனைத்து வேலைவாய்ப்புகளிலும் பெண்களுக்குச் சமத்துவம் தரப்படுகிறதா? பெண்களின் வருமானங்கள் ஆண்களுக்கு சமமாக இருக்கிறதா? பால்சார் விசயங்களிலும், மறுஉற்பத்தியிலும் பெண்களின் விருப்பத்தேர்வு (CHOICE) எந்த அளவிற்குப் பாதுகாப்பானதாக இருக்கிறது? பெண் தன் விருப்பத்திற்கு ஏற்ப குழந்தைபெற்றுக் கொள்ளும் உரிமை இருக்கிறதா? அல்லது விருப்பப்படாதபோது, குழந்தை வேண்டாம் என்பதற்கு உரிமை இருக்கிறதா? பாதுகாப்பான, திறனான குடும்ப கட்டுப்பாட்டு முறைகள் பெண்களுக்குக் கிடைக்கிறதா? பெண்கள் விருப்பத்திற்கேற்ப கருக்கலைப்பு வசதி கிடைக்கிறதா? இம்மாதிரியான விசயங்களை தீர்மானிப்பது யார்? பெண்ணா? அல்லது பெரும்பாலும் ஆண் தலைமையா? மொத்தத்தில் சோசலிச நாடுகளில் ஆணாதிக்கமுறைமை நீடிப்பது ஏன்?

மேற்சொன்ன கேள்விகளுக்கு விடைதர முயலும் ஆய்வாளர்களின் மார்ச்சியப் பதில்கள் இருவித சாத்தியக் கூறுகளை எதிர்கொள்கின்றன. அத்தகைய மார்க்சியப் பகுப்பாய்வுகளில் "பெண்கள் சிக்கல்கள்" குறித்த மார்க்சிய ஆய்வுகள் தவறானவை என்பது அல்லது அவை முழுமை யற்றவை என்பதுமாகும். அவை தவறானவை என்றால் மார்க்சியத் தத்துவத்தில் அடிப்படையிலேயே கோளாறு இருக்கிறது. அதனால்தான் ஆணாதிக்க

முறைமை குறித்து அதனால் ஒரு திறனான விளக்கத்தை தரமுடியவில்லை. ஆகவே வேறொரு தத்துவம் தேவைப்படுகிறது. ஆணாதிக்கமுறைமை குறித்த அனைத்து மார்க்சிய ஆய்வுகளும் முழுமையற்றவை என்றால் பெண்களின் நிலைமைகளைத் திறனான முறையில் விளக்குவதற்கு அவ்வாய்வில் சிலவற்றைச் சேர்ப்பது அவசியமாக இருக்கிறது. ஆணாதிக்கமுறைமை, முதலாளியம் ஆகிய இரண்டின் செயல்பாடுகளையும் விளக்குவதற்கு ஒரு திறனானத் தத்துவத்தைக் கட்ட கார்ட்மன்னும் ஏனைய மார்க்சிய பெண்ணியர்களும் முயற்சி செய்து வருகிறார்கள். இதன் மூலம் அவர்கள் மார்க்சியத்தைக் கைவிடவில்லை. மாறாக, அதனை விரிவாக்குகிறார்கள்.

"மார்க்சியத்தையும், பெண்ணியத்தையும் இணைக்கும் சமீபகால முயற்சிகள்.... பெண்ணியப் போராட்டத்தை முதலாளித்துவத்திற்கு எதிரான பெரிய போராட்டத்திற்குள் உட்படுத்துவனவாக இருக்கின்றன" என்ற போதிலும், இரண்டையுமே சமபங்காளிகளாகக் கொண்ட ஒரு இணைப்பைக் கட்டுவது சாத்தியம் என கார்ட்மன் நம்புகிறார். இந்த மகிழ்ச்சியற்ற திருமணத்தில், பெண்ணியத்தின் மீது மார்க்சியம் தன் ஆதிக்கத்தை வலியுறுத்துவது ஏன்? என்ற கேள்வியை கார்ட்மன் எழுப்புகிறார். அதற்கு கார்ட்மன்னே பின்வரும் பதிலையும் முன்வைக்கிறார். "மார்க்சிய ஆய்வானது வரலாற்று வளர்ச்சியின் விதிகள் குறித்து மிக அத்தியாவசியமான ஆழ்ந்த விடயங்களை வழங்கியுள்ளபோதிலும், அதனுடைய வகையினங்களானவை பால்-குருட்டுதனம் கொண்டனவாகவே உள்ளன." முதலாளியம் பற்றி மார்க்சியம் ஒரு புரிதலைக் கொண்டிருந்த போதிலும், ஆணாதிக்கமுறைமையும், முதலாளியமும் தங்களுக்குள் கொண்டிருக்கும் பரஸ்பர உறவினால் பெண்கள் நிலையானது ஆண்களின் நிலையிலிருந்து வேறுபட்டு இருப்பதை இது (மார்க்சியம்) புரிந்து கொள்ளவில்லை என்பதே இதன் பொருளாகும்.

மேலும் கார்ட்மன் பின்வரும் விசயத்தைச் சுட்டிக் காட்டியுள்ளார். மார்க்சியஆய்வாளர்கள் பெண்கள் செய்துவரும் வேலைகள் குறித்த ஆய்வுகளை விரிவாக்கியுள்ளபோதிலும் (முக்கியமாக வீட்டு வேலைகள் தொழிலாளர்களின் மறு உற்பத்தி ஆகிய விசயங்களின் தீர்மானகரமான முக்கியத்துவத்தின் மீது கவனம் செலுத்தியுள்ளனர்) பெண்களை முதலாளியத்தோடு தொடர்புபடுத்தித்தான் இன்னமும் பார்த்து வருகின்றனர். ஆண்களோடு பெண்கள் கொண்டிருக்கும் உறவை இவர்கள் (மார்க்சியர்கள்) பார்ப்பதில்லை, இம்மாதியான ஆய்வுகள் மூலம் பெண்கள் நிலைமையைப் பற்றி மார்க்சியம் கொண்டிருக்கும் குறைவான புரிதலுக்குப் பரிகாரம்

தேடுகிறார்கள் என்ற போதிலும் இவர்களது ஆய்வுகள் இன்னமும் குறுகலானதாகவே இருக்கின்றன. பெண்கள், பெண்கள் என்ற காரணத்திற்காகவே ஒடுக்கப்படுகிறார்கள் என்பது ஒரு யதார்த்தம். பெண்களின் நிறுவனமயமான அடிமைத்தனத்தினால் (முதலாளிகள் மட்டுமல்ல) அனைத்து ஆண்களுமே நன்மை பெற்று வருகிறார்கள் என்பது இன்னொரு யதார்த்தம். ஆணாதிக்கமுறைமையின் இந்த அடிப்படைகளை மார்க்சியர்கள் தவறவிட்டுவிடுகின்றனர்.

மொத்தத்தில், மூலதனம் பெண்களை ஒடுக்குவது பற்றி மட்டுமே மார்க்சியம் கவனிக்கிறது. ஆண்களுக்கு கீழான நிலையில் பெண்கள் இருப்பது பற்றி இது கவனியாமல் விட்டுவிடுகிறது. இதுவே மார்க்சியத்தின் மீது கார்ட்மன் வைக்கும் அடிப்படை விமர்சனம் ஆகும். ஆனால் அதற்காக இவர் மார்க்சியத்திற்குப் பதிலாகப் பெண்ணிய ஆய்வினை முன்நிறுத்தவில்லை. காரணம், பெண்ணியம் சாரத்தில் வரலாற்று உணர்வு அற்றதாகவும், பெண்களின் நிலைமையைப் பற்றிய மதிப்பீட்டில் பொருண்மை அம்சங்களை (MATERIAL) கைவிட்டுவிட்டு உளவியல் அம்சங்களுக்கு மட்டுமே கவனம் செலுத்துகிறது என்றும் பெண்ணியத்தின் மீது கார்ட்மன் விமர்சனம் வைத்துள்ளார். இதற்குப் பதிலாக, மார்க்சியம், பெண்ணியம் இரண்டுமே முழுமையற்ற தத்துவங்களாதலால், இந்த இரண்டுமே இணைந்து தற்கால முதலாளியச் சமூகங்களில் உள்ள பெண்களின் நிலைமைகளைப் பற்றி ஒரு தெளிவான ஆய்வினைத் தரமுடியும் என இவர் கருதுகிறார்.

### *"இனி செய்ய வேண்டியது என்ன" - அது செய்து முடிக்கப்படுமா?*

எனது சொந்தப் பார்வையில் (தீவிரப்பெண்ணியத்தில் உறுதியாக வேர் கொண்டுள்ள நான் ஒரு அராஜகப் பெண்ணியர்) கார்ட்மன் சமபங்காளிகள் என்ற முறையில் மார்க்சியத்திற்கும் பெண்ணியத்திற்கும் இடையே ஒரு திருமணத்தை மறுநிர்மாணம் செய்வதற்கான முயற்சியில் முக்கியமாக மார்க்சியத்தின் மீது மட்டுமே அக்கறை செலுத்தியுள்ளார். பெண்ணியத்தின் மீது அக்கறை செலுத்தவில்லை. தீவிரப் பெண்ணியத்தில் கால் கொள்ளாத அரசியல் அடிப்படை கொண்ட பெண் மார்க்சியர்களுக்கும், முதலாளியப் பெண்ணியத்தின் ஒத்துப்போகும் இயல்பை நன்கு புரிந்து கொண்டவர்களுக்குமே இக்கட்டுரை முக்கியமாக எழுதப்பட்டுள்ளது. பால்குருட்டுத்தனமும், சுயநலமும் கலந்த மார்க்சிய ஆண்தோழர்கள் 'இம்மாதிரியான சிறுபிள்ளைத்தனமான கோரிக்கைகளை கைவிட்டு காத்திரமான புரட்சியாளர்களாக மாறுங்கள்' என பெண்தோழர்களுக்கு

தரும் நிர்ப்பந்தத்தை எதிர்கொள்ளும் முகமாகவே கார்ட்மன் இம்முயற்சியை எடுத்துள்ளார். பெண்கள் தங்கள் சுயேச்சையான முயற்சிகளை நிறுத்திவிட்டு பெண்கள் சிக்கல்களைப் பொறுத்தளவில் மரபு மார்க்சிய ஆய்வுகளை ஒத்துக்கொள்ள வேண்டுமென்பதே ஆண்களின் விருப்பமாகும். ஆண்களும் பெண்களும் ஒருங்கே விரும்பும் ஒரு சோசலிசத்தை நிர்மாணிக்க மார்க்சியம் தவறிவிட்டது. இம்மாதிரியான கட்டாயங்களுக்கு எதிராகத்தான் கார்ட்மன் முயற்சி எடுத்துள்ளார். மார்க்சியத்தைக் கைவிட விரும்பாத அதே சமயத்தில் அதை இரண்டு பாலினருக்குமே-(ஆண், பெண்) ஒரு பாலினருக்கு மட்டுமல்ல-பயன்படுத்த வழிதேடிய அனைவருக்குமான கட்டுரைதான் இவருடையது.

கார்ட்மன் முக்கியமாக தீவிரப்பெண்ணியர்களுக்காக இக்கட்டுரையை எழுதவில்லை என நான் ஏன் கூறினேன்? திருமணம் என்ற உருவகமே இதற்கான முக்கிய ஆதாரத்தை நமக்குத் தருகிறது. அரசியல் திருமணத்தில் ஒருவர் நடுவராக செயல்பட்டிருக்கிறார் என்றால் அதன் பொருள், மார்க்சியத்திற்கும் பெண்ணியத்திற்கும் இடையே பல்வேறு விதமான திருமணங்கள் நடைபெற்றிருக்கக்கூடும் என்பதாகத் தான் இருக்கும். பெண்ணியர் ஒருநாள் காலையில் விழித்தெழுந்ததும், சடங்குமுறைப்படி அவருக்கு திருமணம் நடந்து முடிந்துவிட்டதாக அவரிடம் திட்டவட்டமாகச் சொல்லப்படுகிறது. ஆனால் அத்திருமண நிகழ்ச்சியில் தான் கலந்து கொண்டதாக அப்பெண்ணியருக்கு நினைவு கூட இல்லை. (திருமணம் நடந்ததா என்பதையே ஐயப்படும் அவர் இத்திருமணத்தை நிச்சயமாக ஒப்புக்கொள்ள மாட்டார்). இதையே வேறு பார்வையிலும் பார்க்கலாம். இத்திருமணத்திற்கு இருபங்காளிகளுமே முழுச்சம்மதத்தையும் தந்திருக்கின்றனர். ஆனால், மார்க்சியர், பெண்ணியர் ஆகிய இருதரப்பினருமே வேறுபட்ட எதிர்பார்ப்புகளோடும், அரசியல் ஊகங்களோடும், திருமண வாழ்வில் அடியெடுத்து வைத்து, பின் தாங்கள் அடிப்படையிலும், மாற்றமுடியாத வகையிலும் இணைய முடியாதவர்கள் என்பதை உடனடியாகக் கண்டு கொண்டனர். திருமண நடுவர் இந்தத் திருமணம் நீடிக்காது என்பதை நிச்சயமாக அறிந்தபின் (இணக்கமான ஒரு உடன்பாடு ஏற்பட்டால், அதற்குபின் இந்த இருதரப்பினருமே நண்பர்களாக இருக்கக்கூடும் என்ற நம்பிக்கையுடன்) விரைந்து மணவிலக்கு நீதிமன்றத்திற்குச் செல்ல அவர்களுக்குப் பரிந்துரை செய்திருக்கலாம்.

பெரும்பாலும் இந்த இரண்டு வகையான கூற்றுகள் (VERSION) தான் தீவிரப்பெண்ணியர்கள் மத்தியில் காணப்படுகிறது. குறைந்தபட்சம் இந்த இரண்டிற்கும் மேற்பட்ட வேறு இரண்டு கூற்றுகள் உண்டு. மூன்றாவது

கூற்றுப்படி மார்க்சியம் இத்திருமணத்தில் ஒரு தீவிரப்பிரச்சனை இருப்பதாக உணரக்கூட இல்லை. அதனால் நடுவருக்கு அவசியமேயில்லை. தன்னை நல்லமுறையில் கவனித்துக் கொள்ளும் ஒரு திறன்வாய்ந்த மணமகனை திருமணம் செய்துகொள்வதில் மணமகளுக்கு (பெண்ணியம்) நிச்சயம் மகிழ்ச்சியாகத்தான் இருக்கும் என்றே மார்க்சியம் உண்மையில் நினைக்கிறது.

கார்ட்மன் நான்காவதாக ஒரு கூற்றை முன்வைத்துள்ளார். பின்வருமாறு அவர் ஊகிக்கிறார். மணமகள், மணமகன் ஆகிய இருவரின் சுயவிருப்பத்தின் பேரில் திருமணம் நடைபெற்றாயிற்று. அதற்குப் பின் மணவாழ்வில் தீவிரப் பிரச்சனைகள் தோன்றிவிட்டன. அந்தப் பிரச்சனைகளின் தோற்றுவாய் பெண்ணியத்தின் மீதான மார்க்சியத்தின் தன்னுணர்வற்ற ஆதிக்கத்தில் இருக்கிறது. (பெண்ணியம் இந்த ஆதிக்கத்தை அனுமதிப்பது குறித்து இவர் கருத்து ஏதும் சொல்லவில்லை) சமத்துவத் திருமணம் என்பது குடும்ப நலன்களுக்கு (மணமகனுக்கா? இருவருக்குமா?) சிறந்தது என மார்க்சியத்தால் உணர்த்த முடியுமானால், இத்திருமணம் காப்பாற்றப்படும். இத்திருமணம் காப்பாற்றப்படவேண்டும். காரணம் ஒருவர் உதவி மற்றொருவருக்குத் தேவையாயிருக்கிறது. இது என்ன உணர்ச்சிபூர்வக் காதலா? எனக் கேட்கலாம். ஆனால் இணங்கிப் போதலும், நலன்களைப் பகிர்ந்துகொள்வதும் ஒரு மகிழ்ச்சியான திருமணத்திற்கு மிக அவசியமாகத் தேவைப்படும் அடிப்படைகள் ஆகும் என்பதை யாவருமே அறிவோம்.

கார்ட்மன்னின் ஊகங்கள் சரியானது என்றால் ஆணாதிக்க முறைமையின் அனைத்து வெளிப்பாடுகளையும் கணக்கிலெடுத்துக் கொள்கிற, முதலாளியத்தைவிட அது தீவிரம் குறைந்த பிரச்சனை என கணக்கிடாத ஒரு மார்க்சியப் பெண்ணியத் தத்துவத்தையும், நடைமுறையையும் நிர்மாணிப்பது சாத்தியமானதுதான். ஆனால், இதுசாத்தியம் என நான் கருதவில்லை. காரணத்தை பின்வரும் பகுதிகளில் விளக்குகிறேன்.

## *அராஜகவாதமும், பெண்ணியமும் :*

பெண்கள் திட்டமிட்ட வழியில் அடிமை நிலையில் இருத்திவைக்கப் பட்டிருப்பது குறித்த போதுமான மதிப்பீட்டை பெண்ணிய ஆய்வுகளால் முன்வைக்க முடியாது என்ற கார்ட்மன் கருத்தோடு நானும் ஒத்துப் போகிறேன். இதற்குக் காரணம் நாம் வெறுமனே பெண்கள் மட்டுமல்ல, ஒவ்வொரு பெண்ணும் ஒரு குறிப்பிட்ட வர்க்கம்/இனம்/தேசிய இனம்/வயது/பாலியல்தேர்வு கொண்டவர்களாக இருக்கிறோம். இந்தக்

காரணிகள், ஒரு குறிப்பிட்ட வகைப் பண்பு நலன்களை உருவாக்குகின்றன. இப்பண்பு நலன்கள் காலம்/இடம்/பண்பாடு ஆகியவற்றில் அவரவரது வாழ்க்கைச் சூழல்களைப் பெருமளவிற்கு நிர்ணயிப்பவையாக இருக்கின்றன. பெண்களின் வாழ்க்கை சில முக்கிய வழிகளில் ஆண்களின் வாழ்க்கையிலிருந்து வெளிப்படையாகவே வேறுபட்டதாக இருந்த போதிலும், பெண்களும் கூட தங்களுக்குள் வேறுசில முக்கியவழிகளில் ஒருவருக்கொருவர் வேறுபட்டு உள்ளனர்.

பெண்ணியம் தன்னளவில் இந்தச் சிக்கல்களை முழுமையான அளவு விளக்கவில்லை என்ற நிலையிலும், ஆணாதிக்கமுறைமை குறித்து முழுமையானதொரு மதிப்பீட்டை மார்க்சியம் முன்வைக்கவில்லை என்ற நிலையிலும், இந்த இரண்டு பணிகளையும் செய்து முடிக்கும் ஒரு புரட்சிகரப்பார்வை வேறேதேனும் இருக்கிறதா? ஆம்! இருக்கிறது என்றே நான் கருதுகிறேன். இதை கார்ட்மன் குறிப்பிட்டிருக்க முடியாது. அதுதான் அராஜகவாதப் பெண்ணியமாகும்.

அராஜகவாதப்பெண்ணியமானது, சமூகஅராஜகவாதம் (இது, தனிநபர் அராஜகவாதமல்ல மாறாக சோசலிசத் தன்மை கொண்டது) தீவிரப்பெண்ணியம் ஆகிய இரண்டின் கூட்டிணைவாகும். இந்தக் கூட்டிணைவு இவ்விரண்டையுமே அகலப்படுத்தியும், ஆழப்படுத்தியும் உள்ளது. இக்கூட்டிணைவு சாத்தியமான ஒன்றுதான். காரணம், மார்க்சியம், பெண்ணியம் ஆகிய இரண்டிற்குமான இணக்கத்தைக் காட்டிலும், தீவிரப்பெண்ணியத்திற்கும் சமூகஅராஜகவாதத்திற்கும் இடையிலான இணக்கம் மேலதிகமானது. *பெக்கிகார்னக்கர்* சுட்டிக் காட்டியுள்ளதுபோல யதார்த்தத்தில், “பெண்ணியர்கள் தத்துவம், நடைமுறை ஆகிய இரண்டிலுமே தன்னுணர்வற்ற அராஜகவாதிகளாக காலங்காலமாக இருந்து வருகின்றனர்”.

சமூகஅராஜகவாதம் என்றால் என்ன? இது சோசலிசத்தன்மை கொண்டது என்றபோதிலும், இது மார்க்சியமல்ல. மார்க்சியர்களைப் போலவே சமூகஅராஜகவாதிகள் முதலாளியத்தை எதிர்க்கிறார்கள். செல்வமும், வளமும் ஒருசிலர் கைகளில் இருப்பதை மாற்றி அதை அனைவருக்கும் பங்கிடவேண்டும் என்றே இவர்கள் விரும்புகிறார்கள்.

ஆனால், இந்த இரண்டிற்கும் இடையில் அதிமுக்கியத்தத்துவ வேறுபாடுகள் இருந்துவருகின்றன. இது நடைமுறையில் குறிப்பான வேறுபாடுகளுக்கு காரணமாக இருக்கிறது. சுதந்திரமான தனிநபர்களைக்

கொண்ட ஒரு வர்க்கமற்ற சமூகம் என்ற இறுதி இலட்சியத்தை அடைவதற்கான சிறந்த வழிமுறைகள் இவற்றின் நடைமுறைகளில் இருக்கின்றன. சமூகஅராஜகவாதிகளைப் பொறுத்தமட்டில் லட்சியங்களும், வழிமுறைகளும் முரண்பாடற்றதாக இருக்க வேண்டும். எதிர்காலத்தில் சுதந்திரம் கிடைக்கும் என்பதைக் காட்டி நிகழ்காலத்தில் அதை (சுதந்திரம்) கட்டுப்படுத்தும் ஒரு முரணான வழியில் அதை அடைந்துவிட முடியாது. சுதந்திரம், சமத்துவம் ஆகிய பண்புகளைத் தற்போதைய வாழ்க்கையில் நடைமுறைப்படுத்த முயற்சிப்பதன் மூலமே மக்கள் அதைக் கற்றுக் கொள்கிறார்கள். அச்சுதந்திரமும், சமத்துவமும் தற்போதைக்கு முழுமையற்றது என்பது ஒரு பிரச்சனையல்ல. பெரும் சமூக நிறுவனங்களுக்கு அக்கம் பக்கமாகவே, மாற்று நிறுவனவடிவங்களை கட்டுவது என்ற முக்கிய வழிமுறையின் மூலமே இதை அடைய முடியும்.

சமூகஅராஜகவாதிகளைப் பொறுத்தவரை புரட்சி என்பது வளர்ச்சிப்போக்காகும் (PROCESS). அது குறிப்பிட்ட காலஎல்லைக்குள் கட்டுப்பட்டதல்ல. ஒருவர் தன் அன்றாட வாழ்க்கையை எப்படி வாழ்கிறார் என்பது மிக முக்கியமானது. சோசலிசத் தலைமையை ஏற்றுக் கொள்வதன் மூலம் மேட்டுக்குடி தலைமை இல்லாமல் வாழ முடியும் என மக்கள் கற்றுக் கொள்ளவில்லை.* புதியஉறவுகளை உருவாக்குவதன் மூலம் அதிகார உறவுகளை மக்கள் முடிவுக்குக் கொண்டு வரவில்லை.

அதிகாரஉறவுகள் (அதாவது இந்த உறவுகள் மூலம்தான் ஒருவர் மற்றொருவரை பணியும்படி கட்டாயப்படுத்துகிறார் அல்லது மற்றவரின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துகிறார்) தங்களுக்குள் உள்ளார்ந்த (INHERENT) வன்முறையை, போட்டியை, ஏற்றத்தாழ்வுகளை கொண்டிருக்கின்றன. அதிகாரஉறவுகளில் நிறுவனமயமான அசமத்துவ வடிவங்கள் வேர்கொண்டுள்ளன. மேற்சொல்லியுள்ள விசயத்தில், சமூகஅராஜவாதிகளும், தீவிரப்பெண்ணியர்களும் ஒத்த கருத்துடைய வர்களாக இருக்கிறார்கள். அதிகாரத்தின் அனைத்து வெளிப்பாடுகள் மீதும் தீவிரப் பெண்ணியர்கள் பெரும்பாலும் கவனம் செலுத்தவதில்லை என்பது அவர்களின் குறைபாடாக இருக்கிறது. அதற்குப்பதிலாக ஒரு குழு என்ற முறையில் ஆண்கள் பெண்கள் மீது ஏவும் அதிகாரத்தின் வழிமுறைகள் மீது மட்டுமே அவர்கள் முதன்மையாக (அல்லது முழுமையாக) கவனம் செலுத்துகிறார்கள். மார்க்சியத்தைப் போலவே, புரட்சிகரத்தத்துவத்தையும்,

* மக்கள் தனிநபர் தலைமைமீது நம்பிக்கை வைக்காமல் லட்சியம் அல்லது கொள்கையின்மீது மட்டுமே நம்பிக்கை வைத்து செயல்படவேண்டும் என கட்டுரை ஆசிரியர் இவ்விடத்தில் குறிப்பிடுகிறார் (மொர்).

நடைமுறையையும் ஆணாதிக்க நிறுவன வடிவத்தையும் கொண்ட சமூகஅராஜகவாதமானது அதிகாரஉறவுகளில் ஆணாதிக்கமுறைமையும் ஒருவடிவமாகும் என்பதை பெரும்பாலான சமயங்களில் புறக்கணித்து விடுகின்றது. இது அதன் குறைபாடாகும். ஆனால் மார்க்சியத்தைப் போல சமூகஅராஜகவாதத்தின் அடிப்படை வகையினங்கள் பால்குருட்டுத்தன்மை கொண்டதல்ல. உண்மையில், அதன் குறைபாடு, நடைமுறை சம்பந்தப்பட்டது. தத்துவம் சம்பந்தப் பட்டதல்ல. ஆகவேதான் மார்க்சியத்தைக் காட்டிலும், சமூகஅராஜக வாதமானது, பெண்ணியத்தோடு இணைந்து போவதற்கான உள்ளாற்றல்களை (POTENTIAL) கொண்டிருக்கிறது எனக் குறிப்பிடுகிறேன்.

மார்க்சியர்களோடு ஒப்பிட்டால், சமூகஅராஜாகவாதிகளும், தீவிரப் பெண்ணியர்களும் அதிகாரத்தைக் கைப்பற்றப் பணியாற்றுவதில்லை. மாறாக, அதிகாரத்திற்கு முடிவுகட்டுவது, அதை வேரறுப்பது, அதிகார உறவுகளற்ற புதிய நிறுவனவடிவங்களை கட்டுவது ஆகியவையே இவர்கள் பணியாகும். ஏனெனில் அவர்கள் உயிர்த்திருக்க தகுந்த நிறுவனவடிவங்கள் ஏதும் இப்போது இல்லை.

இவ்வாறாக, மையப்படுத்தப்பட்ட படிநிலைஅதிகாரம் கொண்ட நிறுவனவடிவங்களுக்கு இன்றிலிருந்தே முடிவுகட்டுவதற்கு அராஜகவாதிகள் அழுத்தம் தருகிறார்கள். வர்க்க வேறுபாடற்ற, அரசாங்கம் அற்ற சமூகம் என்ற இறுதி லட்சியத்தையடைய இவை (மையப் படுத்தப்பட்ட, படிநிலை அதிகாரம் கொண்ட நிறுவனங்கள்) வழிமுறைகளாக இருக்க முடியாது. பெரும் எண்ணிக்கையிலான மக்களின் பொருண்மைச் சூழ்நிலைகளை அரசுசோசலிசம் உயர்த்தி இருக்கிறது என்பதில் அய்யமில்லை. இருப்பினும், இவை மட்டுமே அனைத்து மக்களுக்கும் உண்மையான சுதந்திரத்தையும் சமத்துவத்தையும் கொணரும் வழிமுறையாக இருக்க முடியாது. ஏனெனில் அரசாங்கம் என்ற ஒன்று இருப்பதே அதன் ஆளுகைக்குட்பட்டு இருப்பவர்களின் நீடித்த அடிபணிதலுக்கு உத்திரவாதம் தருகிறது. சோசலிசஅரசு மறைந்துவிடும் என்பதில் அராஜகவாதிகளுக்கு நம்பிக்கையில்லை. எந்த ஒரு சோசலிசச் சமூகத்திலும் அரசு மறையும் என்பதற்கான எந்த அறிகுறியும் இதுவரை தென்படவில்லை. அரசை ஒழிப்பது பற்றி முடிவு எடுக்க வேண்டியது மக்கள் மட்டுமே, உற்பத்தி முறையில் மாற்றத்தை கொணர்வதாலோ, அல்லது அனைத்து மக்களும் ஒரே வர்க்கமாக மாறுவதாலோ அரசாங்கம் மறைந்துவிடாது.

மார்க்சியர்களைக் காட்டிலும், சமூகஅராஜகவாதிகள் "வரலாற்றை" மிகச் சொற்ப அளவே சார்ந்துள்ளனர். பொருண்மையியல் அல்லது உளவியல் (MATERIAL OR PSYCHOLOGICAL) ஆகிய எந்த மட்டத்திலும் அதிகாரஉறவுகள் இல்லாத ஒரு புதிய சமூகத்தை உருவாக்கும் பணியில் மக்கள் இன்றிலிருந்தே (PRESENT) ஈடுபடுவதை அராஜகவாதிகள் பெரிதும் நம்பி இருக்கின்றனர். பொருண்மையியலும் உளவியலும் ஒரு சிக்கலான பாணியில் தங்களுக்குள் இணைப்புக் கொண்டிருக்கின்றன. அவற்றைத் தனித்தனியே பிரிக்கமுடியாது என்றே உண்மையில் அராஜகவாதிகள் கருதுகிறார்கள். எங்கிருந்து எப்படி இந்தக் கடும் சிக்கலை விடுவிப்பது? பொருண்மைச் சூழ்நிலைகள் குறிப்பிட்ட தனி நபர் ஆளுமைகளை உருவாக்க அவை குறிப்பிட்ட பொருளாதாரச் சூழ்நிலையை மறு உருவாக்கம் செய்ய, அவை மீண்டும் தனிநபர் ஆளுமைகளை உருவாக்கும். (இப்படியே இது நீண்டு கொண்டே போகும்..மொர்). அராஜகவாதியைப் பொறுத்த அளவில், இந்தச் சுழற்சியைப் பொருண்மைநிலை அல்லது உளவியல் ஆகிய இருமுனைகளிலும் குறுக்கீடு செய்ய முயற்சிக்க வேண்டும். ஏதேனும் ஒரு முனையை மட்டுமே பார்ப்பது போதுமானதல்ல

ஆணாதிக்கமுறைன்மயின் அதிகாரம் குறித்து தீவிரப் பெண்ணியர்களின் கருத்தில் காணப்படும் குறைபாடுகள் என்ன? இக்கருத்துக்கள் அராஜகவாதிகளின் கருத்துக்களிலிருந்து எவ்விதம் வேறுபடுகிறது? நான் ஏற்கனவே சொல்லியுள்ளதுபோல, அடக்குமுறையின் அடிப்படை வடிவமே ஆணாதிக்கமுறைமைதான் என தீவிரப் பெண்ணியம் கருதி அதன்மீது கவனத்தைக்குவிப்பதால் பெண்கள் எதிர்கொள்ளும் அடக்குமுறையின் ஏனைய வடிவங்கள் பற்றி போதுமான அளவு இது அக்கறை கொள்வதில்லை. பெண்கள் தங்களுக்குள்ளும் ஒருவருக்கொருவர் மாறுபட்ட வாழ்நிலையில் இருக்கின்றனர் என்ற யதார்த்தத்தையும் இது கவனிப்பதில்லை.

அராஜாகவாதிகளைக் காட்டிலும் பெரும்பாலான தீவிரப்பெண்ணியர் அதிகாரஉறவுகள் குறித்து ஒரு குறுகலான பார்வையையே கொண்டிருக்கின்றனர். பெண்ணியர்கள் தங்களது சொந்த அமைப்புகளில் காணப்படும் அதிகாரஉறவுகளை ஒழித்துக்கட்ட செய்யப்படும் முயற்சிகள் மூலம் பெருமளவில் அரசியல் நடைமுறைகளை விரிவாக்குகின்றனர். பெருமளவிலான மக்கள் அமைப்புகள் கட்டுவதைக் காட்டிலும், சிறிய குழுக்களை கட்டுவது, முறையாகச் சுழல்முறையில் தங்களின் பணிகளை மாற்றிக்கொள்வது, திறமைகளையும் அறிவையும் தங்களுக்குள்

பங்கிட்டுக்கொள்வது, விழிப்புணர்ச்சியை உயர்த்தும் குழுக்களை உருவாக்குவது, சுருங்கச் சொன்னால், தலைவர்களையும், தொண்டர் களையும் உருவாக்கும் அனைத்து நிறுவனக்காரணிகளையும் ஒழித்துக்கட்ட முயற்சி எடுப்பது ஆகிய இவ்வழிகள் மூலம் தீவிரப் பெண்ணியர்கள் இப்பணியை (அதிகார ஒழிப்பு) செயல்படுத்துகின்றனர்.

பெண்ணியர்கள் தங்கள் சொந்தஅமைப்பைத் தவிர வேறு விசயங்களை மதிப்பிடும்போது இந்த நடைமுறைகளை பின்பற்றுவதில்லை. (இவை அராஜக வழியைச் சேர்ந்தவை. பெண்ணியர்கள் இதை அறிந்திருக்கலாம் அல்லது அறியாமலும் இருக்கலாம்.) பெரும்பாலான பெண்ணியர்கள் இப்பெரும் சமூகத்தை மாற்ற அராஜகவாதக் கோட்பாடுகளை ஒத்த நடைமுறைகளையே கைக்கொள்கின்றனர். ஏனையோர் அப்படிச் செய்வதில்லை. பெண்கள் ஆண்களுக்கு கீழ்படிந்த நிலையில் இருந்த போதிலும், தங்களின் அதிகாரமற்ற நிலையின் காரணமாக சமூகரீதியில் அவசியமான பண்புக்கூறுகளை - இரக்கம், குடும்ப பராமரிப்பு, எளிதில் உணர்ச்சிவயப்படும் தன்மை போன்றவற்றை கற்றுக் கொண்டுள்ளனர். இப்பண்புக்கூறுகளை ஆண்கள் விரும்புவதில்லை. ஆகவே சமூகத்தின் கட்டுப்பாட்டைப் பெண்கள் தங்கள் கைகளில் எடுத்துக்கொண்டு தங்களிடமுள்ள இந்த பண்புகூறுகளுக்கேற்ப சமூகத்தை ஆளவேண்டும் என்பதான ஒரு போக்கு தீவிரப்பெண்ணியர்கள் மத்தியில் நிலவுகிறது.

அரசு தன்னளவில் ஒரு அடக்குமுறை நிறவனம் என்பதை இவ்வாய்வு கவனிப்பதில்லை. அதற்குப் பதிலாக ஆணாதிக்கமுறைமை அரசுதான் இங்கு பிரச்சனையே. காரணம், அது ஆண்களால் வளர்க்கப்பட்டு, அவர்கள் கட்டுப்பாட்டில் இருக்கிறது என்றே இவர்கள் கருதுகிறார்கள். அரசுநிறுவனங்களை பெண்கள் தங்கள் கைகளில் எடுத்துக் கொண்டால் அதன் மூலம் அமைதியான சமத்துவச் சமூகத்தைக் கொண்டுவந்து விடலாம் என்றும் கருதுகிறார்கள். இந்தக் கருத்து *மேட்ரியார்சிஸ்ட்* என்ற தினசரியில் கீழ்க்கண்ட முழக்கமாகத் தொகுக்கப் பட்டிருக்கிறது. "பராமரிப்பவர்களுக்கே ஆளுவதற்கும் உரிமை உண்டு". நிறுவனங்கள் நடுநிலையானவை மக்கள்தான் அதனைத் தவறாகவோ (இந்த இடத்தில் ஆண்கள்) அல்லது சரியாகவோ (இந்த இடத்தில் ஒரு ஊகமாக பெண்கள்) பயன்படுத்துகிறார்கள் என்று அனுமானிக்கிறார்கள். எந்தவொரு அராஜக வாதியும் இம்மாதிரியான அனுமானங்களுக்கு வரமாட்டார். அதிகார உறவுகள் நிலவவில்லையென்றால், அதற்கான சூழல்களும் நிலவ வேண்டியதில்லை.

தீவிரப்பெண்ணியர்கள் உளவியலுக்கு அதீத முக்கியத்துவம் தருவதன்மூலம், ஆணாதிக்கமுறைமையின் பொருண்மைஅடித்தளம் குறித்து கவனியாது விட்டுவிடுகின்றனர் என்ற கார்ட்மன்னின் கருத்தோடு நானும் ஒருவிதத்தில் ஒத்துப்போகிறேன். ஆனால் அராஜவாதப்பெண்ணியம் அதிகாரத்தை உளவியல் தளத்திற்குள் மட்டுமே பார்ப்பதில்லை. உளவியல், பொருண்மையியல் ஆகிய இரண்டு தளங்களிலுமே அதிகாரம் உள்ளதாக இது பார்க்கிறது. அராஜகவாதப் பெண்ணியர்கள் பின்வரும் கருத்தை வலியுறுத்துகிறார்கள். நிறுவனவடிவங்களிலிருந்தே அதிகாரம் தோற்றம் பெறுகிறது. அதன் வழியாகத்தான் செயல்படுத்தப்படுகிறது. பொருளாதாரம், அரசியல், சமூகவளங்கள் ஆகிய விசயங்களில் ஏற்றத்தாழ்விற்கு இது வழியமைத்துத்தருகிறது. மேலும், அதிகாரஉறவுகளை ஆதரிக்கும் ஒரு கருத்தியலானது, அதற்கு மாற்றாக வைக்கப்படும் எந்தவொரு கருத்தையும் மறுத்து ஒதுக்குகிறது. இறுதியாக, ஆணாதிக்கமுறைமையோடு தோன்றிய (ஆனால், அம்முறைமையின் அழிவோடு தானும் அழியாமல் தொடர்ந்து வருகின்ற) ஏற்றத்தாழ்வுகளின் அனைத்து வடிவங்களையும் ஒழித்துக் கட்டவே அராஜகவாதப் பெண்ணியம் பணியாற்றி வருகிறது. சமூகஅராஜகவாதம், தீவிரப் பெண்ணியம் ஆகிய இரண்டின் கூட்டிணைவே அராஜகவாதப்பெண்ணியம் என்பதன் பொருள் இதுதான்.

### பேச்சுகுறைவு, செயல் அதிகம் :

ஆயிரக்கணக்கான சிறுசிறு போராட்டங்களில் ஈடுபட்டுவரும் அரசியல் நபர்கள் (அத்தகைய சிறுசிறு போராட்டங்கள் போலல்லாத) தங்கள் அன்றாட வாழ்க்கையில் பின்வருமாறு கருதுகிறார்கள்; ஆணாதிக்க முறைமை, முதலாளியம் ஆகியன குறித்து நடத்தப்படும் அருவமான தத்துவ விவாதங்கள் காலத்தை வீணடிப்பவையே. வரவிருக்கும் புரட்சியில் தமது பங்கு குறித்தும், உலகத்தை மாற்றும் முக்கியப் பணியில் தலையிடுவது குறித்தும் சிந்தனை செய்யும் கோழைத்தனமான அறிவுஜீவிகளுக்கு வேண்டுமானால் இவ்விவாதங்கள் சரியானவையாகத் தோன்றலாம்.

புரட்சிகர நடைமுறைக்கு நம்மை இட்டுச் செல்லாதப் புரட்சித் தத்துவங்கள் பயனற்றவைதான் என்றபோதிலும், ஒடுக்குமுறைகளை நாம் ஒழித்துக்கட்ட வேண்டுமானால் ஒடுக்குமுறைக்கானக் காரணங்களை தெளிவாக்கிக் கொள்ள முயற்சிப்பது அவசியமாகும். ஆணாதிக்கமுறைமை தோன்றியதற்கு காரணமாயமைந்த சூழல்கள் என்ன? நமக்குத் தெரிந்த அனைத்துச் சமூகங்களிலும், அது ஏதேனும் சிலவடிவங்களில், சில

பரிமாணங்களில் நீடிப்பதற்கு காரணமாயமைந்த சூழல்கள் என்ன? கார்ட்மன் இக்கேள்விகளை எழுப்பி அதற்குப் பதில் தர முயற்சித்துள்ளார். நானும் அதற்குப் பதில்தர முயற்சிக்கிறேன். இதைச் செய்வதற்கு முதலில், ஆணாதிக்கமுறைமை குறித்து தீவிரப்பெண்ணியர்கள் கொண்டுள்ள அணுகுமுறையின் மீது கார்ட்மன் வைத்துள்ள விமர்சனத்தைக் கவனிக்க வேண்டும். அடுத்ததாக வேறுபாடான வரையறைகளையும், ஆய்வுகளையும் முன்வைப்பதன் மூலம் அவருடைய சொந்த முயற்சிகளை மதிப்பீடு செய்யப் போகிறேன். இப்படிச் செய்வதன் மூலம் கார்ட்மன்னின் ஆய்வு மார்க்சியத்தை இத்திசைநோக்கி முடிந்த அளவிற்கு விரித்தபோதிலும் ஆணாதிக்கமுறைமை மீது முழு மதிப்பீட்டை வைக்காமல் அதன் சில அடிப்படைகளை மட்டுமே மதிப்பிட்டிருக்கிறது என்பதையும் நான் விளக்கவிருக்கிறேன். ஆணாதிக்க முறைமை குறித்து ஒரு நல்ல மதிப்பீட்டை அராஜகவாதப் பெண்ணியம் தந்துள்ளதைப் பற்றியே என்ஆய்வு முழுக்கவும் வாதிடப்போகிறேன். இறுதியாக அராஜகவாதப்பெண்ணியம் நம்மை எங்கு இட்டுச்செல்கிறது என்பது குறித்தும் சொல்லப்போகிறேன்.

### *ஆணாதிக்கமுறைமை குறித்த வரையறைகள் :*

ஆணாதிக்கமுறைமை அனைத்து இடங்களிலும் நிலவிவந்துள்ளது என்றபோதிலும் அதற்குள் காணப்படும் வேறுபாடுகள் குறித்து ஒருவிளக்கத்தை முன்வைப்பது கடினமாகும். ஆணாதிக்கமுறைமை குறித்துத் தீவிரப்பெண்ணியரான *கேட்மில்லட்* அவர்கள் ஒரு விரிவான விளக்கத்தை முன்வைத்துள்ள போதிலும், அவ்விளக்கம் சமூகங்களுக்கு இடையிலுள்ள வேறுபாட்டைச் சுட்டிக்காட்டவில்லை என கார்ட்மன் விமர்சிக்கிறார்.

"நமது சமூகம் ஆணாதிக்கமுறையில் அமைந்ததாகும். இராணுவம், கைத்தொழில், தொழில்நுட்பம், பல்கலைக்கழகங்கள், விஞ்ஞானம், அரசியல் விவகாரம், நிதிபோன்ற அதிகாரத்தின் சகலவழிகளும் முற்று முழுதாக ஆண்களின் கைகளிலேயே தங்கியுள்ளமையிலிருந்து இது புலப்படும்"

ஆணாதிக்கமுறைமையின் மற்றவடிவங்களிலிருந்து முதலாளிய ஆணாதிக்கமுறைமையை வேறுபடுத்திக் காட்டவும், பெண்ணிய லட்சியங்களை அடைய மார்க்சியத்தத்துவத்தை பயன்படுத்தும் நோக்கிலும், கார்ட்மன் ஆணாதிக்கமுறைமை குறித்து பின்வரும் ஒரு வரையறையை முன்வைக்கிறார்.

"ஆணாதிக்கமுறைமை என்பது பெண்கள் மீது மேலாதிக்கம் செலுத்துவதற்கு வாய்ப்பான முறையில் ஆண்கள் தமக்கிடையே அதிகாரப் படிநிலைத்தன்மையுள்ளதும், பரஸ்பரம் சார்ந்திருப்பதும், ஒருமைப்பாடும் உள்ளதுமாக அமைத்துக் கொண்ட பொருண்மை அடித்தளம் உள்ள சமூகஉறவுகளின் தொகுப்பையே குறிக்கிறது. பெண்களது உழைப்புச் சக்தியை ஆண்கள் கட்டுப்படுத்துவதே ஆணாதிக்க முறைமையின் பொருண்மை அடிப்படையாக அமைந்துள்ளது. அத்தியாவசியமான உற்பத்தி மூலவளங்களில் இருந்து பெண்களை புறம்தள்ளி வைப்பதன் மூலமும், பெண்களின் பாலியலைக் கட்டுப்படுத்துவதன் மூலமும் அவர்கள் மீதான தமது கட்டுப்பாட்டை ஆண்கள் நிலைநாட்டுகிறார்கள். பெண்களிடமிருந்து தமக்கு தனிப்பட்ட ஊழியங்களைப் பெறுவதன் மூலமும் வீட்டுவேலை, பிள்ளை வளர்ப்பு போன்றவற்றில் தாம் ஈடுபடாமல் இருப்பதாலும் தமது பாலியல் தேவைகளுக்கு பெண்களின் உடலை அடையக்கூடியமையினாலும் இந்த அதிகாரத்தை அவர்கள் செயற்படுத்தி தாம் அதிகாரமுள்ளவர்கள் என உணர்கின்றனர். அதிகாரமுள்ளவர் களாகவும் இருக்கின்றனர். தற்காலத்தில் நாம் அனுபவிக்கும் ஆணாதிக்க முறைமையின் அம்சங்களான: எதிர்ப்பால் திருமணம்* (இதன் விளைவாக ஏற்படும் ஓரினப் புணர்ச்சியின் மீதான வெறுப்பு) பிள்ளைவளர்ப்பு, வீட்டு வேலைகள் பெண்களுக்கென ஒதுக்கப்படுதல், பெண்கள் ஆண்களில் பொருளாதார ரீதியாக தங்கியிருத்தல், அரசு, ஆண்களிடையேயான சமூக உறவுகளை அடிப்படையாகக் கொண்ட பல்வேறு நிறுவனங்கள்-கழகங்கள் (CLUBS), விளையாட்டுகள், தொழிற்சங்கங்கள், தொழில்கள், பல்கலைக் கழகங்கள், கூட்டுத்தாபனங்கள், ஆயுதப்படைகள் ஆகியவையாகும்''.

கார்ட்மன்னின் இவ்வரையறை சில விசயங்களை அளவுக்கதிகமாக தன்னுள் சேர்த்துக் கொண்டுள்ளது. சில விசயங்களை அளவுக்கதிகமாக விலக்கி வைத்திருக்கிறது. இது ஒரு முரண் நகைச்சுவைதான். அனைத்துமே ஒரு பொருண்மை அடித்தளத்தில்தான் தங்கியிருக்கிறது என்ற மார்க்சிய அனுமானமே பிரச்சனைக்குக் காரணமாகும். வரலாற்றுச் சூழல்களில் ஏற்பட்டுவரும் மாறுதல்கள் குறித்து தீவிரப்பெண்ணிய ஆய்வுகள் சொரணையற்று இருக்கின்றன. அத்தோடு இவ்வாய்வுகள் அளவுக்கதிகமாக உலகு தழுவிய தன்மைகளை (UNIVERSALITIES) கொண்டதாகவும், கார்ட்மன் வார்த்தையில் சொல்வதானால், "போதுமான பொருள் முதல்வாத" அணுகுமுறை அற்றதாகவும் இருக்கிறது. பொருண்மை நிலைக்

* ஒருதாரமணமுறை தான் இங்கு இப்படிக்குறிப்பிடப்பட்டு இருக்கிறது. (மொர்).

(MATERIAL) காரணிகளும், கருத்துலகக் காரணிகளும் ஒரு சிக்கலானத் தொகுப்பாகப் பிணைந்திருக்கின்றன. மார்க்சியப் பெண்ணியமானது. இச்சிக்கலானத் தொகுப்பை எளிமைப்படுத்தியதால் ஆணாதிக்க முறைமையை ஒரு பொருண்மைநிலை குறித்த விசயமாகக் கருதுகிறது.

கார்ட்மன் கருத்துப்படி "ஆணாதிக்கமுறைமையின் பொருண்மை அடிப்படை பெண்களின் உழைப்புச்சக்தியைக் கட்டுப்படுத்துவதாகும்." ஆணாதிக்கத்தின் அனைத்து அம்சங்களும் இதில்தான் தங்கியிருக் கின்றன என்றே இட்டுக்கட்டப்படுகிறது. ஆணாதிக்கமுறைமையின் அனைத்து அம்சங்களையும் இந்தப்பொருண்மை அடித்தளத்தின் மீதே ஏற்றிவைத்தால், அவ்வடித்தளம் தன் சக்திக்கு மீறிய சுமையைச் சுமக்க வேண்டிவரும். மேலும் பொருண்மைநிலைக்கும் உளவியலுக்கும் இடையே உள்ள பிணைப்பின் சிக்கலை (COMPLEX) இவ்விதமான பார்வையினால் நிச்சயம் புரிந்து கொள்ளவியலாது. இவரின் வரையறை சிலவிசயங்களை அளவுக்கதிகமாக தன்னுள் சேர்த்துக் கொண்டுள்ளது. சில விசயங்களை அளவுக்கமாகவே விலக்கி வைத்திருக்கிறது என்று நாம் குறிப்பிட்டதின் பொருள் இதுதான்.

ஹோமோபோபியா, ஆண்கள் கொண்டுள்ள மேலாதிக்க உணர்வு அதிகாரம் ஆகிய விசயங்கள் (இவையனைத்தும் கார்ட்மனால் ஆணாதிக்கத்தின் பகுதிகளாகச் சுருக்கமாகக் குறிப்பிடப்படுகின்றன.) பெண்களின் உழைப்புச்சக்தியின் மீது ஆண்கள் கொண்டுள்ள கட்டுப்பாட்டை நிலைநிறுத்த மட்டுமே செயல்படுத்தப்படுகின்றன. இப்படி நான் பார்க்க முயற்சித்தால், தீடீரென என்பார்வையில் ஏதோ கோளாறு ஏற்பட்டுவிட்டதோ என எண்ணவேண்டியிருக்கிறது. நான் பார்க்கப்பட வேண்டிய அனைத்தையும் பார்க்கிறேனா? அல்லது அவசியம் என் கண்களை உடனடியாக பரிசோதித்துக் கொள்ள வேண்டுமா? இந்த ஆய்வு அரைகுறையானது. இதற்குமேல் இவ்வாய்வு நகராது.

உதாரணமாக ஒருதாரமணமுறையை கார்ட்மன் எப்படி மதிப்பிடுகிறார்? ஒப்பீட்டு நோக்கில் சமீபகாலத்தில் தோன்றியதும், திறன் மிக்கதுமான இந்த வடிவம் (ஒருதார மணமுறை) இரண்டு விசயங்களிலுமே (அத்தியாவசியமான உற்பத்தி மூலவளங்களில் இருந்து பெண்களை புறம்தள்ளிவைப்பது, பெண்களின் பாலியலைக் கட்டுப்படுத்துவது) பெண்கள் மீதான ஆண்கள் கட்டுப்பாட்டிற்கு வழிஅமைத்துத் தருகிறது என கார்ட்மன் சொல்கிறார். ஒரே நிறுவனத்தின் மூலம் ஆண்கள் இரு பொருண்மைச்சூழல்களை பெற்றுக் கொண்டனர். ஆக இது வெளிப்படையாகவே திறன் மிக்கதுதான்.

குடும்ப அமைப்பின் இந்த குறிப்பிட்ட வடிவம் (ஒருதார மணமுறை மொர்) இன்று நிலவி வருவதற்கு அல்லது குடும்ப அமைப்பிற்குள் காணப்படும் பெண்களின் நிலைமைகளுக்கு போதுமான விளக்கத்தைத் தருகிறதா? அனைத்துச்சமூகங்களிலும் காணப்படும் ஒருதாரமணமுறைக் கருக்குடும்பங்களின் நிலையும் இதுபோலத்தான் இருக்கிறதா? நமது சமூகத்தில் பெண்களின் பாலியலைக் கட்டுப்படுத்தவும், பெண்கள் ஒரு மரியாதையான (DECENT) வருமானம் ஈட்டுவதற்கானச் சாத்தியங்களைத் தடுப்பதற்குமே இந்த ஒருதாரமணமுறை உள்நோக்கோடு (INTENDED) பயன்படுகிறது என்பது நிச்சயம். ஒரு பெண்ணின் உண்மையான பணி குடும்ப வேலைகளே, கடுமையாக உழைக்கின்ற, பொறுப்புணர்ச்சி மிக்க ஒரு ஆணின் துணை பெண்ணிற்கு இங்குதான் கிடைக்கிறது. இதற்கு கைமாறாக, அப்பெண் வீட்டு வேலைகள், குழந்தை வளர்ப்பு, ஆண்கோரும்போது அவன் பாலுணர்ச்சியைத் திருப்திப்படுத்துவது ஆகிய பணிகளைச் செய்ய வேண்டும். மரபு ரீதியான பால்சார்வாழ்க்கைப்பங்குகளை மிக உறுதியாக நியாயப்படுத்தும் ஆண்கள், பெண்களிடம் மேற்சொல்லியுள்ள விசயங்களைத் தான் வலியுறுத்துகிறார்கள்.

ஒதுக்கிவைக்கப்பட்ட சிறு வேலைகளைச் செய்ய பெண்கள் விரும்புவது, (கார்ட்மன் சொல்வது போல வீட்டிற்கு வெளியிலும் சரி, உள்ளேயும் சரி கழிவறைகளை சுத்தம் செய்யும் வேலைக்குப் பெண்களையே எதிர்பார்க்கிறார்கள்) வீட்டிற்கு வெளியே வேலை செய்யும் பெண்களுக்கு குறைந்த கூலி தரப்படுவது அடிப்படை உரிமையாக இருப்பது (பெண்களுக்கு பணம் தேவையில்லை. இனிமேலும் தேவைப்படாது) இன்னும் பிற அம்சங்களை குடும்ப அமைப்பின் இந்த ஆதரவாளர்கள் தங்கள் விவாதத்திற்கு ஆதரவாக முன்வைக்கிறார்கள்.

ஒருவேளை ஆணாதிக்கமுறைமை அல்லாத ஒரு சமூகத்தில் இந்த ஒருதார மணமுறை மறைந்துவிடக்கூடும். (ஒப்புக்காகவே இவ்வாறு சொல்கிறோம். ஏனெனில், இதற்கான உதாரணம் நமக்கு இதுவரை கிடைக்கவில்லை) ஆனால், நமது பிரச்சனை ஒருதாரமணமுறையோ அல்லது திருமணமோ கூட அல்ல. அதைக்காட்டிலும், இந்த வடிவங்கள் ஆணாதிக்க முறைமையில் ஆண்களுக்கு எவ்வாறு ஊழியம் புரிகின்றன என்பதே நமது பிரச்சனையாகும் என நான் கருதுகிறேன். யாருடன் எப்படி இணைந்து வாழ்க்கை நடத்துவது என்பதை முடிவு செய்வதற்கு மக்களுக்கு சுதந்திரம் கிடைக்கும் ஒரு சூழலில், ஆணாதிக்கமுறைமையை ஆதரிக்கும் வேறு நிறுவனங்கள் இல்லாத ஒரு நிலையில், இந்த ஒருதாரமணமுறையே கூட

(திருமணத்திற்குச் சட்ட அங்கீகாரம் தருவது அரசாங்கத்தின் வேலையாக இல்லாமல், அது இரு தனி நபர்களின் விருப்பத் தேர்வாக (CHOICE) இருப்பது) சமத்துவச் சூழலை (EGALITARIAN) உருவாக்கிவிட முடியும் என்றே நான் கருதுகிறேன்.

அனுமானத்திலிருந்து யதார்த்தத்திற்கு வருவோம். இந்தக் குடும்ப வடிவம் பெண்களின் பாலியலைக் கட்டுப்படுத்துவது, பொருளாதார ரீதியில் ஆண்களைப் பெண்கள் சார்ந்திருப்பது ஆகிய இரண்டிற்குமே காரணமாக இருக்கையில் 1949லிருந்து இக்குடும்ப முறை சீனாவில் தழைத்தோங்க காரணம் என்ன? சீனப்பொதுவுடமைக்கட்சி, பால்சமத்துவம் என்ற தங்கள் திட்டத்தின் ஒரு பகுதியாக இக்குடும்ப முறையை ஊக்கப்படுத்தியது ஏன்? 1949க்கு முன்பிருந்ததைவிட இன்று சீனப்பெண்கள் ஆண்களுக்கு சமமாக நெருங்கி வந்துவிட்டார்கள் என்பது யதார்த்தமே என நாம் வாதிட முடியுமா? *"ஆணாதிக்கம் விழுந்து வணங்கும்போது: சீனக் குடும்ப புரட்சியின் முக்கியத்துவம்"* என்ற புத்தகத்தில் *சமீத் ஸ்டேசி* அவர்கள் குறிப்பிட்டுள்ளது போல, ஒருதாரமணமுறைக் குடும்பம் அமெரிக்காவில் செயல்படும் விதத்தைக் காட்டிலும் இங்கு (சீனா) சில வழிகளில் வேறுபட்டுள்ளது. பொருளாதாரச் செயல்பாடுகள் குடும்பமுறையிலிருந்து அகற்றப்பட்டுச் சமூகத்தின் கைகளில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. கல்வி பொழுதுபோக்கு உடல்நலம் ஆகிய செய்பாடுகளை அரசாங்கம் தன் கைவசம் வைத்துக் கொண்டது. இத்தோடு, பாலியல்வெளிப்பாடு, மறு உற்பத்தி (குழந்தை பெறுதல் -மொார்) ஆகிய விசயங்களைக் குறிப்பிட்ட அளவிற்கு அரசாங்க கொள்கைகள் தீர்மானிப்பது இங்கு வெளிப்படையாகத் தெரிகிறது. திருமணவயது, குழந்தைகளின் எண்ணிக்கை, குடும்பக் கட்டுப்பாட்டு வழிமுறைகள், திருமணத்திற்கு முந்தைய கன்னிமை, திருமணத்திற்குப் பிந்திய பதிபக்தி, தன்புணர்ச்சிக்கு முழுத்தடை ஆகிய அனைத்து விசயங்களும் (அரசாங்கக் கொள்கைகள் சம்மந்தப்பட்ட) பொதுவிசயங்களாகும்.

சீனாவின் அரசுசோசலிசச் சூழலுக்குள், பெண்களின் உழைப்புச் சக்தியை ஆண்கள் கட்டுப்படுத்துவதை அனுமதிப்பது அரசாங்கம் தான், குடும்பம் அல்ல. சீனப் பெண்கள் (ஆண்களும்தான்) தங்கள் மறுஉற்பத்தி பாலியல் வாழ்க்கையையும், தங்கள் வேலை முறைகளையும் எப்படி வைத்துக் கொள்வது என்பதை நிர்ணயிப்பது அரசாங்கத்தின் அதிகாரமாகவும், சட்ட உரிமையாகவும் இருக்கிறது. சீனக்குடிமக்கள் அந்த அதிகாரத்தை ஏற்றுக் கொண்டதால் அரசாங்கத்திற்கு இவை சாத்தியமாயிருக்கிறது. சீனப்

பெண்களின் வாழ்க்கை நிலை மிகப்பெருமளவிற்கு முன்னேறியிருக்கிறது என்பதில் அய்யமேயில்லை. ஆனால் அவர்கள் இந்த அல்லது எந்த அரசாங்கத்தின் கீழாவது (சீன) ஆண்களுக்கு சமமான நிலையை எட்ட முடியுமா? என்பது கேள்விக்குரிய ஒன்று.

பெண்ணியச் சிக்கல்களுக்கு அராஜகவாதப்பார்வையின் அடிப்படையில் நாம் தேடும் பதில்கள்தான் சீனா அல்லது அமெரிக்கா அல்லது எந்தவொரு சமகாலச் சமூகத்திலும் பெண்களின் சமத்துவத்தை எடைபோடுவதற்கானத் திறவுகோலைத்தரும்.

### ஆணாதிக்க முறைமையின் உறுப்புகள்:

ஆணாதிக்கமுறைமை எட்டு உறுப்புகளை கொண்டிருப்பதாக அராஜகவாதப்பெண்ணிய ஆய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன. இவற்றில், கார்ட்மன் ஆய்வுகளோடு ஒத்தவிசயத்தை முதலிலும், பின் அவர் போகிற போக்கில் குறிப்பிட்டுள்ள அல்லது விவாதிக்காமலேயே விட்டுச்சென்ற விசயங்களை இரண்டாவதாகவும் நான் சுட்டிக் காட்டுகிறேன்:

1) கார்ட்மன் கூறுவதுபோல் பெண்களின் உழைப்புச் சக்தியை ஆண்கள் கட்டுப்படுத்துவது ஆணாதிக்கமுறைமைக்கு உள்ளடங்கிய ஒரு விசயம். அக்கட்டுப்பாட்டை அது பின்வரும் வழிகளில் செயல்படுத்துகிறது.

2) பொருளாதாரரீதியான அத்தியாவசியமான உற்பத்தி மூலவளங்களில் இருந்து பெண்களை புறம்தள்ளி வைப்பது; பொருளாதார ரீதியில் அவர்களை ஆண்களின் கட்டுப்பாட்டின் கீழுள்ள அமைப்பை அல்லது ஒரு தனிப்பட்ட நபரைச் சார்ந்திருக்கும்படி செய்வது;

3) பெண்களின் பாலியல் செயல்பாடுகளை கட்டுப்படுத்துவது: கூலி உழைப்பாளர் படையில் ஏற்படும் இழப்புகளை ஈடுசெய்யும் நோக்கில்தான் ஆண்கள் (குறிப்பாக ஆண்முதலாளிகள்) பெண்களின் பாலியல் செயல்பாடுகளைக் கட்டுப்படுத்துவதாகக் கார்ட்மன் இதற்குப் பிரதானமாகப் பொருள் கொள்கிறார். கூலி உழைப்பாளர் படைக்கு ஆட்கள் தேவையெனில் பெண்கள் மறுஉற்பத்தியில் (குழந்தைகள் பெற்றெடுத்தல்-மொர்) ஈடுபடுத்தப்படுவார்கள். அவ்வாறு ஒரு தேவை இல்லையெனில் ஆண்களை ஈர்த்துக் கொள்வது, அவர்களுக்கு ஊழியம் புரிவது ஆகிய பணிகளில் பெண்கள் ஈடுபடுத்தப்படுவார்கள்.

இது சரியான பார்வை தான். ஆனால், பெண்களின் பாலியல் மாற்றுச் செயல்பாடுகள் இதுவாகத்தான் இருக்க வேண்டும் என்பதை நிர்ணயிப்பது

ஏன் ஆண்கள் கையில் இருக்கிறது என்பதை இது விளக்கவில்லை. பெரும்பாலான பெண்கள் இதை ஏன் ஒத்துக் கொண்டார்கள்? அல்லது பெண்களின் பாலியல் செயல்பாடுகளை இந்த வழியில் செயல்படுத்துவது ஆண்களுக்கு எப்படிச் சாத்தியமாயிற்று என்பதற்கு இதில் விளக்கமில்லை.

பாலியல், கல்வி, குடும்பக்கட்டுப்பாடு, கருக்கலைப்பு ஆகிய வசதிகளைப் பெறுவதில் ஏழைப் பெண்களுக்குத் தடை; "கள்ளக் குழந்தை" பெற்ற பெண்களுக்கு அரசாங்க உதவி இல்லை என்ற அச்சுறுத்தல்; கல்வி வாய்ப்புகள், வேலை வாய்ப்பில் பயிற்சி, பெண்கள் அரசாங்க உதவிகளைப்பெற்றுக் கொள்வதற்கு சாத்தியமான வகையில் அன்றாட வேலைகளில் சலுகை, ஆகிய வசதிகள் ஏழைப் பெண்களுக்கு ஏற்படுத்தாமை; தங்களின் அன்றாடவாழ்விற்காகப் பெரும்பாலான ஏழைப் பெண்கள் விபச்சாரத்திற்குத் தள்ளப்படுவது; விபச்சாரிகளை (அவர்கள் உடலை விலை பேசும் ஆண்களை விட்டுவிட்டு) கேவலமாக நடத்துவது போன்ற எண்ணற்ற முரண்பாடானவழிகளிலும், தண்டனை தரும் வகையிலும் ஏழைப் பெண்களின் பாலியல்செயல்பாடுகள் கட்டுப்படுத்தப் படுவது ஏன் என்பதற்கு கார்ட்மன் சொல்லும் விசயத்தில் எந்த விளக்கமுமில்லை.

4) அனைத்துவளங்களும் ஆண்கள் கட்டுப்பாட்டில் இருக்கிறது. முடிவுகளைத் தீர்மானிப்பதும் ஆண்களே-கேட்மில்லட் சொல்லியுள்ளது போல-அனைத்து நிறுவனங்களும் ஆண்களின் கட்டுப்பாட்டில் தான் இருக்கின்றன. கார்ட்மன் குறிப்பிட்டிருப்பது போல மேற்சொல்லியுள்ள கூற்று அளவுக்கதிகமான மதிப்பீடு என்ற போதிலும், அக்கூற்று பொய் அல்ல. பெண்களின் உழைப்புச் சத்தியை ஆணாதிக்கமுறைமை கட்டுப்படுத்தும் திறனைக் குறைத்துக் காட்டமுடியாமல் செய்துவிடுகிறது என்பதும் உண்மையானது.

5) ஹோமோ போபியா: (ஓரினப்புணர்ச்சி குறித்த அச்சம், வெறுப்பு), ஓரினப்புணர்ச்சியானது ஒருதார மணமுறைக்கு அச்சுறுத்தலாக இருக்கும் என்ற நம்பிக்கையிலிருந்து தான் இந்த அச்சமும் வெறுப்பும் உண்டாகிறது என கார்ட்மன் சொல்லியுள்ளார். ஆனால், இதைக்காட்டிலும் வேறு முக்கிய காரணங்கள் இருக்கின்றன. ஆண் ஓரினப் புணர்ச்சியாளர்களின் செயல்பாடுகள் (நடை, உடை, பாவனை முதலியன-மொர்) பெண்களைப் போலவே இருப்பதால்தான் ஏனையோர் அவர்களை வெறுப்புணர்ச்சியோடு பார்க்கிறார்கள். உயர்ந்த இடத்திலிருந்து (ஆண் என்ற நிலையிலிருந்து) கீழிறங்கி, தாழ்ந்த நிலையில் இருக்கும் ஒரு இனத்தின் (பெண்கள்) நடவடிக்கைகளைப் பின்பற்றுவது என்பது ஒரு மன்னிக்க முடியாத

செயலாகும். இதனால், அவர்கள் (ஓரினப் புணர்ச்சியாளர்கள்) ஆணாதிக்க அதிகாரத்தைக் கைவிட்டு விடுகிறார்கள்.

பெண் ஓரினப்புணர்ச்சி கூட இதைப்போல ஒரு அச்சுறுத்தலான விசயம் ஆகும். தீவிரப்பெண் ஓரினப்புணர்ச்சியாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளது போல ஆண்கள் பெண்களை ஆதிக்கம் செய்யும் அனைத்துக் களங்களுக்கும் இது அச்சுறுத்தலாக இருக்கிறது.

லெஸ்பியன் என்பது பெண்களை வழிக்குக் கொண்டுவர பயன்படும் ஒருசொல், ஒரு முத்திரை ஆகும். இச்சொல்லைக்கேட்ட மாத்திரத்தில், ஒரு பெண் தான் கட்டுப்பாட்டு எல்லையை விட்டு வெளியே சென்றுவிட்டோம் என்பதை அறிந்து கொள்கிறார். தனக்கு ஒதுக்கப்பட்ட பால்சார் வாழ்க்கைப்பங்கு எல்லையை மீறிவிட்டோம் என்பதை அப்பெண் உணர்ந்து கொள்கிறார். ஆணிற்கு நிகரான சமத்துவம் கோருகின்ற, ஆணின் தனிச்சலுகைகளுக்கு சவால் எழுப்புகின்ற, தன் சொந்தக் தேவைகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்ற, எந்தவொரு பெண்ணின் மீதும் இந்த லெஸ்பியன் முத்திரை குத்தப்பட்டுவிடும். இந்தப் பால்வாதச் சமூகத்தைப் பொறுத்தமட்டில் ஒரு பெண் சுதந்திரமாக இருக்க விரும்புவது என்பதன் பொருள் அவர் பெண்ணாக இருக்க முடியாது. அவர் ஓரினப் புணர்ச்சியாளராகத்தான் இருக்க முடியும். அதனளவில் இது நமக்கு சொல்ல வருவது என்னவென்றால் பெண்கள் எங்கே இருக்க வேண்டும் என்பதைத்தான். பெண் என்பதும் தனி நபர் (PERSON) என்பதும் ஒன்றுக் கொன்று முரணானச் சொற்கள் என்பதையே இது தெளிவாகக் காட்டுகிறது.

லெஸ்பியன்-எதிர்ப்பு அணுகுமுறைகள் பெண்களை பெண்களிட மிருந்து பிரித்து வைக்கும் வழிமுறைகளாக இருக்கின்றன. (வயது வந்த ஒவ்வொரு ஆணும் வயது வந்த ஒவ்வொரு பெண்ணைத் தேர்ந்தெடுத்துத் தனிக்குடும்பம் மூலம் குழந்தை பெற்று வாழ்க்கை நடத்துவதுதான் பண்பாட்டுக் குறிக்கோளாக இருந்துவருகிறது). பெயரளவிலான அம்சங்களால் மட்டுமின்றி பெண்களை இவ்வாறு பிரிப்பது அரசியல், உளவியல் அம்சங்களிலும்தான்: "ஓரினப்புணர்ச்சியாளர் என்கிற முத்திரையைப் பயன்படுத்தி ஒரு பெண்ணை எவ்வளவு காலத்திற்கு அவரது சகோதரிகளிடமிருந்து பிரித்து வைக்கவும், ஆண்களையும் குடும்பத்தையும் தவிர பிற விசயங்களுக்கு முதன்மை தருவதை தடுக்கவும், மட்டுப்பட்ட போர்க்குண நிலைப்பாட்டிலேயே அச்சுறுத்தி இருக்கவைக்க முடிகிறதோ அவ்வளவு காலம்வரை அவர் ஆண் பண்பாட்டால் கட்டுப்படுத்தப்படுவார்".

ஒருபெண் எப்பொழுதுமே ஆணின் அங்கீகாரத்திற்கு ஏங்கிய வண்ணம் இருக்க வேண்டும், ஆணாதிக்க மதிப்பீடுகளோடு தன்னை ஐக்கியப்படுத்திக் கொள்ளவேண்டும். தன்னையும், மற்றப்பெண்களையும் வெறுக்க வேண்டும். இந்தமாதிரியான அணுகுமுறைகளை ஏன் பின்பற்றுகிறோம் என்பதையோ அல்லது இந்த அணுகுமுறைக்கு மாற்றாக வேறு அணுகுமுறைகளும் உண்டு என்பதையோ அப்பெண் அறிந்திருக்க வேண்டியதில்லை.

6) நாம் அறிந்துள்ள பெரும்பாலானச் சமூகங்களில், பால் ஏற்றத்தாழ்வுகளின் அடிப்படையில்தான், பால் அடிப்படையிலான சமூக வேறுபாடுகள் இருந்து வருகின்றன. ஆண்/பெண் ஆகியோரின் இயல்பு (NATURE) குறித்த பார்வைகள் பண்பாட்டிற்குப் பண்பாடு மாறுபட்டிருக்கலாம். ஆனால், இந்தப்பார்வைகளுக்கு அடிப்படையாக இருப்பது பால்வேறுபாட்டின் அடிப்படையில் ஆணிற்கும், பெண்ணிற்கும் தனித்தனியே ஒதுக்கப்பட்டுள்ள வேலைமுறைகள்தான். சில சமூகங்களில் பால்அடிப்படையிலான வேலைப்பிரிவினைகள் மிக இறுக்கமாகவும், வேறு சிலசமூகங்களில் இறுக்கம் தளர்ந்தும் இருக்கலாம். சமூகத்திற்கு மையமாக விளங்கும் நிறுவனங்களின் கட்டுப்பாடுகளைப் பெண்கள் வசம் ஒப்படைத்த சில கலாச்சாரங்களில் பெண்களின் பாத்திரம் மிக மரியாதையான இடத்தில் வைக்கப்பட்டிருக்கலாம். அல்லது நிறுவனங்களில் ஆண்/பெண் ஆகிய இருபாலரின் கட்டுப்பாடுகள் சமநிலைகளில் இருக்கலாம்.

கார்ட்மன் முன்னர் ஒரு கட்டுரையில் குறிப்பிட்டுள்ளது போல ஆணாதிக்கமுறைமையின் தோற்றம், அதன் வளர்ச்சி, அதன் உலகு தழுவிய தன்மை (UNIVERSALITY) ஆகிய விசயங்களில் மானுடவியலாளர்கள் மத்தியில் நிறைய வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஆணாதிக்க முறைமையின் வடிவம், அதன் வீச்சு (EXTENT) ஆகியவற்றை மதிப்பீடு செய்யும் வழிமுறைகளிலும் கருத்து வேற்றுமை காணப்படுகிறது.

இதிலிருந்து நாம் அறிந்து கொள்வது என்ன? ஆய்வு நெறிகளைக் கற்பதிலும், இனவியல்/அரசியல் சம்பந்தப்பட்ட கருத்துச்சிக்கல்களைப் புத்திசாலித்தனமாக அறிந்து கொள்வதிலும் எனது மானுடவியலாளருக்கு எதிராக உங்கள் மானுடவியலாளர் என்பதாக இது அடிக்கடி தாழ்ந்து போய்விடுவதாகத் தோன்றலாம். ஆனால், பின்வரும் விசயங்களில், பொதுவாக தவறு இருக்காது என்றே நான் நினைக்கிறேன். குழந்தை வளர்ப்பு முழுக்கப் பெண்ணின் பொறுப்பு என்று சொல்லமுடியாவிட்டாலும், பிரதானப் பொறுப்பு அவரைச் சார்ந்ததே; ஆண்களின் பாலியல்/ குடும்பத்

தேவைகளை நிறைவு செய்யும் வீட்டு வேலையாள் பெண்ணே; இந்த பணிகளைச் செய்வதினால் மிகத்தாழ்வான மதிப்பீட்டிற்கு உள்ளாவதும் பெண்ணே.

எது முதலில் தோன்றியது, வேலைப்பிரிவினையா? அல்லது பால்அடிப்படையிலான சமூக வேறுபாடுகளா? முட்டையிலிருந்து கோழி வந்ததா அல்லது கோழியிலிருந்து முட்டை வந்ததா என்ற பழைய கேள்வியைப் போலத்தான் இதுவும். இதில் எந்தவொன்றை கணக்கில் எடுத்துக் கொள்ளத் தவறினாலும், வளர்ச்சிப் போக்கு குறித்து ஒரு எளிமைப்படுத்தப்பட்டக் கருத்தையே வந்தடைவோம். இந்த இரண்டுமே (வேலைப்பிரிவினை, பால் அடிப்படையிலான சமூக வேறுபாடுகள்) இப்பொழுது சம முக்கியத்துவம் உடையதாக இருக்கிறது.

சான்றாக *"பெண் வணிகம்: பாலியலின் அரசியல் பொருளாதாரம் குறித்த குறிப்புகள்"* என்ற புத்தகத்தில் கெய்ல் ரூபின் அவர்கள் முன் வைத்துள்ள ஆய்வினை கார்ட்மன் பின்வருமாறு தொகுத்துள்ளார்.

"வேலைப்பிரிவினை தனித்தனி பால்வேறுபாடுகளுக்கு வழி அமைக்க; அவ்வழி ஆண்கள்/பெண்களுக்கு இடையில் பொருளாதாரப் பரஸ்பரச்சார்பிற்கு வழி அமைக்க; அது எதிர்ப்பால்மணமுறையை (ஒருதார மணமுறை மொர்) கடுமையாக நிர்ப்பந்திக்க; அது ஆண்களுக்கும், பெண்களுக்கும் சமூகத்தில் வெவ்வேறான அனுபவங்களை தரக் கூடிய துணைப் பால்கலாச்சாரத்திற்கு வழி அமைத்துவிடுகிறது"

இம்மாரிதியான தற்செயலானத் தொடர்புகளுக்குப் பொருண்மைச் சூழல்களிலிருந்து காரணம் தேடுவதற்குப் பதிலாக பின்வரும் வழியில் இதை நாம் பார்க்கலாம் என நான் கருதுகிறேன். (ஆண்/பெண் இயல்பு குறித்து பண்பளவில் வேறுபட்ட (DIFFERENTIAL) கருத்தின் மீது அமைந்த) சமூக மயமாக்கம், வேலைப்பிரிவினை - இரண்டுமே ஆணாதிக்க முறைமையின் அம்சங்களாகும் - பெண்ணின் சமூக வேறுபாடுகள் மீதான ஆணாதிக்கத்திற்குக் காரணமாகும். பொருண்மையியல், கருத்தியல் இந்த இரண்டின் கலவையே இது. இதில் ஒன்றில் மாற்றத்தைக் கொண்டுவர வேண்டுமானாலும் நாம் இரண்டையும் மாற்றியாக வேண்டும்.

7) பெண்களைக் காட்டிலும், ஆண்கள் மேலானவர்கள் என்ற எண்ணமே ஆணாதிக்கமுறைமையின் கருத்தியல் ஆகும். பெண்களின் வாழ்க்கைச் சூழலைக் கட்டுப்படுத்தும் உரிமை ஆண்களுக்கு உண்டு என்ற எண்ணமும் இந்தக் கருத்தியலுக்குள் உள்ளடங்கியிருக்கிறது. மற்றவர்கள்

மீது ஆதிக்கம் செலுத்தும் உரிமையை ஒருவர் செயல்படுத்த வேண்டுமாயின் மனிதமதிப்பீட்டில் தனக்குக் கீழ்நிலையில் அவர்கள் இருப்பதாகவும், அவர்கள் தன்சொத்து என்பதாகவும் (உண்மையில் இல்லாவிட்டாலும் உருவகம் என்கிற அளவிலாவது) கருத வேண்டியிருக்கிறது. தான் கீழானவர் என்ற கருத்தை ஒருவர் ஒத்துக் கொள்வதினால் சுய வெறுப்பு, தன் மீதே தாழ்ந்த மதிப்பீடு, பணிவு, தனிமை ஆகிய உளவியல் பாதிப்புகள் ஏற்படுகின்றன. இவற்றை வெறும் உளவியல் விளைவுகள் என்று மட்டுமே மதிப்பிட முடியாது. இதன் பாதிப்புகள் அதைக்காட்டிலும் முக்கியத்துவம் வாய்ந்தவை. ஒருவரின் பொருளாதார வாழ்க்கையை இது பாதிக்கிறது. கலகம் செய்வதற்கான மனஉறுதியை இது அழிக்கிறது. அல்லது கலகத்தில் முதல் இடத்தில் நிற்பதற்கான சாத்தியங்களை மறுக்கிறது. இக்கருத்தை பெரும்பாலான பெண்ணியத் தத்துவாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். குறிப்பாக கே. போல்ஸ் அவர்கள் *"கலாச்சாரப் புரட்சியின் அரசியல்"* என்ற கட்டுரையில் மிகச்சரியாக இதுபற்றிக் குறிப்பிட்டுள்ளார். காலனி ஆதிக்கத்திற்குட்பட்ட மக்கள், அமெரிக்கக் கறுப்பர்கள், கட்டுப்பாடுகள் இறுக்கமாயுள்ள சமூகங்களில் வாழும் ஓரினப்புணர்ச்சியாளர்கள், ஆணாதிக்கமுறைமைக்குள் வாழும் பெண்கள், போன்ற கலாச்சார வாயிலாக அடக்கப்பட்ட மக்கள் படிப்படியான விழிப்புணர்ச்சி மூலமே தங்கள் மீதான ஆதிக்கத்தை எதிர்த்துப் போராட முடியும். படிப்படியான விழிப்புணர்ச்சி இங்கு மிக அவசியம். ஆதிக்கம் என்பது, "வெறும் தொழில்நுட்பம் அல்லது பொருளாதாரம் அல்லது இராணுவம் சார்ந்ததோ மட்டுமல்ல, இது உணர்ச்சி (EMOTIONAL) சம்பந்தப்பட்டது. பண்பாடு, உளவியல் சம்பந்தப்பட்டது. அடக்கப்பட்ட மக்களிடையே தாழ்வுணர்ச்சி, பாதுகாப்பற்ற மனநிலை போன்ற வக்கரித்த உணர்வுகளை இது (ஆதிக்கம்) உண்டாக்குகிறது." இவ்வாறாக, விடுதலை என்பது அனைத்துக் காரணிகளையும் எதிர்த்துக்கலகம் செய்வதாக இருக்க வேண்டும். மொத்தத்தில் இந்த விசயங்கள் பொருண்மையியல் அல்லது உளவியல் சம்பந்தப்பட்டதோ அல்ல; மாறாக, இரண்டையுமே உள்ளடக்கியதுதான்.

பொருண்மையியல் ரீதியாகவும், கருத்தியல் ரீதியாகவும் ஆண்களின் சொத்தாகப் பெண்கள் பாவிக்கப்படுவதால் பொருளாதாரரீதியான உற்பத்தி மூலவளங்களை (பெண்) கையிலெடுப்பது (நிச்சயம், இது அவசியம் என்ற போதிலும்) மட்டுமே போதுமானதல்ல; அல்லது (பெண்) தன்சொந்த பாலியல் செயல்பாடுகளில் சுயக்கட்டுப்பாட்டைப் பெற்றிருப்பதும் (இதுவும் அவசியம் என்ற போதிலும்) போதுமானதல்ல. பெண்கள் என்ற காரணத்திற்காகவே தாங்கள் ஒடுக்கப்படுகிறோம் என்ற விழிப்புணர்வைப்

பெண்கள் பெறுவது அவசியம். தாங்கள் கீழானவர்களல்ல; ஆணாதிக்க முறைமை தவிர்க்க முடியாத ஒன்றல்ல என்ற உணர்வைப் பெண்கள் பெற வேண்டும். தனிக்குடும்பங்களில் பெண்கள் வசிப்பதாலும், தன் ஆண் துணையோடு மட்டுமே தனிமை வாழ்க்கை நடத்துவதாலும் ஆண்களை மட்டுமே அளவு கோலாகக் கொண்ட ஆணாதிக்கமுறைமைப் பண்பாட்டில் வசித்துவருவதாலும் சராசரி குடும்பப் பெண் (STEREO TYPED FEMINITY) என்ற நிலைக்கு அப்பால் இவர்களால் வேறு எந்த மாற்று வழியையும் நினைத்துப் பார்க்க முடியாது. இம்மாதிரியான ஒரு சூழ்நிலையில் வாழாத பெண்களால் ஆணாதிக்க முறைமையின் கருத்தியலைக் கண்டு கொள்ள முடியாது. அதனால் அக்கருத்தியலை மறுப்பது அவர்களுக்கு ஒரு கடினமான பணியாகயிருக்கும். மேற்சொல்லியுள்ள இரண்டு நிலைகளிலும் விழிப்புணர்வு இல்லையென்றால் இவர்களிடம் ஒற்றுமையுணர்வைக் கட்டுவது கடினமாக இருக்கும்.

இதுவரை நமது சமூகத்தின் முக்கியச் சூழ்நிலைகளைப் பற்றியே நான் சொல்லியுள்ளேன் என்ற போதிலும் (இது குறித்த) அடிப்படைக் கொள்கைகள் இன்னும் விரிவானவையாகும். *பெண்கள், பண்பாடு, சமூகம்; ஒரு தத்துவச் சுருக்கம்* என்ற புத்தகத்தில் *மிசேல் செட் ரோசால்டோ* பின்வருமாறு சொல்லியுள்ளார்:"ஒருவர் பல பண்பாடுகளை ஒப்பு நோக்கினால் பின்வரும் விசயங்களைக் கண்டுகொள்ளலாம். குடும்ப வேலை, வெளி வேலை குறித்து, கறாரான வேறுபாடுகளைக் கொண்டுள்ள சமூகங்களிலும், பெண்கள் தங்களுக்குள் பிரிந்து தனிமையிலும், குடும்பத்தில் ஒரு தனிஆணின் அதிகாரத்தின் கீழ் வைக்கப்பட்டிருக்கும் சமூகங்களிலும், பெண்களின் தகுதி தாழ்ந்த நிலையில் இருப்பதைக் கண்டு கொள்ளலாம்.

பெண்கள் தங்களுக்குள் பிரிந்து தனிமையில் இருக்கும் சூழ்நிலைகள் தீவிரப் பெண்ணியர்கள் "அந்தரங்கம் என்பது பகிரங்கமே" என்ற முழக்கத்தை முன்வைப்பதற்கு இட்டுச் சென்றது. இந்த முழக்கத்தின் அடிப்படையில் ஆணாதிக்கமுறைமைக்குள் வாழும் பெண்களின் வாழ்க்கையை ஆய்வுக்குட்படுத்தினர். "அந்தரங்கம் என்பது பகிரங்கமே" என்பதன் பொருள் சிலர் தவறாகப் புரிந்துள்ளதுபோல பெண்கள் தங்கள் குடும்ப அமைப்பிலிருந்து வெளியேசென்று தங்கள் விருப்பப்படிச் செயல்படுவது என்பதல்ல. இம்மாதிரியான தவறான புரிதல், வர்க்கம்/ இனம் போன்ற ஏனைய அடக்கு முறைகளைச் சொரணையில்லாமல் மறுத்தொதுக்குகிறது. சில மார்க்சியவாதிகள் இம்மாதிரியான முடிவுக்கு

வருகிறார்கள். ஆனால் கார்ட்மன் இம்முடிவுக்கு வருவதில்லை. இருப்பினும் அவர் "தீவிரப் பெண்ணியர்களைப் பொறுத்தவரையில் "அந்தரங்கம் என்பது பகிரங்கமே" என்பதன் பொருள் யாதெனில் ஆண் பெண்களுக்கிடையிலான பிரிவினையே முதலில் உருவானதும், அடிப்படையானதுமான வர்க்கப் பிரிவினையாகும். அத்துடன் பெண்கள் மீது அதிகாரமும் ஆதிக்கமும் செலுத்துவதற்கான ஆண்களின் போராட்டமே. பாலின இயங்கியலே வரலாற்றின் இயங்கு சக்தியாகும்" எனச் சொல்லியுள்ளார். நான் புரிந்து கொண்ட விதத்தில் இந்தக் கருத்து அது தோன்றியதற்கான காரணங்களோடு கொண்டுள்ள சம்பந்தத்தைக் காட்டிலும் அதன் விளைவுகளோடு அதிகம் சம்பந்தப்பட்டிருக்கிறது. கீழ்வரும் விதத்தில் விசயங்களைப் பொருத்திப் பார்க்கத்தக்க சட்டகம் ஒன்றை இது நமக்கு வழங்கிறது.

1) பெண்களின் தனிமைக்கும் அவர்கள் பிரிந்து இருப்பதற்கும் காரணமான சூழ்நிலைகளை இச்சட்டகம் விளக்குகிறது.

2) பெண்களின் சிக்கல்களுக்குக் காரணம் அவர்கள் பெண்களாக இருப்பது தான்; மாறாக, அச்சிக்கல்கள் தனி ஒருவருக்கானவையோ அல்லது அந்தரங்கமானவையோ அல்ல; (NEITHER PRIVATE NOR PERSONAL)

3) ஆண்கள் இனத்திலேயே மிகவும் பரிதாப நிலையில் இருக்கும் ஆண்களைக் காட்டிலும் பெண்களின் நிலை கீழானது என்கிற விதத்தில் வேறுபட்டு நிற்பதற்கான காரணங்களை இச்சட்டகம் விளக்குகிறது.

இனம், வர்க்கம், தேசிய இனம், திருமணத்தகுதி, பாலியல் தேர்வு ஆகிய காரணிகளை அளவுக்கதிகமாக எளிமைப்படுத்தும் (சில சமயங்களில் கவனியாது விடும்) ஆய்வு முறையானது மற்ற காரணிகளையும் தாண்டி பெண்கள் என்ற முறையில் அவர்களுக்கு நேரிடும் பொதுவான சூழ்நிலைகளையே அழுத்தமாக சுட்டிக் காட்டுகிறது எனலாம். இந்த ஆய்வு முறையானது பெண்களை ஒரு அரசியல் சூழமைவுக்குள் வைத்துப் பார்க்கிறது. சுயவெறுப்பு என்ற நோக்கிலில்லாமல் சுய மரியாதை என்ற நோக்கிலிருந்து ஆணாதிக்கமுறைமைக்கு எதிராக பெண்கள் ஒருங்கிணைந்து பணியாற்றுவதை இந்த ஆய்வுமுறை மிக சாத்தியமாக்குகிறது. மகளிர் கந்து அறுவை* முறையானது பெண்ணின் பால் உணர்ச்சித் திறனை அழித்து விடுகிறது.

---

* மகளிர் கந்து அறுவை (CLITORIDECTOMY): பெண் தன் கணவன் அல்லாத பிற ஆடவருடன் உடலுறவு கொள்ள இடம் தராதிருக்கும் முகமாக அவளது பிறப்புறுப்பின் வெளிப்பகுதியை அறுவைச் சிகிச்சை மூலம் வெட்டி அகற்றி விடும் முறை முன்னர் பழங்காலச் சமூகங்களில் பின்பற்றப்பட்டது (நன்றி: பெண்ணியக் கலைச்சொல் விளக்கக்கையேடு)

இன்பைபுலேசன் அறுவை முறை பெண்ணின் மறுஉற்பத்திச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துகிறது. பெண்ணின் உழைப்புச் சக்தியைக் கட்டுப்படுத்தும் தேவைக்காக அவரின் பாலியல் செயல்பாடுகளின் மீது ஆணாதிக்கமுறைமை கொண்டுள்ள கட்டுப்பாடு இதுவென இக்காட்டுமிராண்டித்தனமான செயல்பாட்டிற்கு கார்ட்மென் ஆய்வு ஒரு மட்டத்தில் விளக்கமளிக்கிறது. ஆனால் இதற்கும் மேலான காரணங்கள் இதில் உள்ளடங்கியிருக்கின்றன. (பெண்ணின் மீது) பெரும் வேதனை திணிக்கப்படுவது; இதைத் தொடர்ந்து அடிக்கடி உண்டாகும் உடல் ரீதியான பிரச்சனைகள்; மனித இனத்தின் உரிமையான உடலுறவு இன்பம் அழிக்கப்படுவது; பெண்ணின் சொந்தப்பாலியல் செயல்பாடுகளை அவரே கட்டுப்படுத்தும் உரிமை அழிக்கப்படுவது; (சில சமூகங்களில்) பெண்களையே இதனை மற்றப் பெண்களுக்குச் செய்யப்பயன்படுத்துவது ஆகிய இவையெல்லாம் தெளிவான உடலியல்/உளவியல் ரீதியான ஆதிக்கங்களாகும். இதை பெண்கள் ஏன் எதிர்ப்பதில்லை, தங்கள் உடல்மீது ஏவப்படும் இந்தத் தாக்குதல்களை ஏன் மறுப்பதில்லை, பிற பெண்களை ஊனமாக்குவதில் எந்தப் பங்களிப்பும் செய்வதற்கு ஏன் மறுப்பதில்லை? இவையெல்லாம் ஒருவருக்கு வியப்பைத்தருவதாக இருக்கலாம். அதிகார உறவுகள் மிக உச்சகட்டத்திலும் நோய்க்கூறான வடிவத்திலும் இருப்பதையே இச்செயல்பாடுகள் காட்டுகின்றன. மேற்சொன்ன நிறுவன வடிவங்களும், ஒருபால்/வர்க்கம்/இனம் மற்றொருபால்/வர்க்கம்/இனத்தின் மீது ஏவுகின்ற சடங்கு ரீதியானதும், பண்பாட்டு ரீதியில் சகித்துக்கொள்ளப்படுவதுமான வன்முறைகள் அனைத்தும் படிநிலை அதிகாரத்தாலும், ஆதிக்க உரிமையாலும் நிலை நிறுத்தப்படுகின்றன. அதிகார உறவுகளுக்கு இடம்தராத நிறுவன வடிவங்களை நாம் தோற்றுவித்தால்தான் இவை மறைந்தொழியும்.

அமெரிக்காவில் மகளிர் கந்துஅறுவைமுறை பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து பழக்கத்தில் இல்லை. ஆனால் இன்று கருவக அறுவை (HYSTERECTOMY) என்ற மருத்துவ முறையானது பெண்களின் மறுஉற்பத்தி உடற்கூறின் மீது நடத்தப்படும் பெரும் வன்முறைக்கு காரணமாக இருந்துவருகிறது. இம்முறை மருத்துவ ரீதியாக ஏற்புடையது என சொல்லப்பட்ட நிகழ்ச்சிகளும் உண்டு. ஆனால், தற்போது அவசியமற்ற கருவகஅறுவை சிகிச்சைகள் ஆற்றல் மிக்கதொரு தொற்று நோயாக இருந்தது வருகிறது.

விருப்பமற்ற கருக்கட்டுப்பாடு மூலம் பெண்களின் மறுஉற்பத்தித் திறன் (குழந்தை பிறப்பு-மொர்) அழிக்கப்படுவது வன்முறையின் மற்றொரு

வடிவமாகும். கருக்கட்டுப்பாடு என்பது கருவக அறுவை சிகிச்சை மூலமாக இருக்கலாம் அல்லது வேறு முறைகளிலும் இருக்கலாம். கருக்கட்டுப்பாடு என்பது குடும்பக் கட்டுப்பாட்டின் ஒரு வடிவம் என்ற போதிலும் சில சமயங்களில் பெண்களே இதற்கு விருப்பப் பூர்வமாக ஒத்துக் கொண்ட போதிலும், மருத்துவ எல்லைக்கு வெளியே இது கேள்விக் குள்ளாக்கப்படுகிறது. பொது மருத்துவமனைகள் மூலம் 3000க்கு மேற்பட்ட அமெரிக்கப் பழங்குடியினப் பெண்களுக்கு கருக்கட்டுப்பாடு செய்யப்பட்டது. இந்த அறுவைமுறையினால் மீண்டும் குழந்தை பிறக்காது என்று பெரும்பாலான பெண்களிடம் சொல்லப்படவில்லை. அல்லது அவர்களின் முழுச்சம்மதிப்பைப் பெறவில்லை. இதற்கு என்ன காரணம்? "சமூகப் பொருளாதாரக்" காரணங்களுக்காக விருப்பமின்றி இந்த அறுவைமுறையை ஏற்றுக் கொண்ட ஏழைப்பெண்கள் எத்தனைபேர்? திருமண உறவிற்கு அப்பால் குழந்தைகள் பெற்றுக்கொள்ளும் பெண்களுக்கு பொது உதவி அடிப்படையில் கருக்கட்டுப்பாடு செய்வது உரிமை என்பதில் நம்பிக்கை கொண்டுள்ள மருத்துவர்கள் எத்தனை பேர்? அனைத்து வர்க்கங்கள்/இனங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த பெண்களில் "மன நோயாளி" களாக கருதப்படுபவர்கள் எத்தனைபேர்? மாதவிடாய் நின்றுப்போன (MENOPAUSAL) பெண்களில் எத்தனை பேர் நரம்பியல் நோயாளிகளாகப் பார்க்கப்படுகிறார்கள்?. பயனற்ற, இரத்தப்பெருக்கு கொண்ட, நோய்க் குறிகளை உண்டாக்குகின்ற, புற்றுநோயைத் தன்னுள் கொண்டிருக்கும் இந்த உறுப்பிலிருந்து விடுதலையடைய தயார்நிலையில் இருக்கும் பெண்கள் எத்தனைபேர்?.

இந்தக் கேள்விகளுக்கான பதில்கள் பெண்களின் உழைப்புச் சக்தியைக் கட்டுப்படுத்துவது என்ற கருத்தின் எல்லைகளை உடைத்து தகர்த்துவிடும். எல்லாவற்றிக்கும் மேலாக, இம்மாதிரியான செயல்பாடுகள் பொருத்தமானவையே சரியானவையே. இவை செய்யப்படுவது பெண்களின் சிறப்பான நலன்களுக்காகத் தான் என்றே ஆணாதிக்க அதிகாரக் கருத்தியல் நியாயப்படுத்தும்.

குடும்பத்தின் கட்டாயத்திற்காக, மதக்கட்டாயத்திற்காக தொழிலாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் பொருட்டு அரசாங்கத்தின் கொள்கையாளர்கள் உருவாக்கும் கட்டாயத்திற்காக அல்லது ஒரு பாதுகாப்பான சட்ட ரீதியான கருக்கலைப்பு வசதி கிடைக்க வில்லை என்ற பொருளாதாரக் காரணத்திற்காக, ஒரு பெண்ணை அவரது விருப்பமின்றி குழந்தை பெறவைப்பது வன்முறையின் இன்னொரு

வடிவமாகும். இந்தக் கட்டாயங்கள் பெண்களின் அகவய அழுத்தத்தை (INTERNALIZED PRESSURE) தீவிரப்படுத்தி குழந்தை பெறுவதுதான் வாழ்க்கையின் முக்கிய லட்சியமே என்று பெண்களையே நினைக்கவைத்து விடுகின்றன. இவை முதலாளிய நாடுகளில் உள்ள பெண்களின் சூழ்நிலைகளைத் தெளிவாகக் காட்டினாலும், உலகத்தில் எந்தவொரு தொழில்வள நாட்டிலும்-முதலாளிய நாடு அல்லது சோசலிச நாடு-குழந்தை பெறுவது அல்லது பெற்றுக்கொள்ளாமல் இருப்பது என்பதை நிபந்தனையற்ற சுதந்திரத்துடன் தீர்மானிக்கும் உரிமை பெண்ணிடம் இல்லை.

வன்முறை குறித்த தொடர்புகள் தெளிவாகத் தெரியவில்லையென்றால் பின்வரும் விவரங்கள் அதைத் தெளிவாக்கும், அமெரிக்காவில் 1978 ஆண்டு கடைசி 11 மாதங்களில் இலவசக் கருக்கலைப்பு எண்ணிக்கை 99 விழுக்காடு சரிந்துவிட்டது. காரணம் இலவசக் கருக்கலைப்பின் மீது எண்ணற்றக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டமையே. இலவசக் கருக்கலைப்பு வசதி முற்றாக கைவிடப்பட்டால், ஆண்டுதோறும் 250 அல்லது 300 பெண்கள் இறக்க நேரிடும் என்றும், 25,000க்கு மேற்பட்ட பெண்கள் சுய-கருக்கலைப்பு அல்லது சட்டவிரோதக் கருக்கலைப்பு முறைகளினால் தீவிரமான நோய்த் தொல்லைக்குள்ளாவர் என்றும் அரசாங்கத்தின் சொந்த ஆய்வுகள் காட்டுகின்றன. தங்கள் குழந்தைப் பேறுதிறனை அழிக்கச் செய்யும் முயற்சிகளில் இறக்க நேரிடுவது ஏழைப் பெண்கள் மட்டுமல்ல; ஏனையோரும்தான். குழந்தைப் பேறு இறப்பு வெள்ளையினப் பெண்களைக் காட்டிலும் கறுப்பினப்பெண்கள் மத்தியில் 3.5 விழுக்காடு அதிகமாக இருக்கிறது, இனம்,வர்க்கம், பால் ரீதியான அடக்குமுறை ஆகியவற்றிற் கிடையிலான பரஸ்பர உறவை இந்த யதார்த்தத்திலிருந்து கண்டு கொள்ளலாம்.

8) பெண்களுக்கு எதிராகக் குறிப்பாக ஏவப்படும் வன்முறை வடிவங்கள் மூலம் ஆணாதிக்கமுறைமையின் அதிகாரம் வெளிப்படுகிறது. நிலை நிறுத்தப்படுகிறது. திணிக்கப்படுகிறது. பெண்கள் மீது வன்முறை ஏவப்படும் என்ற அச்சமே போதுமானது. அன்றாடம் வன்முறையைச் செயல்படுத்த வேண்டிய அவசியமேயில்லை. பெரும்பாலான ஆண்கள் பெண்களுக்கு எதிராக வெளிப்படையாக எந்த வன்முறையையும் செயல்படுத்துவதில்லை என்ற போதிலும் பெரும்பாலான வன்முறை வடிவங்களுக்கு ஆண்களே முக்கியப் பலியாக இருப்பதாலும், ஆணாதிக்கமுறைமையின் பின்னணியில் வைத்து இதன் சில அம்சங்களை அறிந்து கொள்வது அவசியமாக

இருக்கிறது. ஒவ்வொரு அரசியல் பொருளாதர வடிவத்திலும், சமூக அமைப்பின் ஒவ்வொரு வடிவத்திலும் பெண்களுக்கு எதிரான வன்முறை இடம் பெற்றிருப்பது தெரியவருகிறது.

வன்முறை, பெரும்பாலும் வடிவத்தில் பாலியலோடு தொடர்புடையதாக இருக்கிறது. இது பெண்களின் பாலியல் தன்னுரிமையை தாக்குவதாக இருக்கலாம் அல்லது மறு உற்பத்தித் திறன் மீதான அவரின் உரிமையை கட்டுப்படுத்துவதாக இருக்கலாம். பாலியல் வன்முறை ஆணாதிக்க முறைமைக்கு இருவழிகளில் ஊழியம்புரிகிறது. ஒன்று கார்ட்மன் சொல்லியுள்ளதுபோல, பாலியல்செயல்பாடுகளைக் கட்டுப்படுத்துவதன் மூலம், பெண்களின் உழைப்புச்சக்தியை கட்டுப்படுத்த உதவுகிறது. இரண்டு, ஆண்மேலாதிக்கத்திற்கும், ஆண்களின் ஒருமைப் பாட்டிற்கும் எதிர்ப்பு வராமல் கண்காணித்துக் கொள்ள உதவுகிறது. பெண்களின் உழைப்புச் சக்தியை கட்டுப்படுத்துவது என்ற அம்சத்திற்கு அப்பால் மேலும் பல விசயங்கள் இதில் உள்ளடங்கியிருக்கின்றன. அவை பின்வருமாறு:

இது அந்நபரைக் கட்டுப்படுத்துகிறது. காரணம், அவர் ஒரு பெண்ணாக இருப்பதே. அவர் எங்கெங்கு செல்ல வேண்டும், என்னென்ன செய்ய வேண்டும் என்பதையும் இது வரையறுக்கிறது. அவரின் அச்சத்தையும், பணிவையும் அதிகரிக்க வைக்கிறது. சுருங்கச் சொன்னால், ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையில் நிலவும் ஏற்றதாழ்வான அதிகார உறவுகளை இது உறுதிப்படுத்துகிறது.

அனைத்துப்பண்பாடுகளிலும் பெண்களுக்கு எதிரான வன்முறை இடம் பெற்றிருக்கவில்லை என சில இனவியல் சான்றுகள் கருத்துரைத்தாலும், அச்சான்றுகளின் துல்லியத்தன்மை குறித்து மதிப்பிடுவது மிகக் கடினம். "தாய்வழிச் சமூகமாக இல்லையெனினும், அதற்குச் சமமான சமத்துவ சமூகங்கள் என வர்ணிக்கப்பட்ட சமூகங்களிலும், குறிப்பாக வன்புணர்ச்சி (கற்பழிப்பு) ஆண்களின் சமயச் சடங்காக உள்ள அல்லது பண்பாட்டு தளத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு சடங்காக உள்ள சமூகங்களிலும் பெண்களுக்கு எதிராக நிலவிய பாலியல் அதிகாரம் குறித்து இனவியலாளர்கள் ஏதும் அறியாக் குருடர்களாக இருக்கின்றனர் என மானுடவியலாளர் *பாலாவெப்ஸ்டர்* குறிப்பிட்டுள்ளார். இது குறித்த புள்ளி விபரங்கள், "சிதறலானவையாக, துண்டு துண்டானவையாக, சார்புத் தன்மை கொண்டதாக" இருக்கின்றன. பெரும்பாலும் வன்புணர்ச்சி குறித்து இனவியல் ஆவணங்களில் குறிப்பிடப்படுவது கூட இல்லை. அப்படியே

குறிப்பிட்டிருந்தாலும் அது பொதுவாக ஆணின் பார்வையிலிருந்தே குறிக்கப் பட்டிருக்கும். அல்லது குறிப்பிட்ட வகையான மனிதத்தன்மையற்ற செயல்பாடு என்றே நியாயப்படுத்தப்பட்டிருக்கும். சிலசமயங்களில் பெண் இதை விரும்பி ஏற்றுக் கொண்டதாக ஊகிக்கப்படுகிறது. வன்புணர்ச்சிக்கு உள்ளான பெண்ணிடம் அவர் அவ்வல்லுறவிற்கு ஏன் விரும்பினார் என்ற கேள்வியை கேட்க மானுடவியலாளர்கள் தவறிவிடுவதால்தான் இம்மாதிரியான கருத்துக்கள் சுலபமாக நிலை நிறுத்தப்படுகின்றன.

ஆண்களின் பாலியல் தூண்டுதல்களுக்கும், வன்புணர்ச்சிக்கும் இடையே சிறிதளவான உறவே இருக்கிறது. ஆண் தன் அதிகாரத்தை நிலைநாட்டுவது என்ற அம்சமே இதில் (வன்புணர்ச்சி) பெருமளவிற்கு சம்பந்தப்பட்டிருக்கிறது. ஆணாதிக்கத்தை எதிர்க்கும் பரவலான தாக்குதல்களுக்கு எதிராகவே வன்புணர்ச்சி இடம் பெற்றிருக்கிறது. அல்லது அம்மாதிரியான தாக்குதல்கள் ஏதும் இடம் பெறாத சமயங்களிலும் இது நடைபெற்றிருக்கிறது என *வெப்ஸ்டர்* அவர்களின் ஆய்வுகள் காட்டுகின்றன.

“பணிசெய்ய மறுத்தல், கள்ளஉறவு கொண்டிருத்தல், ஆண் அதிகாரத்திற்கு எதிரான ஆர்ப்பரிப்பு, துணையின்றி கிராமத்தைவிட்டுச் செல்லுதல், ஆண்களின் இரகசியத்தை அறிந்து கொள்ளுதல், இரவில் வீட்டைவிட்டு வெளியே செல்லுதல் போன்ற செயல்களுக்காக பெண்கள் வன்புணர்ச்சிக்குள்ளாகின்றனர். போர்த்தளங்களில், சமய சடங்குகளின் தொடக்கத்தில், ஆண்கள் குழுக்களாகவோ அல்லது தனி நபர்களாகவோ வன்புணர்ச்சியில் ஈடுபடுகின்றனர்.”

அனைத்துச்சமூகங்களிலும் எந்தவிதமான உற்பத்திமுறை இருந்தபோதிலும் அதைப் பொருட்படுத்திக் கொள்ளாமல் வன்புணர்ச்சி இடம் பெற்றிருந்ததை தற்போதைய ஆதாரங்கள் வெளிப்படுத்துகின்றன. “வர்க்கங்களற்ற” (சமத்துவம் என்று சொல்லப்படுகின்ற) சமூகங்களிலும் சரி, கூர்மையான வர்க்க ஏற்றத்தாழ்வுகள் நிலவும் சமூகங்களிலும் சரி இது இடம்பெற்றிருக்கிறது.

வெப்ஸ்டர் இம்மாதிரியான ஆய்வுகளை முன்வைத்துள்ளார். மேலும் அவரது ஆய்விற்கு மார்க்சியப் பெண்ணியர்கள் பெருமளவு பகைமையையும் எதிர்ப்பையும் காட்டியுள்ளனர் என்று அவர் கூறுகிறார். அனைத்து வகையான பண்பாடுகளிலும் வன்புணர்ச்சி இடம் பெற்றிருந்திருப்பதை ஒருவர் ஒத்துக் கொண்ட போதிலும் மார்க்சியப் பார்வையின் எல்லைக்குள்

இதை வைத்து பார்ப்பது-சாத்தியமில்லை என்று சொல்லமுடியா விட்டாலும்-கடினமான ஒன்றாகும்.

வன்புணர்ச்சி என்ற வடிவத்தைத் தவிர வேறு பல வடிவங்களிலும் பெண்களுக்கு எதிரான வன்முறை இடம்பெற்று வருகிறது. பழம் சமூகங்களில் நடைபெற்ற சூன்யக்காரிகளை துன்புறுத்தல் அல்லது சீனாவில் நடந்ததைப்போல பெண்களின் கால்களை கட்டிவைத்தல் போன்ற சித்ரவதைகள் பற்றி நாம் விவாதிக்காமல் தற்போதைய வன்முறைகளை மட்டுமே கணக்கிலெடுத்தால்கூட அந்த விவரங்களே நம்மை மயக்கமடையச்செய்துவிடும்.

பெண்களின்மறுஉற்பத்தி/பாலுறவு உறுப்புகளை திட்டமிட்டு ஊனப்படுத்துவது கூட (MUTILATING) வன்முறையின் ஒரு வடிவமாகும்.

ஆப்பிரிக்கா, மத்திய கிழக்கு ஆகியவற்றின் பல நாடுகளிலும் ஆஸ்திரேலியா இந்தோனேசியா போன்ற நாடுகளிலும், பெண்களின் பாலுறுப்பை ஊனப்படுத்துவது ஒரு சாதாரணச் சமயச் சடங்காக இருந்து வருகிறது.

ஏழைப் பெண்களும், சிறுபான்மையினப் பெண்களும், தங்கள் மறுஉற்பத்தித் திறனைக் கட்டுப்படுத்தும் கட்டாய வன்முறைக்கு எளிதில் இலக்காகின்றனர் என்ற போதிலும் எந்த தரப்புப் பெண்களாலும் இதிலிருந்து தப்ப முடியவில்லை. அனைத்துப் பெண்களுக்கும் கருக்கலைப்பு உரிமை மறுக்கப்படுகிறது.

பாலியல்தொல்லைகள், பெண்குழந்தைகளை பழிதூற்றுவது, பெண்களை உதைப்பது போன்றவை பெண்களுக்கு எதிராக நடத்தப்படும் தனித்தன்மையான சில வன்முறை வடிவங்கள் ஆகும். குறைந்த அளவிலான பொருளாதாரச் சுதந்திரத்தோடு அல்லது உளவியல் சுதந்திரத்தோடு வாழும் பெண்கள் மீதுதான் இம்மாதிரியான வன்முறைகள் அனைத்தும் மிக அழுத்தமாக ஏவப்படுகிறது. இம்மாதிரியான வன்முறைகள் எந்தத் தரப்புப் பெண்களையுமே விட்டுவைப்பதில்லை. சில சமயம் இவ்வன்முறைகள் தனிப்பட்ட ஆண்கள், தனிப்பட்டப் பெண்கள் மீது நடத்தும் தனிப்பட்டச் செயலாக இருக்கலாம். சில சமயம் இவை (வன்முறைகள்) சட்டத்தினாலும், கொள்கைவழி திட்டங்களினாலும் நடத்தப்படலாம். இவற்றை ஆண்களும் செயல்படுத்தலாம், பெண்களும் செயல்படுத்தலாம்.

சில செயல்பாடுகள் அல்லது கொள்கைகள் ஆண்கள் பெண்கள் மீது கொண்ட வெறுப்பால் உருவாக்கப்படலாம் அல்லது மற்றப் பெண்களை வெறுக்கும் ஒருசில பெண்களாலே கூட நடத்தப்படலாம். (உதாரணத்திற்கு கருக்கலைப்பின் மீதான கட்டுப்பாட்டை ஆதரிப்பது; அல்லது அரசாங்க உதவித் தொகையில் பெண்களை மலடாக்குவதை ஆதரிப்பது) பெரும்பாலும் மிகச் சாதாரணமாகவும், எந்தவித உறுத்தல் இன்றியும் இது இப்படித்தான் இருக்கும் என்ற பாணியிலேயே உண்மையில் இம்மாதிரியான செயல்கள் நடைமுறைப்படுத்தப்படுகிறது. ஆணாதிக்கமுறைமை என்பதன் பொருள் இதுதான். குறிப்பான வழிகளில் இது (ஆணாதிக்கமுறைமை) முதலாளியத்திற்குள் குறுக்கீடு செய்து வருகிறது. இருப்பினும் இது தனித்தன்மையோடும் இருக்கிறது. நிறுவனமாக்கப்பட்ட ஏற்றத்தாழ்வான வடிவங்களில் ஆணாதிக்கமுறைமையும் ஒன்று. ஆதிக்க உறவு, அடிபணிந்த உறவு என அதிகார உறவுகளின் தோற்றத்திற்கும் இதுவே காரணம். அதன் விளைவுகளுக்கும் இதுவே காரணம்.

## *முடிவுரை:*

கார்ட்மன்னின் ஆய்வு நடைமுறையில் எங்கு இட்டுச் செல்லும்? இது குறித்து தெளிவாக ஒன்றும் தெரியவில்லை. கார்ட்மன்னும் ஏனைய மார்க்சியப் பெண்ணியர்களும் பால்-குருட்டுத் தன்மை கொண்ட தத்துவத்தின் (மார்க்சியம்-மொர்) குறைபாடுகளுக்கு ஒரு எதிர்வினை தந்துள்ளபோதிலும் அவர்களே அந்தக் குறைபாடுகள் சிலவற்றிற்கு ஆட்பட்டும் உள்ளனர்.மூலதனம் குறித்து மார்க்சியம் ஒரு ஆற்றல் வாய்ந்த விளக்கத்தை முன்வைத்துள்ளது என்பதை மறுக்க முடியாது என்ற போதிலும், பெண்கள் வாழ்க்கையின் பெரும்பாலான யதார்த்தங்களை இது புறக்கணித்துவிட்டது. மார்க்சியப் பெண்ணியர்கள், மார்க்சிய கருதுகோள்களுக்குள் கட்டுண்டு இருக்கும் வரை முதலாளியத்தோடு ஒரு தெளிவான உறவைக் கொண்டிருக்காத ஆணாதிக்கமுறைமையின் சில அம்சங்களை கடந்து வருவதற்கான செயல்திட்டங்களை வகுப்பதில் தவிர்க்க முடியாத சில இன்னல்களை எதிர்கொள்ள நேரிடும், ஆணாதிக்க முறைமை முதலாளியம் ஆகியவற்றின் தோற்றுவாயைக் கண்டறியவதற்கான ஆழமான முயற்சிகளுக்கு மார்க்சியத் தத்துவம் அவர்களை அனுமதிக்காது.

ஆகவே, இனி பெண்ணியர்கள் செய்ய வேண்டியது என்ன? "அமைப்புக்கு எதிரான, முதலாளியத்திற்கு எதிரான, ஏகாதிப்பத்தியத்திற்கு எதிரான, சோசலிச, கம்யூனிச, மார்க்சியப் பெண்கள்" என கார்ட்மன்னால்

வரையறுக்கப்பட்ட பெண்கள் இயக்கத்தின் தீவிரவாதப் பிரிவுகள் செயல்பட வேண்டிய சிலகளங்களை முதலாளியப் பெண்ணியர்கள் தங்கள் கைவசம் எடுத்துக் கொண்டனர். மக்கள்தொடர்புச்சாதனங்களில், பெரும்பாலான பெண்கள் ஆய்வுப் பாடங்களில், புத்தகங்களில், பல்வேறு பெண்கள் குழுக்களின் உறுப்பினர் சேர்ப்பில், அதன் இலட்சியங்களில், பெண்களுக்கென ஒரு கட்சி தேவை என்ற அறைகூவலில், மென்மையான தீங்கில்லாத, புரட்சிகரப்பார்வையற்ற ஒரு பெண்ணியம் உருப்பெற்று வருகிறது. இப்போக்கு தொடர்வதை நாம் அனுமதிக்க முடியாது.

பெண்ணியம் பற்றிய இம்மாதிரியான வக்கிரமான சித்திரங்கள் யதார்த்தமானவை எனப் பெண்கள் கருதினால், அதற்கு ஓரளவு நாமும் காரணமாக இருக்கிறோம். நாம் கடினமான அளவிற்கு உழைக்கவில்லை. மக்கள் வாழ்க்கையோடு தொடர்புள்ள வகையில் தெளிவான பொருளுள்ள மாற்று ஆய்வுகளை நாம் முன்வைக்க வேண்டும். செயல்திறன்மிக்க பணி செய்வதற்கு ஏதுவான குழுக்களைக் கட்டவேண்டும்.

நான் பல்கலைக் கழகத்தில் ஆசிரியராகப் பணியாற்றிய நாட்களில் எனது வகுப்பிற்கு வந்த மாணவிகள் முதலாளியப் பெண்ணியப் பார்வையில் இருந்து பெண்ணியம் பற்றி கூறப்பட்ட கருத்துகளையே பெண்ணியம் பற்றிய முழுக் கருத்துக்களாக கொண்டிருந்தனர். இதில் ஒரு சிலர் அக்கருத்துக்களை தமக்கானதாக கொண்டிருக்கலாம் அல்லது அவ்வாறு இல்லாமலும் இருக்கலாம். ஆனால், ஒருசிலரே தீவிரப்பெண்ணிய ஆய்வுகளுக்கு வந்து சேர்ந்தனர். பெரும்பாலான மாணவிகள் ஏன் இந்த முடிவுகளுக்கு வரவில்லை. காரணம், முதலாளியப் பெண்ணியத்தை நாம் அம்பலப் படுத்தவில்லை. ஆனால் தீவிரப் பெண்ணியம் அராஜக பெண்ணியம் குறித்த கொள்கைகளை சொல்லும் போது பெரும்பாலான மாணவிகள் அதைக் கேட்டு கிளர்ச்சியடைந்து பெரும் வரவேற்பும் காட்டினர். வர்க்கம், இனம், வயது, திருமணத் தகுதி ஆகிய எல்லைக் கோடுகளையும் மீறி இந்த வரவேற்பு அமைந்திருந்தது.

மாற்று வழிகள் குறித்து இனிபேசலாம். கார்ட்மன் எண்ணியுள்ளது போல முதலாளியப் பெண்ணியத்தின் சூழ்ச்சிவலை ஒருபுறம், கெடுவாய்ப்பாக பெண்ணியத்தின் மீது மார்க்சியத்தின் முற்றான ஆதிக்கம் மறுபுறம். இந்த இரண்டு போக்குகளோடு கூடுதலாக தீவிரப்பெண்ணியமும் நடப்பில் இருந்து வருகிறது. *"ஆப் அவர் பேக்ஸ்"* (OF OUR BACKS) *ஹியர்சீஸ்* (HERESIES) *கிரிசலிஸ்*(CHRYSALIS) போன்ற பெண்ணிய இதழ்கள்; பெண்கள் மையங்கள்;

சுய-உதவி மருத்துவ இல்லங்கள் விழிப்புணர்ச்சியூட்டும் குழுக்கள்; வன்புணர்ச்சி, மனைவிகளை உதைத்தல் போன்றவற்றிக்கெதிரான போராட்டங்கள்; நிறுவனங்களை, பணிகளை, அந்தரங்க உறவுகளை மறுசீரமைப்பது; பெண்கள் பண்பாடு என்ற ஒன்றை நிர்மானிக்க எடுக்கப்படும் ஒருசில முயற்சிகள் ஆகிய இவையெல்லாம் தீவிரப்பெண்ணியத்தின் செயல்பாடுகள் ஆகும்.

அராஜவாதப்பெண்ணியமோ சிறிய ஆனால் வளர்ந்துவரும் ஒரு இயக்கமாகும். தீவிரப் பெண்ணியம், சமூக அராஜகவாதக் கருத்துக்கள் ஆகிய இரண்டையும் நடைமுறையில் இணைப்பதற்கு இதற்கென மிக திட்டவட்டமானக் கருத்துக்கள் உண்டு. அரசாங்கத்தையும் மையப்படுத்தப்பட்ட படிநிலை அதிகாரம் கொண்ட வன்முறை நிறுவனங்களின் அனைத்து வடிவங்களையும் உடைத்தெறிவதற்கு அராஜகவாதப்பெண்ணியம் முக்கியத்துவம் தருகிறது. இப்பணியைச் செய்வதற்காக “தலைவர்கள் இல்லாத” என தவறாக அழைக்கப்படும் சிறிய குழுக்களை, புதிய நிறுவன வடிவங்களாகக் கட்டியெழுப்புகின்றனர். இக்குழுக்கள் வெற்றிகரமாக செயல்படவேண்டுமானால், இதன் அனைத்து உறுப்பினர்களிடம் உச்ச அளவு ஈடுபாடு உழைப்பு, அறிவு பூர்வமான பங்கெடுப்பு ஆகியன அவசியம். இத்தோடு பின்வரும் செயல்பாடுகளையும் முன்னெடுக்க வேண்டும். தத்துவம், நடைமுறை ஆகிய இரண்டிலும் அனைத்துக் கட்டங்களிலும் தனிப்பட்டதையும் அரசியலையும் இணைக்க வேண்டும்; ஒத்துழைப்பையும், பரஸ்பர உதவியையும் வளர்க்க வேண்டும்; பொருளாதாரம், அரசியல் அறிவு, திறமை ஆகிய அனைத்து முக்கிய வளங்களையும் தங்களுக்குள் சமமாகப் பங்கிட்டுக் கொள்ள வேண்டும். சமத்துவம், சுதந்திரம், தனி நபர் தன்னுரிமை ஆகிய மதிப்பீடுகளின் பேரில் குழந்தைகளையும், பெரியவர்களையும் மறு சமூகமயமாக்கம் செய்ய வேண்டும்; பால் அடிப்படையிலான சமூகவேறுபாடுகளை ஒழிக்க வேண்டும்; சொத்துறவுகளையும், அந்தக் கருத்தாக்கத்தையும் ஒழிக்க வேண்டும்; இலட்சியத்திற்கும் (அதனை அடையும்) வழிமுறைகளுக்கும் இடையே ஒரு இணக்கத்தைக் கடைபிடிக்க வேண்டும்: ஒரு அராஜகவாதப் பண்பாட்டை கட்டியெழுப்ப வேண்டும்.

இவ்விசயங்களில் பெரும்பாலானவை சோசலிசத்தோடு இணக்கம் கொண்டவை. ஆனால் அதிகாரம் குறித்த விசயத்திற்கு தரப்படும் அழுத்தத்தில் தான் முக்கிய வேறுபாடு காணப்படுகிறது. வர்க்க/பால் ஏற்றத்தாழ்வுகளுக்கும், ஏனைய அனைத்து ஏற்றத்தாழ்வான

வடிவங்களுக்கும், அதிகார உறவுகள் முக்கிய காரணமாக இருக்கிறது என்ற ஒரு நிலையில், மார்க்சிய ஆய்வினால் நம்மை அடுத்த கட்டத்திற்கு இட்டுச் செல்ல முடியாது. ஆகவே, மார்க்சியத்திற்கும், பெண்ணியத்திற்கும் இடையே திருமணம் நடந்த அக்கணமே மணவிலக்கிற்கான காரணங்களும் தொடங்கி விடுகின்றன. இவர்கள் இருவரும் நிச்சயம் நண்பர்களாக தொடர்ந்து இருக்கலாம் என ஒருவர் நம்பிக்கை வைக்க முடியும்.

# ஆணாதிக்க முறைமை, முதலாளியம் ஆகியவற்றின் உண்மையான பொருண்மை அடிப்படை என்ன?

**சேந்திரா உறார்டிங்**

*சேந்திரா உறார்டிங் அவர்கள் டெலவார் பல்கலைக் கழகத்தில் சமூக அறிவியலின் தத்துவம், பெண்ணியக் கோட்பாடுகள் போன்ற பாடங்களைப் போதித்து வருகிறார். இந்தத்தலைப்புகளில் பல கட்டுரைத் தொகுதிகளைத் தொகுப்பாளராக இருந்து வெளியிட்டிருக்கிறார்.*

*மார்க்சியத்திற்கும் பெண்ணியத்திற்கும் இடையிலான மகிழ்ச்சியற்ற திருமணம் நீடிக்குமா?*

மார்க்சியத்திற்கும், பெண்ணியத்திற்கும் இடையிலான "திருமணம்" என்பது உண்மையில் ஆங்கிலப்பொதுச் சட்டத்தில் விவரிக்கப்பட்டிருக்கும் கணவன், மனைவி திருமணம் போன்றதாகும். கார்ட்மன் தன் கட்டுரையில் குறிப்பிட்டது போல "மார்க்சியம், பெண்ணியம் இரண்டும் ஒன்றேதான். ஆனால் இந்த ஒன்று என்பது மார்க்சியமேயாகும்" "ஆனால் இந்த திருமணம் நீடித்து நிலைக்குமா?, இவ்விரண்டுக்குமிடையில் கோட்பாடு அல்லது அரசியல் நடைமுறைத்தளத்தில் இதைவிட மிகமுற்போக்கான ஒரு கூட்டிணைவு சாத்தியப்படுமா? பாலின அடிப்படையிலான வேலைப் பிரிவினையில் உருவான மனித வகையினத்தின் இயல்பு (NATURE OF THE SPECIES) குறித்து ஒரு வரலாற்றுப்பொருள் முதல்வாத பெண்ணியக் கோட்பாட்டை வளர்த்தெடுப்பதற்கான சில முயற்சிகள் அண்மைக் காலங்களில் தோன்றியிருக்கின்றன. இந்த முயற்சிகளின் ஊடாக உருவான வரலாற்றுப் பொருள்முதல்வாத, பெண்ணிய விளக்கச் சட்டகத்தின் பார்வைப்படி பார்த்தால் இந்தத் திருமணத்தில் பழையபங்காளி ஒருவர் மிக முற்போக்கான கூட்டிணைவிற்கு பொருத்தமற்றவர் என்கிற அவநம்பிக்கைத் தோன்றுகிறது. வழக்கம்போல, இங்கு சிக்கலுக்குக் காரணமாக இருப்பது கணவனே, (மார்க்சியம்). சிக்கல் எதிர்காலத்தில் ஒற்றுமையாக இருப்பது என்பதே, சில பெண்ணிய விளக்கங்களிலும், சமூக வாழ்க்கை குறித்த அதன் விவரிப்புகளிலும் காணப்படும் வரலாற்றுப்பார்வையற்ற, பொருள் முதல்வாதமல்லாத அம்சங்களை புதிதாகத் தோன்றியுள்ள விவரிப்புச் சட்டகத்தினால் சரி செய்யப்படமுடியும். ஆனால், மார்க்சியக்கருத்தியல் சட்டகத்தின் பெரும்பாலான அடிப்படைகள் உள்ளீடற்றவையாகவும், பால்வாதஅம்சங்கள் (SHALLOW AND SEXIST CHARACTER) கொண்டவையாகவும் இருக்கின்றன.

அதனால், மார்க்சியக் கோட்பாடோ அல்லது மார்க்சிய அரசியல் நடைமுறையோ மார்க்சியம் என்ற முறையில் பெண்ணியக் கோட்பாடுகளுடனும் நடைமுறைகளுடனும், ஒரு அய்க்கியத்தை தொடர்ந்து பேணுமா? என்ற ஒரு மெய்யான கேள்வி இங்கு எழுகிறது. நீண்டகாலமாகவே பெண்ணியர்கள் புரிந்து கொண்டிருப்பது போல, உண்மையான கூட்டிணைவு குறித்த கருத்து உருவாக்குவதற்கு முன்பாக "புதிய ஆண்களை" உருவாக்குவதே நமது தேவையாக இருக்கிறது.

கார்ட்மன் கட்டுரையானது மிகமுற்போக்கானக் கூட்டிணைவின் சாத்தியப்பாடு குறித்த மதிப்பீட்டின் எல்லைக்கே நம்மை அழைத்துச் செல்வதால் அது ஆர்வமூட்டுவதாக இருக்கிறது. இருப்பினும், பெண்ணியத்தையும், மார்க்சியத்தையும் இணைக்க முயற்சி செய்த பெரும்பாலானோரைப் போலவே, இவரும் மகிழ்ச்சியற்ற திருமணம் குறித்து தனது தெளிவான விமர்சனம் இயல்பாக முன்வைத்த கருது கோள்களிலிருந்து ஒரு தீர்வுக்கு வரத்தவறி விட்டார். "பெண்கள் பிரச்சனையானது" "பெண்ணியப்பிரச்சனைகளை" முன்னிறுத்தவில்லை என கார்ட்மன் பல்வேறு வழிகளில் முன்வைத்துள்ள ஆய்வானது உண்மையில் மதிப்பு வாய்ந்ததாகும். தற்போதைய முதலாளியமும், ஆணாதிக்கமுறைமையும் தங்களுக்குள் ஒரு கூட்டணி அமைத்திருப்பதையும், ஒன்றின் பொருண்மை அடித்தளத்திற்கு ஏற்ப மற்றொன்று தன்னை மிக எளிதாக தகவமைத்துக் கொள்ளும் விதத்தில் இரண்டுமே வாய்ப்பு வளங்களைப் பெற்றிருக்கின்றன என்பதையும் இவர் சுட்டிக் காட்டும் போது நம் சமூகவாழ்க்கை குறித்த வளமான புரிதலை நோக்கி நாம் நகரத் தொடங்குகிறோம். முதலாளியத்திற்கு ஆணாதிக்கமுறைமையும், ஆணாதிக்க முறைமைக்கு முதலாளியமும் ஒன்றுக்கொன்று வழிவகைகளை செய்து கொள்கின்றன.

முதலாளியம், ஆணாதிக்கமுறைமை ஆகியவற்றின் கூட்டணியை தோல்வியுறச் செய்ய வேண்டுமானால் மிக முற்போக்கான கூட்டிணைவில் பெண்ணியம் முக்கியப் பங்காளியாக சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்ற வாதத்திற்கு மேற்சொன்ன புரிதலுணர்வு நம்மை இட்டுச் செல்கிறது. முதலாளியத்திற்கு எதிரான போராட்டத்தில் அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களும் ஐக்கியப்படக்கூடிய ஒரு மிகப்புரட்சிகரமான நடைமுறையைக் கொண்டது மார்க்சியம் என மார்க்சியம் தனக்கொரு தலையாய உரிமை கோருவதை இது விமர்சிக்கிறது. ஆணாதிக்க ஒடுக்கமுறை அனைத்திற்கும் வர்க்க ஒடுக்குமுறை மட்டுமே காரணமாக இருந்தால் இந்த உரிமைக் கோரிக்கை உண்மையானதாக இருக்க முடியும். முதலாளியத்தை மட்டுமே

இலக்காகக் கொண்ட ஒரு போராட்டம் தோல்வியில்தான் முடியும். அதற்கு இரண்டுகாரணங்கள் இருக்கின்றன. ஒன்று, ஆணாதிக்கமுறைமைக்கென்று ஒரு சுயேச்சையான பால்வாத ஒடுக்குமுறை இருந்து வருகிறது. இரண்டு, ஆணாதிக்க ஒடுக்குமுறை உறவுகள், முதலாளியத்திற்கு ஒரு உள்ளார்ந்த ஆதரவைத் தந்து வருவதை இது கவனிக்கத் தவறி விடுகிறது. இருப்பினும், இந்த இடத்தில்தான், கார்ட்மன், 'இயல்பான' முடிவுகளுக்கு வரத்தவறிவிட்டார். இதன் விளைவாகத்தான் மார்க்சியத்திற்கும், பெண்ணியத்திற்கும் இடையே ஒரு கற்பனையான (UTOPIAN) கூட்டிணைவை நோக்கியதாக அவர் வாதம் இறுதியில் முடிந்துவிட்டது. ஏனெனில், ஆணாதிக்கமுறைமை முதலாளியம் ஆகியவற்றின் உண்மையான பொருண்மைஅடித்தளத்தை அவர் சுட்டிக்காட்டவில்லை. இவ்வாறாக, கார்டமன்னின் மதிப்பீடுகள் இறுதி முடிவாக சமூகஉறவுகளை புதிர் (MYSTIFY) போலச் செய்து விட்டன. அதனால், அம்முடிவுகள் ஆணாதிக்கமுறைமைக்கும், முதலாளியத்திற்கும் ஒரு தெளிவான நன்மைதரும் வழியை ஏற்படுத்தி விட்டன.

எனது கட்டுரையின் முதல் பகுதியில் கார்ட்மன்னின் "கற்பனைத் தீர்வு" (UTOPIAN SOLUTION) பற்றியும், 'உண்மையில் அவர் ஆய்வு நம்மை இட்டுச்சென்ற தீவிரத்தீர்வு பற்றியும் விரிவாக விளக்க இருக்கிறேன். மார்க்சியர்கள் இதுவரை கருத்தில் எடுத்துக் கொள்ளவே விரும்பாத, வேறுபட்ட கோட்பாடு மற்றும் செயல்உத்தி சார்ந்த கேள்விகளை எழுப்பும்படி தீவிரத்தீர்வு நம்மைக் கோருகின்றது. இரண்டாவது பகுதியில் நான் பின்வரும் வாதத்தை முன் வைத்துள்ளேன். மார்க்சிய வகையினங்களின் பால்குருட்டுத்தன்மையால் விளைந்த புறக்கணிப்புப் பாவச் செயலை மட்டுமே சரி செய்ய கார்ட்மன் முயன்றிருக்கிறார். ஆனால், உண்மையில் மார்க்சிய வகையினங்கள் குற்றம் இழைத்த பாவச் செயலையும் சேர்த்தே செய்திருக்கின்றன. மார்க்சிய வகையினங்கள் அடிப்படையிலேயே பால்வாதமும், பால்குருட்டுத்தனமும் ஒருங்கே கொண்டவை. இந்தக் குற்றச்சாட்டிற்கு ஆதரவாக மூன்றாவது பகுதியில் பின்வரும் கருத்துக்களை முன் வைத்துள்ளேன். முதலாளியம், ஆணாதிக்கமுறைமை ஆகியவற்றின் "பொருண்மைஅடித்தளம்" குறித்த கார்ட்மன்னின் மீள் ஆய்வானது மரபு வழி கருத்துக்களின் எல்லைகளை மட்டுமே விரிவாக்கியுள்ளது. ஆனால், அவ்வகையினத்திற்குள் தேவைப்படும் மாற்றங்களைச் செய்யவில்லை. "மார்க்சியக் கோட்பாட்டில் பொருளாதார உறவுகள் என்ற எல்லைக்குள் "பொருண்மைஅடித்தள" மானது கட்டுப்படுத்தப்பட்டுவிட்டது. மார்க்சியக்

கோட்பாடுகளையும், பெண்ணியக் கோட்பாடுகளையும், இணக்கப் படுத்தும் தன் முயற்சியில் கார்ட்மன், மரபுவழிக் கருத்துக்களை விரிவாக்கியுள்ளார். குடும்பத்தில் காணப்படும் பாலின அடிப்படையிலான வேலைப் பிரிவினையின் பொருளாதார அம்சங்கள் எவ்வாறு ஆணாதிக்க முறைமை, முதலாளியம் ஆகிய இரண்டையுமே நிலை நிறுத்துகின்றன என்பதைக் காட்டியுள்ளார். இவ்விசயத்தில் கார்ட்மன் மதிப்பீடு சரியே, என்று நான் கருதுகிறேன். ஆனால் "பொருண்மைஅடித்தளத்தை" வித்தியாசமான முறையிலும், குறுகல் அல்லாத மற்ற வழியிலும் நாம் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம் என்று நான் கருதுகிறேன்.

*நேன்சி சொடரோவ், ஜேனி பிளேக்ஸ்* ஆகியோரின் சமீபத்திய எழுத்துக்களிலிருந்தே, கருதுகோள்களுக்கு தேவைப்பட்ட மாற்றத்தைச் செய்துள்ளேன். முதலாளியம், ஆணாதிக்கமுறைமை ஆகியவற்றின் பொருண்மைஅடித்தளம் பற்றிய கருத்துகளில் செய்யப்பட்ட இந்த மாறுதல் பொதுவாக, ஆதிக்கஉறவுகளில் காணப்படும் உளவியல்நலன்கள் எந்தவிதமான வரலாற்று, பொருண்மைச் சூழலில் மறு உற்பத்தியாகின்றன என்ற விளக்கத்திலிருந்து தான் தோன்றுகிறது. மனித இனத்தின் உற்பத்தி மறுஉற்பத்தி பற்றி ஒரு வரலாற்றுப் பொருள் முதல்வாத நிர்ணயவாதமல்லாத (NON-DETERMINISTIC) விளக்கத்தை இது தருகிறது. அதாவது ஆண்கள், பெண்கள், முதலாளிகள், தொழிலாளிகள், எதிர்ப்பால்வாதிகள், தன்புணர்ச்சியாளர்கள், இனவெறியர்கள், அதற்குப் பலியானோர் என எதிரும் புதிருமான வரலாற்று மனிதர்களைப் பற்றிய விளக்கத்தைத் தருகிறது. நான்காவதும், இறுதியுமான பகுதியில் மகிழ்ச்சியற்ற திருமணத்திற்கு தீர்வாகச் சொல்லப்படும் தீவிரத்தீர்வின் சில நல்ல அம்சங்களை விளக்கிக் காட்டுகிறேன்.

முதலாவதாக, ஆணின் பண்புக்கூறுகளும், தொழில்முனைவோரின் பண்புக்கூறுகளும் ஆர்வத்தைத் தூண்டும் விதத்தில் தற்செயலாக இணைந்திருப்பதாகக் கருதப்படுகிறது. இதில் ஆர்வம் காட்டத் தேவையில்லை. இது தற்செயல் இணைவுமல்ல என தீவிரத் தீர்வு நமக்குக் காட்டுகிறது.

இரண்டாவதாக, உளவியல் அடிப்படை என்பது மார்க்சியச் சமூகக் கோட்பாட்டிற்கு ஒரு நீண்ட காலத்தேவையாய் இருந்து வந்தது. தீவிரத் தீர்வு அதற்கு வழி வகுக்கிறது. அதே சமயத்தில் இதனால் ஏற்படும் வரலாற்றுப்பார்வையற்ற, பொருள்முதல்வாதமல்லாத, நிர்ணயவாத

உளவியல் கோட்பாடுகளினால் எழும் சிக்கல்களையும் இது தவிர்த்து விடுகிறது. *பிராய்டின்* கோட்பாடுகளினால் இச்சிக்கல்களைத் தீர்க்க முடியாது.

மூன்றாவதாக, இது புதிய முக்கிய ஆய்வுக் கேள்விகளை முன் நிறுத்துகிறது. இறுதியாக, தீவிரத்தீர்வு புதிய வகையான அரசியல் நடைமுறைகளை தோற்றுவிப்பது, அதில் பங்கெடுப்பது ஆகியவற்றின் அவசியத்தை நோக்கி நம்மைத் தள்ளிச் செல்கிறது.

மார்க்சியத்திற்கும், பெண்ணியத்திற்கும் இடையேயான முற்போக்கான கோட்பாட்டு ஐக்கியம் எப்படிப்பட்டதாக இருக்கவேண்டும் என்கிற விசயத்திலும் யதார்த்த அரசியல் நடைமுறையில், இம்மாதிரியான கோட்பாட்டு வகையிலான "விடுதலைத் திருமணத்தில்" யார் மணமக்களாக இருக்க முடியும் என்ற விசயத்திலும் கார்ட்மன்னிடம் இரட்டை மனநிலை காணப்படுகிறது.

ஒரு புறம் ஆணாதிக்கமுறைமையும், முதலாளியமும், சமமாகவும், பரஸ்பரம் ஒன்றையொன்றும் பொருளாதார, கருத்தியல் அமைப்பில் பின்னிப் பிணைந்திருக்கின்றன. அதாவது கூட்டு வாழ்வில் ஒத்திசைந்து இருக்கின்றன என்பதை அவர் எடுத்துக்காட்டுகிறார். இந்த மதிப்பீட்டின் விளைவாக பெண்ணியமும், மார்க்சியமும் கோட்பாடுகள் என்ற முறையில் தங்களுக்குள் சமமாகவும் பரஸ்பரம் ஆதரவோடும் எதிர்ப்பு அணியில் இணைந்திருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வருகிறார். இந்தப் பார்வையின்படி உண்மையான, உயிரோட்டமான பெண்ணியர்கள், யார்? மார்க்சியவாதிகள் யார்? என்பது பொருத்தமற்ற கேள்வி ஆகிவிடும். இந்தப் பார்வையின்படி, இவர்கள் அனைவருமே ஆண்களாகத்தான் இருக்க முடியும் என ஊகிக்கலாம். (நிச்சயமாக கார்ட்மன் இக்கருத்தை ஆதரிக்கமாட்டார். ஆனால், இவரது கட்டுரையில் வெளிப்படும் முனைப்பான பார்வையின் அடிப்படையில் பார்த்தால், இம்மாதிரியான ஒரு நடைமுறையை மறுப்பதற்கான ஒரு கோட்பாட்டு அடிப்படை அதில் இல்லை.) மிக முற்போக்கான கட்டிணைவை இரு தரப்பிலுமுள்ள (ஆண்/பெண்) தனி நபர்களே நிர்மாணிக்க முடியும். புதிய கூட்டிணைவின் "வெற்றிடங்கள்" பால்வேறுபாடு கருதாமல் இருதரப்பைச் சேர்ந்த தனி நபர்களாலும் நிரப்பப்படலாம்.

மறுபுறம், சிலஇடங்களில் கார்ட்மன்னின் வாதமானது ஒரு வித்தியாசமான, அதிவியப்பைத் தரும் முடிவுகளுக்கு நம்மை இட்டுச்

செல்கிறது. பொருளாதார, கருத்தியல் நிறுவனங்கள் என்ற முறையில் ஆணாதிக்கமுறைமையும், முதலாளியமும் அவற்றின் அளவில் நோய் அல்ல: மாறாக, மிக ஆழமான, மிகப்பொதுவான, நோயின் அறிகுறிகளே அவை என அவரது வாதம் சுட்டிக்காட்டுகிறது. குழந்தைவளர்ப்பில் காணப்படும் பொருண்மைச் சூழ்நிலைகளே. பாலின அடிப்படையிலான ஆளுமை வேறுபாடுகளை உருவாக்குகின்றன என்பதே இந்நோயின் உள்ளார்ந்த அம்சமாகும்.

இப்பொருண்மைச்சூழல்கள் ஆதிக்கமிக்க சமூகஉறவுகளின் வகை மாதிரிகளை (PATTERNS) உருவாக்குகின்றன. வர்க்க ஒடுக்குமுறை, பால் ஒடுக்குமுறை, ஆகியவற்றைக் காட்டிலும் இந்த ஆதிக்கச் சமூக உறவுகள் மிகப்பரந்தளவினதாக இருக்கிறது. வளர்ந்தமனிதர்கள் (ADULTS) ஆணாதிக்கமுறைமையிலோ, அல்லது முதலாளியத்திலோ தங்கள் அதிகாரப்பதவிகளை கைவிட மறுக்கும் உளவியல் அடிப்படை ஆதாரங்களை இச்சூழல்கள் உருவாக்கின்றன. (இன உறவுகளில் அவர்களிடம் காணப்படும் ஆதிக்க நிலைகளையும் எதிர்-பால் வாதத்தின் தேர்ந்த தனித்தன்மை வாய்ந்த நிறுவனமயமாக்கலையும் இங்கு குறிப்பிட வேண்டியதில்லை), எது எப்படியிருந்தபோதிலும், மார்க்சியத்திற்கும் பெண்ணியத்திற்கும் இடையேயான மிக முற்போக்கான கூட்டிணைவு என்பது ஆணாதிக்க நிறுவனங்களுக்கு எதிரான கூட்டிணைவாகத்தான் இருக்க வேண்டும். வரலாற்று ரீதியாக, வெளிப்படையாக ஆனால் வழக்கமாக புறக்கணிக்கப்பட்டு வரும் இந்த எதார்த்தத்தின் மீது சில பொருத்தமான கோட்பாடு மற்றும் போராட்ட உத்தி சார்ந்த கேள்விகளுக்கு தீவிரத்தீர்வு நம்மை இட்டுச்செல்கிறது. முதல் கேள்வி சோசலிச நிறுவனங்கள் உள்ளிட்டு சமூகத்தில் உள்ள அனைத்து நிறுவனங்களும் ஆண்கள் கட்டுப்பாட்டிலேயே இருந்து வருவது ஏன்? இரண்டாவது, முதல் கேள்விக்கான ஒரு பொருத்தமான பதில் ஆண்களிடமிருந்து கிடைக்கும் என்று ஒரு மார்க்சியவாதி எதிர்பார்க்க முடியுமா?

மூன்றாவது, சமூகவாழ்வில் தாங்கள் செலுத்திவரும் ஆதிக்கத்தை, ஆண்கள் தாங்களாகவே கைவிட்டுவிடும்படி அவர்களிடம் ஒரு மனமாற்றத்தை ஏற்படுத்திவிடுவது சாத்தியம் எனஒரு மார்க்சியவாதியால் கருதமுடியுமா?

நான்காவது, வரலாற்றின் இந்தக்கட்டத்தில் ஆண்களின் புரட்சிகரப் பாத்திரம் என்னவாக இருக்க முடியும்? நிறுவன மயமாக்கப்பட்ட வாழ்வை

ஆண்கள் கட்டுப்படுத்தி வருவது குறித்த முதல் பிரச்சனையை எடுத்துக் கொள்வோம். இதற்குப் பதில் காண வேண்டுமானால், மார்க்சியப் பெண்ணியக் கோட்பாடுகளுக்கிடையிலான மகிழ்ச்சியற்ற திருமணம் குறித்தச் சிக்கலுக்குத் தீர்வு கண்டாக வேண்டும். ஆணாதிக்கத்திற்கான காரணங்களை முழுமையாக விளக்கும் ஒருவழியை மார்க்சியக் கோட்பாடு தரவில்லை. இச்சிக்கலுக்கு ஒருதீவிரமான தீர்வின் அவசியத்தை கார்ட்மன்னின் மதிப்பீடு நமக்கு வலியுறுத்துகிறது. சமூகவாழ்க்கையில் காணப்படும் ஒழுங்குமுறைகளுக்கான (REGULARITIES) வரலாற்றுப் பொருண்மைக் காரணிகளைப்பற்றி ஒரு பொருத்தமான விவரிப்பையோ அல்லது அவற்றின் அடிப்படை முக்கியத்துவத்தைப் பற்றிய ஒரு விளக்கத்தையோ மார்க்சிய வகையினங்களால் தர முடியாது. அதாவது வர்க்க ஒடுக்குமுறை அல்லது பாலின ஒடுக்குமுறை குறித்த ஒரு பொருத்தமான மதிப்பீட்டை மார்க்சியத்திட்டம் அனுமதிக்காது. ஆகவே இப்பணியைச் செய்வதற்காக ஒரு பொருத்தமான ஆய்வுவகையினங்களை நிர்மானிக்க வேண்டியது அவசியம் என கார்ட்மன் வாதிடுகிறார். இந்தப்புதிய வகையினங்கள், இந்தப் புதிய விளக்கத்திட்டம் ஆணாதிக்க முறைமைக்கும், முதலாளியத்திற்கும் இடையில் நிலவும் ஒத்திசைவான கூட்டு வாழ்க்கை உறவுகளைப் பற்றி ஒரு புரிதலைத்தர நமக்கு உதவும். அத்துடன், ஆதிக்கம் செலுத்தும் சமூகஉறவுகளின் வரலாற்றுப் பொருண்மை வகைமாதிரிகளில் (PATTERNS) இந்த ஒத்திசைவான கூட்டு வாழ்வின் வேர்கள் இருப்பதை நமக்குக் காட்டும்.

ஆகவே இத்தீவிரவாத அணுகுமுறையில் அங்கீகரிக்கப்பட்ட மார்க்சியத்தையோ அல்லது வரலாற்றுஉணர்வற்ற அல்லது பொருள் முதல்வாதப்பார்வையற்ற பெண்ணியத்தையோ தனிப்பட்ட முறையில் காண முடியாது. ஆனால், ஆணாதிக்கமுறைமை, முதலாளியம் ஆகியவற்றில் ஆண்களின் ஆதிக்கம் இருந்து வருவது ஏன்? இவற்றின் நீடிப்பில் ஆண்களுக்கு கிடைக்கும் பொருளாயத நலன்கள் என்ன? என்ற கேள்விகளுக்கு விளக்கமாக பதில் கிடைக்கும். புதிய விளக்கத்திட்டம், இம்மாதிரியான ஒரு விளக்கத்திற்கு இடம் அளிக்க வேண்டும். இவ்வாறாக, இம்மாதிரியான ஒரு தீவிரத்தீர்வினைக் கொண்ட ஒரு பெண்ணியப் பார்வையானது, ஒரு மேலதிகமானப் பொதுக்கோட்பாட்டை உருவாக்கு வதற்கான ஆற்றலைப் பெற்றிருக்கும். இப்பெண்ணியப் பார்வையானது. பழம் மார்க்சியக் கோட்பாடுகள், கற்பனைப் பெண்ணியம் ஆகியவற்றின் சாரங்களைத் தன்னுள் கொண்டதாக, ஆனால் இவ்விரண்டைக் காட்டிலும் அதிகளவு விளக்கஆற்றல் பெற்றதாக இருக்கும்.

இரண்டாவது கேள்வியைப் பார்ப்போம். இப்புதிய, புரட்சிகரக் கோட்பாட்டின் ஆசிரியர் யார்? ஆணாதிக்க உறவுகளில் காணப்படும் பால், வர்க்க ஒடுக்கு முறைகளில் தங்களுக்கு இருக்கும் பங்கை ஆண்கள் (மார்க்சியர்கள் உள்ளிட்டு) ஒத்துக் கொள்ள மறுப்பதற்கு பல்வேறு நலன்கள் ஓரளவிற்கு காரணமாக இருக்கின்றன என்பது ஒரு பொதுவிதி என்பதை கார்ட்மன் எடுத்துக் காட்டுகிறார்.

"ஒரு பொதுவிதியாக முதலாளியம், ஆணாதிக்கமுறைமை ஆகியவற்றில் ஆண்கள் கொண்டுள்ள நிலையானது, வளர்ச்சி, பகிர்ந்து கொள்ளல், போஷிப்பு போன்ற மனிதத் தேவைகளையும், அதிகாரப் படிநிலையற்ற, ஆணாதிக்கமுறைமையற்ற சமூகத்தில் இந்த மனிதத் தேவைகளை எய்தலாம் என்ற உணர்வையும் தடுக்கிறது. அப்படி அவர்களின் விழிப்புணர்வை நாம் தட்டியெழுப்பினாலும் கூட, ஆண்கள், தமக்குக் கிடைக்கக்கூடியவற்றையும், தாம் இழக்க வேண்டியதையும் எடை போட்டுப்பார்த்து தற்போதைய நடப்பு நிலையை தேர்ந்தெடுக்கவும் கூடும். ஏனெனில், அவர்களிடம் இழப்பதற்கு தமது கைவிலங்குகளையும், விட அதிகமுண்டு" (கார்ட்மன்).

"நமது திட்டத்தில் இருந்தும் நமது வரலாற்றில் இருந்தும், ஆண் சோசலிசவாதிகளிடம் இருந்தும் நாம் போராடிக் கொண்டிருக்கும் சோசலிசமானது ஆண்களுக்கும், பெண்களுக்கும் ஒரே அர்த்தம் உடையதுதானா என்பது தெளிவாக இல்லை. ஒரு மனிதாய சோசலிசத்திற்கு புதிய சமூகம் எப்படியிருக்கவேண்டும் என்பதிலும் ஒரு ஆரோக்கியமான நபர் எப்படியிருப்பார் என்பதிலும் கருத்தொருமைப்பாடு இருப்பதும் அவசியமானதே. ஆனால் இன்னும் குறிப்பாகச் சொல்வதானால், இது ஆண்கள் தமது தனிச்சலுகைகளைக் கைவிடுவதையும் அவசியமாக்குகின்றது" (கார்ட்மன்).

கைவிலங்குகளைத் தவிர இழப்பதற்கு அதிகமுள்ள ஆண்கள் பெண்விடுதலைக்கு அவசியமான ஒரு கோட்பாட்டை உருவாக்குவார்கள் என நாம் எதிர்பார்க்கமுடியாது.

மூன்றாவது கேள்வியைப் பார்ப்போம். ஆணாதிக்கச் சிறப்புரிமைகளை கைவிட முடிவு செய்துவிட்டோம் என்ற வெற்று அறிக்கை மூலம் ஆண்கள் "தங்கள் சிறப்புச் சலுகைகளை, கைவிட்டுவிடமுடியாது". மாறாக, ஆணாதிக்கஉறவுகளற்ற நிறுவனங்களையும், அன்றாட அனுபவத்தின் அடிப்படையில், அவசியமான ஒரு பெண்ணியப் பார்வையை

வளர்த்தெடுக்கும் திறன்வாய்ந்த ஆண்களையும் உருவாக்கும் புதியவகை அரசியல் நடைமுறைகளே ஆண்களுக்குத் தேவைப்படுகிறது. ஆணாதிக்கச் சிறப்புச்சலுகைகள் என்பது தனித்தனி ஆண்கள் தங்கள் விருப்பத்திற்குத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் ஒரு விசயமல்ல. ஆணாதிக்கமற்ற நிறுவனங்கள் இல்லாமல், ஆண்கள் உண்மையில் தங்கள் ஆணாதிக்கச் சிறப்புச் சலுகைகளைக் கைவிடமுடியாது. ஆணாதிக்க முறைமை, முதலாளியம், இனவாதம் தேர்ந்தெடுக்கப்பட்ட எதிர்பால் மணமுறை ஆகிய நிறுவனங்கள் மூலமாக அனைத்து ஆண்களுக்கும், இந்தச் சிறப்புச் சலுகைகள் கையளிக்கப் படுகின்றன. இந்த ஆணாதிக்க நடைமுறைகள் நமது சமூகக் கட்டுமானத்தில் மிக ஆழமாக இழையோடியிருப்பதை நாம் கண்டு கொள்ளலாம். இன்னும் இவற்றை நாம் முழுமையாக உள்வாங்கிக் கொள்ளவில்லை.

இவ்வாறாக, ஆணாதிக்கமுறைமை, முதலாளியம் ஆகியவற்றை முறியடிக்கக்கூடிய ஒரு கோட்பாட்டை தற்போதைய ஆண்கள் உருவாக்குவார்கள் என எதிர்ப்பார்க்கமுடியாது என்ற முடிவுக்கு கார்ட்மன் விவாதங்கள் நம்மை இட்டுச் செல்கின்றன. பெண்ணிய நோக்கங்கள் எங்களுக்கும் உண்டு என்ற வெற்று அறிக்கைகளோ, அல்லது தாங்கள் பெண்கள் பக்கம் நிற்கிறோம் என நம்ப வைக்கும் முயற்சிகளோ ஆண்கள் குறித்த மேற்சொன்ன மதிப்பீட்டை மாற்றிவிடாது. பாலின அடிப்படையில் அமைந்த சலுகைகளைத் தனி நபர்கள் கைவிடுவதைக்காட்டிலும், வர்க்கச் சலுகைகளை தனிநபர்கள் கைவிடுவது மிகச்சுலபமானது. ஆகவே, இங்கு மார்க்சியக் கோட்பாட்டோடானதொரு ஒப்பீடு பயனற்றதாகவே இருக்கும். (திருமணமுறை மூலமாக, பெண்கள் வரலாற்றில் தங்கள் வர்க்க நிலையை மாற்றிக்கொள்கிறார்கள். தனிநபர்கள் வர்க்கச் சலுகைகளை கைவிட முடியும் என்பதற்கு இந்த ஒரு உதாரணம் போதும்) ஆண் இனம் முழுக்கவும் பால்சலுகைகளை கைவிட்டால்தான் ஒரு தனி ஆண் அச்சலுகைகளை மறுத்தொதுக்க முடியும். இம்மாதிரியான ஒரு சூழலில் நாம் ஆணாதிக்க அல்லது வர்க்கச் சமூகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கமாட்டோம். அத்துடன், பெண்ணியமானது இறுதியாக (அத்தகைய சூழலில் மட்டுமே) மனிதாபிமானத்தோடு உண்மையில் தன்னை அடையாளம் காணஇயலும்.

புதிதாக எழுச்சிபெற்று வரும், வரலாற்றுரீதியானதும், பொருள் முதல்வாத அடிப்படை கொண்டதுமான ஒரு சுயேச்சையான பெண்ணியத்தைத் தங்களது படைக்கலனாக் கொண்ட பெண்களே, வரலாற்றில் இன்று புரட்சிகர இடத்தில் நின்று கொண்டிருக்கிறார்கள் என்ற முடிவுக்கே கார்ட்மன் விவாதங்கள் நம்மை அழைத்துச் செல்கின்றன.

இப்பொழுது நாம் நான்காவது கேள்விக்கு வருவோம். இது மார்க்சியப்பெண்ணியர்கள் மிகக் கவனமாக தவிர்த்து வரும் வேதனைமிக்க கேள்வியாகும். மரபுரீதியாக மார்க்சிய விவாதங்களில் பாட்டாளிகளுக்கும், முதலாளிகளுக்கும் இடையில் "மிக முற்போக்கான கூட்டிணைவு" ஏற்படுத்துவது குறித்து ஒரு கடும்முயற்சியை நாம் பார்க்கமுடியாது. முதலாளிகளின் புரட்சிகரப் பாத்திரம் குறித்த கேள்விகளுக்கு அதிகச் சக்தியைச் செலவழிப்பதற்கு எந்தக் காரணமுமில்லை என்ற சிந்தனையே இருந்து வந்தது. ஆனால் முதலாளிகளுக்கு ஆதரவாக எந்தக்கரிசனமும் காட்டப்படவில்லை. முதலாளிகளுக்கு மறுகல்வி தரும் பயனுள்ள திட்டங்கள் ஏதும் கட்சித்திட்டத்தில் இல்லை. ஆகவே இந்த முயற்சியில் பாட்டாளிகள் தங்கள் சக்தியை அர்ப்பணிக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால், பெண்விடுதலையில் ஆண்களின் புரட்சிகரப்பாத்திரம் எப்படிப் பட்டதாக இருக்க வேண்டும் என்பதைப் பெண்ணியர்கள் வரையறுக்க வேண்டியதாக இருக்கிறது.

குறைந்தபட்சம் தங்களோடு அரசியல் பணியாற்றும் ஆண்களையும், தங்களுடன் குடும்பஉறவுகளையும், அந்தரங்கஉறவுகளையும் கொண்டிருக்கும் ஆண்களையும் குறித்தாவது பெண்ணியர்கள் இப்படிச் செய்ய வேண்டியதாக இருக்கிறது. (இந்த பார்வையிலிருந்து, பெண்ணியர்களின் (ஆண்கள் துணையில்லாமல் -மொார்) தனித்து இயங்குவது என்ற நிலைபாடானது குறுகிய காலத்திற்கு இது அவசியமானது என்ற போதிலும் - அரசியல் உத்திசார்ந்தது என்பது புரிந்து விடும்) "ஆண் குறித்த பிரச்சனைக்கு" தீர்வு என்ன? வரலாற்றுப் பொருள் முதல்வாத, பெண்ணிய ஆய்வு முறைக்கு இடதுசாரி ஆண்கள் காட்டிய எதிர்ப்பிலிருந்து பின்வரும் விசயம் தெளிவாகிறது. இந்தப் பிரச்சனைக்கு கோட்பாட்டு தளத்திலோ அல்லது நடைமுறைத் தளத்திலோ தீர்வு காண ஆண்கள், பெண்கள் ஆகியோர் இணைந்த கூட்டு முயற்சி தோல்வியைத் தான் தழுவியிருக்கிறது. கடைசிப்பகுதியில் ஆண் குறித்த பிரச்சனையைத் தீர்ப்பதற்கு அவசியமான சில முன் தேவைகள் குறித்து நான் சொல்லவிருக்கிறேன்.

### *மார்க்சிய வகையினங்களின் ஆய்வு - "பால் குருட்டுத்தனத்தை" மட்டும்தான் கொண்டிருக்கிறதா?*

மார்க்சியச் சட்டகத்தின் பால் குருட்டுத்தனத்தை மட்டுமே கார்ட்மன் தன் ஆய்வில் சரி செய்திருப்பதால், அவர் ஒரு தீவிரத்தீர்வை வழங்குவதிலிருந்து விலகிச் சென்றுவிட்டார். குடும்ப அமைப்பிற்குள் இடம்

பெற்றுள்ள வேலைப்பிரிவினையின் இயல்பையும், அதன் விளைவுகளையும் முழுமையான அளவிற்கு ஆய்வு செய்வதில் மார்க்சியர்கள் தொடர்ந்து தவறி வந்திருக்கிறார்கள்; ஆகவே, பெண்கள் பிரச்சனையானது பெண்ணியப் பிரச்சனையாக என்றும் இருந்தது இல்லை என்று அவர் வாதிடுகின்றார். இந்த குடும்பஉழைப்பு குறித்து கார்ட்மன் ஒரு முக்கிய கேள்வியையும் எழுப்பியுள்ளார். குடும்பஅமைப்பிற்குள் இடம் பெறுகின்ற பெண்களின் உழைப்பில் ஆதாயம் பெறும் நபர் யார்? முதலாளிகள் மட்டுமல்ல. மாறாக, ஆண்கள், ஆண்கள் என்ற முறையில் பல்வேறு வழிகளில் இவ்வுழைப்பால் ஆதாயம் பெறுகிறார்கள் என்பதையும் அவர் சுட்டிக் காட்டுகிறார். முதலாளியத்திலும் சரி, ஆணாதிக்கமுறைமையிலும் சரி, அனைத்து ஆண்களும் (இதில் முதலாளிகளும் உள்ளடங்குவர்) ஆண்கள் என்ற முறையில், தாங்கள் பெற்றிருக்கும் தகுதியை முன் வைத்து குடும்ப அமைப்பிற்குள் இடம் பெற்று வரும் பெண்கள் உழைப்பின் மீது கட்டுப்பாடு செலுத்தி வருகின்றனர். இது ஒரு வியப்பான விசயமல்ல என அவர் வாதிடுகிறார். வெளிப்படையாகவே வரலாறு பால்குருட்டுத்தனம் கொண்டதாக இல்லாத போது அதற்கு நேர்மாறாக மார்க்சிய வகையினங்களின் ஆய்வு பால்குருட்டுத்தனம் கொண்டவையாக இருப்பதை நாம் கண்டாலே போதும், இப்பிரச்சினையின் ஆற்றலை (DYNAMIC) மார்க்சியம் புரிந்து கொள்ளத்தவறியது மிகத் தெளிவாகத் தெரியும் என்றும் இவர் வாதிடுகிறார். இச்சிக்கலின் தீர்விற்கு வரலாறு குறித்தும், பொருத்தமான அரசியல் போராட்ட உத்திகள் குறித்தும் நமக்கு கிடைக்கும் முழுமையான புரிதலே அவசியமாக இருக்கிறது.

"மார்க்சிய ஆய்வு முறையின் வகையினங்களான வர்க்கம், வேலையற்றோர் பட்டாளம், கூலி உழைப்பாளி ஆகியவை ஏன் இக்குறிப்பிட்ட இடங்களை, குறிப்பிட்ட நபர்கள் நிரப்புகின்றார்கள் என்பது குறித்து விளக்கவில்லை. குடும்பத்திற்கு உள்ளும் வெளியிலும் ஆண்களைவிட பெண்கள் ஏன் குறைந்த தகுதி வகிக்கின்றார்கள் என்பது குறித்தும் எத்தகைய கருத்தும் கூறவில்லை. மூலதனம் போலவே, மார்க்சிய வகையினங்களும் பால் குருட்டுத்தனம் வாய்ந்தவையாக உள்ளன. மார்க்சிய வகையினங்களால் இந்த வெற்றிடங்களை யார் நிரப்புவார்கள்? என்று கூற முடியவில்லை. பெண்கள் பிரச்சினை பற்றிய மார்க்சிய ஆய்வு முறை இத்தகைய அடிப்படைப் பிரச்சினையால் குறைபாடுற்றுள்ளது" (கார்ட்மன்).

குடும்பஅமைப்பிற்குள் நடைபெற்று வரும் வேலைப்பிரிவினையின் இயல்பையும் அதன் விளைவுகளையும், குறித்த கார்ட்மன் எழுப்பிய முக்கியக்

கேள்வியானது மரபுவழி மார்க்சியத்தின் பொருண்மைஅடித்தளம் என்ற கருத்தின் விரிவாக்கத்திற்கு அவரை இட்டுச் சென்றிருக்கிறது. ஆண்கள் பொருளியல் / கருத்தியல் வழிகளில் குடும்பஅமைப்பிற்குள் இடம் பெற்று வரும் பெண்கள் உழைப்பைக் கட்டுப்படுத்துவது என்ற அம்சத்தை அந்த விரிவாக்கம் உள்ளடக்கி வைத்திருக்கிறது. இவ்விடத்தில், அவர் தன் உரைகல்லாக எங்கெல்சின் புகழ் வாய்ந்த மேற்கோளை எடுத்தாள்கிறார். மார்க்சியத்தோடு "மிக முற்போக்கான கூட்டிணைவை" ஏற்படுத்த பெண்ணியர்கள் மீண்டும் மீண்டும் நாடுவது இந்த மேற்கோளைத் தான்.

"பொருள்முதல்வாதக் கருத்துப்படி இறுதி ஆய்வில் வரலாற்றைத் தீர்மானிக்கும் காரணி உடனடி வாழ்க்கையின் உற்பத்தியும், மறு உற்பத்தியுமாகும். இது ஒரு புறம் வாழ்க்கைக்கு ஆதாரமான உணவு, உடை, இருப்பிடம் உற்பத்திக்குத் தேவையான கருவிகள் ஆகியவற்றையும், மறுபுறம், மனிதர்களை உற்பத்தி செய்வதன் மூலம் மனித குலத்தை இனப் பெருக்கம் செய்வதும் ஆகும். ஒரு குறிப்பிட்ட வரலாற்றுக் கட்டத்தை சேர்ந்த ஒரு குறிப்பிட்ட நாட்டைச் சேர்ந்த மக்களது சமூகஒழுங்கு அமைப்பு இவ்விரு வகை உற்பத்திகளாலும் தீர்மானிக்கப்படுகிறது. உழைப்பின் வளர்ச்சிக் கட்டம் ஒரு புறமும் குடும்பத்தின் வளர்ச்சி மறுபுறமும் இவற்றை தீர்மானிக்கின்றன."

மார்க்சிய விளக்கத் திட்டத்தில் (SCHEME) திருத்தம் செய்வதற்கு மார்க்சியப் பெண்ணியர்கள் தொடர்ந்து முயற்சிப்பதற்கு காரணமாகவிருப்பது இந்த மேற்கோள் தான். ஆனால் அம்முயற்சிகளும் இறுதியில் முழுமையற்றதாகவே இருக்கிறது. "வாழ்க்கைத் தேவைகளான உணவு, உடை, இருப்பிடம் ஆகியவற்றின் உற்பத்தியையும், இந்த உற்பத்திக்குத் தேவையான கருவிகள்" - ஆகியவற்றையும் உள்ளடக்கிய சமூக உறவுகள் ஒருபுறம். இந்த ஆய்விற்கு மார்க்சியக் கோட்பாட்டால் உருவாக்கப்பட்ட வர்க்கம், வேலையற்றோர் பட்டாளம், கூலி உழைப்பாளி போன்ற பொருளாதார வகையினங்கள் தேவை என அண்மைக்காலம் வரைகருதப்பட்டு வருகிறது. (ஆண்கள் ஆதிக்கம் செலுத்தி வரும் சமூக வாழ்க்கையின் அம்சங்களை புரிந்து கொள்வதற்கும் விளக்குவதற்குமே இந்த வகையினங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வகையினங்கள் மூலம் இவர்கள் கலாச்சாரம் என வரையறுப்பது மனிதனுக்கும், இயற்கைக்குமான தனிப்பட்ட பரஸ்பர உறவையே என்பதை இங்கு கவனிக்க வேண்டும்). மறுபுறம் மனிதர்கள் தங்களையே உற்பத்தி செய்து கொள்ளும் அதாவது மனித குலத்தை இனப்பெருக்கம் செய்யும் சமூகஉறவுகளைப்

புரிந்துகொள்வதற்கு பொருத்தமான ஆய்வுவகையினங்கள் என்ன? எங்கெல்ஸ், மனித இனப்பெருக்கம் தொடர்புடைய சமூகஉறவுகளுக்கான சுயேச்சையான காரணிகளை ஆய்வு செய்யக் குறிப்பாக அறைகூவல் இட்ட போதிலும், அவரே கூட இந்த உறவுகள் பெருமளவிற்கு, உற்பத்தி உழைப்பு, வாழ்க்கைக்கு ஆதாரமானவற்றின் மறுஉற்பத்தி ஆகியவற்றின் மீதான கட்டுப்பாட்டின் விளைவுகளே என விளக்கமளித்துள்ளார். கார்ட்மன் நிருபித்துள்ளது போல, பெண்களின் சிக்கலைத் தீர்ப்பதற்கு எடுத்துக் கொண்ட தொடர்முயற்சிகள் இதே வழியைத்தான் பின்பற்றின. மார்க்சியக் கோட்பாட்டில், மார்க்சிய விளக்கத்திட்டத்தில் இவ்வுறவுகளுக்கான காரணங்களை முழுமையாகப் புரிந்து கொள்வதற்கான ஆய்வு வகையினங்கள் இல்லை என கார்ட்மன் எடுத்துக் காட்டியிருக்கிறார் இருப்பினும் கூட, அவர் பொருண்மை அடித்தளம் குறித்த மரபுவழிப்பட்டப் பொருளாதாரக் கருத்தாக்கத்தை மீளாய்வு செய்யாமல் அதை விரிவாக்கம் மட்டுமே செய்திருக்கிறார். குடும்பஅமைப்பிற்குள் உள்ள பொருளாதார உறவுகளையும், குடும்பஅமைப்பிற்கும், தொழிலிடங்களுக்கும் இடைப்பட்ட பொருளாதார உறவுகளையும் உள்ளடக்கும் விதத்தில் அதை விரிவாக்கம் செய்திருக்கிறார். குடும்பஅமைப்பிற்குள் இடம் பெற்றுள்ள பொருளாதார ரீதியான வேலைப்பிரிவினையானது தொழிலிடங்களின் சமூக உறவுகளில் ஏற்படுத்தும் பாதிப்புகளைப்பற்றி ஒரு மேம்போக்கான ஆய்வை கார்ட்மன் முன் வைத்துள்ளார்.

ஆனால் குடும்பவாழ்க்கையானது வெறும் பொருளாதார உறவுகளைக் காட்டிலும், மிக அதிகமாகவே பொருண்மைஅடித்தளம் கொண்ட சமூகஉறவுகளால் கட்டப்பட்டிருக்கிறது. பொருண்மைக்காரணிகளை பொருளாதாரக் காரணிகளாகக் குறுக்கினால், அது அநியாயமாகக் குறுகல் வாதமாக இறுகிப் போவதில் முடிந்து விடும். இது குறித்த விளக்கத்தை இக்கட்டுரையின் அடுத்தப் பகுதியில் காணலாம். முதலாளியச் சமூகத்தில், பாலினம் என்ற முறையில் பெண்களை கருத்தளவில் நிரந்தரமாகவும், யதார்த்தத்தில் பெரும்பாலான சமயங்களிலும் கட்டுப்படுத்தி வைத்திருக்கும் சமூகஉறவுகளின் தளத்தை விவரிக்கவும் விளக்கவும் நம்மை அனுமதிக்கும் ஆய்வினங்கள், கார்ட்மன் ஆய்விற்குப் பின்னரும் கூட, நமக்கு இன்னமும் கிட்டவில்லை. குழந்தைகள், சிறுவர்கள், பங்கு கொள்ளும் பெரும்பாலான சமூகஉறவுகளை, பொருளாதாரஉறவுகள் என்ற அளவுகோலால் விளக்கவே முடியாது என்பது இங்கு மிக முக்கியமான ஒன்று. உயிரியல் விலங்குகள், சமூக மனிதர்களாக மாற்றியமைக்கப்படுவது அதாவது, மனித குலம்

உற்பத்தியாவதும், மறு உற்பத்தியாவதும் வெறும் பொருளாதார உறவுகளால் அல்ல. அதைக்காட்டிலும் பொருண்மை அடித்தளம் கொண்ட சமூகஉறவுகளால் தான் இவை நடைபெறுகின்றன.

பொருண்மைஅடித்தளம் கொண்ட சமூகஉறவுகளானது குடும்பத் திற்குள் பல்வேறு வகையான மாறுபட்ட நபர்களை உற்பத்தி செய்கிறது. கார்ட்மன்னின் மார்க்சிய விளக்கத்திட்ட மீளாய்வு இந்த சமூக உறவுகள் முழுதையும் கணக்கில் எடுக்கத் தவறிவிட்டிருக்கிறது. குடும்ப அமைப்பிற்குள் இடம் பெற்றிருக்கும் வேலைப்பிரிவினையின் பொருளாதார அம்சங்களையும், குடும்பஅமைப்பு மூலனத்தோடு கொண்டுள்ள தற்செயல் உறவையும் மட்டுமே குறிப்பிட்டுக் காட்டியதன் மூலம் ஏற்பட்ட தோல்வியினால் மார்க்சிய விளக்கத்திட்டமானது பால்குருட்டுத்தன்மை கொண்டது என்பது உண்மையாகிவிட்டது. ஆனால், வர்க்கம், பொருண்மை அடித்தளம் (பொருளாதாரஅடித்தளத்தை புரிந்து கொண்ட மரபு வழியிலேயே பொருண்மைஅடித்தளத்தையும் மார்க்சியம் புரிந்து கொண்டது) போன்ற பொருளாதார வகையினங்கள் விசயத்தில் இது பால்வாதத்தன்மை கொண்டதாக இருக்கிறது. காரணம், குடும்ப வாழ்க்கை குறித்த சமூக உறவுகளின் முக்கிய அம்சங்களை புரிந்து கொள்ளக்கூட இவை பொருத்தமான வகையினங்களாக இல்லை. கார்ட்மன் வாதிடுவது போல குடும்ப வாழ்க்கையின் சமூகஉறவுகள் ஆணாதிக்கமுறைமையை மட்டுமல்ல, முதலாளியத்தையும் சேர்த்தே நிலை நிறுத்தியது என்பதால் இந்தப் பொருளில், மார்க்சிய வகையினங்கள் பால்வாதத்தன்மை மட்டுமல்ல வர்க்கவாதத்தன்மையும் கொண்டிருக்கின்றன என்றே ஒரு தீரமிக்க (அல்லது மதிகெட்ட) எழுத்தாளன் குறிப்பிடுவான். வர்க்க ஒடுக்கமுறை குறித்த பொருண்மை அடித்தளத்தின் ஒரு பகுதியை மட்டுமே (எனது வழியில் நான் புரிந்தபடி) விளக்கும் வகையில்தான் மார்க்சிய வகையினங்கள் ஆக்கப்பட்டிருக்கின்றன.

### ஆணாதிக்க முறைமை, முதலாளியம் ஆகியவற்றின் பொருண்மை அடித்தளம் என்ன?

ஆணாதிக்கமுறைமை, முதலாளியம் ஆகியவற்றின் பொருண்மை அடித்தளம் குறித்த மாற்றுக் கருத்தை முதலில் விளங்கிக் கொள்வோம். அப்பொழுது தான் மார்க்சிய வகையினங்களுக்குத் தேவைப்பட்ட திருத்தம் குறித்த தவறான புரிதலின் எல்லை கார்ட்மன்னின் மதிப்பீட்டை எவ்வளவு பாதித்துள்ளது என்பதை கண்டு கொள்ள முடியும்.

கூலி உழைப்பின் பொருளாதார உறவுகள் மட்டும்தான் ஆணாதிக்க முறைமைக்கும், முதலாளியத்திற்கும் பின்பலமாக இருக்கின்றதென தொடக்ககால மார்க்சியர்கள் கூறி வந்தனர். கார்ட்மன்னோ குடும்ப வாழ்க்கையின் பொருளாதாரஉறவுகளும் கூட ஆணாதிக்கமுறைமைக்கும், முதலாளியத்திற்கும் பின் பலமாக இருக்கிறதென மீண்டும், மீண்டும் வாதிடுகிறார். அவரே கூறியுள்ளது போல, ஆணாதிக்கமுறைமை மற்றும் முதலாளியத்தின் பொருண்மைஅடிப்படை பெண்களின் குடும்ப உழைப்பின் மீது ஆண்கள் கொண்டுள்ள கட்டுப்பாட்டில் தங்கியுள்ளது. பொருளாதார உறவுகள், தற்செயலான சமூகஉறவுகளின் பட்டியலை வெளியேற்றி விட்டது என அனுமானிப்பது, மார்ச்சியக் கோட்பாட்டில் ஆதிக்க நிலையில் இருந்த, வலிந்துகூறிய விளக்கத்தால் ஏற்பட்ட பழைய தவறாகும். உண்மையில், பொருண்மைஅடித்தளம் என்பது பொருளாதாரஉறவுகள் என்ற எல்லையோடு நின்று போவதல்ல. மார்க்சியச் சிந்தனை பெரும்பாலான நேரங்களில் ஒரு குறுகலான, குறுகல்வாத (REDUCTIONIST) பொருள் முதல்வாதத்தை நோக்கிச் சாய்ந்துவிடுகிறது. உண்மையில் இப்போக்கு இருமைவாத இயங்காவியல் / அறிவுத்தோற்றவியலிருந்து (DUALISTIC METAPHYSICS/EPISTEMOLOGY) பிறந்ததாகும். இந்த இருமைப்போக்கைக் குறைந்தபட்சம் சில மார்க்சியர்களாவது வெளிப்படையாகவே மறுத்தொதுக்கியிருக்கிறார்கள். மார்க்சியர்கள் சமூக உறவுகளை பொருளாதாரஉறவுகள் என்றும், மற்றைய அனைத்தும் சமூக உறவுகள் என்றும்-இது வழக்கமாக உளவியல் உறவுகள் என்றே கருதப்பட்டு வருகிறது- முற்றிலும் இருமாறுப்பட்டவகையினங்களாக பிரித்துப் பார்க்கின்றனர். இதற்குக் காரணம் இருமைவாதப் போக்கே ஆகும். குறுகல்வாதப் போக்கானது உளவியல்உறவுகள் என்பதில் பின்வரும் அம்சங்களை உள்ளடக்கிப் பார்க்கிறது. தனி நபர்கள், மொத்தச் சமூகத்தின் உளவியல் வாழ்க்கை, தனிநபர்களின் கருத்துக்கள், நடைமுறைகள், கருத்தியல் போன்ற பண்பாடு தழுவிய நம்பிக்கைகள் ஆகியன. அத்தோடு, பொருளாதார உறவுகளின் பாதிப்பால் ஏற்படுபவையே உளவியல் உறவுகள் என்றும் இக்குறுகல்வாத போக்குகருதுகிறது. நிச்சயமாக இது மார்க்சியக் கோட்பாட்டின் மோசமான குறுகல்வாத தவறால் விளைந்த ஒரு கேலிச்சித்திரமாகும். இன்றோ மரியாதையுள்ள எந்த மார்க்சியவாதியும் வெளிப்படையானதும் பொருத்தமற்றதுமான இந்தக் கருத்தியல் திட்டத்தைப் பிரச்சாரம் செய்யமாட்டார். குறைந்தபட்சம் உரத்துப் பேசமாட்டார். ஆயினும், இந்தக் குறுகல்வாதப்பார்வையின் எதிரொலிகள் மார்க்சிய ஆய்வுகளில் தொடர்ந்து தலை தூக்கியவண்ணம் இருக்கிறது.

கார்ட்மன் கட்டுரையும் இதற்கு விதிவிலக்கல்ல. (முதலாளியத்தையும், ஆணாதிக்க முறைமையையும் நிலை நிறுத்தி வரும் வரலாற்றுபொருண்மை, சமூக உறவுகளில்தான் இந்த இருமை வாதத்திற்கான அடிப்படை இருக்கிறது. இந்த இருமைவாத அணுகுமுறையே கூட ஆணாதிக்கப் பிரிவினையாகும் என்பதை இக்கட்டுரையின் பின்பகுதி தெளிவாக்கும்.)

ஆணாதிக்கமுறைமை முதலாளியம் ஆகியவற்றின் பொருண்மை அடிப்படையில் - பொருளாதார உறவுகள் தவிர்த்து - உள்ளடங்கியுள்ள மற்ற சமூகஉறவுகள் எவை? "பாலின அடிப்படையிலான வேலைப் பிரிவினையால் வரும் ஆதாயங்களைப் பெறுவது யார்?" என்ற கேள்வியை கார்ட்மன் எழுப்புகிறார். ஆனால் குடும்பவாழ்க்கையின் சமூக உறவுகள் பற்றி வேறொரு கேள்வியை நாம் எழுப்ப வேண்டும், வெறும் மனித உயிர்களைத்தான் குடும்பம் உற்பத்தி செய்கிறது. மனித உயிரியியல் விலங்குகள் சமூக மனிதர்களாக மாற்றம் பெறுவது குடும்பஅமைப்பிற்குள் தான். இந்த மனிதஉயிர்கள் மத்தியில் தான் வர்க்கவாதம், பால் வாதம், இன வாதம், ஒருதாரமணவாதம், போன்ற தொற்றுநோய்கள் பரவிக் கிடக்கின்றன. உற்பத்திப் போக்கின் மெய்யான சமூகஉறவுகளானது தொழிலிடங்களில் உற்பத்தியாகும் பொருட்களின் பண்பை நிர்ணயிப்பதில் எவ்வாறு உதவிகரமாக இருக்கின்றன என்பதை நாம் அறிவோம். குடும்ப அமைப்பில் பாலின அடிப்படையிலான வேலைப் பிரிவினையால் ஏற்பட்ட சமூகஉறவுகள் முக்கியப்பங்காற்றும் இந்த உற்பத்தியில் உருவான இந்தப் பொருட்களின் (வளர்ந்த சமூக மனிதர்களின்) பண்பு என்ன? என்ற புதிய கேள்வியை நாம் கேட்போம்:

தொழிலிடங்களில் வேலைப்பிரிவினையால், உற்பத்தியாகும் வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களுக்கும், பாலின அடிப்படையிலான வேலைப்பிரிவினையால் குடும்பத்தில் உற்பத்தியாகும் "மனித உயிர்களுக்கும்" இடையிலான வெளிப்படையாகத் தெரிகின்ற ஆனால் முக்கிய வேறுபாடுகளை முதலில் நாம் கவனிக்க வேண்டும். உணவு, உடை, இருப்பிடம் போன்ற பொருண்மைப் பொருட்கள் மனிதஉயிர்களைப் போன்றதல்ல. தாங்கள் உற்பத்தியாவதற்கு காரணமான வளர்ச்சிப் போக்கு குறித்து உணர்வுபூர்வமான அல்லது உணர்வுபூர்வமற்ற பார்வைகள் இவற்றிடம் கிடையாது. தங்கள் சொந்த உற்பத்தி குறித்து ஒரு புரிதலோ, அது குறித்த அனுபவமோ இவைகளிடம் இல்லை. இதற்கு மாறாக, குடும்பத்தில் பாலினஅடிப்படையில் உற்பத்தியான பொருட்களான மனித உயிர்களுக்கு சமூகமனிதர்களாக தாங்கள் உருமாறும் வளர்ச்சிப்போக்கை

அனுபவித்த புரிதல் உண்டு. தங்களின் உற்பத்திப்போக்கு குறித்தும், தாங்கள் இறுதியில் என்னவாக மாறவேண்டும் என்பது குறித்தும் இவர்களிடம் அரைகுறையாகவேனும் ஒரு புரிதல் உண்டு. உண்மையில் தங்கள் சொந்த உற்பத்தி குறித்த அவர்களின் அனுபவம் தாங்கள் எப்படிப்பட்ட மனிதராக மாற வேண்டும் என்பதை வடிவமைக்க உதவியாய் இருக்கிறது.

குடும்பங்களில் உருவாகி பொது உலகிற்கு மாறும் சமூக மனிதர்களின் பண்பை உருவாக்குவதில் குடும்பத்தில் இடம் பெற்றுள்ள பாலின அடிப்படையிலான பொருண்மைச்சூழல்கள் வகிக்கும் வித்தியாசமான பாத்திரத்தின் மீது மிகச் சிறிதளவே கவனம் செலுத்தப்படுவது ஏன்? முதற்காரணம், பொருட்களுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான வேறுபாடுகள் புறக்கணிக்கப்படுகின்றன, குறைத்து மதிப்பிடப்படுகின்றன.

இரண்டாவது காரணம், இளம்வயது அனுபவங்கள் பாலின அடிப்படையிலான வேலைப்பிரிவினையின் மீதான இளம் வயதுப்பார்வை - தனி நபர் நினைவிலும் நமது சமூக வாழ்க்கை மதிப்பீட்டிலும், ஒடுக்கப்படுகிறது. வளர்ந்த தனிநபர்களிடமும் நம்மைப்பற்றி நாமே சொல்லிக் கொள்ளும் கதைகளான. வரலாறு, சமூகஅறிவியல் என அழைக்கப்படும் துறைகளிலும் இவை (இளம் வயது அனுபவங்கள்) ஒடுக்கப்படுவதால், எண்ணற்ற சமூகநிகழ்வுகளையும், வளர்ச்சிப் போக்குகளையும் நியாயப்படுத்தும் நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம். அதனால், இவற்றின் உண்மையான விளக்கம் நமக்குக் கிடைக்காமல் போய்விடுகிறது. இறுதியாக பாலினஅடிப்படையிலான வேலைப் பிரிவினையில் குறிப்பிட்ட முக்கிய அம்சங்களில் சிறிதளவே வரலாற்றுப் பண்பாட்டு மாறுதல்கள் இருக்கின்றன. இது பாலினஅடிப்படையிலான வேலைப்பிரிவினையையும், அதனை இயக்கும் மொத்தஅமைப்பையும் இயற்கையானதாக தெரிய வைக்கிறது. அந்த முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:-

குழந்தைகளை பராமரிப்பது பெண்களே. எப்போதும் ஒரு பெண்ணிடமிருந்து தான் நாம் பிரிக்கப்படுகிறோம். நமக்கு நாமே தனிப்பண்பு தந்து கொள்கிறோம். இவ்வாறு தான் உலகம் முழுதும் பெண்கள் தாழ்வாக மதிக்கப்படுகிறார்கள். இந்த இரு நிகழ்வுப்போக்குகளும் பண்பாட்டால் கட்டமைக்கப்பட்டது எனப்பார்ப்பதற்குப் பதிலாக இயற்கையால் வழங்கப்பட்டதாகப் பார்க்கப்படுகிறது. மார்க்சியம் உள்ளிட்டு அனைத்துச் சமூகப் கோட்பாடுகளும், இந்நிகழ்வுப் போக்குகளை

இயற்கையானதாகவே கையாளுகின்றன. இவ்வாறாக, பாலின அடிப்படையிலான வேலைப் பிரிவினையின் உலகு தழுவிய அம்சங்கள் சமூக ஆய்விற்கான முக்கிய ஆய்வுப்பொருளாகப் பார்க்கப்படுவதில்லை. மனித உயிர்களின் உற்பத்தி இயல்பை (NATURE) புரிந்து கொள்வதற்காக உற்பத்திப்போக்கை கவனிக்கும் ஒரு புதிய மார்க்சியத்திட்டமல்ல இது. பிராங்பட் சிந்தனைப் பள்ளியைச் சேர்ந்த ஹொகிமரும் (HORKHEIMER) ஏனோயோரும் ஆளுமையை உருவாக்குவதில், ஆதிக்கம் செலுத்தும் சமூக நிறுவனங்களில் வசதியான இடத்தைப் பெற்றுள்ள, குடும்பத்தின் பங்கை கணக்கிலெடுத்துக் கொண்டார்கள். ஆனால் அந்நிறுவனங்கள் சிறுவர்கள் தங்கள் தந்தையரோடு கொண்டிருக்கும் சமூக உறவுகளைத்தான் முக்கியமாக கவனத்தில் எடுத்துக் கொண்டன. ஆண் / பெண் குழந்தைகள் தங்கள் அன்னையரோடு கொண்டிருக்கும் உறவுகள் சிறிதளவே கவனத்தில் கொள்ளப்பட்டன. பிராய்டிக்குபிந்திய உளவியல் கோட்பாட்டின் ஆய்விலிருந்து, இந்தக் கோட்பாட்டாளர்கள் குழந்தையின் உயிரியல் பிறப்பையும் சமூக மனிதனின் உளவியல் பிறப்பையும், வேறுபடுத்தி (பிராய்ட் செய்ததைப் போல உருச்சிதைந்த நிலையிலேனும்) பார்த்தனர். உயிரியல் பிறப்பானது குறைந்த கால அளவே கொண்டது. ஒப்பீட்டளவில் சமூக மாறுதல்களின் தாக்கத்திற்கு இது உட்படுவதில்லை. ஆனால் ஒரு மனிதனின் உளவியல் பிறப்பானது மூன்றாண்டுகால அளவைக் கொண்டது. இது சமூகச் சுற்றுச்சூழலின் பெரும் தாக்கத்திற்குக்குட்பட்டது. குழந்தைகள் மனிதர்களாக மாற்றம் பெறுவது இந்தக்கால கட்டத்தில் தான். அவர்களின் இயல்பும், ஆளுமைகளும் இந்த வளர்ச்சிப்போக்கில் இறுதி செய்யப் படுவதில்லை. அல்லது நிர்ணயிக்கப்படுவதில்லை. இருப்பினும், குழந்தைகள் எதிர்காலத்தில் எந்தவிதமான மனிதர்களாக உருவாகப் போகிறார்கள் என்பது அக்குழந்தைப்பருவ அனுபவத்தின் குறிப்பிட்ட சமூக உறவுகளின் பெரும் தாக்கத்திற்குட்பட்டதாகும். காரணம், குழந்தைப் பருவ அனுபவங்கள் மாறுதலுக்குட்பட்டவை. உயிரியல் குழந்தை, சமூக மனிதனாக மாறும் வகையில் தன்னை தானே இது மாற்றிக் கொள்ளும்.

### ஒரு அவசியமான திசை விலகல் :

இந்தக் கட்டத்தில், வரலாற்றுப் பார்வையற்ற, நிர்ணயவாத, உளவியல்பார்வையில் இவ்விதம் இது இருக்கப்போகிறது. என்று ஒருவர் அய்யப்படக்கூடும் என்பதையும் தாண்டி, இருவிதமான மறுப்புகளை ஆய்வு செய்ய வேண்டியிருக்கிறது. மார்க்சியர்களே எப்பொழுதும் இந்த மறுப்புகளை எழுப்பி வருகின்றனர். முதலாவதாக, எந்த வயதில் அல்லது

எந்தவொரு வழியில் வேண்டுமானாலும் தனிநபர்களின் சமூகஇயல்புகள் இறுதி செய்யப்படும் அல்லது நிர்ணயிக்கப்படும் என்றும், இரண்டாவதாக, சமூக உறவுகளின் அடிப்படைக்காரணிகளாக இருப்பது உளவியல் நிலைகளே என்றும் அவர்கள் வாதிடுகிறார்கள். மேற்சொன்ன இரு வாதங்களையும் நான் எழுப்பவில்லை. நாம் முன் வைக்க இருக்கும் கோட்பாடானது வரலாற்றுப்பார்வையற்றதல்ல அல்லது நிர்ணயவாதப் போக்குகொண்டதுமல்ல. அல்லது மரபுவழிபட்ட, இருமைவாதப் பொருளில் இக்கோட்பாடு உளவியல் வகைப்பட்டதுமல்ல. இந்த மறுப்புகளுக்கு தெளிவான பதில் கிடைக்காதவரை நமது கோட்பாட்டிற்கு மக்கள் செவிமடுக்க மாட்டார்கள். ஆகவே தான் என்னால் எழுப்பப்படாத கேள்விகளுக்கு பதில் தருவதற்காக விவாதத் தொடர்ச்சியிலிருந்து இம்மாதிரி திசை விலக வேண்டியதாயிருக்கிறது.

எந்தவொரு உளவியல் கோட்பாடும் வரலாற்றுப் பார்வையற்றதும், நிர்ணயவாதப் பண்பையும் கொண்டிருக்கும் என்ற மறுப்பை முதலில் பரிசீலிப்போம். (நம்மால்) இனி வரையறுக்கப்படயிருக்கும் கோட்பாடானது வெளிப்படையான சமூக எதார்த்தம் என்னவாக இருக்கும் என்றே கேள்வி எழுப்புகிறது. அதாவது நமது சமூகச் சூழல்களோடும் புறச் சூழல்களோடும் நாம் கொள்ளும் பரஸ்பர உறவின் தாக்கத்திற்கு நாம் உளவியல் வகையில் உட்பட்டுள்ளோம். வரலாற்றுப்பார்வையற்ற, நிர்ணய வாதங்களுக்கு மாற்றாக இது வரலாற்று எல்லைகள் என்ற கருத்தை முன் வைக்கிறது. எல்லைகள் விரிவானவை, நாம் அதைச் சுற்றிச் சுற்றி வரமுடியும். அவ்வெல்லைக்குள்ளாகவே மாற்றுகள் கிடைக்க வழியுண்டு. ஆனால் நிர்ணய வாதங்களுக்கு விரிவான வாய்ப்புகள் இல்லை. சமூகச்சூழல்களை மாற்றுவதன் மூலம் வரலாற்று எல்லைகளை விரிவாக்க முடியும் அல்லது குறுக்க முடியும். வரலாற்றுப்பார்வையற்ற நிர்ணயவாதத்திற்கும், வரலாற்று எல்லைகள் என்பதற்கும் இடையிலான வேறுபாடு குறித்த நமது புரிதலை உறுதிப்படுத்த பின்வரும் பரிசீலனை உதவியாய் இருக்கும். எந்தவொரு வரலாற்றுக்கட்டத்திலும் நம் ஒவ்வொருவருக்கும் உடல் ரீதியாக கட்டுப்படுத்தப்பட பல வழிகள் இருப்பது போலவே, நமது உடலை மாற்றிக் கொள்ளும் வழிகளுக்கு உயிரினம் என்கிற அளவில் கட்டுப்பாடுகள் இருந்து வருவது வெளிப்படை என்பதால் நாம் உடல் ரீதியாக மட்டுமே நிர்ணயிக்கப்படுவதில்லை.

முதலாவதாக, உடல் வளர்ச்சிக்கென ஒரு இயல்பான வளர்ச்சிப் போக்கு இருக்கிறது. அதற்கான குறிப்பிட்ட சில கட்டுப்பாடுகளோடுதான்

நாம் பிறக்கிறோம். இந்தக் கட்டுப்பாடுகள் தான் நமது உடல் எப்படிமாற முடியும், எப்படி மாற வேண்டும் என்பதைக் கட்டுப்படுத்துகின்றன. (இயல்பானது, "உடல் ரீதியானது" என முத்திரைக் குத்தப்பட்டிருப்பதற்கும், உண்மையிலேயே இயல்பானது, உடல்ரீதியானது என்ன என்பதும் வாதத்திற்குரிய முக்கிய விசயப்பொருளாகும். ஆனால் ஒவ்வொரு உயிரினமும் (SPECIES) மறு உற்பத்திக்கான தகுதி, மூப்படைதல் போன்ற குறிப்பிட்ட, இயல்பான உடல் வளர்ச்சிப் போக்கினைக் கொண்டிருக்கும்) ஆனால் நமது சுற்றுச் சூழலோடு நாம் கொள்ளும் பரஸ்பரஉறவுகள் நமது உடல் அமைப்பில் மாற்றத்தைத் தருகின்றன. நாம் உண்ணும் உணவு வகை, நமது வேலை முறை நாம் சுவாசிக்கும் காற்று ஆகியவை வெளிப் படையாகவே' நமது உடலில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றன. நமது சமூக அமைப்பின் வடிவங்கள் அம்மாற்றங்களில் தாக்கத்தை ஏற்படுத்தினாலும் இம் மாற்றங்கள் வழக்கமாக தனித்தனியாக (INDIVIDUALLY) திட்டமிடப்படாத வகையில்தான் நடந்தேறுகின்றன. இது தவிர நமது உடலில் திட்டமிட்டும் சில மாற்றங்களைச் செய்து கொள்கிறோம். முடிதிருத்தல், உடற்பயிற்சி, உணவுக் கட்டுப்பாடு, உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள், பால் (SEX) மாற்றம் ஆகியவை அவை. ஆனால் உடல்ரீதியான சில எல்லை வரையறைகளுக்குள் தான், இந்த அனைத்து மாற்றங்களையும் செய்யமுடியும். இந்த எல்லை வரையறைகளில் சில; வரலாற்று வகையில் சிறப்புத்தன்மை கொண்டவை. அவை பின்வருமாறு: இன்று, நகரங்களில் காற்று மாசடைந்துள்ளது. இன்று ஒரு சிலருக்காவது, இதயமாற்றுச் சிகிச்சை சாத்தியமான ஒன்று. இந்த எல்லைவரையறைகளில் சில உயிரியல் ரீதியானவை (BIOLOGICAL) அதாவது உயிரினங்களின் வகைகளோடு தொடர்புள்ளவை. உதாரணத்திற்கு, நம்மைப்போன்ற உயிரினங்களால் அட்லாண்டிக் கடலை பறந்து கடக்கும் வகையில் இறகுகளை வளர்த்திக் கொள்ள முடியாது. செயற்கையான புறச் சூழலின்றி நம்மால் நிலவில் வாழமுடியாது. மேக நோய் அல்லது மூட்டுவலி போன்ற நோய்களால் நமது உடல் பெருமளவிற்கு சேதமடைந்தால் மீண்டும் நாம் இயல்புநிலைக்கு உடலை மாற்ற முடியாது. இவ்வாறாக நமக்கு உயிரியல் ரீதியாக சில எல்லைவரையறைகள் உண்டு. ஆனால் உயிரினங்கள் என்ற வகையில் இயற்கைவிதிகளோ அல்லது தனி நபர்கள் என்ற வகையில் வரலாற்றுச்சூழலோ நம்மை நிர்ணயிப்பதோ அல்லது இறுதி செய்வதோ இல்லை. நமது சமூகவாழ்வில் கூட்டாகவும், தனியாகவும், சில மாற்றங்களைக் கொண்டு வருகிறோம். அவை நமது உடல் தொடர்புள்ள எல்லை வரையறைகளை விரிவாக்குகிறது அல்லது குறுக்குகிறது. வரலாறு நமக்கு

விதித்துள்ள எல்லை வரையறைகளை பற்றியோ அல்லது உயிரினம் என்ற முறையில் நமக்குள்ள எல்லை வரையறைகளை பற்றியோ நமக்கு எதும் தெரியாது. அது பற்றி துல்லியமாகத் தெரிந்து கொள்ளவும் முடியாது. ஆனால் எல்லைவரையறைகள் இருக்கின்றன என்பது மட்டும் நமக்குத் தெரியும்.

அதைப்போலவே, நாம் வரையறுக்கவிருக்கும் கோட்பாடு பின்வரும் விசயத்தை வலியுறுத்துகிறது. ஒரு குழந்தையின் மூன்றாம் வயதில்தான், மனிதஉயிர் என்பதிலிருந்து சமூகமனிதன் என்ற கட்டத்தை நோக்கிய மாறுதல் தொடங்குகிறது. இந்தக்காலத்தில்தான் சில குறிப்பிட்ட உளவியல் கட்டுப்பாடுகள் தனி நபர்களிடம் வேருன்றுகின்றன. இந்தக் கட்டுப்பாடுகளில் சில வளரும் தன்மைக்கொண்டவை. சில வரலாற்று வழிப்பட்டவை. சில உயிரின அடிப்படையிலானவை. பின்வருவன வளரும் தன்மை கொண்டவை. நமது இளம் பருவத்தை மீண்டும் உருவாக்க முடியாது. நமக்கு பதினெட்டாம் வயதில் தோன்றும் பாலியல் உணர்வுகளை எட்டாம் வயதிலேயே உணர முடியாது. வரலாற்று வழிப்பட்ட உளவியல் கட்டுப்பாடுகள் என்பது சமூகமயமாக்கப்பட்ட பண்பாட்டின் பால்சார் வாழ்க்கைப் பங்குகளில் அல்லது நிலப்பிரபுத்துவஉறவுகளில் உள்ளடங்கி யிருக்கிறது. உயிரின அடிப்படையிலான உளவியல் கட்டுப்பாடுகள் பின்வருமாறு: ஒருவன் தன்னுள் ஐக்கியப்பட்ட உணர்வின் தேவையை உணர்தல் அல்லது ஏதேனும் ஒரு சமூகக்குழுவோடு தன்னையும் ஒருவராக உணரும் அவசியம். ஆனால், பெரும்பாலான உளவியல் மாறுதல்கள், மூன்று வயதிற்குப் பின்னரே ஏற்படுத்தப்படுகின்றன. மேலும் பல உளவியல்மாற்றங்கள் நம்மால் மாற்றக்கூடியவை என்பதைவிடவும் கட்டுப்பாடுகளின் எல்லைகள் இடந்தரும் போது உளவியல் ரீதியாக அதனளவிலேயே மாறிவிடக் கூடியவையாகும். சில உளவியல் மாற்றங்கள் வளர்ச்சி சார்ந்தவை. உடல் மாற்றத்தோடு தொடர்புடைய பருவம் அடைதல் போன்ற மாற்றங்கள் அல்லது ஒருவரது வாழ்வில் ஒருவர் பிறப்பைவிட இறப்பிற்கு அருகில் இருப்பதாக கவனம்கொள்வது போன்றவையே அவை.

சில மாற்றங்கள் எந்தத் தனிப்பட்ட நோக்கமுமின்றி (UNINTENDED) சமூகஉறவுகளில் மற்றவர்களோடு நாம் கொண்டுள்ள பரஸ்பர உறவினாலும் இயற்கையோடு நாம் கொண்டுள்ள பரஸ்பர உறவினாலும் நடப்பவை. அவை பின்வருமாறு:- திருமண உறவு அல்லது தாய்மை அல்லது திடீர் வறுமை அல்லது புதிதாகச் சேரும் கடமைப் பொறுப்புகள் ஆகியன. நமது உளவியல் வாழ்க்கையில் நாமே திட்டமிட்டுக் கொள்ளும் மாற்றங்களும் உண்டு. அவை பின்வருமாறு:- எந்த விமர்சனத்தைக் கேட்டும் மனம் துவண்டுவிடாமை,

அல்லது நம்மிடம் நாமே கண்டு கொண்ட வர்க்கவாத, இனவாத அல்லது பால்வாத ஆளுமைக் கூறுகளில் சிலவற்றை நீக்குதல் ஆகியன. சமூகத்தில் உள்ள மற்றவர்களோடு பொருத்தமான புதிய பரஸ்பர உறவுகளை ஏற்படுத்திக் கொண்டால்தான். திட்டமிட்ட மாற்றங்கள் நடந்தேறும் என்பது நிச்சயம். காரணம், இப்பரஸ்பரஉறவுகளே வரலாற்று, பொருண்மைச் சூழல்களை உருவாக்கும். வரலாறு நமக்கு விதித்துள்ள உளவியல் எல்லைவரையறைகள் பற்றியோ, அல்லது உயிரின அடிப்படையிலான உளவியல் எல்லைவரையறைகள் பற்றியோ நமக்கு ஏதும் தெரியாது. அது பற்றி துல்லியமாக தெரிந்து கொள்ளவும் முடியாது. ஆனால், இவ்வாறு இருக்கிறது என்பது நமக்குத் தெரியும்.

இவ்வாறாக, நாம் வரையறுக்கவிருக்கும் கோட்பாடானது வரலாற்றுப் பார்வையற்றதும் அல்ல; அல்லது நிர்ணயவாதக் கோட்பாடுமல்ல. இதற்குப் பதிலாக இக்கோட்பாடு பின்வரும் உறவை முன் வைக்கிறது. குழந்தைப் பருவ சமூகஉறவுகளின் வரலாற்றுச் சிறப்புத்தன்மையையும், உயிரின அடிப்படையிலான பொருண்மைச்சூழல்களும் ஒருபுறம், மறுபுறமோ, மேற்சொன்ன சூழல்களின் கீழ் உருவாகும் உளவியல் நலன்கள். இவை இரண்டின் இணைப்பையும் இக்கோட்பாடு முன் வைக்கிறது. இந்த உளவியல்நலன்கள் - இந்த ஆளுமைகள் - மாற்றத்திற்குட்பட்டவை. ஆனால் அதற்கென சில எல்லைவரையறைகள் உண்டு. இந்த எல்லை வரையறைகளுக்குள் திட்டமிட்ட மாற்றங்களை (INTENTIONAL CHANGES) வளர்ந்த மனிதர்கள் உருவாக்கிக்கொள்வதை ஆய்வு செய்வதில்தான் நமது நலன்கள் உள்ளன. வரலாற்று ரீதியாக உருவாக்கப்பட்ட இந்த எல்லை வரையறைகள், அதனளவில் நமக்காகவும் எதிர்கால குழந்தைகளுக்காகவும், விரிவாக்கம் செய்யப்பட்டவை.

இரண்டாவதாக, உளவியல் நிர்ணயவாதத்திற்கு எதிரான பூர்வாங்க மறுப்பு பற்றி பரிசீலிப்போம். நாம் வரையறுக்கவிருக்கும் கோட்பாடானது பின்வரும் விசயத்தை உயர்த்திப்பிடிக்கிறது. சமூகச்சூழல்களின் அடிப்படைக் காரணிகளாக உளவியல்நிலைகள் இல்லை. ஆனால், உண்மையானதும், பொருண்மையானதும், வரலாற்று வழியில் முக்கியமானதுமான குறிப்பிட்ட பாலினஅடிப்படையிலான வேலைப்பிரிவினையின் அம்சங்களே, உளவியல் அடிப்படை ஆதாரம் கொண்ட சமூகமனிதர்களை உருவாக்குவதற்கு காரணமாக இருக்கின்றன. அவை ஆணாதிக்க முறைமையையும், முதலாளியத்தையும் மறுஉற்பத்தி செய்கின்றன. ஆனால். சமூக மனிதர்களின் உருவாக்கத்திற்குக் காரணமான வரலாற்று, பொருண்மை அடிப்படை

யானது, பொருளாதார அடிப்படைக்கு சாதாரணமாக கட்டுப்படுவதில்லை. பொருளாதார உறவுகள் இதன் உருவாக்கத்திற்கு தெளிவான வழிவகை செய்த போதிலும், இவை பொருளாதார அடிப்படைக்குக் கட்டுப்படுவதில்லை. இதற்குப் பதிலாக, பாலின அடிப்படையிலான உடல் வேறுபாட்டிற்கு ஏற்ற வேலைப்பிரிவினையும் அதன் விளைவாச் சுற்றுச் சூழலோடு குழந்தை கொண்டுள்ள உடல்ரீதியான உறவுகளும் சமூகஉறவுகளும் தான் பொருண்மைச் சூழலுக்கு அடிப்படையாகும். சொடரோவ் பிளேக்ஸ் ஆகியோரின் எழுத்துக்களிலிருந்து கட்டமைக்கப் பட்ட பொருண்மை அடித்தளம் என்ற கருத்தாக்கத்தை முழுமையாக ஆய்வு செய்தால் பாலினஅடிப்படையிலான வேலைப் பிரிவினையின் இந்த இயல்பும் அதன் பின்விளைவுகளும் மிகத் தெளிவாகத் தெரியும்.

***மெய்யான பொருண்மை அடித்தளம் என்ற பிரச்சனைக்கு திரும்புவோம்:***

வளர்ந்த தனி நபர்கள் குறிப்பிட்ட சமூக அமைப்புகளோடு பரஸ்பர உறவு கொள்ளும் வழிகள் குறித்து மார்க்சியர்கள் முதன்மையாகக் கவனம் கொண்டிருந்தனர். இத்தகைய பரஸ்பரஉறவானது (உதாரணத்திற்கு இருபதாம் நூற்றாண்டு அமெரிக்காவில் காணப்படும் அலுவலக வாழ்க்கை அமைப்பு) அந்த அமைப்புகள் தமது நலன்களை திருப்தி செய்யும் என்று நம்பும் சமூகமனிதர்களை உருவாக்குகிறது. மறுஉருவாக்கம் செய்கிறது. ஒரே வகையைச் சேர்ந்த சமூகத்தனிநபர்கள் மத்தியில், அரசியல் ரீதியில் வலுவான நிலையிலிருந்தவர்கள் தங்களுக்கு வசதியானது எனத் தாங்கள் கருதியச் சமூகஅமைப்புகளை உருவாக்கிக் கொண்டனர். அதை மறு உருவாக்கமும் செய்தனர். இதனையும் மார்க்சியர்கள் கவனித்தார்கள். (உண்மையில், மார்க்சியர்கள் வர்க்கநபர்களைப் பார்த்தனர். ஆனால் வர்க்கங்கள் தனி நபர்களை உள்ளடக்கியதாகும்) வரலாறு மனிதர்களை வடிவமைக்கிறது. அதே நேரத்தில், அதிகச்சக்திவாய்ந்த மனிதர்கள் வரலாற்றை வடிவமைக்கிறார்கள். இந்த வளர்ச்சிப்போக்கானது (PROCESS) தொடக்கத்தில் மனிதர்களை எப்படி உருவாக்குகிறது என்பது குறித்து சொடரோவ்வும், பிளேக்ஸீம் கவனித்தனர். குழந்தை வளர்ப்புக்குக் காரணமாக சமூக அமைப்புகள், எவ்வாறு உயிரியல் விலங்குகள் என்ற மூலப் பொருளிலிருந்து பாலின வகைப்பட்ட சமூகநபர்களை உருவாக்குகிறது என்ற விசயத்தில் இவர்கள் கவனம் வைத்தனர். பால் வகையினமும் (GENDER) தனிநபரும் (PERSONHOOD) பிரிக்கவியலாதவை. காரணம். தனிநபர் தன் வளர்ச்சிப் போக்கில் இன்ன பாலினத்தைச் சேர்ந்தவர்

என்ற வகையில்தான் வளர்ச்சி அடைகிறார். இப்படியிருப்பினும், நாம் மற்றவர்களோடும், நம்மோடும், இயற்கையோடும் உறவு கொள்ளும் வழிகளில் காணப்படும் வேறுபாடுகள் பாலினவேறுபாடுகளோடு நெருக்கமான தொடர்பு கொண்டுள்ளன. இவ்வாறு குறிப்பிட்ட வரலாற்று ரீதியான குழந்தை வளர்ப்பு முறைகளில் சிறுவர், சிறுமியர் மீது பாலினப்பண்புச் சின்னங்கள் இடம் பெறச் செய்யப்படுகின்றன. மனிதர்கள் உருவாக்கிய எல்லாச் சமூக அமைப்புகளிலும் இவை காணப்படுகின்றன.

நமது சமூகநிறுவனங்கள் அனைத்தையும், வடிவமைப்பதும் இன்றுவரை அவற்றின் மீது கட்டுப்பாடு செலுத்தி வருவதும் ஆண்களே. பால் / பாலின அமைப்பிலிருந்த வெகுதூரம் தள்ளி நிற்பதாக ஆரம்பத்தில் தோற்றம் தரும் சமூகஅமைப்புகளின் முக்கியமான பண்புச்சின்னங்களை (CONTOURS) புரிந்துகொள்வதற்கு பாலினத்தின் உற்பத்தி, மறுஉற்பத்தி குறித்த ஒரு புரிதல் நமக்கு முக்கியமானது. டின்னர்ஸ்டீன் (DINNERSTEIN) அவர்கள் பால் / பாலின அமைப்பிலிருந்து பிரிக்க இயலாத உறவு வகைகள் பற்றிய ஒரு பட்டியலைத் தருகிறார்.

“தற்போது நடைமுறையில் இருந்து வரும் பாலின அடிப்படையிலான ஏற்பாடுகளிலிருந்து உடைத்துக் கொண்டு வர வேண்டும் என்ற உந்துதல் அதிகரித்து வருகிறது. இது நம் உயிரின வாழ்க்கை (SPECIES LIFE) மேலும் பொருத்தமான வடிவத்தை நோக்கி செல்வதற்கான மைய விசையின் ஒரு பகுதியாகும். மேற்கண்ட இந்த ஒழுங்குமுறை நம்மை ஒருவருக்கொருவர் கொன்று கொள்ளும் கொலைகாரர்களாகவும், கொடுங்கோலர்களாகவும், இரையாகும் பலி ஆடுகளாகவும் உருவாக்கிய சக்திகளோடு பிரிக்க முடியாதபடி ஒன்றிணைத்துள்ளது. இந்தச் சக்திகளை இனம் காணவும், தொடர்ந்து சென்று வெற்றி கொள்ளவும் நாம் நீண்டகாலமாக முயல்கிறோம். ஆண்கள் ஆதிக்கம் செலுத்தும் உலகில் இத்தகைய முயற்சி சகோதரத்துவம் என்றே இன்னும் அழைக்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் இன்னொரு வகை ஏற்பாடு (ஆண்கள்) நமது உடல்களோடு நட்பை ஏற்படுத்திக் கொள்ளும்படி செய்கிறது. நாம் மற்ற (ஆண்) விலங்குகளோடு வேலையை ஒரு புறமும், விளையாட்டை மறுபுறமும் பகிர்ந்து கொள்ளும்படி செய்கிறது. இவ்வாறாக நம் விசயத்தில் மட்டும் அடிப்படை செயல்பாட்டிற்கான உந்துதலை இரண்டாகப் பிரிக்கிறது. உயிர்ச்சக்தியை உறிஞ்சும் இந்தப்பிரிவினையை சரி செய்பவர்களாக மற்றவர்களை (ஆண்கள்) வைக்கிறது.”

“மற்றொரு ஏற்பாடு நாம் அரை குருட்டுத்தனத்துடன் இயற்கையாக நமக்கு நாமே வடிவமைத்துக் கொண்ட சமூகப்பாத்திரத்தின் மீது பார்வையைச் செலுத்தும்படி செய்கிறது. இன்னுமொரு ஏற்பாடு நமது பொதுஅறிவில் பகுத்தறிவிற்கும், பகுத்தறிவிற்கு முந்தைய நிலைக்கும் இடையில் இணக்கத்தை ஏற்படுத்துகிறது.”

முன்னரே குறிப்பிட்டுள்ளது போல, குழந்தை வளர்ப்பில் - இந்தச் சமூக அமைப்பிற்குள் தான் நாம் அனைவரும் உளவியல் ரீதியாக பிறக்கிறோம் - இரு முனைப்பான அம்சங்கள் இடம் பெற்றுள்ளன. முதலாவது, வரலாற்றுக்கு முந்திய காலத்திலிருந்து இன்று வரை நிறுவனயமாக்கப்பட்ட உழைப்புப்பிரிவினையின் கீழ் குழந்தை வளர்ப்பிற்கு பிரதானப் பொறுப்பாளராகச் செயல்படுவது பெண்ணே அல்லது பெண்களே. இவ்வாறாக பால்வேறுபாடு அறியாத ஆண்/பெண் குழந்தைகள், தங்களின் முதல் பாதுகாப்பாளரிடமிருந்து (FIRST CARE TAKER) தங்களை பிரித்துணரத் தெரியாத இக்குழந்தைகள், நாளடைவில் தங்களின் பாதுகாப்பாளரிடமிருந்து வேறுபட்ட, பெரும்பாலும் அவர்களோடு முரண்பட்ட விருப்பங்களையும், தேவைகளையும் கொண்ட, சமூகத்தனிநபர்களாகவே தங்களைப் புரிந்து கொள்கின்றனர். முதன்முதல் அவர்கள் பிரியும் “அந்நியர்” ஒரு பெண்ணே. வெளிப்படையாக உலகுதழுவியதாக இருக்கும் பெண்களின் பணி குழந்தைகளின் தொடக்கக்கால பாதுகாப்பாளர்களாக இருப்பது என்பதுதான். இவ்வாறாக அனைத்துக் குழந்தைகளும் பகுத்தறிவு கட்டத்தை அடைந்த பின்னால்தான் ஆண்களும் தங்கள் உலகத்தைச் சேர்ந்த முக்கியமான குடிமக்கள் என்ற பார்வையை எட்டுகின்றனர். தங்கள் தாய்மார்களிடமிருந்து கணிசமான அளவிற்கு தங்களை வேறுபடுத்திப் பார்க்கும் ஒரு கட்டத்திற்குப் பின்னரே, இனிமேலும் தங்கள் பாதுகாப்பற்றவர்களல்ல, எளிதில் பாதிப்புக்குள்ளாகு பவர்களல்ல என்ற கட்டத்திற்குப் பின்னரே அவர்கள் இந்நிலையை எட்டுகின்றனர். தொடக்ககால குழந்தைவளர்ப்பிற்கு பொறுப்பான பெண்ணையே அல்லது பெண்களையே நான் தாய் என குறிப்பிடுகிறேன். தற்போதைய நிறுவனமயமான உழைப்புப் பிரிவினையின் கீழ் குழந்தைகளின் பார்வையில் அவர்கள் சிறுவர்களாயிருந்தாலும் சரி அல்லது சிறுமிகளாக இருந்தாலும் சரி, ஆண்கள் அரூபமானவர்களாக, தங்களிடமிருந்து விலகி நிற்பவர்களாக, உடல் அளவில் உணர்ச்சி அளவில் குறிப்பிடப்பட வேண்டிய முக்கியத்துவம் அற்றவர்களாகவே தொடக்கத்தில் தென்படுகின்றனர். பின் குழந்தைகள் அவர்களை (ஆண்களை) புரிந்து கொள்ளும் ஒருநிலை வரும்

போது, தங்களுடன் முரண்பட்ட நலன்களையும், விருப்பங்களையும் கொண்டவர்கள் என்ற யதார்த்தத்தை ஓரளவு பகுத்தறிவு பூர்வமாக அறிந்தவர்களாக உறவு கொள்கின்றனர். ஆண்களின் திருப்தியின்மை அவர்களை தங்களது அன்பிற்குப் பாத்திரமாக இல்லாமல் செய்து விடுவதையும் குழந்தைகள் புரிந்து கொள்கிறார்கள். மனிதர்கள் திருப்தியற்றவர்கள், அவர்கள் தங்களுக்கென சொந்த மனத்திட்டங்களை (WILLS) கொண்டிருப்பவர்கள், அவர்கள் குழந்தைகளின் திட்டங்களை சீர்குலைப்பவர்கள் என்பவையே தொடக்கத்தில் (குழந்தைகள் மத்தியில் - மொர்) கொடுரமான கண்டுபிடிப்புகளாக இருக்கின்றன. இந்த கண்டுபிடிப்புகள் ஒரு பெண்ணைப் பற்றியதுதான். குழந்தைகள் தங்கள் உயிர்வாழ்விற்காக யாரைச் சார்ந்து இருந்தார்களோ, தங்களை யாரிடமிருந்து வேறுபடுத்திப் பார்ப்பதும், பிரிந்து நிற்பதும் கடினமாக இருந்ததோ அப்பெண்ணைப் பற்றியதுதான் மேற்சொன்ன கண்டுபிடிப்புகள். பகுத்தறிவோடு வாழ்க்கையைக் காண குழந்தைகள் கற்றுக் கொள்ளும் முன்பாகவே இவை கண்டுபிடிக்கப்பட்டு விடுகின்றன.

குழந்தைவளர்ப்பு சமூகஅமைப்பின் இரண்டாவது முனைப்பான, அம்சம்; பாலினம் என்பது நடுநிலை மதிப்பீட்டை (VALUE NEUTRAL) சார்ந்ததல்ல என்பதாகும். ஒரு ஆணாக இருப்பதைக்காட்டிலும் ஒரு பெண்ணாக இருப்பது மதிப்புக் குறைவானது. குழந்தைகள் முதன் முதலில் யாரிடமிருந்து தாங்கள் தனி நபர்கள் என்று பிரிந்தார்களோ அந்த தாய் தனக்குத்தானே மதிப்பைக் குறைத்துக் கொண்டதுடன், பிறர் தன்னை மதிப்புக் குறைவாகப் பார்ப்பதாகவும் உணர்ந்தார். ஆண் குழந்தை, பெண் குழந்தை ஆகியவையிடம் இவை வேறுபாடான தாய்மையைக் காட்டுகின்றன. உயிரின உருவாக்கத்தின் சிறு பகுதியில் அதாவது ஒரு மனிதனாக உருப்பெருகையில் இவை ஆண்/பெண் குழந்தைகளிடம் வேறுபாடான அனுபவங்களைத் தருகின்றன. பெண் குழந்தைகள் தாங்கள் பெண்களாக மாறப்போகிறோம் என்பதையும், ஆண் குழந்தைகள் தாங்கள் ஆண்களாக மாறப்போகிறோம் என்பதையும் கண்டு கொள்கிறார்கள். ஆண் / பெண் குழந்தைகள் பால்/பாலின அமைப்பைக் கண்டு கொள்வதும், எதிர்காலத்தில் அதில் அவர்கள் பங்கு பெற்றும் பாத்திரமும், ஆண்களுக்கும், பெண்களுக்கும் வேறுபட்ட விளைவுகளைத் தருகின்றன. எந்தத்தாயின் உடம்பிலிருந்து பிறப்பெடுத்தானோ, எந்தத்தாயின் உடம்போடு ஒட்டியிருந்தானோ அந்தத் தாயிடமிருந்து, தாழ்வாக மதிக்கப்பட்ட ஒரு பெண்ணிடமிருந்து, முதல் அந்நியரிடமிருந்து (FIRST OTHER) பிரிக்கப்பட்ட

பின்தான் ஒரு ஆணின் ஆளுமை வளரத்துவங்குகிறது. அந்தப்பெண்ணின் உடல் தன்னிலிருந்து வேறுபட்டவர்கள் என்று அறியத்தக்க பிற உடல்களை அறிவதற்கான முதல் மாதிரியாக இருக்கிறது. ஒரு பெண்ணுடனான ஊட்டம் மிகுந்த பரஸ்பரஉறவை விட்டு விட்டுத்தான் தொடக்கத்தில் அவன் பகுத்தறிவு பூர்வமான கூட்டுச் சமூக வாழ்க்கையில் நுழைகிறான். உள்ளம் (சிந்தனை) / உடல், பண்பாடு / இயற்கை உயர்வாக மதிக்கப்படும் தன்னிலை (SELF) / தாழ்வாக மதிக்கப்படும் மற்றவர்கள் (OTHERS) ஆகிய இவற்றிக்கிடையே ஒரு பைத்தியக்காரத்தனமான இருமை (DUALISM) பேணப்பட்டு வருகிறது. தாழ்விற்குள்ளாக்கப்பட்ட பெண்ணிடமிருந்து பிரிந்து ஆண் தனக்கு தனித்தன்மையளித்துக் கொள்ளும் வளர்ச்சிப் போக்கின் போதுதான் மேற்சொல்லியுள்ள இருமைப்போக்குகள் முதல் வடிவம் எடுக்கின்றன. பாலினஅடிப்படையிலான வேலைப்பிரிவினையால், குடும்பங்களில் உருவாகும் சிறுவர்களின் உளவியல் பிறப்பினால் பின்வரும் விளைவுகள் உண்டாகின்றன. ஆண்கள் அளவிற்கதிகமாக பகுத்தறிவு கொண்டவர்களாகவும், மற்றவர்களை ஆதிக்கம் செலுத்த வேண்டிய தேவைகளை உடையவர்களாக மட்டுமின்றி தங்களது சொந்த உணர்வுகள், சொந்த உடம்பு, மற்றவர்கள் உடம்பு ஆகியவற்றையும் இயற்கையும் பொதுவாக ஆதிக்கம் செலுத்துபவர்களாகவும் உருவாகிறார்கள். அவர்கள் அளவிற்கதிகமாகவே போட்டி குணம் கொண்டவர்களாக, தங்கள் சொந்த வேலைகளின் மீது மட்டுமே அக்கறை கொண்டவர்களாகவும், இருக்கிறார்கள். தங்களைச் சுற்றி இருப்பவர்களிடமிருந்து, முக்கியமாக தங்களைப்போலல்லாதவர்களிடமிருந்து (பெண்களிடமிருந்து - மொர்) அதிகமான பிரிவை அல்லது தூரத்தைப் பேணி வருகிறார்கள். இது பெண்ணினத்தின் மீது வெறுப்பையும், ஆண்களுக்கு கீழ் பெண்கள் அடிமை நிலையில் இருப்பதையும் பொருத்தமான முன்மாதிரி சமூகஉறவுகளாக உருவாக்குகிறது. தம்மைப் போன்றவர்களுடனும், தம்மைப் போலல்லாத மற்றவர்களுடனும் இவ்வுறவுகளைப் பேணவைக்கிறது. பாலின அடிப்படையிலான வேலைப்பிரிவினையானது சிறுவர், சிறுமியர்களின் குழந்தைப்பருவ அனுபவங்களை அடக்கி ஒடுக்குகிறது. இதன் விளைவாக வயதுவந்தோரிடம் இடம் பெற்றுள்ள மாற்ற முடியாத குழந்தைப்பருவம் சார்ந்த நடவடிக்கைகளை பெருமளவில் மறைத்து விடுகிறது என்று ஜோன் பிளேக்ஸ் வாதிடுகிறார்.

இதற்கு மாறாக, பாலினஅடிப்படையிலான வேலைப்பிரிவினையானது பெண்குழந்தைகளிடம் இரட்டை மனநிலையை உருவாக்குகிறது.

எந்தத் தாயிடமிருந்து தனியாகப் பிரிந்து சமூகமனிதர்களாக உருவானார்களோ, அந்தத் தாய்மார்களுடன் பெண்குழந்தைகள் இரட்டை மனநிலை கொண்ட உறவுநிலையைப் பேணி வருகிறார்கள். இதன் விளைவாக, அவர்கள் இருமைப்போக்கின் இரு துருவங்களோடும், இரட்டை மனநிலையோடும் உறவுபேண வேண்டியதாகிவிட்டது. குழந்தைப் பருவம் முழுக்கவும் தங்களுக்கு முதல் அன்பைத்தந்த பெண்களிடம், வலுவலான உணர்வுரீதியான உறவுகளைப் பேணி வரும் இளம் பெண்கள் பொதுவாக, அளவிற்கதிகமாகவே பிறர்க்கென வாழும் பொதுநலப்பண்பைக் கொண்டவர்களாகவே இருக்கிறார்கள். ஆண்களிடமுள்ள அதிகாரம் செலுத்தும் ஆளுமைப்பண்புகளைக்கூட ஆதரிக்கும் அளவிற்கு இருக்கிறார்கள். அளவிற்கதிகமாகவே தாய்மார்களால் தனிக்கவனத்தோடு வளர்க்கப்படுகிறார்கள். அவர்கள் அளவிற்கதிகமாகவே உணர்வுரீதியான வாழ்க்கையின் மீது கவனம் செலுத்துகிறார்கள். தங்களைச் சுற்றியிருக்கும் விசயங்களிடமிருந்து தங்களைப்பிரித்துக் கொள்ள இயலாதவர்களாக அல்லது தங்களைப் புறவயமாக தூரப்படுத்திக் கொள்ள இயலாதவர்களாக இருக்கிறார்கள். எதிர்ப்பாலுறவுகள், பொருளாதாரரீதியில் மிகுந்த முக்கியத்துவம் கொண்ட போதிலும் ஆண்கள் இவ்வுறவுகளில் காட்டும் ஈடுபாட்டைக் காட்டிலும் பெண்கள் உணர்ச்சிஅளவில் குறைந்த ஈடுபாட்டையே இதில் காட்டி வருகிறார்கள். ஆண்களின் பாலியல் அனுபவங்களும், உணர்வுரீதியான அனுபவங்களும், தங்கள் பாலினத்தைச் சேர்ந்த வளர்ந்த மனிதர்களின் பங்காளியான பெண்களுடனானதாக இருக்கிறது. தற்போதைய பாலினஅடிப்படையிலான வேலைப் பிரிவினையின் கீழ் தாய்மை எப்படி மறுஉருவாக்கம் செய்யப்படுகிறது என்பதில் சொடரோவ்வும், பிளேக்ஸும் ஆர்வம் காட்டுகிறார்கள். ஆகவேதான் இவர்கள் இருவரும், பால்/பாலின அமைப்பில் (SEX/GENDER SYSTEM) பெண்களின் பாத்திரம் மறு உருவாக்கம் செய்யப்படுவது குறித்து அதிக அக்கறை காட்டுகிறார்கள். ஆணாதிக்கமுறைமையையும், முதலாளியத்தையும் வடிவமைத்து கட்டுப்படுத்தி வரும் மனிதர்களின் இயல்புகள் குறித்து நாம் நம் கவனத்தைக் குவித்து வருகிறோம். மதிப்பிறக்கம் செய்யப்பட்ட (DEVALUED) பெண்ணிடமிருந்து தன்னைப் பிரித்துக் கொள்ளும் அனுபவத்தினால் வளர்ச்சிப் பெற்ற ஆணின் ஆளுமை மறு உருவாக்கம் செய்யப்படும் விசயம் குறித்து நாம் அதிக ஆர்வப்படுவதற்கு இதுதான் காரணம். இவ்விரண்டு விசயங்களிலும் குழந்தையானது கண்ணுக்குப் புலப்படாத வகையில் வரலாற்றை இயக்குபவராக இருக்கிறது.

இந்தப்பார்வையிலிருந்து தான், இனவாதத்திற்கு அடிப்படையான சமூக இயங்குசக்தி எது என்பது தெளிவான வடிவத்தைப் பெறுகிறது. ஆண்களால் வடிவமைக்கப்பட்டு, கட்டுப்படுத்தப்படும் எல்லாச் சமூக நிறுவனங்களைப் போன்ற ஒரு சமூகநிறுவனம்தான் இனத்துவஉறவுகள் என்பதாகும். மற்றவர்களின் மீது ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்ற தங்கள் குழந்தைப்பருவ நடவடிக்கையை, சக்தி வாய்ந்த குழுவைச்சேர்ந்த ஆண்கள் செயல்படுத்தும் மற்றொரு நாடகமே இந்த இனத்துவ உறவுகளாகும். பரந்த பல வண்ணக்காட்சிகள் கொண்ட இனத்துவ உறவுகளின் வரலாறு இதைத்தான் காட்டுகிறது. இனத்துவஉறவுகள் என்பது அடிப்படையில் ஆண்களுக்கிடையிலான உறவுகளாகும். இதில், தாங்கள் துணைப் பாத்திரங்களாக இருப்பதாகவே பெண்கள் உணர்கிறார்கள். அல்லது, தங்களால் எழுதப்படாத, இயக்கப்படாத, கதையில் எப்போதாவது, தலைமைப் பாத்திரங்களுக்குத் தள்ளப்படுகிறார்கள்.

பெண்களின் ஓரினப்புணர்ச்சியானது அதாவது லெஸ்பியனிசம் என்பது ஒரு தனிநபரின் விருப்பமாக இருப்பதில்லை. அல்லது பாலியல் தேர்வாகக் கூட இருப்பதில்லை. மாறாக, தங்களால் வடிவமைக்கப்படாத உலகில் சமூக மனிதர்கள் என்ற முறையில் அந்நியர் என்ற உணர்வைப் பெறாமல் இருக்கவும், சமூகஉறவுகளில் திட்டமிட்ட மதிப்புக் குறைவுக்குள்ளாகாமல் இருக்கவும், பெண்களுக்குள்ள ஒரே முன்னுரைக்கூடிய (PREDICTABLE) வாய்ப்பாக இது (பெண்ஓரினப்புணர்ச்சி) இருக்கிறது. இதற்கு மாறாக, ஆண்களின் ஓரினப்புணர்ச்சியானது மாறுபட்ட இரண்டு இயங்கு முறைகளைக் கொண்டதாக இருக்கிறது. ஒரு சில ஆண்களுக்கு இது பெண்மை என்று உணர வைக்கும் அனைத்திலிருந்தும் முழுமையான விலகலையும், ஆண்களையே முழுக்கக்கொண்ட சமூகத்திற்கானச் சாத்தியங்களையும் வழங்குகிறது. வேறு சிலருக்கு, ஆணாளுமையில் ஒடுக்கப்பட்ட, இழந்து போன பெண்மைக்கூறுகளில் பங்குகொள்ளும் சாத்தியத்தை வழங்குகிறது.

மூன்றுவயதிற்குப் பின்னர், பல வழிகளில் மரபு வழிப்பட்ட ஆண்/ பெண் ஆளுமைப்பண்பு நலன்கள், மறுஉறுதி செய்யப்பட்டு ஆதரிக்கப்படுகின்றன. பாலின இருமைகளைப் பேணுவதில் ஆண்களுக்கும், முதலாளிகளுக்கும் உண்மையான பொருளாதார நலன்கள் இருக்கின்றன. ஆணாதிக்க முறைமைக்கும், முதலாளியத்திற்கும் எதிரான போராட்டத்தில் வெற்றி கொள்ளவும், வரலாற்றை மாற்றவும் விரும்பும் நமது கவனத்தை கூடுதலான போராட்ட களங்களை நோக்கித் திருப்புகிறது. இந்தச்

சுயேச்சையான பெண்ணியக் கோட்பாடு, நாமே புதிய மனிதர்களாக மாறுவதுடன், மற்றவர்களையும் அவ்வாறு மாற்றவேண்டும். இதைச் சாதிப்பதற்கு முதலாளிய வடிவத்திலிருக்கும் ஆணாதிக்கமுறைமையில் எந்தவிதமான வரலாற்றுப் பொருண்மைச் சூழல்களின் கீழ் மனிதர்கள் உருவாகிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ளவும், பின் அதை மாற்றவும் வேண்டும்.

இந்தப்பகுதியின் வாதங்களைக் கீழ்வருமாறு தொகுக்கலாம். பாலின அடிப்படையிலான வேலைப்பிரிவினையின் பொருளாதாரஅம்சங்கள் ஆணாதிக்கமுறைமைக்கும், முதலாளியத்திற்குமான பொருண்மை அடிப்படையின் ஒரு பகுதியை வழங்குகிறது என கார்ட்மன் வாதிடுகிறார். ஆணாதிக்கமுறைமைக்கும் முதலாளியத்திற்குமான பொருண்மை அடித்தளம் குறித்த சொடரோவ், பிளேக்ஸ் ஆகியோரின் வரலாற்று பொருண்மை அடிப்படையிலான பாலினஆளுமைக் கருத்துக்களிலிருந்து, குறைந்த அளவு கற்பனை அம்சம் கொண்ட கொள்கை ஒன்றைக் கட்டியமைக்க முடியும் என வாதிடுகிறேன். இந்த மாற்றுக்கொள்கை பழைய கொள்கையின் புரியாத புதிர்கள் சிலவற்றை விடுவிக்கிறது. அத்தோடு, சமூகவாழ்க்கை எவ்வாறு உருவாக்கமும், மறு உருவாக்கமும் செய்யப்படுகிறது என்பதைப் பற்றி ஒரு வலிமையான கோட்பாட்டைக் கட்டமைக்கவும் நம்மை அனுமதிக்கிறது. சுருங்கச் சொன்னால், வாழ்க்கை வளங்களை உற்பத்தி, மறுஉற்பத்தி செய்யும் (அதாவது பொருளுற்பத்தி - மொார்) பொருண்மைச் சூழல்களின் எல்லைகளை நிர்ணயிப்பதில் உயிரினங்களை உற்பத்தி, மறு உற்பத்தி செய்யும் வரலாற்று, பொருண்மைச்சூழல்கள் முக்கியமான, தற்செயல் பாத்திரம் வகிக்கின்றன. பாலின அடிப்படையிலான உழைப்புப் பிரிவினையை குழந்தைகள் தங்கள் அனுபவத்தில் உணர்கிறார்கள். இந்த அனுபவம் வளர்ந்தமனிதர்களிடம், பிறரை ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்ற ஆண்களின் விருப்பமாக வெளிப்படுகிறது. இந்த ஆதிக்கம் சரியானது, இயல்பானது என எண்ணும் விதத்தில் ஆண்கள் இயற்கையையும், மற்றவர்களையும் கருத்துருவாக்கம் செய்யும்படி வைக்கிறது. ஆண்களும், பெண்களும் இவ்வாதிக்கம் குறித்து விழிப்புணர்வற்றவர்களாக இருக்கும் படி இது வைத்துள்ளது. அதனால் தங்களின் இயல்புகள் குறித்த இந்த அம்சங்களை புரிந்து கொள்ள இயலாத நிலையில் இருக்கின்றனர். மற்றவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் உளவியல் நலன்களின் குறிப்பிட்ட சமூக வடிவங்கள், வரலாற்று ரீதியில் தன் வெளிப்பாட்டு வழியில் மாறுபட்டு இருக்கும். இதைத்தான் கார்ட்மன்,

ஆணாதிக்க முறைமைக்கு முதலாளியமும், முதலாளியத்திற்கு ஆணாதிக்கமும் வழி வகை செய்து கொள்வதாக நமக்குக் காட்டுகிறார். ஆண்களே வடிவமைத்துக் கொண்ட சமூக நிறுவனங்களில் ஆணாதிக்க ஆளுமையின் விரல்தடயங்கள் இருப்பதைக் கண்டு நாம் வியப்படைய வேண்டுமா? ஆணாதிக்கமுறைமையும், முதலாளியமும் கட்டமைக்கப் பட்டுள்ள வழி குறித்து அல்லது அவற்றிக்கிடையேயான நெருக்கம் குறித்து நாம் வியப்படையவேண்டுமா?

பால் அடிப்படையிலான ஆளுமைக்கோட்பாடுகள், வரலாற்று, பொருண்மைச் சூழல்களை நோக்கி நம் கவனத்தை ஈர்க்கின்றன என்பதை நான் மீண்டும் வலியுறுத்துகிறேன். பாலினஅடிப்படையிலான வேலைப் பிரிவினை இன்றுவரை உலகு தழுவியதாக இருந்த போதிலும், வரலாற்று ரீதியில் அது குறிப்பானதன்மை (SPECEFIC) கொண்டதாகும். இப்பொழுது பாலின அடிப்படையிலான வேலைப்பிரிவினை இயற்கையானதோ அல்லது அவசியமானதோ அல்ல; ஏனெனில் குழந்தை வளர்ப்பில் ஆண்கள் முக்கியப்பங்கு எடுக்க முடியும், குடும்பத்திற்குள்ளும் வெளியிலும் நமது சமூகஉறவுகளை வடிவமைப்பதில் பெண்கள் முக்கியப்பங்கெடுக்க முடியும். குழந்தை முதலில் பெண்களிடமிருந்து பின் ஆண்களிடமிருந்தும் தன்னைத் தனியாக பிரித்துக் கொள்ள முடியும். முதலில் ஆண்களும், பின் பெண்களும் நமக்கு பகுத்தறிவு கொண்ட உயிரினங்களாகத் தெரியத் தொடங்குவர். பொருண்மைச் சூழல்களின் வகைகள்தான் இங்கு பிரச்சனைக்குரிய விசயங்களாகும். இவை பின்வருமாறு: உண்மையான பாலின அடிப்படையிலான வேலைப்பிரிவினையும், சுற்றுச் சூழலோடு குழந்தையின் உடல்/சமூக உறவுகள் கொண்டுள்ள உறவு ஆகியவையே அவை. சமூக வாழ்க்கையின் பொருண்மைஅடித்தளம் என்ற புதிய கருத்தாக்கமானது, ஆணாதிக்க முறைமையிலும், முதலாளியத்திலும், உளவியல் நலன்களை உற்பத்தி செய்யும் வரலாற்று, பொருண்மைச்சூழல்களை புரிந்து கொள்ள நம்மை அனுமதிக்கிறது. அத்தோடு பல்வேறு ஆதிக்க உறவுகளில் நாட்டம் கொண்ட நபர்களைப் புரிந்து கொள்ளவும் இது நம்மை அனுமதிக்கிறது. உணர்வுகள், உணர்வெழுச்சிகள், உடல், புற இயற்கை மற்றும் மற்ற மனிதர்கள் மீது ஆதிக்கம் செலுத்துவதற்காக பல்வேறு இருமைகளை உருவாக்குவதிலும் ஆதிக்க உறவுகளின் நலன்கள் அடங்கியுள்ளதைப் புரிந்து கொள்ள உதவுகிறது.

*தீவிரத்திர்வின் கூடுதலான பண்புகள்:-*

ஆண்களின் ஆளுமைப்பண்புகளும், முதலாளியத் தொழில் முனைவோருக்கு தேவைப்படும் ஆளுமைப்பண்புகளும் "தற்செயலாக இணையும்" அந்த ஆர்வமுட்டும் காட்சியை கார்ட்மன்னும் கவனித்திருக்கிறார். "தீவிரப்பெண்ணியர்கள் விவரிக்கின்ற ஆண்களின் "பண்புநலன்களும்" முதலாளியச் சமூகத்தின் முக்கிய விழுமியங்களும் ஏன் தற்செயலாக ஒன்றிணைகின்றன? என கார்ட்மன் கேட்கிறார். இதற்கு கார்ட்மன் இரண்டு காரணங்களை முன் வைக்கிறார்.

"முதலாவதாக, கூலி உழைப்பாளர்களான ஆண்கள் முதலாளியப் போட்டி உறவுகளினுள் இழுத்தெழுக்கப்பட்டு இந்த விழுமியங்களை ஏற்றுக் கொள்கின்றனர். இரண்டாவதாக, பால் விழுமியங்கள் கூறுகிறபடி யதார்த்தத்தில் ஆண்களும், பெண்களும் நடந்து கொள்ளவிடினும் கூட ஆண்கள், ஆதிக்கச் சித்தாந்தத்தால் மதிப்பீடு செய்யப்படுகின்ற அத்தகைய பண்புகளுக்கு தாமே உரிமை கோருகின்றனர்.

இந்த இரண்டு நிகழ்வுகளுமே நடைபெறுகின்றன என்பது உண்மைதான். பெருமளவிலான சமூகவாழ்க்கை அதீதமாக நிர்ணயிக்கப்படுகிறது. தேவைப்படும் ஆளுமைவிழுமியங்கள் பல்வேறு வழிகளில் உறுதிப்படுத்தப்படுகிறது. ஆனால், பாலின அடிப்படையிலான ஆளுமைப்பண்பில் காணப்படும் வேறுபாடுகளுக்கு ஆதாரம் அடிமனதில் பகுத்தறிவிற்கு முந்திய நமது குழந்தைப்பருவ அனுபவத்தில் தங்கி இருக்கிறது. வர்க்கவாதம், மறுஉற்பத்தி செய்யப்பட்டு நிலைநிறுத்தப்படும் அதே வழியில்தான், இந்த ஆளுமைப்பண்பு வேறுபாடுகளும் பால்வாதத்தை மறுஉற்பத்தி செய்வதோடு, அதை நிலை நிறுத்தவும் செய்கின்றன. ஆகவே பாலினஅடிப்படையிலான வேலைப் பிரிவினையில் உண்டான குழந்தைப்பருவ அனுபவம் தான் தீவிரப் பெண்ணியர்கள் விவரிக்கின்ற ஆண்களின் பண்புநலன்களையும், முதலாளியச் சமூகத்தின் ஆதிக்க விழுமியங்களையும், மறுஉற்பத்தி செய்கின்றன. இது எந்தவிதத்திலும் தற்செயல் ஒன்றிணைவல்ல, ஒரே காரணத்தின் இரண்டு விளைவுகளே இவை. முதலாளியமும், ஆணாதிக்க முறைமையும், உண்மையில் ஒரு கூட்டணியில் உள்ள இரு பங்காளிகளல்ல. மற்றவர்கள் மீதான ஆதிக்கத்தை நிலை நிறுத்தும் உளவியல் நலன்களைப் பங்கிட்டுக் கொள்ளும் ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகளாக அவை இருக்கின்றன. இந்த இரண்டு நிறுவனங்கள் மீதும் ஆண்கள்தான் அதிகாரம் செலுத்தி வருகிறார்கள் என்பதைக்

கண்டுகொண்டால், இதில் "ஆர்வமூட்டும்" ஒன்றுமில்லை என்பதைக் காணலாம். ஆண்களின் ஆளுமைப்பண்புகளும் முதலாளியச் சமூகம் கோரும் ஆளுமைப்பண்புகளும் தற்செயலாக ஒன்றிணைந்திருக்கும் புதிரை தீவிரத்தீர்வு இவ்வாறு விடுவிக்கிறது.

குழந்தைப்பருவ அனுபவத்தின் சமூகவாழ்க்கைக்கான காரணங்களை இனம் காண, எடுக்கப்பட்ட மிக முக்கியமான தொடக்ககால முயற்சிகள் குறித்து அதாவது பிராய்டின் கோட்பாடு குறித்து மார்க்சியரும், பெண்ணியர்களும் எழுப்பிய நியாயமான விமர்சனத்தை தீவிரத்தீர்வு தவிர்த்து விடுகிறது. இது அதனிடம் காணப்படும் மற்றொரு பண்புக்கூறாகும். பிராய்டிசக் கோட்பாட்டிற்கு மிக முக்கியமானதாக இருந்த ஐந்து பிரச்சனைகள் வரலாற்றுப் பொருள் முதல்வாத, உளவியல் கோட்பாட்டிற்கு பிரச்சனைகளாகவே தோன்றவில்லை. அது பற்றி பார்ப்போம். முதலாவதாக, பத்தொன்பதாம் நூற்றாண்டில் வியன்னா நகரத்தில் இருந்த நடுத்தர வர்க்கப் பெண்கள் மற்றும் குழந்தைகளின் குறிப்பிட்ட வரலாற்று ரீதியான தனித்தப் பண்புநலன்களே அனைத்து காலங்களிலும், அனைத்துச் சமூகங்களிலும் உள்ள பெண்களின் குழந்தைகளின் பண்புநலன்களாகும் என்று பிராய்டியர்கள் சொல்வதை விமர்சகர்கள் மறுக்கிறார்கள். இதற்குமாறாக, நாம் முன்வைக்கும் கோட்பாடானது, பாலின அடிப்படையிலான, சமூகஉறவுகளின் வரலாற்று, பொருண்மைச் சூழல்களுக்கேற்ப உளவியல் வளர்ச்சி மாறுபடுவதை ஆய்வு செய்கிறது. மேற்சொன்ன உறவுகள் அதனளவில் பொருளாதார சமூகஉறவுகளுக்கு வழிவகை செய்கின்றன. உளவியல் கோட்பாட்டாளர்களின் நோக்கம் என்னவாகவிருந்தாலும் சரி, எந்தவிதமான மோசமான உதாரணங்கள் நம்முன் வைக்கப்பட்டாலும் சரி, உளவியல் கோட்பாடுகளுக்கு வரலாற்று, பொருண்மை அடிப்படை இருக்க முடியாது என நாம் ஊகிப்பதற்கு எந்தக்காரணமுமில்லை.

இரண்டாவதாக, பிராய்டு காலத்திய வியன்னாவில், இருந்த ஆண்கள், பெண்கள், குழந்தைகள் வெளிப்படுத்திய கருத்துக்களையே தான் அனைத்து ஆண்கள், பெண்கள், குழந்தைகளின் இலட்சிய வெளிப்பாடாக பிராய்டியர்கள் ஏற்றுக் கொள்வதை விமர்சகர்கள் மறுக்கிறார்கள். இதற்கு மாறாக, நமது கோட்பாடு, இவ்விமர்சனத்தை ஆதரிக்கிறது. இம்மாதிரியான நியாயமற்ற கோரிக்கைகள், உண்மையில், பால்வாதத்தையும், வர்க்கவாதத்தையும் நிலைநிறுத்த பயன்படுத்தும் கருவிகளே என நம் கோட்பாடு வாதிடுகிறது.

மூன்றாவதாக, ஒடுக்குமுறையாளர்கள் மனித குலத்தின் துயரங்களுக்குக் காரணமான உண்மையான பொருளாதாரக் காரணங்களை திசைதிருப்பி அதன் மூலம் புரட்சிகரமாற்றத்திற்காக முன் நிற்கும் சக்திகளை நிராதாயுதபாணியாக்கும் ஒரு உத்தியை கையாளுகிறார்கள். உளவியல் வாழ்க்கை மீது கவனத்தைக் குவிப்பதால் அது ஒடுக்கமுறையாளர்களின் மேற் சொல்லியுள்ள உத்திக்கே பயன்படும் என விமர்சகர்கள் வாதிடுகிறார்கள். தற்செயலான சமூகஉறவுகளைப் பொருளாதார உறவுகளாக மட்டுமே பார்க்கும், குறுகிய, குறுகல்வாத, ஆணாதிக்க முறைமைப் போக்கு குறித்து நாம் ஏற்கனவே விவாதித்துள்ளோம்.

நான்காவதாக, பிராய்டிசக் கோட்பாடு, சமூக நோய்க்கூறுகளை பொருளாதாரம் என்ற பொதுத்தளத்தில் வைத்துப்பார்க்காமல் குடும்பம் என்ற ஒரு தனிப்பட்ட எல்லைக்குள் வைத்துப் பார்க்கிறது. இதுவும் கூட, மனிதகுலத் துயரங்களுக்கான உண்மைக் காரணங்களைக் காணத் தவறுவதற்கு ஆளும் வர்க்கங்களுக்கு ஒரு வாய்ப்பைத் தந்து விடுகிறது என்பது விமர்சகர்கள் குற்றச்சாட்டு, மிதவாத சனநாயகக் கோட்பாடு, சமூக நோய்களுக்குக் காரணமாக அன்னையைச் சுட்டிக்காட்டி, அவரைப் பலி ஆடாகக் காட்டுகிறது. இம்மாதிரியானத் திட்டங்களுக்குப் பிராய்டிசக் கோட்பாடுப் பயனுள்ளதாக இருக்கிறது. இருப்பினும், குடும்பத்தில் இருந்துதான் (அதன் வடிவம் என்னவாக இருப்பினும்) தனி நபர்கள் உளவியல் ரீதியாகக் கட்டாயமாகப் பால்வாத அமைப்பிற்குள், வர்க்க அமைப்பிற்குள், இனவாதத்திற்குள், ஒருதார மணமுறைக்குள் திணிக்கப்படுகிறார்கள். அடுத்த தலைமுறையினரின் வர்க்கவாதம், பால்வாதம் குறித்த உளவியல் அடிப்படை ஆதாரங்களை நாம் தெரிந்து கொள்வதற்கு இம்மாதிரியான கட்டாயத்திணிப்புக் கோட்பாட்டைப் புரிந்து கொள்ள வேண்டும். மேலும் பொருளாதாரத்திலும், பொதுவாக பொது வாழ்க்கையிலும் வழக்கத்திலுள்ள வர்க்கம்/இனம்/ஒருதாரமணமுறை/பாலின ஒடுக்குமுறைகள் ஆகியன பாலின அடிப்படையிலான வேலைப் பிரிவினைக்கு ஆதரவாக இருக்கின்றன என்றே புரிந்து கொள்ளப் பட்டிருக்கிறது. இவ்வாறாக இக்கோட்பாட்டின்படி சமூக நோய்களுக்கு குடும்பம் மட்டும் காரணம் என தனிமைப்படுத்திவிட முடியாது. மாறாக இந்நோய்களை தேவைமுறைகளுக்கிடையில் மறு உற்பத்தி செய்யும் ஊடகமாக (CONDUCT) இது பணியாற்றுகிறது. வர்க்கம்/பாலினம்/இனம்/ஒருதாரமணமுறை என்ற கடமைப்பாடு (OBLIGATORY) ஆகிய விசயங்களில் ஒரு தலைமுறையினர் கொண்டுள்ள உணர்வுகளை (INTEREST) அடுத்தத்

தலைமுறை உறுதிப்படுத்தும் (INSURE) வளர்ச்சிப்போக்கு கொண்ட ஒரு தளமாக குடும்பம் இடம் பெற்றுள்ளது. பொதுப்பிரச்சனைகளுக்கும், தனிப்பட்ட பிரச்சனைகளுக்கும் இடையே ஒரு தெளிவான வேறுபாடு இருக்கும் என்ற அனுமானமோ அல்லது பொதுத் தளத்திலிருந்துதான் தனிப்பட்ட தளத்தை நோக்கி தற்செயலான பாதிப்புகள் அனைத்தும் வருகின்றன என்ற அனுமானமோ, குறுகல்வாத, பால்வாதமார்க்சியத்தின் அனுமானம் ஆகும். இவ் அனுமானத்தை மிதவாத சிந்தனையிடமிருந்து எந்தவித விமர்சனமின்றி மரபுச் சொத்தாக மார்க்சியம் எடுத்துக் கொண்டிருக்கிறது.

ஐந்தாவதாக, கருக்குடும்பங்கள் மீதான பிராய்டிசக் கோட்பாட்டின் அடித்தளம், வர்க்க, இனவியல் மையச் சார்பு கொண்டதாக இருக்கிறது என நியாயமாகவே குற்றம் சாட்டப்படுகிறது. பொதுவாக, நடுத்தரவர்க்கம் மட்டுமே-அதுவும்கூட அனைத்து நடுத்தர வர்க்கமும் அல்ல - இம்மாதிரியான குடும்பங்களில் வளருகிறது. மேல்தட்டு வர்க்கக் குழந்தைகள், இம்மாதிரியான குடும்பத்தோடு குறைந்த அளவு தொடர்பே கொண்டிருக்கின்றன. அந்தக் குழந்தைகள் எத்தகையோராக உருவாக வேண்டும் என எதிர்பார்க்கப் படுகிறார்களோ, அத்தகையவர்களால் பெரும்பாலும் வளர்க்கப்படுவதில்லை. அமெரிக்காவின் தென்பகுதியில் உள்ள குழந்தைகள் கறுப்பு அன்னையரால் வளர்க்கப்படுகின்றனர். மேல்தட்டுக் குழந்தைகள். கீழ்த்தட்டு தாதிகளால் வளர்க்கப்படுகின்றனர். தந்தையர் இல்லாத குடும்பங்களில் தான் பெரும்பாலும் ஏழைக்குழந்தைகள் வளர்கின்றனர். இக்குடும்பங்களில் பெரும்பாலும் பெற்றோர்கள் இரத்த உறவினர் ஆகியரோடு வேறு பலரும் இடம் பெற்றிருப்பர். (இரத்த உறவின் பங்கு என்ன?) மற்ற சமூகங்களில் பல்வேறு மாறுபட்ட வழிகளில் குடும்பம் வியாக்கியானப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் இதற்கு மாறாக, இடையூறுக்கு காரணமான வேலைப்பிரிவினையானது, குழந்தைப்பருவ அனுபவங்களை கருக்குடும்பத்தினை உள்ளடக்கியதாக புரிந்து கொள்ளாது. மாறாக, ஆண்கள் அதிகாரம் கொண்ட பொது வாழ்க்கையில் சமூக ரீதியான அவமதிக்கப்பட்ட பெண்களே குழந்தை வளர்ப்பிற்கு பொறுப்பாளர்கள் என்றே புரிந்து கொள்ளும். குழந்தைகளின் சொந்ததாய்மார்களே குழந்தை வளர்ப்பிற்கு பொறுப்பாக இருக்க வேண்டிய தேவையில்லை. (இசுரேல், சீனா, கியூபா சோவியத்யூனியன், போன்ற நாடுகளில் இன்றும்கூட குழந்தைவளர்ப்பு இல்லங்கள் முழுக்கவே பெண்களால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.) ஆதிக்கக் கருத்துக்களை உற்பத்தி/மறுஉற்பத்தி செய்வதற்கு

அவசியமான சூழ்நிலைகளை உருவாக்க, கருக்குடும்பங்களில் இருப்பதைப் போலவே, இங்கும் (குழந்தை வளர்ப்பு இல்லங்களில்) அன்னைக்கும், குழந்தைக்கும் நடுவில் தொடக்க கால அடையாளங்கள் உறுதியாய் இருக்க வேண்டிய தேவையில்லை. நாம் அறிந்துள்ள வரையில், வேலைப் பிரிவினையின் இரண்டு முக்கிய அம்சங்களில் ஏதேனும் ஒன்று இல்லாத இடங்களில், குழந்தைவளர்ப்பு இடம் பெறுவதில்லை என்பதை முக்கியமாக மனதில் கொள்ளவேண்டும். எல்லா இடங்களிலும், ஏதேனும் ஒரு வழியில், பெண்கள் மதிப்புக் குறைவாகவே வைக்கப்பட்டிருக்கிறார்கள். எல்லா இடங்களிலுமே பெண்கள் தான் குழந்தை வளர்ப்பின் தொடக்க காலத்தை செயல்படுத்தி வருகிறார்கள். இதன்விளைவாக, சமூக மனிதனின் உளவியல் பிறப்போடு உணர்ச்சி ரீதியாகவும், உடல்ரீதியாகவும் உறவு கொண்டுள்ள பாலினமாக பெண்களே இருக்கிறார்கள். மனிதகுல வரலாற்றில் குடும்ப அமைப்பில் எண்ணற்ற மாறுபட்ட வடிவங்களை (STYLE) நாம் காணலாம். ஆனால் அவை அனைத்திலும் மேற்சொல்லியுள்ள இரு அம்சங்கள் மட்டும் தொடர்ந்து நீடித்து வந்திருக்கின்றன.

பயனுள்ள புதிய ஆய்வுத்தரமான எண்ணற்ற கேள்விகளை எழுப்புவதற்கு தீவிரத்தீர்வு நமக்கு வாய்ப்பளிக்கிறது. இது தீவிரத் தீர்வின் மூனறாவது அம்சமாகும். அவை பின்வருமாறு: குழந்தை பருவ அனுபவத்தின் அடிப்படையில் பாலின அடிப்படையிலான வேலைப்பிரிவினையில் காணப்படும் வேறுபாடுகள் என்ன? இவ் வேறுபாடுகள் வயது வந்த நபர்களிடையே என்ன வேறுபாடுகளை உண்டாக்குகின்றன? உதாரணத்திற்கு ஒரு பெண்ணால் வளர்க்கப்படுவதற்கு மாறாக, பல பெண்களால் வளர்க்கப் படுவதால் என்ன வேறுபாடுகள் நிகழும்? குழந்தைகளோடு ஆண்கள் உணர்ச்சிரீதியாகவும், உடல்ரீதியாகவும் உறவு கொண்டிருந்தால் என்ன வேறுபாடுகள் நிகழும்? பல்வேறு மாறுபட்ட வர்க்கப்பெண்களால் குழந்தை வளர்க்கப்பட்டால், அது ஆளுமையில் கொண்டு வரும் வேறுபாடுகள் என்ன? மூன்று வயதிற்குப்பிறகு மனித ஆளுமையின் நிர்மாணங்களோடு மற்ற சமூக உறவுகள் கொண்டுள்ள உறவுகள் குறித்த கேள்விகள் இரண்டாவது வகைப்பட்டன. தொடக்ககால ஆளுமை நிர்மாணத்தை ஆதரிக்கும் அல்லது தடை செய்யும் ஏனைய சமூக உறவுகள், பொருளாதாரம் அல்லது வேறு என்ன? பாலின வகையினங்களை எதிர்க்கும் சமூக நிறுவனங்கள் எவை? உதாரணத்திற்கு தன்புணர்ச்சிச் சமூகங்களிலும், தொடக்ககால குழந்தை வளர்ப்பிற்கு ஆண்களே பொறுப்பான சமூகங்களிலும் வளர்ந்த மனிதர்களிடமும், குழந்தைகளிடமும்

பாலினத்திற்கும் தனிமனிதனுக்கும் இடையிலான தொடர்புகள் குறைந்து இருப்பது எப்படி? மூன்றாவது வகைக் கேள்விகள் முழுக்கவும், முன்னைய இரண்டுவகைக் கேள்விகளிலிருந்து மாறுபட்டதல்ல. பாலின அடிப்படையிலான ஆளுமைகளை வெளிப்படுத்துவதில் காணப்படும் வேறுபாடுகள் மீது மூன்றாவது வகைக் கேள்விகள் கவனத்தைக் குவிக்கின்றன. ஆணாதிக்க முறையின் சாதகமான வெளிப்பாடுகள் என்ன? வர்க்கச் சமூகத்தின் சாதகமான வெளிப்பாடுகள் என்ன? மற்றவர்களின் மனம் உடல் ஆகிய இருமைகளின் சாதகமான வெளிப்பாடுகள் என்ன? பாலின அடிப்படையிலான வேலைப் பிரிவினையில் குழந்தை வளர்ப்பில் காணப்படும் வேறுபாடுகளோடு இவை எவ்விதத்தில் தொடர்பு கொண்டுள்ளன ஏனைய சமூக உறவுகள் இதனை ஆதரிக்கின்றதா இல்லை எதிர்க்கின்றதா?

இறுதியாக, புதிய அரசியல் நடைமுறைகளைக் கண்டுபிடிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை நோக்கி தீவிரத்தீர்வு நம்மை வழி நடத்துகிறது. முதலாளியத்திலும் ஆணாதிக்கமுறைமையிலும் விரவியுள்ள ஆதிக்கஉறவுகள் ஒழிக்கப்பட்டால் தான் பாலினஅடிப்படையிலான வேலைப்பிரிவினை முடிவுக்கு வரும். இக்கடினமான பணியை புத்திசாலித் தனத்தோடு எவ்வாறு செய்து முடிப்பது என்பதை நாம் கற்றுக் கெள்ள வேண்டும். நாம் தனி நபர்கள் என்ற அளவிலும் சரி, கூட்டாகவும் சரி, நம்மை நாமே மாற்றிக் கொள்ளும் போது, பாலினமும் தனிமனிதனும் தற்செயலாக இணைவதை எதிர்ப்பதாக புதிய நடைமுறைகள் இருக்க வேண்டும் என்ற விசயம் தெளிவான ஒன்று. ஒரு சுயேச்சையான பெண்கள் இயக்கம், பாலின வகைப்பாடுகளை ஆதரிக்கின்ற நிறுவன நடைமுறைகளை எதிர்ப்பது, குழந்தை வளர்ப்பில் மாற்று வடிவங்கள், லெஸ்பியன் சமூகங்கள் - ஆகிய இவை தேவை என்ற அடிப்படையில் தோற்றம் பெற்றுள்ளன என்பது ஓர் எதார்த்தமாகும். பாலின வேறுபாடுகளை எதிர்க்கும் நடைமுறைகளை முன்னெடுப்பதிலும், அதில் பங்கு பெறுவதிலும் தனி நபர்கள் (ஆண்கள்) காட்டும் பற்றுறுதியை வைத்தே, ஆண்களின் வரலாற்று பங்கு முடிவு செய்யப்படும். ஆண்களிடம் இழப்பதற்கு அடிமை விலங்குகளைக் காட்டிலும் வேறு விசயங்கள் நிறைய உண்டு. ஆனால், முற்போக்கான மனிதகுல விடுதலை வரலாற்றை வடிவமைப்பதில் ஆண்களுக்கு ஒரு வாய்ப்பு உண்டு. மனிதர்கள் என்ற முறையிலும், சமபங்காளிகள் என்ற முறையிலும், இவ்வாய்ப்பை அவர்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

*முடிவுரை:*

ஆணாதிக்கமுறைமை முதலாளியம் ஆகியவற்றிக்கெதிரான போராட்டத்தில் பெண்களுக்கு ஒரு முக்கிய பங்குண்டு. ஆனால் பல்வேறு வகைப்பட்ட மார்க்சியப்பெண்ணியர்கள் பெண்களின் இப்பங்கை தவறாக புரிந்தும், குறைத்து மதிப்பிட்டும் வருகின்றனர் என கார்ட்மன் சொல்லியுள்ளார். ஆயினும், புரட்சிகரப் போராட்டத்தில் பெண்கள் கொண்டுள்ள பங்கின் முக்கியத்துவத்தை கார்ட்மன்னேகூட குறைத்து மதிப்பிட்டிருக்கிறார் என நான் வாதிடுகிறேன். இறுதியாக, அவர் விட்டுச் சென்றுள்ளது கற்பனையான ஆய்வு வகையினங்களைத்தான். இதனைக் கொண்டுதான் நாம் முதலாளியம், ஆணாதிக்கமுறைமை ஆகியவற்றின் கூட்டணியைப்பற்றி அறிந்து கொள்ள வேண்டும். இந்தக் கூட்டைத் தான், சோசலிசஇயக்கமும், பெண்ணியஇயக்கமும் இணைந்த முற்போக்குக் கூட்டணி எதிர்க்கவேண்டும். முதலாளியம், ஆணாதிக்கமுறைமை ஆகிய இரண்டின் இணைவிற்கான வேர்கள் கருப்பையிலேயே உதயமானது என்பதை ஒருமுறை கண்டு கொண்டாலே போதும், ஆண்கள் வர்க்க ஒடுக்கமுறையிலிருந்து விடுதலையைப் பெற்று தருவார்கள் என பெண்கள் எதிர்பார்க்க மாட்டார்கள். காரணம், தற்போதைய பாலின அடிப்படையிலான வேலைப்பிரிவினையின் கீழ்தான் தொடர்ந்து ஆண்மை/ பெண்மை ஆளுமைகள் உற்பத்தியும் / மறு உற்பத்தியும் ஆன வண்ணம் இருக்கின்றன. ஆகவே, பெண்கள் ஆணாதிக்கமுறைமைக்கு எதிரான போராட்டத்தில் தலைமைதாங்குவதோடு, மட்டுமல்ல, ஆணாதிக்கமுறைமை முதலாளியம் ஆகியவற்றை கட்டுப்படுத்துவதால் ஆண்கள் பெற்று வரும் ஆதாயங்களுக்கு எதிராகவும், பல்வேறு வகைப்பட்ட ஒடுக்குமுறை உறவுகள் மூலமாக, ஆதிக்கஉறவுகளை அவர்கள் தொடர்வதற்கு எதிரான போராட்டத்திலும் தலைமை தாங்க வேண்டும். உண்மையான அறிவியல் அம்சம் கொண்ட ஒரு கோட்பாட்டையும் நடைமுறையையும் உருவாக்குவதில் தலைமைப் பங்கை பெண்கள் கைப்பற்றப்போகும் வரலாற்றுத் தருணத்தில் நாம் நின்று கொண்டிருக்கிறோம். அக்கோட்பாடும் நடைமுறையும், விரிவான வரலாற்று பார்வையும், பொருள் முதல்பார்வையும், கொண்டதாக இருக்கும். வரலாற்றில் இப்பொழுது பெண்கள்தான் புரட்சிகரப்பகுதியாக விளங்குகிறார்கள்.

# தொகுப்பும் பதிலும்: விவாதத்தைத் தொடர்தல்

## கெய்டி கார்ட்மன்

இங்கே தொகுப்பட்டிருக்கும் ஒவ்வொரு கட்டுரையும் தற்காலச் சமூக அமைப்பில் பாலியல்உறவுகளைப் பற்றியப் புரிதலை மேம்படுத்தக் கடும் முயற்சியை மேற்கொண்டுள்ளன. இந்தத்தொகுப்பில் எழுப்பட்டுள்ள சிக்கலான பிரச்சனைகள் பல: ஆணாதிக்கமுதலாளியத்தில் (இது ஒரு அமைப்பா? இரு அமைப்புகளா?) காணப்படும் கடுமையான இறுக்கநிலையின் ஊற்றுக்கண்கள் எவை? வடிவங்கள் மாறியபோதிலும் ஆணாதிக்கம் தொடர்வது ஏன்? இனவாதம் என்பது குறித்து ஒரு கொள்கையையும், நடை முறையையும் வார்த்தெடுப்பது எப்படி? ஆணாதிக்க முதலாளியத்தில் எதிர்ப்பாலுறவின் பாத்திரம் என்ன? உளவியல் கட்டமைப்புகளையும், இனவாதம், ஆணாதிக்கமுறைமை, முதலாளியம் ஆகியவற்றின் நீட்டிப்பில் அதன் பங்களிப்பையும் எப்படி புரிந்து கொள்வது? அதிகாரப் படிநிலை அமைப்பை நாம் எப்படித் தாக்க முடியும்? இன்றையநிலையில் செயலுக்கான நடைமுறை வாய்ப்புகள் என்ன? மக்களை செயலுக்குத் தூண்டுவது எப்படி? ஆண்கள், தாராளப் பெண்ணியர்கள் ஆகியோரின் புரட்சிகரப் பாத்திரம் என்ன? கட்டுரையாசிரியர்கள் இந்தப் பிரச்சனைகளை எவ்வாறு கையாண்டுள்ளார்கள் எனக் கருத்துரைக்கவும், தொடர்ந்து சிந்திக்கவும், செயல்படவும் பயன்மிக்க வழிகளைக் காட்டியதாக எனது பார்வையில்பட்டதைச் சுட்டிக்காட்டவும் விரும்புகிறேன்.

'மகிழ்ச்சியற்ற திருமணம்' (என்ற கட்டுரை) தனித்தனியான ஆனால் ஒன்றோடொன்று பிணைந்திருக்கும் ஆணாதிக்கமுறைமை, முதலாளியம் ஆகிய இரு சமூகஉறவு நிலைகளின் இருப்பை முற்கோள்களாக வைக்கிறது. அவை ஒவ்வொன்றும் தங்களுக்கெனச் சுயேச்சையான பொருண்மை அடித்தளத்தையும், சொந்தஇயக்கத்தையும் கொண்டிருக்கின்றன. ஆணாதிக்கமுறைமை குறித்தும், குறிப்பாக முதலாளியச் சமுகங்களில் ஆணாதிக்கமுறைமை இருந்துவருவது குறித்தும் ஒரு ஆரம்பநிலை ஆய்வை இக்கட்டுரை முன் வைத்துள்ளது. தற்போதைய சமுக உருவாக்கம் இரண்டு அமைப்பு முறைகளின் (ஆணாதிக்க முறைமை, முதலாளியம்) செயல்பாட்டால் நிர்ணயிக்கப்படுகிறது என்ற கருத்துக்கு எதிரான சில கட்டுரைகளும் இத் தொகுப்பில் உள்ளன. அக்கட்டுரைகள் இந்த இருமைவாதத்தைத் தகர்த்து நமது சமுகத்தின் பொருளியல் உறவுகளையும், பாலின உறவுகளையும் ஒரே அமைப்பு தான் தீர்மானிக்கிறது என்ற கருத்தை முன் வைத்துள்ளன. இத்தகைய முயற்சிகள் எதுவும் இதுவரை எனக்கு நிறைவளிப்பதாக இல்லை. இப்போதைக்கு ஆணாதிக்கமுறைமையும், முதலாளியமும் தனித்தனியான ஆனால் தங்களுக்குள் பரஸ்பரஉறவைக் கொண்டுள்ள அமைப்புமுறைகள் என்ற இந்தக் கருத்து நமது சமுகத்தைப் புரிந்து கொள்ளமட்டுமின்றி பல்வேறு குழுக்களின் இருமைவாத செயல்நோக்கங்களையும் (உண்மையில் பலவிதமான) அவற்றின் மாறிவரும் கூட்டணிகளையும் புரிந்துகொள்ளப் பயன்படுகிறது. அத்தோடு, சோசலிசச் சமூகங்களிலும் ஆணாதிக்கமுறைமை நீடித்து வருவதைப் புரிந்து கொள்ளவும் இது பயன்படுகிறது. (அவை சோசலிச நாடுகள் அல்ல என்று வாதிடுவோரை நான் ஒப்புக்கொள்வதில்லை. அவை நாம் விரும்பும் சோசலிசமாக இல்லாமல் இருக்கலாம். பிற சாதாரண மக்களைப் போலவே அவை தம்மைச் சோசலிச நாடுகளாகவே கருதுகின்றன.)

அஸிஸா அல்-ஹிப்ரி உலகம் பற்றியதொரு ஒருங்கிணைந்த பார்வையைத் தருகிறார். ஆனால் இதற்கு மார்க்சிய அணுகுமுறையை அவர் பயன்படுத்தவில்லை. மாறாக தீவிரப்பெண்ணிய அணுகுமுறையை பயன்படுத்தியுள்ளார். ஆணாதிக்கமுறைமையையும், முதலாளியத்தையும் ஒருங்கிணைப்பதற்கான கருத்தியல் அடிப்படை அவரிடம் உள்ளது. இறப்பற்றவாழ்விற்கான ஆணின் உந்துதல்தான் அந்தக் கருத்தியல் அடிப்படை. அவரது பார்வையில் உற்பத்தி, மறுஉற்பத்தி ஆகிய இரண்டுமே ஆண்களுக்கு இறப்பற்றவாழ்வு என்னும் அர்த்தத்தை வழங்கக் கூடிய கருவிகளாக இருக்கின்றன. மறுஉற்பத்தியின் மூலம் ஆண் இறப்பற்ற வாழ்வை

அடையவேண்டுமானால் பெண்ணை (அவளும் குழந்தை பெறுவதன் மூலம் இறப்பற்றவாழ்விற்கான வாய்ப்பைப் பெற்றிருப்பதால்) அவன் கட்டுப்படுத்தவேண்டும். ஆணாதிக்கமுறைமை என்பது அடிப்படையில் மேலாதிக்கம் ஆகும். முதலாளியம் என்பது அந்த ஆதிக்கத்தின் ஒரு வளர்ந்த வடிவம் ஆகும். அது உற்பத்தியை அதிகரிக்கிறது. (அதற்கும் பிறர் மீதான மேலாதிக்கம் தேவைப்படுகிறது). அதேசமயத்தில் உற்பத்தியின் மூலம் இறப்பற்றவாழ்வை அடைய ஆணுக்கு அது (முதலாளியம்) வழி அமைத்துத்தந்தது. ஆண்கள் தாங்கள் ஆதிக்கம் செலுத்துவதற்கு புதுமையானதும், மிக்க நிறைவு தருவதுமான வழிகளை நாடியது, பெண்களின் கலகச்செயல்கள் ஆகிய இவற்றிலிருந்து தான் சமூகத்தின் இயக்கமே உருவானது. இவ்வாறு வரலாற்றின் உந்துசக்தியாக இருப்பது ஆணின் உளவியல் ஆகும். வரலாறு பற்றிய மேற்கண்ட இந்தப்பார்வை பல மார்க்சியப்பெண்ணியர்களுக்கு திருப்தியளிக்காது. ஏனெனில் இந்தப் பார்வை முற்றிலும் உளவியல்ரீதியானது. எனினும் இது தன்னுள் ஒரு உள்ளார்ந்த ஒருங்கிணைப்பைக் கொண்டுள்ளது. மார்க்சியர்கள் கண்டறிய முடியாத, ஆணாதிக்கமுறைமைக்கும், முதலாளியத்துக்கும் இடையிலான ஐயத்துக்கிடமற்ற தெளிவான தொடர்பை இது முன் வைக்கிறது. ஆணாதிக்க சமுகஉறவுகளை இயக்கும் ஆற்றலின் ஊற்றுக் கண்ணாக ஆணின் அதிகாரப்பசி இல்லையென்றால் பின் வேறெதுவாக இருக்கும் என்கிற மார்க்சியப்பெண்ணிய அணுகுமுறையின் இன்னொரு பிரச்சனையையும் தீவிரப்பெண்ணிய அணுகுமுறை தீர்க்கிறது. ஆணின் அதிகாரப்பசியின் தோற்றுவாய் குறித்த கேள்விக்கு தீவிரப்பெண்ணிய அணுகுமுறை பதிலளிக்கவில்லை. இந்த அதிகாரப் பசிக்கு உயிரியல் அம்சமே காரணம் என்று ஒருவர் ஊகிப்பதைத் தவிர வேறு வழியில்லை.

ஹார்டிங்கின் கட்டுரை இந்தப் பிரச்சனையை முதன்மையாக எடுத் துக் கொண்டது. ஆணின் அதிகாரப்பசி குழந்தைவளர்ப்பு முறைகளில் தங்கியிருப்பதாகக் கொள்கிறது. அல் ஹிப்ரியை போல இவரும் ஆணாதிக்க முறைமை, முதலாளியம் இரண்டுமே மேலாதிக்கத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளதாகக் காண்கிறார். (இரண்டுமே மேலாதிக்கம் செலுத்தும் ஆண்களையே அடிப்படையாகக் கொண்டுள்ளன). அல் ஹிப்ரி முதலாளியத்தை ஆணாதிக்கமுறைமையின் குழந்தையாகப் பார்க்கிறார். ஹார்டிங் முதலாளியம், ஆணாதிக்கமுறைமை இரண்டையும் ஒருதாய் வயிற்றுப்பிள்ளைகளாகப் பார்க்கிறார். ஹார்டிங் இருமைவாதம் பற்றிய கேள்வியால் பாதிக்கப்படுவதில்லை. மேலும் "மகிழ்ச்சியற்ற திருமணம்"

கட்டுரையில் முன்வைக்கப்பட்டுள்ள கருத்தியல்சட்டகத்தில் ஒரு இடைவெளி உள்ளதாக அவர் உணர்கிறார். அந்த இடைவெளியை அவர் கட்டுரை முன்னிலைப்படுத்துகிறது. ஜேன் பிளேக்ஸ், நான்சி சோடரோவ் ஆகியோரது படைப்புகளை ஆதாரமாகக் கொண்டு பொருண்மை அடித்தளம் என்ற கருத்தை பாலியல்அடிப்படையிலான வேலைப் பிரிவினையைப் பண்பாகக் கொண்ட குழந்தைவளர்ப்பு முறைகளுக்கும் நீட்டிக்கவேண்டும் என்று அவர் வாதிடுகிறார். இந்தக் கண்ணோட்டத்தின் படி பெண்கள் மட்டுமே தாயாக இயங்குவது (அத்துடன் பெண்களின் கீழான சமூக நிலையும் சேர்ந்து) பிறர்மீது ஆதிக்கம் செலுத்தும் ஆண்களை உருவாக்குகிறது. இது ஆணாதிக்கமுறைமைக்கும், முதலாளியத்திற்கும் ஒரு கருத்தியல் தொடர்பை வழங்குகிறது. புரட்சியில் ஆண்களின் அரசியல் பங்கு என்ன? என்கிற கேள்வியை இவரது கட்டுரை எழுப்புகிறது. இது பெண்ணியர்களின் இயக்கம் எதிர்கொள்ள வேண்டிய முக்கியமான கேள்வியாகும். சமூகரீதியிலும், பொருளாதாரரீதியிலும், சமமாகப்பகிர்ந்து கொள்ளக்கூடிய பொறுப்பாக குழந்தை வளர்ப்பு உருவாகும் விதத்தில் அதில் மாறுதல்கள் செய்யவேண்டும் என்ற நீண்டகாலப் போராட்ட உத்தியை ஹார்டிங் கட்டுரை ஆலோசனையாகக் கூறுகிறது. பொருண்மை ரீதியானது என்றால் என்ன? என்ற கருத்தை விரிவாக்கும் போது வேலைப் பிரிவினையின் காரணமாக உருவாகி வளரும் ஆளுமை வடிவங்களை அத்துடன் சேர்த்துக் கொள்வது முக்கியமானதுதான். அத்துடன் குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பை சமமாகப் பிரித்துக் கொள்வதும் அதனளவில் மதிப்பு மிக்கதுதான். ஆனால் குழந்தை வளர்ப்பு மட்டுமே நாம் கொண்டு வர இருக்கும் சமூக மாற்றத்துக்கான முயற்சிகளில் சக்திவாய்ந்த நெம்புகோலாக இருக்குமென்பதில் நான் தனிப்பட்ட முறையில் நிறைவு கொள்ளவில்லை.

ரித்தியாப், ஜோசப், எர்லிச் ஆகியோரது கட்டுரைகளும் "மகிழ்ச்சியற்ற திருமணம்" தரும் கருத்தியல் சட்டகத்தில் காணப்படும் இடைவெளிகள் குறித்துப் பேசுகின்றன. கிறிஸ்தியன் ரித்தியாப் பெண்ணியத்திற்கும், ஆண் ஓரினப்புணர்ச்சியாளர்களின் உரிமைகளுக்கும் இடையிலான உள்ளார்ந்த தொடர்பைப் பற்றிப் பேசுகிறார். அவர் சமூகம் குறித்த ஒரு முழுமைப் படைப்பு கண்ணோட்டத்திற்காக வாதிடுகிறார் (முழுமைப்படைப்புக் கண்ணோட்டம் (HOLISTICVIEW): கூறுகளின் தொகுதிகளுக்கு மேம்பட்ட நுண்ணுயிர் முழுமைகளிலிருந்து உயர்முழுமை நோக்கி வளர்ந்த படிநிலை வளர்ச்சியே படைப்பின் அடிப்படை என்கிற கருத்தை தத்துவவியலில்

முழுமைப் படைப்புக் கண்ணோட்டம் என்பர் மொர்.), பெண்ணியப் போராட்டங்களையும், ஆண் ஒரினப் புணர்ச்சியாளர்களின் போராட்டங்களையும், ஒன்றிணைத்து இக்கண்ணோட்டம் பார்க்கிறது. எதிர்ப்பாலுறவு குறித்து முன்னேறிவரும் பெண்ணிய ஆய்வுகளை அவர் தன் ஆய்விற்குப் பயன்படுத்தவில்லை. உதாரணமாக ஹார்டிங் தன் கட்டுரையில் ஆணின் ஆதிக்கத்தை உருவாக்குகின்ற குழந்தைவளர்ப்பு என்ற அதே அச்சிலிருந்து தான் எதிர்ப்பாலுறவும் வெளிப்பட்டு வளர்வதாகக் காண்கிறார். அதனால் எதிர்ப்பாலுறவுக்கான எதிர்ப்புகள் அடிப்படையில் (உதாரணமாக பாலின அடிப்படையிலான வேலைப்பிரிவினைக்கு எதிராக இருப்பதால்) ஆணாதிக்கத்திற்கு எதிரானவை என்றும் அவர் காண்கிறார். இதற்கு மாறாக, ரித்தியாப்பின் ஆய்வானது ஆளும்வர்க்கக் கருத்தியலுக்கு எதிராக ஆண் ஒரினப்புணர்ச்சியாளர்களின் விடுதலையை வலியுறுத்துகிறது. ஆணாதிக்கமுறைமையானது ஆளும் வர்க்க மேலாதிக்கத்திற்கு முதன்மையான கருத்தியல் ஆதரவாக இருப்பதால் தான் இவருக்கு அது முக்கியமானதாகப்படுகிறது. ஆணின் மேலாதிக்கம் என்பது அவருக்கு வெள்ளை ஆளும்வர்க்கத்தின் மேலாதிக்கம்தான். வேறு வார்த்தைகளில் சொன்னால் ஐக்கியத்திற்கான அவரது சட்டகம் என்பது இந்த இருதரப்பாரின் குறுக்கீடுகளின் மீது அடித்தளமிட்டிருக்கிறது. தவிரவும் பெண்ணியத்திற்கும், ஆண் ஒரினப்புணர்ச்சியாளர்களின் விடுதலைக்கும் இடையிலான தொடர்பை ரித்தியாப் வலியுறுத்துவது மார்க்சியப் பெண்ணியக் கோட்பாட்டிற்கு ஒரு முக்கியச் சிக்கலை எழுப்பியுள்ளது. குறிப்பாக ஆணாதிக்கம், எதிர்ப்பாலுறவு ஆகியவற்றுக்கிடையிலான உறவை மேலும் புதிதாக ஆய்வு செய்ய வேண்டிய தேவையை உருவாக்கியுள்ளது.

பெண்ணியக்கோட்பாடானது இனவாதத்திற்கு உரிய முக்கியத்துவம் அளிக்க வேண்டுமென குளோரியா ஜோசப்பின் கட்டுரை வலியுறுத்துகிறது. ஆணாதிக்கமுறைமை, முதலாளியம், இனவாதம் இவற்றின் முக்கூட்டில் (ஆதிக்கத்தில்) கருவிகள் என்ற முறையிலும், பயன்பெறுவோர் என்ற முறையிலும் தாங்களும் பங்கு பெற்றிருப்பதை வெள்ளைப் பெண்ணியர்கள் ஒத்துக்கொள்ள வேண்டும் என்றும் இவர் வலியுறுத்துகிறார். வெள்ளைகறுப்பு இன ஆண்களுக்கும், வெள்ளை கறுப்பு இனப் பெண்களுக்கும் இடையில் நிலவும் வித்தியாசமான அனுபவங்களை அங்கீகரிக்க வேண்டும். அனைத்து சமூகக்கோட்பாடுகளிலும் இது மையமான இடத்தைப் பெறவேண்டும். பெண்ணை ஒரே வகையினமாகப் பேசுவது உள்ளார்ந்த விதத்தில் இனவாதஉணர்வு கொண்டதாகும்.

ஆணாதிக்கம் பற்றிய எந்தவொரு கோட்பாடும் கறுப்பினஆணின் கீழான நிலையைப்புறக்கணிக்க இயலாது. கறுப்பினஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையிலுள்ள ஒற்றுமையைக் குறிப்பிட்டுக் காட்டும் ஜோசப் கறுப்பினப் பெண்களுக்கும் வெள்ளையினப் பெண்களுக்கும் இடையிலுள்ள ஒற்றுமையின்மையையும் குறிப்பிட்டுக் காட்டுகிறார். பெண்கள் விடுதலையில் ஆண்கள் மீது எப்படி நம்பிக்கை கொள்ள முடிவதில்லையோ அதுபோலவே கறுப்பினப்பெண்களின் விடுதலையை வெள்ளையினப் பெண்கள் விரும்பமாட்டார்கள். ஏனெனில் இனஒடுக்குமுறையால் அவர்கள் நேரடியாகப் பயன்பெறுகிறார்கள் (மேலும் அவர்கள் இனத்திமிர் கொண்ட வெள்ளையின ஆணின் வருமானத்தை நம்பியிருக்கிறார்கள்). இனவாதம் ஏன் நீடித்திருக்கிறது என்பதை புரிந்து கொள்ளக் கூடியதொரு கோட்பாட்டின் தேவையை அவர் வலியுறுத்துகிறார். இனவாதத்தையோ, பால்வாதத்தையோ கலப்பற்றப் பொருளாதார உறவுகளாகக் குறைத்து விடமுடியாது. பொருளாதாரத்தைத் தாண்டியும் நாம் பார்த்தாக வேண்டும் என்று ஆலோசனை கூறுகிறார். இவ்வாறாக, "மகிழ்ச்சியற்ற திருமணம்" தரும் கருத்தியல்சட்டகம் கறுப்பினமக்களுக்கும் பொருந்த வேண்டுமானால் அதில் இனவாதத்தையும் சேர்த்துக் கொள்ளும் விதத்தில் கணிசமான மாற்றங்களைச் செய்யவேண்டும் என்று கூறுகிறார். குறிப்பிட்ட சில விசயங்களில் நான் ஜோசப்போடு முரண்பட வேண்டியிருந்த போதிலும் அவரதுவாதம் அடிப்படையில் மறுப்புத் தெரிவிக்க முடியாததாகவும், மேலும் கூடுதலாகச் செயல்படுவதற்கான சாரமிக்க திசைவழியைச் சுட்டிக் காட்டுவதாகவும் இருக்கிறது.

என்னுடைய கட்டுரையில் நான் தொடாத பல முக்கியப் பிரச்சனைகளைப் பற்றிய ஆய்வுகளை அராஜகவாதப்பெண்ணியம் முன்வைப்பதாக கரோல் எர்லிச் வாதிடுகிறார். அரசு என்ற ஒன்றின் இருப்புதான் அதிகாரப்படிநிலை அமைப்பை அவசியமாக்குகிறது என்பது அதில் ஒரு முக்கியப் பிரச்சனையாகும். ஆணாதிக்கஉறவுகளுக்கும், முதலாளியஉறவுகளுக்கும் பொருந்துகிற விதத்தில் அதிகாரப் படிநிலை அமைப்பு பற்றிய ஒரு விரிவான விமர்சனத்தை அராஜகவாதப்பெண்ணியம் வளர்த்துள்ளது. மார்க்சியமும், பெண்ணியமும் திருமணம் செய்து கொள்ள முடியாது என்றும், அராஜகவாதமும் பெண்ணியமும் திருமணம் செய்து கொள்ள முடியும் என்றும் அவர் வாதிடுகிறார். அராஜகவாதமானது அரசியல்அதிகாரம் குறித்துக் கவனம் கொள்வதால் பொருண்மை அடித்தளம் பற்றிய விவாதங்களையும் தாண்டிச் செல்கிறது. உதாரணமாக

ஆணாதிக்கமுறைமையின் முக்கிய அடிப்படைகளில் ஒன்றான பெண்களின் மீதான வன்முறையை அராஜகவாதப் பெண்ணியம் பின்வருமாறு பார்க்கிறது. பெண்களைக் கட்டுப்படுத்துவன் மூலமும், அதனால் அவர்களது உழைப்புச்சக்தியைக் கட்டுப்படுத்துவதன் மூலமும் ஆண்கள் தங்கள் பொருளாதார நிலையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக பெண்கள் மீது வன்முறை ஏவப்படுகிறது என்பதைவிடவும், (பெண்கள் மீது) அதிகாரம் செலுத்த வேண்டும் என்பதற்காகவே அதிகாரம் செலுத்தப்படுகிறது. இந்தத் தொகுப்பினுள்ள எர்லிச்சின் கட்டுரை அதிகாரம் செலுத்த வேண்டும் என்ற இந்த உந்துதல் எங்கிருந்து வந்தது என்ற கேள்வியை முன் வைப்பதில்லை. இந்தக் கேள்வி நிச்சயமாக முக்கியமான அடுத்தப் படிக்கட்டாக இருக்கும். இருந்தபோதிலும், உளவியலுக்கும் பொருண்மையியலுக்கும் இடையேயான தொடர்புகளைக் காண வேண்டிய தேவையை இவர் எடுத்துக் கூறுகிறார்.

இந்தத் தொகுப்பிலுள்ள கட்டுரைகள் எழுப்பியுள்ள கோட்பாட்டுப் பிரச்சனைகள் எவ்வளவு முக்கியம் வாய்ந்தவையோ அதற்குச்சமமான முக்கியத்துவம் இவை எழுப்பியுள்ள செயல்உத்தி குறித்த பிரச்சனைகளுக்கும் உண்டு. கருத்தும், செயலும் இரட்டைக்குதிரை பூட்டிய வண்டியாக முன்னேற வேண்டும். பெரும்பாலான கட்டுரையாசிரியர்கள் பெண்ணியத்தால் எழுப்பப்பட்ட பிரச்சனைகளை அணுக மார்க்சியக் கோட்பாட்டில் பெரியதொரு மாற்றத்துக்கான தேவையை வலியுறுத்து கிறார்கள். “மகிழ்ச்சியற்ற திருமணம்” அத்தகையதொரு மாற்றத்தைப் பற்றி வாதிடவில்லை என்கிற அவர்களது பார்வை சரியானதுதான். அந்தக் கட்டுரை ஆணாதிக்கமுறைமையை பொருள்முதல்வாத நோக்கிலிருந்து ஆய்வு செய்ய மார்க்சியஅணுகுமுறையை பெரிதும் பயன்படுத்த முயன்றுள்ளது. அந்தக் கட்டுரையில் நமது இலக்கு பெரும்பாலான மார்க்சியர்களாலும், ஒருசில பெண்ணியர்களாலும் ஆணாதிக்க முறைமை என்பது வெறும் கருத்தியல் மட்டுமே என்று குத்தப்பட்ட முத்திரையின் ஆட்சி எல்லையிலிருந்து அதை விடுவிப்பதாகும். இவ்வாறாக அந்தவாதம் அத்தகைய பார்வையாளர்களுக்காக (ஆணாதிக்கமுறைமை என்பது வெறும் கருத்தியல் மட்டுமே என்பவர்கள்) சொல்லப்பட்டதாகும். ஆணாதிக்க முறைமை என்பது வீட்டிலும், விரிவான வகையில் பொருளாதாரத்திலும் பெண்களின் உழைப்புச்சக்தியை ஆண்கள் கட்டுப்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டது என்பதைப் பார்க்கும் விதமாக தங்கள் மார்க்சியத்தைப் பயன்படுத்த வேண்டும் என அவர்களை வலியுறுத்துகிறது. சமூகத்தை வடிவமைப்பதில் முதலாளியத்திற்குச் சமமான சக்தியை

ஆணாதிக்கமுறைமையும் பெற்றிருக்கிறது என்பதும், பாலினம் என்பது வர்க்கத்தைப் போலவே முக்கியமானது என்பதும்தான் எங்கள் வாதம். நானும், அமிபிரிட்ஜஸும் இந்த வாதத்தின் அடிப்படையில் பணிபுரியத் தொடங்கியபோது, நாங்கள் மார்க்சியப் பெண்ணியர்கள் மத்தியில் சிறுபான்மையினராக இருக்கிறோம் என்ற உணர்வை சொல்லிவிடுவது பாதுகாப்பானது என நான் நினைத்தேன். அந்தச்சமயத்தில் பெரும்பாலான மார்க்சியப் பெண்ணியர்கள் வர்க்கமே மேலாதிக்கம் செலுத்திவருகிறது என்று வாதிட்டுக் கொண்டிருந்தனர்.

இப்போது விவாதம் முழுமையானதொரு சுற்றுக்கு வந்துவிட்டது. இந்தத் தொகுப்பில் பங்களித்திருப்போர் யாரும் ஆணாதிக்கமுறைமையின் முக்கியத்துவம் பற்றிய இந்தப்பார்வைக்கு எதிராக வாதிடவில்லை. (இருந்தபோதிலும் மார்க்சியக் கோட்பாட்டைப் பயன்படுத்தி இதை எப்படிச் சொல்வது என்ற விவாதம் இன்னும் இருந்து வருகிறது. இந்தத் தொகுப்பில் பங்களிக்காதவர்களில், வர்க்கமே முக்கியமென வாதிடக் கூடிய மார்க்சியர்களும் இருக்கக்கூடும்.) ஆணாதிக்கத்தை முழுமையாக ஆய்வுக்குட்படுத்தியதால் பின்வரும் விசயம் முன்னுக்கு வந்திருக்கிறது. பொருண்மையியல் என்றால் என்ன? "கருத்தியல் கட்டுமானத்தின் மீதான பொருண்மை அடித்தளத்தின் மேலாதிக்கம்" என்றால் என்ன? என்ற பிரச்சனைகள் குறித்த மார்க்சியப் பார்வை கேள்விக்குள்ளாகி இருக்கிறது. பெரும்பாலான கட்டுரையாசிரியர்கள் "மகிழ்ச்சியற்ற திருமணம்" முன் வைத்த சட்டகம் பெரிதும் பொருண்மைரீதியாக இருப்பதாக கருத்துத் தெரிவித்தார்கள். கருத்தியல், உளவியல் அல்லது கலாச்சாரம் ஆகியன அடித்தளத்திற்குச் சமமானவை. அல்லது அடித்தளத்தின் ஒரு பகுதி என்ற கருத்தை அவர்கள் முன் வைத்துள்ளார்கள். ஆணாதிக்கமுறைமை என்ற கருத்தை நிராகரிப்பதற்காக அவர்கள் இதைச் செய்யவில்லை. மாறாக அதை அதனுடைய எல்லாவிதமான பன்முனைச் சிக்கல்களோடும் புரிந்து கொள்வதற்காகவே அப்படிச் செய்தார்கள். ஆணாதிக்கமுறைமை பெண்களின் உழைப்புச்சக்தியை மட்டும் கட்டுப்படுத்துவது அல்ல. அது உளவியல் சக்தியை, ஆளுமைஉருவாக்கங்களை இன்னபிறவற்றை கட்டுப்படுத்துகிறது என்று அவர்கள் சொல்கிறார்கள். இந்தப் பார்வையை நான் கரிசனத்தோடு பார்க்கிறேன். இது குறுகிய பொருளாதாரவாத மார்க்சியத்திலிருந்து விலகி நம்மை சரியான திசை வழியில் இட்டுச் செல்கிறது என்றும் நான் நினைக்கிறேன்.

எல்லாவித அதிகாரப்படிநிலை அமைப்பிற்கும் ஆணாதிக்க முறைமை

தான் அடிப்படை என்ற ஆய்வு விளக்கத்தோடு உடன்பட நான் தயாராக இல்லை. தீவிரப்பெண்ணியப் பாடமுறையில் இந்த வாதம் ஆணின் அதிகாரத்துக்கான உந்துதலை முற்கோளாக வைக்கிறது. நிகழ்கால குழந்தை வளர்ப்புமுறைகள் ஆதிக்கம் செலுத்தும் ஆண்களாக இருக்கக்கூடிய தனிநபர்களை உருவாக்குகிறது என்று உளவியல் ஆய்வு முறை கருதுகிறது. இந்தப் பார்வையின்படி ஆணாதிக்கமுறைமை என்பது தர்க்கரீதியாக முதலாளியத்திற்கு ஒரு முன்நிபந்தனையாகும்(அல்ஹிப்ரி). அல்லது குறைந்த பட்சம் ஆணாதிக்கமுறைமையும், முதலாளியமும் ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகளாகும் (ஹார்டிங்). இந்த வாதங்களாலும் நான் நிறைவடைய முடியாமல் இருக்கிறேன்: ஏனென்றால் உலகளாவிய அளவில் அதிகாரத்திற்கான ஆணின் உந்தலுக்கு ஒரு கருத்தியல் அடிப்படையை என்னால் காணமுடியவில்லை. நனவிலிமனம் என்பது மானுட ஆளுமையின் வலிமையான அடிப்படை என்பதை நான் ஏற்றுக் கொண்டபோதிலும் குழந்தை வளர்ப்புமுறைகள் ஆளுமை மீது ஏற்படுத்தும் தாக்கங்கள் இவ்வளவு காலம் நீடித்து இருக்கும் என்பது குறித்து நான் அய்யப்படுகிறேன். ஏனெனில் அதிகாரப்படிநிலை அமைப்பிற்கான அடித்தளங்களாக இனவாதம் போன்ற ஏனைய அடித்தளங்களும் இருந்து வருகின்றன. என்பார்வையில் இவைகளும்கூட ஆணாதிக்கமுறைமையிலிருந்து தோன்றியிருக்க வேண்டுமென்கிற அவசியமில்லை.

பால்வாதம், இனவாத ஒடுக்குமுறை ஆகியவற்றை முழுமையாகப் புரிந்துகொள்ள மார்க்சியக்கோட்பாட்டில் சிலதிருத்தங்கள் தேவைப்படுகின்றன. குறிப்பாக முன்பு சிலரால் பொருண்மைஅடித்தளம் என்று கருதப்பட்டதில் (அதற்குத் தரப்பட்ட மாபெரும் முக்கியத்துவம் காரணமாக) மாற்றம் தேவைப்படுகிறது. மேலும், வர்க்கம், பால், இனம், அதுபோலவே உளவியல், கருத்தியல், கலாச்சாரம் ஆகிய நிகழ்வுகளுக்கு இடையிலான பரஸ்பரஉறவு குறித்த ஆய்வுகள் அய்யத்திற்கு இடமின்றி புதிய சமூக இயங்குமுறையை வெளிப்படுத்தும். (உதாரணமாக) முதலாளிய தொழிலிடத்தில் பால்வாதம், இனவாதம் ஆகியவை செயல்படுவதன் முக்கியத்துவத்தை அங்கீகரிப்பதன் மூலம் அய்யத்திற்கிடமின்றி முதலாளியம் பற்றிய நமது புரிதல் மாற்றத்திற்குள்ளாகும். எனினும் ஒருசமயம் முன்னணிப் படையில் இருந்த நான் பின்னடைவுக்குள்ளாகி மாபெரும் கோட்பாட் டாளர்களிடமிருந்து அவசரமாகப் பின்வாங்குவதாகக் கூட இருக்கலாம்.

மார்க்சியக்கோட்பாட்டில் செய்யவேண்டிய இத்தகைய ஆற்றல் மிக்க மாறுதல்களுக்கு இணையான முக்கியத்துவம் வாய்ந்தது இனவாதம் பற்றியும்,

ஆணாதிக்கமுறைமையிலும், முதலாளியத்திலும் அதன் பாத்திரம் பற்றியும், அதன்விளைவாக கறுப்பு, வெள்ளையினப் பெண்களின் அனுபவங்களின் வித்தியாசங்களைப் பற்றியும் நல்லதொரு புரிந்துகொள்ளலின் தேவையாகும். நாம் விரும்பும் விதத்தில் சமூகத்தை மாற்றியமைக்க இத்தகைய புரிந்துகொள்ளல் அவசியமானது. பெண்ஓரினப்புணர்ச்சியாளர்களின் மீதான ஒடுக்குமுறை பற்றியும், ஆணாதிக்கமுறைமைக்கும், எதிர்ப் பாலுறவுக்கும் இடையிலான தொடர்புகள் பற்றியுமான புரிதல் வளர்த்தெடுக்கப்படவேண்டும். இதற்கு மேலும் அடிப்படையானது சமூகநிகழ்வுகளின் முரண்பாடுகள் பற்றியும், சமூகஇயக்கத்தின் ஊற்றுக் கண்களையும் அவை மாறிச் செல்லக்கூடிய திசைவழிகளையும் நாம் புரிந்து கொள்வதாகும். தவிர்க்க முடியாத நமது தவறுகளிலிருந்து கற்றுக் கொண்டு போராட்டத்தை தொடர்வோம்.

# கலைச் சொல்விளக்கம்

ஆணாதிக்கமுறைமை (Patriarchy) பொதுவாக இதை தந்தைவழிச்சமூகம் என்றே மொழி பெயர்ப்பர். ஆனால் இப்பதம் அச்சமூகத்தின் ஆணாதிக்க அம்சத்தைக் காத்திரமாக வெளிப்படுத்தவில்லை. அதனால் இங்கு ஆணாதிக்கமுறைமை என்ற மொழியாக்கமே பயன் படுத்தப்பட்டுள்ளது.

பால் (Sex) இது ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையே உடலியல் பூர்வமாக இருக்கும் இயற்கையான வேறுபாடுகளைக் குறிப்பது.

பாலினம் (Gender) இது ஆண்-பெண் இரு பாலருக்கிடையே சமூக நிறுவனங்களால் செயற்கையாகத் திணிக்கப்பட்ட வேற்றுமைகளைக் குறிப்பது.

அந்தரங்கம் என்பது பகிரங்கமே (Personal is Political) "தனிப்பட்டது என்பதும் அரசியலே" என்றும் "தனிநபர்க்குரியது பொதுவானதே" என்றும் பலவிதமாக இதைத் தமிழாக்கம் செய்வர். பெண்ணியத்தின் முக்கியக் கருத்தாக்கங்களில் இதுவும் ஒன்று. பெண்களது பிரச்சினைகள் திருமணம், குழந்தை வளர்ப்பு, வன்முறை, காதல், பாலுறவு என்று எல்லா நிலைகளிலும் அந்தரங்கமானவை என்று மறைக்கப் படுகின்றன. பெண்களது பிரச்சினைகள் அந்தரங்கமான வையோ, வெட்கத்திற்குரியனவோ அல்ல, இவை மனிதச் சமூகத்திற்கே பொதுவானவை. உலகளாவிய நிலையில் அணுகப்பட வேண்டுமேயல்லாது, மூடிமறைக்கப் படக்கூடாது என்று இக்கருத்தாக்கம் வலியுறுத்துகிறது.

பெண்களின் மறுஉற்பத்தி (Women's Reproduction) பெண்களின் இனப்பெருக்க ஆற்றல் என்றும் இதைச் சொல்லலாம் பெண்களின் குழந்தைப்பேறு அம்சம்தான் பெண்களின் மறுஉற்பத்தி என இங்கு குறிக்கப்படுகிறது. பெண்களின் மறுஉற்பத்தி, மறுஉற்பத்தி ஆற்றல் என இப்புத்தகத்தில் சொல்லப்பட்டுள்ள அனைத்தும் பெண்களின் குழந்தைப் பேறு அம்சத்தையே குறிக்கிறது.

பால்சார் வாழ்க்கைப்பங்குகள் (Sex Roles) ஒரு பெண் நல்ல மனைவியாகவும், நல்லதாயாகவும், நல்ல தோழியாகவும் இருக்க வேண்டுமென்று பெண்ணின் வாழ்க்கைப்பங்குகள் அவளது பாலின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இந்த நிர்ணயப்பாகுபாடுகள் ஆதாரமற்றவை. அடிப்படையில் லாதவை. இவை பெண்களை உணர்வுபூர்வமாகச் சிதைக்கின்றன. இப்பாகுபாடுகளை அகற்றுவதே பெண் விடுதலை இயக்கத்தின் தலையாயப் பணி என்று பெண்ணியர்கள் குறிப்பிடுவர்.

பாலினவாதம் (Sexism) ஒரு மனிதரை அவரது பாலின் அடிப்படையில் வேறுபடுத்தி நடத்தும்முறையை இச்சொல் விளக்குகிறது. ஆணாதிக்க நோக்கில் கட்டமைக்கப்பட்ட ஆண்மை பெண்மை கற்பிதங்களை அப்படியே ஏற்றுக் கொள்வது அதனை நடைமுறைப்படுத்துவது போன்ற அம்சங்களும் இதில் அடங்கும்.

எதிர்ப்பாலுறவு (Hetero Sexual) ஆண்-பெண் பாலுறவு தான் இப்படிக் குறிக்கப்படுகிறது.

Gay: ஆண் ஓரினப்புணர்ச்சியர்

Lesbian: பெண் ஓரினப்புணர்ச்சியர்

பெண்களின் பிரச்சினைகள் பெண்ணியம் என்ற வரையறையைத் தாண்டிச் சென்று கொண்டிருக்கும் காலம் இது. அரசியல் மற்றும் பொருளாதாரக்கோட்பாடாக மட்டுமே உள்வாங்கப்பட்ட மார்க்சியம் உலகெங்கும் எதிர் கொண்ட சரிவையடுத்து அதனை செறிவூட்டும் முயற்சியாக பெண்ணியம் பற்றிய விவாதங்களில் 'மார்க்சியர்கள் ' ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள் 'மார்க்சியத்தின்' உட்பிரிவாக 'பெண்ணியத்தை' வரையறுக்க முயல்கின்றனர். இதுகுறித்து மார்க்சியர்களுக்கும் பெண்ணியவாதிகளுக்குமிடையே நடந்த முக்கியமான விவாதங்களின் தொகுப்பாக இந்நூல் அமைந்துள்ளது.



*தொகுப்பு, மொழியாக்கம்*

வெ. கோவிந்தசாமி

நடராஜ்

விடியல்

T